அகதா கிறிஸ்டி



PALE HORSE

Agatha Christie

வெளிறிய குதிரை

முன்னுரை

by மார்க் ஈஸ்ட்டர் - ப்ரூக்

ஆச்சரியமாய் அமைந்துள்ள The Pale Horse (வெளிறிய குதிரை எனலாம் தமிழில்) பிரச்சினையை அணுக, என்னைப் பொறுத்தமட்டில், இரண்டு வழி வகைகள் இருக்கின்றன. ஒரு சிக்கலைத் தீர்க்க லகுவான வழியென்று ஒயிட் கிங் கொடுத்த முதுமொழி வழக்கிலிருந்தும் கூட, இதை சுலபமாய் அணுகுவதென்பது கடினம். 'ஆரம்பத்தில் துவங்கு, கடைசி வரை போ, பிறகு நில்' என்கிறது அவரது முதுமொழி; இப்படி நேரடியாகப் போய் இதனை முடித்து விட முடியாது என்று சொல்ல வருகிறேன். ஏனென்றால், இதனை துவங்க அந்த ஆரம்பம் இருப்பது எங்கே?

அதுவும் ஒரு வரலாற்று பித்தனுக்கு இக் கேள்விக்கான விடையை சொல்வது எப்பவுமே கஷ்டம்தான். வரலாற்றில் எந்த ஒரு புள்ளியில், ஒரு குறிப்பிட்ட வரலாற்றுப் பகுதி துவங்குகின்றது?

இந்த கேஸில், ஃபாதர் கார் - மேன், மடிந்துக் கொண்டிருந்த ஒரு பெண்ணைப் பார்ப்பதற்காக தன்னுடைய மதகுரு இல்லத்திலிருந்து முனைப்பாய் கிளம்பிய கணத்திலிருந்து துவங்கலாம். அல்லது இன்னும் சற்று முன்பாகவே, செல்ஸீ பகுதியின் ஒரு மாலைப் பொழுதில் ஆரம்பிக்கலாம்.

இப்புத்தகத்தில் உள்ள பெரும் பகுதியினை நானே எழுதுவதால், இதிலிருந்துதான் நான் துவங்க வேண்டும்.

அத்தியாயம் 1

மார்க் ஈஸ்ட்டர் – ப்ரூக் பதிந்தவை

I

என் தோளுக்குப் பின்னால் எஸ்ப்ரஸ்ஸோவின் இயந்திரம் ஒரு கோபப்பாம்பினைப் போல சீறியது. ஏதோ பயமுறுத்துவதைப் போன்ற பிரமையை உள்ளுக்குள் உருவாக்கியது அதன் ஓசை. தற்கால ஓசைகளெல்லாம் எனக்கென்னவோ இப்படித்தான் படுகின்றன என்று நினைத்துக் கொண்டேன் நான். வானத்தின் குறுக்கே சீறும் ஜெட் விமானங்கள் கோபங்கொண்ட தினுசில் உருவாக்கும் கதிகலங்கடிக்கும் சப்தம்; அதற்கான குகை வழியே வெளியேறி பிளாட்பாரம் நுழையும் பாதாள ரயிலின் ஓசை; வீட்டின் அஸ்திவாரத்தையே உலுக்கும் கனரக வாகனத்தின் ப்ரளய ஓசை... ஏதோ பிரயோஜனமான வேலை செய்வதால் உருவாகும் வீட்டுசப்தங்கள் கூட என்னை துணுக்குறத்தான் வைக்கின்றன. பாத்திரம் கழுவும் ஓசை, ப்ரஷர் குக்கரின் எதிர்பாரா அலறல், உறுமும் வாக்யூம் க்ளீனர்கள்...

ஆபத்தான உலகமப்பா -இதுதான் சரி, யெஸ்... ஆபத்தான உலகம்.

நுரையோடு என் முன்னால் வைக்கப்பட்டிருந்த கோப்பையைக் கலக்கினேன். அது சுகந்த வாசனையைக் கொட்டியது.

''வேறென்ன சாப்பிடறீங்க? ஒரு சூப்பர் வாழைப்பழம்... கூடவே வறுத்த நெய் ரொட்டி?''

எனக்கு ஒத்துவராத பட்டியலாய் பட்டது இது. வாழைப்பழம் என்பது என் சிறு வயதோடு தொடர்புடைய ஒன்று. வளர்ந்த பிறகு எப்போதாவது ரம்முடன் உண்டு. நெய் போட்டு வறுத்த ரொட்டியென்றால், அது அவித்த முட்டையுடன் ஜோடி போட வேண்டிய ஒன்று என்றே என் மூளைக்குள்

ஆகியுள்ளது. எதெப்படியோ, செல்ஸீயில் இருக்கும்போது செஸ்லீ என்ன தருகிறதோ, அதையே சாப்பிடு. அவன் சொன்னவற்றையே நான் ஒப்புக் கொண்டேன்.

மூன்று மாதங்களுக்கு முன்னால் செல்ஸீயில் நான் ஒரு ஃப்ளாட்டினை எடுத்து இங்கேயே தங்கி வந்த போதிலும், எல்லா வகையிலும் இப்பகுதிக்கு நான் ஓர் அந்நியன். முகலாய கட்டிட அமைப்புக்கள் பற்றி ஒரு புத்தகம் எழுதிக் கொண்டிருந்தேன் நான். இதற்காக செல்ஸீ என்றில்லாமல் வேறெந்த பகுதியிலும்கூட நான் தங்கியிருக்கலாம். ஹேம்ப் எஸ்டேட் இருக்கின்றது... ப்ளூம் பெர்ரி இருக்கின்றது... இவ்விடங்களுக்குள் பெரிய வித்தியாசம் ஒன்றும் விளைந்து விடப் போவதில்லை. ஆனால் எப்போதும், சுற்று வட்டாரங்கள் எனக்கு ஒத்தாசையாய் ஒத்தே வருவதில்லை. ஆக எனக்கென்ற ஓர் உலகில் நான் மட்டும் இருந்து விடுகிறேன்.

தற்போது நான் உங்களுடன் பேசிக் கொண்டிருக்கும் அந்தக் குறிப்பிட்ட மாலைப் பொழுதில், எல்லா எழுத்தாளர்களுக்கும் வரும் உள்வாங்கும் குழப்பம்... பின்வாங்கும் நிலைமை.. எனக்கும் நேர்ந்தது.

முகலாய கட்டிடங்கள், முகலாயப் பேரரசர்கள், முகலாய வாழ்க்கை முறை, இவை எழுப்பிய அனைத்து சுவாரஸ்ய பிரச்சனைகள், என எல்லாமும் திடுமென தேவையற்ற தூசுப் பொருளாய் ஆயின எனக்கு. இதெல்லாம் இப்போது தெரிந்தால் என்ன, தெரியாவிட்டால்தான் என்ன? இதைப் பற்றியெல்லாம் எழுத வேண்டும் என நான் எதற்காக இத்தனை மெனக்கெட்டு கவலைப்பட்டுள்ளேன்?

நான் எழுதிய அனைத்தையும், ஆங்காங்கே மீண்டும் படித்துப் பார்த்தபடி பல பக்கங்களைப் புரட்டினேன். அனைத்தும், சொல்லி வைத்தாற்போல், எனக்குப் பிடிக்கவேயில்லை. விறுவிறுப்பின்றி எழுதப்பட்டதாய், கட்டிப் போடும் வார்த்தைப் பிரயோகங்கள் இல்லாததாய்...! 'வரலாறு ஒரு வீண்' என்று எவன் சொன்னானோ (ஹென்றி ஃபோர்ட்?) அது மிகச் சரி.

என் கையெழுத்துப் பிரதியினை வெறுப்பாய் பின்னுக்குத் தள்ளிய நான் எழுந்துக் கொண்டு கைக்கடியாரத்தைப் பார்த்தேன். இரவு பதினொன்றை நெருங்கிக் கொண்டிருந்தது மணி. டின்னர் சாப்பிட்டேனா இல்லையா என ஞாபகப்படுத்திக் கொள்ள முயற்சித்தேன்... வயிற்றுக்குள்ளிருந்த எதிர்பார்ப்பினை வைத்து இல்லை என்று முடிவானேன். லஞ்ச்? யெஸ். எங்கேயோ சாப்பிட்டேன். அது ரொம்ப நேரத்துக்கு முன்பு.

நகர்ந்த நான் ஃப்ரிட்ஜுக்குள் எட்டிப் பார்த்தேன். அங்கு காய்ந்துப் போயிருந்த மாமிசத்தின் சிறு மிச்சமிருந்தது. ருசியின்றி அதைப் பார்த்தேன். இப்படியாக உணவு வேண்டி கிங்ஸ் சாலையில் அலைந்துக் கொண்டிருந்த நான் ஜன்னலில் லீகீ என நியான் வண்ண விளக்குகளில் பெயர் பொறிக்கப்பட்டு ஒளிந்துக் கொண்டிருந்த அலுவலக காபி பாருக்குள் நுழைந்திருக்கின்றேன்... இங்கு வாழைப்பழத்துக்கும் பன்னுக்கும் இழுபறிப் பண்ணிக் கொண்டு, ஓசைகள் எனக்குள் உண்டாகும் அசௌகரியங்களையும் அவற்றின் சமுதாய தாக்கங்களையும் நொந்துக் கொண்டிருக்கிறேன்.

எஸ்ப்ரஸ்ஸோவின் இயந்திரம் மீண்டும் என் காதுக்குள் பெரும் வண்டாய் வீறியது. இன்னொரு கப் காபிக்கு ஜாடை காட்டிய நான் என்னைச் சுற்றிலும் ஒரு நோட்டமிடுவதில் இறங்கினேன். சுற்றிவர நடப்பவற்றைக் கவனிப்பதில் ஈடுபாடற்று நானிருப்பதாய் என் சகோதரிகளில் ஒருத்தி எப்போதும் சொல்வாள்... என்ன சுற்று வட்டாரத்தில் நடக்கிறது என்று கவனிக்காமலே நானிருப்பதை, 'உனக்குனு இருக்கிற தனி உலகத்துல நீ இருக்கே' என்பாள் குற்றமாய். இது என் மனசாட்சியை உறுத்த இப்போது வேண்டுமென்றே அப்படி என்னதான் என்னை சுற்றி நடந்துக் கொண்டிருக்கிறது என்று குறிப்பெடுப்பதில் இறங்கினேன். செல்ஸீ பகுதி காபி பார் கூத்துக்களைப் பற்றி தினசரி நியூஸ் பேப்பர்களில் படிக்காமல் விடுவது இயலவே இயலாத ஒன்று. ஆக சமீபத்தில் நாகரீக வாழ்க்கை எப்படியெல்லாம் போய்க் கொண்டிருக்கிறது என்று நான் கவனிக்க எனக்கு கிடைத்த வாய்ப்பானது இது.

எஸ்ப்ரஸ்ஸோ காபி பார் பகுதி ஏறத்தாழ இருட்ட ஆரம்பித்திருந்த படியால் விஷயங்களை உங்களால் துல்லியமாய் பார்க்க முடியாமல் ஆனது. இருந்த அனைத்து வாடிக்கையாளர்களும் அநேகமாய் இளையவர்கள். எனக்கென்னவோ இவர்களனைவரும் 'அரை வேக்காடு' என்பார்களே.. அவ்வகை தலைமுறையாய் பட்டது. இக்காலத்துப் பெண்களனைவரும் எனக்கு எப்படி தென்பட்டுக் கொண்டிருக்கின்றார் களோ, அப்படியே தெரிந்தனர்: அழுக்காய்! அவர்கள் அனைவரும் ஒரே மாதிரி கதகதப்பாய் உடையணிந்திருப்பதாய் தோன்றினார்கள். நண்பர்களோடு ராத்திரி சாப்பாட்டினை முடிக்க சில வாரங்களுக்கு முன்னால் வெளியே போயிருந்தேன். எனக்கு அடுத்து உட்கார்ந்திருந்த பெண் இருபது வயதையொட்டியவளாய் இருந்தாள். அன்று ரெஸ்ட்ரண்ட்டே சூடாய் தானிருந்தது. ஆனால் அவள் கம்பளியினாலான

கறுப்பு அங்கியைச் சுற்றியிருந்தாள். கறுப்பு பாவாடை மேலும் கறுப்பு நிற ஸாக்ஸுகள். அவள் சாப்பிட்டு முடிக்கும் வரையும் வியர்வை ஊற்றிக் கொண்டேயிருந்தது. வியர்வையால் ஊறப்பட்ட கம்பளி வாசனை யிலிருந்தாள் அவள்... கூடவே, தலை கழுவாத கெட்டியான மடிச வாசனையும். என் நண்பர்கள் சொன்னதன்படி, அவள் கவர்ச்சிகரமா யிருந்தாள். எனக்கல்ல! அவளின் நிலைமையைப் பார்த்ததும் என்னுடைய உடனடி ரியாக்ஷன் இதுதான்: உடனடியாய் அவளைத் தூக்கிப் போய் ஓர் சூடான குளியல் தொட்டியில் தள்ளி கூடவே ஒரு சோப்புக் கட்டியையும் தந்து அப்படியே அதனுடன் ஜோலியில் இறங்குமாறு வேண்டிக் கொள்ள வேண்டும் என்பதுதான்! இந்த சம்பவம், எந்த அளவுக்கு சமீபத்திய நாட்டு நடப்புகளிலிருந்து நான் விலகிப் போய் நின்றுக் கொண்டிருக்கின்றேன் என்பதை அழகாய் காட்டிற்று. இந்தச் சம்பவமே - அம்சமாய் பரமாரிக்கப்பட்ட கருகரு கூந்தலுடனும், அதை அழகாய் பின்னலிட்டு அலங்காரம் பண்ணிய தோரணையுடனும், பிரம்மாண்ட மான மடிப்புகளுடன் அடிக்கவரும் நிறங்களினாலான புடவைகளுடனும், நடனம் போல இருக்கும்படியான ரிதமுடனான நடையுடனும் வளையவரும் இந்தியப் பெண்களை சந்தோஷமாய் நினைவுகூர வைத்தது.

இத்தகைய சந்தோஷ நினைவுகளிலிருந்து திடுமென விளைந்த உயர்குரல் ஓசைகள் என்னை விடுவித்தன. என் டேபிளுக்கு அடுத்து உட்கார்ந்திருந்த இரண்டு பெண்கள் சண்டையில் இறங்கியிருந்தார்கள். அவர்களுடனிருந்த இரண்டு வாலிபர்கள் சமரசம் பண்ண முயற்சித்தார்கள். ஆனால், ம்ம்...

அப்போது திடீரென்று ஒருவருக்கொருவர் உச்சஸ்தாயியில் கத்திக் கதறினார்கள். ஒருத்தி மற்றொருத்தியின் கன்னத்தில் பளார் என ஒன்று விட்டாள். அந்த மற்றொருத்தி அடித்தவளை அவளது நாற்காலியிலிருந்து பிடித்திழுத்து கீழேத் தள்ளினாள். அசிங்கமாய் திட்டிக் கொண்டு மீன் காரிகளைப் போல பஜாரித்தனமாய் இருவரும் கத்தினார்கள். ஒருத்திக்கு செக்கச் செவேலென முடிக் கற்றைகள். மற்றவள் மெலிந்து அடர்த்தியற்ற கேசங் கொண்ட கூத்தாடி போன்றவள்.

அவர்கள் பேசிக் கொண்ட வசை வார்த்தைகள் புரிந்த அளவுக்கு எதனால் அவர்களுக்குள் இப்படியொரு சண்டை என்ற காரணம் எனக்குப் புரியவில்லை. மற்ற டேபிள்களிலிருந்து ஆதரித்தும், பேசாமல் உட்காரச் சொல்லியும் களேபரமாய் வார்த்தைகள் வலுத்தன.

''அலையறா பாரு, பாவாடையைத் தூக்கிட்டு! த்தூ!''

இந்தப் *பாருக்குப்* பின்புறத்தில் உட்கார்ந்திருந்த முதலாளிப் பயல் - இத்தாலியன் போல் தோன்றிய நோஞ்சான் உடம்பு, இவன்தான் *லீகீ* என்பது என் ஊகம் - லண்டனில் இப்படியெல்லாம் திடீர்க் கத்தல்கள் பார்களுக்குள் வரக் கூடாது என்ற சட்டத்தை அறிவித்தபடி ஓடி வந்தான்: ''நிறுத்துங்கம்மா, வேணாம், வேணாம்... தெருவே ஓடி வந்து வேடிக்கைப் பார்க்கப் போவுது, உஷ்.. போலீஸ் ரவுன்ட்ல இருக்கும்மா... நிறுத்துங்களேன், ஸ்டாப் இட், ஐ ஸே.''

மெலிந்திருந்தவள் சிவப்புக் கேசம் கொண்டவளின் அடர்த்தியான முடிக் கற்றைகளை இறுக்கமாய் கைகளில் பிடித்துக் கொண்டு, அவள் கதறக் கதறத் துடிப்பதற்கு இடையே, வெறி பிடித்தவளாய் இரக்கமற்று சீறினாள். ''நீ நாய்டீ, ஆம்பிளை திருடி, தெருநாயே, நீ..''

''அது நீடீ நீ..''

லீகீயும், அவமானமாய் உணர்ந்த அந்த இரு வாலிபர்களும் பெண்களைக் கஷ்டப்பட்டுப் பிரித்து தூர வைத்தார்கள். ஒல்லியான பெண்ணின் கைகளில் கொத்தாய் நிறைய சிகப்பு முடிக் கற்றைகள். அதைத் தூக்கி வெற்றிகரமாய் காட்டி சிரித்தவள் அப்படியே தரையில் வீசினாள்.

வாசல் நோக்கியிருந்த கதவு இப்போது திறக்கப்பட, நீல நிற உடையில் விறைப்பாயிருந்த காவலதிகாரி நுழைவாயிலில் வந்து நின்றார். காவல் கட்டுப்பாட்டு சட்டத்தினை அதிகாரமாய் சொன்னார்.

''என்ன நடந்தது இங்கே?''

உடனடியாய், எங்களுக்குள் சராசரியான நடவடிக்கைதான் இது என்பது போன்ற ஒரு கருத்து, இருவரில் ஒரு வாலிபப் பையனால் அதிகாரியின் முன் வைக்கப்பட்டது. ''நத்திங், ஒரு சின்ன ஃபன்.. கொண்டாட்டம்..''

''வேறொண்ணுமில்லே'' என்றான் *லீகீ.* ''நண்பர்களுக்குள்ளே ஒரு குட்டி கலாட்டா..''

சொன்னவன், அவன் கால்களால், கீழே பளபளவென்று கிடந்த கொத்து சிகப்பு முடிக் கற்றைகளை டேபிளுக்கு அடியில் சடுதியில் தள்ளினான். போரில் இருந்த நால்வரும் ஒருத்தருக்கொருத்தர் பொய் சிரிப்பினைப் பகிர்ந்துக் கொண்டார்கள்.

போலீஸ்காரர்கள் அங்கிருந்து ஒவ்வொருத்தரையும் சந்தேகமாய்ப் பார்த்தார்கள்.

''நாங்க கிளம்பிக்கிட்டேயிருக்கோம்'' என்றாள் ஒல்லிப் பெண் இனிமையாய். ''கிளம்புங்கடா.''

அப்போது பலர் கிளம்பி வெளியேறத் துவங்க, இது, அவள் சொன்னதோடு அம்சமாய் ஒத்துப் போகும்படியாய் அமைந்தது. வெளியேறிச் செல்பவர்களை அதிகாரி இறுக்கமாய் கவனித்துக் கொண்டிருந்தார். இந்தத் தடவை இவர்கள் சொல்வதை நம்புவதாயும் ஆயினும் கண்களை விடாது இந்த நால்வர் மீதும் பதித்தே வைத்திருப்பேன் என்றும் சொல்லின அதிகாரியின் கண்கள். பிறகு அவர் மெதுவாய் வெளியேறிப் போனார்.

சிகப்புக் கேசக்காரியின் உடன் சேர்ந்துக் கொண்டவன் பணத்தைச் செலுத்தினான்.

''ஒண்ணும் ஆகிடலையே?'' என்று தலையை சரி செய்துக் கொண்டிருந்தவளைக் கேட்டான் லீகீ. ''தலைமுடியை வேரிலிருந்து இப்படியா பிய்ச்சுப் போடுவது? பொண்ணா அவ?''

''வலி ஒண்ணும் இல்லே'' என லீகீயைப் பார்த்துப் பட்டும் படாமல் சிரித்தாள் அவள். ''இந்த களேபரத்துக்கு, ஸாரி லீகீ.''

அந்தக் குழு வெளியேறியது. பார் இப்போது முழுக்கவும் காலியாகியிருந்தது. நான் காசு கொடுக்க பாக்கெட்டில் சில்லறைகளைத் தேடினேன்.

வெளியேறிய நால்வருக்குப் பின்னால் கதவு மூடுவதைப் பார்த்தபடி, ''ஸ்போர்ட்டிவ்வா எடுத்துக்கிட்டா, பாவம்'' என்று ஒப்புதலாய் தலையசைத்தபடி சொன்னான் லீகீ. துடைப்பம் ஒன்றை எடுத்து கொட்டியிருந்த முடிக்கற்றைகளை வாரி முடித்தான்.

வாரிய முடிக் கற்றைகளைப் பார்த்ததும், ''இவ்ளோவா? துடிச்சிருக் கணும்'' என்றேன் நான்.

''நானாயிருந்தா செத்திருப்பேன்'' என்ற லீகீ, ''எப்படியோ தாங்கிட்டா'' என்றான்.

''அவளை உங்களுக்கு நல்லா தெரியுமா என்ன?''

''ஓ... அவ ஏறத்தாழ எல்லா சாயங்காலங்களிலும் இங்கே வந்துடுவா. டக்கர்டான் - இதுதான் அவ பேர். முழு பேர் வேணும்னா தோமாஸீனா

டக்கர்டான். ஆனா இங்கே அவளைக் கூப்பிடறது, டாமி. கொள்ளைப் பணக்காரி. கிழவன் எக்கச்சக்கமான சொத்துக்களை அவளுக்கு விட்டுட்டுப் போயிட்டான்... பாவம் அவளும்தான் என்ன பண்ணுவா? செல்ஸீக்கு வந்து, அழுக்கடைஞ்ச ஒரு ரூமை இங்கே வேண்ட்ஸ் - வொர்த் பாலத்துக்கருகே எடுத்துக்கிட்டு, இப்படி அவளை மாதிரியே அலையும் கூட்டத்தோட நட்பை ஏற்படுத்திக்கிட்டு சுத்திக்கிட்டிருக்கா. பைத்தியம். இவள்னு இல்லே... அதுங்க எல்லாத்துக்கிட்டேயும் பணம் கொட்டிக் கிடக்கு. வேணும்னா ரிட்ஸ் போன்ற ஐந்து நட்சத்திர ஓட்டலிலேயே தங்கி இதுங்க அரட்டையடிக்கலாம். ஆனா அதுங்க வழக்கமா வாழற வழியிலிருந்து தூக்கியெறியப்பட்ட மாதிரி மாறுபட்டு இருக்கணுமாம்...! யெஸ்.. அதான் சொன்னேன்லே.... எல்லாமும் பைத்தியங்க.''

நான் எழுந்துக் கிளம்பும்போது எதனால் இப்படியொரு குடுமிபிடிச் சண்டை நிகழ்ந்தது என கேட்டேன்.

''ஓ, அதுவா! அந்த இன்னொருப் பெண்ணோட பாய்ஃபிரண்ட்டை டாமி அமுக்கிட்டா! இப்படி சண்டைப் போடற அளவுக்கு அவன் ஒண்ணும் லாயக்கானவன் கிடையாது, ஆங்!''

''ஆனா அந்த இன்னொரு பொண்ணு அவன் லாயக்கானவன்னு நினைச்சிருக்கு'' - குறிப்பிட்டேன் நான்.

''அவ பேர் லோவ்.. ம்... கண்ணில்லாத காதல்'' என்றான் லீகீ.

அப்படியா? எனக்குத் தெரியவில்லை. இப்படியெல்லாம் ஒரு ஐடியாவை மனசில் வைத்து நான் மேற்படி குறிப்பைச் சொல்லவில்லை. ஜஸ்ட் ஒரு காமெண்ட், அவ்வளவே... ஆனால் நான் மறுத்தேதும் சொல்லவில்லை.

II

ஒரு வாரம் கழிந்திருக்க வேண்டும்... The Times பத்திரிகையின் மரணமடைந்தோர் பத்தியில் வந்திருந்த ஒரு பெயர் என்னைக் கவர்ந்தது.

டக்கிர்டான். அக்டோபர் 2, அம்பர்லேயில் உள்ள மருத்துவமனையில். தோமாஸீனா குடும்பம். வயது 20. தாமஸ் டக்கிர்டானின் ஒரே பெண். இறுதி மரியாதைக்கு உறவினர்கள் மட்டும். மலர் வளையங்கள் வேண்டாம்.

III

பாவப்பட்ட டாமிக்கு மலர் வளையங்கள் கூட இல்லாமல் கதை முடிந்துள்ளது. 'தூக்கியெறியப்பட்டாற் போல்' மாறுதல் தேடி செல்ஸீக்கு அவள் வருவதெல்லாம் இனி இருக்காது. வாலிப வயதிலேயே எப்படியெல்லாமோ வாழ்ந்து இப்போது இறந்தும் விட்ட டாமி டக்கரின் மீது என்னுள் மிக வேகமாக உருக்கமும் இரக்கமும் மூண்டன. இருந்தாலும் அவர்களது வாழ்க்கை ஒரு வீணாய் போன வாழ்க்கை என்று தீர்ப்பு சொல்ல நான் யார்? பார்க்கப் போனால் என்னுடைய வாழ்க்கை, சாந்தமாய் ஒடுங்கியே பழகி விட்ட என்னுடைய மேதாவி வாழ்க்கை, புத்தகங்களுக்குள் மூழ்கி உலகத்தின் ஏனைய அனைத்திலிருந்தும் மூடப்பட்டுள்ள என்னுடைய வாழ்க்கைதான் வீணாய் போய் விட்ட ஒன்று. இரண்டாந்தர வாழ்க்கை.

என் சிந்தனைக்குள்ளிருந்து டாமியின் சிந்தனையை விலக்கிய நான், எனக்கு வந்திருந்த கடுதாசிகளில் கண்களைப் பதித்தேன்.

அவற்றில் முக்கியமான கடிதம், எனக்கு சகோதரி முறை வரும் ரூடா டெஸ்பர்டிடமிருந்து வந்திருந்ததாகும். ஓர் உதவி நாடி எனக்கு அதை அனுப்பியிருந்தாள். அன்றைய காலையில் வேலை பண்ண எனக்கு மூட் இல்லாத காரணத்தால் இக்கடுதாசியை நான் பற்றிக் கொண்டேன்.

கிங்ஸ் சாலை வரை வெளியேறிப் போன நான் அங்கு ஒரு டாக்ஸியை அமர்த்திக் கொண்டு நேராய் என்னுடைய தோழியான மிஸஸ் அரியா ஓலிவர் வீட்டுக்குப் பயணமானேன்.

மிஸஸ் ஓலிவர் ஒரு பெயர் பெற்ற துப்பறியும் எழுத்தாளர். அவளுக்கு ஒரு வேலைக்காரி. ஓலிவரை விட்டு இங்குமங்கும் நகராமல் ஒட்டிக் கொண்டேயிருக்கும் பணிப் பெண். மில்லி, இது அவள் பெயர்.

வீடடைந்ததும் விசாரிக்கும் தொனியில் நான் என் புருவங்களை உயர்த்திக் கேட்க இதற்கு மில்லி வேகமாய் ஆமோதித்துத் தலையசைத்தாள். ''நீங்க பேசாம நேரா மேலே போயிடுங்க, மிஸ்டர் மார்க்'' என்றாள் அவள். ''காலைலேர்ந்து படபடனு உக்கிரமாயிருக்காங்க. அதிலேர்ந்து அவங்க வெளியே வர நீங்க போவது உபகாரமா அமையலாம்.''

ரெண்டு ரெண்டு அடிகளாய் வைத்து வேகமாய் படிகளேறி, அங்கிருந்த ஒரு கதவில் சில குட்டுக்கள் வைத்து பின் உள்ளே வர ஊக்குவிக்கும்

பதிலெதற்கும் காத்திராமல் நான் உள்ளே நுழைந்து விட்டேன். கடற்கரை நகரங்களில் அடர்ந்திருக்கும் மரங்களில் பறவைகள் கூடு கட்டி மகிழும் காட்சிகளை சுவரெங்கும் வால் பேப்பர்களாய் தாங்கியிருக்கும் பெரிய அறை, மிஸஸ் ஓலிவரின் அலுவலக அறை. ஏறக்குறைய பைத்தியம் பிடித்து விடும் விளிம்பில் இருப்பதைப் போல் வெளிப்படையாகவே தோன்றிய அவள், அறையை சுற்றிச் சுற்றி நடந்தபடி தனக்குத்தானே என்னத்தையோ பேசிக் கொண்டிருந்தாள். ஈடுபாடற்ற ஓரக்கண் பார்வையை என் மேல் வீசிய அவள் அறையை சுற்றி வெறியாய் நடக்கும் தனது இயக்கத்தைத் தொடரலானாள். இலக்கற்று அல்லாடிய அவளுடைய விழிகள், சுவர்களை இடமும், வலமுமாய் வேக வேகமாய் கடந்து, அவ்வப்போது ஜன்னலுக்கு வெளியே நோட்டமிட்டு விட்டு, இயலாமையின் வெளிப்படையாய் சில முறை மூடிக் கொண்டன.

''ஆனா ஏன்? ஏன்?'' என்று பிரபஞ்சத்தை நோக்கிக் கேட்ட மிஸஸ் ஓலிவர், ''அந்த பெரிய கிளியைப் பார்த்தேன்னு ஏன் அவன் சொல்லக் கூடாது? ஏன், அவன் அதை சொல்லக்கூடாது?'' என்று அந்தரத்துக்குக் கத்தினாள். ''அதை பார்ப்பதை அவனால தவிர்த்திருக்க முடியாது! ஆனால் அவன் மட்டும் பார்த்ததை சொல்லிட்டான்னா அத்தனையும் போச்சு. கதை கந்தல். இதுக்கு ஒரு வழி இருக்கணும்...ஒரு வழி இருந்தாகணும்..''

உறுமினாள் அவள். கூந்தலுக்கு இடுக்குகளில் தன் கைவிரல் நகங்களை செருகியவள், அப்படியே அதனைப் பிடித்து இழுத்துக் கொண்டாள். பிறகு, திடுமென அப்போதுதான் என்னை கவனிப்பவளாய், ''ஹலோ மார்க்'' என்றாள் கண்களை ஒரு வழியாய் என் மேல் பதித்து. உடனேயே தன் மனநிலைக்குள் மீண்டும் புகுந்துக் கொண்டவள், ''எனக்குப் பைத்தியம் பிடிச்சுடும் போல இருக்கு'' என்றாள்.

''அப்புறம் அந்த மோனிக்கா வேற இருக்கா. எத்தனை அழகா அவளை நான் படைக்கலாம்னு நினைக்கிறேனோ, அந்த அளவுக்கு அவளுக்கு எரிச்சல் கூடுது. இப்படி ஒரு முட்டாள் வகை; ஸ்மார்ட் தான், இருந்தாலும் மோனிக்கா... மோனிக்கா? ம்ம்... இந்த பேர் சரிப்படாதுனு நினைக்கிறேன். நான்ஸி? இது சரிப்படுமா? ஜோவன்? எல்லாரும் ஏறக்குறைய ஜோவன்தான். ம்ம்.. ஆனேங்கிற பேரும் இப்படியே. அப்ப, சூசன்? ஏற்கெனவே நான் சூசன் பயன்படுத்தியிருக்கான். லூஸியா? *லூஸியா?* லூஸியே தேவலாம்னு எனக்குப்படுது. செந்நிறக் கூந்தல் வைச்சுடறேன் அவளுக்கு. கொக்கு கழுத்து, கறுப்பு டைட்ஸ்? ஓ கே தானா? ஓ கே தான்..''

இக்கணத்தில் அவளிடம் உருவான குதூகலத்தை அந்த கிளி விவகாரம் கிரகணமாய் மறைத்தது. மீண்டும் சந்தோஷமற்றுப் போன மிஸஸ் ஓலிவர் அறையை சுற்றிச் சுற்றி வர ஆரம்பித்தாள். டேபிளில் இருந்த சிலவற்றை நானறியாமல் எடுத்துக் கொண்ட அவள் அப்படியே நடந்தபடி வேறெங்கோ அவற்றை வைத்தாள். தனது மூக்குக் கண்ணாடியை ஏற்கெனவே வேறென்னவோ திணிக்கப்பட்டுக் கிடந்த ஒரு சின்ன கைப்பைக்குள் செருகிய அவள் நீண்ட பெருமூச்சுக்கிடையே சொன்னாள்: ''நீ வந்திருப்பதுல சந்தோஷம்.''

''ரொம்ப சந்தோஷம்.''

''வேற யாராவது கூட வந்திருக்கலாம். ஒப்பேறாத ஒரு பொண்ணு, புது பஜாரை நான் தொறந்து வைக்கணும்னு சொல்லிக்கிட்டு வந்து நிக்குங்க. இல்லேனா, இன்ஷூரன்ஸும் வேணாம் ஒரு மண்ணும் வேணாம்னு இருக்கிற என்னைத் தேடிக்கிட்டு ஓர் இன்ஷூரன்ஸ்காரன் வருவான். இதுவும் இல்லேனா ஒவ்வொரு தடவையும் சொல்லி வெச்ச மாதிரி ஒரே மாதிரியிருக்கிற கேள்விகளைத் தூக்கிட்டு அலையும் கூட்டத்திலிருந்து என் இண்டர்வியூவுக்காக நிருபர் பய ஒருத்தன் வந்திருப்பான். எழுதுவதை தொழிலா எடுத்துக்க எது உங்களை முதலில் தூண்டிச்சு? எத்தனை புத்தகங்கள் எழுதியிருக்கீங்க? எவ்ளோ காசு பண்றீங்க? இப்படியெல்லாம் இருக்கும், கேள்விங்க! இதுக்கெல்லாம் என்ன பதில்னு எனக்கே தெரியாத காரணத்தால முட்டாள் மாதிரி குந்திக்கிட்டிருப்பேன் நான். வேறென்ன பண்ண? இதெல்லாம் எனக்கு பெருசே கிடையாது. அந்தக் கிளி பிஸினஸ்ல நான் பைத்தியமாகிக்கிட்டிருக்கேன்.''

''அப்ப, நான் கிளம்பிடறது உசிதம்னு நினைக்கிறேன்..''

''நோ, வேணாம், எனக்கு நீதான் ஒரு மாற்று இப்ப..''

அத்தனை மரியாதையில்லாத இந்த புகழுரையை நான் ஏற்றுக் கொண்டேன்.

ஈடுபாடு இல்லாத மனோநிலையால் அழுத்தமற்ற விருந்தோம்பலுடன் ''சிகரெட் ஏதாவது?'' என்றாள் மிஸஸ் ஓலிவர். ''இங்கே எங்கேயாவது ஒன்றிரண்டு கிடக்கும். அங்கே டைப் ரைட்டர் பக்கத்துலப் போய் பாரு.''

''என்னுதே என்கிட்டேயிருக்கு. உனக்கு? ஓ, நீ பிடிக்க மாட்டேயில்லே?''

''குடிக்கவும் மாட்டேன்'' என்றாள் மிஸஸ் ஓலிவர். ''இதெல்லாம் பண்ணித் தொலைச்சிருக்கலாமோனு இப்பத் தோணுது. அமெரிக்கன்

துப்பறியும் புதினங்களை படிச்சிருக்கேன். குடிச்சா - ப்ராப்ளம் தீர்வாகிடும். தெரியுமா! மார்க்.... நிஜ வாழ்க்கையில் ஒரு கொலையிலிருந்து எப்படி கொலைகாரன் தப்பிக்கிறான் என்பது எனக்கு விளங்குவதே இல்ல. கொலையைப் பண்ணி முடிச்சதும், வெறி முழுக்கத் தணிந்து விட, எல்லாம் தெளிவாயிடும்னு நினைக்கிறேன். போதை போனா மாதிரி.''

''முட்டாள்தனமா பேசாதே. நீ நிறைய பண்ணியிருக்கே, அதான்.''

''குறைந்தபட்சம், ஐம்பத்தைந்து'' என்றாள் துப்பறியும் எழுத்தாளர். ''கொலை நடக்கும் அத்தியாயங்கள் ரொம்ப ஈஸி மற்றும் சுலபம். இதை மூடி மூடி கதையை வளர்ப்பதுதான் படு கஷ்டம். அது ஏன் நீயா இல்லாம மற்றவங்களா இருக்கணும் - இப்படிப்பட்ட கேள்வியோடு கதை ஓடணும். தாவு தீர்ந்திடும்.

''கதையில இருக்கும் ஆறு ஏழு பாத்திரங்களும் ஒரு குறிப்பிட்ட ஆள் A கொல்லப்படும்போது ஸ்தலத்துல இருக்கும் வாய்ப்பு இருக்காது. ஆனா இந்த ஆறேழு பேருக்கும் A வைக் கொல்வதற்கான இலக்கு இருக்கும். அந்த ஆள் A மொத்தத்துல ஒப்பேறாத ஓர் ஊதாரியா இல்லாத வரைக்கும் சந்தேகம் தானா அந்த ஆறேழு பேர் மேலயும் விழ... கதை பறக்கும். A நல்லவனா இல்லாத ஒரு வில்லன் பாத்திரமா படைக்கப்பட்டுட்டா போச்சு.. அவன் ஏன் கொல்லப்பட்டானோ, அவனைக் கொன்னவன் யார்னோ எவ்வித சுவாரஸ்யமும் இல்லாம கதை மொக்கையா தோல்வியடையும்.''

''உன் ப்ராப்ளம் இப்ப எனக்கு விளங்குது'' என்றேன் நான். ''ஆனா அம்பத்தஞ்சு தடவை இப்படிப்பட்ட இக்கட்டை நீ ஜெயிச்சிருக்கேன்னா இப்ப நீ இதுலே மறுபடியும் ஜெயிப்பே, பாரேன்.''

''இதையேதான் திருப்பித் திருப்பி நான் எனக்கே சொல்லிக்கறேன்'' என்றாள் மிஸஸ் ஓலிவர். ''ஆனா ஒவ்வொரு புது கதைல தவிக்கும்போதும் இந்த ஆறுதல் காணாமப் போயிடுது. துடிக்கறேன்.''

மறுபடியும் தன் கூந்தலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு இழுத்துக் கொள்வதில் இறங்கினாள்.

''பண்ணாதேப்பா'' என கத்தினேன். ''வேரோட பிடிங்கிறப்போற..''

''நான்சென்ஸ்... முடி கெட்டியானது'' என்றாள் அவள். ''எனக்கு பதினாலு வயசுல அம்மைப் போட்டப்ப முடி கொட்டிச்சு. ஒத்துக்கிறேன். முன்னாடி முழுக்க, வழுக்கை மாதிரி. எத்தனை வெட்கக் கேடு. மறுபடியும் உருப்படியா வளர ஆறு மாசமாச்சு. பொண்ணுங்களுக்கு கதிகலங்கிப்

போயிடாதோ! மேரி டெலாஃபான்டைனை நேத்து ராத்திரி நர்ஸிங் ஹோம்ல பார்த்தப்ப இதெல்லாம்தான் எனக்கு தோணிச்சு. எனக்கு எப்படியாச்சோ அப்படியேதான் அவளுக்கும் முடி உதிர ஆரம்பிச்சிருக்கு. உடம்பு குணமானதும் டோப்பா முடி வாங்கி முன்னால மட்டும் வெச்சுக்கணும்கிறா. அறுபது வயசுல இப்படியெல்லாம் ஆனா திரும்பி வளராதுனுதான் நினைக்கிறேன்.''

''அன்னிக்கு ராத்திரி ஒரு பொண்ணு அவகூட இருந்த இன்னொரு பொண்ணோட கூந்தல் முழுக்க அடி வேரோட வருமாறு பிடிச்சு பிய்த்தெறிஞ்சா'' என்றேன் நான். இப்படியொரு காட்சியைப் பார்த்த ஆள் நான் எனும் அளவிற்கு என் குரலில் ஒரு பெருமிதம் வந்து ஒட்டிக் கொள்ளத்தான் செய்தது.

''எப்படிப்பட்ட அசாதாரண இடங்களுக்கெல்லாம் நீ போறே?'' என வியப்பாய் கேட்டாள் மிஸஸ் ஓலிவர்.

''இது ஒரு காபி பார். செல்ஸீல.''

''ஓ, செல்ஸீ!'' - இப்போது ஆனந்த வியப்பு. ''அங்கே எல்லாம் நடக்கும் போல. கட்டப் பஞ்சாயத்து, அடிதடி, கூத்து கும்மாளம்... சரியான அடாவடி தலைமுறை. அப்படிப்பட்ட இடங்களைப் பற்றி நான் எழுதுவதே கிடையாது.. ஒண்ணு கெடக்க ஒண்ணு சரியா விவரிக்காம போயிடுவேனோங்கிற சந்தேகம்.. நமக்கு எது பரீச்சயமோ அதை மட்டும் பேஸ் பண்ணி எழுதுவதுதான் சிறந்ததுங்கிறது என் கட்சி.''

''உதாரணத்துக்கு?''

''கப்பல் பிரயாணத்துல நடக்கிற மாதிரி, ஹோட்டல மையமா வெச்சு, ஹாஸ்பிடல்கள்ல நடப்பவற்றை கருவாக்கி, வியாபார நடவடிக்கைகள்... இசைவிழா மேடைகள்... பெண்கள் மற்றும் அவர்களுடைய கழகங்களை முக்கியமாக்கி... கடையில வேலை பண்ணும் ஏழை பெண்களுடைய மனநிலையை முன்னிறுத்தி...''

மூச்சுக் காற்றுக்காகக் கொஞ்சம் நிறுத்திக் கொண்டாள் அவள்.

''ம்... உன்னோட கதையின் களங்கள் பற்றிய சுருக்கமான ஆனா அழகான விளக்கத்தை கொடுத்துட்டே...''

''இருந்தாலும் கூட, நீ என்னை ஒருநாள் செல்ஸீ பகுதியில் இருக்கிற காபி பார் ஒண்ணுக்கு கூட்டிட்டுப் போறே. ஜஸ்ட், என் அனுபவங்களை விசாலப்படுத்திக்க'' என்றாள் மிஸஸ் ஓலிவர், முக்கியப்படுத்தி.

''ஒரு நாள்னு சொல்றே, இன்னிக்கு ராத்திரி?''

''இன்னிக்கு ராத்திரி மட்டும் வேண்டாம். எழுதறதுல பிஸியாயிருப்பேன்... அல்லது சரியான கதையமைப்பு கெடச்சு மேற்கொண்டு எழுத முடியாம ஆகுதேனு எரிச்சல்ல இருப்பேன். எழுதறதுல இதுதான் அசதியேற்படுத்தும் ஒரு கட்டம். அதியற்புதமான ஓர் ஐடியா கெடச்சு, இனி கதை வளர காத்திருக்கவே வேண்டாம்னு ஒரு நிலைமை உருவாகி, நாம மளமளன்னு கதையை வளர்க்கிற திருப்பம் உண்டாகும் வரை ஊஃப்... இந்தக் காத்திருப்பு பெரும் களைப்புதான். நீ சொல்லு மார்க்... ரிமோட் கண்ட்ரோல் முறையில ஒரு கொலையை நிகழ்த்திக் காட்ட முடியுமா?''

''ரிமோட் கண்ட்ரோல்? என்ன சொல்ல வர்றே? இப்ப எல்லா தீவிரவாதமும் அப்படித்தானே நடக்குது? ஒரு பட்டனை அமுக்கினா எங்கேயோ ஒரு குண்டு வெடிச்சு...''

''நோ, நோ, அறிவியல் சப்ஜெக்ட் வேண்டாம்'' என்று சந்தேகமாய் குறிப்பிட்டவள், ''நான் சொல்ல வந்தது *ப்ளாக் மேஜிக்*'' என்றாள்.

''மாயாஜாலம்? கண்கட்டு வித்தை மாதிரி, ஆங்? பில்லி, சூனியம்? ஓ மெழுகு பொம்மை... அதுல ஆணியைக் குத்தி..?''

''விளக்க முடியாத சம்பவங்கள் நடந்துக்கிட்டுத் தானிருக்கு'' என்றாள் மிஸஸ், ஆழ்ந்து. ''ஆப்பிரிக்காவுல, மேற்கிந்தியப் பகுதியில. பேச்சிருக்கு. திடீர்னு சுருண்டு விழுந்து துடிதுடிச்சு பேயா நெளிஞ்சு பதறி கடைசியில சாவது. இப்ப நான் எதைச் சொல்ல வந்தேன்னு உனக்குப் புரிஞ்சிருக்கணும்.''

இதெல்லாம் மூளை சலவை வகையைச் சேர்ந்த மனோவசியத் தந்திரங்கள் என்று என் கருத்தை முன் வைத்தேன் நான். நம்பிக்கையான ஒரு மருத்துவன் மூலம், குறி வைக்கப்பட்ட ஆளிடம், அவனுடைய மரணம் மிக சமீபித்துவிட்டது என்று அச்சுறுத்தும் வார்த்தைகள் சொல்லப்படும் என்றும், இதைக் கேட்டு அலறி விடும் அந்த ஆளுக்கு நிலைகுலைய வைத்துக் கொல்லும் மீதி அத்தனையையும் அவனுடைய ஆழ் மனதே கவனித்துக் கொண்டு விடும் என்றும் விளக்கினேன்.

மிஸஸ் ஓலிவர் முகஞ்சுளித்தாள். ''என்கிட்டே எவனாவது வந்து நீங்க சாகும் நேரம் ரொம்ப பக்கத்துல வந்துடுச்சுன்னு நம்பத்தகுந்த மாதிரி சொன்னால், அவன் மூஞ்சுல கரியைப் பூசுற மாதிரி ஜாலியா வலம் வந்து அவனைத் துரத்தியடிக்கும் குஷியான வேலையைத்தான் நான் செய்வேன்!''

நான் சிரித்து விட்டேன். ''நரம்பு முழுக்க தைரியம்ப்பா உனக்கு, சந்தேகமே வேணாம்.''

''இத விடு, அப்ப நீ என்ன சொல்ல வரே? அப்படி நடக்கும் வாய்ப்பிருக்கா?''

''உறுதியா சொல்லுமளவுக்கு இந்த விஷயத்துல எனக்கு ஞானம் கிடையாது. எது உனக்கு இப்படிப்பட்ட ஐடியாவை உன் மண்டைக்குள்ளே போட்டது? என்ன, உன்னோட புது அட்டகாசமான நாவல், கண்கட்டு மந்திரத்தை வெச்சா?''

''அப்படியெதுவும் திட்டமிடல்லே. பழங்காலத்து ஆர்சனிக் விஷம் இல்லேன்னா, எலிப் பாஷாணாம்... இதுபோதும் எனக்கு...! சரி விடு... நீ இப்ப இங்கே என் புத்தகங்களைப் பற்றிப் பேச வரலேனு நினைக்கிறேன்...''

''உண்மையைச் சொன்னா அதுக்கு வரலே நான். எனக்கு சகோதரி முறை வரும் ரூடா டெஸ்பர்ட் ஒரு சர்ச் விழா வெச்சிருக்களாம்..''

''மறுபடியும் வேணாம்ப்பா!'' - அலறிச் சொன்னாள் எழுத்தாளர். ''போன ஒரு தடவை என்ன நடந்ததுனு உனக்குத் தெரியுமா? கொலையை மையமா வெச்சு ஒரு சிறு விளையாட்டு பண்ணினேன். ஒரு பார்ட்டியில. அப்ப முதல்ல அங்கே என்னாச்சு தெரியுமா? நிஜப் பிணம் அகப்பட்டது! நான் கொலை பற்றி விளையாட ப்ளான் பண்ணும்போது ஒரு பிணமே அகப்பட்டால், என்னை என்ன நினைப்பாங்க! ஊஃப்... கதையில ஈஸியா கொலை பண்ணப்பட்ட உடம்பை அறிமுகப்படுத்திடலாம். ஆனா நிஜத்துல? அதிலிருந்து இன்னும் நான் முழுசா வெளிவரலே!''

''இது அப்படியெல்லாம் பிணம் தேடும் விளையாட்டு கிடையாது, மிஸஸ் ஓலிவர். சிறு உரைக்குப் பிறகு அங்கே போடப்பட்டிருக்கும் டெண்ட்ல உட்கார்ந்து உன்னோட புத்தகங்களுக்கு நீயே கையழுத்துப் போட்டுத் தரணும்..''

''அ...ப்.. ப..டி.. யா..?'' என்றாள் அவள் சிறு சந்தேகத்துடன். ''அப்படினா பரவாயில்லே, அந்த விழாவை நான் தொறந்து வெக்கணும்னெல்லாம் கூத்திருக்காதே? அப்ப சிறப்பு விருந்தினர் உரைனெல்லாம் கூப்பிட்டு என்னை இம்சைப்படுத்தி விடக் கூடாது..''

அவளிடமிருந்து இப்படியெல்லாம் எதுவும் வேண்டப்படாது என நான் உத்தரவாதம் கொடுத்தேன். மேலும் அவளைத் தாஜா பண்ணும் விதமாய் ''மிஞ்சி மிஞ்சிப் போனா ரெண்டு மணி நேரம் அவ்ளோதான்''

என்றேன். ''ஒரு கிரிக்கெட் மாட்ச் வெக்கலாம். ம்ம்... இந்த தடவை அதுவும் இல்ல. குழந்தைங்க நடனம் ஒண்ணு.. மேலும் ஒரு மாறுவேடப் போட்டி... அதோட முடிச்சுக்கலாம்.''

இப்போது மிஸஸ் ஓலிவர் ஒரு பெரும் சந்தோஷக் கூக்குரலுடன் என் பேச்சினை இடைமறித்தாள். ''அதான், அதேதான்'' என்று கத்தி விட்டாள். ''ஒரு கிரிக்கெட் பந்து! அதை அவன் ஜன்னலிலிருந்து பார்க்கிறான். காத்துல பறக்கும் அந்தப் பந்தை அவன் கவனிச்சடறான். அது அவன் சிந்தனையைக் குலைக்குது... இதனாலத்தான் அந்தப் பருத்தப் பறக்கும் கிளியைப் பற்றி அவன் எப்பவுமே எதுவும் சொல்லலே! எத்தனை பெரிய புண்ணியத்தைக் கட்டிக்க நீ இங்கே வந்திருக்கே தெரியுமா, மார்க்!''

''எனக்கு அப்படியெல்லாம் ஒரு புண்ணியமும் தெரியலியே...''.

''உனக்குத் தெரியாம இருக்கலாம்.. எனக்குத் தெரியுது'' என்றாள் மிஸஸ் ஓலிவர். அவள் கதை குழப்பத்துக்கு ஒரு முடிவு கிட்டி விட்டது என்ற அளவுக்கு மட்டும் எனக்குப் புரிந்தது. ''அதெல்லாம் பெரிய குழப்பமான சங்கதி... அதைப் பற்றியெல்லாம் இப்ப நான் விவாதிச்சு நேரத்தை வீணாக்க விரும்பலே. உன்னைப் பார்த்ததுல எனக்கு அவ்ளோ சந்தோஷம், குட்... இப்ப நீ என்ன பண்ணனும்னு நினைக்கிறேன்னா, நடையைக் கட்டு. இப்பவே!''

''நோ ப்ராப்ளம். அந்த விழாப் பற்றி...''

''அதைப் பற்றி நான் யோசிக்கிறேன். இப்ப என்னை தொல்லைப்படுத்தாதே. கடவுளே... எங்கே வெச்சேன் என் மூக்குக் கண்ணாடியை? வெச்சதெல்லாம் தானா இங்கே மறைஞ்சுடுதுப்பா...''

அத்தியாயம் 2

I

மிஸஸ் கெரத்தி, சர்ச் பாதிரியார் தங்கும் பகுதியின் கதவினை வழக்கமாய் அவளுக்கே உரிய சண்டைக்காரக் கோழி ஸ்டைலில் திறந்தாள். ''வெல் என்ன இப்ப? என்ன வேணும் உங்களுக்கு?'' என அதே ஸ்டைலிலேயே போருக்கு ஆயத்தமான ஒருத்தியைப் போலக் கேட்டாள்.

அங்கு கதவருகே ஒரு பையன் இருந்தான். முக்கியத்துவம் தராது ஒதுக்கித் தள்ளப்பட வேண்டிய ஒருத்தனைப் போல இருந்தான் அவன். சுலபமாய் ஞாபகம் வைத்துக் கொள்ளவோ அல்லது சுலபமாய் கவனித்துக் குறித்துக் கொள்ளும் அடையாளங்கள் ஏதோ சுமந்தோ அவன் இருக்கவில்லை. குழுமிக் கிடக்கும் பல பையன்களில் ஒருவனாய் - பத்தோடு பதினொன்றாய். தலைக்குள் நீர்க்கட்டியிருந்ததால் மூக்கை உறிஞ்சிக் கொண்டேயிருந்தான்.

''இது பாதிரியார் இடம்தானே?''

''யார் வேணும் உனக்கு? ஃபாதர் கார்-மேன்?''

''அவர்தான் வேணும்'' என்றான் பையன்.

''யாருக்கு அவர் வேணும்? எங்கே? எதுக்காக?''

''பெந்தால் தெரு. இருபத்து மூணு. அங்கே அந்தம்மா செத்துக்கிட்டிருக்கிறதா அந்தப் பொம்பளை சொன்னாங்க. மிஸஸ் காப்பின்ஸ்தான் என்னை அனுப்பிச்சது. இது கத்தோலிக்க, சபைதானே? ஃபாதரோட சீடனெல்லாம் உதவாதுனு அடிச்சு சொல்லிடுச்சு அந்தப் பொம்பளை.''

இக்குறிப்பிட்ட வாக்கியத்தால், பையனை அவன் நிற்கும் இடத்திலேயே இருக்குமாறு சொல்லிவிட்டு பாதிரியார் தங்கும் பகுதியின் உள்ளே போனாள் மிஸஸ் கெரத்தி. கிட்டத்தட்ட மூன்று நிமிடங்கள் கழிந்த பிறகு வயதான பெரியவராய் தோன்றிய ஒருவர் கையில் தோல்பை ஒன்றினைச் சுமந்தபடி வெளியே வந்தார்.

''நான்தான் ஃபாதர் கார்-மேன்'' என்றார் அவர். ''பெந்தால் தெரு? ரெயில்வே பகுதியை ஒட்டியிருக்கும் பகுதி அது, இல்லையா?''

''ஆமாம். ரொம்ப சரி. ரெயில்வே யார்டை தாண்டி ஓர் அடி அந்தாண்டை போக வேண்டாம். அங்கேயேதானிருக்கு இது.''

இருவரும் ஒன்றாய் வெளியேற, பாதிரியார் அகலக் கால் வைத்து வசதியாய் முன்னேறிக் கொண்டிருந்தார்.

''என்ன சொன்னே? மிஸஸ் - காப்பின்ஸ், ஆங்? இதானே பேரு?''

''அவங்கதான் அந்த வீட்டை சொந்தமாக்கியிருப்பது. அறைகளை வாடகைக்கு விடறாங்க, அவங்க. அப்படியிருக்கிற ஒரு வாடகையாள்தான் உங்களைக் கேட்டது. பேர், டேவிஸ்னு நினைக்கிறேன்.''

பாதிரியார் ஒப்புதலாய் தலையசைத்துக் கொண்டார். பெந்தால் தெருவுக்கு இருவரும் சீக்கிரமாகவே வந்து சேர்ந்தார்கள். பல சிதிலமடைந்திருந்த உயரமான கட்டிடங்களுக்கு நடுவேயிருந்த ஒரு சிதிலமடைந்த உயரக் கட்டிடத்தைப் பையன் சுட்டிக் காட்டினான். ''அதுதான் அது.''

''நீ உள்ளே வரலியா?''

''எனக்கும் உங்களுக்கும் சம்பந்தம் கிடையாதுங்க. இந்த சேதியை நான் உங்ககிட்டே கொண்டு போய் தந்துடணும்னு எனக்கு ஓர் உதை விட்டு அனுப்பி வெச்சாங்க, மிஸஸ் காப்பின்ஸ்.''

''ஐ ஸீ... அப்படியா! உன் பேர் என்ன?''

''மைக் பாட்டர்.''

''தேங்க் யூ, மைக்.''

''வெல்கம்'' என்ற மைக், ஓடினான் விசிலடித்தபடி. வேறு யாரையோ நெருங்கிக் கொண்டிருக்கும் மரணத்தின் பிடி பயலை ஒன்றும் பாதிக்கவில்லை.

கதவு எண் 23 திறக்கப்பட பெரிய சிகப்பு முகம் கொண்ட அகலமான மிஸஸ் காப்பின்ஸ் நுழைவாயிலை அடைத்துக் கொண்டு நின்றாள். வந்திருக்கும் பார்வையாளரை அவள் உற்சாகமாய் வரவேற்றாள்.

''உள்ளே வாங்க, உள்ளே வாங்க, என்னைக் கேட்டா, அவ ரொம்ப மோசமாத்தானிருக்கா. இங்கே இருக்கக்கூடாது அவ - ஹாஸ்பிடல்ல இருக்கணும். நான் போன் பண்ணிட்டேன். ஆனா அந்த

ஆண்டவனுக்குத்தான் யாராவது எப்பவாவது வருவாங்களானு தெரியும். என் சகோதரரின் புருஷன் காலை உடைச்சுக்கிட்ட போது ஆறு மணி நேரம் காத்திருந்தார் - ஹாஸ்பிட்டலுக்கு போன் பண்ணிட்டு. கருணையற்ற செயல்னுதான் இதை நான் சொல்வேன் - யெஸ். இப்படி செய்வது, வேறு எதுவுமில்ல... சுகாதாரத்துறை! பணத்தைக் கைல வெச்சுக்கிட்டு நாம காத்திருந்து என்ன பிரயோஜனம் - வேணுங்கிறப்போ வந்தாத்தானே?''

பேசிக் கொண்டே பாதிரியாருக்கு வழிகாட்டியபடி முன்னால் போய்க் கொண்டு அங்கிருந்த குறுகலானப் படிக்கட்டுகளை ஏறிக் கொண்டிருந்தாள் அவள்.

''அவங்களுக்கு என்ன பிரச்சினை?''

''குளிர் ஜுரம் அவளுக்கு இருந்தது. குணமான மாதிரிதான் தோணிச்சு. ஆனா நேற்று ராத்திரி உசுரே போயிட்டா மாதிரியான ஒரு நிலைமையிலே அவ வந்தா. படுக்கைக்கு நேரா போயிட்டா. எதையும் சாப்பிடலே. டாக்டரும் கூடாதுனு பட்னு சொல்லிட்டா. இன்னிக்குக் காலையில உயிர் குடிக்கும் அதிகபட்ச ஜுரத்துல இருந்தா அவ. நுரையீரல்ல ப்ராப்ளம் போல.''

''நிமோனியா?''

தற்சமயம் இருந்த மூச்சுக் காற்றெல்லாம் செலவாகி விட்ட தொனியில ஸ்டீம் எஞ்சின் போல மொசுமொசுவென்னு மூச்சு விட்ட மிஸஸ் காப்பின்ஸ், கதவை திறந்து பாதிரியார் முன்னே போய் நுழைந்துக் கொள்ள வழி விட்டு விலகி நின்று, பிறகு அவருடைய தோள் வழியே அறிவித்தாள்: ''உங்களோட மதகுரு இதோ இங்கே. இப்ப நீங்க நல்லா ஆகிடுவீங்க...'' உற்சாகம் கரைபுரள இப்படி சொல்லிவிட்டு விலகிப் போய்விட்டாள் அவள்.

ஃபாதர் கார்-மேன் முன்னேறிப் போனார். பழைய வலுவான மரங்களால் ஆன மேஜை நாற்காலிகளால் ஆகியிருந்த அவ்வறை, சுத்தமாகவும், அம்சமாகவும் வைக்கப்பட்டிருந்தது. ஜன்னலருகேயிருந்த ஒரு படுக்கையிலிருந்த பெண்மணி சிரமப்பட்டு தலையைத் திருப்பினாள். அவள் முழுக்கவும் நொடித்துப் போயிருப்பதை பாதிரியார் உடனே விளங்கிக் கொண்டு விட்டார்.

''நீங்க வந்தாச்சு... நிறைய நேரம் இல்லே...'' - பிடிக்க முயன்றுத் தோற்றுப் போய்க் கொண்டிருந்த மூச்சுக் காற்றுகளுக்கு இடையே அவள் பேசினாள். ''துரோகம்... மகாதுரோகம்... மகாதுரோகம்... நான் இப்படியே

செத்துடக் கூடாது...ஒத்துக்கணும்... ஒத்துக்கணும்... நான் செஞ்ச பாவம்... வருந்தணும்... வருந்தணும்...'' அவளுடைய விழிகள் அல்லாடின. தேடின. பாதி மூடத் துவங்கின.

நடுங்கிக் கொண்டிருந்த வார்த்தைகள் அவளிடமிருந்து வந்துக் கொண்டிருந்தன.

ஃபாதர் கார்-மேன் படுக்கை வரை வந்தார். எப்போதும் அவர் பேசும் வகையில் பேசத் துவங்கினார். நம்பிக்கை தரும் வார்த்தைகள், நம்பகத் தன்மை மிகுந்து தைரியமூட்டும் வாக்கியங்கள். இறைவனை அவர்அழைக்கும் வார்த்தைகளும் அதனால் சூழ்ந்திருப்போர் அடையும் நிவாரணமும் சாந்தமும் அந்த அறைக்குள் வந்தன. பயக் கலவரம், துடித்துக் கொண்டிருந்த விழிகளிலிருந்து விலகியது.

''நிறுத்தணும்... என்னை நிறுத்தணும்... நான் போவதை நிறுத்தணும்... உங்களால அது முடியும்...''

பாதிரியார் நம்பிக்கை கொடுக்கும்படி ''என்ன தேவையோ அதை நான் பண்ணுவேன். நீங்க என்னை நம்பலாம்'' என்றார்.

சிறிது நேரத்துக்குப் பிறகு ஓர் ஆம்புலன்ஸும் ஒரு டாக்டரும் ஒன்றாய் வந்து சேரும்படி ஆனது. சோகத்தை உச்சத்தில் பிரதிபலிக்கும் 'பாவத்தோடு' வந்த இவர்களை எதிர் கொண்டாள் மிஸஸ் காப்பின்ஸ்.

''வழக்கப்படி காலங்கடந்தே வந்திருக்கீங்க'' என்றாள். ''அவ போயிட்டா...''

II

சூழ்ந்துக் கவிழ்ந்துக் கொண்டிருந்த அந்தி நேரத்து சூழலில் திரும்பிக் கொண்டிருந்தார் ஃபாதர் கார்-மேன். இருட்டு துரிதமாய் பரவிக் கொண்டிருந்ததால், நிச்சயம் மூடுபனி அதிகம் இருக்கப் போகின்றது. அவர் சில கணங்கள் முகஞ்சுளித்த நிலையில் நின்றார். என்ன அற்புதமான ஓர் அசாதாரண கதை! இதில், அதிகபட்ச காய்ச்சல் தந்த அசதியால் எத்தனை உளறப்பட்டிருக்கும்? நிச்சயமாய் சொன்னவற்றில் சிற்சில பகுதிகள் நிஜம்தான் - அவை எத்தனை? எப்படியிருந்தாலும், அவருடைய ஞாபகத்தில் இன்னும் மறவாமல் புதிதாய் இருக்கும் அப்பெயர்களைக் குறித்துக் கொள்ள வேண்டியது முக்கியம். அவர் திரும்பிப் போய்

சேருவதற்குள் செயின்ட் ஃபிரான்ஸிஸ் சங்கத்தினர் வந்து சேர்ந்திருப்பார்கள். எனவே அங்கிருந்து சிறு காபி கடைக்குள் திடுமென்று நுழைந்த அவர் ஒரு காபிக்கு சொல்லிவிட்டு உட்கார்ந்து கொண்டார். அவரது நீண்ட பாதிரியார் வஸ்திரத்து பாக்கெட்டுக்குள் துழாவினார். ஆஹ், மிஸஸ் கெரத்தி - தையல் விட்டுப் பேயிருந்த பாக்கெட் பகுதியை சரி பண்ணி விடும்படி அவளிடம் சொல்லியிருந்தார். வழக்கம் போல, அவள் பண்ணவில்லை! அவரது சின்ன நோட்டுப் புத்தகம், பென்ஸில், சில நாணயங்கள் ஆகியன அந்த தையல் விட்டப் பகுதியின் வழியே நழுவி பாதிரியார் வஸ்திரத்தின் அடிப்பகுதிக்குப் போயிருந்தன. எப்படியோ சில நாணயங்களையும் பென்ஸிலையும் அவர் துழாவி எடுத்து விட்டார். ஆனால் நோட்டுப் புத்தகம் வழிக்கு வரவில்லை. காபி வந்ததும் ஒரு சின்னத் துண்டுச் சீட்டுக் கிடைக்குமா என்று கேட்டார்.

''இது பத்துமா?''

அது ஒரு கிழிக்கப்பட்டிருந்த துண்டு காகிதம். ஒப்புதலாய் தலையசைத்தபடி அதனை பெற்றுக் கொண்டார் ஃபாதர். அவர் எழுத ஆரம்பித்தார் - *பெயர்களை.* பெயர்களை மறந்துவிடக் கூடாது என்பது இதில் முக்கியம். ஃபாதர் அதிகபட்சமாய் மறந்து விடுபவற்றில் பெயர்கள் உண்டு...

காபிக் கடையின் கதவு திறக்கப்பட மூன்று விடலைப் பயல்கள் பரபரவென ஓசையெழுப்பியபடி வந்து உட்கார்ந்துக் கொண்டார்கள்.

தான் எழுதும் வேலையை முடித்தார் ஃபாதர் கார்-மேன். அதனை மடித்துக் கொண்டவர் தனது பாதிரியார் வஸ்திரத்து பாக்கெட்டுக்குள் போட்டிருக்க வேண்டும்... அப்போதுதான் அவருக்கு அங்கிருக்கும் கிழிசலே நினைவுக்கு வந்தது. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் முன்பெல்லாம் என்ன பண்ணியிருக்கிறாரோ அதையே இப்பவும் பண்ணினார். மடித்த காகிதத்தை அப்படியே அவரது ஷூக்குள் திணித்துக் கொண்டார்.

ஒரு மனிதன் ஓசைப்படாமல் உள்ளே வந்து தூரத்து மூலையில் உட்கார்ந்துக் கொண்டான். வாங்கிய காரணத்துக்காக அந்த சாதா காபியின் நுனியில் வாய் வைத்து கொஞ்சமாய் சுவைத்த பாதிரியார், பில்லைக் கேட்டு வாங்கி பணம் செலுத்தினார். பிறகு அவர் எழுந்துக் கொண்டார்.

வெளியேறினார்.

அப்போதுதான் உள்ளே வந்திருந்த ஆசாமி அவனுடைய மனதை மாற்றிக் கொள்வதைப் போல் தோன்றியது. ஏதோ நேரத்தைத் தப்பாகப் புரிந்துக் கொண்டு வரக் கூடாத நேரத்தில் வந்து விட்டவனைப் போல கைக்கடியாரத்தைப் பார்த்துக் கொண்ட அவன், எழுந்துக் கொண்டான். வேக வேகமாய் வெளியேறினான்.

மூடுபனி கபகபவென்று விழுந்து நிறைந்துக் கொண்டிருந்தது. ஃபாதர் கார்-மேன் அவருடைய அடிகளைத் துரிதமாக்கிக் கொண்டார். அவருடைய பிரதேசம் அவருக்கு தண்ணீர் பட்ட பாடு. ஆகவே ரயில்வேயை ஒட்டிப் போன சின்ன பாதையை அவர் தேர்ந்தெடுத்துக் கொண்டார். இது சுருக்கு வழி. அவருக்குப் பின்னால் வெகு அருகிலேயே ஒலித்த காலடி ஓசைகளைக் கேட்டு அவர் உஷாராகியிருக்கலாம். ஆனால் அதுபற்றி அவர் ஒன்றும் நினைக்கவில்லை. ஏன் அவர் உஷாராக வேண்டும்?

இடியென இறங்கிய அந்த இரும்புக் கம்பியின் அடியை, அவர் கொஞ்சமும் எதிர்பார்த்திருக்கவில்லை. அவர் சுருண்டு வளைந்து விழுந்தார்...

III

டாக்டர் காரிகன், அப்போதைய ஹிட் பாடலை விசிலடித்தபடி, பிராந்திய துப்பறியும் அதிகாரியின் அறைக்குள் நுழைந்தார். ஹாயாய் வம்படிக்கும் தினுசில் பிராந்திய துப்பறியும் அதிகாரியான இன்ஸ்பெக்டர் லெஜன்னிடம் சொன்னார்: ''உங்க வேலையை உங்களுக்காக நான் பண்ணிட்டு வந்திருக்கேன்.''

''வாழ்க வளமுடன்! அதன் முடிவு?''

''இது சம்பந்தமான மருத்துவ வார்த்தைகளை நீதிபதியைப் பார்க்கும்போது வெச்சுப்போம். பிரமாதமா, அப்பழுக்கில்லாம, கழியால் தாக்கப்பட்டிருக்கார். முதல் அடி அவரைக் கொன்னிருக்கணும். ஆனா பண்ணினது எவனோ அவன் ஒரே அடியில முடிச்சுடணும்னுதான் இயங்கியிருக்கான். நம்ம உசுரை வாங்கப் போற பிஸினஸ்.''

''யெஸ்'' என மெதுவாய் ஆமோதித்தார் லெஜன். லெஜன் ஒரு விறைப்பான ஆள். கருகரு கேசம் மற்றும் சாம்பல் நிற பூனை விழிகள்.

துப்பறியும் அதிகாரியா என யோசிக்க வைக்கும் அளவுக்கு லெஜனுடைய நடவடிக்கைகள் சாந்தமாகவே இருந்தாலும், சில சமயங்களில் இவர் எடுக்கும் அதிரடி நடவடிக்கைகள் ஆச்சரியத்தை உண்டு பண்ணுமளவுக்கு இன்ஸ்பெக்டர் தனமாய் அமையும். சிந்தனையாய் சொன்னார்: ''ஒரு திருட்டுக்கு இத்தனை மெனக்கெடல் தேவைதானா?''

''இது திருட்டு பிஸினஸா?'' என கேட்டார் டாக்டர்.

''அப்படித்தான் நினைக்கத் தோணுது. அவருடைய பாக்கெட் பிதுங்கி வெளியே தொங்கிக்கிட்டிருந்தது... அதன் தையலும் விட்டிருந்தது...''

''இவர்கிட்டே திருடனுங்க நிறையவும் எதிர்பார்த்திருக்கக் கூடாது'' என்றார் காரிகன். ''ஏழைப் பாதிரிகள்.''

''நிச்சயமா முடிச்சுடணும்னுதான் - அவரோட தலையைக் குறி வெச்சிருக்காங்க'' என முணுமுணுப்பாய் சொன்னார் லெஜன். ''ஆனா இது ஏன்னு தெரியணும்.''

''ரெண்டு சாத்தியமான விடைகள் உங்க கேள்விக்கு இருக்கு'' என்றார் காரிகன். ''ஒரு பொல்லாதவனால இது பண்ணப்பட்டிருக்கணும். வன்முறையே தீர்வு என்று நினைக்கும் ஜாதி. நிறைய பேர் இப்படி முளைச்சாச்சு. நாளுக்கு நாள் இவனுங்க எண்ணிக்கை வளருது என்பதுதான் இதுல பரிதாபம்.''

''இன்னொண்ணு?''

டாக்டர் அவருடைய தோள்களைக் குலுக்கிக் கொண்டார். ''யாரோ ஃபாதர் கார்-மேனைக் காத்திருந்து அடிச்சிருக்காங்க... இது சாத்தியமா?''

லெஜன் தலையை மறுப்பாய் அசைத்தார். ''சாத்தியமற்றது. அவர் இந்தப் பிராந்திய மக்களால் அன்பாய் பார்க்கப்பட்ட ஒரு பிரபலஸ்தர். அவருக்கு விரோதிகள்னு யாரும் கிடையாது. இதுல திருடுக்கும் சாத்தியம் கிடையாது. ஒருவேளை...''

''ஒருவேளை... என்ன?'' என்றார் காரிகன். ''போலீஸுக்குக் க்ளூ கிடைச்சிருக்கு! சரிதானே?''

''அவர்கிட்டே வேறொரு சமாச்சாரமும் இருந்திருக்கு. அது திருடப்படலே. சரியா சொல்லணும்னா அது அவருடைய ஷூக்குள்ளே மறைவா இருந்திருக்கு.''

காரிகன் விஸிலடித்தார். ''ஒற்றர்கள் கதை போலல்லே இருக்கு.''

லெஜன் புன்னகைத்தார். ''அதையெல்லாம் விட சிம்பிளானது இது. அவரோட பாக்கெட்டுல ஓட்டை ஒண்ணு இருந்திருக்கு. முதன்மை கான்ஸ்டபிள் பைன், பாதிரியாரோட குருகுலத்து வேலைக்காரி கூட பேசியிருக்கார். துடுக்குக் காரி போல தெரியுது. ஃபாதரோட சில கோட்டுகள்ல கிழிசல் இருந்திருக்கு. இவ தைக்கலே. அதுக்குள்ளே விழுந்துடாம இருக்கணுமேனு அவ்வப்போது பேப்பர்களைத் தன்னுடைய ஷூக்குள் அவர் போட்டுக் கொள்வார்னு சொல்லியிருக்கா அவ.''

''கொலைகாரனுக்கு இது தெரியாது, ஆங்?''

''இப்படியெல்லாம் கொலைகாரன் நினைச்சிருக்க மாட்டான்! ஒப்பேறாத சில சில்லறைக் காசுகளுக்கு அவன் தேடினான்னு எடுத்துக் கொள்வதற்கு பதிலா - இந்தத் துண்டுக் காகிதத்துக்காகத்தான் அவன் வந்திருக்கான்னு வெச்சுப்பமே.''

''அந்தத் தாள்ல என்ன இருந்தது?''

தனது மேஜை டிராயர் வரை போன லெஜன் ஒரு நைந்தத் துண்டுக் காகிதத்தை அதிலிருந்து எடுத்து வந்தார். ''ஜஸ்ட், ஒரு பெயர்ப் பட்டியல்.''

ஆர்வமாய் அதனைப் பார்த்தார் காரிகன்.

ஓர்மிராட்

சாண்ட் - ஃபோர்ட்

பார்க்கின்சன்

ஹெஸ்கத் - டுபாய்ஸ்

ஷா

ஹெர்மண்ட் - ஓர்த்

டக்கர்டான்

காரிகன்?

டெலாஃபோன்டைன்?

அவருடைய புருவங்கள் உயர்ந்தன. ''நானும் இந்தப் பட்டியல்ல இருக்கேன்?''

''இந்தப் பெயர்கள்ல எதுவாவது உங்களுக்கு அர்த்தப்படுதா?''- கேட்டார் இன்ஸ்பெக்டர்.

''ஒண்ணே ஒண்ணு கூட தேறலே.''

''நீங்க ஃபாதர் கார்-மேனைச் சந்தித்ததே கிடையாது?''

''நெவர்.''

''அப்படின்னா உங்களால எங்களுக்கு அதிக உபகாரம் இருக்காது.''

''ஆனா, இந்த லிஸ்ட் பெயர்கள் எதை உணர்த்ததுனு ஏதாவது ஐடியா?''

இதற்கு லெஜன் நேரடியாய் மறுபதில் தந்து விடவில்லை. ''சாயங்காலம் ஏழு மணிக்கு ஒரு பையன் போய் ஃபாதரைப் பார்த்திருக்கான். ஒரு பொம்பிளை செத்துக்கிட்டிருப்பதாகவும் அவள் பாதிரியாரைப் பார்த்தே ஆகணும்னு சொன்னதாகவும் அவன் தகவல் தந்திருக்கான். அவனோட கூட ஃபாதர் கார்-மேன் போயிருக்கார்.''

''எங்கே? உங்களுக்குத் தெரியும்னா...''

''எங்களுக்குத் தெரியும். இதைக் கண்டுபிடிக்க ரொம்ப நேரம் பிடிக்கலே. 23, பெந்தால் தெரு, காப்பின்ஸ் என்ற பெயருடைய பெண்மணி சொந்தக்காரி. நோய்வாய்ப்பட்டிருந்தது, மிஸஸ் டேவிஸ். ஏழே காலுக்கு அங்கே போயிருக்கிற பாதிரியார் அந்த சீக்காளிப் பொம்பளையிடம் அரை மணி நேரம் இருந்திருக்கார். அவங்களை ஆஸ்பத்திரி கூட்டிட்டுப் போக ஆம்புலன்ஸ் வந்து சேர்ந்த அதே நேரத்துல செத்திருக்காங்க, அவங்க.''

''ஐ ஸீ.''

''அடுத்து ஃபாதர் கார்-மேன் பற்றி நாம கேள்விப்பட்டது, டோனினு ஒருத்தன் பொட்டிக் கடை மாதிரி வெச்சு நடத்தும் காபி கடை மூலமா. டீஸண்ட்டான இடந்தான். குற்றங் குறை சொல்ல முடியாத கடை. ரொம்ப நல்ல தரமெல்லாம் இல்லாத சுமாரான காபி டீ விநியோகம் பண்ணும் பொழப்பு. ஃபாதர் கார்-மேன் ஒரு கப் காபி கேட்டு இந்தக் கடைக்குப் போயிருக்கார். பிறகு வெளிப்படையாவே அவர் பாக்கெட்ல தேடினது காணும்னு காட்டிக்கிட்ட அவர் கடையோட சொந்தக்காரன்கிட்டே ஒரு துண்டு பேப்பர் கேட்டிருக்கார், இது...'' என்று கையிலிருந்த தாளைத் தூக்கிப் பிடித்த அவர், ''இதுதான் அந்தத் துண்டு'' என்றார்.

''அதுக்கப்புறம்?''

''டோனி காபியைக் கொண்டு வந்தபோது பாதிரியார் துண்டுத் தாள்ல என்னவோ எழுதிக்கிட்டிருந்தார். இது முடிஞ்சவுடனேயே அவர் எழுந்து கிளம்பியிருக்கார். வெச்ச காபியைத் துளியும் சுவைக்காம. இதுக்கு அவரை நான் குத்தஞ் சொல்ல முடியாது - அவருக்கு கடையோட தரம் தெரிஞ்சிருக்கும். இந்த லிஸ்ட்டை முடிச்சுட்டதால ஷூக்குள்ளே செருகியிருக்கார்.''

''வேற யாராவது அந்தக் கடையிலஅப்ப இருந்தாங்களா?''

''மூணு அழுக்குப் பசங்க... கசமுசானு சுத்திக்கிட்டு அங்கிருந்து ஒரு டேபிள்ல வந்து உட்கார்ந்திருக்காங்க. இன்னொரு டேபிள்ல ஒரு முதியவர் வந்து உட்கார்ந்திருக்கார். கெழவர் எதுவும் ஆர்டர் பண்ணிக் கேட்காம எழுந்துப் போயிருக்கார்.''

''பாதிரியாரைத் தொடர்ந்து போயிருக்காரா?''

''இருக்கலாம். அவர் கிளம்பிப் போனபோது இதை டோனி கவனிக்கலே. அவர் எப்படி தோற்றமளிச்சார் என்பதையும் கூட டோனி கவனிச்சுக்கலே. விளக்கமாய் விவரிக்குமளவுக்கு அவர் தோற்றம் இருக்கலேங்கிறான். மரியாதைக்குரியவர். வழக்கமா தட்டுப்படும் மற்ற எல்லோரையும் போலவே இருந்த ஆசாமி. சராசரி உயரம்னு நினைக்கிறான். கருநீல மேலங்கி - அது ப்ரவுனாவும் இருக்கலாம். அந்தாளுக்கு இந்தக் கேஸில ஏதாவது இருக்கலாமானு சொல்ல நமக்கு எந்தக் காரணமும் தட்டுப்படலே. ஆனா ஜஸ்ட் இதனால விட் டுடவும் முடியாது. டோனி கடையிலே பாதிரியாரைப் பார்த்தேன்னு அவரா முன் வந்து இதுவரை இன்னும் சொல்லலே. ஆனா அப்படி முன் வந்து சொல்லும் காலமும் இன்னும் கடந்து போயிடலே என்பதையும் நாம கவனிக்கணும். ஃபாதர் கார்-மேனை ஏழே முக்காலிருந்து எட்டே காலுக்குள் பார்த்தவங்க யாரா இருந்தாலும் அவங்க வந்து நம்மைத் தொடர்பு கொள்ளலாம்னு நாம அறிவிச்சுட்டிருக்கோம். இதுவரைக்கும் ரெண்டு பேர்தான் தொடர்பு கொண்டிருக்காங்க. ஒரு பெண்மணி. மேலும், அங்கே பக்கத்துல மருந்துக் கடை வெச்சிருக்கும் ஒரு கெமிஸ்ட். தற்சமயம் நான் இவங்களைப் பார்க்க கிளம்பிட்டிருக்கேன். அவரோட உடல் எட்டே காலுக்கு மேற்கு தெருவுல இரண்டு பையங்களால கவனிக்கப்பட்டிருக்கு - இது தெரியுமா உங்களுக்கு? ஒரு பக்கம் ரயில்வேயால சூழப்பட்டிருக்கும் ஒரு பொட்டப் பயக்காடு. அதுக்கப்புறம் சங்கதியெல்லாம் - உங்களுக்கு தெரியும்.''

டாக்டர் காரிகன் ஒப்புதலாய் தலையசைத்தார். தாளைத் தூக்கிப் பிடித்து ஒற்றை விரலால் தட்டிக் காட்டினார். ''இதைப் பற்றிய உங்களுடைய நினைப்புகள் என்னென்ன?''

''எனக்கென்னவோ இது முக்கியமானதுனு தோணுது'' என்றார் லெஜன்.

''செத்துக் கிட்டிருந்த பொம்பிளை எதையோ ஃபாதர் கிட்டே சொல்ல, அதிலிருந்து பேரெல்லாம் மறந்துப் போகுமுன் அவற்றை வேகவேகமாக பாதிரியார் எழுதியிருக்கிறார். இதுல நெருடும் ஒரே விஷயம் - மிக மிக ரகசியமான வாக்குமூலமா அனைத்தும் இவர் கிட்டே சொல்லப் பட்டிருக்கும் பட்சத்தில் இப்படி பப்ளிக்காவா அவர் எழுதியிருப்பார்?''

''சொல்லப்பட்டவை, ரகசியமா இருக்கணும்னு சொல்லப்பட்டிருக்காது'' என்றார் லெஜன். ''பேச்சுக்கு சொல்றேன்... இந்தப் பெயர்கள் - ப்ளாக் - மெயில் சம்பந்தப்பட்டவையா இருந்தால்?''

''ப்ளாக் - மெயில்? மிரட்டல்? ஓ, இதுதான் உங்களுடைய ஊகமா?''

''இதுவரைக்கும் எனக்கு எந்த ஐடியாவும் கிடையாது. இது ஜஸ்ட் மேற்கொண்டு வழிதேடும் போது உருவாகும் ஒரு வாதம். இந்த அத்தனை பேரும் மிரட்டப்பட்டிருக்காங்க... ப்ளாக் - மெயில் செய்யப்பட்டிருக்காங்க. மரணத்தைத் தழுவிக்கிட்டிருந்த பெண்மணி, ப்ளாக் - மெயில் பண்ணினவளா இருக்கணும்... அல்லது, அது என்ன ப்ளாக் - மெயில்னு அவளுக்குத் தெரிஞ்சிருக்கணும். இந்த சந்திப்பின் காரணமே, நெஞ்சுக்கு சமாதானம் தேடிக்கத்தான்; ஒப்புக் கொள்ளுதல், மன்னிப்பு தேடுதல். இவற்றை தரும் பொறுப்பை ஃபாதர் ஏற்றுக்கிட்டிருக்கார்.''

''இதுக்கப்புறம்?''

''அப்புறம்னா? மீதியெல்லாம் நாம ஊகிக்க வேண்டியவைதான்'' என்றார் லெஜன். ''இது பொன் முட்டை போடும் வாத்து கதைனு வெச்சுப்போம். இப்படி கொடுத்துக்கிட்டேயிருப்பது தடைபட வேறு யாரோ ஒருத்தனுக்கு சம்மதமே கிடையாது. மிஸஸ் டேவிஸ் செத்துக்கிட்டிருக்காங்க என்பதும் அவங்க ஃபாதர்க்கு சொல்லியனுப்பியிருக்காங்க என்பதும் அந்த யாரோ ஒருத்தனுக்கு தெரிய வருது. அப்புறமென்ன... மீதி நடந்தவையனைத்தும் தானா அமையுது.''

அந்தத் துண்டுத் தாளை மீண்டுமொரு முறை படித்த காரிகன் - ''எனக்கிப்ப ஓர் ஆச்சரியம்'' என்றார். ''கடைசி பேர்களுக்கு அப்புறம் எதுக்காக கேள்விக்குறிகள் விழுந்திருக்குனு நீங்க நினைக்கிறீங்க?''

''அந்த ரெண்டு பேர்களையும் தனக்கு சரியா நினைவில்லேன்னு ஃபாதர் கார்-மேன் நினைச்சிருக்கலாம்.''

''காரிகன் என்பதற்கு பதிலா அது முல்லிகன் அப்படினு இருந்திருக்கலாம்'' என்று இறுக்கமாய் ஒப்புக் கொண்டார் டாக்டர். ''இது சாத்தியம்தான். ஆனா இந்த டெலா ஃபான்டைன் போன்ற பெயர்களைப்

பொறுத்தவரை இப்படிப்பட்ட பெயர்களை ஒண்ணு நீங்க நினைவு வெச்சிப்பீங்க. அல்லது வெச்சுக்கவே மாட்டீங்க. அப்படிப்பட்ட பேர் இது. இதுல ஒரு முகவரி கூட இல்லாதது விசித்திரம்'' என்றவர் மீண்டுமொரு அப்பட்டியலைப் பார்த்தார்.

''பார்க்கின்சன் - எக்கச்சக்கமான பார்க்கின்சன் இருக்காங்க, சாண்ட்-ஃபார்ட் - இதுவும் ஒண்ணும் புதுப்பேர் கிடையாது. ஹெஸ்கத் - டுபாய்ஸ்... ஆஹ்ஹா, வாய்க்கு நல்ல பயிற்சி. இந்த பேர்ல ஒரு சிலர் கூட இருக்க முடியாது.''

இப்போது திடீரென்று உருவான ஒரு சிந்தனையின் உத்வேகத்தால் மளமளவென்று முன்னுக்கு வளைந்த அவர் அங்கிருந்த டெலிபோன் டைரக்டரியை எடுத்தார். ''E யிலிருந்து L வரை பார்த்துடுவோம்... ம்... ம்... ம்... ஆங், இதோ, ஹெஸ்கத் - டுபாய்ஸ்! பெண் வயது 49. எல்லீஸ்மேரி சதுக்கம், S.W.I. இப்ப இவங்களுக்கு ஒரு போன் அடிச்சு பார்த்தால்? என்ன சொல்றீங்க?''

''என்னனு பேசுவீங்க?''

''பேசும்போது ஏதாவது வரும்'' என்றார் டாக்டர், காற்றில்.

''பண்ணுங்க'' என்றார் லெஜன்.

''என்ன?'' - கண்ணால் கேட்டார் காரிகன்.

''பண்ணுங்கன்னேன்'' என்றார் இன்ஸ்பெக்டர், காற்றில்! ''எதுக்காக இப்படி தாக்கப்பட்டதா உணர்றீங்க?'' என்று விட்டு அவரே ரிஸீவரை எடுத்தார். ''ஆப்ரேட்டர்.. எனக்கு ஒரு லைன் கொடுங்க'' என்றார். இங்கே ''நம்பர்?'' என்றார்.

''64578.''

இதனை திருப்பி சொன்ன லெஜன், ரிஸீவரை காரிகன்னிடம் ஒப்படைத்து விட்டார். ''கொண்டாடுங்க.''

மறுமுனையில் உயிர்ப்பு வரும் வரை விளங்கா புதிரை எதிர்கொண்டவராய் இன்ஸ்பெக்டரைப் பார்த்தபடியிருந்தார் டாக்டர். ஒருத்தர் பதில் தரும் வரை மறுமுனையில் ட்ரிங் ட்ரிங் நீண்டுக் கொண்டேயிருந்தது. பிறகு, கொத்துக் கொத்தாய் மூச்சிரைத்தபடி ஒரு பெண்மணியின் குரல்: ''யெஸ், 64578.''

''இது, லேடி ஹெஸ்கத் - டுபாய்ஸ் வீடுங்களா?''

''வெல் - வெல் - ஆமாம்...''

டாக்டர் காரிகன், இந்த தீர்மானமற்ற அணுகுமுறையை ஒதுக்கினார். ''என்னால அவங்களோட இப்ப கொஞ்சம் பேச முடியுமா, ப்ளீஸ்?'' என்று கேட்டார்.

''நோ, அது உங்களால முடியாது. ஹெஸ்கத் - டுபாய்ஸ் கடந்த ஏப்ரல் மாசம் காலமாயிட்டாங்க.''

''ஓ!'' என திகைத்த டாக்டர், ''யாரது பேசறது?'' என்ற மறுமுனையின் கேள்வியை அலுங்காமல் தள்ளிவிட்டு அப்படியே ரிஸீவரை மாட்டினார்.

இறுக்கமாகவும் கடுகடுப்பாகவும் இன்ஸ்பெக்டரைப் பார்த்தார் அவர். ''ஓஹோ... இதனாலதான் என்னை தாராளமா அவங்களுக்கு போன் பண்ண அனுமதிச்சீங்களோ?'' என்றார்.

லெஜன் கமுக்கமாய் புன்முறுவிக் கொண்டிருந்தார். ''நாங்க வெளிப்படையா தெரிஞ்சிருக்கும் எந்த விஷயத்தையும் விட்டுட மாட்டோம்'' என்றார்.

சிந்தனையுடன், ''கடந்த ஏப்ரல்'' என சொல்லிக் கொண்டார் காரிகன். ''ஐந்து மாசங்களுக்கு முன்னாடி. ப்ளாக் - மெயிலோ அல்லது அதுபோன்ற எதுவோ ஒண்ணு, அவங்களை சித்ரவதை பண்ணுவது நின்று ஐந்து மாசம் ஆகியிருக்கு. அவங்க தற்கொலை மாதிரி எதையும் பண்ணிக்கலே இல்லே?''

''நோ, மூளை புற்று நோயால அவங்க தவறியிருக்காங்க.''

''மறுபடியும் பார்ப்போம்'' என்றார் காரிகன், குனிந்து லிஸ்ட்டைப் பார்த்தபடி.

லெஜன் பெருமூச்செறிந்தார். ''அந்த லிஸ்ட் இக்கொலைல சம்பந்தப்பட்டிருக்கானு நமக்கு இதுவரை தெரியாது'' என சுட்டிக் காட்டினார். ''பனிமூட்ட இரவுல நடந்த ஒரு திட்டமிட்ட வெட்டாய் இருக்கலாம் இக்கொலை - லக்கிருந்தால் நமக்கு விடை தெரிய வரும்.''

டாக்டர் காரிகன் கேட்டார்: ''இந்த லிஸ்ட்ல நான் தொடர்ந்து என் ஈடுபாட்டைப் பதிப்பதில் உங்களுக்கு ஆட்சேபணையிருக்கா?''

''ம்.. .தொடருங்க. என் நல்வாழ்த்துக்கள்.''

''இதுல உங்களுக்குக் கிடைக்காத எதுவும் எனக்குக் கிடைக்காதுனு சொல்வது போல தெரியுது! ரொம்ப நிச்சயமா இருக்காதீங்க. நான் இந்த காரிகன் மேல கண் வைக்கப் போறேன். மிஸ்டர் அல்லது மிஸஸ் காரிகன் என்னும் அந்தக் கேள்விக்குறியிடப்பட்ட ஆசாமி மேல.''

அத்தியாயம் 3

I

''வெல், மிஸ்டர் லெஜன்... உங்ககிட்டே இன்னும் அதிகமா நான் என்ன தகவலைத் தரமுடியும்னு எனக்குத் தெரியலை. எல்லாத்தையும் ஏற்கெனவே நான் உங்களுடைய முதன்மை கான்ஸ்டபிள்கிட்டே சொல்லியாச்சு. மிஸஸ் டேவிட் என்பது யார்ரோ அல்லது அவங்க எங்கிருந்து வந்தாங்க என்பதோ எனக்குத் தெரியாது. ஆறு மாசமா அவங்க என்னிடம் இருக்காங்க.வாடகையை சரியா கொடுத்தாங்க. பார்க்கிறதுக்கு மரியாதைக்குரிய பொம்பளையா தெரிஞ்சாங்க. ஒரு முதலாளியா, இதை விட வேற என்னத்தை நான் அவங்ககிட்டே எதிர்பார்ப்பேன்னு எனக்குத் தெரியலை.''

மிஸஸ் காப்பின்ஸ் மூச்சு விட கொஞ்சம் நிறுத்திக்கொண்டு லெஜனை சற்று திருப்தியற்று பார்த்தாள். எவ்வித மெனக்கெடலும் இல்லாது முன்னனுபவங்களால் அவருக்கு வாய்த்திருந்த உணர்ச்சியற்ற வறட்டுச் சிரிப்பை பதிலாய் தந்தார் இன்ஸ்பெக்டர்.

''இருந்தாலும், என்னால முடியும்னா, மறுக்காம நான் உதவி பண்ணுவேன்'' என்றாள் அவள் சற்று வளைந்துக் கொடுத்து.

''தேங்க்யூ, இதுதான் எங்களுக்கு தேவையானது - ஹெல்ப். ஆணை விட, அவர்களுக்கே உள்ள உள்ளுணர்வின் சக்தியால, பெண்களுக்கு முதல்ல தெரிஞ்சுடும்.''

இது ஒரு சரியான நெத்தியடி - இது, இதன் வேலையை செய்தது!

''ஆஹ்'' என்றாள் மிஸஸ் காப்பின்ஸ் இன்பமாய். ''நீங்க சொல்லும் இதைக் கேட்க இங்கே இப்ப காப்பின்ஸ் இருக்கக் கூடாதானு ஏங்கறேன். நான் மக்குனு அவர் எண்ணம். உன் மண்டையில ஒண்ணும் இல்லாத

போதும் எல்லாம் தெரியும்னு பீத்திக்கக் குறைச்சலில்லேம்பார். ஆனா பத்துல ஒன்பது விஷயத்துல நான் சொல்வதுதான் நடக்கும். அப்படியே.''

''அதனால்தான் மிஸஸ் டேவிஸ் பற்றி நீங்க என்ன ஐடியா வெச்சிருக்கீங்கனு கேட்டுத் தெரிஞ்சுக்க விரும்பறேன். அவங்க - ஒரு மகிழ்ச்சியற்று வருத்தமாயிருந்த பெண்மணினு நீங்க நினைக்கிறீங்களா?''

''இந்தக் குறிப்பிட்ட கேள்வியைப் பொறுத்தவரைக்கும், நோ, நான் அப்படி சொல்ல மாட்டேன். பிஸினஸ் மாதிரி நடந்துக்கிட்டவங்க அவங்க. அப்படித்தான் எனக்கு எப்பவுமே அவங்க தெரிஞ்சாங்க. முறைப்படி, ஏதோ வாழ்க்கையை இப்படித்தான் போகணும்னு அவங்க திட்டமிட்டு வெச்சிருப்பது போலவும் அப்படியே அது நடப்பது மாதிரியும். வாடிக்கையாளர்கள் ஆராய்ச்சி நிறுவனம் ஒண்ணுல அவங்களுக்கு ஜாப் இருந்ததா நான் நினைக்கிறேன். இப்படியே ஒரு சுற்று சுற்றி, மக்களைச் சந்திச்சு என்ன சோப் போடறீங்க, என்ன மாவு சாப்பிடறீங்கன்னு கேட்டு, வார பட்ஜெட் எப்படி போடறாங்க, அதை எப்படியெல்லாம் வகுத்து செலவழிக்கிறாங்கன்னு கணக்கெடுப்பது. இது தேவையில்லாம மூக்கை நுழைக்கும் அநாகரீக வேலை என்பது என் கருத்து. எதை வாங்கினா என்ன, அல்லது எப்படி செலவழிச்சா என்ன! இந்த கவர்மென்டுக்கோ அல்லது மற்றவங்களுக்கோ இதுல என்ன கவலை வேண்டிக் கிடக்கு! கடைசியில, மக்களுக்கு என்ன தேவைன்னு அவங்களுக்கு நல்லாவே தெரிஞ்சிருக்குனு சொல்லி, ஃபைலை மூடப் போறாங்க. எப்படியோ.. இந்த வேலையை, அழகா, அம்சமா, நட்பு ரீதியா அணுகி, பக்கா பிஸினஸ் ஸ்டைல்ல செஞ்சு முடிப்பாங்க.''

''அவங்களை வேலையில வெச்சிருந்த கம்பெனி அல்லது சங்கத்தின் பேர் உங்களுக்குத் தெரியாதோ?''

''நோ, ஐ டோண்ட்...''

''உறவுக்காரங்களைப் பற்றி அவங்க எப்பவாவது குறிப்பிட்ட துண்டா?''

''கிடையாது. அவங்க ஒரு விதவைனும் பல ஆண்டுகளுக்கு முன்னாடியே கணவனை இழந்துட்டாங்க என்னும் சேதியையும் நானா சேகரிச்சேன். உபயோகமில்லாத ஆளாம் அவன். ஆனா இவங்க அவனைப் பற்றி எப்பவுமே பேசினது கிடையாது.''

''எங்கேயிருந்து வந்தாங்க - எந்த நாடு... இதைப் பற்றியெல்லாம் பேசினதே இல்லையா?''

''அவங்களைப் பார்த்தால் லண்டன் மாதிரி தெரியலே. வடக்குலேர்ந்து வந்திருக்கணும்னு சொல்வேன்.''

''அவங்களைப் பற்றி ஏதாவது - வெல்.. மர்மமான முறையில் ஏதாவது இருப்பதா நீங்க உணர்ந்ததுண்டா?''

இதை சிறு சந்தேகம் தொனிக்க சொன்னார் லெஜன்.

''நோ, அப்படியெல்லாம் எதையும் கவனிச்சதா எனக்குத் தெரியலே. அவங்க சொன்ன விஷயங்களிலிருந்து நிச்சயமா எனக்கு எதுவும் அப்படியெல்லாம் படலே. என்னை ஆச்சரியப்பட வைத்த ஒரு விஷயம் இருக்குன்னா, அது, ஒருவேளை, அவங்க வெச்சிருந்த சூட்கேஸா இருக்கலாம். அவ்ளோதான். நல்ல தரமானது, ஆனா புதுசு கிடையாது. அதிலிருந்த இன்ஷியல்கள் மேல மறுபடியும் பெயிண்ட் பண்ணப்பட்டிருந்துச்சு. JD - ஜெஸ்ஸி டேவிஸ். ஆனா ஒரிஜினலா அதுல வேற என்னவோ இருந்தது. J அப்புறம் என்னவோ, H னு நினைக்கிறேன். ஆனா அது A வா இருந்திருக்கலாம். ஆனா இப்படியெல்லாம் எதையும் நான் அப்ப நினைக்கலே. இரண்டாம் விற்பனையில ரொம்ப குறைஞ்ச விலையில் நீங்க தரமான சாமான்கள் வாங்க முடியுமே... அப்புறம் இந்த இனிஷியலையெல்லாம் மறைச்சு பெயிண்ட் அடிச்சுட்டா முடிஞ்சுது. அவங்ககிட்டே நிறைய சாமானெல்லாம் கிடையாது - ஒரேயொரு பெட்டிதான்.''

லெஜனுக்கு இது தெரியும். மரணித்து விட்ட பெண்மணி ஆச்சரியப்பட வைக்கும்படி ஒரு சில சாமான்களை மட்டுமே வைத்திருந்தார். எவ்வித கடிதப் பரிவர்த்தனைகளும் வைக்கப்படவில்லை. புகைப்படங்கள் - நோ. இன்ஷூரன்ஸ் வைத்திருந்ததாய் எவ்வித விவரங்களும் இல்லை. வங்கிக் கணக்குப் புத்தகங்கள் கிடையாது. காசோலை புத்தகங்கள் கிடைக்கப் பெறவில்லை. அவருடைய உடைகள் அனைத்தும் புத்தம் புதிது போல தினந்தோறும் இருந்திருக்கின்றன.

''ஆக, அவங்க சந்தோஷமா இருந்ததுபோலத்தான் தெரிஞ்சிருக்கு, ஆங்?'' அவர் கேட்டார்.

''அப்படித்தான் எனக்கு தோணுது.''

பதில் சொன்ன அவளுடைய குரலில் கொஞ்சமாய் தடவப்பட்டிருந்த சந்தேக தொனியால் சற்று தாமதித்தார் இன்ஸ்பெக்டர். ''உங்களுக்கு வெறுமனே அப்படி தோணுது, இல்லையா?''

''வெல்... நீங்க உங்க பதிலை இன்னும் அடியாழத்திலிருந்து எதிர்பார்ப்பதா தெரியுது. அவங்க பார்ப்பதற்கு நல்லா இருப்பதாகத்தான் எனக்கு தோணிச்சு. தட்ஸ் ஆல். கையில நல்ல ஜாப். வாழ்க்கையில பூரண திருப்தி. அப்படியே குதிகுதினு குதிச்சுக்கிட்டு ஜாலியா இருக்கிற வகை கிடையாது அவங்க... ஆனாலும் அவங்க உடல் நொடிச்சு விழுந்தபோது...''

''யெஸ், சொல்லுங்க, அவங்க உடல் நொடிச்சு விழுந்த போது?'' - அவளைக் குறி வைத்தார் அவர்.

''வெறுத்துப் போனாங்க. இதுதான் முதல்ல அவங்களிடம் நான் பார்த்தது - வெறுத்துப் போனாங்க. ஃப்ளூவுல விழுந்தபோது சொல்றேன். அவங்களோட அனைத்து திட்டங்களையும் இது தள்ளிப் போட்டுடும்னு சொன்னாங்க. முன் பதிவுகள் எல்லாம் தாமாக ஒத்திப் போடப்படும். இத்யாதிகள். ஆனா குளிர் ஜுரம், குளிர் ஜுரம்தான். அது பாடா படுத்தும்போது அதை மீறி நீங்க இயங்கிட முடியாது. ஆகவே படுக்கையோட படுக்கையா தன்னை சுருட்டிக்கிட்ட அவங்க, சின்ன வளையம் போட்ட அடுப்புல தனக்கான டீயைப் போட்டுக்கிட்டாங்க... ஆஸ்பிரின் எடுத்துக்கிட்டாங்க. டாக்டரைக் கூப்பிட்டு ஒழுங்கா முறையா மருத்துவம் செஞ்சுக்கக்கூடாதானு நான் கேட்டதுக்கு அதுல எந்தப் புண்ணியமும் கிடையாதுனுட்டாங்க. படுக்கையில போர்த்திக்கிட்டு படுத்துக்கிட்டு உடம்பைக் கதகதப்பா வைத்துக் கொள்வதற்கு இணையான மருத்துவம் குளிர் ஜுரத்துக்கு கிடையாதாம். அவசியமில்லாவிட்டால் நானும் அவங்களுக்கு நெருக்கமா வர வேணாம்னாங்க. தொத்திக்குமாம். அவங்க சற்று தேறினபோது அவங்களுக்கு ஒத்தாசையா நான் கொஞ்சம் சமைச்சுத் தந்தேன். சூடான சூப்... வறுத்த ரொட்டி. அப்பப்போ அரிசிக் கஞ்சி. ஃப்ளூவுக்கே உள்ள குணப்படி அவங்களை அது நொடிச்சுப் போட்டதென்னவோ உண்மைதான். ஜுரம் உடம்பை விட்டுப் போன வுடனேயே மன உளைச்சல் வரும். இது காய்ச்சல்ல விழும் எல்லாருக்கும் நடக்கும். டிப்ரஷன். அவங்களுக்கும் வந்தது. அதோ, அந்த கனப்புக்குப் பக்கத்துல உட்கார்ந்துக்கிட்டு அவங்க என்கிட்டே சொன்னது என் நினைவிலிருக்கு. 'சிந்திப்பதற்கு ஒருவருக்கு ரொம்ப அவகாசம் இருந்துடக் கூடாதுனு நினைக்கிறேன். சிந்திப்பதற்கு நேரம் கிடைப்பதே எனக்குப் பிடிக்காது. அது என்னை ரொம்பவும் பலஹீனமாக்கிடுது' - இப்படினாங்க.''

உன்னிப்பான கவனிப்போடு ஆழ்ந்து போயிருப்பவராய் லெஜன் தென்பட, தனது கோவையான பொழிப்புரையில் மூழ்கியிருந்தார் காப்பின்ஸ்.

''அவங்களுக்காக சில சஞ்சிகைகளை நான் வாடகைக்குக் கொண்டு வந்து தந்தேன். ஆனா அதையெல்லாம் படிப்பதுல தன்னுடைய புத்தியை அவங்களால செலுத்த முடியலேனுதான் சொல்வேன். ஒரு தடவை அவங்க சொன்னதா ஞாபகம்: ''எப்படி போகணுமோ அப்படி விஷயங்கள் போகாதபோது, அவ்விஷயங்களைப் பற்றி தெரிஞ்சுக்காமல் இருப்பதே ரொம்ப சிறந்தது... என்ன சொல்றீங்க?'' இதுக்கு நான் சொன்னேன்: ''தட்ஸ் ரைட், டியர்.'' பிறகு அவங்க சொன்னாங்க: ''ஏன்னு எனக்கே தெரியலே காப்பின்ஸ்...ஏனோ என்னால ஒரு நிச்சயத் தன்மையோட தடுமாறாமல் இருக்க முடிவதே இல்லை, எப்பவுமே.'' இதுக்கு விட்டுடுங்கன்னேன் நான். கொஞ்ச நேரம் போச்சு. பிறகு சொன்னாங்க: ''நான் பண்ணின எல்லாமும் எப்பவும் ஸ்ட்ரைட் ஃபார்வார்டா முகத்திலறைந்தாற் போலத்தான் இருக்கும்... இருந்திருக்கு. இதுக்காக நான் என்னையே நொந்துக்கும்படி எதுவும் நடந்தது கிடையாது.'' அவங்க இப்படி சொன்னதும் ''அஃப்கோர்ஸ்... நீங்க வருந்தும்படி எதுவுமே கிடையாதுதான் டியர்''னேன் நான். ஆனா, என் மூளைக்குள்ளே, அவங்களை வேலைக்கு வெச்சிருந்த கம்பெனியில காசு பணம் சம்பந்தமா ஏதாவது கேலிக் கூத்து நடந்திருக்கும்னு அதைப் பற்றித் தெரிஞ்சுகிட்டதால் அவங்க அலறிப் போயிருப்பாங்கன்னும் பட்டுது. ஆனா கம்பெனியின் மேலிடம் சம்பந்தப்பட்ட அந்த சமாச்சாரத்துக்கும், அங்கே வெறுமனே வேலை பண்ணும் இவங்களுக்கும் எந்தத் தொடர்பும் இருக்காதுனும் உணர்ந்தேன்.''

''சாத்தியம்தான்'' என ஒப்புக் கொண்டார் லெஜன்.

''எப்படியோ போகட்டும். ஏறக்குறைய அவங்க குணமானாங்க. வேலைக்கும் மறுபடி கிளம்பிப் போனாங்க. இப்படி ரொம்ப சீக்கிரம் டியூட்டி போக வேணாம்னு சொல்லிப் பார்த்தேன். இன்னும் ரெண்டு மூணு நாள் பூரண ஓய்வு வேணும்னேன். எத்தனை சரியா கணிச்சிருக்கேன் நான்! ரெண்டாவது நாள் சாயங்காலம் அவங்க அரக்க பரக்க திரும்பி வந்த கணமே அவங்களுக்கு எத்தனை அதிகபட்ச காய்ச்சல் அடிச்சிக்கிட்டிருக்கு என்பதை நான் பார்த்துட்டேன். டாக்டர் வந்து பார்க்கணும்கிறேன் நான்... ம்ம், அவங்களா ஒத்துப்பாங்க. அன்னிக்கு முழுக்க அவங்க நிலைமை படு மோசமா ஆகிட்டேயிருந்தது. கண்கள் ரெண்டும் பளப்பளனு பொங்கிட்டு, முகவாய் நெருப்பா தகிச்சிக்கிட்டு, சிரமப்பட்டு மூச்சு விட்டுக்கிட்டு. மறுநாள் சாயங்காலம், வார்த்தைகளை ஒழுங்கா வாயிலிருந்து வெளியே கொண்டு வரக் கூட திராணியற்று விட்ட

நிலையில் அவங்க என்கிட்டே சொல்றாங்க: ''ஒரு பாதிரியார் வேணும் எனக்கு. உடனே, ரொம்ப சீக்கிரமா. இல்லேனா காலந்தாழ்ந்துடும்.'' ஆனா எங்களோட பாதிரியாரை அவங்க ஏத்துக்கலே. வர்றவர், ரோமன் கத்தோலிக்க பாதிரியாரா இருக்கணும். அவங்க ரோமன்னே எனக்கு தெரியாது. அதுக்கான எவ்வித அடையாளங்களையும் - ஏசுநாதரை சிலுவையில் வெச்சு அறைஞ்சது போல - நான் அவங்ககிட்டே அதுவரை பார்க்கலே.''

ஆனால், அவரது பெட்டியின் அடியில் ஏசுவை சிலுவையில் அறையும் காட்சி பொறிக்கப்பட்டிருந்தது. இதை லெஜன் குறிப்பிடவில்லை. கவனித்தபடி உட்கார்ந்திருந்தார்.

''பையன் மைக் இருக்கான்ல... அவனை நான் தெருவுல பார்த்தேன். புனித டாமினிக் சர்ச் பாதிரியாரை அழைச்சுக்கிட்டு வரும்படி அவனை அனுப்பி வெச்சேன். அவங்ககிட்டே சொல்லாமல், என் திருப்திக்காக, டாக்டருக்கும் ஆஸ்பிட்டலுக்கும் போன் பண்ணி விஷயத்தை சொன்னேன்.''

''பாதிரியார் வந்தபோது நீங்க அவரை அந்தம்மா இருந்த இடம் வரைக்கும் கூட்டிட்டுப் போய் விட்டீங்களா?''

''ஆமாம். நான் செஞ்சேன். அப்புறம் ரெண்டு பேரையும் விட்டுட்டு வந்துட்டேன்.''

''ரெண்டு பேர்ல யாராவது ஏதாவது சொல்லிக்கிட்டாங்களா?''

''வெல், இப்ப என்னால துல்லியாம நினைவுபடுத்திக்க முடியலே. இதோ ப்ரீஸ்ட், இதோ இங்கே வந்தாச்சு... இனிமே நீங்க நல்ல ஆகிடுவீங்க... என்பது போல நான் எனக்கு நானே சொல்லிக்கிட்டேன். இப்படி சொல்வதால அவங்களுக்கு புத்துணர்ச்சி உண்டாகும் என்பது என் எதிர்பார்ப்பு. ஆனா நான் கதவை மூடிட்டு நகரும்போது அந்தம்மா ஏதோ துரோகம்னு பேசின மாதிரி இப்ப நினைவுக்கு வருது. யெஸ் - அப்புறம்... அப்புறம்..ஆங், ஏதோ குதிரையைப் பற்றி பேசினதா ஞாபகம். குதிரை பந்தயமா இருக்கணும். நானே கூட குதிரை பந்தயத்துல கொஞ்சம் ஜெயிச்சிருக்கேன். ஆனா இதுல நிறைய தில்லு முல்லு நடப்பதா நினைக்கிறேன்..''

''துரோகம்'' என்றார் லெஜன். சொன்ன அவர், இவ்வார்த்தையால் அறையப்பட்டவரைப் போலானார்.

''சாவதற்கு முன்னாடி அவர்களுடைய பாவங்களை ஒப்புக் கொண்டு மூச்சை விடுவது ரோமன் கிருத்துவர்களின் வழக்கம். இல்லையா இன்ஸ்பெக்டர்? ஆக, நடந்தது இதுதான்னு நினைக்கிறேன்.''

இதுதான் நடந்திருக்கின்றது என்பதில் லெஜன் சந்தேகங் கொள்ளவில்லை... ஆனால், அவருடைய கற்பனை சிந்தனைகள் உபயோகப்படுத்தப்பட்ட ஒரு வார்த்தையால் கலக்கி விடப்பட்டிருந்தன. துரோகம்...

இந்த துரோகம் பற்றி அறிந்துவிட்ட பாதிரியார் பின் தொடரப்பட்டு கொல்லப்பட்டுள்ளார் என்றால், இந்த துரோகத்தில் ஏதோ ஸ்பெஷாலிட்டி இருப்பதாய் உணர்ந்தார் இன்ஸ்பெக்டர் லெஜன்.

II

அங்கு மீதிமிருந்த மூன்று வாடகைக்காரர்களிடமிருந்து அறிந்துக் கொள்ள சேதிகள் ஏதும் இருக்கவில்லை. ஒரு வங்கி கிளர்க்கும் ஷூ கடையில் பணியாற்றும் ஒரு முதியவரும் அங்கு சில வருடங்களாகவே தங்கியிருக்கின்றார்கள். இருபத்தியிரண்டு வயது நிரம்பிய ஒரு பெண் சமீபத்தில்தான் அங்கு குடிபுகுந்திருந்தாள். பக்கத்து டிபார்ட்மெண்ட்டல் கடையில் பணி. இவர்கள் மூவருக்கும் மிஸஸ் டேவிஸைப் பார்த்ததாகக் கூட நினைவில்லை.

சம்பவ தினத்தன்று மாலையில் ஃபாதர் கார் - மேனைப் பார்த்ததாய் தொடர்புக் கொண்டிருந்த பெண்மணி எவ்வித உபயோகமான தகவலையும் தரும் நிலையிலில்லை. செயின்ட் டாமினிக் வந்து போகும் அவள் ஒரு கத்தோலிக்... அவள் ஃபாதர் கார்-மேனைப் பார்த்திருக்கின்றாள். எட்டடிக்க பத்து நிமிடங்கள் இருக்கும்போது அவர் பெந்தால் தெருவில் திரும்பி டோனியின் கடைக்குள் நுழைவதை அவள் பார்த்திருக்கிறாள். அவள் தெரிந்திருக்கும் மொத்தமும் இத்தனைதான்.

பார்ட்டன் தெருக் கோடியில் கெமிக்கல் கடை நடத்தும் மிஸ்டர் ஓஸ்பார்ன், தருவதற்கு தகுந்த சேதி வைத்திருந்தான். அவன் சிறிய உடல் வாகு கொண்டிருந்த நடுத்தர வயது ஆசாமி. வழுக்கை கண்ட உருண்டை மண்டை, வட்டமான சாதுர்ய முகம் மற்றும் மூக்குக் கண்ணாடி.

''குட் ஈவ்னிங், சீஃப் இன்ஸ்பெக்டர்... பின்னாடியே வர முடியுமா?'' ஒரு பழைய சட்டையின் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டே சொன்னான் அந்த ஆள். லெஜன், டிஸ்பென்ஸரி வகையில் அமைக்கப்பட்டிருந்த அறைகளைக் கடந்தபடி நடக்க, அங்கு முழு வெள்ளையுடையில் பழக்கப்பட்ட துரித வேகத்தில் பாட்டில்களில் மருந்துகளை நிரப்பிக் கொண்டிருந்த ஒரு வாலிபப் பையனிடம் அழைத்து செல்லப்பட்டார். ஒருசில ஈஸி சேர்களும் டேபிள்களும் கொண்டிருந்த சிறிய அறை அது. மிஸ்டர் ஓஸ்பார்ன் தனக்குப் பின்னாலிருந்த ஜன்னல் திரைச் சீலையை ரகசியமான தொனியில் இழுத்து மூடி விட்டு ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு இன்ஸ்பெக்டருக்கும் ஒரு சேரைக்காட்டினான். உற்சாகமான கிளர்ச்சியில் கண்கள் மினுமினுக்க முன்னுக்கு வளைந்து வந்தான் அவன்.

''உங்களுக்கு நான் உதவும்படி எப்படியோ அமைஞ்சுடுச்சுப் பாருங்க. அது ஒண்ணும் அப்படி நல்ல வாகான மாலைப் பொழுது கிடையாது. சம்பவம் நடந்த தினத்தைக் குறிப்பிடறேன். வானிலை சாதகமா இல்லாத பொழுது அது. என்னோட இளைய வேலைக்காரப் பொண்ணு கவுன்ட்ர்ல இருந்தாள். வியாழக்கிழமைகளில் நாங்க கவுன்ட்டரை எப்பவுமே ராத்திரி எட்டு மணி வரைக்கும் திறந்து வெச்சிருப்போம். அன்னிக்கு மூடுபனி கொட்டித் தீர்த்துக்கிட்டிருந்தது... சுற்று வட்டாரத்துல நடமாட்டமே இல்ல. பனி துரிதமா வளருதுனு நினைச்சுக்கிட்டே நான் கதவு வரை போய் பார்த்தேன். இப்படித்தான் பனி வேகமா மூடிடும்னு வானிலை அறிக்கையும் சொல்லியிருந்தது. அப்படியே அங்கேயே கொஞ்ச நேரம் நின்னுக்கிட்டிருந்தேன். உள்ளே வந்தும் ஒண்ணும் ஆகிடப் போவதில்லே... கஸ்டமர்ஸ் இல்லாததால் என் இளைய கவுண்டர் பொண்ணு பவுடர் எடுத்து முகத்தை அலங்கரிச்சுக்கிட்டிருப்பா - அவ்ளோதான்! அப்பத்தான் தெருவின் எதிர் முனையில ஃபாதர் கார் - மேன் வந்துக்கிட்டிருப்பதை நான் கவனிச்சேன். அவரை எனக்கு நல்லாவே தெரியும். அதிர்ச்சியான சங்கதி இது. கொலையைச் சொல்றேன் - அத்தனை பிரபலமான ஒருத்தரைப் போய் அடிச்சு... ச்சே! அப்போ, 'அதோ, ஃபாதர் கார்-மேன்' அப்படினு எனக்கு நானே சொல்லிக்கிறேன். அவர் மேற்கு தெரு திசையில போய்க்கிட்டிருந்தார். அது, ரெயில்வேக்கு முன்னாடி வரும் அடுத்த இடப்புறச் சந்துனு உங்களுக்கே தெரியும். அவருக்குப் பின்னாடி கொஞ்ச தூரத்துலேயே இன்னோர் ஆசாமி. அவனை கவனிக்கவோ அல்லது அவனைப் பற்றி ஞாபகப்படுத்திக்கவோ எனக்கு ஒரு ஐடியாவும்

இல்லை. ஆனா, என் கதவுக்கு நேரெதிரா வந்த சமயத்துல, இந்த இரண்டாவது ஆசாமி, திடீர்னு, சட்டுனு, ஒரு கடை பக்கமா ஒதுங்கினான். எதுக்காக அவன் இப்படி சட்டுனு நிக்கிறான்னு நான் ஆச்சரியப்பட்டேன். அப்பத்தான் நான் கவனிச்சேன்... கொஞ்சம் முன்னால போயிக்கிட்டிருந்த ஃபாதர் கார்-மேன், தன் வேகத்தைக் குறைச்சிருந்தார். அவர் நின்றுவிட வில்லை. எதையோ ரொம்ப தீவிரமா சிந்திச்சதால, தான் நடந்துக் கிட்டிருப்பதை அவர் மறந்து அதனால வேகம் குறைஞ்சு போன மாதிரி இருந்தது. பிறகு அவர் மறுபடியும் நடக்க ஆரம்பிக்க, இந்த ரெண்டாவது மனுஷனும் இன்னும் வேகமா நடக்க ஆரம்பிச்சான். அப்ப நான் என்ன நினைச்சேன்னா, அது ஃபாதர் கார்-மேனுக்குத் தெரிஞ்ச யாரோதான்... அவரை பிடிச்சு பேசுவதற்காக வேகமா போறாங்க... இப்படினு''

''ஆனா நிஜத்துல பார்க்கப் போனால் அவன் ஃபாதரைப் பின் தொடர்ந்து போயிருக்கணும், இல்லையா?''

''அப்படித்தான் இப்ப நான் நினைக்கிறேன். அப்ப நான் நினைச்சது மாதிரி எதுவும் கிடையாது போல. பனி தீவிரமா படர்ந்துக்கிட்டு வந்ததால, அவங்க ரெண்டு பேருமே என் பார்வையிலிருந்து துரிதமா மறைஞ்சுட்டாங்க.''

''இந்த இரண்டாவது ஆசாமியை உங்களால வர்ணிக்க முடியுமா?'' - கேட்ட லெஜனின் குரல் தன்னம்பிக்கையுடன் இல்லை. ஸ்பெஷல் வர்ணிப்புகளுக்குள் அடங்காத சாதாரண விடையைத்தான் அவர் எதிர்பார்த்திருந்தார். ஆனால் மிஸ்டர் ஓஸ்பார்னின் வர்ணிப்பு டோனியின் விவரிப்புகளை விடவும் மாறுபட்டே சென்றது.

''யெஸ்... என்னால் முடியும்னே நினைக்கிறேன்'' - முழு ஈடுபாட்டுடன் சொன்னான் அவன். ''அவன் ஒரு நெட்டையான ஆசாமி..''

''நெட்டையா? எவ்ளோ நெட்டை?''

''வெல், குறைந்தபட்சம் அஞ்சு பதினொண்ணிலிருந்து ஆறடி வரை இருக்கும்னுதான் நான் சொல்வேன். இருந்தாலும் அவன் ஒல்லியா இருந்ததால அவன் நிஜ உயரத்தை விடவும் நெட்டையாகத் தெரிஞ்சான்னுதான் சொல்லணும். சரிவான தோள்கள் அவனுக்கு. நிச்சயமா ஆப்பிள் முகவாய். தோளுக்குக் கீழே பின்னாடி புரளும்படியான கேசம் வளர்த்திருந்தான். நல்லா குண்டான மூக்கு. மொத்தத்துல நல்லா கவனிக்க வெச்ச அமைப்பு. அவனோட கண்களின் நிறம் பற்றி என்னால சொல்ல முடியலே. தூரத்திலிருந்த என்னால ஒரு கோட்டுச் சித்திரமாத்தான்

அவனை பார்க்க முடிஞ்சிருக்கும்னு உங்களுக்கே புரியும். வயசைப் பொருத்த மட்டும் அம்பது இருக்கலாம். இதை நான் அவன் நடந்த விதத்தை வெச்சு சொல்றேன். இளைய ஆசாமியின் நடை ரொம்பவுமே வித்தியாசமிருக்கும்.''

லெஜன், சடுதியில், தெருவுக்குக் குறுக்காய் இருந்த தொலைவினை மூளைக்குள் கணக்கிட்டுக் கொண்டு பின் மிஸ்டர் ஓஸ்பார்னுக்குத் திரும்பினார். ஆச்சரியப்பட்டார்... ரொம்பவுமே அவர் ஆச்சரியப்பட்டுப் போனார்..

இப்போது கெமிஸ்ட் இன்ஸ்பெக்டரிடம் கொடுத்த விளக்கம் போன்ற ஒரு விளக்கம், ரெண்டு சமாச்சாரங்களைத்தான் குறித்துக் காட்டும். இது, அசாதாரணமான ஒரு விறுவிறு கற்பனையினால் துளிர்க்க வாய்ப்புள்ளது. இப்படிப்பட்ட பல உதாரண விளக்கங்களைப் பெண்கள் அடிக்கும் வம்பின் வாயிலாக இவன் அறிந்து வைத்திருக்கலாம். ஒரு கொலைகாரனாகப்பட்டவன் எப்படித் தோன்றுவான் என்று விளையாட்டாய் உருவகம் பண்ணி சிலாகிப்பார்கள் பெண்கள். அவ்வகை உருவகங்களில் நிச்சயமாய் சில விவரிப்புகள் இருக்கும். முத்து முத்தான பற்கள்... கம்பளிப் பூச்சி புருவம்... உருளும் திரவ விழிகள். இங்கு ஓஸ்பார்ன் கொடுத்த விளக்கம் ஒரு நிஜ ஆளைப் பிரதிபலிக்கும் விதமாகவே இருந்தது. அப்படியானால், கையில், கோடியில் ஒரு சாட்சி - பார்ப்பவர்களைத் துளியும் பிசகி விடாது தீவிரமாயும் முழுக்கவும் கிரகித்துக் கொள்ளவல்ல சாட்சி இருக்கின்றது என்று அர்த்தம். தான் என்ன பார்த்தோம் என்பதில் அசைக்க முடியாத ஸ்திரத்தன்மை கொண்டவர்களாகயிருப்பார்கள், இத்தகையவர்கள்.

இப்போது மறுபடியும் தெருவுக்குக் குறுக்கான தூரத்தை சிந்தையில் கொண்டு வந்து கணக்கிட்டுக் கொண்டார் லெஜன். அவருடைய கண்கள் சிந்தனையுடன் கெமிஸ்ட் மீது பதிந்தன. அவர் கேட்டார்: ''மறுபடியும் அந்த ஆசாமியைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைச்சா உங்களால அடையாளம் காட்ட முடியும்னு தோணுதா?''

கட்டுக்கடங்கா உயர்பட்ச நம்பிக்கை தெறிக்க அவன் சொன்னான்: ''ஓ யெஸ்.'' தொடர்ந்தான்: ''பார்த்த ஒரு முகத்தை நான் எப்பவும் மறப்பதில்லே. இது என்னோட ஒரு வெற்றிகரமான பொழுதுபோக்கு. மனைவிமார்களைக் கொன்று போடும் இந்த கணவன்கள்மட்டும் என் கடைக்கு வந்து அதுக்கான விஷத்தை என்கிட்டேயிருந்து வாங்கிப் போயிருந்தால், தட்டுத் தடுமாற்றமே இல்லாம, கஸ்டடியில் இருக்கும் சந்தேகப் பேர்வழிகள்ல அவனை மட்டும் என்னால தனியா பிரிச்சுக் காட்டிக் கொடுத்துட முடியும்னு எனக்கு எப்பவும் தோணும். இப்ப உதவிக்கிட்டிருக்கேனே... இப்படி ஒரு வாய்ப்பு ஒரு நாள் வரும்னு நான் எதிர்பார்த்துக்கிட்டுத்தானிருந்தேன்.''

''ஆனா அப்படி ஒரு சுவாரஸ்யமான வாய்ப்பு இதுவரை அமையலே, ஆங்?''

அப்படி நடக்கவில்லை என்பதை சோகமாய் ஒப்புக் கொண்டான் அவன்.

''நான் இந்த வேலையை விட்டுடப் போறேன். எல்லாத்தையும் வித்துட்டு போர்ன் - மவுத் பகுதிக்குக் கௌம்பறேன். நல்ல விலை போகுது இது.''

''இது நல்ல இடமாத்தானே இருக்கு... அப்புறம் ஏன்?''

''இது ஒரு கிளாஸிக் இடம்'' என்று குரலில் பெருமிதம் பொங்க ஆமோதித்துச் சொன்னான் அவன். ''இது ஆரம்பிச்சு கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டு ஆகியிடுச்சு. எனக்கு முன்னாடி என் தாத்தா, அப்பா கையில இருந்து வளர்ந்த தொழில். குடும்பத் தொழில். இவ்வளவு அருமையான தொழில்னு சின்னப் பையனா இருந்தபோது நான் நினைக்கவேயில்லை. கெமிக்கல், நாத்தம்னு அருவெறுப்பாத்தான் பார்த்தேன். மற்ற வயசுப் பசங்களைப் போலவே என் பார்வையும் மேடை மேலத்தான் இருந்தது. நாடக மேடை... சினிமா மேடை... எங்கப்பா என்னைத் தடுக்க எந்தவித முயற்சியும் பண்ணலே. 'உன்னால முடியும்னா ஜமாய், மை பாய்'னார். என்ன சரியான ஒரு அறிவுரை! மத்தவங்களைக் கலக்காம விஷயத்தைத் திணிப்பதுல புத்திசாலி அவர். ஒன்றரை வருஷம் கூத்தாடினேன். ம்ம்... பிஸினஸுக்கே திரும்பிட்டேன். இந்தத் தொழில் மேல பெருமையாத்தான் நுழைஞ்சேன். எல்லா கெமிக்கல்களும் கிடைக்கும்படி பார்த்துப்போம். தரம் - இதுவே இலக்கு. ஆனா இந்தக் காலத்துல'' என்று விட்டு அதிருப்தியாய் தலையசைத்துக் கொண்ட அவன் - ''கெமிக்கல் தொழிலுக்கு துரதிர்ஷ்டம்னுதான் சொல்லணும். கக்கூஸ் கழுவ கெமிக்கல் கேட்கிறாங்க. அந்த சரக்கையும் வெச்சுத் தொலைக்கத்தானே வேண்டியிருக்கு. இப்படிப்பட்ட கண்றாவி விற்பனை மூலமாத்தான் இப்பல்லாம் பாதி லாபம் வருது. முகப்பவுடருங்க... லிப்ஸ்டிக்குங்க... க்ரீமுங்க... ஷாம்புங்கன்னு கெமிக்கல்களுடைய ஸ்தானம் ரொம்ப இறங்கி

மலிஞ்சுப் போச்சு. என் மனச்சாட்சியை உறுத்தும் இந்த விற்பனையை நான் என் கைபட பண்றது கிடையாது. இதுக்குன்னே கவுன்டருக்குப் பின்னாடி ஒரு பவுடர் மூஞ்சியை உட்கார வெச்சிருக்கேன்... அவ கவனிச்சுப்பா. ஒழியட்டும் எல்லாம். நல்ல விலைக்கு வித்தாச்சு. போர்ன் - மவுத்ல ஒரு குட்டி பங்களாவுக்கான முன் பணத்தையும் கட்டியாச்சு.''

மேற்கொண்டு தொடர்ந்தான்:

''வாழ்க்கையை இன்னும் கொண்டாட தெம்பிருக்கும்போதே - ரிடையர் ஆகிடு. இதுதான் என்னோட வாழ்க்கை தத்துவம். எனக்கு ஏராளமான ஹாபிஸ் இருக்கு, தெரியுமோ! உதாரணத்துக்கு பட்டாம்பூச்சிகள். அவ்வப்போது வெளியேறி ரசிக்கும் பேர்ட் வாட்சிங்! தோட்டம்னா உயிர் - எப்படி தோட்டம் ஆரம்பிப்பதுனு என்கிட்ட அவ்ளோ புக்ஸ் இருக்கு. இத்தனைக்கும் மேல இருக்கவே இருக்கு பிரயாணம். இன்னும் வயசாவதற்கு முன்னாடி வெளிநாடுகளைப் போய் நான் பார்த்துட்டு வந்துடப் போறேன்.''

லெஜன் எழுந்துக் கொண்டார். ''வெல், அதற்கு என்னோட மனப்பூர்வமான வாழ்த்துக்கள்'' என்றார். ''நீங்க இப்பகுதியிலிருந்து கிளம்புவதற்குள் அந்த ஆசாமியை ஒருவேளை நீங்க ஒருமுறை பார்க்க நேர்ந்தால்...''

''உடனே உங்களுக்கு நான் தகவல் அனுப்பிடறேன், மிஸ்டர் லெஜன். பின்னே! என்னை இந்த விஷயத்துல நீங்க பரிபூரணமா நம்பலாம். அப்படி தகவல் தருவது எனக்கு ஆனந்தமா இருக்கும். நான் ஏற்கெனவே உங்ககிட்டே சொன்னது போல, ஒரு முகத்தைப் படம் பிடிச்சு நிரந்தரமா பதித்துக் கொள்ளும் கண்கள் என்கிட்டேயிருக்கு. நான் தேடுதல் வேட்டையில இறங்கறேன். ஓயெஸ், நீங்க என்னை நம்பலாம். இது எனக்கு ஓர் ஆனந்த அனுபவம்...''

அத்தியாயம் 4

மார்க் ஈஸ்ட்டர் – ப்ரூக் பதிந்தவை

I

என் தோழி ஹெர்மியா ரெட்க்ளிஃப்பும் நானும் ஓல்ட் விக் அரங்கில் ஷேக்ஸ்பியரின் மேக்பத் காட்சியைப் பார்த்து விட்டு வெளிவந்துக் கொண்டிருந்தோம். மழை வெளுத்து வாங்கிக் கொண்டிருந்தது. தெருவுக்குக் குறுக்காய் விரைந்து நான் காரினை நிறுத்தி வைத்திருந்த இடத்துக்கு இருவரும் ஓடியபோது ஓல்ட் விக் அரங்குக்குப் போகும்போதெல்லாம் மழை பொத்துக் கொள்கிறது என்று பொதுவாய்க் குறிப்பிட்டாள் ஹெர்மியா.

நான் இந்தக் கோணத்திலிருந்து வேறுபட்டேன். இங்கு வந்திருந்த பல சமயங்களில் வெப்பம் கொளுத்திய நாட்களும் இருந்தன என்றும் ஆனால் அவற்றை ஹெர்மியா மறந்திருக்கிறாள் என்றும் சொன்னேன் நான்.

நான் க்ளச்சில் இயக்கத்தைத் தந்தபோது ''நாம இப்ப பார்த்த நிகழ்ச்சியை எடுத்துக்குங்க'' என்றாள் அவள். ''பர்ஃபெக்ஷன் அப்படினு சொல்வாங்க, இல்லே - பூரணத்துவம்... இதைத் தவிர வேற எதுவும் என் நினைவுக்கு வரலே. அவ்வளவு பர்ஃபெக்டா அமைக்கப்பட்டிருந்தது நிகழ்ச்சி. இசை - பிரம்மாண்டமான பூ வேலைகள்... அதிலும் குறிப்பாக அந்த வெண்ணிற பூக்களின் பட்டி...''

நாங்களிருவரும் இப்போது பார்த்த படம் மற்றும் அதன் இசை ஆகியவற்றை சற்று நேரம் பகிர்ந்துக் கொண்டோம். பிறகு ஹெர்மியா கேட்டாள்: ''நாம் ப்ரேக் ஃபாஸ்ட் சாப்பிட டோவர் போகலே, இல்லே?''

''டோவர்? ஆஹ்ஹா... என்ன ஒரு அசாதாரண ஐடியா உனக்கு?! நான் ஃபான்டஸி போகலாமானு நினைச்சுக்கிட்டிருக்கேன். மேக்பத்தின் ரத்த வெள்ளக் காட்சிகளுக்குப் பிறகு ஒருத்தனுக்கு அத்தியாவசியத் தேவை ஒரு நல்ல உணவு. இந்த ஷேக்ஸ்பியர் எப்பவும் என்னை உள்ளூர் போர்க்களமா ஆக்கிடறார்..''

''டோவர்னு ஏன் சொன்னேன்னா நீங்க அந்த திசையிலத்தான் இப்ப வண்டியை ஓட்டிக்கிட்டிருக்கீங்க... அதனால.''

''சுத்திக்கிட்டுப் போக வேண்டியிருக்கு'' என விளக்கினேன் நான்.

''ஆனா நீங்க ரொம்பவும்தான் சுத்திட்டீங்க... வழியை விட்டுட்டு ஒல்ட் கென்ட் சாலையில வந்திருக்கீங்க, இப்ப...''

சுற்றிவர இருப்பவற்றை ஒருமுறை பார்த்த நான், வழக்கம் போல் ஹெர்மியாதான் சரி என்று ஒப்புக் கொள்ள வேண்டியதாயிற்று.

''இந்த இடம் வந்தாலே, எப்பவும் நான் குழம்பிடறேன்'' என்றேன் நான் , மன்னிப்பாய்.

ஹெர்மியாவும் ''இது குழப்பும் பகுதிதான்'' என ஒப்புக் கொண்டாள். ''சுற்றி சுற்றி வருவோம், ஆனா, வாட்டர்லூ ஸ்டேஷன்லேயே இருப்போம்.''

ஒரு வழியாய் தத்தித் தடுமாறி நாங்கள் பிரயாணிக்க வேண்டிய வெஸ்ட் மினிஸ்டர் பாலத்தை அடைந்ததும் நாங்கள் அப்போதுதான் பார்த்து விட்டுத் திரும்பியிருந்த மேக்பத் படத்தின் தயாரிப்பு பற்றிய உரையாடலைத் தொடர்ந்தோம். என் தோழியான ஹெர்மியா ரெட்க்ளிஃப் அழகு ததும்பும் 28 வயது தேவதை. ஹீரோயினைப் போன்ற தோற்றப் போர்வையுள் கிரேக்க ஓவிய எழில் மிகு தேவதையாய் தோன்றுவாள் அவள். கருகரு கறுப்பு கேசம். அது கழுத்தின் மேல் விளிம்பு தாண்டாமல் பின்பக்கம் முழுவதும் சுருண்டு சுருண்டு வித்தை காட்டும். என் சகோதரி எப்போதுமே அழுத்தந்திருத்தமாய் அடைப்புக் குறிகளுக்குள் வைத்து முக்கியப்படுத்தி சொல்லும் 'மார்க்கின் கேர்ள் ஃபிரண்ட் இவ' என வர்ணிக்கும் வர்ணிப்பானது என்னை எப்போதும் எரிச்சலாக்காது... கிளுகிளுப்பாக்கும்.

ஃபான்டஸி எங்களுக்கு அன்பான வரவேற்பு தந்து, உள்ளே விசாலமாயிருந்த செந்நிற சுவருக்கு அருகில் போடப்பட்டிருந்த சிறு டேபிளுக்கு வழிகாட்டி அமரச் செய்தது. காட்டப்பட்ட டேபிள்

நாற்காலிகளில் நாங்கள் உட்கார்ந்ததும் அருகிலேயே அடுத்த டேபிளை ஆக்கிரமித்தவர்கள் எங்களை குதூகலமாய் விசாரித்தார்கள். டேவிட், ஆக்ஸ்போர்டில் வரலாற்று விரிவுரையாளர். கொள்ளை கொள்ளும் வனப்புடனும், தலையில் ஆங்காங்கே தாறுமாறான கோணங்களில் குத்தப்பட்ட மணியலங்காரமும் செய்துக் கொண்டிருந்த ஒரு பெண்ணை அவன் எனக்கு அறிமுகம் செய்து வைத்தான். தலை முழுவதும் கசமுசாவென்றிருந்த அவளுடைய கேச அலங்காரம் பிரமிக்கத்தக்க வகையில் அவளுக்கு எப்படியோ பொருந்தி நின்றது. அவளுக்கு மிக அகண்ட விழிகளும், வழக்கமாகவே பாதி திறந்த நிலையிலிருக்கும் இதழ்களும் அம்சமாக அமைந்திருந்தன. அவள், எப்போதும் டேவிட்டுக்கு வாய்த்திருக்கும் தோழிகளைப் போலவே, அரை வேக்காடாயிருந்தாள். குறிப்பிடும்படியான புத்திசாலித்தனம் நிறைந்து திகழ்ந்துக் கொண்டிருக்கும் இளையவன் டேவிட், சாதுர்யம் மிகக் குறைந்து பெப்பே என காணப்படும் பெண்களிடம்தான் ஏனோ அடைக்கலம் காண்கின்றான்.

''இது என் ஸ்பெஷல் லவ், பாப்பி'' என விளக்கினான் அவன் - ''இது மார்க் மற்றும் ஹெர்மியா. ரொம்பவும் ஸீரிசான மற்றும் சிறந்த மக்கள் இவர்கள். நீயும் இவங்க அளவுக்கு எகிறி வாழும் சாதனையை புரியணும், பாப்பி. நாங்க இப்பத்தான் Do it for kids படம் பார்த்துவிட்டு வந்துக்கிட்டிருக்கோம். லவ்லி படம். நீங்க எப்படி? இலக்கியம்தானே? ஷேக்ஸ்பியரின் கேம்பத், ஆங்?''

''ஓல்ட் விக் அரங்குல'' என்று ஆமோதித்தாள் ஹெர்மியா.

''ஆஹ்... அதன் தயாரிப்பு பற்றி என்ன நினைக்கிறீங்க?''

''எனக்குப் பிடிச்சிருக்கு'' என்றாள் அவள். ''ஒளிப்பதிவு படு சூட்டிகை. விழாக்கால காட்சியையெல்லாம் இத்தனை பிரம்மாண்டமா நான் வேறெதிலும் பார்த்ததில்லே...''

''அதிருக்கட்டும். சூனியக்காரர்கள் பற்றி?''

''அதுவும்தான்!'' என்றாள் ஹெர்மியா. ''கண்கொள்ளாக் காட்சி அமைப்பு.''

டேவிட் ஏற்றுக் கொண்டான். ''இருந்தாலும் நான் தயாரிப்பாளனா இருந்தால் வேற மாதிரி சூன்யக்காரிகளைக் காட்டுவேன்.''

''வெல்... எப்படி?''

''ரொம்ப சாதாரணமானவங்களா காட்டுவேன். வழக்கமா நாம தினசரி வாழ்க்கையிலே பார்க்கிற ஓல்ட் பொம்பிளைங்களைப் போல. கிராமத்து பக்கங்கள்ல இருக்கும் சூனியக்காரிங்களைப் போல.''

''ஆனா இப்ப சூனியக்காரிங்கள்யெல்லாம் கிடையாதில்லே?'' என்றாள் பாப்பி, டேவிட்டை கண்ணகல முறைத்தபடி.

''நீ லண்டன் பொண்ணா இருக்கக்கண்டு, இப்படி சொல்றே. இங்கிலாந்தின் ஒதுக்குப்புற குக்கிராமங்களில் இன்றைய தேதியிலும் ஒரு சூனியக்காரி இருக்கத்தான் செய்றா. இல்லேனா சூனியக்காரன். இங்கேயிருக்கும் குன்றின் மேல உள்ள மூணாவது காட்டேஜ்ல மிஸஸ் ப்ளாக் இருக்கா, கெழவி. அவளைத் தொந்தரவு பண்ணி எரிச்சல் மூட்டிடக் கூடாதுனு சின்னப்பசங்க பயமுறுத்தப்பட்டிருக்காங்க. முட்டை, வறுத்த ரொட்டியெல்லாம் அப்பப்ப அவளுக்குப் படைக்கப்படுது. ஏன்னா...'' விட்டு விட்டு ஒரு விரலை அழுத்தந்திருத்தமாக காற்றில் அசைத்துக் காட்டிய டேவிட், ''அவளோட வம்பு வெச்சுக்கிட்டா, உங்க பசு பால் கறக்காது... உங்களோட உருளைக் கிழங்கு வயல் பொய்த்துப் போயிடும்... உங்க வீட்டு குட்டி ஜானி கீழே விழுந்து கையை உடைச்சுப்பான்'' என்றான். ''ஓல்ட் மிஸஸ் ப்ளாக்குடைய கணக்குல நீங்க நல்லவனாகவே எப்பவும் இருக்கணும். இத்தனை விளக்கமா யாரும் விவரிப்பது கிடையாது. ஆனா எல்லாருக்கும் இது தெரியும்.''

குழப்பமாய் ''நீ ஜோக்கடிக்கறே'' என்றாள் பாப்பி.

''நோ, நான் ஜோக்கா பேசலே. நான் சொல்வதுதான் சரி... என்ன மார்க்?''

''முன்னேறி விட்ட படிப்பு மற்றும் அறிவியலால் இந்த மூட நம்பிக்கைகள் எல்லாம் மடிஞ்சாச்சு'' என்று நாசூக்காய் சொன்னாள் ஹெர்மியா.

''ஆனா நீ சொல்வது சரின்னு எனக்குப் படுது, டேவிட்'' என்றேன் நான். ''எனக்கு இது பற்றி நிஜமா தெரியாவிட்டாலும் - *நம்பறேன்.* கிராமங்கள்ல தங்கி இதையெல்லாம் நான் கவனிச்சது கிடையாது.''

டேவிட்டின் ஆரம்பக் கட்ட குறிப்புக்கு மீண்டும் தாவி, ''சராசரி பொம்பளைப் போல எப்படி உங்களால ஒரு சூனியக்காரியைக் காட்ட முடியும்னு எனக்குத் தெரியலே'' என்றாள் ஹெர்மியா. ''அவங்களைச் சுற்றி supernatural அப்படிம்பாங்களே... அதைப் போன்ற ஓர் ஒளி வட்ட எஃபெக்ட் கொடுத்துக்கிட்டேயிருக்கணும், இல்லையா?''

''இருக்கலாம். ஆனா கொஞ்சம் சிந்திச்சுப் பாருங்க'' என்று விளக்கலானான் டேவிட். ''இதுவும் ஒரு பைத்திய நிலைமையைப் போன்றதுதான். தலை நிறைய வைக்கோலைச் செருகிக்கிட்டு அழுக்கு மூட்டையா கிழிஞ்சதைச் சுத்திக்கிட்டு பைத்தியம் போல் அலையும் ஜீவன்களைப் பார்த்தால் அது உங்களைப் பயமுறுத்துவதே கிடையாது! பைத்தியக்கார காப்பகத்துல இருந்த ஒரு டாக்டர்கிட்ட சேதியைக் கொண்டு போய் தருமாறு நான் அனுப்பப்பட்டேன். அப்போ அங்கிருந்த ஓர் அறை காட்டப்பட்டு அங்கு காத்திருக்கும்படி சொன்னாங்க. செஞ்சேன். அப்ப அங்கே ஒரு நல்ல வயசான அம்மா பாலைச் சூப்பிக் குடிச்சிக்கிட்டிருப்பதைக் கவனிச்சேன். வானிலை பற்றி என்னவோ வழக்கமான ஒரு குறிப்பை சொல்லிக்கிட்டிருந்த அவங்க, திடுதிப்புனு முன்னால வளைஞ்சு நெருங்கி கீழ் ஸ்தாயி குரல்ல கேட்டாங்க: *''அங்கே கனப்புக்கு முன்னாடி புதைக்கப்பட்டிருப்பது உன்னோட பரிதாபத்துக்குரிய குழந்தையா?''* இதுக்குப் பிறகு ஆமோதிப்பாய் சில முறை தலையை ஆட்டிக்கிட்டே அவ சொன்னா: *''சரியா 12.10. ஒவ்வொரு நாளும்சரியா இதே நேரத்துலதான். ரத்தத்தைப் பார்க்கலேனே நீ சொல்லு..''* அதையெல்லாம் அவ ஏதோ டீ நல்லாயிருக்கு அப்படினு நடந்த நிஜத்தை சராசரியா சொல்லும் விதமாத்தான் சொன்னாள். ஆனாலும் முதுகுத் தண்டு சில்லிட்டுப் போனதென்னவோ உண்மை.''

''அங்கே கனப்புக்குப் பின்னாடி நிஜமா யாராவது புதைக்கப் பட்டிருந்தாங்களா, என்ன?'' - பாப்பிக்குத் தெரிந்தாக வேண்டும்.

கேட்கப்பட்ட இக் கேள்வியை ஒதுக்கிவிட்ட டேவிட் மேற்கொண்டு பேசினான்: ''ஆவிகளோடு பேசுபவர்களை எடுத்துக்குங்க. நிஜத்துக்கும் ஆவியுலகத்துக்கும் நடு நாயக இணைப்பா இருக்கும் mediums இவர்கள். ஒரு கட்டத்துல ஆவியுலகத்துக்குள் போய் இருட்டறையில ருத்ரமா ஆகிடறாங்க. மற்ற சமயங்கள்ல மீன் வறுவலும் பீரும் குடிச்சிக்கிட்டு சராசரி பெண்மணியா வளைய வர்ராங்க..''

''ஆக உன் கருத்துப்படி'' என்ற நான் ''பயிற்சி பண்ணி, அதுல தேறி, தேவையானபோது சூனிய வேலைகளைப் பண்ணிக்கிட்டு, மற்ற சமயங்களில் சாதாரண பெண்ணா சுற்றிக்கிட்டிருப்பவளே சூனியக்காரி'' என்றேன் நான். ''யெஸ் - இப்படிக் காட்சி அமைந்தால் எடுப்பாத் தானிருக்கும்.''

''இப்படி அசாதாரணமான பாத்திரத்தை சர்வ சாதாரணமா நடிக்கும் நடிகன் கிடைச்சாத்தான் சோபிக்கும்'' என வறட்சியாய் குறிப்பிட்டாள் ஹெர்மியா.

''நல்ல பாயிண்ட்'' என்றான் டேவிட். ''ஒருவித பைத்தியம் மாதிரியான கேரக்டர் அப்படினு சொல்லிட்டா, உடனே இந்த நடிகனுங்க கோட்டைக் கிழிச்சுக்கிட்டு நிப்பானுங்க. நாம என்ன சொல்ல வரோம்னு புரிஞ்சுக்கிட்டு இந்த சூனியக்கார பாத்திரத்தைப் பண்ணனும்னு நீங்க குறிப்பிடுவது நூற்றுக்கு நூறு நிஜம். திடீர்னு நேரும் மரணக் காட்சியை எடுத்துக்குங்க. எந்த நடிகனும் திடீர்னு குலைஞ்சுப் போய் பொட்டுனு போயிட மாட்டான்! அவன் இருமனும், இப்படியும் அப்படியும் கால் தடுமாற அல்லாடணும். கண்களைப் பெருசு பெருசா உருட்டிப் பொறுமனும். மூச்சுக் காற்றுக்குத் துடிக்கணும். நெஞ்சை அழுத்தமா புடிக்கணும். அப்புறம் சாகணும். ஊஃப்.. ஆங்.. இப்படி நடிப்புப் பங்களிப்புப் பற்றி பேசும்போது தோணுது. மேக்பத்தா நடிச்சவனுடைய நடிப்பு எப்படி?''

''எனக்கு மிகப் பிரமாதமா தோணுது'' என்றாள் ஹெர்மியா. ''அதுவும், தூக்கத்துல நடக்கும் அந்தக் காட்சிக்கு அப்புறம் வரும் அந்த டாக்டருடனான காட்சி... சூப்பர்ப். டாக்டரை அவளைக் கொல்லும்படி ஏவும் ஆக்ரோஷமான பங்களிப்பு, அப்பப்பா... இப்படி கலக்குவார்ன்னு நான் நினைக்கவே இல்லே. இத்தனைக்கும் தன் மனைவியை அவர் அவ்ளோ நேசிச்சார். அவரோட பயத்துக்கும் காதலுக்கும் இடையேயான போராட்டத்தை அம்சமா காட்டிட்டார்.''

தொடர்ந்து அவள் ''இப்படி ஒருத்தனைத் துரண்டிக் கொலை பண்ணும் பாத்திரப் படைப்புக்கு இதுக்கு முன்னாடி ஏதாவது உதாரண நாடகங்கள் வரலாற்றுல இருக்கா?'' என்று கேட்டாள்.

''இருக்கணும்னே நினைக்கிறேன்'' என்றான் டேவிட். ''ஒரு சின்ன வேலையை முடிக்க ஒரு கொலைகாரன் கைக்கெட்டும் தூரத்துல இருக்கும்படி வசதியா அந்தக் காலத்துல நிலைமை இருந்திருக்கு பாருங்க...'' என்றும் தொடர்ந்தான். ''இப்ப அப்படி கொலைகாரனுங்க வாசல்ல இருக்கான்னு முகவரி தந்தால், நம்மை கேலிக் கூத்தா பார்ப்பாங்க.''

''ஆனா இதுவும் நடந்துக்கிட்டுத் தானிருக்கு'' என்று மறுப்பு குரலெடுத்தான் ஹெர்மியா. ''கொள்ளைக்காரனுங்க, பாதாளத்து தாதாங்க. இப்படி பலர், சிக்காகோ போன்ற பகுதிகள்ல பிரபலம்.''

''ஆஹ்..'' என்று விட்டான் டேவிட். ''ஆனா நான் சொல்ல வந்தது கொள்ளைக் கூட்டத்தையோ அல்லது ரவுடிங்களையோ கிடையாது. எதுவோ ஒண்ணுக்கிட்டேயிருந்து விடுதலை அடைய நினைக்கும் ஒரு சாதாரண தினசரி பிரஜை கையிலெடுத்துக் கொள்ளும் ருத்ர முடிவினைச் சொல்றேன். ஆன்ட்டி எமிலி கதை தெரியும்லே... பெரும் பணக்காரி. வயசானவ, ஆனா, கூடவே, ஆயுசு முழுக்க அந்த புரிஞ்சுக்க முடியாத புருஷன். இந்தச் சாதாரணப் பிரஜை பண்ணினது என்னனு தெரியுமில்லே... 'நல்லா கொலை பண்ணக் கூடிய ரெண்டு கொலைகாரனுங்களை அனுப்ப முடியுமா, ப்ளீஸ்?'னு விலைக்கு வாங்கி போட்டுத் தள்ளியிருக்கா. புருஷனை.''

நாங்களனைவரும் சொன்ன நகைச்சுவை தொனிக்கு சிரித்து விட்டோம்.

''ஆனா இதையே ஒருத்தன் இன்னொரு வழியில செஞ்சு முடிச்சுடலாம் இல்லே?'' - சொன்னது பாப்பி.

நாங்களனைவரும் அவளை நோக்கி திரும்பினோம்.

''எந்த வழியில, பாப்பி?'' என்று கேட்டது டேவிட்.

''அதாவது அ.. தா.. வ.. து.. நீங்க இப்ப சொன்னா மாதிரி நம்மை போன்ற சாதாரணமானவங்களே கூட அந்த வழியில செஞ்சு முடிச்சுடலாம்னு சொல்ல வரேன். என்ன, காசு பணம் கொஞ்சம் அதிகம் செலவாகும்..''

சொன்ன பாப்பியின் கண்கள் மிக அகலமாய் விரிந்திருந்தன... பெருமிதமாய் உணர்த்தின... அவளுடைய இதழ்கள் சன்னமாய் விரிந்த நிலையில்...

''நீ என்ன சொல்ல வரே?'' என்று கேட்டான் ஆர்வமான டேவிட்.

இப்போது பாப்பி குழம்பிப் போனவளாய் தோன்றினாள். ''ஓ, அதாவது, ஆங், ம்.. நான் சொதப்பிட்டேன்னு நினைக்கிறேன். *வெளிறிய குதிரையை* சொன்னேன். அங்கே நடக்கும் விதவிதமான ரகசிய...''

''*வெளிறிய குதிரை?* அப்படினா நோஞ்சானா இருக்குமா? வளர்த்தியில்லாமல், ஆங்?''

பேசிக் கொண்டிருந்ததை அப்படியே ஒதுக்கிவிட்ட பாப்பியின் கண்கள் தாழ்ந்து விட்டன. ''முட்டாளா நடந்துக்கிட்டேன்... இது யாரோ எதைப் பற்றியோ பேசும்போது குறிப்பிட்டது... ஆனா நான்தான் இதைப் பற்றி தப்பா புரிஞ்சுக்கிட்டிருக்கணும்...''

''தப்பானா?''

''விட்டுடு டேவிட், ப்ளீஸ்...''

''கொஞ்சம் இந்த சுவையான பீரைக் குடி'' - கனிவாய் சொன்னான் டேவிட்.

II

வாழ்க்கையில் விசித்திரமாய் நடக்கும் ஒரு சங்கதி என்னவென்றால், ஒரு விசித்திரமான விஷயத்தைப் பற்றி யாரோ பேசக் கேட்டிருக்கும்போது அடுத்த இருபத்து நாலு மணி நேரத்துக்குள் ஜஸ்ட் அதே விஷயத்தை நாம் எதிர் கொள்வதுதான்... இது நம் எல்லோருக்குமே அனுபவமான ஒன்றுதான். அது அப்படியே எனக்கும் மறுநாள் காலையில் நிகழ்ந்தது.

என் தொலைபேசி ஒலித்தது. அதற்கு நான் விடை தந்தேன்: ''73841.''

ஒரு வகையான மூச்சடைப்பு மறுமுனையிலிருந்து கேட்டது. பிறகு ஒரு குரல் சுவாசிப்புக்கு அல்லாடியபடி ஆனால் தீர்மானமாய் சொன்னது: ''நான் அதைப் பற்றி சிந்திச்சுக்கிட்டிருந்தேன்... நான் அங்கே வரேன்!''

என் புத்திக்குள் வெறித்தனமாய் ஒரு சுழல் சுழன்றடங்கியது. ''சூப்பர்'' என்றேன். ''இருந்தாலும் அது... அது யாரது?''

அக்குரல், ''ஒரு முறை மின்னிய மின்னல் மீண்டும் வராது'' என்றது.

''சரியான நம்பருக்குத்தான் போன் பண்ணியிருக்கீங்களா, நீங்க?''

''அஃப்கோர்ஸ், யெஸ். நீங்க மார்க் ஈஸ்ட்டர் - ப்ரூக், சரிதானே?''

''பிடிச்சுட்டேன்!'' என்றேன் நான். ''ஊஃப்... மிஸஸ் ஓலிவர்.''

''ஓ'' என்றது அக்குரல் ஆச்சரியமாய். ''யாருனு இவ்ளோ நேரமா உனக்குத் தெரியாது? இப்படி என் குரலின் அடையாளத்தை மறப்பேனு நான் கொஞ்சங் கூட நினைச்சது கிடையாது. பண்ணினது, ரூடாவோட பார்ட்டி பற்றி சொல்ல. நான் வரலாம்னு இன்னும் அவங்க நினைச்சா நான் வந்து புத்தகங்களுக்கு ஆட்டோகிராப் கையெழுத்துப் போடத் தயார். என்ன சொல்றே?''

''ஓ, அப்படினா உனக்கு ஓராயிரம் வந்தனங்கள். மனப்பூர்வமா வரவேற்பாங்க, அவங்க...''

''ஆனா பார்ட்டி கீர்ட்டி எல்லாம் ஒண்ணும் இருந்திடாதே'' என தொடரலானாள் அவள். ''அங்கே என்ன நடக்கும்னு உனக்குத்தான் தெரியுமே. கூட்டமா என்கிட்ட வருவாங்க. இப்ப நான் ஏதாவது எழுதிக் கிட்டிருக்கேனானு கேட்பாங்க. அப்ப நான் ஜிஞ்ஜர் குடிச்சிட்டிருப்பேன். இல்லேனா ஏதாவது சிப்ஸைக் கொறிச்சுக்கிட்டிருப்பேன். இதைப் பார்த்தும் இப்ப ஏதாவது எழுதறேனானு கேட்குங்க! எனக்கு புஸ்தகங்கள் பிடிக்கும்னு சொல்லுங்க. இதைக் கேட்க சந்தோஷமாத்தானிருக்கும்... ஆனா இதையே எத்தனை தடவை நீ கேப்பே? வெல், இதை மாற்ற முடியாது. ஆனா என்னை வெண் குதிரை வரை போய் குடிக்க சொல்ல மாட்டாங்களே?''

''வெண் குதிரை?''

''வெல்... *வெளிறிய குதிரையா?* ட்ரிங்க்ஸ் கிடைக்கும் அந்த கடையை சொல்றேம்ப்பா... ட்ரிங்க்ஸ்க்கு நான் பகை. பீர் குடிப்பேன், அதுவும் ஒரு துளி. அதுக்கே நான் அப்படி தள்ளாடுவேன்.''

''இத விடு. *வெளிறிய குதிரை*னு நீ எதுக்கு சொல்ல வந்தே?''

''அங்கே இந்த பேர்ல ஒரு ட்ரிங்க்ஸ் கடை இருக்கு இல்லே? இல்லேனா நான் சொல்ல வந்தது, வெண் குதிரையைத்தானா? இல்லே, இந்தக் கடை வேற எங்கேயோ இருக்கா? நானா கற்பனை பண்ணிக்கிட்டு இந்த இடத்துல இருக்கோனு கேட்டுட்டேனா? நான் நிறைய நிறைய கற்பனை பண்ணுவேன்.''

''அந்தப் பறக்கும் கிளி எப்படியிருக்கு?'' - கேட்டேன் நான். ''அந்த கிரிக்கெட் பந்து?''

''நல்லா நினைவு வெச்சிருக்கே'' என்ற அவள் குரலில் பெருமிதம்.

சொல்லிவிட்டு முடித்துக் கொண்டாள் அவள்.

இரண்டாவது முறையாக அன்று என் தொலைபேசி மறுபடியும் அலறும் வரை *வெளிறிய குதிரை*பற்றியே எனக்குள் ஓடிக் கொண்டிருந்தது.

இம்முறை தொடர்பில் வந்தது பிரபல வக்கீல் திரு. ஸோம்ஸ் ஒயிட். ஒரு தகவலை நினைவூட்ட போன் பண்ணினார். என் மதகுரு போன்ற மிஸஸ் ஹெஸ்கத் - டுபாய்ஸ், அவருடைய உயிலின்படி, அவருடைய மூன்று படங்களை நான் எடுத்துக் கொள்ள உரிமையுள்ளது என்றார் வக்கீல்.

''இதுல ஒண்ணும் அப்படி விலைமதிப்பற்ற தன்மையெல்லாம் கிடையாது'' என்று அவருக்கே உரிய வக்கீல்தனக் கிண்டல் தொனிக்கச் சொன்னார் ஸோம்ஸ். ''ஆனா, எப்பவோ ஒரு தடவை, அந்தப் படங்களைப்

பற்றி மறைந்த அவரிடம் நீங்க ரொம்ப சிலாகிச்சு சொன்னதா தெரிய வந்துது.''

''இந்தியாவின் சில காட்சிகளைக் கண்கவர் வகையில் அவங்க வரைந்திருந்த சில படங்கள் இருக்கு'' என்றேன் நான். ''இதைப் பற்றி நீங்க ஏற்கெனவே எனக்கு எழுதியிருப்பதாய் இப்ப நினைவுக்கு வருது... இது என் நினைவிலிருந்து எப்படியோ நழுவியிருக்கு...''

''அப்படித்தான்'' என்றார் வக்கீல். ''அவருடைய சட்ட ரீதியான அலுவலர்களில் ஒருத்தனான நாங்க அவங்களுடைய லண்டன் வீட்டை விற்க ஏற்பாடு செஞ்சுகிட்டிருந்தோம். சமீபத்துல உங்களால எல்லீஸ் மேரி சதுக்கத்துக்குப் போகும் வாய்ப்பு கிடைச்சதுன்னா...''

''நான் இப்பவே போறேன்'' என்றேன் நான்.

இதை பண்ண அன்று சாதகமான காலை அமையவில்லை.

III

என் கையடியில் என் விருப்பத்துக்கு நான் எடுத்துக் கொண்ட மூன்று ஓவியங்களையும் சுமந்துக் கொண்டு 49 எல்லீஸ் மேரி சதுக்கத்திலிருந்து நான் வெளியேறுகையில் முன் கதவு நோக்கி ஏறி வந்துக் கொண்டிருந்த ஒருவனோடு நான் மோதும்படி நேர்ந்தது. இதற்கு நான் மன்னிப்புக் கேட்டேன்... பதில் மன்னிப்பையும் வாங்கி பாக்கெட்டில் போட்டுக் கொண்டு வாடகைக்கு ஒரு டாக்ஸியைப் பிடிக்க நான் முன்னேறிய போதுதான் ஏதோ ஒன்று என் மூளைக்குள் பொறி தட்டியது. உடனே பின்வருமாறு கேட்க திரும்பினேன்: ''ஹல்லோ.. இது காரிகன்தானே?''

''இது... இது... ஓ யெஸ்... இது, மார்க் ஈஸ்ட்டர் - ப்ரூக்? ஆங்?''

எங்களுடைய ஆக்ஸ்போர்டு பருவத்தில் நானும் ஜிம் காரிகனும் நண்பர்களாயிருந்தோம். ஆனால் இது நடந்து கிட்டத்தட்ட பதினைந்து வருடங்கள் போல் ஆகியிருக்க வேண்டும்.

''உன்னை எங்கேயோ பார்த்த ஞாபகம் பட்டுனு வந்ததே ஒழிய எங்கேனு சரியா பொருத்த முடியலே'' என்றார் காரிகன். ''நான் உன்னோட ஆர்ட்டிக்கிள் எல்லாம் அங்கங்கே படிப்பதுண்டு, அவை எனக்கு ரொம்பப் பிடிக்கும். யெஸ்.''

''நீ என்ன பண்ணிட்டிருக்கே? உன் விருப்பப்படியே ரிஸர்ச்சுக்குள்ளே இறங்கிட்டியா?''

காரிகன் பெருமூச்செறிந்தார். ''அதுக்கெல்லாம் குடுத்து வெக்கலே. நீயா செஞ்சு முடிக்கணும்னா அது ஒரு செலவு பிடிக்கும் வேலை - ஆய்வை சொல்றேன். ஏதாவது அறக்கட்டளையோ இல்லே பணத்தை வெச்சுக்கிட்டு நல்ல காரியம் பண்ண நினைக்கும் யாராவது ஒரு புண்ணியவானோ உதவலேனா முடியாதுப்பா.''

''குடல் சம்பந்த ஆய்வுதானே நீ அப்ப பண்ணிட்டிருந்தது?''

''என்ன ஞாபகசக்தி! நோ, அதை நான் விட்டுட்டேன். ஆனா அங்கேயுள்ள சுரப்பிகளில் சுரக்கும் திரவங்களின் குணாதிசயங்கள் பற்றி படிக்க இறங்கியிருக்கேன். இன்னிக்கு நான் பண்ணிக்கிட்டிருக்கும் ஆய்வு இதுதான். நீ இதைப் பற்றியெல்லாம் கேள்விப்பட்டிருக்கவே மாட்டே. அடிவயிற்றிலுள்ள ஈரல் சம்பந்தப்பட்டது இது. சும்மா இருந்துக்கிட்டே எந்த வேலையும் பெருசா பண்ணாத பாகமிது!''

மருத்துவ அறிவியல் ஆர்வம் பொங்க பேசினான் அவன்.

''அப்புறம் எதுக்கு அதோட போராடறே?''

''வெல்...'' விஷயத்தைச் சரியாய் விளக்காமல் விட்டுவிட்டோமே என்ற மன்னிப்பு தொனி தெறிக்க பேசினான்: ''ஆனா, இந்த ஈரல் சம்பந்தப்பட்ட திரவம், உளவியல் நடத்தைகளை மாற்ற வல்லது என்பது என் தியரி. சாதாரண மனுஷனுக்கு விளங்குற மாதிரி சொல்லணும்னா, கார் ப்ரேக்ல உதவும் திரவம் போல இயங்குதுனு சொல்லலாம். திரவப் பசை இல்லேனா, ப்ரேக் இயக்கம் இருக்காது. மனிதர்களில் இந்த திரவ உற்பத்தி நின்னுட்டா, ஒருவேளை - நல்லா கவனிச்சுக்கோ... ஒருவேளைனு ஊகமாத்தான் சொல்றேன் - மனிதாபிமான இயக்கம் நிறுத்தப்பட்டு ஒரு கொலைக் குற்றவாளி உருவாக்கப்படலாம்.''

நான் சீட்டியடித்தேன். அவன் தொடர்ந்தான்.

''ஆனா துரதிர்ஷ்டவசமா இந்த தியரியை யாரும் ஏத்துக்கிற மாதிரி இன்னும் என்னால பண்ண முடியலே. ஸோ - நான் இப்ப போலீஸ் ஸர்ஜனா இருக்கேன்! எப்படி? விதவிதமான கிரிமினல்களைப் பார்க்கிறேன். சரி அதை விடு. லஞ்ச்?''

''நான் ரெடி'' என்ற நான் பின்னாலிருந்த வீட்டை சுட்டிக் காட்டி, ''ஆனா நீ அங்கேயில்லே போய்க்கிட்டிருந்தே?'' என்று கேட்டேன்.

''முக்கியமா ஒண்ணுமில்லே'' என்றார் காரிகன். ''ஒரு சின்ன விஷயம்.''

''அந்த இடத்தைக் கவனிச்சுக்கிறவனைத் தவிர அங்கே வேற யாரும் கிடையாது.''

''எதிர்பார்த்தேன். ஆனா, முடிஞ்சா, காலமாகிட்ட லேடி ஹெஸ்கத் - டுபாய்ஸ் பற்றி ஏதாவது தகவல் கிடைக்குமானு பார்க்கப் போறேன்.''

''அவனை விட என்னால சிறப்பா தகவல்கள் தர முடியும் என்பது என் நம்பிக்கை. அவங்க என் மதகுருவா இருந்தவங்க.''

''அப்படியா என்ன? லக்குதான் எனக்கு. எங்கே போய் சாப்பிடலாம்? பக்கத்துலயே சதுக்கத்துக்கருகில் ஒரு ஓட்டலிருக்கு. பெருசெல்லாம் கிடையாது. ஆனா சுமாரான ரகம். என்ன சொல்றே?''

அந்த ஓட்டலுக்கே போய் இருவரும் அமர்ந்தோம். ஒரு பிரெஞ்சுப் பயல் சூப் கொண்டு வந்து வைத்தான்.

அதைக் கொஞ்சமாய் ருசித்துப் பார்த்துவிட்டு, ''சுவை'' என்றேன் நான். ''நல்லாயிருக்கு. அப்ப சொல்லு காரிகன்... அந்த வயசான லேடியைப் பற்றி நீ என்ன தெரிஞ்சுக்க விரும்பறே? மேலும், எதுக்காக?''

''அது ஒரு பெரிய கதைப்பா'' என்றது, என் தோழன். ''முதல்ல அவ எந்த மாதிரி பொம்பிளைனு நீ எனக்குச் சொல்லு.''

நான் ஒத்துழைத்தேன். ''அது ஒரு பழைய பஞ்சாங்கம்'' என ஆரம்பித்தேன். ''ஏதோ ஒதுக்குப்புற தீவு ஒன்றின் எக்ஸ் கவர்னருடைய மனைவி; பணக்காரி. அவளுக்கிருந்த வசதிகளை அவ மிகவும் நேசிச்சா. குளிர் காலத்துல புறப்பட்டு வெளிநாடுகளுக்குப் போய் சுத்திட்டு வருவா. அவ வீடே இருட்டாத்தான் கிடக்கும். அதே நிறத்துல ஏகப்பட்ட மரச் சாமான்கள் வேற. குழந்தைங்க கிடையாது. ஆனா சில நல்லா பழகும் ஒண்ணு ரெண்டு ஏழை பாழைங்களை வெச்சிருந்தா. கனிவானவதான். ஆனா ஏகாதிபதி. அவ சொன்னதுதான் எடுபடணும் என்னும் பிடிவாத வகை. அவ நினைப்புகளில் மாறாமல் பிடிப்போடவே வாழ்ந்தவ. வேற என்ன தகவல் வேணும் உனக்கு?''

''அதுல எனக்கே நிச்சயத்தன்மை இல்லே'' என்றார் காரிகன். ''அவ எப்பவாவது ப்ளாக் மெயில் பண்ணப்பட்டிருக்கும் வாய்ப்பிருக்கா?''

''ப்ளாக்-மெயில்?'' - நான் ஆச்சரியத்தை அடக்க முடியாமல் கேட்டேன். ''அப்படியெல்லாம் எதுவும் என் மண்டைக்கு உறைக்கலேப்பா. இதெல்லாம் என்ன கேள்விங்க? வாட் ஹேப்பன்ட்?''

இந்தச் சமயத்தில்தான் உரையாடலின் வளர்ச்சியில் நான் முதன் முறையாக ஃபாதர் கார் - மேனின் கொலை பற்றி கேள்விப்பட்டேன். என் ஸ்பூனைக் கீழே வைத்தபடி ''என்னவோ பேர் பட்டியல்னியே? அது இருக்கா?'' என்று கேட்டேன்.

''ஒரிஜனல் இல்லை. ஆனா நான் பார்த்து எழுதிக்கிட்டு வந்தேன். இதோ அது.''

அவர் சட்டைப் பையிலிருந்து எடுத்துக் கொடுத்த தாளை வாங்கிக் கொண்ட நான் அதைப் படிக்க ஆரம்பித்தேன்: ''பார்க்கின்சன்? எனக்கு ரெண்டு பார்க்கின்சன்களைத் தெரியும். ஆர்தூர்னு ஒருத்தன் - அவன் கடற் படையில் சேர்ந்துட்டான். அப்புறம் ஹென்றி பார்க்கின்சன்னு ஒருத்தன். ஏதோ அமைச்சகத்துல இருக்கான் அவன். ஓர்மிராட்? மேஜர் ஓர்மிராட்னு ஒருத்தர் தெரியும். ஹெர்மண்ட் - ஓர்த்? ம்ம்.. நோ... டக்கர்டான்?'' இங்கு நான் நிறுத்தினேன். ''டக்கர்டான்? தோமாஸினா டக்கர்டான் கிடையாதே இது?''

இப்போது என்னை காரிகன் ஆர்வமாய்ப் பார்த்தார். ''இருந்தாலும் இருக்கலாம். யார் அவ? என்ன பண்றா அவ?''

''இப்போதைக்கு அவ ஒண்ணும் பண்ணலே. பண்ணவும் முடியாது. அவளோட மரணச் செய்தி ஒரு வாரத்துக்கு முன்னாடி நியூஸ் பேப்பரில் வந்திருந்தது.''

''அப்போ எந்த பிரயோஜனமும் கிடையாது.''

நான் படிப்பதைத் தொடர்ந்தேன்: ''ஷா? ஒரு பல் டாக்டர் ஷான்னு எனக்குத் தெரியும். அப்புறம் ஜெரோம் ஷா. டெலா ஃபான்டைன்? இந்த பேரை சமீபத்துலதான் நான் கேள்விப்பட்டேன். ஆனா எங்கேனு தான் நினைவில்லை. காரிகன்? இது உன்னையா குறிக்குது?''

''சத்தியமா கெடையாது.''

''சரி... இதுல போய் எது உன்னை ப்ளாக் - மெயிலைத் தொடர்பு படுத்தி யோசிக்க வெச்சது?''

''அது, இன்ஸ்பெக்டர் லெஜனுடைய ஊகம். ப்ளாக் மெயில்தான் சரியான சாத்தியக்கூறா பட்டுது - ஆனாலும் இன்னும் பல சாத்தியக் கூறுங்களும் இருக்கு. இதெல்லாம் போதைப் பொருள் கடத்துபவங் களுடைய பெயர்களா இருக்கலாம். இல்லேனா வேற எதுவாகவும் இருக்கலாம். ஆனா ஒண்ணு மட்டும் நிச்சயம்... இதைக் கையகப்படுத்தும் ஒரே நோக்கத்துடன்தான் கொலை பண்ணிருக்கு.''

நான் ஆர்வம் உந்த கேட்டேன்: ''உன் வேலைக்கு நடுவுல இதுபோன்ற போலீஸ் வேலைகளையும் நீ பண்ணுவதுண்டா?''

அவர் மறுப்பாய் தலையசைத்தார். ''அப்படியெல்லாம் எதுவும் கிடையாதுப்பா. என் இன்ட்ரஸ்ட்: க்ரிமினல் பாத்திரத்துல. க்ரிமினல் உருவாகும் விதத்துல. பின்னணி, வளர்ந்த விதம், மன நலம் - இப்படி!''

''அப்புறம் எதுக்கு இந்த பேர் பட்டியல்ல நாட்டம்?''

''இதெல்லாம் நான் தெரிஞ்சுட்டா நல்லதுனு பட்டுது'' என்றார் காரிகன் மெதுவாய். ''என் பேர் வேற இருக்குல்லே?''

''ஓ... அப்ப இதை நீ ஒரு பலிகடா பட்டியலாத்தான் பார்க்கிறே, இல்லே? குற்றவாளிங்களா பார்க்கலே, ஆங்? ஆனா இந்தப் பட்டியல் எதுவாகவும் இருக்கலாம், இல்லையா?''

''நிச்சயமா. இது ஜஸ்ட் என் எண்ணம். அவ்ளோதான். அல்லது, இது ஃபாதர் கார்-மேனுடைய சொந்தப் பட்டியலா கூட இருக்கலாம். நான் அடிக்கடி அவரைப் பார்ப்பது கிடையாது. ஆனா அவர் ஒரு நல்ல மனுஷன். எல்லோராலும் மதிக்கப்பட்டவர். அவரோட போட்டியாளர்களாலேயே அன்பா கருதப்பட்டவர். இந்தப் பட்டியலை அவர் நல்லவங்கன்னு வெச்சிருந்தாரா அல்லது கெட்டவனுங்கன்னு வெச்சிருந்தாரானு என் மண்டைக்கு விளங்கலே.''

''போலீஸுக்கு இதுல எந்த ஐடியாவும் தோணலே?''

''ஓ யெஸ்... ஆனா இது ஒரு பெரிய சமாச்சாரம்பா... இங்கே தேடணும், அங்கே துப்பு துலக்கணும், இங்கே உளவு பார்க்கணும், அங்கே கேட்கணும்...! அவரை அன்னிக்கு ராத்திரி வரும்படி ஆளனுப்பியிருந்த பொண்ணைப் பற்றியும் தகவல்கள் தேவைப்படுது.''

''யாரவ?''

''அவளைப் பற்றி அப்படியொண்ணும் மர்மங்கள் கெடையாது. ஒரு விதவை. அவ புருஷன் குதிரைப் பந்தயத்தோட தொடர்புள்ளவனா இருக்கலாம் என்பது எங்க ஊகம். ஆனா அப்படியும் தெரியலே. வீட்டு சாமான் உபயோகிப்பு பற்றி ஆராய்ச்சி பண்ணும் ஏதோவொரு அலுவலகத்துல அவ வேலையில இருந்திருக்கா. சின்னதாயிருந்தாலும் அது ஒரு மதிப்புக்குரிய அலுவலகம்னு தெரிய வருது. லோன் - ஷேர் இருக்கில்லியா - இங்கிலாந்தின் அந்த வடக்குப் பகுதியிலிருந்து வந்திருக்கா அவ. அவகிட்டேயிருந்து தெறிக்கும் ஒரேயொரு விளக்க

முடியாத சமாச்சாரம்: ரொம்பவும் கம்மியா சொந்தப் பொருட்கள் அவ வெச்சிருந்தா என்பதுதான்.''

நான் என் தோள்களைக் குலுக்கிக் காட்டினேன். ''இப்படி பலர் இருக்காங்க என்பதுதான் என் பதில். நமக்கு தெரிவதில்லே, அவ்ளோதான். இது ஒரு தனிமை உலகமப்பா.''

''யெஸ், சரிதான்.''

''எப்படியோ... இதுல ஒரு கை பார்த்துடறதுனு முடிவு பண்ணிட்டே...''

''சும்மா தோண்டிக்கிட்டிருக்கேம்பா. ஹெஸ்கத் - டுபாய்ஸ் என்பது ஒரு சாதாரண, புழக்கத்துல இல்லாத பேர். இந்தப் பொம்பிளையைப் பற்றி எனக்கு ஏதாவது சேதி கிடைக்குமானு தேடலாம்னு...'' வாக்கியத்தை முடிக்காமல் அப்படியே நிறுத்தினார். ''ஆனா நீ சொல்வதையெல்லாம் வெச்சுப் பார்த்தா உதவும்படியா எந்த ஒரு நூல் நுனியும் தென்படலே.''

''இதெல்லாம் போதை அடிமைகளும் கிடையாது. போதை கடத்துபவனுகளும் கிடையாது'' என அவருக்கு நிச்சயப்படுத்தினேன் நான். ''நிச்சயமா ரகசிய உறவு ஆட்களும் கிடையாது. ப்ளாக் மெயில் பண்ணும்படி எந்தத் தப்புகளும் அற்ற நல்ல வாழ்க்கையைத்தான் அவ வாழ்ந்து முடிச்சிருக்கா. இந்த மாதிரியான ஒரு பட்டியல்ல அவ பேர் இடம் பெற முடியுமானு எனக்கு பிடிபடவே இல்லே. அவ நகையையெல்லாம் பாங்க்ல வெச்சிருப்பது ஊருக்கே தெரியும். ஆக திருடனுங்களுக்கு நல்ல தீனியும் அவ கிடையாது.''

''வேற ஏதாவது ஹெஸ்கத் - டுபாய்ஸ் பற்றி உனக்கு? அல்லது மகன்கள், மகள்கள்..?''

''பிள்ளைங்க கிடையாது. தம்பி தங்கை உறவுகள்ல ஆளுங்க இருப்பதா கேள்வி... ஆனாலும் அவங்களுக்கு இந்த பேர் வராது. இவளோட கணவனும், அவர் வீட்ல ஒரே பிள்ளை.''

நான் அதிகபட்ச உதவியாய் இருந்தேன் என்றார் காரிகன். கைக்கடி யாரத்தைப் பார்த்த அவர் யாரையோ சந்திக்க வேண்டிய நேரம் நெருங்கி விட்டதாய் அறிவுறுத்தி விட்டு மலர்ந்த முகத்துடன் விடை பெற்றார்.

சிந்தித்தபடி நான் வீட்டுக்குச் சென்றேன். எந்த வேலையிலும் ஈடுபட முடியாமல் போனதை உணர்ந்தேன். இறுதியாய், ஓர் உந்துதல் விளைய, டேவிட்டுக்குப் போன் போட்டேன்.

''டேவிட்? இது மார்க். அன்னிக்கு சாய்ந்திரம் நான் உன்னோட பார்த்த பொண்ணைப் பற்றிப்பா. பாப்பி. அவளோட இன்னொரு பெயர் என்ன?''

''அவளைக் கொத்திக்கப் பார்க்கிறீங்களா, ஆங்?'' ஆச்சரியப்பட்ட குரலில், டேவிட்.

''உனக்குத்தான் அதேபோல பலதுங்க இருக்கே?'' என எதிர்க்குரல் கொடுத்தேன் நான். ''நிச்சயமா உன்னால ஒண்ணை விட்டுத்தர முடியும்...''

''உனக்குனு ஒரு ரோட் ரோலர் வெச்சிருக்கீங்க, மேன். அதுகூட நீங்க சுமூகமா போய்க்கிட்டிருக்கீங்கனுதானே நான் நெனச்சேன்..''

'சுமூகமா போய்க்கிட்டிருக்கேன்...' கிண்டல் செய்யும் தொனி. ஆயினும் இது குறித்துக் காட்டிய உள்ளர்த்தத்தில் நான் சற்று கிரகிக்கப்பட்டேன். என்ன அழகாய் இந்தக் கிண்டல், எனக்கும் ஹெர்மியாவுக்குமான உறவினை விளக்கி விட்டது. ஆமாம்... எதற்காக இது என்னை மன அழுத்தம் கொள்ளச் செய்ய வேண்டும்? ஹெர்மியாவை நான் மணமுடித்துக் கொள்ளப் போவதாய் எனக்குள் நானே கூட பலமுறை எண்ணியிருக்கின்றேன்... இந்த எண்ணத்தை வேறு எவரையும் விட நானே மிகவும் ஸ்லாகித்தேன். எங்களுக்குள் பொதுவாய் ஒத்துப் போகும் அம்சங்கள் பெருவாரியாய் உள்ளன.

ஏனென்று விளக்க எவ்வித காரணமில்லாத நேரத்தில், எக்கச்சக்கமாய், எனக்கு கொட்டாவி வந்தது. எங்களுடைய எதிர்காலம் என் கண்களுக்கு முன்னால் விரிந்தது. முக்கியமான கண்கவர் இடங்களுக்கு நானும் ஹெர்மியாவும் மட்டும் தனியாக செல்கின்றோம்... கலை, இசை பற்றிய வலுவான விவாதங்கள்... சந்தேகமே வேண்டாம், ஹெர்மியாதான் என் சரியான ஜோடி.

ஆனால் ஆழ் மனத்திலிருந்து எவனோ ஒருத்தன், ''அப்படியொண்ணும் உல்லாசமா அமைஞ்சுடாது...'' என்று குரல் கொடுத்தான். நான் அதிர்ந்துப் போனேன்.

''என்ன, தூங்கியாச்சா?''என்றான் டேவிட்.

''சேச்சே, அப்படியெல்லாம் இல்லே... உன் ஃப்ரண்ட் பாப்பி ஒரு புதுமலர் போல என் கண்களுக்குப் பட்டாள். இதுதான் நிஜம்.''

''நல்ல வர்ணிப்பு. அவளோட உண்மையான பெயர், பமீலா ஸ்டெர்லிங், மேஃபேர் பகுதியிலிருக்கும் அலங்கார மலர்கள் கடையில வேலை.''

எப்படியெல்லாம் அங்கு மலரலங்காரம் பண்ணுகின்றார்கள் என்று சற்று விவரித்த பின் அவள் முகவரியைத் தந்தான்.

''அவளை வெளியில இழுத்துக்கிட்டுப் போய்,ம் ஜமாய்ங்க'' என்றான். ''ஜாலியான ஓய்வா நேரம் கழியும். அதுக்கு ஒண்ணுமே தெரியாது. சுத்தமா காலி மண்டை. அவகிட்டே நீங்க என்னத்தை சொன்னாலும் அதையெல்லாம் அவ நம்புவா. ஆனா நல்ல குணமான பொண்ணு. அதனால எந்த தப்பான எண்ணங்களும் வேணாம்.''

அவன் இணைப்பைத் துண்டித்துக் கொண்டான்.

IV

'மலர் ஆய்வுக் கழகம்' அலுவலகத்துக்கு நான் போய் சேர்ந்தேன். செடிகளுக்கான மருந்து வாடை என் முக்தை சுளிக்க வைத்ததென்னவோ உண்மை. பல பெண்கள், பச்சை நிற யூனிபார்ம் அணிந்து கொண்டு ஏறத்தாழ பாப்பி போலவே தோன்றியது, என்னைக் குழப்பியது. கடைசியில் அவளை நான் கண்டுபிடித்து விட்டேன். ஏதோ ஒரு முகவரிக்கான சரியான ஸ்பெல்லிங் தெரியாமல் சிறு தவிப்போடு அதனை எழுதிக் கொண்டிருந்தாள் அவள். பிறகு ஐந்து பவுண்ட் நோட்டுக்கான மீதி சில்லறையைத் தருவதில் சிறு தவிப்பினை அனுபவித்து முடித்து தனிமையான அவளை, நாடினேன் நான்.

''நாம அன்னிக்கு ராத்திரி சந்திச்சோம்- டேவிட் கூட'' - நான் அவளுக்கு ஞாபகமூட்டினேன்.

''ஓ, யெஸ்'' என கதகதப்பாய் ஏற்றுக் கொண்டாள் அவள் - கண்களை என் மீது சிறு சந்தேகத்துடன் ஓட்டியபடி.

''நான் உன்கிட்ட சில விஷயங்களைக் கேட்கணும்'' - இப்போது திடுமென்று பனிமூட்டம் போல குழம்பிப் போனேன் நான். ''சில பூக்களை முதல்ல நான் வாங்கிக்கட்டுமா?''

சரியான பட்டனை அழுத்தி விட்ட இயந்திரத்தைப் போல ''இன்னிக்குத்தான் வந்து இறங்கியிருக்கிற சில லவ்லீ ரோஸஸ் இருக்கு'' என ஒப்பித்தாள் அவள்.

''இந்த மஞ்சள் ரோஜாக்களோ?'' என்றேன் நான். எங்கெங்கும் ரோஜாக்களாய் இருந்தன. ''இவை எவ்ளோ?''

தேன் குழைத்த குரலில், ''ரொம்ப ரொம்ப கம்மி'' என்றாள். ''ஒவ்வொண்ணும் அஞ்சு ஷில்லிங்.''

எச்சிலைக் கூட்டி விழுங்கிக் கொண்ட நான் அவற்றில் ஆறு மலர்களை வாங்கிக் கொள்வதாய் வேறு வழியின்றி சம்மதித்தேன்.

''இதுல சில மலர்கள் அழகிய ரெட்டை இலைகளுடன் இருக்குப் பாருங்க...''

தொய்ந்து அழுகும் நிலையிலிருந்த அந்த 'அழகிய' இலைகளை நான் பெருமூச்சோடு பார்த்தேன். தேர்ந்தெடுத்த மலர்களை அவள் கொத்தாய்க் கட்டிக் கொண்டிருந்தபோது ''நான் ஒரு விஷயம் பற்றித்தான் உன்கிட்டே பேச வந்திருக்கேன்'' என்றேன். ''அன்னிக்கு சாயந்திரம் நாம சந்திச்சபோது நீ *வெளிறிய குதிரை* பற்றி என்னவோ சொன்னே..''

ஒரு தாள முடியாத திடுக்கிடலோடு சேர்த்துப் பிடித்திருந்த ஆறு மலர்களை பரப்பி அப்படியே அவள் தரையில் நழுவ விட்டு விட அவை விரிந்து விழுந்தன.

''அதைப் பற்றி மேற்கொண்டு தகவல் தர முடியுமா?''

குனிந்து மலர்களை எடுத்த பிறகு தன்னை நேர் செய்துக் கொண்ட பாப்பி கேட்டாள்: ''என்ன சொன்னீங்க?''

''*வெளிறிய குதிரை* பற்றி நான் உன்கிட்டே கேட்டுக்கிட்டிருந்தேன்.''

''*வெளிறிய குதிரை?* அப்படினா?''

''அன்னிக்கு சாய்ந்திரம் நீ சொன்னதுதான் இது..''

''அப்படியெல்லாம் எதுவும் நான் பேசலேனு நிச்சயமா சொல்வேன்! அப்படியெல்லாம் நான் இதுவரைக்கும் ஒரு தடவை கூட கேள்விப்பட்டிராதபோது எப்படி நான் அதைப்பற்றி பேச முடியும்?''

''யாரோ உன்கிட்டே அதைப் பற்றி சொல்லியிருக்காங்க. யாரது?''

பாப்பி கடுகடுவென வேகமாய் மூச்சு வாங்க ஆரம்பித்தாள். எனவே வேகமாய் பேசினாள்: ''நீங்க எதைப் பற்றி இப்ப என்கிட்டே வந்து பேசிக்கிட்டிருக்கீங்கனு எனக்குக் கொஞ்சமும் விளங்கலே. மேலும் இத்தனை நீளமா நாங்க கஸ்டமர்கிட்டே பேசக் கூடாது...'' - சொன்னவள், நான் தேர்ந்தெடுத்த மலர்களைச் சுற்றி காகிதத்தினால் சுற்றி கட்டினாள். ''முப்பத்தஞ்சு ஷில்லிங், ப்ளீஸ்.''

அவளிடம் ரெண்டு பவுண்டு நோட்டு ஒன்றைத் தந்தேன். மீதி சில்லறையை அவசர அவசரமாய் என் கைக்குள் திணித்த அவள் அடுத்த வாடிக்கையாளரைப் பார்க்கப் போய் விட்டாள்.

கவனித்தேன்... ஸ்பரிசித்த அவளுடைய கைகள் லேசாய் நடுங்கிக் கொண்டிருந்தன.

நான் மெதுவாய் வெளியேறினேன். நான் வெளியேறிய பிறகு தான் அவள் தவறுதலான விலையை என்னிடம் சொல்லியிருக்கிறாள் என்பதையும் தர வேண்டியதை விடவும் அதிகமான சில்லறையை தந்திருக்கிறாள் என்பதனையும் நான் கவனித்தேன். தவறான கணக்கு!

நான் மறுபடியும் அந்த அழகு ததும்பும் வெற்றிட முகத்தையும் அகலமான நீல நிற நயனங்களையும் சந்தித்தேன். அந்த விழிகள் எதையோ வெளிப்படையாய் காட்டின...

''*பயம்*''- எனக்குள் சொல்லிக் கொண்டேன் நான். ''இறுக்கமான பயம்... கிலி... இப்போது எதற்காக? ஏன்?''

அத்தியாயம் 5

மார்க் ஈஸ்ட்டர் – ப்ரூக் பதிந்தவை

I

''விட்டுதுடாப்பா'' என்று பெருமூச்செறிந்தாள் மிஸஸ் ஓலிவர். ''எதுவும் நடக்காம ஒழுங்கா முடிஞ்சுதே!''

அக்கணம், முழு சுதந்திரம் மிக்கதாய் அமைந்தது. ரூடா தந்த விருந்து வழக்கமாய் விருந்தொன்று எப்படி நடந்து முடிய வேண்டுமோ அப்படியே இடம் பெற்றது. காலையில் சாதகமாய் அமையாத வானிலையால் படபடப்பு மிகுந்திருந்தது. விசாலமான திறந்த வெளியில் கடைகள் ஏதாவது போட வேண்டுமா அல்லது எல்லாவற்றையும் வசதியாயிருந்த உட்புறத்திலேயே வைத்து முடித்து விடலாமா என்பதில் போதுமான அளவுக்கு விவாதங்கள் இடம் பெற்றன. தேநீர் எங்கு ஏற்பாடு பண்ணுவது, ஸ்டாலில் நொறுக்குத் தீனியாய் என்னென்ன வைக்க போன்றவற்றில் காரசாரமான கருத்துப் பரிமாற்றங்கள் ஆரோக்கியமாய் நடந்தன. இதையெல்லாம் தன் சாதுர்யத்தால் தீர்மானித்தது ரூடாதான். முழு வெற்றி கண்ட ஸ்டால், பாட்டில் ஸ்டால்.

இந்த பார்ட்டியில் என் சகோதரி முறைவரும் ரூடா, அவளுடைய கணவன் கலோனல் டெஸ்பேர்ட், மிஸ் மேகாலிஸ்டர், சிகப்புக் கேசங் கொண்டிருந்த ஓர் இளைய பெண்ணான ஜிஞ்ஜர், மிஸஸ் ஓலிவர், எங்களது பாதிரியார் ரெவ. டேனே கேல்த்ராப் மற்றும் அவரது மனைவி. பாதிரியார், ஈர்ப்பு மிகுந்த அறிவாளி. முதியவர்.

தற்சமயம், பதற்றமாகவே இருக்கும் திருமதி டேனே, அவரது அழகு கண்களைப் படபடத்துக் கொண்டு, மிஸஸ் ஓலிவரை சிந்தனையோடு

வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார். திடுதிப்பென்று அவர் கேட்டார்: ''இந்த விருந்துல என்ன நடக்கணும்னு நீ எதிர்பார்த்தே?''

''வெல், சொல்லப்போனா, ஒரு கொலை. இல்லே, அதுபோல ஒண்ணு...''

இப்பதிலில் ஈடுபாடு கொண்டவரானார் மிஸஸ் டேனே. ''எதுக்காக அப்படி?''

''காரணமெல்லாம் ஒண்ணுமில்லே. அப்படியெல்லாம் எதுவும் நடக்க சான்சே கிடையாதுதான். ஆனா நான் போன தடவை போயிருந்த ஒரு விருந்துல அப்படி நடந்தது.''

''அப்படியா, அது உங்க மனசுக்குக் கிலேசமா போச்சோ?''

''ரொம்ப.''

இப்போது மிஸஸ் ஓலிவர் பக்கமாய் திரும்பிய நான் கேட்டேன். ''இங்கே ஏதாவது லோக்கல் *பப்* இருக்கா? பொட்டிக்கடை போல... இங்கேதானே *வெளிறிய குதிரை பப்* இருக்குனு நீ சொன்னே?''

இந்தத் தருணத்தில் நான் எதிர்பார்த்திருந்த விளைவு எதுவும் கொஞ்சங்கூட இடம்பெறவில்லை. இக்கேள்விக்காக என் பக்கமாய் திரும்பிய முகங்கள் ஈடுபாடு அற்றும் எதுவும் விளங்காததாகவும் இருந்தன.

''*வெளிறிய குதிரை, பப்* கிடையாது'' என்றாள் ரூடா ''அதாவது இப்ப.''

''அது ஒரு பழைய சத்திரம். மடம்னு சொல்லலாம்'' என்றார் கலோனல் டெஸ்பேர்ட். ''பதினாறாம் நூற்றாண்டை ஒட்டியதும்பேன். ஆனா இப்ப அது ஒரு சாதாரண வீடு. இப்படியிருக்கும் அதோட பேரை நவீனமா மாற்றியிருக்கணும்னு நான் பலமுறை நினைப்பதுண்டு.''

''ஓ, கூடாது'' என ஆச்சரியப்பட்டாள் ஜிஞ்ஜர். ''அந்த இடத்தைப் போய் க்டற்கரை விடுதினோ அல்லது இப்படி ஏதாவது நவீன பேர் வெச்சோ அழைக்க முடியாது. *வெளிறிய குதிரை* என்பதுதான் எனக்கென்னவோ சிறந்ததா படுது. பழைய மடம்னு இந்தப் பேர்லயே தெரிய வந்துடுது. இந்தப் பேரைத்தான் நடு ஹால்ல படம் போட்டு தொங்க விட்டிருக்காங்க, அவங்க.''

''யார் அந்த அவங்க?'' - நான் கேட்டேன்.

''அது தெரஸா க்ரேக்கு சொந்தமானது'' என்றாள் ரூடா. ''அவளை நீங்க இன்னிக்குப் பார்த்தீங்களானு எனக்கு தெரியலே. நெட்டையா இருந்தாளே... தலையெல்லாம் நரைச்சு...''

''ரகசியமானவ அவ'' என்றார் கலோனல்டெஸ்பெர்ட். ''ஆன்மீகத்துல மூழ்கி, தன்னிலை இழந்து, வேற்றுலக தொடர்பு கொண்டு, மேஜிக்கெல்லாம் காட்டி..! ப்ளாக் மேஜிக்ம்பாங்களே... அதுபோல! வெளிப்படையா இப்படி தெரியலைனாலும் அது போலத்தான் தோணுது.''

ஜிஞ்ஜர் திடுமென்று படேரென்று சிரித்தாள். அதற்கு ''ஸாரி, ஸாரி'' என்றாள் மன்னிப்பாய். ''ஒரு மந்திரக்காரி போல கறுப்பு உடையில் மிஸ் க்ரேவை நினைச்சுப் பார்த்தேன்... அதான்...''

''ஜிஞ்ஜர்'' என்றாள் ரூடா. ''பாதிரியார் முன்னாடி இப்படியெல்லாம் பேசிக்கிட்டு...''

''ஸாரி, மிஸ்டர் டேனே...''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே'' என்றார் பாதிரியார் உற்சாகமாய். லத்தீன், கிரேக்க மொழி போன்றவற்றில் புலமை வாய்ந்த பாதிரியார் அம்மொழிகளிலிருந்து மேற்கோள் காட்டி எதையோ பேச, நான் பேச எடுத்துக் கொண்ட கருப்பொருளிலிருந்து விலகாமல் ''நான் இன்னமும் கூடுதலா அவங்களைப் பற்றி தெரிஞ்சுக்க விரும்பறேன்'' என்றேன். ''மிஸ், கிரே, அப்புறம்?''

''ஓ... அவங்க கூட ஒரு தோழியும் தங்கியிருக்கா. அவதான் ஆவி தொடர்பாளரா இயங்கறானு கேள்வி. ஸிபில்னு பேர் - ஸிபில் ஸ்டாம்ஃபோர்டீஸ். இங்கே அவளையும் நீங்க பார்த்திருக்கணுமே... விதவிதமா வளையங்கள், மணிகள் போட்டுக்கிட்டு! சில சமயங்களில் புடவை கட்டிக்கிறா. ஏன்னு தெரியலே. இத்தனைக்கும் அவ இந்தியா பக்கம் போனது கூட கிடையாது.''

''அப்புறம் அந்த பெல்லா'' என்றார் மிஸஸ் டேனே. ''இவதான் அவங்க ரெண்டு பேரோட சமையக்காரி. இவளும் ஒரு சூனியக்காரிதான். பக்கத்துல இருக்கிற குக்கிராமமான டன்னிங் கிராமத்திலிருந்து வந்தவள். அங்கே சூனியம் வைப்பதுல கைதேர்ந்தவளா இருந்திருக்கா. அவங்க ரத்தத்துலேயே இது ஓடுது. குடும்பத் தொழில்! இவ அம்மாவும் ஒரு சூனியக்காரி.''

இதெல்லாம் நிஜங்கள் என்பது போல பேசினார் அவர்.

''பேசறதைப் பார்த்தால், உங்களுக்கு சூனியத்துல நம்பிக்கை இருக்கும் போல தோணுது மிஸஸ் டேனே?'' என கேட்டேன் நான்.

''அஃப்கோர்ஸ்! இதுல மறைக்கவோ ரகசியமா வெச்சுக்கவோ எதுவும் கிடையாது. சூனியத்தை சொல்றேன். ஒரு குடும்பச் சொத்தாக இது தலைமுறை மாறி தலைமுறை வந்துக்கிட்டேயிருக்கு.''

சொன்னவரை நான் சந்தேகமாய் கண்ணுற்றேன். பேசும் விஷயத்தில் ரொம்பவும் சீரியசாக இருப்பவரைப் போல் தோன்றினார் அவர்.

''எதிர்காலத்தைப் பற்றி சொல்ல இன்னிக்கு எங்களுக்கு ஆரூடம் பார்த்தாள், ஸிபில்'' என்றாள் ரூடா. ''இதை சொல்வதுல அவ கெட்டிக்காரினு கேள்விப்பட்டிருக்கேன்.''

''எனக்கு ஒரு சூப்பரான எதிர்காலம் பற்றி அவ சொன்னா'' என்றாள் ஜிஞ்ஜர். ''கை நிறைய காசு சேருமாம். வெளிநாட்டிலிருந்து வரும் முன்பின் தெரியாத ஒரு கறுப்பு அந்நியனால! பெரிய தர்மகர்த்தாவா இருக்கணும் அவன்!'' தொடர்ந்தாள்: ''மிஸ் ஸிபில், மத்த யாராலேயும் பார்க்க முடியாததைப் பார்க்கிறாளாம். எந்த நாள்ல மரணம் சம்பவிக்கும்னு மிஸ் க்ரேவுக்குத் தெரியுமாம். அவ சொல்வதுல தப்பே இருக்காதாம்.''

''ஓ, இதெல்லாம் த்ரில்லா இருக்கு'' என்றாள் மிஸஸ் ஓலிவர். ''எனக்கு அங்கே வர ஆசையாயிருக்கு.''

இதற்கு கலோனல் டெஸ்பேர்ட் ''நாளைக்கு நிச்சயமா உன்னை அங்கே அழைச்சுக்கிட்டுப் போறேன்'' என உறுதி தந்தார். ''அந்தப் பழைய விடுதியை ஒரு தடவை பார்த்தாகணும். அதோட பழமையான குணாதிசயத்தை மாற்றாம சாதுர்யமா தேவையான வசதிகளைப் பண்ணிக்கிட்டிருக்காங்க.''

''தெரஸாவுக்கு நாளைக்குக் காலையிலே நான் போன் பேசிடறேன்'' என்றாள் ரூடா.

சிறு தடுமாற்றம்உள்ளுக்குள் ஏற்பட்டிருந்த நிலையில்தான் நான் படுக்கப் போனேன் என்று ஒப்புக் கொள்கிறேன். யாருக்கும் தெரியாத ஒரு மர்மப் பிரதேசமாய் *வெளிறிய குதிரை* இருக்க வேண்டும் என்ற என் எண்ணத்துக்கு மாறாக ஊரறிந்த இடமாக அதன் அடையாளம் கிடைத்ததில் குழப்பமும் தடுமாற்றமும் விளையப் பெற்றேன்.

ஒருவேளை, என் சந்தேகப்படியே, இன்னொரு *வெளிறிய குதிரை* எங்காவது இருக்குமோ?

இந்த எண்ணத்திலேயே கிடந்தேன் நான். தூங்கப் போகும் வரை.

II

தொடர்ந்து வந்த மறுநாள் ஞாயிற்றுக்கிழமை, ஹாய்யாக அமைந்தது. ஒரு பெரிய பார்ட்டி நல்ல படியாக நடந்து முடிந்ததே என்ற விடுதலை உணர்வு. வெளியே போடப்பட்டிருந்த கூடாரங்கள், சமையற் காரர்கள் வந்து அவிழ்த்துப் போக வசதியாக காற்றிறங்கிய பலூன் போல தொய்ந்து நின்றுக் கொண்டிருந்தது. திங்கட்கிழமை நாங்களனைவரும் என்னவெல்லாம் பழுதாகியிருந்தன என எண்ணிக்கைப் பார்த்து விட்டு கணக்கை மூட வேண்டும். ஆகவே, புத்திசாலித்தனமாக முடிவெடுத்த ரூடா, இன்று எத்தனை மணி நேரம் வெளியே கொண்டாட முடியுமோ அத்தனை மணி நேரம் ஊர்சுற்ற அப்போதே கிளம்பிப் போய்விட்டாள்.

நாங்கள் எல்லோரும் சர்ச்சுக்குப் போயிருந்தோம். அங்கு, ஆன்மீகம் அதிகம் இல்லாமல் பெர்ஸிய வரலாற்றில் முழு கவனம் கூட்டி ஏசைய்யாவிலிருந்து மேற்கோள்கள் எடுத்து இலக்கிய நயம் மிக அம்சமாய் மிஸஸ் டேனே கேத்ராப் பேசிய உறுதிமொழிகளைக் கேட்டோம்.

அதற்குப் பிறகு ''நாம மிஸ்டர் வெனபிள்-வுடன் லஞ்ச் எடுத்துக்கப் போறோம்'' என விளக்கலானாள் ரூடா. ''உங்களுக்கு அவரை பிடிக்கும், மார்க். உண்மையாகவே அவர் ஒரு இன்ட்ரஸ்ட்டிங்கான மனுஷன். எல்லா இடத்திலேயும் இருந்திருக்கார். எல்லாத்தையும் பண்ணியிருக்கார். புறம்பான எல்லா வழிகளும் தெரிஞ்சவர். ப்ரியர்ஸ் கோர்ட் இருக்கில்லே... அதை மூணு வருஷத்துக்கு முன்னாடி வாங்கினார். போலியோவினால் வாதம் கண்டவர். அதை புதுப்பிக்க அவர் கொட்டின பணம் கொஞ்ச நஞ்சமில்லை. அதனால நகர்வதற்கு அவருக்கு ஒரு சக்கர நாற்காலி அத்தியாவசியமாயிருக்கு. எல்லா நாட்டுக்கும் பிரயாணித்து பிரயாணித்து வரும் ஆர்வலர்; அதனால் இது அவருக்கு ஒரு பெரிய இடைஞ்சலாத் தானிருக்கணும். பணத்துல புரள்றார்... அதான் பணத்தைக் கொண்டு வந்து கொட்டோ கொட்டுனு கொட்டி வாங்கின இடத்தை அழகுபடுத்தினார். அது ஒரு அரதப் பழைய இடம்... தூள் தூளா உதிர்ந்துக்கிட்டிருந்தது. இப்ப அது முழுக்க அத்தனை அழகான பெருமதிப்பு பொருட்கள். விற்பனைத் துறைதான் அவரோட தற்போதைய ஈடுபாடுனு நினைக்கிறேன்.''

ப்ரியர்ஸ் கோர்ட் ஒரு சில மைல்கள் தள்ளித்தானிருக்கிறது. நாங்கள் அங்கு போக, எங்களை வரவேற்க அவரே சக்கர நாற்காலியைத் தள்ளிக் கொண்டு முன்வந்தார்.

மனதார, ''நீங்க எல்லாம் இப்படி ஒண்ணா கூடி வந்திருப்பதைப் பார்க்க சந்தோஷமாயிருக்கு'' என்றார். ''நேற்று மீட்டிங்குக்கு அப்புறம் நீங்க எல்லாரும் அப்பாடானு ஓஞ்சுப் போயிருக்கணும்... நேற்றைய அனைத்தும் ஒரு முழு சக்ஸஸ், ரூடா.''

மிஸ்டர் வெனபிள் ஐம்பது வயதை ஒட்டிய மனிதர். பெரிய இள்நீர் போன்ற முகம்... அதிலிருந்து துருத்திக் கொண்டு கோபமாய் நின்றது கூரான நெடிய மூக்கு. காலர் வைக்காத சட்டை உடுத்தியிருந்தபடியால் அது அவருக்கு சற்று வயதான வட்டத்தை உண்டுபண்ணித் தந்தது.

ரூடா அறிமுகங்களைச் செய்தாள்.

வெனபிள் மிஸஸ் ஓலிவரைப் பார்த்துப் புன்னகைத்தார். ''இவங்களை நேற்று நான் ஓர் எழுத்தாளரா பார்த்தேன்'' என்றார். ''அவங்களோட கையொப்பம் வைத்த ஆறு புத்தகங்கள் வாங்கினேன். கிறிஸ்துமஸுக்கான அன்பளிப்புகள் அவை. பெரும் எழுத்துப் புலமை மிகுந்து ரொம்பவே நல்லா எழுதறீங்க, மிஸஸ் ஓலிவர். இப்படியே நிறைய எழுதி நீங்க எங்களுக்குத் தந்துக்கிட்டேயிருக்கணும்.'' பிறகு ஜஞ்ஜரைத் துளைப்பது போல் பார்த்தார். பிறகு என் பக்கமாய் திரும்பியவர், ''போன மாசத்து விமர்சனப் பகுதியிலே நீங்க எழுதியிருந்ததை நான் விரும்பிப் படிச்சேன்'' என்றார்.

''எங்க விருந்துக்கு நீங்க வந்தது உங்க பெரிய மனசைக் காட்டுது'' என்றாள் ரூடா. ''தாராளமா எங்களுக்கு நீங்க ஒரு காசோலையை அனுப்பியிருந்ததால, அதுக்கப்புறம் நீங்க வர மாட்டீங்கன்னுதான் நான் நினைச்சிருந்தேன்.''

''ஓ, இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளையெல்லாம் நான் விரும்புபவன். ஆங்கிலேய நகரக் கலாச்சாரம் இது, இல்லையா? ஒரு அழகான பொம்மையை வாங்கி எடுத்துக்கிட்டுக் கூடவே மிக அற்புதமா நம்பும்படியான - ஆனா நிஜத் தன்மை கொஞ்சமும் அற்ற - ஸிபிலுடைய என் எதிர்காலம் பற்றிய ஆரூடத்தையும் சுமந்துக்கிட்டு வீடு வந்து சேர்ந்தேன். விதவிதமான வண்ணம் கொண்ட ஒரு டர்பன் தலையில... அத்தனை மணிகளும் முத்துகளும் கொண்ட மாலைகள் வளையல்கள் உடம்புல... ஸிபிலைச் சொல்றேன்.''

''குட் ஓல்ட் ஸிபில்'' என்றார் கலோனல் டெஸ்பேர்ட். ''இன்னிக்கு மத்தியானம் டீ வேளைக்கு நாங்க தெரஸாவைப் பார்க்கப் போறோம்... அது ஒரு இன்ட்ரஸ்டிங் பழைய மாளிகை.''

''அந்த வெளிறிய குதிரை? யெஸ். அதை ஒரு வாடகை விடுதியா விட்டிருக்கணும்னு நான் நினைப்பதுண்டு. அந்த இடத்துக்கு, மர்மங்கள் பல நிறைந்த நயவஞ்சகமான வரலாறு ஒண்ணு இருக்குமோனு நான் அடிக்கடி நினைப்பதுண்டு. நிச்சயமா கள்ளக் கடத்தல் போல நினைக்க வேண்டாம்... இதுக்குத் தோதான கடலுக்குப் பக்கத்துல நாம இல்லே. நெடுஞ்சாலைப் பிரயாணிகளுக்கான தங்குமிடமா இருந்திருக்கலாம், என்ன சொல்றீங்க? அல்லது பணக்கார டிராவலர்கள் ராப் பொழுதை அங்கே கழிக்க! இந்த மூணு பேருக்கும் எப்படி அது ஓர் உகந்த இருப்பிடமா மாறிச்சு என்பது ஒரு விளக்க முடியாத புதிர், எனக்கு.''

''ஒவ்வொண்ணும் ஒருவகை'' என்று சற்று கத்தலாகவே சொன்னாள் ரூடா. ''ஸிபில்... அவளும், அவ புடவையும், போட்டுக்கிட்டிருந்த பாசி மணி ஊசிகளும், பார்க்கும் எல்லா தலைகளுக்கும் பின்னாடி ஒளி வட்டம் தெரியுதுனு அவ புலம்புவதும் - சரியான கேலிக் கூத்து அவ. ஆனா நெஞ்சு வரை உலுக்கும் ஏதோ ஒரு சக்தி தெரஸா கிட்டேயிருக்கு, ஒத்துக்கி றீங்களா? நீங்க என்னத்தை நினைச்சுக்கிட்டிருக்கீங்களோ அது அப்படியே அவளுக்கும் தெரிஞ்சிருக்கு என்பதை உங்களால உணராம இருக்க முடியாது. மூன்றாவது கண் பற்றியெல்லாம் அவங்க பேசுவது கிடையாது. ஆனா அப்படிப்பட்ட ஆன்மீக கண் அவளுக்கு இருக்குனுதான் ஊரே பேசிக்குது.''

''வயசானவளாத் தெரிஞ்சாலும், இந்த பெல்லா, ரெண்டு புருஷனுங்களைக் கொன்னிருக்கான்னுல்லே பேசிக்கிறாங்க'' என கூட்டினார் கலோனல்.

இதற்கு வெனபிள்ளிடமிருந்து ஒரு சிரிப்பு வந்தது. கலோனல் டெஸ்பேர்ட் தொடர்ந்தார். ''அவனுங்க ரெண்டு பேரும் அவளுடைய திருப்திக்கு எதிரா நடந்துக்கிட்டதாகவும், ஆகவே தன்னுடைய சக்தியை அவ அந்த ஆளுங்க மேலே காட்டினதாகவும், கொஞ்சங் கொஞ்சமாக நோய்வாய்ப்பட்டு நொடிச்சுப் போய் இளைச்சு தெம்மாத்துண்டா ஆகி அவனுங்க செத்ததாகவும் பேசிக்கிறாங்க.''

''ஓஓஓ... நான் மறந்துட்டேன். அவ ஒரு சூனியக்காரி இல்லே?''

''அப்படித்தான் மிஸஸ் டேனே கேல்த்ராப் சொல்றாங்க.''

''சூனியம் என்பது ஒரு சுவையான சப்ஜெக்ட்'' என சிந்தனையாய் சொன்னார் வெனபிள். ''உலகம் முழுக்க அந்த துறையில வேறுபாடுகள் இருக்கு. கேள்விப்படறோம். நான் கிழக்கு ஆப்பிரிக்காவில இருந்தபோது நடந்தது ஞாபகமிருக்கு...''

அது பற்றி வெகு சுலபமாகவும் ஜனரஞ்சகமாகவும் பேசினார் அவர். ஆப்பிரிக்காவின் 'மருந்து' வைப்பவர்கள்பற்றி பேசினார் அவர்; போர்னியாவின் பில்லி கற்றவர்கள் பற்றி விளக்கினார். லஞ்சுக்குப் பிறகு சில தென் ஆப்பிரிக்க சூனியர்களின் முகமூடிகளைக் காட்டுவதாய் நம்பிக்கை தந்தார்.

''இந்த வீட்டுல எல்லாமும் இருக்கு'' என்று சிரித்தபடி அறிவித்தாள் ரூடா.

''ஓ, யெஸ்'' என தன் தோள்களைக் குலுக்கிக் காட்டினார் வெனபிள். ''எல்லாத்துக்கும் நெருக்கமா உங்களால போக முடியலேனா, எல்லாத்தையும் நீங்க நெருக்கமா கொண்டு வந்துக்கணும்!'' என்றார்.

அக்கணத்தில் மட்டும் அவருடைய குரலில் கசப்பு வந்து ஒட்டிக் கொண்டது. வாதம் கண்டுத் தொங்கிப் போயிருந்த அவருடைய கால்களை விரைவாய் ஒரு நோட்டம் விட்டுக் கொண்டார் அவர்.

''உலகம் ஏகப்பட்ட சங்கதிகளால் நிரம்பி வழிந்துக் கொண்டி ருக்கின்றது'' என்று பொன்மொழி சொன்னார். ''என் வாழ்க்கையில பல விஷயங்களைப் பார்த்துடணும்னு நான் துணிஞ்சிருக்கேன். ஓ வெல்... அதையெல்லாம் நான் நினைச்சபடி நல்லாவே முடிச்சிருக்கேன்னுதான் சொல்வேன். இப்ப கூட ஒண்ணும் முழுகிப் போயிடலே... இப்பவும் என்னால முடியும், யெஸ்.''

மிஸஸ் ஓலிவர் திடுமென்று கேட்டார்: ''அப்ப எதுக்கு இங்கே?''

சுற்றுவட்டாரக் காற்றில் ஒரு சோகம் அப்பிக் கொண்டால் ஏற்படும் இருப்பின்மை ஏனைய அனைவரிடமும் உண்டாகியிருக்க, மிஸஸ் ஓலிவர் மட்டும் இதனால் தாக்கப்படாதவராய் தோன்றினாள். அவளுக்குத் தெரிய வேண்டும் என்ற காரணத்துக்காக மேற்சொன்ன கேள்வியைக் கேட்டாள். அவளுடைய இந்த வெளிப்படையான ஆர்வம் அந்த அறையில் ஒரு மிருதுத்தன்மையை மீண்டும் உருவாக்கித் தந்தது.

வெனபிள் அவளை விசாரிக்கும் தொனியில் ஊடுருவினார்.

''இப்படிப்பட்ட ஒரு பிரதேசத்தைத் தேர்ந்தெடுத்து எதுக்குநீங்க இங்கே வந்து குடியிருக்கீங்கனு கேட்க வந்தேன்...'' என்றாள் மிஸஸ் ஓலிவர். ''எல்லா விஷயங்களிலிருந்தும் ரொம்பத் தள்ளி ஒதுங்கியிருக்கும் இடமல்லவா இது? இங்கே உங்க நண்பர்கள் அதிகம் இருக்காங்கனு வந்திருக்கீங்கனு எடுத்துக்கலாமா?''

''நோ... ரொம்ப ஆர்வமா கேட்கறீங்களேனு சொல்றேன். உலகத்திலேயே இப்படி ஒரு பொட்டைப் பயக்காடை, இங்கே என் நண்பர்கள் ஒருத்தரும் கிடையாது என்ற காரணத்துக்காக நான் தேர்ந்தெடுத்தேன்.''

ஒரு பட்டும் படாத விரக்திச் சிரிப்பு அவருடைய உதடுகளைக் கடந்துப் போனது.

எத்தனை ஆழமாய் அவருடைய இயலாமை அவரை வதைத்திருக்கும் என எண்ணிப் பார்த்தேன் நான். உலகை அவர் விருப்பப்படி சுற்றி வரும் இலக்கினை மீள முடியாமல் இயற்கை அறுத்து விட்ட சங்கதி, அவரது ஆன்மா வரை ஊடுருவித் துளைத்தெடுக்கின்றதோ? அல்லது சூழ்நிலைக்கேற்ப தன்னை வளைத்துப் பொருத்திக் கொள்ளும் மனத் தளர்வற்ற மகத்துவம் அவருடைய மனதுக்கு வந்து விட்டதோ?

ஏதோ என் எண்ணங்களை வெனபிள் படித்து விட்டதைப் போல் பேசினார்: ''உங்களுடைய கட்டுரையில் மகத்துவம் அப்படினா என்ன அர்த்தம்னு கேட்டிருந்தீங்க. இவ்வார்த்தையுடன் தொடர்புடைய பல அர்த்தங்களை நீங்க அலசியிருந்தீங்க. ஆனா ஒரு சந்தேகம்... நாமெல்லாம் இங்கே இங்கிலாந்துல மகத்துவம் அப்படினா என்னனு பொருள் வெச்சிருக்கோமா?''

'''புத்திசாலித்தனம் நிறைந்திருப்பதை மகத்துவம் அப்படினு சொல்றோம்'' என்றேன் நான். ''கூடவே நல்ல தர்ம சிந்தனையும் இருக்கணும். அப்ப க்ரேட் மேன் அப்படினு சொல்றோம். மகத்துவமான மனிதர்.''

அவர் என்னைப் பார்த்தார். அவரது கண்கள் பளபளப்பாய் பிரகாசித்தன. ''அப்படினா கொடூர குணம் அதிகம் கொண்ட ஒருத்தனை நாம மகத்துவமானவன்னு சொல்ல முடியாதா?''

''அஃப்கோர்ஸ், ஏன் முடியாம?'' என்று ஆமோதித்தபடி இடை புகுந்தாள் ரூடா. ''நெப்போலியன், ஹிட்லர் அப்புறம் ஆஹ்... நிறைய பேர். இவங்க எல்லாருமே மகத்துவமான மனுஷங்கதான்.''

''அவங்க உருவாக்கிய விளைவுகளுக்காகவா?'' என கேட்டார் கலோனல் டெஸ்பேர்ட். '' ஆனா இவனுங்களையெல்லாம் தனிப்பட்ட மனுஷனா நாம சந்திச்சுத் தெரிஞ்சு வெச்சிருந்தால் இப்படி மகத்துவ மானவன்னு நாம பட்டம் கட்டி பெருமைப்படுத்துவோமா என்பது சந்தேகம்தான்.''

முன் வளைந்து வந்த ஜிஞ்ஜர் அவளுடைய கலைந்திருந்த கேசத்தை விரல்களால் சுற்றியபடி, ''இது ஒரு பிரமாதமான சிந்தனை'' என்றாள்.

தற்சமயம் வெனபிள் பேசினார். ''கொடூர குணம் கொண்ட கெட்டவனுங்க... அதாவது மனசால கேடு நினைப்பவனுங்க, மத்த குடிகளை மந்திரத்தனத்தால் அழிப்பவனுங்க, இவனுங்கள்லாம் சுத்த பேத்தல்னு சொல்லும் நவீன சிந்தனைக்காரங்க கூட என்னால ஒத்துப் போக முடியலே. இப்படிப்பட்டவங்க இருக்காங்க. இப்படிப்பட்ட கெட்ட சக்திகளும் இருக்கு. துர்தேவதைகள் என்பார்கள். இவையும் சக்தி வாய்ந்தவையே. சில சமயங்கள்ல நல்ல சக்திகளைக் காட்டிலும் வலு மிகுந்தவை. இவை இருக்கு. இவற்றை அடையாளம் காணனும்... போரிடணும், இல்லேனா...'' சொல்லிவிட்டு இயலாது என்பது போல காற்றில் கைகளை விரித்து விட்டு சொன்னார்: ''நாம இருளுக்குப் போக வேண்டியதுதான்.''

''அஃப்கோர்ஸ்... என் கதையில எப்பவுமே ஒரு மாஸ்டர் கிரிமினல் உண்டு'' என்றார் மிஸஸ் ஓலிவர். ''மக்களுக்கு அதுதான் பிடிக்குது. ஆனா அவனை சாமானியத்துக்கு வெளியே தெரிஞ்சுடாதபடி மறைச்சு வெச்சு கதையை வளர்ப்பது வர வர ரொம்ப சிரமமாயிருக்கு. அவன் யார்னு கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு நான் பொத்திப் பொத்தி வைக்கும்போது, அவனை நான் முக்கிய ஒருத்தனா கதையில செருகி வெச்சிருக்க முடியும். ஆனா யாரவன்னு தெரிஞ்சுட்டா, ம்ம், அவன் ஏனோ பத்தோட பதினொண்ணா ஆகிடறான். இப்படி மெனக்கெடுவதை விட, பாங்க் பணத்தைக் கையாடிட்ட மானேஜரை மையமா வெச்சோ, இல்லேனா வேலைக்காரியைக் கட்டிக்க மனைவியைப் போட்டுத் தள்ளும் கணவனை கருவா வெச்சோ கதை அமைப்பது படு சுலபம். இது தினசரி செய்தியா பேப்பர்ல விடாம வந்துக்கிட்டே இருப்பதால், ரொம்ப இயற்கையான ஒண்ணா அமைஞ்சிடும்.''

அனைவரும் இப்போது சிரித்துவிட, ''சொல்ல வந்ததை விளக்கமா புரியும்படி சொல்லலேனு நினைக்கிறேன்'' என மன்னிப்புக் கோரும் தினுசில் சொன்ன எழுத்தாளர், ''ஆனா நான் என்ன சொல்ல வந்தேன்னு உங்க எல்லாருக்கும் தெரிஞ்சிருக்கும்னு நினைக்கிறேன்'' என்றார்.

அவர் என்ன சொல்ல வந்தார் என்பது எங்கள் எல்லோருக்கும் நன்றாக தெரிகின்றது என நாங்கள் அனைவரும் சொன்னோம்.

அத்தியாயம் 6

மார்க் ஈஸ்ட்டர்– ப்ரூக் பதிந்தவை

ப்ரியர்ஸ் கோர்ட்டை விட்டு நாங்கள் கிளம்பியபோது மணி நான்கை ஒட்டியிருந்திருக்க வேண்டும். குறிப்பிட்டு சொல்லும்படியாய் அமைந்த லஞ்ச் முடித்த பிறகு வீட்டை ஒரு சுற்று சுற்றிக் காட்ட எங்களை அழைத்துப் போயிருந்தார் வெனபிள். அற்புதமாய் திரட்டி சேமிக்கப்பட்ட பொக்கிஷங்கள் பல இருந்தன அவரிடம்... அவை அவரிடம் இருக்கின்றன என்று எங்களுக்குக் காட்டுவதில் அத்தனை பரவசம் கொண்டார் வெனபிள்.

இறுதியாய் நாங்கள் கிளம்பியதும், ''பணத்துலேயே மனுஷன் புரண்டுக்கிட்டிருக்கணும் போல'' என்று ஆலோசித்தேன் நான். ''அந்த முத்துகள், பவளங்கள், ஆப்பிரிக்க நாட்டு சிற்பங்கள், ஓஹ்... என்ன வெரைட்டி... அனைத்தும் பணம் பிடுங்கும் வெரைட்டி! இப்படி ஒரு பணக்கார ஆசாமி இங்கே அமைஞ்சிருப்பது உங்க அதிர்ஷ்டம்.''

''எங்களுக்கு அது தெரியாதா?'' என்றாள் ரூடா. ''இங்கிருக்கும் மக்களில் ஏறத்தாழ எல்லாருமே ரொம்ப நல்லவங்கதான் - ஆனா உம்மணா மூஞ்சிங்க. பட், வெனபிள்... இவர் மட்டும் உற்சாகம் பொங்கி வழிபவர்.''

''இத்தனை பணம் எப்படி சேர்ந்திருப்பார்?'' என்று கேட்டாள் மிஸஸ் ஓலிவர். ''இல்லேனா வழி வழியா சொத்து வந்துக்கிட்டே இருந்திருக்குமோ?''

டெஸ்பேர்ட் வாயைக் கோணிக் காட்டி இக்காலத்தில் பரம்பரை சொத்தாய் ஏகமாய் பணம் வைத்திருப்போரையெல்லாம் பார்க்கவே முடியாது என்றார். மரணச் செலவு, வரி இத்யாதிகளுக்கே பாதி சென்று விடும் என்றார். மேலும் ''பாத்திரங்களை ஏத்தி இறக்கும் வேலையைத்தான்

இவர் ஆரம்பத்துல பண்ணிக்கிட்டிருந்ததா யாரோ என்கிட்டே சொல்லி ஞாபகம்'' என்றார். ''ஆனா பார்த்தால் அப்படியா தெரியுது? அவருடைய குழந்தைப் பருவம் எப்படியிருந்தது... பெத்தவங்க யார்? மூச். இதைப் பற்றியெல்லாம் பேசவே மாட்டார்.'' சொன்ன அவர் மிஸஸ் ஓலிவர் பக்கமாய் திரும்பி ''உங்களுக்குத் தேவைப்படும் மர்ம மனிதன்'' என்றார்.

மிஸஸ் ஓலிவர், அவருக்கு எது தேவையில்லையோ அதையே ரசிகர்கள் தருகின்றார்கள் என்று சொல்லிக் கொண்டிருக்க...

வெளிறிய குதிரை, பாதி மரத்தாலேயே ஆக்கப்பட்டிருந்த ஒரு வீடு தென்பட்டது. கிராமத்து சாலையிலிருந்து சற்று தள்ளி உள்ளே அமைக்கப் பட்டிருந்தது அவ்வீடு. வீட்டுக்குப் பின்னால் அழகான நோட்டம் ஒன்று தென்பட்டு வீட்டுக்கே பழைய காலத்து தோரணையை வகுத்துத் தந்தது.

''அப்படி ஒண்ணும் பயமுறுத்துகிற மாதிரி படலே'' என்றேன் நான். ''அதன் அமைப்பை வெச்சு சொல்றேன்.''

''நாம உள்ளே நுழையற வரைக்கும் காத்திருங்க'' என்றாள் ஜிஞ்ஜர்.

காரிலிருந்து நாங்கள் அனைவரும் இறங்கி முன் கதவு வரைக்கும் செல்ல, கதவை நாங்கள் நெருங்கையிலே அது திறக்கப்பட்டது.

நல்ல நெட்டையாகவும் கட்டுமஸ்தாகவும், முத்துமணிமாலை அலங்காரத்தில் ஆன உடை உடுத்தியிருந்த மிஸ் தெரஸா அங்கு நுழைவாயிலேயே வந்து நின்றார். பெரிதாய் உயர்ந்திருந்த அவருடைய நெற்றியில் சொறசொறப்பான நரைத்த முடி வளைந்து வளைந்து தொங்கிக் கொண்டிருந்தது. அகலமும் நீளமும் கொண்ட பிரதான மூக்கு. விடாது உள் வரை துளைத்துப் போய் ஓயும் ஈட்டிக் கண்கள்.

கனமாயிருந்த குரலில் ''ஒரு வழியா எல்லாரும் இங்கே வந்து சேர்ந்துட்டீங்களா?'' என்றார் மனமொப்பி. ''லேட்டானதும் நீங்க எல்லாம் வராம போயிட்டீங்களோனு நினைச்சேன்.''

அவரது மணிகளாலான உடையலங்காரத்துக்குப் பின்னாலிருந்து, இருண்டு காணப்பட்ட அறையின் பின்னணியில் ஒரு முகம் எழுந்து துருத்திக் கொண்டு நிற்பது எனக்குப் புலப்பட ஆரம்பித்தது. விளக்க முடியாத, உருவமற்ற முகமாய் அது இருந்தது. இதை எப்படி புரிய வைப்பது? ஆங்.. குயவன் வேலை பார்க்கும் இடத்தில் பானை பிடிக்கும் பழக்கமற்ற ஒரு குழந்தையின் கையில் சிக்கிய களிமண்ணில் பண்ணிய முகம் போல அது இருந்தது. இத்தாலிய அல்லது பிரெஞ்சு நாட்டு சிறப்பான ஓவியங்களில், கும்பலின் நடுவிலிருப்பதாய் காட்டப்படும்

பற்பல விவரங்களற்ற முகங்களில் ஒன்று போல் அது இருந்தது என்றும் சொல்லலாம்.

எங்களை அறிமுகப்படுத்தி விட்டு வெனபிள் வீட்டில் நாங்கள் லஞ்ச் எடுத்துக் கொண்டு வந்துள்ளதாய் விளக்கினாள் ரூடா.

''ஆஹ்!'' என்றார் தெரஸா க்ரே. ''இந்த அறிமுகம் போதுமே - அங்கே நடந்த எல்லாத்தையும் விளக்கிடும்! பானைகள், ஓவியங்கள், பவளங்கள், நகைகள்! பாவப்பட்டவன்...! அவனை சந்தோஷமா அவனே வெச்சுக்க எதையாவது பண்ணிக்கிட்டே இருக்க வேண்டியிருக்கு. போகட்டும், வாங்க உள்ளே வாங்க. சின்ன இடமா இருந்தாலும் எங்களுடைய இந்த இடம்தான் எங்களது பெருமையே. பதினைந்தாம் நூற்றாண்டின் இடம். இதுல சிலது பதினான்காம் நூற்றாண்டுடையவை.''

முன்னறை தாழ்ந்தும் இருண்டுமிருக்க, அதிலிருந்து படிக்கட்டுகள் சுழன்றுச் சுழன்று மேலே போயின. ஒரு பெரிய கனப்பிருந்தது. அதன் மேல் சட்டம் போடப்பட்ட ஒரு படம்.

அதை நான் நோட்டம் விடுவதைக் கவனித்த மிஸ் க்ரே ''பழைய ஓட்டலின் ஸிம்பள்'' என்றார். ''இருட்டா இருப்பதால் முழுமையா அதை நீங்க பார்க்க முடியாது. அது ஒரு *வெளிறிய குதிரை.* ''

''அதை நான் இப்ப சுத்தம் பண்ணித் தரப் போறேன்'' என்றாள் ஜிஞ்ஜர். ''நான் பண்ணத்தான் போறேன். முதல்ல அதை ஒட்டடை அடிக்க எனக்கு வழி விடுங்க. அது சுத்தமானதும் அதிசயிச்சுப் போகப் போறீங்க பாருங்க.''

''எனக்கென்னவோ சந்தேகமாத்தானிருக்கு... அப்படி ஒண்ணும் புதுசாயிடாது அது'' என்ற தெரஸா க்ரே, ஆழ்ந்து கேட்டார்: ''ஒருவேளை அதை நீ உடைச்சுட்டா?''

''சேச்சே, அப்படியா ஆகும்? உடைக்கல்லாம் மாட்டேன்'' என்று மேட்டுமையாய் பதிலளித்த ஜிஞ்ஜர், ''இப்ப அதுதான் என் வேலை'' என்றாள். அப்படியே என்னிடம், ''நான் லண்டன் ஓவியக் கண்காட்சி அரங்குலத்தான் வேலை பண்றேன்'' என்றாள். ''இதெல்லாம் எனக்கு தூசு.''

''ஒவ்வொரு தடவை நான் மார்டன் ஓவிய விற்பனைக் கூடங்களுக்குப் போகும்போதும் வியப்பதுண்டு'' என்ற தெரஸா, ''எல்லா படமும் என்னவோ அப்பத்தான் ஒரு புது டிடர்ஜெண்ட்ல முக்கி எடுக்கப்பட்டது போல அத்தனை பளபளனு இருக்கும்'' என்றார்.

''பின்னே? எல்லா மாடர்ன் ஓவியங்களும் ஒண்ணும் புரியாம இருட்டின் பின்னணியிலேயே இருக்கும்னா நீங்க நினைச்சுக்கிட்டுப் போவீங்க?'' என எதிர்ப்பாய் சொன்னாள் ஜிஞ்ஜர். பழைய ஓட்டலின் சின்னமாய் மேலே தொங்கிக் கொண்டிருந்த படத்தைத் துளைத்தாள் அவள். ''பாருங்க... எடுத்து சுத்தம் பண்ணப் பண்ண, அதுல மறைந்திருக்கிற பல தகவல்கள் வெளியே வரத்தான் போகுது. குதிரை மேல ஒரு குதிரையோட்டி கூட இருக்கலாம்...''

நானும் அவளுடன் இப்போது சேர்ந்துக் கொண்டு அந்த *வெளிறிய குதிரை* என அறிமுகப்படுத்தப்பட்ட ஓவியத்தை முறைத்துப் பார்ப்பதில் இறங்கினேன். அது அவசரத்தில் அள்ளித் தெளிக்கப்பட்ட ஓர் அவசரக் கோலம். அதில் பாராட்டும்படியான அம்சங்களாய் எதுவுமில்லே... அதன் பழமையும் தூசும் தவிர.

இப்போது ''பார் ஸிபில்'' என்றலறினார் தெரஸா. ''வந்திருப்பவங்க நம்ம குதிரையை அபகரிக்கிறாங்க... அதுல என்ன இருக்குனு பார்த்துடணுமாம்...''

அங்கிருந்த ஒரு கதவினைத் திறந்துக் கொண்டு எங்களோடு இணைத்துக் கொள்ள வந்தாள், மிஸ் ஸிபில் ஸ்டாம்ஃபோர்டீஸ். நல்ல நெட்டையான சூழ்ச்சி தெறிக்கும் பெண்ணாயிருந்தாள் அவள்.. கருமையாய், எண்ணெய் தூக்கலாயிருந்த கேசம். ஏளனமாய் பரிகாசம் பண்ணும் முகம். மீன் போன்ற சலனமாகும் வாய்.

அவள் பளீரென்று அறையும் பொன்னிற பட்டு சேலை அணிந்திருந்தாலும் அது ஒன்றும் அவளுடைய தோற்றத்தைப் பொலிவாக்கிக் காட்டவில்லை. அவளுடைய குரல் மெலிதானதாகவும் 'பாவங்கள'ற்றுமிருந்தது.

''நம்மளோட டியர் டியர் குதிரை'' என்றாள் அவள். ''அதை நாம எப்படிப் பார்த்தோமோ அப்போதிலிருந்து அந்த குதிரை சின்னத்து மேல நாம பைத்தியமாகிட்டோம். இதுதான் நம்மை இந்த வீட்டை வாங்கி விடும்படி உந்தித் தள்ளிச்சோனு கூட நான் நினைப்பதுண்டு. உனக்கு அப்படித் தோணலியா, தெரஸா? இதிருக்கட்டும்... முதல்ல, எல்லாம் வாங்க, நல்வரவு.''

அவள் எங்களை வழிநடத்தி அழைத்துப் போன அறை சின்னதாகவும் சதுரமானதாகவும் இருந்தது. அக்காலத்தில் *பாராக* இருந்திருக்கக் கூடும். பல வண்ணங்களில் தீட்டப்பட்ட காட்டன் துணிகளாலும், சின்னதாயிருந்த

அலங்கார நாற்காலிகளாலும் வடிவாகியிருந்த இந்த அறையைப் பார்த்ததும் இது நிச்சயம் ஒரு பெண்ணின் அறையாகத்தானிருக்க வேண்டும் என்றே எண்ண வைத்தது. நாட்டுப்புற வடிவமைப்பு. சின்னத் தட்டுக்களும் கிண்ணங்களும் இருந்தன.

பிறகு நாங்கள் அழைத்துப் போய்க் காட்டப்பட்ட தோட்டம், கோடை காலத்தில் கண்கவரும் ஒன்றாய் இருக்கும் என்று என்னை எண்ண வைத்தது. பிறகு வீட்டுக்குள் நுழைந்தபோது டீ தயாராய் வைக்கப் பட்டிருந்தது. சில நொறுக்குத் தீனிகளும், வீட்டிலேயே தயாரிக்கப்பட்ட கேக்குகளுமிருக்க, ஹாலில் கணப் பொழுது நான் கண்டிருந்த அந்த முதியப் பெண் வெள்ளி டீ கெட்டிலைத் தூக்கிக் கொண்டு உள்ளே வந்தாள். உடல் முழுக்க மறைக்கும்படியான ஒரு பச்சைத் துணியை அவள் கட்டிக் கொண்டிருந்தாள். எவ்வகையான முக்கியத்துவமும் அற்ற ஒரு முகமாகவே அவளுடைய முகம் தென்பட்டாலும் ஏன் அம்முகம் ஒரு வஞ்சக முகமாய் என்னுள் பதிவானது என்று எனக்கு விளங்கவில்லை.

திடீரென்று எனக்கு என் மேலேயே கோபம் வந்தது. 'இப்படி மாற்றப்பட்டுள்ள விடுதியும் மூன்று முகம் தெரியா பெண்களுமா எனக்குள் ஒருவித ஐயப் பார்வையை உண்டு பண்ணுவது!'

''தேங்க் யூ பெல்லா'' என்றார் தெரஸா.

''உங்களுக்குத் தேவையான எல்லாமும் வந்துடுச்சா?''

''யெஸ், தேங்க்ஸ்.''

பெல்லா கதவு நோக்கி நகர்ந்துப் போகத் துவங்கினாள். அவள் வேறு ஒருவரையும் பார்க்கவில்லை. ஆனால் அறையை விட்டு முழுவதுமாய் அவள் மறைவதற்கு ஓரடி முன்னால், அவளுடைய கண்களைத் தூக்கி என்னை விரைவாய் ஒரு நோட்டம் விட்டுக் கொண்டாள். அப்பார்வையில் என்னவோ இருந்தது. என்னைத் துணுக்குற வைக்கும் அளவுக்கு. அதில் எரிச்சலிருந்தது. வன்மம் தெறித்தது. விளக்கத் தெரியவில்லை... அதில் நெருக்கமான ஒரு புரிதல் இருந்தது. எவ்வித மெனக்கெடலும் என் பக்கத்திலிருந்து தேவைப்படாமலேயே, நான் என் மனத்தில் என்ன எண்ணங்களை ஓட்டிக் கொண்டிருந்தேன் என்பதை அவள் முழுக்கவும் படித்து விட்டாள் என்றொரு தீர்மானம் எனக்குள் விளைந்தது.

என்னுள் உருவான இந்த முடிவினை தெரஸா கவனித்து விட்டார்.

''பெல்லா குழப்பறா, இல்லையா மிஸ்டர் ஈஸ்ட்டர் - ப்ரூக்?'' என்றார் அவர் மிருதுவாய். ''உங்களை அவ கவனிச்சதை நான் பார்த்துட்டேன்.''

வெறுமனே தெரிந்துக் கொள்ள இருக்கும் ஆர்வத்தால் கேட்பது போல காட்டிக் கொள்ள மிகவும் முயற்சித்தபடி கேட்டேன்: ''அவங்க, இங்கேயிருக்கும் லோக்கல் ஆளுதான், இல்லையா?''

''யெஸ். மேற்கொண்டு, அவள் ஒரு லோக்கல் சூனியக்காரினும் உங்ககிட்டே தகவல் தந்திருப்பாங்க... என்ன?''

ஸிபில் அவள் அணிந்திருந்த முத்துக்களை ஓசை வரும்படி இழுத்து விட்டுக் கொண்டாள். ''இப்ப ஒத்துக்குங்க, மிஸ்டர் - மிஸ்டர்–''

''ஈஸ்ட்டர் - ப்ரூக்.''

''ஆங், ஈஸ்ட்டர் - ப்ரூக். நாங்க அனைவருமே சூனிய வேலைகளை இங்கே பண்ணிக்கிட்டிருக்கோம்னு நீங்க நிச்சயமா கேள்விப்பட்டி ருக்கணும். இங்கே, இந்த வகையில எங்களுக்கு பிரபலமா பேர் இருக்கு, தெரியுமா..?''

''அந்தப் பேர் ஒண்ணும் திறமையில்லாதவங்களுக்குத் தரப்படலே'' என்றார் தெரஸா. ஆச்சரியப்பட்டுப் போனவராய் தோன்றினார் அவர். ''இங்கேயிருக்கும் ஸிபிலுக்கு பெரும் வரங்கள் இருக்கு –''

ஸிபில் சந்தோஷப் பெருமூச்செறிந்தாள்.

''ரகசியம்னு ஏதாவது சொல்லப்பட்டால் அதனால் நான் எப்போதுமே ஈர்க்கப்பட்டுடுவேன்'' என முணுமுணுப்பாய் ஆரம்பித்தாள். ''சின்னப் பொழுதுலேயே வாடிக்கையா மத்த எவருக்குமே அமையாத சக்திகள் எனக்கு இருப்பதை நான் கவனிச்சுட்டேன். தானா எழுதும் மந்திரக் கலை எனக்கு தன்னிச்சையா வந்தது. இக்கலை என்னனு கூட எனக்குத் தெரியாது! ஒரு பென்சிலைக் கையில் வெச்சுக்கிட்டு உட்கார்ந்துருப்பேன்... அப்புறம் என்ன நடக்குதுனு எதுவும் தெரியாத ஒரு பின்னணியில்! யெஸ். வேற்று சக்திகளின் உறைவிடமா நானிருந்தேன். ஒரு தடவை ஃபிரண்ட் வீட்டுல டீ குடிச்சிட்டிருந்தபோது நான் மயங்கி விழுந்துட்டேன். அந்த அறையில... அதே அறையில.. படு பயங்கரமான என்னவோ எப்பவோ நடந்திருக்கு. எனக்குத் தெரியும்! அது என்ன எனும் விளக்கம் எங்களுக்குப் பிறகு கெடச்சது. அதேதான் நான் தெரிஞ்சு வெச்சிருந்ததும். அதே அறையில ஒரு கொலை நடந்திருக்கு - இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னாடி. அதே அறையில்!''

தனக்குத்தானே ஆமோதிப்பாய் தலையசைத்துக் கொண்ட அவள் எங்களனைவரையும் ஒருமுறை திருப்திகரமாய் பார்த்துக் கொண்டாள்.

''குறிப்பிடும்படியான அனுபவம்'' என்றார் கலோனல் டெஸ்பேர்ட், பேசும் விவாதத்தில் துளியும் தனக்கு இன்ட்ரஸ்ட் கிடையாது எனும் கிண்டல் வலிக்காமல் தொனிக்க.

''மந்திர அனுபவங்கள் இந்த வீட்டுலயும் நடந்திருக்கு'' என்று இருளடைந்து சொன்னாள் ஸிபில். ''ஆனா நாங்க தேவையான அனைத்துப் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் எடுத்துட்டோம். பூமிக்குள்ளே இங்கே புதைந்திருந்த ஆவிகள், விடுவிக்கப்பட்டாச்சு.''

என்னை தற்சமயம் சந்தேகமாய் கவனித்தாள் ஸிபில்.

''எத்தனை அழகான கலர் புடவை நீங்க கட்டியிருக்கீங்க'' என்றாள் ரூடா.

உடனே பிரகாசமாகி விட்டாள் ஸிபில். ''யெஸ். இதை நான் இந்தியாவில் இருந்தபோது வாங்கினேன். அங்கே எனக்கு ருசிகரமான அனுபவம் அமைஞ்சது. யோகா பயின்றேன் தெரியுமா! இன்னும் பல... ஆனா அதெல்லாம் நமக்கேற்றாற்போல இஷ்டத்துக்கு வளைக்கப்பட்டு ரொம்ப வசதியாக்கப்பட்டு விட்டன என்ற உணர்வு என்னுள் விளைந்ததை என்னால மறுக்க முடியாது. அவற்றில் எதுவும் இயற்கையானதா, ஆதிமூலமானதா இல்லை. காலப் போக்குல நவீனமாக்கிட்டாங்க. நிச்சயமா பின்னோக்கிப் போகணும்னு நான் நினைக்கிறேன்... ஆரம்பத்துக்கே, ஆதிகாலத்து சக்திகளுக்கே. ஹைட்டி பகுதிக்குப் போய் வந்திருக்கும் ஒரு சில பெண்களில் நானும் ஒருத்தி. அங்கே, ஆதிகாலத்து, புராதன ஆரம்பக் காலத்து ரகசியங்களின் ஊற்றுகளை நீங்க அனுபவிக்கலாம். ஊழல்களாலும் சிலருடைய இடையூறுகளாலும் இங்கே கூட தொய்விருக்கு. ஆனா நாம பேசிக்கிட்டிருக்கும் சங்கதியின் ஆணி வேர் இங்கேதானிருககு.

''நான் பிறப்பதற்கு கொஞ்ச காலத்துக்கு முன்னாடி பிறந்த ரெட்டை சகோதரிகள் எனக்கிருக்குனு தெரிஞ்சதும், எனக்கு நிறைய காட்டினாங்க. ரெட்டைக் குழந்தைகளுக்குப் பிறகு பிறக்கும் குழந்தைக்கு ஸ்பெஷல் சக்திகள் இருக்குமாம்... அவங்கதான் சொன்னாங்க. சூப்பர் இல்லே? அவங்க ஆடும் ஸ்மஸான நடனம் அதியற்புதமா இருக்கும். மரணம் சம்பந்தப்பட்ட அனைத்து ஆயுதங்களையும் தாங்கிக்கிட்டு, மண்டை ஓடுகள் எலும்புகளைத் தரிச்சுக்கிட்டு, புதைகுழி வெட்டுபவனின் உபகரணங்களை ஏந்திக்கிட்டு, கசாப்புக் கத்தி, கோடாரி, இத்யாதி, இத்யாதி...கறுப்பு உடை, தொங்கிய நாக்கு...''

பிறகு ''இப்ப இதைப் பாருங்க...'' என்று சொல்லியபடி ஜன்னலின் மரச் சட்டத்தில் வைக்கப்பட்டிருந்த ஒரு பொருளை எடுத்து வந்தாள். ''பாம்பின் முதுகெலும்பு.''

நாங்கள் ஓசையெழுப்பாது பார்த்தோம். ஆனால் எவ்வித ஈடுபாடுமின்றி.

பயங்கரமான அந்தப் பொருளை வாஞ்சையாய் தடவிக் கொடுத்தாள் ஸிபில்.

கருணை தொனிக்க ''வெரி இன்ட்ரஸ்டிங்'' என்றது, டெஸ்பேர்ட்.

''இன்னும் நிறைய என்னால உங்களுக்குச் சொல்ல முடியும்.''

இக்கட்டத்தில் என்னுடைய கவனம் அலைந்தது. மாந்திரீயம், மாயாஜால வித்தை, ஏவல் இவை பற்றியெல்லாம் ஸிபில் காற்றில் பந்தல் போட்டபடி சொல்லும்போது என் உதடுகள் வரை வார்த்தைகள் பனிமூட்டமாய் வந்தன... தலையை ஓர் உலுக்கு உலுக்கிக் கொண்டு நான் வேறு திசையில் பார்வையைப் போட்டபோது, அங்கு மிஸ் தெரஸ்ா என்னை ஒரு புதிராய் பார்த்துக் கொண்டிருப்பது தென்பட்டது.

''அவ பேசறதுல ஒரு துளியும் நம்பலைனு தெரியுது'' என்று முணுமுணுப்பாய் சொன்னார். ''ஆனா நீங்க இப்படி நினைப்பது தப்பு தெரியுமா! இதுபோன்ற எல்லாத்தையும் நீங்க மூட நம்பிக்கைனு சொல்லி ஒதுக்கிட முடியாது. அல்லது பயத்தின் வெளிப்பாடுனோ, மதம் சார்ந்த பித்துனோ சொல்லி பரண் ஏத்திட முடியாது. அடிப்படை உண்மைகளும் அடிப்படை சக்திகளும் இருக்கு. இவை எப்பவும் இருந்திருக்கு, இவை எப்பவும் இருக்கும்.''

''இதை நான் விவாதிக்க விரும்பலேனு நினைக்கிறேன்'' என்று சொல்லி விட்டேன் நான்.

''புத்திசாலி. ம்.. சரி, வந்து என் புத்தக அறையைக் கொஞ்சம் பாருங்க.''

நான் அவரோடு கிளம்பி ஜன்னல் கம்பிகளற்று திறந்திருந்த பிரெஞ்சு ஜன்னல் வழியே வெளியேறி வீட்டைச் சுற்றி நடந்துப்போனேன்.

''பழைய லாயத்தை இப்படி மாத்திக்கிட்டிருக்கோம்'' என்றார்.

லாயங்களும் ஒதுக்குப்புற அறைகளும் ஒன்றாக ஆக்கப்பட்டு ஒரு பெரிய அறையாய் மாறியிருந்தன. ஒரு சுவர் முழுமைக்கும் புத்தகங்கள் அடுக்கப்பட்டிருந்தன. அவற்றின் அருகே போயிருந்த நான் தற்சமயம் ஆச்சரியத்தில் பேசிக் கொண்டிருந்தேன். ''கிடைக்கவே கிடைக்காத சில

அரிய பொக்கிஷங்களை நீங்க இங்கே வெச்சிருக்கீங்க, மிஸ் க்ரே. இதென்ன ஒரிஜினல் பதிப்பா? மை காட்... புதையல்கள் மிஸ் க்ரே இதெல்லாம்...''

''என்கிட்டே இருக்கு, *புதையல்கள்*, இல்லையா?''

''இந்தப் புத்தகம் - ஓஹ்.... சத்தியமா கிடைக்கவே கிடைக்காத ஒரு புத்தகம்.'' தொகுதி மாற்றி தொகுதியாய் அங்கிருந்த புத்தகங்களை நான் உருவிக் கொண்டிருந்தேன். தெரஸா என்னைக் கவனித்துக் கொண்டிருந்தார் - அவரைப் பற்றிய ஓர் அமைதியான திருப்தி அவரிடமிருந்து வீசியது. அது எதனால் என்று என்னால் புரிந்துக் கொள்ள முடியவில்லை.

எடுத்திருந்த புத்தகத் தொகுதிகளை நான் மீண்டும் அவற்றின் இடங்களில் வைத்தபோது தெரஸா சொன்னார்: ''ஒருத்தர் கிட்டே இருக்கும் பொக்கிஷம் போன்ற சேகரிப்புகளைப் பாராட்டும் ஒரு நபரை சந்திப்பது மிகவும் சந்தோஷமான ஒன்று. வரும் அத்தனை பேரும் இங்கே ஒண்ணு கொட்டாவி விடுவாங்க... இல்லை தூங்க ஆரம்பிச்சுடுவாங்க.''

''அப்படினா'' என்று அங்கிருந்த அனைத்து புத்தகங்களையும் பார்த்தபடி நான் சொன்னேன். ''உங்களுக்குத் தெரியாத வித்தைகளோ, சூனியவகைகளோ இருக்கவே இருக்காதுனுதான் சொல்வேன். ஆமாம்! எது உங்களுக்கு இதன் மீது இப்படியோர் ஆர்வத்தை உண்டு பண்ணிச்சு?''

''இப்ப இதுக்கு திடீர்னு பதில் சொல்வது கஷ்டம்... ரொம்ப காலமா நடந்துக்கிட்டிருக்கு இது. சும்மாதான் ஒரு விஷயத்தை ஒருத்தன் பார்க்கிறான். ஆனா அவனை அறியாமலேயே அவன் அத்துடன் கட்டப்பட்டு விடுகிறான். இது ஒரு மயங்க வெச்சு பரவசப்படுத்தும் போதை போன்ற படிப்பு. மக்கள் நம்புவது. மக்களாலேயே பண்ணப் படுவது!''

நான் சிரித்து விட்டேன். ''வித்தியாசமான விளக்கம். நீங்க படிக்கும் அத்தனையையும் நீங்க நம்புவது கிடையாது என்பது எனக்கு சந்தோஷத்தைத் தருது.''

''அந்த ஸிபிலை மனசுல வெச்சுக்கிட்டு என்னை நீங்க எடை போட்டுடக் கூடாது. ஓ யெஸ், நான் உங்களைக் கவனிச்சேன். நீங்கதான் பெரிய ஆளுனு நினைச்சுக்கிட்டிருப்பதைக் கவனிச்சேன். ஆனா உங்க நினைப்பு தப்பு.அவ ஒரு ஒப்பேறாத பொம்பளைதான். பல விதத்துல. ஆனா அவ, ஆவிகள், சாத்தான்கள், கறுப்பு மேஜிக் எனப்படும் பில்லி

சூனிய வகைகள், இதையெல்லாம் ஒண்ணா சேர்த்துக் கலக்கி ஒரு பிரமாதமான மேஜிக்கா பண்ணித் தரா. யெஸ், அவளுக்கு சக்தியிருக்கு.''

''சக்தி?''

''வேறெப்படி அதை கூப்பிடுவதுனு எனக்குத் தெரியலே. இந்த உலகத்துக்கும், அந்நியமாய் பல ரகசியங்கள் நிறைந்த மாய உலகுக்கும் பாலமாய் விளங்க சில மனிதர்கள் பிறக்கிறாங்க. ஸிபில் அப்படிப் பட்டவர்களில் ஒருத்தி. இப்படி பாலமைப்பவர்களை Mediumனு சொல்வதுண்டு. ஸிபில் ஒரு முதல் தர மீடியம். அவளுக்கு வாய்த்துள்ள இந்த வரம் ஒப்புயர்வற்றது. நானும் அவளும் பெல்லாவும் ஒண்ணு சேர்ந்தால்...''

''பெல்லா?''

''ஓ யெஸ், பெல்லாவுக்கு தனிப்பட்ட சக்திகள் இருக்கு. எங்க மூணு பேருக்கும் சக்திகள் இருக்கு... வெவ்வேறு கோணத்துல.''

இங்கு அவர் உடைந்தார்.

நான் ''பில்லி சூனியம் லிமிடெட்''என்றேன் புன்முறுவியபடி.

''அப்படியும் வெச்சுக்கலாம்.''

என் கையில் நான் சுமந்திருந்த புத்தகத்தைப் பார்த்தேன். ''எதிர் காலத்தைப் பற்றி முன்கூட்டியே சொல்லும் அருள்வாக்கு... இதெல்லாம் பற்றியதா?''

நான் மெல்லமாய் கேட்டேன்: ''நீங்க இதை *நம்பறீங்க*, ஆங்?''

''நான் *நம்பலே*. ஆனா எனக்கு அதெப்படினு *தெரியும்*.''

அவர் வெற்றிகரமாய் அறிவிக்க நான் அவரைக் கூர்ந்து பார்த்தேன்.

''ஆனா எப்படி? எந்த வழியில? என்ன காரணத்துக்காக?''

''வகை வகையா நீங்க கேட்கலாம்! எல்லாம் தேவையற்ற கேள்விகள்! கேலிக் கூத்தா தோன்றும் கேள்விகள்! த பாருங்க மிஸ்ட் மார்க்... இதெல்லாம் மூடநம்பிக்கைனு நினைப்பதையும், ஏதோ நீங்கதான் பெரிய ஆளு போன்ற நினைப்பையும் முதல்ல தூக்கிக் குப்பையிலே போடுங்க. நாம பேசும் விஷயத்தின் கரு- சத்தியம். நீங்கதான் அதுக்கு அலங்காரம் பண்ணிப் பேசறீங்களே தவிர, அது ஏற்கெனவே அலங்காரத்தோட ஜம்முனு தானிருக்கு - புது மனிதர்களைக் கவர. கவர்ந்து தன் பக்கம் இழுக்க.''

''நீங்க சொல்வதை என்னால் தொடர முடியலே.''

''மை டியர் மேன்... எதுக்காக மக்கள் காலகாலமா ஒரு சூனியக் காரனையும் ஒரு மாந்திரீகனையும் தேடிக்கிட்டு ஓடியோடி வராங்க? நிஜமா பார்க்கப் போனா இதுக்கு ரெண்டு காரணங்கதானிருக்கு. பில்லி வரை போய் முயற்சி பண்ணி உந்தித் தள்ளும்படி ரெண்டே ரெண்டு விஷயங்கள்தான் அவசர அவசரமா தேவைப்பட்டிருக்கு. ஒண்ணு, காதலெனும் போதை... அல்லது ஒரு கோப்பை விஷத்துக்கு...''

''ஆஹ்...''

''ரொம்ப ஸிம்பிளா இருக்கு, ஆங்? காதல் ஒண்ணு. மரணம் இன்னொண்ணு. காதல் பாதையில நீங்க விரும்பற ஆளைத் தக்க வெச்சுக்கணும். அந்தக் காதல் முறிஞ்சுடக்கூடாது எனும் ஆவேசம். பவுர்ணமி அன்னிக்கு ஒரு மாத்திரை சாப்பிட்டிடணும். சாத்தான் அல்லது ஆவியின் பெயரை உச்சாடணம் பண்ணனும். உருவத்தைத் தரையிலோ அல்லது சுவற்றிலோ வரையணும். இதெல்லாம் சும்மா...ஆனா உண்மை அந்த மருந்துல இருக்கு!''

''பிறகு, மரணம்?'' - நான் கேட்டேன்.

''மரணம்?'' என்று விட்டு என்னால் விளங்கிக் கொள்ள முடியாத சின்னச் சிரிப்பினை வெளியிட்டார் அவர். என்னை அது சற்றே அசௌகரியமாக்கியது. ''உங்களுக்கு மரணத்துல ஈடுபாடா இருக்கா?''

''அதைத் தெரிஞ்சுக்க யாருக்குத்தான் ஈடுபாடு இருக்காது?'' - சாதாரணமாய் குறிப்பிட்டேன் நான்.

''எனக்கு அப்படி தோணலே'' என்று விட்டு என்னை ஆழமாய் ஒரு நோட்டமிட்டார். குறி வைத்து, எதையோ தேடியபடி. அது என்னை பின்னுக்குத் தள்ளியே விட்டது.

''மரணம். காதலைக் கைகூட வைக்கும்படி நடந்துள்ள சூனிய வேலைகளை விடவும் கொன்னுப்போட நடந்திருக்கும் சூனியங்கள்தாம் அதிகம். இருந்தாலும் கடந்த காலங்களில் இந்தக் கலைதான் எத்தனை குழந்தைத்தனமா கையாளப்பட்டிருக்கு! போர்ஜியா ஆதிவாசிகளும் அவங்களுடைய பிரபலமான ரகசிய விஷங்களும்..! ஆஹ்ஹா... ரகசிய விஷங்களாம்.... இப்படி அவங்க நிஜமா எதை உபயோகப்படுத்தி யிருக்காங்கனு தெரியுமா? சாதா வெள்ளை ஆர்ஸனிக்! தன் புருஷனைப் பரலோகம் அனுப்ப வெறுத்துப் போன தற்கால பொண்ணு தன் கைக்கு வசதியா இப்பல்லாம் பயன்படுத்தும் அதே ஆர்ஸனிக். ஆனா, இப்ப, நாம

இதையெல்லாம் கடந்து வெகு தூரம் பிரயாணிச்சிருக்கோம். பார்க்கப் போனா அறிவியல் இதில் நமது எல்லைகளை மிகவுமே விசாலப்படுத்தித் தந்திருக்கு...''

''என்னனு துப்புத் தராமல் கச்சிதமா வேலை முடிக்கும் புதுப்புது விஷங்களைச் சொல்றீங்களா?''

''விஷங்கள்! நோ! அதைத்தான் குழந்தைத்தனமானதுனு அறிவிச்சுட் டோமே. புது எல்லைகள், புது உயரங்கள், எட்டப்பட்டிருக்கு.''

''உதாரணத்துக்கு...''

''புத்தி. சிந்தனை. சிந்திக்கும் திறனுள்ள புத்தி. புத்தினா என்ன எனும் ஒரு அறிதல்... அது என்னவெல்லாம் பண்ணும் எனும் அறிதல்... அதை என்னவெல்லாம் பண்ண வெக்கலாம் என்பது பற்றிய முழு அறிதல்..''

''ப்ளீஸ் தொடருங்க, இது ரொம்ப சுவாரஸ்யமிருக்கு.''

''இதோட அடிப்படை அணுகுமுறை உலகமறிஞ்சதுதான். மருந்து வைக்கும் திறன் பெற்றிருந்த ஆதி காலத்துக் கூட்டங்கள் நூற்றாண்டுகளாய் செய்து வருவதுதான் இது. உங்க எதிரியை நீங்க கொல்லணும்னு இதுல அவசியமே கிடையாது. இதுல நீங்க பண்ண வேண்டியதெல்லாம் அவனை சாகச் சொல்லணும்.''

''ஆலோசிப்பது? செத்துடுனு, ஆங்? ஆனா நம்ம எதிரி இதை முழுமையா நம்பும் வரை இது பிரயோஜனப்படாதே.''

''சில சமயங்கள்ல பிரயோஜனப்படுது. ஆனா இப்ப பிரச்சனை இது கிடையாது. இந்த சூனியக்காரர்கள் சென்றுள்ள உயரத்தை விடவும் நாம அதிகமான உயரங்களைத் தொட்டிருக்கோம் என்பதுதான் இதிலிருந்து தெரிஞ்சுக்க வேண்டியது. உளவியல் மருத்துவர்களின் ஆய்வுகள் நமக்கு இதையெல்லாம் கொடுத்திருக்கு. சாகணும் எனும் தாகம்! இது உள்ளேயே இருக்கு - எல்லாரிடமும். இதுல கை வெக்கணும்! முடுக்கி விடணும்! சாகணும் எனும் தாக எண்ணத்துல விளையாடணும்!''

''இது ஒரு சுவாரஸ்யமான ஐடியா'' - வெளியே அதிகம் காட்டிக் கொள்ளாமல் எனது அறிவியல் சார்பு ஈடுபாட்டோடு பேசினேன் நான். ''உங்களுடைய எதிரியை தற்கொலை பண்ணிக்கச் சொல்லி ஊக்குவிப்பது? ஆங், அப்படித்தானே?''

''நீங்க இன்னும் பாயிண்ட்டைப் பிடிக்கலே. பின் தங்கியிருக்கீங்க. தன்னுடைய எண்ணத்தினாலேயே நோய்வாய்ப்பட்டு விடும் ஆட்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கீங்களா?''

''விளங்கலே.''

''உள்ளுக்குள்ளேயே மறுபடியும் வேலைக்குப் போகணுமா எனும் வெறுப்பு உச்சத்திலிருக்கும்... இந்த உள்மன எண்ணமே அவங்களுக்கு நிஜமான நோயை உண்டு பண்ணித் தந்துடும். கற்பனையா இருக்காது... நெஜமாகவே இருக்கும். வலி, இழுப்பு போன்ற அறிகுறிகளோடு! உடல் சார் காரணமே இல்லாம இது என்ன கூத்துனு டாக்டருங்க விடை தேடி பல காலமா பரிதவிச்சிருக்காங்க..''

''நீங்க என்ன சொல்ல வரீங்கனு இப்ப என்னால பின்தொடர்ந்து பிடிக்க முடியுது'' - மெல்லமாய் சொன்னேன் நான்.

''உங்க எதிரியைத் தகர்த்து எறிய, அவனோட உள் மனசின் ரகசியத் தளத்துல நீங்க உங்களோட சக்தியை இயக்கணும். நம் ஒவ்வொருத்தருக் குள்ளும் அடையாளம் காட்டாம புதைந்துக் கிடக்கும் *சாகணும்* எனும் எண்ணத்தை அவனுக்குள்ளே கிண்டனும், கிளறணும், எழுப்பணும், உசர ஏத்தணும்..'' அவருடைய உற்சாகம் தற்போது திடீரென கூடியது. ''விளங்கலே? ஆழ்மனத்தின் ஒரு தளம், மரணத்தை எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கு... அப்பகுதியினால, நெஜமான நோய் அவனுக்குள் உண்டு பண்ணப்படும். நோய்வாய்ப்படணும்னு நினைப்பான்... அதனால சாகணும்னு துடிப்பான். ஆகவே நோய்வாய்ப்படுவான்... சாவான்.''

தற்சமயம் வெற்றி முழக்கமாய் தனது தலையை நிமிர்த்தி உட்கார்ந்தார் அவர். நான் சட்டென்று சில்லிட்டுப் போனேன். பேசும் அனைத்தும் முட்டாள்தனங்கள்... இதோ, இந்தப் பெண்மணி ஓர் அரை பைத்தியம்... இருந்த போதிலும்...

தெரஸா திடீரென்று சிரித்தாள். ''நீங்க என்னை நம்பலே, அப்படித் தானே?''

''இது ஒரு அற்புதமான தியரி மிஸ் க்ரே - தற்கால நவீன சிந்தனைகளோடும் ஆய்வுகளோடும் ஒத்துப் போகும் வகையிலே அப்படியே இருக்கு. ஒத்துக்கிறேன். ஆனா, நம் எல்லோருக்குள்ளும் ஆழ் மனத்திலிருக்கும் சாகணும் எனும் ஆசையை நீங்க எப்படிக் கிண்டிவிட்டு எழுப்பி உங்களுடைய வெற்றியாக்கிப்பீங்க?''

''அதுதான் என்னுடைய ரகசியம்! சாதிக்கும் வழிமுறை! சாதனம்! ஸ்பரிசங்களில்லாமல் தொடர்பேற்படுத்த முடியும். வானொலி, தொலைக்காட்சி இதையெல்லாம் இப்ப நீங்க உதாரணமா நினைச்சுப் பார்க்கணும். நம் ஸ்பரிசத்துக்கு அப்பாற்பட்ட தொடர்புகளோடு

நடைபெறும் ஆய்வுகள் நாம எதிர்பார்க்கும் அளவுக்கான பிரமாதமான எல்லைகளை எட்டலே... ஆனா இந்தத் தோல்வி எதனாலன்னா, அடிப்படை அணுகுமுறை என்ன என்பதை யாரும் ஒழுங்கா பிடிக்காததாலத்தான். அந்த அணுகுமுறை என்ன என்பதை நீங்க எப்பவாவது அகஸ்மாத்தா நிச்சயமா பிடிக்கலாம்... அனுபவிக்கலாம்... அது எப்படி வேலை பண்ணுதுனு மட்டும் உங்களுக்கு ஒரு தடவை பரீச்சியம் ஆகிடுச்சுன்னா... நீங்க அதை ஒவ்வொரு முறையும் பண்ணலாம்.''

''உங்களால அதை பண்ணிக் காட்ட முடியுமா?''

உடனடியாய் இதற்கு அவர் பதில் தந்து விடவில்லை. ஆனால் பிறகு எழுந்து மெல்லமாய் நகர்ந்தபடி சொன்னார்: ''என்னுடைய அனைத்து ரகசிய அணுகுமுறைகளையும் சொல்லி விடும்படி நீங்க கேட்கக் கூடாது, மிஸ்டர் ஈஸ்ட்டர் - ப்ரூக்.''

நான் அவரைப் பின்தொடர்ந்தபடி தோட்டத்து வாயில் வரை சென்று விட்டு கேட்டேன்: ''இவை அனைத்தையும் நீங்க எதுக்காக என்கிட்டே சொன்னீங்க?''

''உங்களுக்கு என் புத்தகங்களின் விலைமதிப்பற்ற தன்மை விளங்கியிருக்கு. சிலமுறை, தனக்குத் தெரிஞ்ச விஷயத்தை அதை நேசிக்கும் ஒருத்தரிடம் முழுக்க பகிர்ந்துக்கணும் எனும் எண்ணம் உருவாகத்தானே செய்யுது! இது தவிரவும்...''

''யெஸ்?''

''எனக்குள்ளே தோணுது - பெல்லாவுக்கும் இதேதான் தோணியிருக்கு - உங்களுக்கு நாங்க தேவைப்படலாம்.''

''உங்க தேவை?''

''நீங்க எங்களைப் பற்றி தெரிஞ்சுக்கத்தான் இங்கே வந்திருப்பதா - பெல்லா சொல்றா. மனங்களைப் படிக்கவல்ல அவ சொல்வது தவறா போனதா சரித்திரம் கிடையாது.''

''உங்க வார்த்தைகளிலேயே கேட்கிறேன்: உங்களைப் பற்றி நான் ஏன் தெரிஞ்சுக்கணும்?''

''அது...'' என்று மிக மிருதுவாக தெரஸா சொன்னார்: ''...எனக்கு தெரியலே - இது வரைக்கும்.''

அத்தியாயம் 7

மார்க் ஈஸ்ட்டர் – ப்ரூக் பதிந்தவை

I

"ஒரு வழியா வந்துட்டீங்களா! அப்படி எங்கேதான் போயிருப்பீங்கனு நாங்க கேட்டுக்கிட்டிருந்தோம்."

ரூடா திறந்திருந்த கதவின் வழியே வந்தாள். அவளுக்குப் பின்னால் மற்றவர்கள். அவள் எங்களை சுற்றியிருந்த பகுதியைப் பார்த்தாள். "ஸோ.. இதுதான் நீங்க ஆவிக் கூட்டம் நடைபெறும்னு சொன்ன இடமா?"

லகுவாய் சிரித்தபடி "துல்லியமா விஷயங்களை சேகரிச்சு வெச்சிருக்கீங்க" என்றார் தெரஸா. "கிராமத்துல, நாம என்னத் தொழில் பண்றோம் என்பதை நம்மை விட மற்றவங்க முழுசா தெரிஞ்சு வெச்சிருப்பாங்க. வம்பு! மாயமந்திரம் போடும் வஞ்சகக் கூட்டம்னு எங்களுக்கு ஊர்ல அழிக்க முடியாத பேர் நிலைச்சிருப்பது எங்களுக்குத் தெரியும் - நூறு வருஷத்துக்கு முன்னாடி இது ஒரு குளமாவோ இல்ல குட்டையாகவோ இல்ல பாடியை எரியூட்டும் பகுதியாவோ இருந்திருக்கும். ஒண்ணு தெரியுமா, என்னுடைய கொள்ளுப் பாட்டியோ, அல்லது அவங்களோட கொள்ளுப் பாட்டியோ... நாலஞ்சு தலைமுறைக்கு முன்னாடினு வெச்சுக்குவோமே... அயர்லாந்துல, 'சூனியக்காரங்க' எனும் காரணத்துக்காக எரிக்கப்பட்டிருக்காங்கனு கேள்விப்பட்டிருக்கேன். அப்பல்லாம் அப்படி!"

"நீங்க ஸ்காண்ட்லாண்டுக்காரினே நான் நெனச்சுக்கிட்டிருக்கேன்."

"அப்பா பக்கம் அது . அதனால சாயல் இருந்திருக்கும். அம்மா ஐரீஷ். ஸிபில் ஒரிஜினல் கிரேக்க நாட்டு சாறு. பெல்லா, அன்றைய ஆங்கிலேய மண்."

"சரியான மனிதக் கலவை" என குறிப்பிட்டார் கலோனல் டெஸ்பேர்ட்.

தற்சமயம் தெரஸா மிஸஸ் ஓலிவரை நோக்கி திரும்பிக் கொண்டார்: "நீங்க உங்க புத்தகங்கள்ல ஒரு புத்தகத்தை ப்ளாக் மேஜிக் வெச்சுப் பண்ணப்படும் கொலையைக் களமாகக்கொண்டு எழுதணும். அதுக்குத் தேவையான பல தகவல்களை நான் தருவேன்."

மிஸஸ் ஓலிவர் முழித்தார். லஜ்ஜையாய் உணர்ந்தார். "நான் வெறும் சாதாரணக் கொலைக்களன்களைக் கொண்டுதான் க்ரைம் நாவல்கள் எழுதறேன்" என்றார், ஏதோ அவருக்குத் தெரிந்ததெல்லாம் அவ்வளவு தான் எனும் தொனியில். "வழி மறிக்கும் ஒருத்தனைப் போட்டுத் தள்ளத் துடிக்கும் ஒருவன் பண்ணும் கொலைதான் கருவா இருக்கும். அது கொஞ்சம் புத்திசாலித்தனமா அமைக்கப்படுவதால் ஓடுது."

"அதிபுத்திசாலித்தனமா எனக்குப்படும், தெரியுமா மிஸஸ் ஓலிவர்" என்றார் கலோனல். "அருமையா அமைக்கிறீங்க" என்றவர், கைக்கடியாரத்தைப் பார்த்தபடி, "ஓ, ரூடா..." என இழுத்தார்.

"ஓ, யெஸ். நாம கிளம்பணும், நாம எதிர்பார்த்து வந்ததை விடவும் நேரம் ஓடிடுச்சு."

நன்றிகளும், மீண்டும் வரவேண்டும் எனும் கோரிக்கைகளும் பரிமாறிக் கொள்ளப்பட்டன. வீட்டின் முன்கதவு வழியாக நாங்கள் வெளியேற வில்லை. பக்கவாட்டு கேட் ஒன்றினை நோக்கி சுற்றிப் போனோம்.

கம்பியினாலான சிறு கூண்டுகளைப் பார்த்து "நீங்க நிறைய கோழி வளர்க்கிறீங்களோ?" என கேட்டார் கலோனல்.

"எனக்குக் கோழிகளே பிடிக்காது" என்றாள் ஜிஞ்ஜர். "பொச்பொச்னு எச்சமிட்டு வெக்கும்."

"அநேகமா எல்லாம் சேவலுங்க" என்றது, பெல்லா. பின்கதவு ஒன்றின் வழியாக அவள் வந்திருந்தாள்.

"வெள்ளை சேவலுங்களா?"

"ம். எங்களுக்கு அவை உபயோகமாயிருக்கு."

அவளுடைய உருவமற்ற முகத்தில் சுழித்துக் கொண்டு நீண்டன அவளது உதடுகள். தனக்கெல்லாம் தெரியும் என்ற எண்ணம் தூக்கலாய் அவளது கண்களில் மின்னியது.

"அதெல்லாம் பெல்லாவுடைய பிரதேசங்கள்" என்று புன்முறுவியபடி சொன்னார் தெரஸா.

நாங்கள் குட்பை சொல்லிக் கொள்ளும்போது முன்கதவு வழியாக கிளம்பிக் கொண்டிருந்த அனைவரையும் நோக்கி ஓடி வந்தாள் ஸிபில். விடை பெற்றோம்.

''எனக்கு அந்தப் பொம்பிளையைக் கண்டாலே பிடிக்கலே'' என்றாள் மிஸஸ் ஓலிவர், நாங்கள் வெளியேறிப் பிரயாணிக்கும் போது. ''எனக்கு அவளைத் துளியும் பிடிக்கலே.''

கலோனல் ''அப்படியெல்லாம் தெரஸாவை ஒட்டுமொத்தமா விமர்சிக்கக் கூடாது'' என்று கண்டித்தார். ''அவளுக்குத் தெரிஞ்சதை யெல்லாம் நம்மகிட்ட கொட்டி அது நமக்குள் என்ன விளைவை ஏற்படுத்துனு பார்த்திருக்கா... தட்ஸ் ஆல்.''

''ப்ச்... நான் அவளைச் சொல்லலே. வாய்ப்பு கிடைச்சா பேசியே தீர்க்கக் காத்திருக்கும் எவ்வித ஆபத்துமற்ற பொம்பிளை அவ. அந்த இன்னொருத்தியைப் போன்ற கொடூரமானவ கிடையாது இவ.''

''பெல்லா? அவ கொஞ்சம் ரகசியமாத்தான் தெரியறா, ஒத்துக்கிறேன்.''

''நான் அவளையும் குறிப்பிடலே. நான் குறிப்பிடுவது அந்த ஸிபிலை. ஒண்ணும் தெரியாத வீணாப்போன அசமஞ்சமா தெரியறா அவ. அவ மணியும், மாலையும், அலங்காரமும், மறுபிறப்பு பற்றியெல்லாம் அவ நம்மகிட்டே விட்ட கதைகளும்! இப்படியெல்லாம் அவ ஒரு முட்டாள் போல தோன்றிக்கிட்டிருந்தாலும் எனக்குள்ளே என்னவோ அவளால நிச்சயமா சங்கதிகள் பண்ண முடியும்னுதான் தோணுது. விளங்கிக்க முடியாத நிகழ்வுகளை அவ நிகழ வெப்பா. சொல்ல வந்ததை வார்த்தையா சொல்வதுல நான் எப்பவுமே கொஞ்சம் சுமார்தான். அவ சுத்த மண்டுவா இருப்பதாலேயே, அவளை, *எதுவோ ஒண்ணு,* வாகா உபயோகப்படுத் திக்கலாம். ஓஹ்... நான் என்ன சொல்றேன்னு இங்கே யாருக்குமே விளங்கலேனு நினைக்கிறேன்...'' என்று பரிதாபமாய் சொல்லி முடித்தாள்.

''எனக்கு விளங்குது'' என்றாள் ஜிஞ்ஜர். ''நீங்க சொல்வதுல தப்பு இருப்பதா எனக்குப் படலே.''

''நாம ஒரு நாள் ஆவியைக் கூட்டும் கூட்டத்துல வந்து பங்கு பெறணும்'' என்றாள் ரூடா. ''சூப்பராயிருக்கும்.''

''நோ, உதை விழும்'' என்று கறாராய் தடுத்தார் டெஸ்பேர்ட். ''இது போன்ற கூட்டங்கள்ல நீ கலப்பதை நான் அனுமதிக்கவே முடியாது.''

இருவரும் சிரித்துக் கொண்டே விவாதத்தில் ஈடுபட்டார்கள். மறுநாள் காலையில் உள்ள ரயில்கள் பற்றி மிஸஸ் ஓலிவர் என்னிடம் கேட்டபோது தான் நான் விழித்துக் கொண்டேன்.

''நீ என் கூடவே வண்டியில வந்துடலாம்'' என்றேன் நான்.

இதற்கு மிஸஸ் ஓலிவர் சற்று சந்தேகமாய் ஆனார்.

''ஓ, வா. கௌம்பு. நீ என்கூட முன்னாடி ஒரு தடவை வந்திருக்கே. நான் நம்பகமான டிரைவர்.''

''அது கிடையாது பிரச்சனை, மார்க். நாளைக்கு ஒரு சாவுக்கு நான் போக வேண்டியிருக்கு. அதனால் டவுனுக்குத் திரும்புவதில் கால தாதமம் ஏற்பட்டுடக் கூடாது'' என்றவள் பெருமூச்செறிந்தாள். ''எனக்கு இந்த மரண ஊர்வலமே பிடிப்பது கிடையாது.''

''அப்பப் போய்த்தான் தீரணுமா?''

''இந்த விஷயத்துல நான் போயே ஆகணும்னு நினைக்கிறேன். மேரி டெலாஃபான்டைன் என் பழைய சிநேகிதி. எனக்கென்னவோ நான் கடைசியா போய் பார்த்தால் அவ ஆன்மா மகிழும்னு தோணுது. அவ அப்படிப்பட்ட ஒருத்தி.''

''ஓ... யெஸ்...'' என்றேன் நான் சிந்தனையாய். ''ஓ... யெஸ். டெலாஃபான்டைனேதான்..''

ஆச்சரியமாகிப் போய் என்னை முறைத்துப் பார்த்தாள் அவள்.

''ஸாரி'' என்றேன் நான். ''அது - அது - வந்து - ஆங், டெலாஃபான்டைன் எனும் பெயரை எங்கேயோ கேள்விப்பட்டிருக்கோமேனு யோசிச்சேன். இதை சொன்னது நீதான் இல்லையா?'' என்று விட்டு மிஸஸ் ஓலிவரை முறைத்துப் பார்த்தேன் நான். ''அவளை ஏதோ ஒரு நர்ஸிங் ஹோம்ல பார்த்ததா நீ சொல்லியிருக்கே இல்லையா?''

''நானா சொன்னேன்? இருக்கலாம்.''

''எதனால அவ செத்தா?''

மிஸஸ் ஓலிவர் அவளுடைய நெற்றியை சுருக்கி யோசித்தாள். ''விஷத்தன்மை கொண்ட பாலி நியூரிட்டீஸ்.''

இப்போது ஜிஞ்ஜர் என்னைக் கூர்மையாய்க் கவனித்துக் கொண்டிருந்தாள். துளைத்தெடுக்கும் பார்வை என் மேல் பதிந்திருந்தது.

காரிலிருந்து நாங்கள் இறங்கியதும் எவ்வித தொடர்புமற்று சட்டென்று சொன்னேன். ''நான் ஒரு பொடி நடை போயிட்டு வரேன். அத்தனை சாப்பிட்டிருக்கேன். அருமையான லஞ்ச். அதன் தலைல டீ. நடந்தாத்தான் ஆகும்.''

வேறு யாராவது உடன் வருவதாய் முன்மொழிவதற்குள் நான் நடந்து விட்டிருந்தேன். உடனடியாய் நான் தனியாகி என் ஐடியாக்களை அடுக்கிப் பார்த்துவிட வேண்டும் என்ற அவசரத்திலிருந்தேன்.

என்ன நடந்துக் கொண்டிருக்கின்றது? குறைந்தபட்சம் எனக்கு மட்டுமாவது தெளிவாக்கிக் கொள்ள இறங்கினேன்.

யாரிடமிருந்தாவது விடுதலை அடைந்து விட வேண்டுமென்றால் அதற்கு சரியான இடம் *வெளிறிய குதிரை*தான் என்று பாப்பி சொன்னாள்... சொன்னாள் அல்லவா, அதில் தொடங்கின அனைத்தும்.

இதனை தொடர்ந்து ஜிம் காரிகனுடனான என் சந்திப்பும் ஃபாதர் கார்-மேன் மரணம் சம்பந்தப்பட்ட பெயர்ப்பட்டியல் விவாதங்களும்இடம் பெற்றன. அந்தப் பட்டியலில் இருந்தது, ஹெஸ்கத் டுபாய்ஸ் எனும் பெயர். மேலும், அன்றொருநாள் மாலையில் *லீகீயின்* காபி கடையில் நிகழ்ந்தவற்றை என்னை நினைவுகூர வைத்த டக்கர்டான் எனும் ஒரு பெயர். பட்டும் படாமல் எனக்கு பிரசித்தமாகியிருந்த டெலாஃபான்டைன் என்றொரு பெயர். ஒரு சீக்காளி ஃப்ரண்ட் என, பேசும்போது அப்பெயரை என்னிடம் சொல்லியிருந்தது, மிஸஸ் ஓலிவர். அந்த சீக்காளி ஃபிரண்ட் இப்போது உயிருடனில்லை.

பிறகு, என்னாலேயே அடையாளம் காண முடியாத ஏதோ ஒரு காரணத்துக்காக, அந்த மலர் கடைக்குப் போய் பாப்பியைச் சந்திக்க நான் சென்றிருந்தேன். *வெளிறிய குதிரை*என்ற பெயரில் ஓரிடம் இருப்பதைப் பற்றிய தகவல்கள் எதுவும் தனக்குத் தெரியவே தெரியாது என வெறியாக மறுத்தாள் அவள். இப்படி சொன்ன அவள் பயந்திருந்தாள் என்பது, இதில் முக்கியப்படுத்திக் குறித்துக் கொள்ள வேண்டியதாகும்.

இன்று - தெரஸா க்ரே.

ஆனால், நிச்சயமாய், *வெளிறிய குதிரை* எனும் இடமும் அதிலுள்ள மக்களும் ஒரு பக்கம்... பெயர்ப்பட்டியல், அது ஒரு தனிப் பக்கம். ஒன்றுக்கொன்று சம்பந்தம் இல்லாமல். எனில் எதற்காக இவ்விரண்டையும் நான் என் புத்திக்குள் ஒன்றாய் போட்டு இணைத்தே பார்க்கின்றேன்?

மிஸஸ் டெலாஃபான்டைன் லண்டனில் வாழ்ந்திருக்க வேண்டும் என்பது ஊகம். இதிலிருந்து தள்ளி எங்கோயிருக்கும் ஸர்ரே பகுதியில் உள்ளது, தோமாஸினா டக்கர்டானின் வசிப்பிடம். இதில் யாருக்கும் சின்ன குக்கிராமமான *'மச் டீப்பிங்'* கிராமத்தோடு தொடர்பிருக்க முடியாது, இருந்தாலும்...

கிங்ஸ் ஆர்ம்ஸ் எனும் விடுதிக்கு முன்னால் இப்போது நான் வந்தடைந்தேன். பார்க்க பந்தாவாக தெரியும் ஒரு உருப்படியான *பப்* இது. இது தரும் லஞ்ச், டிபன், தேநீர் வகைகள் அடங்கிய பெயர்ப் பலகை புதிதாய் பெயிண்ட் செய்யப்பட்டிருந்தது.

நான் கதவினைத் தள்ளித் திறந்துக் கொண்டு உள்ளே போனேன். இன்னும் திறக்கப்படாத *பார்* என் இடப்பக்கமிருக்க... புகை வாடை அடித்துக் கொண்டிருந்த ஒரு சிறு புகைபிடிக்குமிடம் என் வலப்புறத்தில். 'ஆபிஸ்' என்று ஒட்டப்பட்டிருந்த பகுதி, இறுக்கமாய் மூடப்பட்டிருந்த கண்ணாடி ஜன்னல் மற்றும் 'மணியை அழுத்தவும்' என்ற பெயர்ப் பலகை ஆகியவற்றைக் கொண்டிருந்தது. நாளின் இந்த நேரத்தில் எந்த *பப்பிலும்* இருப்பது போலவே இதிலும் ஆள் அரவமற்ற பாலைவனத் தோற்றமே மிஞ்சியிருந்தது. ஜன்னலை ஒட்டியிருந்த ஒரு சிறு அலமாரியில் அழுக்கேறியிருந்த ஒரு ரெஜிஸ்டர் இருந்தது. பார்வையாளர்களுக்காக. அதைத் திறந்த நான் பக்கங்களைத் திருப்பிப் பார்த்தேன். ஒரு வாரத்துக்கான பதிவுகள் மட்டும் அதில் வகைப்படுத்தப்பட்டு இருந்தன. ஆறேழு பெயர்கள். அநேகமாய் ஓரிரவுக்கு மட்டும். நான் மறுபடியும் உஷ்ணம் அதிகமாயிருந்த பகல் நேரத் தெருவுக்குள் விழுந்தேன்.

சென்ற வருடத்தில் யாரோ சாண்ட்ஃபார்ட் என்ற பெயர் கொண்ட ஒருவரும் பார்க்கின்சன் என்ற பெயர் கொண்ட வேறொருவரும் கிங்ஸ் ஆர்ம்ஸில் தங்கியிருந்ததாய் காணப்பட்ட பதிவு. எதிர்பாரா ஒரு எதேச்சையான பதிவாய்தான் இருக்குமா? இவ்விரு பெயர்களும் காரிகன் தந்த பெயர்ப்பட்டியலிலிருந்தன. இருக்கலாம். ஆனால் இவ்விரு பெயர்களும் ஒன்றும் அசாதாரண பெயர்கள் கிடையாதே. பலருக்கு இப்பெயர்கள் இருக்கக் கூடுமே. ஆனால் நான் இன்னொரு பெயரையும் கூடவே பார்த்தேன்... மார்ட்டீன் டிக்பீ. இந்த மார்ட்டீன் டிக்பீ, நான் 'ஆன்ட்டி மின்' என எப்போதும் அழைக்கும் லேடி ஹெஸ்கத் - டுபாய்ஸ்-வுடைய அதே உறவாயிருக்குமா?

எங்கு எந்த திசையில் நான் சென்றுக் கொண்டிருக்கிறேன் என்றெல்லாம் கவனிக்காமல் நான் கால் போன போக்கில் போய்க்

கொண்டேயிருந்தேன். யாருடனாவது எனக்கு உடனே பேசியாக வேண்டும். ஜிம் காரிகனிடம், அல்லது டேவிட்டிடம். அல்லது அவளுக்கே உரிய சாந்தமான அணுகுமுறை கொண்ட ஹெர்மியாவுடன். குழப்பும் என் சிந்தனைகளுடன் தனியாய் இருக்க எனக்கு விருப்பமில்லை. நான் என்னவெல்லாம் சிந்தித்துக் கொண்டிருக்கின்றேனோ அக்கருத்துகளோடு நன்றாய் வாக்குவாதம் பண்ணி விவாதிக்கவல்ல ஓர் ஆளை நான் தேடிக் கொண்டிருந்தேன்.

இப்படியாக நான் அரை மணி நேரம் சுற்றித் திரிந்து விட்ட பிறகு மதகுருவின் நுழைவு கேட் நோக்கி வந்தடைந்திருந்தேன். ஒழுங்காய் பராமரிக்கப்படாதிருந்த நடைபாதையில் முன்னேறி முன்கதவு அருகே தொங்கிக் கொண்டிருந்த துருப்பிடித்த அழைப்பு மணியை அடித்தேன்.

II

''அது இப்பல்லாம் அடிக்கிறதில்லே'' என்றார் டேனே கேல்த்ராப். எதிர்பாராது என்னைப் பார்த்துவிட்ட தொனியில் வாயிற் கதவருகே வந்து நின்றுக் கொண்டிருந்தார் அவர்.

மணியின் இந்த நிலைமையை நான் ஏற்கெனவே கணித்திருந்தேன்.

''ரெண்டு தடவை ரிப்பேர் பண்ணிப் பார்த்தாச்சு'' என்றார் மிஸஸ் டேனே. ''உழைக்க மாட்டேங்குது. அதனால யார் வராங்கனு நான் எச்சரிக்கையா பார்த்துக்கிட்டேயிருக்க வேண்டியிருக்கு. முக்கியமான சமாச்சாரத்தோடு பாவம் யாராவது வந்துட்டுப் போயிடக்கூடாது இல்லையா? உங்க விஷயம் என்ன முக்கியமானதா?''

''அதாவது - வெல் - யெஸ் - ஆமாம். அதாவது இது முக்கியமானது... எனக்கு..''

''அதைத்தான் நானும் கேட்டேன்'' - சொன்ன அவர் என்னை சிந்தனை பொதிந்து பார்த்தார். ''யெஸ்... ரொம்ப மோசமானதா எனக்குத் தோணுது... யாரைப் பார்க்கணும்? மதகுருவையா?''

''எ... எ... எனக்குத் தெரியலே...''

நான் பார்க்க வந்ததென்னவோ மதகுருவைத்தான். ஆனால் இப்பொழுது எதிர்பாராமல் சந்தேகமானேன். ஏனென்று எனக்கே தெரியவில்லை. ஆனால் உடனடியாக மிஸஸ் டேனே கேல்த்ராப்

என்னிடம் சொன்னார்: ''என் புருஷன் ரொம்ப நல்லவர்''. பிறகு சில நொடிகள் தாமதித்து விட்டு தொடர்ந்தார்.

''மதகுருவாய் சேவையாற்றிக்கிட்டிருப்பதைத் தவிர்த்து சொல்றேன். இதுதான் சில சமயங்கள்ல சமாச்சாரங்களைச் சிக்கலாக்கிடுது. ரொம்ப நல்லவங்க இருக்காங்களே, இவங்க, - மிஸ்டர் மார்க்... சில சமயங்கள்ல சாத்தான்களை அடையாளம் காண்பது கிடையாது.'' இங்கு நிறுத்திய அவர் பிறகு கனிவும் உத்வேகமும் கலந்து சொன்னார்: ''நீங்க பார்க்க வந்தது நானா இருக்கட்டும்.''

ஒரு சத்தற்ற புன்னகை என் உதடுகளில் இடம் பிடித்தது. ''சாத்தான்கள், உங்களுடைய டிபார்ட்மென்டா?''

''யெஸ். அப்படித்தான். இங்கே நாங்க ரெண்டு பேருமே வரும் மக்களின் அனைத்து பாவங்களையும் கேட்கிறோம். ஆகவே, எங்களுக்கு, அரங்கேறிக் கொண்டிருக்கும் பலவிதமான பாவங்களும் தெரிஞ்சிருக்கணும்.''

''பாவங்கள், உங்க கணவருடைய உத்தியோகம் கிடையாதா? அதாவது ஒரு மதகுரு ஸ்தானத்துல வெச்சு கேட்கறேன்...''

''பாவங்கள் கிடையாது. பாவங்களை மன்னிப்பது'' என திருத்தினார் அவர். ''தண்டனையிலிருந்து விடுதலையை அவரால தர முடியும். அது என்னால முடியாது, மத ரீதியா. ஆனா...'' என்று விட்டு துள்ளும் உற்சாகம் தெறிக்க அவர் சொன்னார்: ''பாவங்கள் என்னென்ன என்று அடுக்கி தரவாரியா வகைப்படுத்தி அவருக்குத் தர என்னால முடியும். அந்த ஞானம் எனக்கிருக்கு. இப்படி தரம் பிரிக்க - பாவத்தை சொல்றேன்! - ஒருத்தரால முடிஞ்சதுன்னா, அவரால அது மக்களுக்குக் கேடு விளைவிப்பதிலிருந்து தடுக்க முடியும்.''

அவர் பேச்சின் வீச்சினை வியந்த நான், ''உங்க ஞானங்கள் எனக்கு வராது'' என்று விட்டு சொன்னேன்: ''ஆனா, நான், மக்கள் கேடுகளில் மாட்டிக் கொள்வதிலிருந்து அவர்களைக் காப்பாற்ற விரும்பறேன்.''

அவர் என்னை சட்டென்று ஆழமாய்ப் பார்வையால் அளந்தார். ''ஓ, அப்படியா விஷயம்? அப்ப ஏன் நீங்க உள்ளே வந்துடக்கூடாது? அது ரெண்டு பேருக்குமே வசதியா அமையும்.''

மதகுருவின் வரவேற்பறை நல்ல விசாலமானதாகவும் அதே சமயம் பழைமை பொதிந்ததாகவும் இருந்தது. வெட்டி வீசி அழகு செய்ய ஆட்களே இல்லாதது மாதிரி அவ்வறையைச் சுற்றிலும் கொடிகள் சூழ்ந்து வளர்ந்து குவிந்து நிழலைக் கொட்டியிருந்தன. ஆனால் அந்த நிழல் சூழல், என்ன

காரணத்தாலோ சுறுசுறுப்பை அவித்துப் போடும் ஓர் இருட்டாய் அமைந்திருக்கவில்லை. மாறாக, அது, இளைப்பாறல் தரும் மர நிழலாய் கனிந்திருந்தது. வருடக்கணக்காய் மனிதர்கள் உட்கார்ந்துப் போயிருப்பதன் அடையாளங்களைத் தாங்கிக் கொண்டு, அங்கிருந்த பழமையான நாற்காலிகள் குழிந்திருந்தன. ஒரு தடிமனான கடியாரம் உசரத்தில் நிதானமாய் ஆனால் நேரப்படி ஆடிக் கொண்டிருந்தது. இங்கு எப்பொழுதும் நேரமிருக்கும்... பேச, என்ன சொல்ல வேண்டும் என நினைத்து வந்தீர்களோ அதைச் சொல்ல, வாழ்க்கை கொண்டு வந்து கொட்டும் காயங்களைக் கொட்ட...

எனக்குத் தோன்றியது: இங்கு, பெண்கள், தங்கள் கவலைகளை யெல்லாம் வந்து சொல்லி ஒருபாட்டு அழுது மிஸஸ் டேனேவின் ஆறுதலையும் அறிவுரைகளையும் பெற்றுச் சென்றிருப்பார்கள். இங்கு, தங்களுடைய மாமனார் மாமியார் பற்றிய பளுவையெல்லாம் கோபமாய் வந்து கொட்டித் தீர்த்துக் கொண்டு போயிருப்பார்கள். தப்பு செய்து விட்ட மகனுக்குப் பரிந்து கொண்டு இங்கு வந்த தாய்கள் தத்தம் மகன்கள் அந்த தப்பையெல்லாம் பண்ணியிருக்கவே மாட்டான் என ஒப்பாரி வைத்திருப்பார்கள். கணவனும் மனைவியும் தங்களுடைய திருமண பந்த சுமைகளை அவிழ்த்து வைத்துப் போயிருப்பார்கள்.

இங்கு, நான், மார்க் ஈஸ்ட்டர் - ப்ரூக், படித்தவன், பாண்டித்யம் மிக்கவன், எழுத்தாளர், உலகம் அறிந்தவன் வந்து உட்கார்ந்துக் கொண்டு... என் எதிரே நரைத்த முடியும் பல பருவ காலங்களால் அடிக்கப்பட்டுத் தொய்ந்த உடலும் கொண்டு சாந்தமாய் அமர்ந்திருக்கும் பெண்மணியின் மடியில் என் பிரச்சினைகளைக் கொட்டப் போகின்றேன். ஏன்? எதற்காக? எனக்குத் தெரியாது. இவர் ஒருத்தர்தான் இப்போதைக்கு எனக்கு அமைந்துள்ள சரியான நம்பத்தகுந்த ஆள் என்ற விளக்க முடியாத ஒரேயொரு நம்பிக்கை மட்டும்தான் இப்போது என்னிடத்தில் உள்ளது.

''இப்பத்தான் நாங்க தெரஸாவுடன் டீ எடுத்துக்கிட்டோம்'' எனத் துவங்கினேன் நான்.

மிஸஸ் டேனேவுக்கு விஷயங்களை விளக்குவதில் அப்படியொரு கஷ்டம் எப்பொழுதும் எவருக்கும் இருந்திருக்க முடியாது.

''ஓஐ ஸீ'' என்றார். ''அது உங்களைக் குழப்பிடுச்சா? அந்த மூணு பேரும் நம்முள் இறங்கி உலுக்கிவிட வல்லவர்கள்தான்... ஒத்துக்கிறேன். எனக்குள்ளே நான் வியந்திருக்கிறேன்... இந்த அளவுக்கா தங்களைத்

தாங்களே உயர்த்திப் பேசிக்கணும் இதுங்கன்னு! என் அனுபவத்தை வெச்சு சொல்றேன்... நிஜமாவே வஞ்சக வழிகளைத் தெரிஞ்சு வெச்சிருக்கும் எவரும் தற்பெருமை அடிச்சுப்பது கிடையாது. அவங்களுக்குத் தெரிஞ்சிருக்கும் வஞ்சகக் கலைகள் பற்றி - *மவுனம் சாதிச்சுடுவாங்க.* எப்பவும். உங்களுக்கு அந்தக் கலைல ஆழமான சக்தி வாய்ந்த விஷயங்கள் இல்லேனாதான் தூக்கி வெச்சுப் பேசிக்கிட்டேயிருப்பீங்க. இந்த கிராம சூனியக்காரிங்க இருக்காளுங்க பாருங்க, இதுங்க, சரியான பைசா பெறாத பொம்பிளைங்க. எதையாவது மக்களைப் பயமுறுத்தும்படி பேசி, ஒண்ணும் இல்லாத அந்தப் பேச்சின் வாயிலாக எதையாவது சம்பாதிக்கப் பார்ப்பாளுங்க. வீட்டுல கோழி ஏதாவது திடீர்னு செத்துடுச்சுன்னா, 'பார்த்தியா... போன வாரம் என்னை நீ எப்படி கேலி பேசினே... அதான்'னு காரணம் சொல்லிச் சொல்லியே சம்பாதிச்சுடுவாளுங்க. பெல்லா, இந்த மாதிரி வகையாத்தானிருக்கணும். ஆனா, அவ, இந்த வகையை விடவும் கொஞ்சம் உயர்ந்தவளாகவும் இருக்கலாம். ரொம்ப சின்ன வயசிலிருந்தே அவளுக்கு வரமா அமைந்திருக்கும் ஒரு சூனியத் திறமை அப்பப்போ தலை தூக்கி அவளுக்கு உதவிக்கிட்டிருக்கலாம். அப்படிப்பட்ட திறமை வெளி வரும்போது, பயங்கரமா இருக்கும்... ஏன்னா அது ப்ளாக் மேஜிக் எனப்படும் வெறும் கண்கட்டு வித்தை கிடையாது. மத்தவைகளை வியப்பில் ஆழ்த்தி சம்பாதிக்கும் வெட்டு வேத்தா இருக்காது அது. அது - *நிஜம்.* ஸிபில் இதுவரை நான் பார்த்திருக்கும் அசமஞ்சங்கள்ல முதலாமவள் - ஆனா அவ ஒரு சிறந்த மீடியம் - ஆவியை அழைக்க வல்லவள்னு சொல்ல வரேன். தெரஸா, ம்ம்.. எனக்குத் தெரியலே. அவ உங்ககிட்டே என்ன சொன்னா? அவ சொன்ன எதுவோதான் உங்களைக் குழப்பியிருக்குனு நினைக்கிறேன்.''

''நீங்க பழுத்த அனுபவம் மிக்கவர், மிஸஸ் டேனே. அப்படி நீங்க கேட்டவை மற்றும் பார்த்தவை இவற்றை வெச்சு சொல்லுங்க: ஒரு மனிதன், எவ்வித கண்ணுக்குப் புலப்படும் தொடர்புகளும் வைத்துக் கொள்ளாமல், ரொம்பத் தொலைவில் இருக்கும் இன்னொருத்தனை *அழிக்க முடியுமா?''*

மிஸஸ் கேல்த்ராப்பின் கண்கள் சற்று அகண்டன. ''அழிப்பதுனு நீங்க சொல்வதை நான் கொல்வதுனு எடுத்துக்கலாமா? வெறும் உடலால் மட்டும் அழிக்கப்படுவது.''

''யெஸ், பர்ஃபெக்ட்லி!''

''இது ஒரு முட்டாள்தனமான பேச்சுனுதான் நான் சொல்வேன்'' என்றார் மிஸஸ் டேனே.

''ஆஹ்!'' என்றேன் நான் சற்று விடுதலை உணர்வை அனுபவித்தவனாய்.

''ஆனா இந்தக் கருத்துல நான் தப்பாக் கூட இருக்கலாம்'' என்றார் உடனேயே. ''எங்கப்பா ஆகாய விமானமெல்லாம் முட்டாள்தனமான பேச்சு அப்படினார். எங்க அப்பாவோட அப்பா ரயில் என்பதெல்லாம்ஒரு முட்டாள்தனமான பேச்சு அப்படினு பேசியிருக்கலாம்... வாய்ப்பிருக்கு. இவங்க ரெண்டு பேரும் சொன்னதுல தப்பே கிடையாது. ரொம்பச் சரி. அந்த சமயத்துல இந்த ரெண்டு வாகனங்களும் அசாத்தியமானவையா இருந்திருக்கு. ஆனா இவை இப்ப அசாதாரணமானவை கிடையாது. தெரஸா என்ன பண்ணுவேன்னு சொன்னா - ஏதாவது கதிர் வீச்சை அனுப்புவேன்னாளா? மரணக் கதிர்வீச்சு, ஆங்? இல்ல, அந்த மூணும் ஒண்ணா ஒரு நட்சத்திரம் வரைஞ்சு வேண்டிக்குங்களா, தூரத்துல இருக்கிறவன் சாகணும்னு..? வேடிக்கையாயிருக்கு..''

நான் புன்னகைத்தேன்.

''இந்தப் பேச்சு வருவதற்கு முன்னால என்ன நடந்தது? எதுவோ நடந்திருக்கணும்... அதனாலதான் இத்தனை ஆழமான விஷயம் பேசப்பட்டிருக்கு. என்னது அது?''

''ரொம்ப சரி'' என்று அவரைப் பாராட்டினேன் நான். பிறகு, சிக்கனமாக வார்த்தைகளைப் போட்டு ஃபாதர் கார்-மேனின் கொலை பற்றியும் அந்த இரவு க்ளப்பில் உதிர்க்கப்பட்ட *வெளிறிய குதிரை* பற்றியும் விளக்கினேன். டாக்டர் காரிகன் என்னிடம் காட்டிய தாளிலிருந்து நான் எழுதி வைத்திருந்த பெயர்ப் பட்டியலை எனது பாக்கெட்டிலிருந்து எடுத்தேன்.

முகஞ்சுளித்தபடி அப்பெயர்களை ஒருமுறை படித்து முடித்தார் மிஸஸ் டேனே. ''ஓஹோ'' என்றார். ''இவங்களுக்குள்ளே எது பொதுவா இருக்கு?''

''எங்களுக்கு நிச்சயப்படுத்தி சொல்லத் தெரியலே. ப்ளாக் - மெயிலா இருக்கலாம். அல்லது போதை வஸ்து...''

''நான்சென்ஸ்'' என்றார் டேனே கேல்த்ராப். ''அது ஒண்ணும் உங்களைக் கவலைப்படுத்தலே. நீங்க என்ன நினைக்கறீங்க தெரியுமா: அவங்க அத்தனை பேரும் இறந்திருப்பாங்கன்னு! சரியா?''

நான் ஓர் ஆழமான பெருமூச்செறிந்தேன். ''யெஸ்'' என்றேன். ''அப்படித்தான் நான் நம்பறேன். ஆனா அப்படித்தான் உண்மையா

நடந்துடுச்சான்னு எனக்குத் தெரியலே. இதுல மூணு பேர் காலமாகிட்டாங்க. மின்னீ ஹெஸ்கத் - டுபாய்ஸ், தோமாஸீனா டக்கர்டான், மேரி டெலாஃபான்டைன். இந்த மூணு பேரும் படுக்கையிலேயே இயற்கையான முறையில் தவறியிருக்காங்க. இப்படித்தான் நடக்கும்னு தெரஸா சவால் விடறாங்க.''

''அப்படினா... என்ன சொல்ல வரீங்க? தெரஸாதான் இப்படி நடக்கும்படி பண்ணினேன்னு சொல்றாளா?''

''சேச்சே. பெயர்களை உதாரணமா வெச்செல்லாம் அவங்க பேசல. அவங்க நம்பும் இந்த வகை வித்தை அறிவியல் ரீதியா சாத்தியம்தான்னு துள்றாங்க... தட்ஸ் ஆல்.''

''ஆனா முதல் தடவை கேட்கும்போது நமக்கு முட்டாள்தனமா படுது'' என்றார் மிஸஸ் டேனே சிந்தனையோடு.

''எனக்கும் அப்படித்தான் பட்டுது. *வெளிறிய குதிரை* பற்றிய பேச்சுக்கள் என் காதுல விழாம இருந்திருந்தால் நானும் இதையெல்லாம் கேட்டுட்டு பேசாம சிரிச்சுட்டு வந்திருப்பேன்.''

''யெஸ்'' என்ற மிஸஸ் டேனேயின் குரல் ஒலி கம்மியிருந்தது. *''வெளிறிய குதிரை''* - அவர் சற்று நேரம் அமைதியாகிப் போனார். பிறகு தலையை நிமிர்த்தினார். ''*இது* ரொம்ப மோசமானது'' என்றார். ''*இது* ரொம்ப ரொம்ப மோசமானது. இதுக்குப் பின்னாடி என்ன இருக்கோ, எத்தனை பெரிய கூட்டம் இயங்குதோ... அதையெல்லாம் இப்போதைக்கு விட்டுடுவோம்... *இதை* நிறுத்தியாகணும்.''

''யெஸ்.. ஆனா நம்மால மட்டும் என்னத்தைப் பண்ணிட முடியும்?''

''அதுக்கான வழியை நீங்கத்தான் கண்டுபிடிக்கணும். ஆனா காலந்தாழ்த்த இதுல அவகாசம் இல்ல'' என்றபடி சுழலாய் எழுந்து விட்டார் அவர். ''இதுக்குள்ளே நீங்க இறங்கியாகணும். உடனடியா.'' சற்று சிந்தித்தவர் கேட்டார்: ''இதுல உங்களுக்கு உதவும்படியான நண்பர்கள் கிடையாதா?''

நான் யோசித்தேன். ஜிம் காரிகன்? பிஸி மனிதன்... நேரமே இல்லாமல் சுழன்றுக் கொண்டிருப்பவர். மேலும் ஏற்கனவே தன்னாலான முயற்சிகளைத் துவங்கியிருக்கலாம். டேவிட்? ஆனால் டேவிட் இதில் ஒரு வார்த்தையையாவது நம்புவானா? ஹெர்மியா? யெஸ்... ஹெர்மியா இருக்கின்றாள். துல்லியமான மூளை... அதிசயமான சாதுர்யம்.

ஒத்துழைக்கும்படி மட்டும் செய்துவிட்டால் அற்புதமான பலமாக இருக்கத் தக்கவள். ஹெர்மியாவே என் ஆள்.

''யாரையோ நீங்க தேர்ந்தெடுத்திருக்கீங்க போல தெரியுது, குட்.''

சொன்ன மிஸஸ் டேனே விறுவிறுப்பாகவும் கைக்கூடிய ஒரு பிஸினஸைப் பேசுபவரைப் போலவும் ஆனார்.

''நான் அந்த மூணு சூனியக்காரிங்க மேலேயும் கண் பதிச்சுக்கிட்டிருக்கேன். இன்னமும் கூட எனக்கென்னவோ இதுங்கதான் நீங்க தேடும் நிஜமான விடையா தோணலே. இந்த ஸிபில் பொம்பிளை சாப்பிடும்போது பெப்பப்பேனு உளறிய எகிப்தின் விளக்க முடியாத ரகசியங்கள் அங்கிருக்கிற ஒதுக்குப்புறமான மர்மக் கோயில்கள் எல்லாமும் ஏதோ புத்தகத்தைப் படிச்சுட்டு வந்து சுத்தற பூச்சுற்றல் மாதிரித்தான் தோணுது. இது சொல்லும் எல்லா கதையும் வெறும் ப்ளாப்ளா. ஆனாலும் மாய மர்மங்கள் நிறைந்த பிரமிடுகள் இருக்கு... கோயில்களும் இருக்கத்தான் செய்யுது. தெரஸா, ஏதோ ஒரு சக்தியைத் தன்னகப்படுத்தியிருக்கிறா அப்படினு என்னால உணராம இருக்க முடியலே. எதை பற்றியோ நல்லாத் தெரிஞ்சு வெச்சுக்கிட்டு, அதை, அந்த வித்தைகளை, அவ்வப்போது காட்டி, தன்னுடைய பெயரும் புகழும் சமுதாயத்துல உயர்ந்து இருக்கணும்னு உபயோகப்படுத்துகிற மாதிரியும் சில ரகசிய சக்திகளைத் தன் கட்டுக்குள் வெச்சுப் பயன்படுத்துகிற மாதிரியும் தெரியுது. இந்த மக்கள் கூட்டம், விநோத சக்தி இருக்குனு தெரிஞ்சா அவங்களை ஆனு பாக்கும். ஆனா இதுல அதிசயம் என்னன்னா நிஜமாகவே இத்தகைய முழு சக்தியும் பூரணமா கிடைக்கப் பெற்றவங்க துளியும் அலட்டிக்காம சராசரி மனுஷங்களைப் போலவே நம்மள்ல ஒருத்தரா வளைய வருவாங்க என்பதுதான்.''

அவர் சில நொடிகள் மவுனமாகி விட்டு பின்பு சொன்னார்:

''இதெல்லாம் ஒரு பக்கமிருந்தாலும், நமக்கு இப்ப முக்கியமா என்ன தேவைன்னா, ஓர் இணைப்பு... ஓர் லிங்க், இந்த பெயர்களுக்கும் *வெளிறிய குதிரைக்குமான*, லிங்க். கொஞ்சமாவது விளக்கி உதவற மாதிரியான ஒரு தொடர்பு...''

அத்தியாயம் 8

டிடெக்டிவ் இன்ஸ்பெக்டர் லெஜன் வாசலிலிருந்து விசில் சப்தம் வருவதைக் கேட்டார். வருவது டாக்டர் காரிகன்.

எங்கோ நடந்த மோட்டார் வாகன சோதனை பற்றி பேசியபடி வந்தவரிடம் அவ்விஷயத்தில் அதிக ஈடுபாடு காட்டிக் கொள்ளாமல் ''வந்து இதைக் கொஞ்சம் பாருங்களேன்'' என்றார் இன்ஸ்பெக்டர்.

தன்னிடம் தரப்பட்ட கடிதத்தைப் பெற்று வாங்கிக் கொண்டார் டாக்டர் காரிகன். தலைப்பில் எவரெஸ்ட், போர்ன் - மவுத் என்ற இடம் எழுதப்பட்டிருந்தது.

டியர் இன்ஸ்பெக்டர் லெஜன்,

ஃபாதர் கார்-மேன் கொல்லப்பட்ட அன்றைய இரவு அவரைத் தொடர்ந்த மனிதனைப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தால் உங்களைத் தொடர்பு கொள்ளுமாறு நீங்கள் என்னிடம் சொல்லியிருந்தது உங்களுக்கு நினைவிருக்கக்கூடும். என் அலுவலகத்துக்கு அக்கம் பக்கங்களில் நான் ஒரு கண் பதித்து வைத்தபடியே இருந்தாலும் அவன் என் கண்களுக்கு அகப்படவேயில்லை.

இதற்கிடையில், நேற்று, இங்கிருந்து இருபது மைல் போல தள்ளியிருக்கும் சர்ச்சில் நடந்த ஒரு சிறு அளவளாவலுக்கு நான் போயிருந்தேன். மிகப் பிரபலமான டிடெக்டிவ் எழுத்தாளர் மிஸஸ் ஒலிவர் அவருடைய புத்தகங்களுக்கு அவரே கையொப்பமிட்டுத் தரப் போகின்றார் என்ற சேதிதான் என்னை அங்கு இழுத்துப் போனது. துப்பறியும் கதைகளை விடாமல் படிக்கும் வழக்கமுள்ள எனக்கு இப்பெண் எழுத்தாளர் என்றால் ஆர்வம் தாளாது.

எழுத்தாளரைப் பார்க்கப் போயிருந்த நான், ஃபாதர் கொல்லப்பட்ட இரவு என் கடையைக் கடந்துப் போனவனாய் நான் வர்ணித்திருந்த அதே

ஆளை அங்கு பார்த்ததுதான் திடீர் திருப்பமே. அன்றைய இரவுக்குப் பிறகு அவன் ஏதோ ஒரு விபத்தில் சிக்கியிருக்க வேண்டும். ஏனென்றால் ஒரு சக்கர நாற்காலியில் உட்கார்ந்துக் கொண்டு அவனே அதை நகர்த்தியபடி அங்கிருந்தான். அவன் யார் என்று நானாய் அங்கிருந்தவர்களிடம் விசாரித்தபோது அவன் அங்கேயே வசிக்கும் வெனபிள் என்பவன் என்றறிந்தேன். அவன் வசிக்கும் இடம்: பிரின்ஸ் கோர்ட், மச் டீப்பிங். நல்ல பக்கபலமுள்ள ஆள் என சொல்லப்பட்டேன்.

இத்தகவல்கள் உங்களுக்கு ஏதாவது உதவி செய்யும் என்ற எதிர்பார்ப்பில்,

உங்கள் உண்மையான

சக்காரியா ஓஸ்பார்ன்.

''வெல்?''என்று கேட்டார் லெஜன்.

''இப்படியெல்லாம் இருக்காது'' என்று பட்டென்று சொன்னார் டாக்டர் காரிகன்.

''வந்திருக்கும் தகவல்களை அப்படியப்படியே வெச்சுப் பார்க்கும்போது, வெல், சரிதான். ஆனா, எனக்கு நிச்சயமா தெரியலே...''

''அன்றைய ராத்திரி போன்ற மூடுபனி கொட்டும் இரவில் இந்த ஓஸ்பார்ன் பய யாருடைய முகத்தையும் உருப்படியா பார்த்திருக்கவே முடியாது. இது அவனுக்கு எதேச்சையா தென்பட்டிருக்கும் ஓர் ஒற்றுமையாத்தான் எனக்குப் படுது. ஜனங்களைப் பற்றி உங்களுக்குத் தெரியாதது கிடையாது. மளமளனு தகவல் அனுப்புவாங்க - அதே ஆளைப் பார்த்தாச்சுனு. ஆனா, பத்துல ஒன்பது கேஸில, துளி கூட ஒற்றுமை இருக்காது.''

''ஓஸ்போர்ன் மத்த ஜனங்க மாதிரி கிடையாது'' என்றார் லெஜன்.

''அப்ப எப்படிப்பட்டவன் அவன்?''

''அவன் மரியாதை மிகுந்த ஒரு கெமிஸ்ட். நல்ல நடத்தை. மக்களைக் கூர்மையா பார்த்து மறக்கவே மறக்காம பதித்துக் கொள்ளும் திறமை இருக்கு அவனுக்கு. அவனுடைய வாழ்க்கையின் குறிக்கோளே அவன் கடையில ஆர்சனிக் விஷம் வாங்கிட்டுப் போய் தன்னுடைய கணவனைக் கொன்ற ஒரு பொம்பிளையை எப்படியாவது அடையாளம் காட்டிடணும் என்பதுதான்.''

காரிகன் சிரித்து விட்டார். ''அப்படினா, இது நிச்சயமா கற்பனையின் உச்சமேதான்.''

''இருக்கலாம்.''

காரிகன் அவரை விசித்திரமாய்ப் பார்த்தார்.

''அப்ப, இதுல ஏதாவது இருக்கும்னு நினைக்கிறீங்களா? இதை வெச்சுக்கிட்டு மேற்கொண்டு என்ன பண்ணப் போறீங்க?''

''என்ன இடம் அது... ஆங், ப்ரின்ஸ் கோர்ட், *மச் டீப்பிங் கிராமம்.*'' என்று நினைவுபடுத்தியபடி இன்ஸ்பெக்டர் சொன்னார்: ''இந்த முகவரியில வசிக்கும் வெனபிள் எனும் அவனைப் பற்றி சில குறிப்பிட்ட விசாரணைகளைத் தட்டி விடுவதில் ஏதும் குற்றம் கிடையாது.''

அத்தியாயம் 9

மார்க் ஈஸ்ட்டர் – ப்ரூக் பதிந்தவை

I

"எப்படியாப்பட்ட விறுவிறுப்பான சங்கதிகள்லாம் நடக்குது இந்தக் கிராமத்துல!'' என்றாள் ஹெர்மியா.

அப்போதுதான் நாங்கள் டின்னர் முடித்திருந்தோம். ஒரு குவளை கறுப்புக் காபி எங்கள் முன்னால் இருந்தது.

நான் அவளைப் பார்த்தேன். அவள் சொன்ன வார்த்தைகள் கிடையாது நான் எதிர்பார்த்திருந்தவை. கடந்த கால் மணி நேரத்தை என் கதை முழுவதையும் அவளிடம் சொல்வதில் நான் செலவழித்திருக்கிறேன். புத்திசாலித்தனம் பிரதிபலிக்க ஈடுபாடாய் கேட்டு முடித்திருக்கிறாள் அவள். இந்நிலையில் அவள் காட்டும் விளைவுகள் நான் துளியும் எதிர்பார்க்காதவை. அவளுடைய குரலின் 'பாவம்' சாதாரணமாயிருந்தது... அது அதிர்ச்சி அடையவுமில்லை, கலவரப்படவுமில்லை.

''நகரத்துலதான் பரபரப்பான சம்பவங்கள் நடக்குது... கிராமம் டல்லா சோம்பேறித்தனமா கெடக்கும்னு சொல்றவங்க என்ன பேசறோம்னு தெரிஞ்சுதான் பேசறாங்களா!'' - தொடர்ந்துக் கொண்டிருந்தாள் அவள். ''இருளடைஞ்ச குடிசைக்குள்ளே சூனியக்காரிகள்! ஒதுக்குப்புறமான வீடுகள்ல கண்கட்டு வித்தைகள் கொண்டாடப்படுது. மூட நம்பிக்கைகள்னு நாம ஒதுக்கும் இதெல்லாம் கோலாகலமாக கிராமங்கள்ல இடம்பெற்றுக்கிட்டிருக்கு. நடு வயசு கன்னிகள் ஆவிக் கூட்டங்களையும் தானா எழுதும் நிகழ்வுகளையும் பண்ணிக் காட்டிக்கிட்டிருக்காங்க. இதையெல்லாம் வரிசைப்படுத்தி ஒருத்தனால் அருமையான ஒரு தொடர் பண்ண முடியும். இதுல ஏன் நீ உன் கைவரிசையைக் காட்டக் கூடாது?''

''நான் எத்தனை முக்கியமா பேசிக்கிட்டிருக்கேன்னு உனக்குக் கொஞ்சங் கூட ஏறலேனு நினைக்கிறேன், ஹெர்மியா.''

''எனக்கு விளங்குது மார்க்! சொன்ன அத்தனையும் தாள முடியாத அளவுக்கு இண்ட்ரஸ்டிங்தான்... ஆரம்பக் காலங்களில் நடந்தவைகளாக வரலாறு கூறும். ஆனால் இப்ப மறக்கப்பட்டிருக்கும் மர்மங்கள்.''

எரிச்சலான நான் ''இதுல வரலாறு என்ன பதிஞ்சிருக்கு என்பதெல்லாம் எனக்கு தேவையற்றவை'' என்றேன். ''நிதர்சனமா என்ன நடக்குது என்பதுலதான் என் இண்ட்ரஸ்ட். ஒரு தாள்ல எழுதப்பட்டிருக்கும் பெயர்கள்ல என் எண்ணம் குவிஞ்சிருக்கு. அதிலிருக்கும் சில பெயர்களுக்கு என்ன ஆகியிருக்குனு எனக்கு தெரியும். மீதியிருப்பவர்களுக்கு என்ன நடக்கும் அல்லது நடந்திருக்கலாம்?''

''மனசுல எழும் பீதிக்கு நீ அடிமையாகிட்ட மாதிரி உனக்கே தோணலே?''

''நோ'' என்றேன் நான் பிடிவாதமாய். ''எனக்கு அப்படி தோணலே. எனக்கென்னவோ இந்தக் களேபரம் நிஜம்னே தோணுது. மேலும் இப்படி நினைப்பது நான் ஒருத்தன் மட்டுமே கிடையாது. மதகுருவின் மனைவி என் கருத்தை ஒத்துக்கறாங்க.''

''ஓ, அந்தப் பொம்பளை!'' - கடுமையாயிருந்தது ஹெர்மியாவின் குரல்.

''நீ சொல்ற மாதிரி அந்தப் பொம்பளை எனும் கேலியோ விளையாட்டோ கிடையாது அவங்க. அவங்க ஒரு அசாதாரண பெண்மணி. நடக்கும் அத்தனையும் நிதர்சனங்கள், ஹெர்மியா.''

ஹெர்மியா அவளுடைய தோள்களைக் குலுக்கிக் காட்டினாள். ''இருக்கலாம்.''

''ஆனா இன்னமும் நீ அப்படி நினைக்கலே?''

''எனக்கென்னவோ உன்னையும் மிஞ்சி உன் கற்பனைக் கட்டுக்கடங்காம ஆகிடுச்சோனு தோணுது, மார்க். மாய மந்திரம்னு நீ அடிச்சுக்கும் இதெல்லாம் கட்டுக்கதைகளுக்கு உகந்தவை. என்னைப் பொறுத்த வரைக்கும் விளங்காத முட்டாள் விவாதங்கள்.''

''சொன்ன அத்தனையிலும் எந்த வஞ்சகமும் கிடையாது?''

''ரியலி, இருக்காது மார்க்... எப்படியிருக்கும்?''

நான் சற்று நேரம் அமைதியாகிப் போனேன். என் எண்ணம் அலைபாய்ந்தது. ஒளியிலிருந்து இருளுக்கும் பின்பு மீண்டும்

இருட்டுக்குமாய். *வெளிறிய குதிரை* எனும் விளங்கா இருட்டு... ஹெர்மியா விளக்கும் ஒளி. தினசரி நாம் பயன்படுத்தும் விளக்கினைப் போன்று ஒளி தந்தாள். ஆனால் அவ்வொளி வெறுமனே ஒரு செயற்கைப் பல்ப் தரும் ஒளி போலாகிவிட்டால்...

இவ்வெண்ணம் எழுந்ததும் என் புத்தி மீண்டும் பின்வாங்கிக் கொண்டது... தீர்மானமாய்... பிடிவாதமாய்...

''இந்தச் சமாச்சாரத்தின் இண்டு இடுக்கெல்லாம் புகுந்துப் பார்த்திட விரும்பறேன், ஹெர்மியா. என்ன நடந்துக்கிட்டிருக்கு என்பதன் அடியாழம் வரை போயிடப் போறேன்.''

''ஒத்துக்கறேன். நீ அப்படி பண்ணித்தான் ஆகணும். நிச்சயம் விறுவிறுப்பா இருக்கும். நல்லாப் பொழுது போக உதவும்படி அமையும்.''

''பொழுது போக பண்ணும் வேடிக்கை விளையாட்டு கிடையாது இது!'' என்று கூர்மையாய் அடித்தேன் நான். தொடர்ந்தேன்: ''உன்னால எனக்கு உதவியா இருக்க முடியுமானு கேட்க நினைச்சிருந்தேன், ஹெர்மியா?''

''உனக்கு உதவியா? எந்த வகையில?''

''துப்பறிய எனக்கு உதவு. இதெல்லாம் என்னனு அடியாழம் வரை போ.''

''ஆனா, ஓ மார்க் டியர். நான் இப்ப பயங்கர பிஸியால்ல இருக்கேன். பத்திரிகைக்கு அனுப்ப வேண்டிய ஒரு படைப்பு காத்திருக்கு. என் ரெண்டு மாணவர்களுக்கு வாக்கு கொடுத்திருக்கேன்...''

அவள் தன் வேலை பற்றிய பேச்சில் முழு ஈடுபாட்டுடன் ஆழ்ந்து பேசத் துவங்கிவிட, நான் அதை கவனிப்பதை விட்டுவிட்டேன்.

பிறகு ''ஐ ஸீ'' என்றேன். ''ஹவுஸ் ஃபுல்லா இருக்கே.''

''சரியா சொல்லிட்டே'' - என் வேண்டுகோளிலிருந்து முழுவதுமாய் விடுபட்டு விட்டவளானாள் அவள். என்னைப் பார்த்துப் புன்முறுவினாள். மீண்டுமொரு முறை அவளது இளக்காரமான அணுகுமுறையினால் அறையப்பட்டேன் நான். ஒரு சின்னப் பையன் ஒப்பேறாத பொம்மை ஒன்றினைப் பார்த்துக் கேட்கும்போது அவனது தாய் முகத்தில் விளையும் பரிகாசம் இது.

அடித்து நொறுக்க நான் ஒன்றும் சின்னப் பையன் கிடையாது. நான் ஒன்றும் தாய் ஒருத்தியை ஆதரவுக்குத் தேடிக் கொண்டு நிற்கவில்லை... அதுவும் இப்போது நான் சொன்ன தாயைப் போல. என்னுடைய தாய், தயையின் பிறப்பிடம்... ஈர்ப்பவள். அவள் பார்வை படும் எவரும், அவளுடைய மகன் உட்பட, அவளை வைத்துக் காப்பாற்ற வேண்டும் என்றே நினைப்பர்...

கோபம் குறைந்தவனாய் டேபிளின் குறுக்கே பார்வையைப் போட்டு ஹெர்மியாவைப் பார்த்தேன்.

பெரும் அழகு, நல்ல முதிர்ச்சி, கிடைக்க அரிதான புத்திசாலித்தனம், ஏகமாய் கற்றவள். இருந்தும் - இவளை ஒருத்தன் எப்படி வர்ணிக்கலாம்? ஓ, யெஸ், வெறும் கால்வாய் நீர் - ஓட்டமின்றி!

II

மறுநாள் காலை ஜிம் காரிகனைத் தொடர்பு கொள்ள நான் மேற்கொண்ட முயற்சி வெற்றியின்றி ஆனது. நான் ஆறிலிருந்து ஏழுக்குள் என் ஜாகையில்தான் இருப்பேன் என்றும் அவரால் என்னுடன் வர முடியுமானால் சிறு தேநீர் அளவளாவலுக்கு வரலாம் என்றும் சீட்டு ஒன்றினை எழுதி வைத்துவிட்டு வந்திருந்தேன். அவர் ஒரு பிஸி மனிதன்... எனக்கது தெரியும். இத்தனை குறுகிய அவகாசம் தந்துக் கோரும் போது அவரால் ஈவினிங் வர முடியுமா என்பதில் எனக்குச் சந்தேகமே இருந்தது. ஆனால் ஏழடிக்க பத்து நிமிடங்கள் இருக்கும்போது அவர் வந்தார். அவருக்கு ஒரு கோப்பை விஸ்கியினை நான் எடுத்து வரும்போது என்னுடைய படங்கள் மற்றும் புத்தகங்களை அவர் மேய்ந்துக் கொண்டிருந்தார். அவற்றில் என்ன படித்தாரோ தெரியவில்லை... யாராலும் அதிகம் மதிக்கப்படாமல் வேலைப்பளு அதிகம் நெறிக்கும் ஒரு போலீஸ் ஸர்ஜனாக இருப்பதற்குப் பதிலாக தான் ஒரு முகலாயப் பேரரசாகப் பிறந்திருக்கக் கூடாதா என்று இறுதியாகக் குறிப்பிட்டார். இப்படி சொன்னவர் ஒரு நாற்காலியில் தன்னைப் போட்டுக் கொள்ளும்போது, ''ஆனா அவனுங்க எல்லாம் பொம்பிளைங்களால அலைக்கழிக்கப் பட்டிருக்காங்க. அட்லீஸ்ட்... அது எனக்கு இல்ல'' என்று ஆறுதலாய் சொன்னார்.

''அப்ப உங்களுக்கு இன்னமும் கலியாணம் ஆகலையா?''

''அதான் பயமில்லாம இருக்கேன்! உங்க அறையை நீங்க போட்டு வெச்சிருக்கும் கடையை வெச்சு நீங்களும் என் கட்சினே சொல்வேன். ஒரு

மனைவி, சொடுக்குப் போடுவதற்கு முன்னாடி இத்தனை களேபரத்தையும் அழகுபடுத்திடுவா.''

நான், அவர் சற்று முன் வர்ணித்த அளவுக்குப் பெண்களைப் பற்றி தாழ்வான அபிப்ராயம் கொண்டவனல்ல என்றேன். அவருக்கு எதிராயிருந்த நாற்காலியில் எனக்கான கோப்பையோடு போய் அமர்ந்தேன். ''இத்தனை அவசரமா உங்களை நான் எதற்காக பார்க்க விரும்பினேன்னு நீங்க குழம்பியிருக்கலாம்... சொல்லப் போனா, கடைசி தடவை நாம சந்திச்சுக்கிட்ட போது எதைப் பற்றிப் பேசிக்கிட்டிருந்தோமோ அது சம்பந்தமா சில சமாச்சாரங்கள் தளந்தொட்டிருக்கு...''

''என்ன பேசிக்கிட்டிருந்தோம்? ஓ, அஃப்கோர்ஸ்... ஃபாதர் கார் - மேன் பிஸினஸ்.''

''யெஸ். ஆனா அதுக்கு முன்னாடி சொல்லுங்க: *வெளிறிய குதிரை*... இந்த ரெண்டு வார்த்தைகள் உங்களுக்கு எதையாவது உணர்த்துதா?''

''*வெளிறிய குதிரை... வெளிறிய குதிரை...* நோ... அப்படி ஏதும் தோணலே. ஏன்?''

''ஏன்னா, நீங்க என்கிட்டே அப்ப காட்டின பெயர்ப்பட்டியலுக்கும் *வெளிறிய குதிரைக்கும்* தொடர்பு இருக்கலாம். நான் என் நண்பர்களோட ஒரு கிராமத்துப் பகுதிக்குப் போயிருந்தேன். *மச்டீப்பிங்* அதன் பேர். அவங்க என்னை அங்கே ஒரு பழைய *பெப்க்கு*, அல்லது ஒரு காலத்துல *பப்பா* இருந்திருக்கவல்ல *வெளிறிய குதிரை* அப்படிங்கிற வீட்டுக்கு அழைச்சுட்டுப் போனாங்க.''

''ஒரு நிமிஷம், ஒரு நிமிஷம். *மச்டீப்பிங்? மச்டீப்பிங்*... இது போர்ன் -மவுத் பகுதிக்குப் பக்கத்துலேயா இருக்கு?''

''போர்ன் - மவுத்திலிருந்து கிட்டத்தட்ட பதினைந்து மைல்கள் வரும்.''

''அங்கே வெனபிள் அப்படிங்கிற ஒருத்தரைச் சந்திக்கும் வாய்ப்பு உனக்குக் கிடைச்சிருக்காதுனு நினைக்கிறேன்..''

''அஃப்கோர்ஸ், கிடைச்சது.''

''நீ சந்திச்சியா?'' - காரிகன் ஏதோவொரு கிளர்ச்சியின் காரணமாக நிமிர்ந்து உட்கார்ந்தார். ''வித்தியாசமான பகுதிகளுக்குப் போய் வரும் ட்ரிக் தெரிஞ்சு வெச்சிருக்கும் கில்லாடி நீ! அவன் எப்படிப்பட்டவனா தெரிஞ்சான்?''

''அவர் நிச்சயமா ஒரு குறிப்பிடப்பட வேண்டிய மனுஷர்தான்.''

''அவர், ஆங்? ஓகே, எந்த வகையிலே குறிப்பிடும்படியா தெரியறார் அவர்?''

''அடிப்படையில. அவருடைய குணாதிசயத்தால. போலியோவால அவர் முழுக்கவும் ஊனமானவரா இருந்தபோதும் கூட...''

காரிகன் என்னைக் கறாராய் இடைமறித்தார். ''என்ன?''

''கொஞ்ச நாளைக்கு முன்னாடி போலியோ போன்ற வாதநோய் அவரை தாக்கியிருக்கு. இடுப்புக்குக் கீழ் பகுதி முழுக்க அவருக்கு வாதங்கண்டிருக்கு.''

நம்ப முடியாத தினுசில் தன்னைத் தானே அப்படியே இருக்கையில் புதைத்துக் கொண்டார் காரிகன். ''இது எல்லாத்தையுமில்ல சுக்குநூறா ஆக்குது! அது மட்டும் உண்மையா இருந்துடக் கூடாதானுல்ல நான் தவிச்சுக்கிட்டிருக்கேன்.''

''எது மட்டும்? நீங்க என்ன பேசறீங்கன்னே எனக்கு விளங்கலே.''

''டிடெக்டிவ் இன்ஸ்பெக்டர் லெஜனை நீ பார்க்கணும்'' என்றார் அவர். ''நீ இப்ப தந்த தகவலால அவர் கதிகலங்கிப் போயிடுவார். கவனி: கார் - மேன் கொல்லப்பட்ட பிறகு, அன்னிக்கு ராத்திரி அவரை யாராவது சந்து பொந்துல பார்த்திருந்தால் அது பற்றித் தகவலைத் தருமாறுக் கோரியிருந்தார் இன்ஸ்பெக்டர். வழக்கமா எதிர்பார்ப்பது போல, வந்த பதில்கள் எல்லாமே பிரயோஜனமில்லாமத்தானிருந்தன. ஆனா ஓஸ்பார்ன் அப்படினு ஒரு மெடிக்கல் கடைக்காரன்... அந்தப் பகுதியில அவனுக்கு ஒரு கடையிருக்கு. அவன், அந்தப் பக்கமா கார்-மேன் சம்பவ இரவன்று கடந்துப் போனதா தகவல் தந்திருக்கான். அவரை நெருக்கமா பின்தொடர்ந்துக்கிட்டு ஓர் ஆள் போனதைக் கவனிச்சதாகவும் கூடவே அவன் சொல்லியிருக்கான். அஃப்கோர்ஸ், இதுல பாதகமா எதையும் அவன் அப்ப நினைக்கலை. இந்த நிலையில ரெண்டு மூணு நாட்களுக்கு முன்னாடி ஓஸ்பார்ன் கிட்டேயிருந்து ஒரு கடிதம் லெஜனுக்கு வந்திருக்கு. இப்ப அவன் கடை கண்ணியையெல்லாம் வித்துட்டு தனியா இருக்கான். அவன் ஏதோவொரு லோக்கல் நிகழ்ச்சிக்குப் போயிருந்தானாம். நம்ம தேடல்ல இருக்கும் அந்தப் பின்தொடர்ந்த ஆளை அவன் அங்கே பார்த்ததா சொல்றான். அதே நிகழ்ச்சியில அந்த ஆள் சக்கர நாற்காலியிலே வந்திருந்ததா கடிதத்துல குறிப்பிட்டிருக்கான். அவன் யார்னு ஓஸ்பார்ன் அங்கேயே விசாரிச்சப்ப அவன் பேர் வெனபிள்னு சொல்லியிருக்காங்க.''

இப்போது அவர் என்னைக் கேள்விக்குறியாய் பார்த்தார். நான் ஒப்புதலாய் தலையசைத்தேன்.

''கரெக்ட்தான்'' என்றேன். ''அவன் வெனபிள். அவன் நிகழ்ச்சியில இருந்தான். ஆனா ஃபாதர் கார்-மேனைப் பின் தொடர்ந்துக்கிட்டு மருந்துக் கடையிருக்கும் பாடிங்டன் சாலையில் அவன் நடந்திருக்க வாய்ப்பே கிடையாது. உடல் ரீதியா இது சாத்தியமே இல்ல. ஓஸ்பார்ன் தப்பு பண்ணியிருக்கணும்.''

''ஆனா ஓஸ்பார்ன் அந்த ஆளை நுணுக்கமா விவரிக்கிறார். உயரம், ஆறடியை ஒட்டி. துருத்திக் கொண்டு முன்னால் விழும் மூக்கு. ஆப்பிள் போன்ற முகவாய். சரியா?''

''யெஸ். இதெல்லாம் அச்சா வெனபிள்ளுக்குப் பொருந்தது. இருந்தாலும் கூட...''

''புரியுது. தன்னைப் பற்றி தான் சொல்லிக் கொள்வது போல தான் பார்த்தவர்களை அடையாளம் சொல்வதில் ஓஸ்பார்ன் ஒண்ணும் அத்தனை திறமைசாலியா இல்லாம இருக்கலாம். உருவ ஒற்றுமையின் காரணமாக அவன் தப்பா ஒரு முடிவுக்குத் தள்ளப்பட்டிருக்கலாம். யெஸ். ஆனா, நீ இவ்ளோ தூரம் உடனடியா ஓடி வந்து அதே சமாச்சாரத்தை என் மேல போடுவதுதான் என்னைக் குழப்புது. இதுக்கு நடுவுல *வெளிறிய குதிரை*, நோஞ்சான் கழுதையெல்லாம் வேற! என்னது அது *வெளிறிய குதிரை?* நான் முதல்ல அதை தெரிஞ்சுக்கிறேன்.''

''நீங்க அதை நம்ப மாட்டீங்க'' என்று அவரை நான் ஆரம்பத்திலேயே எச்சரித்து விட்டேன். ''நானே அதை இன்னும் முழுக்க நம்பினபாடில்லை.''

''கம் ஆன், நம்புவது நம்பாதது அப்புறம். சொல்லு...''

தெரஸா க்ரேயுடனான என் உரையாடல்களை அப்படியே நான் சொன்னேன். அவருடைய விளைவுகள் துரிதமாய் இடம் பெற்றன.

''எத்தனை நம்ப முடியாத விஷயங்கள்..!''

''அப்படித்தானே?''

''இதிலென்ன சந்தேகம்? அப்படியேதான். உனக்கு என்ன ஆச்சு மார்க்? ஆவியுடன் தொடர்பு கொள்ளவல்ல மீடியா ஒருத்தி... ஒரு லோக்கல் சூனியக்காரி... நிச்சயம் சாகடிக்கவல்ல ஆயுதம் பொருந்திய கதிரை அனுப்பவல்ல ஒரு நடுத்தர வயது கன்னி... இதெல்லாம் பைத்தியக்காரத்தனங்கள், மேன்.. முழு பைத்தியக்காரத்தனம்!''

''யெஸ்.. இது பைத்தியக்காரத்தனம்தான்'' என்றேன் நான் கனமான அழுத்தமாய்.

''ஓ... நான் சொல்வதை நீ இப்படி ஏற்றுக் கொள்வதை நிறுத்து, மார்க். நீ ஆழ்ந்து ஒத்துக்கும் விதத்துலேயே இப்ப நீ சொன்ன விஷயத்துக்குள்ளே என்னவோ இருக்குனு என்னை நினைக்க வெக்கிறே. நீ இதுல என்னவோ இருக்குனு நிச்சயமா நம்பறே... உண்டுதானே?''

''இதுக்கு, முதல்ல நான் உங்களை ஒரு கேள்வி கேட்கிறேன். ஒவ்வொருத்தருக்குள்ளும் சாகணும்னு ஆழ்மனசுல இருக்கும் வேட்கை பற்றி. இதுல ஏதாவது அறிவியல் ரீதியான நிரூபணம் இருக்கா?''

காரிகன் சில நொடிகள் தயங்கினார். பிறகு பேசினார்: ''நான் மனநோய் மருத்துவன் கிடையாது. உனக்கும் எனக்கும் மட்டும் சொல்லிக்கிறேன்... இந்த மனநோய் டாக்டருங்கள்ல பாதி பேர் அதிகப்பிரசங்கி. தியரி தியரினு ஏட்டுச் சுரைக்காயைப் பிடிச்சுக்கிட்டே அலைவானுங்க. ரொம்ப ஆழத்துக்குப் போய் பேசுவானுங்க. வெறும் காசுக்காக ஒரு கிழவியைப் போட்டுத் தள்ளிய ஒருத்தனை கை மேல் வெச்சுக்கிட்டு அவன் ஏன் கொன்னான்னு விளக்க ஒரு மனநல மருத்துவரை கோர்ட்டுக்கு அழைச்சு சாட்சி சொல்ல வைப்பதை எங்க போலீஸ் என்னிக்குமே சகிச்சுக்காது. பக்கம் பக்கமா பேசுவானுங்க பயலுங்க... இதைப் பார்த்தால், மனநோய் மருத்தவனுங்களுக்குத்தான் மனநோய் போல தெரியும்.''

''உங்களுடைய தியரி ரொம்ப உசத்தி, ஆங்?''

அவர் முறைத்தார். ''ஆல்ரைட், ஆல்ரைட். நானும் தியரியைப் போட்டு பேசறவந்தான். ஒத்துக்கிறேன். ஆனா என்னுடைய தியரிக்குப் பின்னாடி அழுத்தமான இயற்பியல் நிருபணங்கள் இருக்கு - அது மட்டும் என்னனு என்னால பிடிக்க முடிஞ்சுட்டா! ஆனா நீசொன்ன இந்த ஆழ் மன நிலை இத்யாதி இத்யாதி எல்லாம் - ஊஃப்ப்ப்!''

''இதையெல்லாம் நீங்க அப்ப நம்பலே?''

''அஃப்கோர்ஸ், நானும் நம்பறேன். ஆனா இதையெல்லாம் இந்த பயலுங்க ஆழத்துக்கு எங்கேயோ போய் நின்னுக்கிட்டு விளங்கிக்க முடியாம பேசுவானுங்க. இதைத்தான் நான் சொல்ல வரேன். இப்ப நீ சொன்னியே, 'அடி மனத்துல் மரண ஆசை'னு... இருக்கலாம். நமக்குள்ளே இந்த நாமறியா வெறி இருக்கலாம். ஆனா இப்படி பிரமாதமா போட்டு இஷ்டத்துக்கு டம்பம் அடிச்சுக்கிற அளவுக்கு இருக்குமா... தெரியலேப்பா...''

''ஆனா இப்படிப்பட்ட சங்கதி இருக்கு'' என்று நச்சரித்தேன் நான்.

''அப்படினா இதுகுறித்து ஒரு மனயியல் புத்தகத்தை வாங்கிப் படிச்சு தெரிஞ்சுக்க.''

''இதுபோல படிச்சு தெரிஞ்சுக்க வேண்டிய அத்தனையையும் நான் படிச்சு தெரிஞ்சுக்கிட்டாச்சுனு சொல்றாங்க, தெரஸா.''

''தெரஸா க்ரே!'' என உறுமினார் அவர். ''பாதி மரை கழன்று போயிருக்கும் ஒரு முதிர் கன்னிக்கு உளவியல் பற்றி என்ன தெரிஞ்சிருக்கும்?''

''அவங்களுக்கு நிறைய தெரியும்கிறாங்க அவங்க.''

''நான் முன்னாடி சொன்னது மாதிரி - டம்பம்... நம்ப முடியாத விஷயங்கள்!''

''இதையேதான்...'' என்ற நான் அழுத்தமாய் தொடர்ந்து சொன்னேன்: ''இதுவரைக்கும் நாமறிந்து வெச்சிருக்கும் அறிதல்களுக்குள் அடங்காத எந்தவொரு புதுக் கண்டுபிடிப்பையும் மக்கள் முதல்ல இப்படித்தான் சொல்லியிருக்காங்க - *நம்ப முடியாத விஷயம்!*''

''ஆக மோதறதுனே முடிவா இருக்கே!''

''நாட் அட் ஆல். அப்படி நினைச்சுடாதீங்க'' என்றேன் நான். ''இதுக்கு அறிவியல் ரீதியா ஏதாவது நிரூபணம் இருக்கானு ஜஸ்ட் நான் தெரிஞ்சுக்க விரும்பினேன்... தட்ஸ் ஆல்.''

மூச்சுக் காற்றை ஆங்காரமாய் வெளியிட்டார் காரிகன். ''கண்றாவிப் பேச்சு.''

''கண்றாவியாவே இருந்துட்டுப் போகட்டும். நான் ஏதாவது மருத்துவ சாட்சி கிடைக்குமானு பார்த்தேன். வேற ஒண்ணும் கிடையாது.''

''நீ அடுத்து அந்தப் பொம்பளை ஒரு ராட்சஸிம்பே.''

''எதுக்காக அப்படிச் சொல்லணும்?''

''இப்படி பேசப்படும் பொம்பளைங்க, எதையும் விழுங்கிவிடும் திறன் கொண்டிருப்பாங்களாம். அதனால...''

''ப்ச்... என்ன பேச்சு இது! சரி விடுங்க. அந்தப் பெயர் பட்டியலை வெச்சுக்கிட்டு மேற்கொண்டு நீங்க எப்படி எந்த திசையிலே போய்க்கிட்டிருக்கீங்கனு எனக்கு சொல்லக் கூடாதா?''

''எனக்காக சிலர் கடுமையா உழைச்சுக்கிட்டிருக்காங்க. ஆனா இதெல்லாம் மெச்சூர் ஆக நாளாகும். முகவரியில்லாத பெயர்கள்...

அல்லது இயற் பெயர் அல்லாத அதே நபரின் ரெண்டாவது பெயர்கள்... இதையெல்லாம் வெச்சுக்கிட்டு அடையாளம் காண்பதென்பது அத்தனை சுலபமா?''

''இதை நாம மாறுபட்டக் கோணத்திலிருந்து அணுகுவோம். உங்ககிட்டே என்னால ஒரு பந்தயம் வெக்க முடியும். ஒரு குறுகிய காலகட்டத்துக்குள்ளே - ஒரு வருஷத்திலிருந்து ஒன்றரை வருஷத்துக் குள்ளேனு வெச்சுப்போமே - இதுக்குள்ளே, அந்த பட்டியல்ல இருந்த *ஒவ்வொரு பெயரும் ஒவ்வொரு மரணச் சான்றிதழ்ல இடம் பெற்றிருக்கு.* நான் சரிதானே?''

விசித்திரமாய் என்னைப் பார்த்தார் அவர். ''நீ, ரொம்ப சரி, யெஸ்.''

''அவங்க அத்தனை பேருக்கும் பொதுவா இருக்கும் ஒரே விஷயம் அதுதான் - *மரணம்.*''

''ஆனா, இந்த மாதிரி நமக்கு அர்த்தமாகும் இது, அப்படியே உண்மையா இருந்துவிட முடியாது, மார்க். இங்கே பிரிட்டன்ல ஒவ்வொரு நாளும் எத்தனை பேர் இறக்கிறாங்க எனும் கணக்கு உன்கிட்டே இருக்கா? மேலும் இதுல பல பெயர்கள் பொதுவான பெயர்கள், உதவ இயலாதவை. சிக்கல்யப்பா.''

''டெலா ஃபான்டைன்'' என்றேன் நான். ''மேரி டெலா - ஃபான்டைன். இது அப்படியொண்ணும் ஒரு பொதுப் பெயர் கிடையாது. ஒத்துக்கிறீங்களா? இவங்களோட இறுதிக் காரியங்கள் போன செவ்வாய் நடந்திருக்கு. சேதி சேகரிச்சிருக்கேன்.''

என் மீது ஓர் அவசரப் பார்வையைப் பதித்தார் டாக்டர். ''இதெப்படி உனக்குத் தெரியும்? பேப்பர்ல பார்த்திருக்கணும்.''

''அவங்களோட ஒரு ஃப்ரெண்ட் மூலமாகவே நான் கேள்விப் பட்டேன்.''

''அவங்க மரணத்துல விளங்காத ஒண்ணும் கிடையாதுப்பா. என்னால உறுதியா இதைச் சொல்ல முடியும். சொல்லப் போனா போலீஸ் துப்பறிஞ்சுக்கிட்டிருக்கும் எந்த மரணத்திலுமே கேள்விக்குரிய எந்த வில்லங்கங்களும் இல்லை. இதெல்லாம் ஏதாவது விபத்தா நிகழ்ந் திருந்தால், சந்தேகப்படலாம். ஆனா அத்தனையும் முழுசா நார்மல் மரணங்கள். நிமோனியா, மூளை ஸ்தம்பித்தது, மூளையில் புற்று, வாதம் - இதுல எதுவும் துளி சந்தேகத்துக்குக் கூட வழி தரலே.''

நான் ஒப்புதலாய் தலையசைத்தேன். ''விபத்து நடக்கலே'' என்றேன் நான். ''விஷம் வெச்சும் நடக்கலே. வெறும் சுகவீனம் மரணம் வரைக்கும் கொண்டு போயிருக்கு. ஒவ்வொருத்தர் கேஸிலும், ஜஸ்ட், இப்படித்தான் நடக்கும்னு தெரஸா அறுதியிட்டு சொல்வது போலவே.''

''அப்ப என்ன சொல்ல வரே? அந்தப் பொம்பளைக்கு அறிமுகமே இல்லாம பல மைல் தூரம் தள்ளியிருக்கும் ஒருத்தருக்கு நிமோனியா வர வெச்சு கொன்னுட முடியும்னா சொல்ல வரே?''

''நான் அப்படி எதையும் சொல்ல வரலே. அவங்க சொல்றாங்க. இது அற்புதமான கற்பனை நினைச்சு, இதெல்லாம் சாத்தியமே கிடையாதுனு நினைக்கவே நானும் விரும்பறேன். ஆனா இந்த முழு கேஸிலும் சில விறுவிறுப்பான அம்சங்கள் இருக்கே. *வெளிறிய குதிரை* பற்றி சொல்லப்பட்டிருக்கு - தேவையற்ற ஒருத்தனை முழுக்கவும் அகற்றி விடும் கோணத்தில். பிறகு பார்த்தால் *வெளிறிய குதிரை* அப்படினு ஓரிடம்இருக்கு... அங்கே ஒரு பொம்பளை வேண்டாத ஒருத்தனை இல்லாம பண்ணிட முடியும்னு காலரைத் தூக்கிக்கிட்டு வாழ்ந்துக்கிட்டும் இருக்கா. இதுக்குப் பக்கத்துலேயே ஒருத்தன் வசிச்சுக்கிட்டு இருக்கான்; அவனைத்தான், 'பெரும் துரோகம்' ஒன்றினைப் பற்றிச் சொல்லிவிட மரணப் படுக்கையிலிருந்த ஒரு பெண்மணி அழைத்ததால் அவளைப் பார்க்கப் போன ஃபாதர் கார்-மேனை சம்பவ இரவன்று பின்தொடர்ந்துக் கிட்டுப் போன மனுஷன் அப்படினு அடையாளம் காணப்பட்டிருக்கு. இது எல்லாம் எதிர்பாராம பொருந்தி நிக்குது... உங்களுக்குத் தெரியலே?''

''அந்த ஆள் வெனபிள்ளாக இருக்க முடியாது... நீ சொன்னதன்படி அவன் பல வருடங்களா வாதங்கண்டிருக்கான்.''

''மருத்துவ ரீதியா, அந்த வாதம், ஒருபோலியா இருக்கும் வாய்ப்புகள் கிடையாதா?''

''கிடையவே கிடையாது. எலும்புகள் சத்தற்று சூம்பிப் போயிருக்கும்.''

நான் ஒப்புதலாய் தலையசைத்துவிட்டு பெருமூச்செறிந்தேன். ''சிக்கலேதான்'' என்றேன். ''ஒருவேளை, 'மனிதர்களை அகற்றுதல்' அப்படினு ஏதாவது ஒரு நிறுவனம் இயங்கிக்கிட்டிருந்தால், அதை வழிநடத்தும் மூளையாகத்தான் என்னால வெனபிள்ளைப் பார்க்க முடியுது. அவர் வாங்கி வீட்டுல வெச்சிருப்பதா காட்டின அத்தனை சமாச்சாரங்களும் மிக மிக அதிகமான பண முதலீட்டைக் காட்டுது. எங்கிருந்து அந்த அத்தனை பணமும் அவருக்கு வந்தது?''

சற்று தாமதித்தேன். பிறகு கேட்டேன்: ''அவங்கவங்க படுக்கையில எந்தவிதமான சந்தேகங்களுக்கும் இடம்தராம மரணமடைஞ்சிருக்கும் இந்த இத்தனை பேரின் இறப்புகளால் - பலனடையும் யாராவது உண்டா?''

''கொஞ்சமாகவோ இல்ல அதிகமாகவோ... மரணத்தால யாராவது லாபம் அடையத்தான் செய்வாங்க. சந்தேகப்படும்படியான ஏதாவது சூழல் தட்டுப்படலேனு இதை கேட்கிறியா?''

''தெரியலே.''

''லேடி ஹெஸ்கத்- டுபாய்ஸ், அம்பதாயிரம் பவுண்ட்டை மொத்தமா விட்டிருக்காங்க. இது உனக்கே தெரியும். அவங்க சகோதர அல்லது சகோதரியின் பொண்ணு ஒருத்தியும் பையன் ஒருத்தனும் இதனால பயனடையறாங்க. பையன் கனடாவுல வசிக்கிறான். பொண்ணுக்குக் கலியாணம் ஆகிடுச்சு... வட இங்கிலாந்துல இருக்கா. ரெண்டு பேருக்கும் பணம் போகுது. தோமாஸினோ டக்கர்டானுக்கு அவ தந்தை வழியில ரொம்ப நிறைய செல்வம் இருக்கு. இருபத்தியொரு வயதுக்கு அவ திருமணம் ஆகாம தவறிட்டானா அந்த அத்தனை சொத்தும் அவளோட வளர்ப்பு தாயாருக்குப் போகுது. இந்த வளர்ப்புத் தாயார் குற்றங்குறை இல்லாத பொம்பளையாத் தெரியறா. அப்புறம் நீ சொல்லும் மிஸஸ் டெலா - ஃபான்டைன் இருக்கா. கஸினுக்கு விடப்பட்டுள்ள தொகை...''

''ஆ, யெஸ், யாரந்த சகோதர முறை?''

''பொண்ணு. கென்யாவில இருக்கா. புருஷனோட...''

''எல்லாம் இங்கே இருக்காம எங்கேயோ இருந்திருக்குங்க'' என்று குறிப்பு தந்தேன் நான்.

காரிகன் என் மீது எரிச்சலான பார்வையை வீசினார். பேசினார்: ''கைல இருக்கும் மூணு சாண்ட் - ஃபார்களில், ஒருத்தன், அவனை விடவும் ரொம்ப இளைய மனைவியை விட்டுட்டு ஓடிப் போயிருக்கான். அவளும் சீக்கிரத்துலேயே இன்னொரு கல்யாணம் கட்டியிருக்கா. இன்னொரு பய... அவன் பேர் ஸிட்னி ஹெர்மண்ட் - ஓர்த்... இவன், ப்ளாக் - மெயில் பண்ணிப் பண்ணியே சொத்து அத்தனையும் சேர்த்திருக்கணும்னு சந்தேகப்படுது போலீஸ். உயர் மட்டத்துல இருக்கும் பல பேர் இவனோட மரணத்தால நிம்மதிப் பெருமூச்சு விட்டிருக்கணும்.''

''மொத்தத்துல, இந்த அனைத்து மரணங்களும் வசதியாக இடம் பெற்ற மரணங்கள் அப்படினு சொல்ல வரீங்க... இருக்கட்டும். காரிகன் பற்றி?''

காரிகன் முறைத்தார். ''காரிகன் ஒரு பொதுப் பெயர்ப்பா. அதே பேர்ல நிறைய காரிகன்கள் செத்திருக்காங்க. ஏகமா பலனடைஞ்சா மாதிரி என்னோட தகவல்களுக்கு உட்பட்டு எவனும் தெரியலே.''

''அப்படினா ஒண்ணு மட்டும் விளங்குது. நீங்கதான் அந்த அடுத்த பசையுள்ள காரிகன். பத்திரமா இருங்க.''

''அது எனக்குத் தெரியும். எனக்கு அல்சரையோ அல்லது விஷக் காய்ச்சலையோ உண்டு பண்ணி உன்னோட டியர் சூனியக்காரி கொன்னுடுவானு நினைக்காதே. என்னைப் போன்ற இரும்பு டாக்டர்கிட்டே நடக்காது!''

''ப்ச், கவனிங்க, ஜிம். தொடர்பே வெச்சுக்காம, உள ரீதியா கொல்ல முடியும்னு தெரஸா சொல்லும் இதை நான் ஆராய்ந்தே தீரணும். நீங்க உதவுவீங்களா?''

''நோ, நான் மாட்டேன்! உன்னைப் போன்ற நல்லா படிச்சு தெளிந்துள்ள ஒருத்தன் இப்படிப்பட்ட வெறும் கட்டுக்கதை ஒண்ணுக்குள்ளே போய் விழுந்திட்டியேனு என்னால நம்பவே முடியலே, மார்க்.''

நான் பெருமூச்சு விட்டேன். ''வேற மாதிரி விமர்சனம் பண்ணக் கூடாதா? இதையே கேட்டுக் கேட்டுக் காது புளிச்சுப் போச்சுப்பா.''

''உடும்புப் பிடி பிடிவாதக்காரன்... இது பிடிக்குதா!''

''ரொம்ப!'' என்ற நான் சிந்தனையாய் சொன்னேன்: ''இந்த விஷயத்துல யாராவது ஒருத்தர் இப்படி இருந்துத்தான் ஆக வேண்டியிருக்கு.''

அத்தியாயம் 10

மார்க் ஈஸ்ட்டர் – ப்ரூக் பதிந்தவை

க்ளென் - டவர் க்ளோஸ், மிக மிக புதிதாய் இருந்தது. ஒரு அரை வட்டமாய் விரிந்து வியாபித்திருந்த இதன் கடைக் கோடியில் இன்னும் ஆட்கள் வேலை செய்துக் கொண்டிருந்தார்கள். அதனுள் பாதி வழி கடந்திருந்த இடத்தில் எவரெஸ்ட் என கடைந்திருந்த ஒரு பெயர்ப் பலகை இருந்தது.

அங்கிருந்த தோட்டத்தின் விளிம்பில், செடிகள் சிலவற்றை நட்டபடி, வட்ட வடிவ பின்புறம் அமைந்திருந்த ஒருவன் தெரிந்தான். அதிக சிரமமின்றி அதுதான் சக்காரியா ஓஸ்பார்ன் என்று அடையாளம் கண்டு கொண்டார் இன்ஸ்பெக்டர் லெஜன். கேட்டைத் தள்ளிக் கொண்டு முன்னேறினார். குனிந்திருந்த நிலையிலிருந்து எழுந்து நிமிர்ந்த ஓஸ்பார்ன் தனது எல்லைக்குள் நுழைந்திருப்பது யார் என்று பார்த்தான். அது யாரென்று தெரிந்ததும், ஏற்கெனவே ரோஜா நிறத்திலிருக்கும் அவனுடைய முகத்தில் சந்தோஷ ரோஸ் இன்னும் கூடியது. குண்டான ஷூக்களும் முழுக்கை சட்டையும் அணிந்திருந்தான். கவிழ்த்து வைத்த பாத்திரமாய் இருந்த வழுக்கை தலையில் வியர்வை முத்துக்கள். வந்திருப்பவரைப் பார்க்க அருகில் வந்து சேருமுன் அந்த வியர்வை முத்துக்கள் சரம் கட்டி நின்றன.

உற்சாகமாய், ''இன்ஸ்பெக்டர் லெஜன்!'' என ஆச்சரிய வார்த்தைகளை சொன்னான். ''இது எனக்கு தரப்படும் கவுரவமா நான் எடுத்துக்கிறேன். நிச்சயமா, ஸார். என் கடிதம் கெடச்சதுனு நீங்க போட்ட பதில் எனக்கு வந்தது. ஆனா உங்களை நேருக்கு நேரா சந்திப்பேன்னு நான் நெனச்சே பார்க்கலே. என் சிறு பிரதேசத்துக்கு, வெல்கம். எவரெஸ்டுக்கு நல்வரவு. இந்த பேர் உங்களை ஆச்சரியப்படுத்தலாம், இல்லையா? எனக்கு இமயமலைகள் மேல எப்பவுமே ஆழ்ந்த ஈடுபாடு உண்டு. எவரெஸ்ட் ஆராய்ச்சியின் ஒவ்வொரு நுணுக்கமான சேதிகளைக்கூட விடாது நான் கவனிச்சு வெச்சிருக்கேன். நம்ம நாட்டுக்கு எப்படியாப்பட்ட ஒரு புகழ்! சர்

எட்மண்ட் ஹில்லாரி! என்ன ஒரு சாதனையாளன்! என்ன தெம்பு! தனிப்பட்ட வசதிகளை இழக்கவே விரும்பாம வாழும் இந்த சமுதாயத்து மக்களுக்கு நடுவுல, துருவப் பிரதேசத்துப் பனியிடங்களுக்கும், இமாலயம் போன்ற பனிமலைகளுக்கும் தேடுதலாய் ஆய்வு மேற்கொண்டு போகும் இப்படிப்பட்ட வீரதீரர்களுக்கு எப்போதும் என் வந்தனங்கள். ஆங்... ப்ளீஸ் உள்ளே வாங்க. வந்து என் சிறு அளவளாவலில் கலந்துக்குங்க.''

முன்னால் நடந்துப் போனபடி சிறு பங்களா ஒன்றின் உள்ளே இன்ஸ்பெக்டரை அழைத்துப் போய் விட்டான், மிஸ்டர் ஓஸ்பார்ன். படு சுத்தமாயும் பழுதற்றும் பராமரிக்கப்பட்டிருந்தது முன்னறை. ஆயினும் ஆங்காங்கே மரச் சாமான்கள்.

''இன்னும் ஒழுங்குபடுத்தி முடிக்கலே'' என்றான் ஓஸ்பார்ன். ''லோக்கல்ல நடக்கும் சந்தைக்கு வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் போவேன். கடையில வாங்குற விலையை விட கம்மியா வெறும் கால் பங்கு விலையில பொருட்களை வாங்கிட முடியும். தரமா. இப்ப உங்களுக்கு என்ன வேணும்? பழச்சாறா? பீர்? சூடா, டீ?''

லெஜன் பீர் பக்கம் ஓட்டளித்தார்.

இரண்டு பெரிய பீங்கான் கோப்பைகளோடு சில கணங்களில் திரும்பியிருந்த அவன், ''இதோ, கேட்டது'' என்றபடி ஒன்றைத் தந்தான். ''உட்கார்ந்துக்கிட்டு மீதியைப் பேசுவோம். எவரெஸ்ட்! ஹா ஹா...''

தற்சமயம் நம்பிக்கையோடு முன் வளைந்து வந்தான் ஓஸ்பார்ன். ''நான் தந்த தகவல் உங்களுக்கு உதவிகரமா இருந்ததா?''

பதிலடியை எத்தனை மிருதுவாக ஆக்க முடியுமோ அப்படி ஆக்கித் தந்தார் லெஜன். ''மன்னிக்கணும்... நாம எதிர்பார்த்த அளவுக்கு அமையலே.''

''ஆஹ்... இது என்னை அதிருப்தியாக்குது. யெஸ்! ஃபாதர் கார்-மேன் பின்னால அவர் போன திசையிலேயே போன ஒருத்தன் அவரைக் கொல்லத்தான் போயிருப்பான் என்பதுல நெஜமாவே இப்ப எனக்கு நம்பிக்கை இல்லாவிட்டாலும், அதிருப்தியாயிருக்கு. அப்படி எதிர்பார்ப்பதும் கொஞ்சம் ஓவர்தான், இல்லையா! நல்ல மதிப்பு மரியாதையுள்ள வட்டத்துக்குள்ளே இயங்கும் இந்த வெனபிள்ளும் நல்லவன்னு லோக்கல் மக்களால ரொம்பவும் பேசப்படுவதா கேள்விப்பட்டேன்.''

''இதுல சமாச்சாரம் என்னன்னா'' என்று விஷயத்துக்குள் நுழைந்த இன்ஸ்பெக்டர் லெஜன் சொன்னார்: ''அன்னிக்கு சாயந்திரம் நீங்க பார்த்த ஆசாமி வெனபிள்ளா இருக்க முடியாது என்பதுதான்.''

''ஓ.. ஆனா அது அவர்தான். எனக்குள்ளே இதுல துளியும் சந்தேகமே கிடையாது. ஒரு முகத்தை நான் எப்போதும் தப்பா அடையாளம் காண்பது கிடையாது.''

மிருதுவாய் ''இந்த முறை தப்பு பண்ணியிருக்கலாம்'' என்றார் லெஜன். ''மிஸ்டர் வெனபிள் வாதத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஒரு நோயாளி. இடுப்புக்குக் கீழே கிட்டத்தட்ட மூணு வருஷத்துக்கும் மேலா அவர் செயலிழந்துப் போயிருக்கார். அவரால அவரோட கால்களை இயக்கவே முடியாது.''

''வாதம்!'' - துள்ளியெழுந்தான் ஓஸ்பார்ன். ''ஓ டியர், டியர். அப்ப எல்லாம் முடிஞ்சுட்டா மாதிரி தெரியுது. கேட்கிறேன்னு தயவு செஞ்சு தப்பா எடுத்துக்க வேணாம். *அது நெஜந்தானா?* என்ன சொல்றேனா, இதுக்கு நீங்க அழுத்தமான மெடிக்கல் ரிப்போர்ட் வெச்சிருக்கீங்களா?''

''யெஸ், மிஸ்டர் ஓஸ்பார்ன். என்கிட்டே இருக்கு. மிஸ்டர் வெனபிள், ஹார்லி மருத்துவச் சாலையில் இருக்கும் டாக்டர் வில்லியமுடைய பேஷண்ட். மருத்துவத் துறையில பேர் போனவர், வில்லியம்.''

''ஆமாம் ஆமாம். பல பட்டங்கள், ரொம்பப் பிரபலமான பேர்! ஓ, பயங்கரமா தோத்துட்டேன் போல தெரியுது. நான் அடையாளம் கண்டது ரொம்ப சரினு தான் நிச்சயமா இருந்தேன். இப்படி ஒண்ணுமில்லாததுக்கு உங்களையும் போட்டு அலைக்கழிச்சுக்கிட்டு...''

''அப்படி நீங்க எடுத்துக்கக் கூடாது'' என்றார் உடனே இன்ஸ்பெக்டர். ''நீங்க தந்த தகவல் இன்னமும் கூட மிக மதிப்புமிக்கதாகத்தான் இருக்கு. நீங்க பார்த்த ஆள் மிஸ்டர் வெனபிள்ளின் அமைப்புடன் ரொம்ப ரொம்ப ஒத்துப் போகும்படி இருந்தாகணும் என்பது இப்ப ஊர்ஜிதமாகுது. மிஸ்டர் வெனபிள்ளும் சாதாரணமா காணக்கிடைக்காத ஒருவித அசாதாரண அமைப்பில் இருப்பதால, இது ஒரு விலைமதிப்பற்ற தகவல். இதனால, நீங்க சொல்லும் உடலமைப்போடு ஒத்துப் போகும்படி பலர் இருக்க வாய்ப்பில்ல.''

''ஆமாம்... ஆமாம்...'' என்று சற்று உற்சாகமானான் ஓஸ்பார்ன். ''மிஸ்டர் வெனபிள்ளை அப்படியே உரித்து வைத்திருக்கும் குற்றவாளிகள்! நிச்சயமா இப்படி நிறைய குற்றவாளிகள் இருக்கவே முடியாது.

ஸ்காட்லாண்டு யார்டு கோப்புகளைப் புரட்டிப் பார்த்தால்... ஒருவேளை நல்ல வழி ஏதாவது...''

இப்படிச் சொல்லிவிட்டு இன்ஸ்பெக்டரை நம்பிக்கையுடன் பார்த்தான் அவன்.

''நீங்க சுலபமா நினைக்கிற மாதிரி விஷயம் கிடையாது அது'' என்றார் லெஜன் நிதானமாய். ''அந்த ஆசாமி எந்தக் கோப்புகளிலும் இல்லாதவனா கூட இருக்கலாம். எதிலும் இதுவரை சிக்காதவனா இருந்தால்..! மேலும் இப்ப நீங்களே சுட்டிக் காட்டினதைப் போல அந்த ஆசாமி நடந்துள்ள குற்றத்துக்கு எவ்வித தொடர்பும் அற்ற ஓர் அப்பாவியாய் கூட இருக்கலாம்.''

மிஸ்டர் ஓஸ்பார்ன் மீண்டும் நம்பிக்கையற்றவனாய் ஆனான். ''என்னை நீங்க மன்னிச்சுடணும்'' என்றான். ''இப்படித்தான் இருந்தாகணும்னு திட்டமிட்டுக்கிட்டே நான் பண்ணியிருக்கும் கற்பனைகள், இதெல்லாம். இப்படியெல்லாம் ஒரு கொலைக்குற்ற விசாரணையின் போது என்னால் அடையாளம் காட்டப்படணும்னு நான் நினைச்சுக்கிட்டே இருந்ததோட விளைவுகள். ஆனாலும், ஆனாலும், நான் இன்னமும் நிச்சயமாகத்தானே இருக்கேன்'' என்று அல்லாடலாய் சொல்லிவிட்டு, ''ஓகே ஓகே... நீங்க என்ன சொல்ல வரீங்கனு விளங்குது'' என்றான். ''அந்த ஆசாமி கிடையாது, நம்ம ஆசாமி. அதனால நான் இன்னமும் நிச்சயமா இருக்கக்கூடாது. இதானே சொல்ல வரீங்க?! ஆனாலும், ஆனாலும்...''

லெஜன் முன்னுக்கு வளைந்து வந்தார். ''இன்னிக்கு எதுக்காக உங்களைப் பார்க்க நான் வந்திருக்கேன்னு நீங்க வியந்திருக்கலாம். நீங்க பார்த்த அந்த ஆசாமி வெனபிள்ளா இருக்கவே முடியாதுனு மருத்துவச் சான்றிதழ் வாங்கிய பிறகும் நான் எதுக்காக இங்கே இன்னிக்கு உங்களைப் பார்க்க வந்திருக்கேன்?''

''அதானே, அதானே! வெல், இன்ஸ்பெக்டர், சொல்லுங்க... எதுக்காக வந்தீங்க?''

''அதே ஆசாமிதான்னு நீங்க பாஸிட்டிவ்வா சொல்லுவதில் உள்ள அழுத்தம்தான் என்னை இங்கே அள்ளிக்கிட்டு வந்திருக்கு'' என்றார் இன்ஸ்பெக்டர். ''எதன் அடிப்படையில் உங்களுடைய இந்த நம்பகத் தன்மை எழுப்பப்பட்டிருக்குனு நான் தெரிஞ்சுக்க விரும்பினேன். அது ஒரு பனி இரவு. நினைவிருக்கா? நான் உங்க கடைக்குப் போயிருந்தேன். நீங்க

வாசல்ல எந்த இடத்துல நின்னுக்கிட்டிருந்தீங்களோ அதே இடத்துல நானும் நின்று தெருவுக்குக் குறுக்கா பார்த்தேன். பனி படர்ந்த இரவில் அத்தனை தூரத்திலிருந்த ஓர் உருவம் கவனிக்கத்தக்கதா இருந்திருக்காது என்பதே என் முடிவு. அதிலும், உடலமைப்பினைத் துல்லியமா பிரிச்சுப் படம் பிடிக்க முடியவே முடியாது - *இம்பாஸிபிள்.*''

''ஓரளவுக்கு, உங்களோட வாதம் சரிதான்'' என்றான் ஓஸ்பார்ன். ''அன்னிக்கு பனி, இறங்கிக்கிட்டிருந்தது. அதாவது கொத்துக் கொத்தான மூட்டைகளா அவ்வப்போது பனி இறங்கி அப்பத்தான் செட்டில் ஆக ஆரம்பிச்சிருந்ததுனு சொல்ல வரேன். அப்பப்போ, பனி, காட்சிகளை முழுக்கவும் மறைக்காம இருந்தது. எதிர் சாரியில ஃபாதர் கார்-மேன் வேகமா போவதை நான் பார்த்த கணத்தில் இப்படித்தான் பனியற்ற நிலை இருந்தது. இதனாலத்தான் அவரையும் உடனேயே அவரைப் பின் தொடர்ந்து தென்பட்ட அவனையும் நான் பார்த்தேன். மேலும், சரியா எனக்கு எதிரா வந்தபோது அந்த ஆசாமி ஒரு சிகரெட்டைப் பற்ற வெச்சுக்கிட்டான். அவனுடைய அமைப்பு அப்ப ரொம்பவும் க்ளியரா தெரிஞ்சுது. மூக்கு, முகவாய், கன்னங்கள்... இப்படி. *பளிச்சுனு தெரியற ஆளும் உலகத்துல இருக்கான்:* இதுதான் அப்ப நான் அவனை எடை போட்டுக்கிட்டது. அந்தப் பக்கங்கள்ல அவனை நான் அதுக்கு முன்னாடி பார்த்தது கிடையாது. இவன் மட்டும் திரும்பி நம்ம கடைக்கு வந்தால் உடனடியா இவனை நம்மால அடையாளம் கண்டுக்கிட முடியும்... இப்படித்தான் நான் அப்ப நினைச்சேன். ஆகவே... விளங்குதா?''

அப்படியே நிறுத்தினான் ஓஸ்பார்ன்.

''யெஸ், விளங்குது'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''ஒரு சகோதரனா இருக்கலாமோ...'' ஆலோசித்தான் ஓஸ்பார்ன். ''ஒரே மாதிரியிருக்கும் ரெட்டை? இது ஒரு தீர்வா இருக்குமா?''

''ரெட்டை எனும் தீர்வா?'' என்று சிரித்தபடி கேட்டுவிட்டு மறுப்பாய் தலையசைத்தார் அவர். ''கதைகள்ல ரொம்ப ரொம்ப சுலபம் இது. ஆனா நிஜத்துல..?'' என்று விட்டு மீண்டும் மறுப்பாய் தலையசைத்துக் கொண்டார். ''நீங்க நினைக்கிற மாதிரியெல்லாம் நிஜ வாழ்க்கையில நடக்காது, தெரியுமில்லே! ம்ம்.. நடக்கவே நடக்காது..''

''ஆமாம். நடக்காதுதான். புரியுது. ஆனா, ஒருவேளை, உருவ ஒற்றுமையில் ஏறத்தாழ அப்படியே ஒத்துப் போகும் சகோதரனா இருந்தால்...? ஒரே மாதிரி இருக்கும் குடும்ப ஒற்றுமை..?'' - தன்னைப் பெருமையாய்க் காட்டிக் கொண்டு பார்த்தான் ஓஸ்பார்ன்.

''எங்களுடைய விசாரணைகளின் நம்பிக்கையில சொல்றேன்'' என்ற இன்ஸ்பெக்டர் சொன்னார்: ''மிஸ்டர் வெனபிள்ளுக்கு சகோதரர்கள் கிடையாது.''

''உங்களுடைய விசாரணைகளின் நம்பிக்கையிலே சொல்றீங்க'' என்று அவருடைய வார்த்தைகளையே மீண்டும் சொன்னாள் ஓஸ்பார்ன்.

''அவர் ஆங்கிலேய நாட்டவராயிருந்தாலும், வெளி நாட்டுலத்தான் அவர் பிறந்திருக்கார். அவருக்கு பதினொரு வயசிருக்கும் போதுதான் அவரோட பெற்றோர்கள் அவரை இங்கே கூட்டிட்டு வராங்க.''

''அப்ப அவரைப் பற்றி உங்களுக்கு எல்லாமும் முழுசா தெரியாது, இல்லையா? அதாவது அவரோட குடும்பம், உறவுகள், இத்யாதிகள்?''

''நோ'' என்றார் லெஜன் சிந்தனையாய். ''அவரை நேரா போய் சந்திச்சு விஷயங்களைத் தெரிந்துக் கொள்வதை இப்போதைக்கு தவிர்த்துவிட்டு முயற்சித்தால், ம்ம்... மிஸ்டர் வெனபிள் பற்றி கண்டுபிடிப்பது அத்தனை சுலபமான ஒண்ணா அமையலே. ஆனா அவரை நேரா போய் விசாரிக்க நமக்கு எந்த முகாந்திரமும் கிடையாது.''

வெளிப்படையாய் பேசினார் இன்ஸ்பெக்டர். அவரை நேராய் போய்ப் பார்த்து அறிந்துக் கொள்ளாமல் வேறு வழியிலும் விஷயங்களைக் கறந்து விடலாம்... ஆனால் அதுபற்றி ஓஸ்பார்னிடம் எதையும் லெஜன் சொல்லவில்லை. ''ஆகவே, இந்த மருத்துவ சாட்சி மட்டும் இப்ப இல்லைனா..'' என்ற இன்ஸ்பெக்டர், ''நீங்க சொல்வதுதான் சரினே நிச்சயமா இருப்பீங்க, ஆங்?'' என கேட்டார்.

''ஓ யெஸ்'' என்றான் ஓஸ்பார்ன், அவர் வாக்கியத்தை முடிக்குமுன். ''முகங்களை மனப்பாடம் பண்ணுவது எனக்கு ஒரு ஹாபி, யூ நோ'' என்று குதூகலமாய் நாக்கில் சொடுக்கு போட்டபடி சொன்னான். ''இந்த வழியில நான் பல கஸ்டமர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருக்கேன். 'எப்படியிருக்கு உங்க ஆஸ்துமா'ம்பேன். என்னை ஆச்சரியமா பார்ப்பா அவ. 'போன மார்ச்சுல வந்திருக்கீங்களே'ம்பேன். கூடவே, 'ப்ரிஸ்க்ரிப்ஷனோட, டாக்டர் ஹால் எழுதி தந்தது'ம்பேன். அப்புறம் அவ ஆச்சரியப்படாமா என்ன செய்வா? இது என் பிஸினஸுக்கு அற்புதமா உதவிச்சு. ஒருத்தர் முகத்தை நினைவு வெச்சிருப்பதென்பது அவரை அதீதமா சந்தோஷப் படுத்துது. ஆனா பெயர்களை மட்டும் ஏனோ என்னால அத்தனை சுத்தமா நினைவு வெச்சுக்க முடிவதில்லே. இந்த திறமைக்கெல்லாம் வெகுமானம் தருவதாயிருந்தால் நான் எனக்கே சொல்லிப்பேன்: 'மவனே நீ

லண்டனையே விலைக்கு வாங்கிடலாம்டா!' கொஞ்ச நாள் போதும் ஸார்... தானா இந்த திறமை உங்களுக்கு வசப்பட்டுவிடும். இதுக்காக நீங்க எந்த மெனக்கெடலும் பண்ணத் தேவையேயிருக்காது.''

லெஜன் பெருமூச்சு விட்டார். ''உங்களை மாதிரி ஒரு சாட்சிதான் எனக்கு சாட்சிக் கூண்டுல வேணும்'' என்றார். ''அடையாளம் கண்டு சொல்வதென்பது எப்பவுமே ஆபத்தான ஒரு விஷயம் - கயிறு மேல நடப்பது மாதிரி. பலரால வாய் பேசவே முடியாம ஆகிடும், தெரியுமா? அப்படி மீறி பேசினா, இப்படி சொல்வாங்க: ''ஓ, உசரமானவன்... அப்படித்தான் நினைக்கிறேன். நரைச்ச முடி... அதுவும் நிறைய நரைக்கலேனு நினைக்கிறேன். சாதாரண முகந்தான்... அப்படித்தான்னு நினைக்கிறேன். நீல விழிகள்... கூடவே கறுப்பாயும்!'' இதையெல்லாம் வெச்சுக்கிட்டு என்ன பண்ண? இருக்குனு சொல்லிட்டு கூடவே இல்லேனு வரும் சாட்சிகள்...''

மிஸ்டர் ஓஸ்பார்ன் சிரித்து விட்டார். ''இதெல்லாம் உங்களுக்கு எந்த உதவியும் பண்ணாது.''

''உங்களைப் போன்ற ஒரு சாட்சி, கடவுள் எங்களுக்கு தரும் வரம்.''

இதில் திருப்தி கொண்டவனாய் தோன்றினான் மிஸ்டர் ஓஸ்பார்ன். ''ஆனா, இந்த வரத்தை நானா செம்மையா வளர்த்துக்கிட்டேன் என்பது மட்டும் நினைவிருக்கட்டும். குழந்தைங்க, அறிவு வளர்ச்சிக்கு ஒருவிளையாட்டு விளையாடுவாங்க தெரியுமில்லே. ஏகப்பட்ட பொருட்களை ஒருபெரிய தட்டுல போட்டு வெச்சு ஒரு சில நிமிடங்களில் அப்பொருட்களைப் பார்த்து மனப்பாடம் பண்ணிக்கச் சொல்வாங்க. அப்புறம் தட்டுப் போயிடும். இப்ப, என்னென்ன பொருட்களைப் பார்த்தோம்னு சொல்லணும். ஒவ்வொரு தடவையும் ஒருபொருளைக் கூட விடாமல் அப்படியே சொல்லி நூத்துக்கு நூறு வாங்கிடுவேன் நான். என்ன அதிசயம்பாங்க சுற்றியிருக்கிறவங்க. இதுல அதிசயமே கிடையாது. இது ஒரு வியூகம். நாக். பழகப் பழக தானா வரும்.'' நாக்கால் சொடுக்கினான் அவன்.

வயிறு வலிக்க சிரித்தான் அவன். லெஜனும் கூடவே சிரித்தார். பிறகு ஓஸ்பார்ன் பெருமூச்செறிந்தான்.

''எனக்கு பிடிச்ச மாதிரியான சின்ன இடத்துல நான் இங்கேயிருக்கேன், ஸார். அக்கம்பக்கத்தார் நல்லவங்களாகவும் நட்பு கொள்பவர்களாகவும் தெரியறாங்க. இப்படிப்பட்ட ஒரு வாழ்க்கையைத்தான் நான் வருஷக்

கணக்கா வேண்டிக் காத்துக் கிடந்தேன். வர வர பிஸினஸ்ல ஈடுபாடேயில்லாம ஆகிட்டுவருது, மிஸ்டர் லெஜன். எப்பப் பார்த்தாலும் யாராவது வராங்க போறாங்க. விதவிதமானவர்கள். பார்த்து பதிஞ்சுக்க விதவிதமானவர்கள். ஒரு தோட்டம் ஆரம்பிக்கணும்னு நினைச்சுக் கிட்டிருக்கேன்... அதில் எனக்கு ஈடுபாடு உண்டு. ஏற்கெனவே நான் உங்ககிட்டே சொல்லியிருக்கேனே... பட்டாம் பூச்சிகள்... அப்புறம் பறவை தேடல். மனிதர்கள் அப்படினு ஒண்ணு இருக்கு என்பதன் தொடர்பே எனக்கு அற்றுப் போயிடும்போல!

''ஆங்.. அப்புறம், வெளிநாடு போய்ட்டு வருவதுல எனக்கு ஆசையிருக்கு. சொல்லப் போனா ஒரு வாரம் போல பிரான்சு போயிட்டு வந்தேன். அருமையான பிரதேசந்தான், ஒத்துக்கிறேன்... ஆனா அடிச்சு சொல்வேன்: நம்ம இங்கிலாந்து போல வராது. அதுங்களுக்கு எப்படி முட்டை வறுப்பது, பன்னி வறுவல் பண்ணுவதுனுகூட தெரியலேங் கறேன்...''

சற்று பெருமூச்சு விட்டுக் கொண்டு தொடர்ந்தான்:

''மனுஷ இயல்பைப் பாருங்களேன்... ரிடையரே ஆகக் கூடாதுனு இருந்தேன், தெரியுமா? இங்கே போர்ன் - மவுத்ல மருந்துக்கடை வெக்கணும்னு இடமெல்லாம் வாங்கினேன். ஆனா எல்லாம் கூடி வரும்போது, பைபை சொல்லிட்டேன். சொல்லுங்க...நீங்களும் இப்படித்தானே? கிடைக்கணும்னு திட்டமிடுவீங்க... ஆனா கிட்டி முட்டி கைக்கு வரும்போது உங்க வேலையின் கெடுபிடியால கவனம் பதிச்சு கையகப்படுத்திக்க முடியாம விட்டுடுவீங்க...''

லெஜன் புன்னகைத்தார்.

''போலீஸ்காரன் உத்தியோகம் நீங்க நினைப்பதைப் போல பரபரப்பு நிறைஞ்சது கிடையாது. குற்றங்கள் பற்றி ரொம்பவும் நுனிப்புல் தனமான அறிதல்தான் உங்களுக்கு இருக்கு. பல கேஸ்கள் நகரவே நகராம டல்லாத்தான் இருக்கும். எப்பப்பாரும் நாங்க கொலைக் குற்றவாளிகளைப் பரபரனு துரத்திக்கிட்டு கை நிறைய இருக்கும் க்ளூக்கள் மேல மூளைச் செலுத்தி சுறுசுறுப்பா இயங்கிக்கிட்டிருப்பது கிடையாது. இது ஒரு டல் பிஸினஸ்.''

மிஸ்டர் ஓஸ்பார்ன் இதில் திருப்தியற்றவராக தோன்றினான். ''அப்ப சரி லெஜன்'' என்றான் இறுதியாய். ''இந்த விஷயத்துல உங்களுக்கு நான்

நல்ல உபகாரமா இருக்க முடியலியேனு வருந்தறேன். இன்னொரு முறை - இன்னொரு சந்தர்ப்பத்துல - இன்னொரு வழக்குல –''

''அப்படியொரு சந்தர்ப்பம் கிடைக்கும்போது - இணைவோம்'' – லெஜன் உறுதியளித்தார்.

''அன்னிக்கு அந்த நிகழ்ச்சியில எனக்கு கிடைச்ச இந்த வாய்ப்பு, ஓர் அற்புதமான வாய்ப்புனு நினைச்சுக்கிட்டிருந்தேன். ப்ச்'' - ஓஸ்பார்ன் சோகமாக முணுமுணுத்துக் கொண்டான்.

''விளங்குது. ஆனா மெடிக்கல் சாட்சி அவருக்கு உறுதுணையா நிக்குதே. என்ன பண்ணுவது?''

''வெல்..'' என்ற ஓஸ்பார்ன் இந்த வார்த்தையை அங்கு அப்படியே உலவ விட்டான். ஆனால் ஆரம்பிக்கப்பட்ட இவ்வார்த்தையை லெஜன் கவனித்தாரில்லை. அவர் வேகமாய் நடை நடந்து வெளியேறி விட்டார். அவரைப் பார்த்தபடி கேட்டருகே நின்றான் மிஸ்டர் ஓஸ்பார்ன்.

''மெடிக்கல் எவிடென்ஸ்'' - அவன் சொல்லிக் கொண்டான். ''டாக்டருங்க! எனக்கு இந்த டாக்டருங்களைப் பற்றி தெரிஞ்சிருப்பது இவருக்கும் தெரிஞ்சிருந்தால்! டாக்டருங்க! இருப்பதைப் பார்த்து அப்படியே நம்பிடும் வெகுளிங்க! இதுதான் அவனுங்க! டாக்டருங்க!''

அத்தியாயம் 11

மார்க் ஈஸ்ட்டர் – ப்ரூக் பதிந்தவை

I

அப்போது முதலில் ஹெர்மியா. இப்போது காரிகன்.

அப்படியென்றால் நான்தான் என்னை நானே முட்டாளாக்கிக் கொண்டிருக்கிறேன் என நினைக்கிறேன்!

உளறப்படுபவற்றையெல்லாம் திடமான உண்மை என்று நான் கருதிக் கொண்டிருக்கிறேன். முட்டாள்தனத்தின் உச்சகட்டமான விஷயத்தைப் பற்றி அந்தக் கிறுக்குப் பிடித்த தெரஸா பொம்பளை சொல்பவற்றில் போய் நான் என் சித்தம் மயங்கி விழுந்துக் கிடக்கின்றேன். நான் ஒரு தாளவொண்ணா மூட நம்பிக்கை பதராய் இருந்திருக்கிறேன்.

இந்த முழு சொதப்பலான பிரச்சினையையும் அப்படியே விட்டுவிட முடிவெடுத்தேன். இதற்கும் எனக்கும் எந்த சம்பந்தம் இருக்கின்றது, சொல்லுங்கள்?

இப்படியொரு மூடுபனியாய் விளைந்த எண்ணங்களுக்கு நடுவில் மிஸஸ் டேனே கேல்த்ராப் சொன்னது என் காதுகளில் எதிரொலித்தது.

''இதை நிறுத்தியாகணும்.''

ம்கூம்... இப்படியெல்லாம் வாய் கிழிய சொல்வது சுலபம்தான்.

''இதுக்குள்ளே நீங்க இறங்கியாகணும். உடனடியா, இதுல உங்களுக்கு உதவும்படியான நண்பர்கள் கிடையாதா?''

ஹெர்மியா எனக்குத் தேவைப்பட்டாள். கார்கனும் எனக்குத் தேவைப்பட்டார். ஆனால் இருவரில் ஒருவரும் எனக்கு ஒத்தாசையாய் வரப் போவதில்லை. வேறு ஒருவரும் எனக்கு கிடையாது.

ஒருவேளை - ஒருவேளை -

தோன்றிய எண்ணத்தை வைத்துக் கொண்டு அப்படியே கொஞ்ச நேரம் உட்கார்ந்தேன்.

உருவான ஓர் உத்வேகத்தில் வேகமாய் டெலிபோனுக்குப் போய் மிஸஸ் ஓலிருக்கு போன் போட்டேன். ''ஹலோ, மார்க் ஈஸ்ட்டர் - ப்ரூக் இது.''

''என்ன?''

''அன்னிக்கு நிகழ்ச்சியின்போது வீட்ல தங்கியிருந்த அந்தப் பொண்ணு பேரை எனக்கு சொல்ல முடியுமா?''

''முடியும்னுதான் நினைக்கிறேன். வெயிட் எ மினிட்... ஆங், வந்துடுச்சு.. ஜிஞ்ஜர். இதுதான் அவ பேர்.''

''எனக்கு இது தெரியும். ஆனா அவளுக்கு ஏதாவது வேற பேர் இருந்தால், அது...''

''என்னது வேறு பெயர்...''

''இது ஃபேஷனா அவ வெச்சிருக்கிற பேரா படுது. அவளோட சரியான பேர்?''

''ஓ, இருக்கலாம். ஆனா அது என்ன என்பதுல எனக்கு எந்த ஐடியாவும் இல்லையே. பழைய பஞ்சாங்கப் பேரையெல்லாம் இப்ப யார் சொல்லிக் கிட்டு அலையறாங்க? அவளை நான் முதன் முதலா பார்த்ததே அப்பத் தான்'' – சொல்லிவிட்டு மிஸஸ் ஓலிவரிடம் சிறு இடைவெளி விளைந்தது. பிறகு சொன்னார்: ''ரூடாவுக்குப் போன் பண்ணிக் கேட்டுடேன்.''

இந்த அபிப்பிராயம் எனக்கு பிடித்தமானதாய் இல்லை. ஏனோ இதைப் போய் அவளிடம் கேட்பதில் எனக்கு லஜ்ஜையாக இருந்தது. ஓலிவரிடமே சொன்னேன்.

''உன்னை யார் நேரடியா கேட்கச் சொன்னது? ரொம்ப சிம்பிளிது!'' என்றாள் அவள் ஊக்குவிப்பாய். ''அவ பேரை மறந்துட்டதாகவும், நீ எழுதின புத்தகங்கள்ல ஒண்ணு ரெண்டை அவளுக்கு அனுப்பி வைப்பதா உறுதி தந்திருந்ததாகவும் சொல்லு. ஆச்சு! அப்படியே அவ நிஜப் பேர், முகவரியை உருவு.''

''சூப்பர்ப்பா...''

இணைப்பைத் துண்டித்த நான், மறு இணைப்பில் தற்போது ரூடாவுடன் பேசிக் கொண்டிருந்தேன்.

''ஜிஞ்ஜரா?'' எனக் கேட்டாள் ரூடா. ''அவ ம்யூஸ் பகுதியில வசிக்கிறா. கால்கரி சதுக்கம், 45. ஒரு நிமிஷம், ஒரு நிமிஷம். அவ டெலிபோன் நம்பரும் தரேன்.'' சொல்லி விட்டுப் போனவள் அந்நிமிடத்தின் முடிவில் வந்தாள். ''35987. எழுதியாச்சா?''

''ம்.. ஆனா அவ பேரை நான் எழுதிக்கலே. நீ இன்னும் சொல்லலே.''

''என்ன பேர்? ஜிஞ்ஜர்தானே கேட்டே? ஓ, ஒரிஜினல் பேரா? ஓகே ஓகே, அது கேத்தரின். வெறும் கேத்தரின் இல்லே... கேத்தரின் காரிகன். என்ன, என்ன சொல்றீங்க?''

''ஒண்ணுமில்லே. நத்திங். தேங்க்ஸ், ரூடா.''

எதிர்பாரா ஒற்றுமையாய் எனக்குப் பட்டது. காரிகன், காரிகன், இரண்டு காரிகன்கள். ஒருவேளை இதுகூட ஒரு நல்ல சகுனமாயிருக்கலாம், நான் விட்டு விடாமல் இதனைத் தொடர.

நான் 35987 என்று சுழற்றினேன்.

II

ஒரு சின்ன உரையாடலுக்காக நாங்களிருவரும் சந்தித்துக் கொள்வதாய் ஏற்பாடு செய்துக் கொண்ட ஓட்டலில் எனக்கு எதிராய் வரும்படி உட்கார்ந்துக் கொண்டாள் ஜிஞ்ஜர். உயிர்ப்புடன் இருப்பதில் *மச் டூப்பிங்* கிராமத்தில் பார்த்தது போலவே அப்படியே இருந்தாள் அவள் - கொத்தாய் பிடித்திழுத்துத் தூக்கிச் செருகிக் கொள்ளப்பட்டிருந்த சிகப்புக் கூந்தல், பார்ப்பவரை அழைக்கும் மச்சமுள்ள முகம் மற்றும் எப்போதும் எச்சரிக்கையாய் சுழலும் நீலநிற விழிகள். எனக்கு அவளை ரொம்பவும் பிடித்தது.

''உன்னைக் கண்டுபிடிக்கிறதுக்குள்ளே முழி பிதுங்கிப் போயிடுச்சு'' என்றேன் நான். ''உன்னோட சரியான பேர், உன்னோட முகவரி, உன்னோட டெலிபோன் நம்பர்... இப்படி எல்லாம் தெரியாதவை. சிக்கலாயிடுச்சு.''

பிறகு அவளிடம் நான் சொன்னேன். ஹெர்மியாவிடம் நான் விரிவாய் சொன்ன அளவுக்கு இவளிடம் நாழி ஆகவில்லை. ஏனென்றால் இவளுக்கு ஏற்கெனவே *வெளிறிய குதிரை* பற்றியும் அதில் வசித்துக் கொண்டிருப்பவர்கள் பற்றியும் நல்ல அறிதல் இருந்தது. கதையை விரிவாய் சொல்லி முடித்ததும் அவளுடைய முகத்தைக் கவனிப்பதை நான் ஒதுக்கினேன்.

என்ன மாதிரி விளைவை அவள் முகம் பிரதிபலிக்கின்றது என்பதைப் பார்க்க எனக்கு விருப்பமில்லை. இப்படியும் ஓர் ஆள் இருப்பானா என்ற ரீதியிலான முழு ஆச்சரியத்தையோ அல்லது இதையெல்லாமா ஒருத்தன் நம்புவான் என்பது போன்ற கேலிக் கூத்தையோ அவள் முகத்தில் காண எனக்குத் தெம்பில்லை. இவளிடம் இப்போது சொல்லி முடித்ததும் சொன்ன அத்தனையும் முன்னெப்போதையும் விட இப்போது பக்கா முட்டாள்தனமாக தெரிந்தது. நான் உணர்ந்ததைப் போல அப்படியே, மிஸஸ் டேனே கேல்த்ராப்பைத் தவிர, வேறு ஒருவரும் உணரப் போவதில்லை. கையிலிருந்த முள் ஸ்பூனால் மேஜையில் ஓவியத்தை நான் வரைந்துக் கொண்டிருந்தேன்.

ஜிஞ்ஜரின் குரல் தெம்பாய் வந்தது: ''இவ்ளோதான், இல்லையா?''

''இவ்ளோதான்'' - நான் ஒப்புக் கொண்டேன்.

''இதன் மேலே மேற்கொண்டு நீங்க என்ன பண்ணப் போறீங்க?''

''மேற்கொண்டு நான் ஏதாவது பண்ணித்தான் ஆகணும்னா நீ நினைக்கிறே?''

''வெல், பின்னே! யாராவது ஒருத்தர் இதுல எதையாவது பண்ணனும்! வெளிப்படையா எதுவுமே பண்ணாமல், வேண்டாதவங்களைக் காய்கறி சீவுவதைப் போல் சீவித்தள்ளும் ஒரு கூட்டத்தை நாம அனுமதிக்கக் கூடாது.''

''ஆனா என்னால என்ன பண்ண முடியும்?''

என்னைப் போலவே எண்ணங் கொண்டு பேசிய அவளின் கழுத்தை இறுகப் பற்றி நான் அணைத்துக் கொள்ளாததுதான் குறை.

பழச்சாற்றினைச் சப்பியபடி முகஞ்சுளித்தாள் அவள். கதகதப்பு என் மீது இப்போது கூடியது. ஆக இவ்விஷயத்தில் இனி நான் தனி கிடையாது.

தற்சமயம் அவள் முணுமுணுப்பாய் சொன்னாள்: ''இதெல்லாம் என்ன கூத்துனு நீங்க கண்டுபிடிக்கணும்.''

''இதை நானும் ஒத்துக்கிறேன். ஆனா எப்படி?''

''இதுல ஓரிரு துருப்புகள் கண்ணுல படுது. அனுமதியிருந்தால் என்னால உதவ முடியும்.''

''நெஜமா? ஆனா உன் வேலையே உனக்கு தலைக்கு மேல இருக்குமே...''

''அலுவலகம் நேரம் தவிர்த்து ஏகமா விஷயங்கள் பண்ணலாம்... மனசு வெச்சா..!'' - சொல்லி விட்டு சிந்தனையில் விழும்போது அவளுடைய முகத்தில் மீண்டும் களிப்பு வந்தது.

இறுதியில், ''இந்தப் பொம்பளை...'' என ஆரம்பித்தாள். ''டின்னர்ல ஒரு தடவை பார்த்த பொண்ணு. பாப்பியோ என்னவோ அவ பேர். அவளுக்கு அதைப் பற்றி தெரியும் - அவளுக்கு தெரிஞ்சிருக்கணும்.''

''ஆனா அவகிட்டே நான் இது சம்பந்தமா கேள்விகள் கேட்க முயன்றபோது பயந்து போய் அலறியடிச்சுக்கிட்டு ஓடிட்டா. கிலி பிடிச்சுடுச்சு அவளுக்கு. நிச்சயமா அவ இதைப் பற்றிப் பேசவே மாட்டா.''

''இங்கேதான் என்னால உதவ முடியும்'' என்றாள் ஜிஞ்ஜர் நம்பிக்கையாய். ''உங்ககிட்டே சொல்ல முடியாத விஷயங்களை அவ என்கிட்டே சொல்லுவா. நாம சந்திக்க உங்களால ஏற்பாடு பண்ணித் தர முடியுமா? உங்க ஃபிரண்டு, நீங்க, நான், அவ... ஒரு படம் இல்லேனா ஒரு டின்னர் இப்படி ஏதாவது...'' இப்படிச் சொல்லிவிட்டு சந்தேகமாய் என்னைப் பார்த்தாள். ''ரொம்பச் செலவு பிடிக்குமோ?''

அந்தச் செலவை என்னால் ஏற்றுக் கொள்ள முடியும் என்று அவளுக்கு நம்பிக்கை தந்தேன்.

''உங்களைப் பொறுத்த வரைக்கும்...'' என்று சற்று சிந்தித்த அவள், ''எனக்கு என்ன தோணுதுனா'' என்று விட்டு மெதுவாய் சொன்னாள்: ''நீங்க பண்ணக்கூடிய சிறந்த வேலை: தோமாஸீனா டக்கர்டான் விஷயத்தை கவனிப்பது.''

''எப்படி முடியும்? அவ செத்துட்டா.''

''நீங்க உங்களுக்குள்ளே வெச்சிருக்கிற ஐடியாக்களெல்லாம் கரெக்ட்தான்னா - அவளோட மரணத்தை யாரோ விரும்பியிருக்காங்க என்பதுதான் அர்த்தமாகுது! அது *வெளிறிய குதிரை* மூலமா அரேஞ்ஜ் பண்ணப்பட்டு முடிஞ்சிருக்கு. இதுல சம்பந்தப்பட்டவர்களா ரெண்டு சாத்தியக் கூறுகள் எனக்கு தட்டுப்படுது. ஒண்ணு அவளோட சித்தி. அதாவது வளர்ப்புத் தாய்... அப்படியில்லேனா, லீகீகடையில, காதலிச்ச ஆளை அபகரிச்சுக்கிட்ட இவ அடாவடியா சண்டை போட்ட அந்த இன்னொரு பொண்ணு. இவ அந்த ஆளை மணக்க முடிவு செஞ்சிருக்கலாம். இது இவளோட சிந்திக்கு ஒத்து வராது... இப்படியில்லேனா, இத்தனைக்குப் பிறகும் அந்த ஆள் மேல பைத்தியமாகவே அந்த இன்னொரு பொண்ணு விடாப்பிடியா இருந்திருந்தால், அவளுக்கு ஒத்து வராது.

ரெண்டு பேர்ல யார் வேணும்னாலும் *வெளிறிய குதிரைக்குப்* போயிருக்கலாம். இந்த கட்டத்துல நமக்கு ஏதாவது துருப்பு கிடைக்கலாம். அந்த இன்னொரு பொண்ணோட பேர் என்ன... உங்களுக்குத் தெரியாதோ?''

''லோவ்னு நினைக்கிறேன்...''

''கருகரு கூந்தல், நடுத்தர உயரம், எல்லாமே நல்லா குண்டு குண்டா...''

அவளுடைய விவரிப்புகளுக்கு நான் ஒப்புக் கொண்டேன்.

''அப்படினா நான் இவளை சந்திச்சிருக்கேன்னு நினைக்கிறேன். லோன் எல்லீஸ், முழு பேர். கைல நல்ல பணப்புழக்கம் உண்டு.''

''அவளைப் பார்த்தா அப்படி தெரியலே.''

''காட்டிக் கமாட்டாளுங்க. ஆனா, அவ பசையுள்ளவ. *வெளிறிய குதிரை* கேட்கும் பணத்தைக் கட்டத் தெம்புள்ளவனு சொல்ல வரேன். பணத்தைக் கறக்காம அதுங்க பண்ணித்தராது என்பது என் எண்ணம்.''

''அப்படியா!''

''நீங்க அந்த சித்திக்காரியைக் கவனிச்சுக்கணும். என்னை விட அதுக்கு பொருத்தமானவரா நீங்க இருக்கீங்க. போய் அவளைச் சந்தியுங்க.''

''அவ எங்கே தங்கியிருக்கா...அவ யார்... என்ற எந்த மண்ணும் எனக்குத் தெரியாதே...''

''டாமியுடைய வீடு பற்றி லீகிக்கு கொஞ்சம் தெரிஞ்சிருக்கு. அதனால இவ எந்த திசையில தங்கியிருக்கானு அவனுக்குத் தெரிஞ்சிருக்கணும் என்பது என் ஊகம். அந்தத் தகவலை வெச்சுக்கிட்டு கொஞ்சம் மெனக்கெட்டால் போதும் என்பது என் கருத்து. மேலும் டைம்ஸ் பத்திரிகையில அவளோட மரணச் செய்தியை நீங்க பார்த்திருக்கீங்க. அங்கே போய் அவங்களோட ஃபைல்களை வாங்கி புரட்டினா கூட போதும்...''

''இந்த சித்திக்காரியை முதல்ல போய் பார்க்க எனக்கு ஏதாவது முகாந்திரம் வேணும்'' - சிந்தனையாய் குறிப்பிட்டேன் நான்.

இதெல்லாம் சின்ன விஷயம் என்றாள் ஜிஞ்ஜர். ''நீங்க குறிப்பிடத் தகுந்த ஒரு மனுஷர். நினைவிருக்கில்ல'' என்றாள். ''நீங்க ஒரு வரலாற்று ஆராய்ச்சியாளர்... நீங்க விரிவுரைகள் தரீங்க... எழுதறீங்க... உங்களுக்கு நிறைய கடிதங்கள்லாம் வேற வருது... உங்களைச் சந்திப்பதுல அவங்களுக்கே கூட இஷ்டம் இருக்கலாம்.''

''அதுக்காக? என்னத்தை சொல்லிக்கிட்டு நான் அவங்களை முதல் முறையா பார்ப்பது?''

''அவங்க வீட்டுல இருக்கிற ஒருசில கட்டமைப்புக்களைப் பார்க்க வந்ததா சொன்னால்?'' - அவளுக்கே சிறு நிச்சயமற்றத்தன்மையோடு சொன்னாள் ஜிஞ்ஜர். ''அது ஒரு பழைய வீடா இருந்தால், நிச்சயமா அதுல ஒரு வரலாற்று ஆய்வாளனுக்கு ஏதாவது இருக்கும்..!''

''நான் ஆராயும் பல நூறு வருடங்களுக்கு முந்தைய விஷயங்களுக்கும் இதுக்கும் சம்பந்தமே இல்ல.''

''அவங்களுக்கு இதெல்லாம் விரிவா தெரியாது ஸார்'' என்றாள் அவள். ''ஒரு நூறு வருஷம் பழைசா இருக்கும் எல்லாமும், வரலாற்று ஆளையும் அகழ்வாராய்ச்சி செய்பவனையும் ரொம்பவும் ஈர்க்கும் என்பதுதான் பொதுவா மக்களுடைய அபிப்ராயம். இந்த ஐடியா பிடிக்கலேனா, ஒரு ஓவியத்தைப் பற்றி சொல்லிக்கிட்டு நீங்க அங்கே போனால், எப்படியிருக்கும்? ஏதோவொரு வகையைச் சேர்ந்த ஏதாவது பழைய ஓவியம் ஒண்ணாவது அங்கே இருக்கணும். எப்படியோ... அப்பாயிண்ட் மெண்ட் வாங்கிக்கிட்டு நேரா போயிறங்கி அவங்களுக்கு நல்லா வெண்ணெய் போட்டு குதூகலப்படுத்திட்டு அப்புறமா சொல்லுங்க: அவங்க மகளை ஒருமுறை சந்திச்சிருப்பதாகவும் - அதாவது அவங்களுடைய வளர்ப்பு மகளை, ஓகே? - அப்ப அவங்க எத்தனை வருத்தமா இருந்தாங்க, எக்ஸட்ரா, எக்ஸட்ரா! இதுக்கெல்லாம் அப்புறம் திடுதிப்புனு அவங்க கொஞ்சமும் எதிர்பாராத போது, *வெளிறிய குதிரை* பற்றி குறிப்பு கொடுங்க. விருப்பமிருந்தால், கொஞ்சம் பயந்தா மாதிரி காட்டிக்கிட்டு குறிப்பிடுங்க.''

''பிறகு?''

''என்ன பிறகு? பிறகு, அவங்களுடைய ரியாக்ஷன் எப்படியிருக்குன்னு கவனியுங்க. திடுதிப்புனு நீங்க *வெளிறிய குதிரை* அப்படினு சொல்லும்போது, அவங்க குற்றமுள்ளவங்களா இருந்தால், ஏதாவது அதிர்வு இருக்கும்...''

''பிறகு?''

''இப்பத்தான் முக்கியமான கட்டம்: இது, நாம சரியான பாதையிலத்தான் போய்க்கிட்டிருக்கோம் அப்படினு விளக்கிடும். இப்படி நிரூபணம் கிடைச்சுட்டா, நாம முழு வீச்சில இறங்கிடலாம்.''

சொல்லிவிட்டு ஒப்புதலாய் தனக்குத்தானே வேறு அவள் தலையாட்டிக் கொண்டாள். கேட்டாள்: ''இன்னொரு விஷயமும் இதுல இருக்கு. அந்த க்ரே பொம்பிளை உங்ககிட்டே சொன்ன எல்லா விஷயத்தைப் பற்றியும் நீங்க என்ன நினைக்கிறீங்க? இவ்ளோ தூரம் அவங்களா முன்வந்து ஏன் கொட்டணும்?''

''ஏன்னா அவங்க ஒரு வம்பு.''

''ப்ச், ப்ச். அதை சொல்லலே நான். ஏன் குறிப்பா உங்ககிட்டே? உங்களைத் தெரிந்தெடுத்து, ஏன்? இதுல ஏதாவது தொடர்புச் சங்கிலி இருக்குமோனு நினைக்கிறேன்..''

''எதோட தொடர்பு?''

''என் ஊகங்களை நான் அடுக்கும்போது, ப்ளீஸ், வெயிட் எ மினிட்...''

நான் காத்திருந்தேன். ஓரிரு முறை அழுத்தமாய் தலையசைத்துக் கொண்ட ஜிஞ்ஜர் உற்சாகமாய் ஆரம்பித்தாள்.

''ஒருவேளை - ஒருவேளைனுதான் சொல்றேன் - இப்படி நடந்திருக்குமோ! இந்த பாப்பி பொண்ணுக்குப் பட்டும் படாமல் *வெளிறிய குதிரை* பற்றிய விஷயங்கள் தெரிய வந்திருக்கு. அவளுக்கே ஏற்பட்ட பர்ஸனல் அனுபவமா இல்லாமல் செவி வழி சேதியா தெரிய வந்திருக்கும்னு சொல்ல வரேன். யாராவது ஏதாவது முக்கியமா பேசிக்கிட்டிருந்தால் அங்கே பக்கத்துல இவ இருந்தாலும் பெரிய பொருட்டா கவனிக்கப்படாத ஒரு பொண்ணாத்தான் இவ தெரியறா - ஆனா நெஜத்துல இப்படி இல்லாம, நிறைய விஷயங்களை அப்படியே கிரகிச்சு உள்ளே வெச்சுக்கும் ரகமா இவ இருக்கலாம். அசமஞ்சமா தெரியும் பல பேர் நெஜத்துல இப்படித்தான் உள்வாங்கிக் கொள்ளும் வகையா இருக்காங்க. அன்னிக்கு ராத்திரி உங்ககிட்டே அவ அந்த இடத்தைப் பற்றி பேசிக்கிட்டிருந்ததை யாரோ கேட்டுட்டு அவளை மிரட்டியிருப்பதா வெச்சுப்போம்... இது நடந்த மறுநாளே நீங்க போய் அதே கேள்விகளைக் கேட்க, கிலி பிடிச்சுப் போயிருக்கும் அவளா பேசுவா! ம்ம்... மூச்! நீங்க போய் அவளைச் சந்திச்ச விஷயமும் மோப்பம் பிடிக்கப்பட்டு காத்துல சுத்துது. இப்ப கவனிங்க: எதுக்காக, என்ன காரணத்துக்காக இப்படிப்பட்ட கேள்விகளை நீங்க அவளை போய் சந்திச்சுக் கேட்டிருக்கணும்? நீங்களோ போலீஸ் கிடையாது. ஆக, இதுக்கு உள்ள ஒரேயொரு *சாத்தியமான* பதில்: நீங்க ஒரு *வாடிக்கையாளனா* இருக்கலாம்.''

''ஆனா அப்படியெல்லாம் எதுவும் கெடயாதே...''

''தர்க்க ரீதியா சொல்றேன் ஸார். அதைப் பற்றிய புரளிகளை நீங்க கேட்டிருக்கீங்க - உங்க அந்தரங்க காரணங்களுக்காக அதன் உண்மை என்னதான்னு அறிஞ்சுக்கவேற நீங்க துடியா துடிக்கிறீங்க. இதுக்கு நடுவுல *மச்டீப்பிங்* கிராமத்துல நடந்த அளவளாவல்ல நீங்க இருக்கீங்க. நீங்களே கூட்டிட்டுப் போகும்படி கேட்டதால, நீங்க, *வெளிறிய குதிரைக்கு* அழைச்சுக்கிட்டுப் போகப்படறீங்க. அப்புறம் என்ன நடக்குது? சிம்பிள்... தெரஸா நேரா அவங்களுடைய வியாபார ரீதியிலான உரையாடலுக்குள் இறங்கிக்கிறாங்க..''

''யெஸ்'' என்று நான் காது கொடுத்தேன். ''இது ஒரு சாத்தியக் கூறாத்தான் படுது'' என்றேன். ''அப்போ, தன்னால பண்ண முடியும்னு அவ காலரைத் தூக்கி விட்டுக் கொள்ளும் சமாச்சாரத்தை அவளால நெஜத்துல பண்ண முடியும்னாநீ நினைக்கிறே, ஜிஞ்ஜர்?''

''என் தனிப்பட்ட கருத்தா, நிச்சயமா அப்படியெல்லாம் அவளால பண்ண முடியாதுனு பதில் தரத்தான் நான் விரும்புவேன்! ஆனா விளக்க முடியாத நிகழ்வுகள் நடக்கலாம். ஹிப்னாடிஸம் எனும் மூளைச் சலவை முறைகளால், இது சாத்தியம்தான். மறுநாள் சாயங்காலம் நாலு மணிக்கு நேரா போய் ஒரு மெழுகுவர்த்தியை எடுத்து ஒருகடி கடிச்சுட்டு வான்னு சொன்னால், அதே போல மறுநாள் சாயங்காலம் நாலு மணிக்கு, எதுக்காக இப்படி பண்றோம் எனும் பகுத்தறிவு கேள்விக்கு இடமே தராமல், பண்ணிட்டு வருவார். *வசியப்படுத்துதல்!* தன் கட்டுப்பாடின்றி என்ன எழுதறோம் என்ற பிரக்ஞையே அற்ற ஆட்டோமேடிக் ரைட்டிங். இதெல்லாம் வெறும் வெத்து வேட்டுனு மேலோட்டமா தோணலாம் - ஆனா சொல்லப் போனால் முழுக்கவும் வெத்து வேட்டு கிடையாது. தெரஸாவைப் பொறுத்தவரைக்கும் - இது உண்மைனு எனக்குத் தோணலே- ஆனா அது உண்மையா இருக்கலாம்னு அடி வரை நான் பயப்படறேன்!''

சுரீத்தற்று ''யெஸ்'' என்றேன் நான். ''மறுப்பு சொல்ல முடியாதபடி வார்த்தையைப் போட்டு அம்சமா விளக்கிட்டே.''

''நான் அந்த லோன் பொண்ணு மேல கையை வைக்கிறேன்'' என்றாள் ஜிஞ்ஜர். ''அவளை சந்திக்கும்படியான பல இடங்கள் எனக்கு தெரியும். லீகீக்கும் இதுல சில விஷயங்கள் தெரிஞ்சிருக்கலாம்.''

''ஆனா இதுல மொத்த விஷயம்'' என்று அவள் கூடுதலாய் சொன்னாள்: ''பாப்பியைத் தொடர்பு கொள்வது.''

இந்த வேண்டுகோள் மிக சுலபமாக ஏற்பாடு செய்யப்பட்டது. தொடர்ந்த மூன்று நாட்களுக்கு சாயங்காலத்தில் டேவிட் வேறெந்த வேலையும் இல்லாமல் இருந்ததால், ஓர் இசை நிகழ்ச்சிக்கு, அவன் கூட பாப்பியும் கைகோர்த்து வரும்படி ஏற்பாடு செய்யப்பட்டது. நிகழ்ச்சிக்குப் பிறகு நாங்கள் டின்னருக்குப் போயிருந்தோம். அங்கு, ஜிஞ்ஜரும் பாப்பியும், அவர்களுடைய மூக்கு நுனியின் எண்ணெய் போக பவுடர் தடவி டச் - அப் பண்ண நீண்ட நேரமாய் ஒதுங்கிவிட்டு திரும்பியபோது, அற்புத நெருக்கமாய் சிறந்த தோழிகளென ஆகியிருப்பதை நான் கவனித்தேன். ஜிஞ்ஜரின் கட்டளையின்படி, வாக்குவாதத்துக்கு வழிவகுத்து விடும் எவ்விதமான சம்பாஷணைகளும் எழுப்பப்படவில்லை. இறுதியாய் நாங்கள் கிளம்ப, ஜிஞ்ஜரை வீடு வரை ஓட்டிச் சென்றேன் நான்.

''சொல்றதுக்குப் பெருசா ஒண்ணும் நடந்துடலே'' என்றாள் ஜிஞ்ஜர். ஆனால் உற்சாகமாய், ''லோன் பற்றி பேச்சைக் கொண்டு போனேன்'' என்று ஆரம்பித்தாள்: ''அதுங்க ரெண்டும் சண்டைப் போட்ட அந்த ஆம்பிளை பேர், ஜான் ப்ளோடன். என்னைக் கேட்கப் போனா சரியான சந்தைக் கடை கிராக்கிங்கம்பேன். சேரி மாதிரி படைக்கப்பட்டவன். ஆனா எல்லா பொண்ணுங்களும் அவனைக் கொண்டாடுதுங்களே! லோவ்வைப் பிடிக்கறதுக்காக விளையாடியிருக்கான் அவன்... அப்ப உள்ளே நுழையுது இந்த டாமி. இப்ப லோவ் சொல்றா: 'அவன் உன்னை விரும்பி வரலே, ஆனா உன் பணத்தை விரும்பி வரான்'. இப்படித்தான் அவ சொல்வானும் வெச்சுக்குங்க. எப்படியோ... அவன் அப்படியே லோவ்வைக் கைகழுவிட, அவ துடிச்சுப் போறா. அவளைப் பொறுத்தவரைக்கும் அங்கே நடந்தது சண்டையெல்லாம் கிடையாதாம்... பெண்களுக்கே உரிய வெறும் பொறாமையின் வெளிப்பாடாம்.''

''அடிப்பாவி மகளே! டாமியுடைய தலைமுடியைக் கொத்தா பிடிச்சு வேரோட இழுத்தா அவ. ஆங்!''

''என்கிட்டே அந்த லோன் பொண்ணு என்ன சொன்னாளோ அதை ஜஸ்ட் அப்படியே இப்ப உங்ககிட்டே சொல்லிக்கிட்டிருக்கேன்.''

''வளவளனு எல்லாத்தையும் கொட்டிடும் டைப் போல அவ...''

''ஓ, இதுங்களைப் போன்ற கூட்டமே, என்னென்ன தொடர்புகள் இருக்கோ அதையெல்லாம் சொல்வதை பெருமையா நினைக்கும் கூட்டங்க. யாரெல்லாம் காது கொடுத்து கேட்பாங்களோ அவங்க கிட்டேயெல்லாம் பேசுங்க. அந்த அழகுல ஒரு புது பாய் பிரண்ட் கூட

இப்ப இருக்கா லோன் - இன்னொரு சந்தைக் கடை. இதையெல்லாம் வெச்சுப் பார்க்கும்போது இவ போய் அந்த வெளிறிய குதிரைக்கான தரகனா இருப்பானு தோணலே. இந்த பிரச்சினையை ஒரு கட்டத்துல நான் எழுப்பினேன். ம்ம், இது அவளை போய்ச் சேரவேயில்லை. இவளை நாம கழட்டி விட்டுடலாம்னு நினைக்கிறேன். லீகீயும் இந்த சமாச்சாரத்துல ஏதாவது இருக்கணும்னு நினைக்கலே. மாறாக, டாமிப் பொண்ணு ஜான் மேல வெறியா இருக்காள்னு நினைக்கிறான். ஜானும் அப்படித்தான் போல. அதிருக்கட்டும்... அந்த சித்திக்காரி பற்றி நீங்க என்ன பண்ணினீங்க?''

''அவ வெளிநாட்டுல இருக்கா. நாளைக்கு திரும்பி வரா. நான் அவளுக்குக் கடுதாசி போட்டிருக்கேன். அதாவது என் செக்ரட்டரியை ஒரு கடுதாசி போடச் சொன்னேன். அவங்களை சந்திக்க நேரங் கேட்டு.''

''குட். விஷயத்தை நாம நகர்த்த ஆரம்பிச்சிருக்கோம். ஏதாவது நடக்கும் பாருங்க'' என்றாள் உற்சாகமாய். ''இது பல விஷயங்களை இப்ப எனக்கு ஞாகப்படுத்தது. இந்த ஒரு பிரச்சனையின் துவக்கத்துக்குப் போவோம். இந்த கேஸின் சாரம் என்ன? ஃபாதர் கார்-மேன், இறந்துக் கொண்டிருக்கும் ஒரு பெண்மணியைப் பார்த்ததும் பிறகு கொல்லப்பட்டிருக்கார்... அந்தம்மா எதையோ அவரிடம் சொன்னதனாலோ அல்லது எது குறித்தோ பாவ மன்னிப்புக் கேட்டதனாலோ அவர் கொல்லப்பட்டிருக்கிறார். அந்தப் பொம்பளைக்கு அப்புறம் என்ன ஆச்சு? அவ செத்துட்டாளா? அவ யார்? இதுல எல்லாம் நமக்கு நிச்சயமா துருப்பு கிடைக்கணும்.''

''அவ இறந்துட்டா. அவளைப் பற்றி எனக்கு நிறைய தெரியாது. அவ பேர் டேவிட்னு நினைக்கிறேன்.''

''வெல்... உங்களால மேற்கொண்டு எதுவும் திரட்ட முடியாதா?''

''என்னால என்ன பண்ண முடியுமோ அதை பண்றேன்.''

''அவளோட பின்னணி என்ன என்பது பற்றி நாம பிடிச்சுட்டா, அவங்களுக்கு என்ன தெரிஞ்சிருந்ததோ அதை அவங்க எப்படி தெரிஞ்சுக்கிட்டாங்கன்னு நாம கண்டுபிடிக்கலாம்.''

''ம்... உன் பாயிண்ட்டும் எனக்கு விளங்குது.''

நான் மறுநாள் அதிகாலையிலேயே ஜிம் காரிகனைத் தொலைபேசியில் பிடித்து என் கேள்விகளை அவரிடம் கேட்டேன்.

''இப்ப எனக்கு விளங்குது. கொஞ்சம் முன்னேறியிருக்கோம். நிச்சயமா. ஆனா ரொம்ப ஒண்ணும் முன்னேறிடலே. டேவிட் அவளோட நிஜப்

பெயர் கிடையாது... இந்தத் தேடல்தான் காலந்தாழ்த்தியிருக்கு. கொஞ்சம் பொறு... நான் சில சமாச்சாரங்களை நோட் பண்ணியிருக்கேன். ஓ, யெஸ், இதோ, அவ நிஜப் பெயர். ஆர்ச்சர். அவளுடைய கணவன் கொஞ்ச காலம் முரடனாயிருந்திருக்கான். அவனை விட்டுட்டு வெளியேறின அவ, பழையபடி அவங்க பொறந்த வீடு வெச்ச பேருக்கே திரும்பியிருக்கா.''

''என்ன மாதிரியான முரடன் அவன்? இப்ப அவன் எங்கேயிருக்கான்?''

''ரொம்ப பெரிய குத்தமெல்லாம் கிடையாது. டிபார்ட்மெண்ட்டல் ஸ்டோர்லிருந்து கொஞ்சமா என்னத்தையோ திருடியிருக்கான். இதுபோல இங்கேயும் அங்கேயும் பண்ணிக்கிட்டு திரிஞ்சிருக்கான். சில குற்றங்கள் அவன் மேல இருக்கு. அவன் எங்கேயிருக்கான்? தெரியலே.''

''ம்ம், இந்த தகவல்கள்ல எதுவும் தேறலியே...''

''இந்தத் தகவல்கள்ல எதுவும் கிடையாதுப்பா.. மரணிக்கும்போது மிஸஸ் டேவிட் வேல பார்த்துக்கிட்டிருந்த நிறுவனம் C.R.C. Customer's Reactions Classified. வாடிக்கையாளர்களுடைய குறைகளைக் கேட்டறிந்து ஆராயும் நிறுவனம் போல. இவங்களுக்கும் அந்தம்மாவைப் பற்றியோ அந்தம்மாவினுடைய பூர்வீகம் பற்றியோ எதுவும் தெரியாது.''

நான் அவருக்கு நன்றி சொல்லிக் கொண்டேன். ரிஸீவரை வைத்தேன்.

அத்தியாயம் 12

மார்க் ஈஸ்ட்டர் – ப்ரூக் பதிந்தவை

மூன்று நாட்கள் கழித்து ஜிஞ்ஜர் எனக்கு போன் பண்ணியிருந்தாள். ''உங்ககிட்டே சொல்ல விஷயம் வெச்சிருக்கேன்'' என்றாள். ''ஒரு பெயரும் முகவரியும். எழுதிக்குங்க.''

நான் என் நோட்டுப் புத்தகத்தை எடுத்துக் கொண்டேன். ''கோ அஹேட்.''

''ப்ராட்லே, பெயர். முகவரி: 78, கார்ப்பரேஷன் சதுக்கம், பிர்மிங்ஹாம்.''

''வெல்... நான் ஒண்ணும் விளங்காமல் இருட்டுல இருக்கேன். இப்ப, என்ன இதெல்லாம்?''

''கடவுளுக்குத்தான் வெளிச்சம்! எனக்குத் தெரியாது. பாப்பிக்கு ஒருவேளை தெரியுமோனு தோணுது.''

''பாப்பி? இது அவ மூலமா...''

''யெஸ். நான் பாப்பிகிட்டே எக்கச்சக்கமா தூண்டில் போட்டிருக்கேன். நான் முயற்சித்தால் அவகிட்டேயிருந்து எதையாவது பிடுங்கிடுவேன்னு நான் சொல்லலே? அவளை அப்படியே மஸாஜ் பண்ணி வழிக்குக் கொண்டு வந்து விட்ட பிறகு எல்லாமும் ஈஸியாகிடுச்சு.''

''இதை எப்படி நீ முடிச்சே?''

இதற்கு ஜிஞ்ஜர் சிரித்தாள். ''ரெண்டு கொண்டை சேர்ந்தால் ஒரு வம்பு கதைதான். உங்களுக்கு இது விளங்காது! ஒரு பொண்ணு, இன்னொரு பொண்ணுகிட்டே ஏதாவது விஷயத்தை சொன்னால், அதனால் பாதகம் இல்ல... இதுதான் கோட்பாடு. சொல்வதினால் பாதகமே கிடையாதுனு நினைச்சுட்டா அவ...!''

மீண்டும் சிரித்து விட்டு தொடர்ந்தாள்.

''நாங்க ரெண்டு பேரும் ஒண்ணா சாப்பிட்டோம். பிறகு என் காதல் பற்றி விலாவாரியா விட்டேன். ஏற்கெனவே மணமானவன் அவன்னு அறிமுகம் தந்தேன். சந்தித்த பல்வேறு தடைக் கற்கள் - கல்யாணம் கட்டிக்கிட்ட அவனுக்கு வாய்த்த பிரயோஜனமற்ற மனைவி - அவன் கத்தோலிக்கன், அதனால் அவனால டைவர்ஸும் பண்ண முடியாது - இது அவன் வாழ்க்கையையே நரகமாக்கிப் போட்டுச்சு. அவ எந்த அளவுக்கு பிரயோஜனமற்றவ அப்படினும், எப்பவும் வலியால கதறுவாள்னும், ஆனா கூடிய சீக்கிரத்துல இறந்துவிடும் வாய்ப்பும் இல்லாதவள்னும் - விட்டுக்கிட்டேயிருந்தேன்! அவ இறந்து விடுவதே அவளுக்கு பெரிய உபகாரம்னு சொல்லி அஸ்திரத்தை ஏவ ஆரம்பிச்சேன். இதுக்கு *வெளிறிய குதிரை* தயவோட நான் இயங்க விரும்புவதாகவும் ஆனா எப்படி தொடங்குவதுனு தெரியாம குழம்புவதாகவும் சொன்னேன். ரொம்ப செலவு பிடிக்குமோ? - கேட்டேன்! இதுக்கு பாப்பி யெஸ்னா... அப்படித்தான் நினைப்பதா சொன்னா. பர்ஸைப் பிடுங்காம வெளியே விடாத அளவுக்கு காசு கேட்கப்படும்னு சொன்னா. இதுக்கு நான் பரவாயில்லே... வேலை முடிஞ்சா சரின்னேன். இப்பத்தான் இந்த பெயர் மற்றும் முகவரியை முன்னால வெச்சா, பாப்பி. நினைச்சதை நடத்தி முடிக்க முதல்ல இவனைப் போய் பார்க்கணும்னா, அவ.''

''இது ஆச்சரிய அதிசயம்'' என பாராட்டினேன் நான்.

''அப்படித்தான். ஆச்சரிய அதிசயந்தான்.''

நாங்களிருவரும் சில கணங்கள் அமைதியாகிப் போனோம். ''அவ இதையெல்லாம் உன்கிட்டே வெளிப்படையாகவோ தந்தாள்? கொஞ்சம் - கொஞ்சமும் பயப்படலே?''

''உங்களுக்கு முழுசா விளங்கலே ஸார்'' என்றாள் ஜிஞ்ஜர் சற்றே பொறுமையிழந்தவளாய். ''என்கிட்டே சொல்வதுல அவளுக்குத்தான் எந்தப் பாதகமும் கிடையாதுன்னுட்டேன் இல்லே..! மேலும் மிஸ்டர் மார்க்... நாம மனசுல கற்பனை பண்ணிப் பேசிக்கிட்டிருக்கும் இந்த *வெளிறிய குதிரை* சமாச்சாரம் அத்தனையும் அப்படியே உண்மை தானென்றால், அது ஏதாவது ஒரு வழியில விளம்பரப்படுத்தப்படணும் தானே? தினமும் புதுசா புதுசா வாடிக்கையாளர்களை அவங்க எதிர்பார்ப்பாங்கனு சொல்ல வரேன். பிஸினஸ் நடத்த வேண்டாமா?''

''இப்படியெல்லாம் இஷ்டத்துக்கு நினைச்சுக்கிட்டு நம்பும்படி நாம இப்ப ஆகிட்டோம்...?''

''ஆல் ரைட், நாம பைத்தியம்தான். விடுங்க. இப்ப பதில் சொல்லுங்க. மிஸ்டர் ப்ராட்லேவைப் பார்க்கப் போறீங்களா?''

''யெஸ்'' என்றேன் நான். ''நான் அவரைப் பார்க்கப் போறேன், அப்படி ஒருத்தர் இருந்தால்!'' ஆனால், நான் தவறு. மிஸ்டர் ப்ராட்லே என்றொருவன் இருந்தான்.

எண்ணிலடங்கா தேன் அடைகளைக் கொண்ட அலுவலகமாய் இருந்தது கார்ப்பரேஷன் ஆபீஸ். 78, மூன்றாம் தளத்திலிருந்தது. அங்கு கண்ணாடிக் கதவில், துல்லியமாய் கறுப்பெழுத்துக்களில் இருந்தது: ஸி ஆர் ப்ராட்லே, ஏஜெண்ட். இதற்கு கீழே சின்னதாய் Please Enter.

நான் நுழைந்தேன்.

காலியாயிருந்த ஒரு சின்ன காரியதரிசி அறையும், private என்று பொறிக்கப்பட்டு ஒருக்களித்த நிலையிலிருந்த கதவும் இருந்தன. அதனுள்ளிருந்து ஒரு குரல் வந்தது: ''கம் இன், ப்ளீஸ்.''

உள்ளிருந்த அந்த அறை பெரியது. ஒரு டெஸ்க், ஓரிரு வசதியான அகல இருக்கைகள், ஒரு தொலைபேசி, அடுக்கி வைக்கப்பட்டிருந்த கோப்புக் கோபுரம், டெஸ்க்குக்குப் பின்னால்: மிஸ்டர் ப்ராட்லே.

குள்ளமான கறுப்பு மனிதன். துளைக்கும் விழிகள். கறுப்பு சூட் போட்டிருந்த அவன், மரியாதை தரத் தகுந்தவனாய் தோன்றினான்.

''கதவை சாத்திட்டு வர முடியுமா, ப்ளீஸ்?'' என்றான் இனிமையாய். ''ம், உட்காருங்க, அந்த சேர் ரொம்ப வசதியாயிருக்கும். சிகரெட்? நோ? வெல் அப்ப சொல்லுங்க... *நான் என்ன பண்ணனும்?''*

நான் அவனைப் பார்த்தேன். எப்படி துவங்குவது என்று எனக்குத் தெரியவில்லை. என்ன வார்த்தையைச் சொல்லி ஆரம்பிப்பது என்று எனக்கு துளி கூட ஐடியா இல்லை. நான் உரையாடலைத் துவக்க பயன்படுத்திய கேள்வி, என் இயலாமையின் உச்சகட்டமாய்த்தானிருக்க வேண்டும். அல்லது அவனது அந்த துளைக்கும் கண்கள் கூட காரணமாயிருக்கலாம்.

''எவ்ளோ?'' - நான் கேட்டேன்.

அது அவனைக் கொஞ்சம் துணுக்குற வைத்தது. இதை கவனித்ததில் எனக்கு குஷி. ஆனால் அவன் எந்த வகையில் துணுக்குற்றிருக்க வேண்டுமோ அந்த வகையில் அது இடம்பெறவில்லை. மூளை குழம்பிய ஒருத்தன் முன்னால் வந்து உட்கார்ந்து கொண்டு இப்படி திடுதிப்பென்று

கேட்கின்றான் என்றோர் எண்ணம் அவனுக்கு எழவில்லை. அவனிடத்தில் நானிருந்திருந்தால் இப்படித்தான் எனக்கு தோன்றி யிருக்கும்.

அவனது புருவங்கள் உயர்ந்தன. ''வெல், வெல், வெல்'' என்றான் அவன். ''நீங்க அதிக நேரம் வீணாக்க மாட்டீங்க இல்லையா?''

நான் கேட்ட கேள்வியிலேயே நின்றேன்: ''பதில் என்ன?''

அவன் தன் தலையை சற்றே கண்டிக்கும் தொனியில் மறுப்பாய் அசைத்தான். ''வந்த விஷயத்துக்குள்ளே நுழைய இப்படி ஆரம்பிப்பது சரியான முறை கிடையாது. நாம முறையான வகையில முன்னேறணும்...''

நான் தோள்களைக் குலுக்கிக் காட்டினேன். ''உங்க விருப்பப்படியே. சொல்லுங்க... எது முறையான வகை?''

''நாம இன்னும் ஒருத்தருக்கொருத்தர் அறிமுகப்படுத்திக்கவே இல்லையே! உங்க பேர் என்னனு எனக்குத் தெரியாது.''

''இப்போதைக்கு'' என்ற நான் ''அது என்னனு உங்களுக்கு சொல்ல தேவையில்லைன்னு நினைக்கிறேன்'' என்றேன்.

''முன் ஜாக்கிரதை?''

''முன் ஜாக்கிரதை!''

''பாராட்ட வேண்டிய குணம்தான் - ஆனா எப்பவும் செல்லுபடியாகாது. இப்ப முதல்ல... யார் உங்களை இங்கே அனுப்பினது? நம்மிருவருக்கும் பொதுவான அந்த ஃப்ரண்ட் யார்?''

''மறுபடியும்'' என்ற நான், ''இப்போதைக்கு அது என்னனு என்னால உங்களுக்குச் சொல்ல முடியாது. என் நண்பன் ஒருத்தனுக்கு ஒரு நண்பன் இருக்கான்... அந்த நண்பனுக்கு உங்க நண்பர்கள்ல ஒருத்தனைத் தெரியும்'' என்றேன்.

மிஸ்டர் ப்ராட்லே ஒப்புதலாய் தலையசைத்தான். ''இப்படி சொல்லிக்கிட்டுதான் என்னோட பல வாடிக்கையாளர்கள் இங்கே வராங்க'' என்றான். ''அதுல சில ப்ராப்ளம் ரொம்ப நுணுக்கமானவை. ஆங்... என் தொழில் என்னனு அப்ப உங்களுக்குத் தெரியும்னு நான் நினைக்கிறேன்...''

இதற்கு நான் சொல்லப் போகும் பதிலுக்குக் காத்திருக்கும் எண்ணம் அவனுக்கு இருந்ததாய் தோன்றவில்லை. அவனே எனக்கு பதிலைத் தர விரைந்தான். ''கமிஷன் ஏஜண்ட். உங்களுக்கு ஈடுபாடு இருக்கா- *குதிரைகள்ல?''*

அந்தக் கடைசி வார்த்தையை சொல்வதற்கு முன்னால் சின்ன தாமதம் அமைந்திருந்தது.

இதற்குப் பதிலாய் ஏதோ ஈடுபாடு இல்லாதவனைப் போல, ''ரேஸ்ல எனக்கு ஈடுபாடு கிடையாது'' என்றேன்.

''குதிரைகளுக்குப் பல முகங்கள் இருக்கு, ஆங்! ரேஸ், வேட்டையாடுதல், வாடகை வண்டி! ஆனா இவை எல்லாத்தையும் விட குதிரை விளையாட்டுத்தான் என்னைக் கவர்ந்தது. பந்தயம்! *பந்தயக் குதிரை.*''

இங்கு சற்று நேரம் அமைதி காத்துவிட்டு எதேச்சையாக, மிகவும் எதேச்சையாகக் கேட்டான்: ''இதைத் தவிர ஏதாவது குறிப்பிட்ட குதிரை உங்க மூளைல வெச்சிருக்கீங்களா?''

''ஒரு *வெளிறிய குதிரை...*''

''ஆஹ், வெரி குட். எக்ஸலெண்ட். நீங்களே கூட, சொல்வதற்கு மன்னிக்கணும், சீக்கிரம் விஷயங்களை வெளியே விட்டுடாத கறுப்பு குதிரை போல தெரியறீங்க! ஹா, ஹா! ஆங், ஆங்... இப்ப நீங்க படபடப்பா ஆகத் தேவையேயில்லை. இப்படி படபடக்க இப்ப ஒரு காரணமும் கிடையாது.''

''நீங்க இப்படித்தான் சொல்வீங்க'' என்றேன் நான் சற்றே கடுமையாய்.

''உங்க உணர்வுகளை என்னால முழுமையா புரிஞ்சுக்க முடியுது. ஆனா இதுல உங்களுக்கு எவ்விதமான படபடப்பும் இருக்கத் தேவையில்லை என்பதை மட்டும் நான் ஊர்ஜிதப்படுத்த விரும்பறேன். நானே கூட ஒரு லாயர், தெரியுமா? வக்கீல். ஆனா பாரிலிருந்து தூக்கப்பட்டவன்'' என்று அழுத்தந் திருத்தமாய் கூடுதலாய் தகவல் தந்தான். ''இல்லேனா நான் எதுக்கு இங்கே இருக்கணும்? ஆனா எனக்கு என் சட்ட திட்டம் என்னும் என் எல்லைகள் என்னனும் தெரியும்னு சொல்லிக்க விரும்பறேன். யெஸ். ஐ நோ மை லா. நான் சிபாரிசு பண்ணும் எதுவும் சட்டதிட்டத்துக்கு உட்பட்டது... குற்றங்களுக்கு அப்பாற்பட்டது. *இது ஒரு பந்தய விளையாட்டு போல* - யெஸ். ஒருத்தனுக்கு என்ன தோணுதோ அதுலேயெல்லாம் பந்தயம் வெச்சு பார்க்கலாம். நாளைக்கு மழை பெய்யுமா, ரஷ்யர்கள் மனுஷனை சந்திரனுக்கு அனுப்பிக்கிட்டே இருக்க முடியுமா அல்லது உங்க மனைவிக்கு ரெட்டை புள்ளைங்க பிறக்குமா? இன்னும் ஆழமா, மிஸஸ் அ, கிறிஸ்துமஸ் தினத்தன்னிக்கு சாவாளா? இல்ல, மிஸஸ் ஆ, நூறு வயசு வாழ்வாளா? இப்படி ஸிம்பிளானதுதான், பந்தயங்கள்...''

ஆபரேஷனுக்கு முன்னால் டாக்டரால் முழு தைரியம் மீண்டும் அளிக்கப்படுவதைப் போல உணர்ந்தேன் நான். நான் மெல்லமாய் சொன்னேன்: ''இந்த *வெளிறிய குதிரை* பிசினஸ் பற்றி எனக்கு ஒண்ணுமே விளங்கலே.''

''ஆக, இது உங்களை சங்கடப்படுத்துது? யெஸ். இது பலரை சங்கடப்படுத்திக்கிட்டிருக்கு. வெளிப்படையா சொல்லப் போனா, இது எனக்கே கூட விளங்கலே. ஆனா இது ரிஸல்ட்டை அள்ளித் தருது. எதிர்பார்க்கும் முடிவுகளை வியக்கத்தக்க அளவுக்கு அள்ளித் தருது, இது.''

''இதைப் பற்றி இன்னும் கூடுதலா உங்களால எனக்கு சொல்ல முடியும்னா...''

நான் வந்திருந்த வேலைக்குள் இப்போது வாகாய் இறங்கிக் கொண்டேன், முன் ஜாக்கிரதையாய், ஆர்வமாய் - கூடவே பயமாய். இப்படிப்பட்ட கலவையான உணர்வுகளோடு எதிரில் அமரும் ஆட்களைத்தான் மிஸ்டர் ப்ராட்லே அதிகம் கையாள வேண்டியிருக்கும்.

''அந்த இடம் உங்களுக்குப் பழக்கப்பட்ட இடமா?''

துரிதமாய் ஒரு முடிவினை நான் எடுத்துக் கொண்டேன். இதில் பொய் சொல்வது புத்திசாலித்தனமாகாது. ''எனக்கு- வெல் - யெஸ். என் நண்பர்களோட அங்கே போயிருந்தேன். என்னை அவங்கதான் அங்கே கூட்டிட்டுப் போனாங்க...''

''கவரும் *ஓல்ட் பப்.* த்ரேதாயுக செல்வங்கள் சூழ்ந்திருக்கும் விடுதி. அச் செல்வங்களை அப்படியே வைத்திருப்பதில் அவங்க ரொம்பவும் மெனக்கிட்டிருக்காங்க. அப்ப நீங்க, அவளைப் பார்த்தீங்க? என் தோழி, மிஸ் க்ரேவைச் சொல்றேன்..''

''யெஸ்- யெஸ் - அஃப்கோர்ஸ். ஓர் அசாதாரண பெண்மணி.''

''அப்படித்தானே அவங்க? இல்லையா, *அப்படித்தானே அவங்க?* ரொம்ப சரியா வர்ணிச்சுட்டீங்க. ஓர் அசாதாரண பெண்மணி, மேலும் *அசாதாரண சக்திகளுடன்.*''

''தன்னால முடியும்னு அவங்க மார் தட்டி சொல்லும் சமாச்சாரங்கள் - ஓ, நிச்சயமா, வெல், வெல் - சாத்தியமே கிடையாது இல்லையா?''

''எக்ஸாக்ட்லி. இதுதான் முழு விஷயமே. அவளால தெரிஞ்சுக்க முடியும்னும் பண்ண முடியும்னும் சொல்லும் அனைத்தும், சாத்தியம் அற்றவை! இம்பாஸிபிள்! கேள்விப்படும் யாரும் முடியவே முடியாதுனு

தான் சொல்வாங்க. உதாரணத்துக்கு சட்டத்துக்குக் கட்டுப்பட்ட கோர்ட் வளாகத்துல...''

இப்போது அந்தக் கறுப்பு மணி விழிகள் என்னை துளை போட்டு உட்புகுந்தன. கடைசி வாக்கியத்தை மீண்டும் அவன் வழக்கப்படுத்தி வைத்திருக்கும் ராகக் குரலில் சொன்னான்.

''சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்ட நீதிமன்றத்தை உதாரணத்துக்கு எடுத்துக்குவமே... இந்த முழு சமாச்சாரங்களும் கேலிக் கூத்துனு ஒதுக்கப்பட்டு விடும்! அந்தம்மா வந்து நின்னு மனச்சாட்சியால கொன்னேன்னு சொன்னாலோ அல்லது இப்படிப்பட்ட மனம்சார்ந்த ஒரு ரிமோட் கண்ட்ரோல் வகையில் கொன்னதா சொன்னாலோ, இல்ல இதுக்கு ஏதாவது பொருத்தமான ஒரு பேரை வெச்சு அந்த உளவியல் முறையில கொன்னேனு சொன்னாலோ, உங்களைப் போன்ற மற்றும் என்னைப் போன்ற ஒரு சிலருக்கு புத்திசாலித்தனம்தான்னு தோன்றும் இத்தகைய சாட்சியம், முதல் வேலையா தள்ளி வைக்கப்பட்டு விடும்! கோர்ட்டால! இது, சட்ட ரீதியா ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல. இவ்வகை ரிமோட் கண்ட்ரோல் கொலை, சட்டத்தின் கண்களுக்கு ஒரு கொலை கிடையாது. இது ஜஸ்ட் ஒரு நான்சென்ஸ். இந்த சமாச்சாரத்தின் முழு அழகுமே இதுதான் - *முழு அழகு.*''

எனக்கு விளங்கி விட்டது என்பதில் நான் ஸ்திரமானேன். அமானுஷ்ய ரகசிய சக்திகள் கொண்டு இழைக்கப்படும் கொலைகள் ஆங்கிலேய சட்டத்துக்கு முன்னால் ஒரு கொலை கிடையாது. நான் ஒரு கொலைகாரனை வாடகைக்கு எடுத்து அவனுக்கு கத்தியோ கபடாவோ வாங்கித் தந்து ஒரு கொலையை செய்யும்படி தூண்டி ஏவி விட்டால், அப்போது நான் அத்தகைய கொலையில் ஈடுபட்டவனாகின்றேன்... சட்டத்துக்கு முன்னால் குற்றவாளி. ஆனால் நான் தெரஸா க்ரேயை அமர்த்தி அவருடைய ப்ளாக் மேஜிக் வகையை பயன்படுத்தி ஏவி விட்டு கொலை செய்தால் அதெல்லாம் சட்டத்துக்குள் அனுமதிக்க முடியாமல் வெளியிலேயே நின்றுப் போகும். குற்றமற்றவைகளாய்! இதுதான், இதேதான், மிஸ்டர் ப்ராட்லேயின் வார்தைகளில், இதன் முழு அழகு.

இப்போது எனக்குள்ளிருந்த அனைத்து பகுத்தறிவும் முண்டியடித்துக் கொண்டு வர, வெடித்தேன். 'ஆனா, ஆனா, ச்சே... இதெல்லாம் முழு கற்பனை'' என கத்தியே விட்டேன். ''நான் இதை நம்பலே. இது சாத்தியமே கிடையாது.''

''நான் உங்களோட ஒத்துப் போறேன். யெஸ் ஒத்துக்கிறேன். தெரஸா க்ரே ஓர் அசாதாரண பெண்மணி மற்றும் அவளுக்கு அசாதாரண சக்திகள் இருக்கவே செய்யுது... ஆனாலும், அவளால பண்ண முடியும்னு அவ சொல்லும் எல்லாத்தையும் ஒருத்தனால உடனடியா ஒத்துக்க முடியாதுதான். நீங்க சொல்வதுபோல, யெஸ், அதீத கற்பனையாதான் இருக்கு. எல்லாமும். இந்த அறிவியல் யுகத்துல, ஒரு பொம்பளை, இங்கே ஒதுக்குப்புறமான ஒரு கிராமத்து குடிசைக்குள்ளே உட்கார்ந்துக்கிட்டு, எண்ண அலைகளை நேரடியாகவோ அல்லது ஆவிகளுடன் தொடர்பு கொள்ளக் கூடிய வல்லமை பெற்ற ஒரு மீடியம் மூலமாகவோ காத தூரம் தள்ளியிருக்கும் ஒருத்தரைக் குறி வெச்சு அனுப்பி அவருக்கு வசதியா ஒரு வியாதினை உண்டுபண்ணிக் கொன்னுட முடியும்னு சொன்னால்... யெஸ் நம்ப முடியாதுதான்...''

''ஆனா இதைத்தானே... இதையேதானே அவங்க தன் சாதனையா சொல்றாங்க?''

''ஓ, யெஸ்... அதான் சொல்றேன். அவளுக்கு அமானுஷ்ய சக்தியிருக்கு. அவ ஸ்காட்லாண்டுகாரி. அந்த ஜனங்களுக்கே ரத்தத்துக்குள்ளே ப்ளாக் மேஜிக் வரம் ஓடிக்கிட்டிருக்கு. கறுப்பு சக்தி, நிச்சயம் இருக்கு. ஸார்... நான் என்ன நம்பறேன்னா, சந்தேகத்துக்கு அப்பாற்பட்டு நான் எதை நம்பறேன்னா'' என்றவர் முன்னால் வளைந்து வந்து ஆட்காட்டி விரலை அழுத்தமாய் அசைத்தபடி அழுத்த சொன்னார்: ''தெரஸா க்ரேவுக்கு - யார் எப்ப சாவாங்கன்னு முன்கூட்டியே தெரியும். இது ஒரு வரம். இது அவளுக்கு இருக்கு.''

மீண்டும் பின்னால் சாய்ந்துக் கொண்டான், என்னை படித்தபடி. நான் காத்திருந்தேன்.

''ஒரு விவாதத்தை இப்ப எடுத்துப்போம். நீங்களோ அல்லது வேறு யாரோ ஒருத்தரோ, எப்போ பாட்டி எலீஸா மண்டையைப் போடும்னு தெரிஞ்சுக்க விரும்பறீங்கனு வெச்சுப்போம். இப்படிப்பட்ட ஒரு விஷயத்தை தெரிஞ்சப்பதுல பல உபகாரங்கள் இருக்கு என்பதை நீங்களே ஒத்துப்பீங்க. இதுல இரக்கமற்ற தன்மையோ அல்லது தப்போ கிடையவே கிடையாது - ஜஸ்ட் எல்லாம் ஒரு நிர்வாக வசதிக்குனு வெச்சுப்போம். ஒரு சின்ன திட்டமிடலுக்குனு எடுத்துக்கலாம். அடுத்த நவம்பர்ல நல்ல பணம் நமக்கு வந்து சேருமா? ஆமாம்னு நிச்சயமா தெரிஞ்சுடுச்சுன்னா உங்களால சில முக்கிய முடிவுகளை முன்கூட்டியே திட்டமிட்டுட முடியும்...

இதைத்தான் நிர்வாக வசதின்னேன். மரணம், நம்ம சான்ஸ்படி நடக்கும் எப்படிப்பட்ட ஒரு சமாச்சாரம்னு, பார்த்தீங்களா! ஆனா டாக்டருங்களோட ஒத்துழைப்பு இருந்தால் பாட்டிம்மா இன்னும் பத்து வருஷத்துக்கு சுபிட்சமா இருப்பாங்க. இது உங்களுக்கு பிடித்தமில்லே.''

இங்கு சற்று நிறுத்தி விட்டு அவன் மீண்டும் வளைந்து முன்வந்தான்: ''இப்ப இங்கேதான் நான் நுழையறேன். நான் பந்தயம் வைக்கும் மனுஷன். எதுல வேணும்னாலும் நான் பந்தயம் வெப்பேன் - என் வசதிப்படி. நீங்க என்னைப் பார்க்க வரீங்க... நிச்சயமா பாட்டிம்மா செத்துப் போக வேண்டியதை முன் வெச்சு என்கிட்டே பேச நீங்க பிரியப்பட மாட்டீங்க. பாவம், உங்களுடைய பாச உணர்வு அதுக்கு இடம் தராது. ஆக நீங்க என்கிட்டே பந்தயம் கட்டறீங்க... அடுத்த கிறிஸ்துமஸ் வரைக்கும் பாட்டிம்மா ஆரோக்கியமா இருப்பாங்கன்னு! நான் உங்க குறிக்கோளைப் புரிஞ்சுக்கிட்டு, இல்ல... அந்தம்மா அத்தனை நாள் தாங்காதுங்கறேன்...''

அந்தத் துளைக்கும் மணி விழிகள் என்னை ஊடுருவிக் கொண்டிருந்தன, கவனித்தபடி...

''இதுல தர்ம விரோதம் எதுவும் கிடையாது, இல்லையா? நாம இதே போக்குல வாக்குவாதம் பண்றோம். பாட்டிம்மாவுக்கு சாவு நெருங்கிடுச்சுங்கறேன் நான். நீங்க இல்லங்கிறீங்க... நம்ம முடிவுகளைத் தூக்கிப் பிடிச்சபடி நாம ஒரு கான்ட்ராக்ட் கையெழுத்திடறோம். நான் ஒரு தேதி தரேன். உங்களுக்கு. அந்த தேதிக்கு பதினைந்து நாட்கள் அந்தப் பக்கமோ அல்லது இந்தப் பக்கமோ பாட்டிம்மாவின் இறுதிச் சடங்குகள் நடக்கும்கறேன். நீங்க கிடையாதுங்கறீங்க. நீங்க சரின்னா - நான் உங்களுக்குப் பணம் தரேன். நீங்க தப்பாகிட்டா - நான் தருவேன். ஆனா, நீங்கதான் தருவீங்க!''

நான் அவனைக் கவனித்தேன். ஒரு பணக்காரி பாட்டி, வழியை விட்டு அகன்று நிரந்தரமாய் போய்விட வேண்டும் என உணரும் ஒரு மனிதனின் உணர்வினை உணர முயற்சித்தேன். இத்தனை பேச்சினையும் ப்ளாக் - மெயில் என வகைப்படுத்தி பார்த்தேன். ஓர் ஆசாமி பல நாட்களுக்கு என் பிராணனை வாங்கி வருகின்றான்... இனி என்னால் தாங்கிக் கொள்ளவே முடியாது என்றொரு நிலை உருவாகி விடுகின்றது... அவன் சாக வேண்டும் என்பது என் முடிவாகி விடுகின்றது... நானே போய் அவனைக் கொன்று விடும் துணிவு எனக்கு இல்லை... ஆனால் என்னால் எவ்வளவு தந்தாகிலும், யெஸ், நான் நினைத்ததை, நினைத்ததை...

நான் இப்போது பேசினேன். என் குரல் உடைந்து வந்தது. சிறு துணிச்சல் உள்ளே எழ கேட்டேன்: ''என்ன நிபந்தனைகள்?''

உடனேயே மிஸ்டர் ப்ராட்லேயின் நடவடிக்கையில் ஒரு துரிதமாற்றம் நிகழ்ந்தது. உவகையாய், துள்ளலாய்.

''இதுதான் நாம சந்திக்க வேண்டிய கட்டம், இல்லையா? இதுக்காகத் தான் நீங்க வந்திருப்பதே. ஹா ஹா! 'எவ்ளோ?' - இது நீங்க கேட்டது. இது என்னை அப்படியே தூக்கி வாரிப் போட்டுது. யாரும் அத்தனை உடனடியா சமாச்சாரத்துக்குள்ளே நுழைஞ்சு நான் பார்த்ததில்லை.''

''என்ன நிபந்தனைகள்?''

''அது, பல விஷயங்களைப் பொறுத்தது. பேங்க்ல உங்களுக்கு எத்தனை இருக்கு என்பதை பொறுத்திருக்கு. நிம்மதியற்ற கணவனோ, அல்லது ப்ளாக் - மெயிலால் அவதிப்படும் ஒருத்தரோ, எத்தனை கொடுக்கவும் தயாராயிருப்பாங்க. ஒண்ணு சொல்லிக்கிறேன்... பசையற்ற ஏழை ஆளுங்ககிட்டே நான் பேரம் ஆரம்பிப்பதேயில்லை. ஆக நிபந்தனைகள் இரு தரப்பு ஒப்புதலுக்கு உட்பட்டது. ஓகே? நம்ம ரெண்டு பேருக்குமே வரவு இருக்கணும், இல்லையா? ஐநூறு, ஐயாயிரம், பத்தாயிரம்... பவுண்டுகள்.''

''பத்தாயிரம்? பவுண்டுகள்? ஓ, தலை சுத்துது.''

''ம்ம், தெரஸாவின் பவர் அப்படி...''

''ஒருவேளை - தோத்துட்டா...''

''நான்? ஓ, பரிதாபம். ஆனா அந்தப் பரிதாபம் நடக்காது. நடந்துட்டா... திருப்பி தந்துடுவேன்.''

நான் எழுந்துக் கொண்டேன். ''நா... நான்... யோசிக்கணும்.''

இனிமையாகவே சொன்னான்: ''நிச்சயமா. யோசியுங்க. எதுக்குள்ளேயும் அவசர அவசரமா விழுந்துடாதீங்க. இதுக்குள்ளே இறங்குவதுனு முடிவு பண்ணிட்டீங்கன்னா, ப்ளீஸ் திரும்பி வாங்க. முழுக்கவும் இறங்கிடுவோம். அவகாசம் எடுத்துக்குங்க. இதுல என்ன அவசரம் வேண்டிக் கிடக்கு. அவகாசம் எடுத்துக்குங்க.''

இவ்வார்த்தைகள் என் காதுகளில் சற்று நேரம் எதிரொலித்துக் கொண்டேயிருக்க நான் வெளியேறினேன்: *அவகாசம் எடுத்துக்குங்க.*

அத்தியாயம் 13

மார்க் ஈஸ்ட்டர் – ப்ரூக் பதிந்தவை

கோஞ்சம் கூட இஷ்டமில்லாமல்தான், மிஸஸ் டக்கர்டானைச் சந்திக்கும்படி என் தலையில் விழுந்திருந்த பணியைத் தூக்கிக் கொண்டு நான் கிளம்பினேன். இதைப் போய் நான் பண்ண வேண்டுமா என்ற கேள்விக்கு கொஞ்சமும் திருப்திகரமான பதில் என்னுள் எழாத நிலையில் ஜிஞ்ஜரால் இந்த இண்டர்வியூவுக்குள் நான் திணிக்கப்பட்டிருந்தேன். இதில் தேவையான பங்களிப்பினை என்னால் தர முடியுமா என்பதில் பெருத்த சந்தேகம் எனக்கிருந்தது. தப்பான முகமூடி அணிந்துக் கொண்டு நான் நுழைந்திருக்கிறேன் என்று நானே காட்டிக் கொடுத்துக் கொள்வேனோ என்ற அடியாழத்து உலுக்கல் வேறு பெருசாய் இருந்தது.

தேவையான தக்க தருணத்தில் கட்டுக்கடங்கா 'திறமையை' அனாயாசமாய் நடைமுறைப்படுத்த உகந்த ஜிஞ்ஜர் டெலிபோனில் எனக்கு விவரித்திருந்தாள்: ''எல்லாம் படு ஸிம்பிளா இருக்கும் ஸார். அது ஒரு ஆதி காலத்து முஸ்லீம் வீடு. வழக்கமா ஊருலகத்துல நாம பார்க்கும் வீடு போன்றது கிடையாது அது. அதை நீங்க பார்க்கப் போறீங்க.''

''கடவுளே... அதைப் போய் எதுக்காக நான் பார்க்கணும்?''

''ஒரு கட்டுமானவியல் இன்ஜினியருக்குள் இதுபோன்ற பழைய வீடுகள் தரக் கூடிய தாக்கம் பற்றி ஒரு புத்தகம் எழுதப் போறீங்க.''

''யார்?''

''நீங்க!''

''ஜிஞ்ஜர்!''

''உஷ்...''

''இது ஒரு பெரிய பம்மாத்து வேலையா எனக்குப் படுது.''

சுலபமாய் ''நான்சென்ஸ்'' என்றாள் அவள். ''இதுபோன்ற கலை தத்துவம் மிக்க எழுத்துக்களை எழுதிக்கிட்டிருக்கும் உங்களுக்கு இந்த வீடு ஒரு ஜாக்பாட் மாதிரி. உள்ளே போய், வீட்டை நல்லா கவனிச்சு எழுத! அந்தப் புத்தகத்துல என்னென்ன அத்தியாயங்கள் வெக்கப் போறீங்கனு கூட என்னால தோராயமா இப்ப சொல்ல முடியும்.''

''அதனாலத்தான் சொல்றேன், என்னை விட இதுக்கு உகந்த ஆள் நீதான்னு.''

''இந்த இடத்துல நீங்க தப்பு பண்றீங்க'' என்றாள் அவள். ''மிஸஸ் டக், உங்களை 'அட.. இத்தனை பெரிய எழுத்தாளரா நம்ம வீடு தேடி வந்திருப்பது!' அப்படினு அண்ணாந்து பார்த்து வழிவிட்டு விலகி நிப்பாங்க. நீங்க உள்ளே நுழைய! நான் போய் நின்னா அப்படியெல்லாம் அண்ணாந்து பார்க்க அவங்களுக்கு காரணம் கிடைக்காது.''

தற்காலிகமாக வாயடைக்கப்பட்டாலும், நான் முழுசாய் ஒப்புக் கொள்ள முடியாமலே இருந்தேன்.

தாள முடியாமல் முடிந்திருந்த அந்த மிஸ்டர் ப்ராட்லே - வுடனான சந்திப்புக்குப் பிறகு நான் திரும்பியதும், நானும் ஜிஞ்ஜரும் இருவருடைய தலைகளையும் ஒன்றாய் வைத்து முட்டிக் கொண்டு ஆலோசனையில் இறங்கினோம். நான் உணர்ந்த அளவுக்கு ஏனோ அவளுக்கு இந்தச் சந்திப்பு பொறுக்க முடியாததாய் படவில்லை. சொல்லப் போனால், எங்களது சந்திப்பு, அவளுக்கு ஒரு தனிப்பட்ட திருப்தியை உண்டு பண்ணியிருந்தது.

''நாம இதுவரைக்கும் விதம் விதமா கற்பனை பண்ணிக்கிட்டு மனசைப் போட்டு குழப்பிக்கிட்டிருந்த எல்லாத்துக்கும் இது ஒரு முற்றுப் புள்ளியை வைச்சுடுச்சு'' என்றாள். ''தேவைப்படாத மனிதர்களை வாழ்க்கையிலிருந்தே பிய்த்தெறிந்துவிட ஓர் இயக்கம் இருக்கு அப்படினு இப்ப நமக்கு தெளிவாகிடுச்சு.''

''அமானுஷ்ய சக்திகளின் மூலமா!''

''அப்படித்தான்னு விடாப்பிடியா இருப்பதிலிருந்து நீங்க விலகறதா இல்லே. ஓகே... என்னவாயிருந்தாலும், அந்த *வெளிறிய குதிரை* வளாகத்துல இருக்கிற மூணு பொம்பிளைங்களும் எப்படியோ அவங்க நினைச்சதை சாதிச்சுத்தரும் ஏதோ ஒன்றின் வாலைப் பிடிச்சுக்கிட்டிருக்காங்க...''

''அப்படித்தான்னு உனக்கு பரிபூரண நம்பிக்கை இருக்குன்னா... இப்ப எதுக்கு இந்த மிஸஸ் டக்கர்டான் சந்திப்பு?''

''கூடுதல் சரிபார்த்தல்'' என்றாள் அவள். ''தெரஸா க்ரே தன்னால பண்ண முடியும்னு சொல்றானு நமக்குத் தெரியும். இதுல சம்பந்தப்படும் பண விஷயம் யாரால எப்படி கவனிச்சுக்கப்படுதுனும் நாம தெரிஞ்சுக்கிட்டாச்சு. இந்த வகையில இரையாகிப் போயிருக்கும் மூன்று நபர்களைப் பற்றியும் நாம கொஞ்சம் தெரிஞ்சு வெச்சிருக்கோம். இப்ப, நமக்கு ஒரு வாடிக்கையாளனின் கோணத்துல இன்னும் நிறைய தெரிய வேண்டியிருக்கு...''

''ஒருவேளை, அவங்க அப்படிப்பட்ட ஒரு வாடிக்கையாளன் கிடையாதுனு மிஸஸ் டக்கர்டான் காட்டிக்கிட்டாங்கன்னா?''

''அப்ப நாம வேற இடத்துல தேட வேண்டியிருக்கும்.''

''இப்படியே நான் சுத்திக்கிட்டேயிருக்க வேண்டியதுதான்'' என்றேன் நான் இருளடைந்து. இதற்கு அவள் அந்த வேலையை நான் செவ்வனே செய்து தர தயாராயிருக்க வேண்டும் என்றாள்!

இப்படியாக நேர்ந்த முடிவால் மிஸஸ் வீட்டு கேட்டருகே நான் வந்து நின்றுக் கொண்டிருக்கின்றேன். அப்படியொன்றும் அரதப் பழசாய் ஆகி அக்காலத்து கட்டுமான அதிசயங்களை உள்ளடக்கி வைத்திருக்கும் ஒரு வீடாய் அது தென்படவேயில்லை. பல வகைகளில் நவீனத்துவத்தினைப் பூசிக் கொண்டிருக்கும் ஒரு குறுபங்களா போலத்தான் இருந்தது. அக்காலத்து முஸ்லீம் மாளிகைகள் பற்றி சிறு ஞானம் ஏற்பட அதற்கு உகந்த ஒரு புத்தகத்தினை அனுப்பி வைப்பதாய் சொல்லியிருந்தாள் ஜிஞ்ஜர். ஆனால் அது சரியானநேரத்தில் வந்து சேராததால் தேவையான அளவு அறிதல் இல்லாமல்தான் நான் வந்து இங்கு நின்றுக் கொண்டிருக் கின்றேன்.

நான் அழைப்பு மணியை அடிக்க, குள்ளமாய் ஒரு பெரிய அவரை விதையைப் போல இருந்த ஒருத்தன் கதவைத் திறந்து ''மிஸ்டர் ஈஸ்டர் - ப்ரூக்?'' என சரிபார்த்துக் கொண்டான். ''மிஸஸ் டக்கர்டான் உங்களை எதிர்பார்த்துக்கிட்டிருக்காங்க...''

பெரிய பெரிய இருக்கைகள் போடப்பட்டு வசதி பண்ணப்பட்டிருந்த ஒரு வரவேற்பறைக்கு என்னை கொண்டு போனான் அவன். எனக்கென்னவோ அறையிலிருந்த சாமான்களின் மீது இணக்கமான பதிவு ஏற்படவில்லை. அங்கிருந்த அனைத்தும் அதிக விலை கொண்டவையே...

ஆனால் நல்ல சுவையுடன் தேர்ந்தெடுக்கப்படாதவை. இப்படியெல்லாம் கொண்டு வந்து கொட்டி அடைக்காமல் விட்டிருந்தால் கூட இவ்வறை ஈர்க்கும் தனி அறையாய் தரம் உயர்ந்திருக்கும். அங்கே ஓரிரு நல்ல ஓவியங்கள் இருந்தன... எண்ணற்ற ஒப்பற்ற ஓவியங்களும் இடம்பெற்றிருந்தன. இவ்வாறாய் ஒவ்வாத முறையில் இவ்வறையை நான்மதிப்பிடும்போது மிஸஸ் டக்கர்டான் வந்து சேர்ந்தார். என்னை ஆழமாய் உள்ளுக்கிழுத்து வைத்துக் கொண்டிருந்த ஒரு மஞ்சள் நிற சோஃபாவிலிருந்து கஷ்டப்பட்டு எழுந்து வணக்கம் சொன்னேன் நான்.

நான் என்ன நினைத்துக் கொண்டு வந்திருந்தேனோ எனக்குத் தெரியாது. ஆனால் அதற்கெல்லாம் முழுக்கவும் எதிரான ஒன்றினை நான் அங்கு உணர்ந்தேன். இங்கு அச்சுறுத்தும் ரகசியங்கள் எதுவும் இவரிடம் கிடையாது... இவரிடம் கன்னிப்பருவத்திலிருந்து நடுத்தர வயதுக்குப் போய்க் கொண்டிருக்கும் வெறும் ஒரு சாதாரண பெண்தான் தென்பட்டாள். அப்படி ஒன்றும் ஈர்க்கும் வகை கிடையாது. மேலும், குறிப்பிடும்படியான ஒரு இணக்கமான பெண்மணியாகவும் அவர் இருக்க முடியாது. உதடுகள், வழக்கம் போல் உதட்டுச் சாயம் கண்டு பளபளத்துக் கொண்டிருந்தாலும், மெலிதாகவும் கோபம் கொள்ளும் வன்மத்துடனுமே இருந்தன. முகவாய் நிமிராமல் ஏனோ குவிந்து குனிந்திருந்தது. கண்மணிகளின் நிறம் வெளிர் நீலம். அவை, பார்க்கும் எதிலும் அதன் மதிப்பினைக் கணக்கிட்டு விடும் தன்மையோடு இருந்தன. வேலைக்காரர்களையும் போர்ட்டர்களையும் காலுக்குக் கீழே போட்டு வைக்கும் குணம் கொண்ட வகையாய் தோன்றினார். இவ்வகையான பல பெண்களை நாம் இவ்வுலகில் சந்திக்கும்படித்தான் படைப்பு உள்ளது... ஆனால் அவர்களில் எவரும் இத்தனை அரிதாரத்துடனும் விலையுயர்ந்த ஆடையலங்காரத்துடனும் இருப்பது கிடையாது.

''மிஸ்டர் ஈஸ்ட்டர் - ப்ரூக்?'' - அவர் என் இருப்பால் முழுக்கவும் குதூகலமடைந்தவராய் தோன்றினார். கொஞ்சம் வெட்கப்படக் கூட செய்தார். ''உங்களை சந்திப்பதுல நான் ரொம்பவும் சந்தோஷப்பட்டேன். இந்த வீட்டுல நீங்க அதிக ஈடுபாடு கொண்டு வந்திருப்பதா நினைக்கிறேன். ஜான் நாஷ் அப்படிங்கிற ஒருத்தரால கட்டப்பட்டதா என் கணவர் சொல்லிக் கேள்வி. ஆனா இது உங்களைப் போன்ற ஒரு மனிதருக்கு இத்தனை ஈர்ப்புள்ளதா இருக்கும்னு நான் எதிர்பார்க்கவேயில்லை!''

''வெல் மிஸஸ் டக்கர்டான்... இது வழக்கமா கட்டப்படும் வகையிலே கட்டப்படலே... இதுதான் என்னை இங்கே இழுத்து வந்து நிறுத்தி யிருக்கு...''

இதில் மேற்கொண்டு நான் இன்னும் தடுமாறி விழாமல் இருக்கும்படியாய் ''ஐ'ம் ஸாரி... நான் ஆர்க்கிடெக்சர்ல ரொம்ப வீக்'' என்று அவரே காப்பாற்றி விட்டார். ''இந்த அகழ்வாராய்ச்சி அது இதெல்லாம் நான் அறியாதவை. அதுக்காக என்னோட இந்த அறிவீனத்தை நினைச்சு உங்க விளக்கங்களைத் தராமல் விட்டுடாதீங்க.''

என் விளக்கங்கள்!

பிறகு, முதலில் வீட்டைச் சுற்றிப் பார்க்கலாமா அல்லது டீ சாப்பிட்டு விடலாமா என்ற கேள்விகளை முன் வைத்தார் அவர். டீக்கு நான் முந்தவில்லை. முதலில் வீட்டைப் பார்த்து விடலாம் என்றேன்.

சுற்றிக்காட்டும் நேரம் முழுக்க வளவளவென்று என்னத்தை யெல்லாமா பேசிக் கொண்டே வீடு முழுக்கவும் எனக்கு சுற்றிக் காட்டினார் அவர். இதனால் கட்டுமானம் பற்றி என்னுடைய 'ஆலோசனை' எதையும் நான் தர வேண்டிய இக்கட்டிலிருந்து நான் விடுவிக்கப்பட்டேன்.

நான் சரியான நேரத்தில் வந்திருப்பது, அதிர்ஷ்டம்- சொன்னார் அவர். வீடு, விலைக்கு விற்க தயாராகிக் கொண்டிருப்பதாய் சொன்னார்: ''என் கணவர் மரணத்துக்குப் பிறகு என் ஒருத்திக்கு இது ரொம்ப பெருசு.'' மேலும் புரோக்கர்கள் குறிப்பில் இவ்விஷயம் போய் ஒரு வாரம் கூட ஆவதற்குள் ஒரு பார்ட்டி வந்து விசாரித்திருப்பதாய் சொன்னார்.

''வீட்டுல எதுவும் இல்லாம காலியாகிட்ட பிறகு நீங்க வந்து பார்ப்பதை நான் விரும்பியிருக்க மாட்டேன். எனக்கென்னவோ, ஒரு வீட்டை ஒருத்தர் பார்த்து பாராட்டணும்னா, அது வாழப்படணும் - என்ன சொல்றீங்க, மிஸ்டர் ஈஸ்ட்டர் - ப்ரூக்?''

இந்த வீட்டில் சாமான் சட்டுகள் இல்லாமல் யாரும் வாழாத ஒரு நிலையில் இதனை வந்து பார்க்கவே நான் விரும்பியிருப்பேன்... ஆனால் அதை நான் சொல்ல முடியாதே. இங்கிருந்து கிளம்பிய பிறகு இங்கேயே அக்கம்பக்கத்தில் எங்காவது வசிக்கப் போகிறாரா என்று அவரை நான் கேட்டேன்.

''எனக்கே தெரியலே'' என்றார். ''முதல்ல கொஞ்சம் பிரயாணிக்கப் போறேன். சூரிய ஒளி அதிகம் இருக்கும் பகுதிக்கு. ஓ, இந்த கண்றாவி க்ளைமேட் எனக்கு பிடிக்கவேயில்லை. வரும் மழைக் காலத்துல எகிப்து போகலாம்னு ஓர் எண்ணம். அங்கே ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி நான் இருந்தேன். அத்தனை அற்புதமான நாடு அது... இது உங்களுக்குத் தெரியும்னு நினைக்கிறேன்.''

எனக்கு எகிப்து பற்றி ஒன்றுமே தெரியாது... அதை அப்படியே சொன்னேன்.

''நீங்க ரொம்ப தன்னடக்கம் மிக்கவரா தெரியறீங்க'' என்றார் அவர், மேலோட்டமாய். ''இது டைனிங் ரூம். அறுங்கோண வடிவம். சமையலறையை இப்படித்தானே வடிவமைக்கணும், ஆங்? மூலைகளே இல்லாமல்...''

அவர் சொல்வதுதான் வெகுசரி என பாராட்டினேன்.

தற்சமயம் வரவேற்பறைக்கு திரும்பியிருந்தோம். மிஸஸ் டக்கர்டான் டீக்கு ஆணையிட்டார். அதே அவரை விதை ஆண் சேவகனால் டீ கொண்டு வரப்பட்டது. நன்றாய் கழுவியிருக்கலாம் என கணிக்க வைத்த ஒரு பெரிய கூஜாவில் டீ வந்தது.

அவன் அறையை விட்டு அகன்றதும் மிஸ் டக்கர்டான் பெருமூச் செறிந்தார். ''என்கணவர் போனதும், இங்கே அவர் இருபது வருஷத்துக்கும் மேலா குடி வெச்சிருந்த ஒரு தம்பதி தொடர்ந்து இருக்கோம்னு சொன்னாங்க. அடமா. ரிடையர் ஆகப் போவதா சொன்னாங்க, அவங்க. ஆனா பிறகு அவங்க ஏதோ வேலையை எடுத்துக்கிட்டதா கேள்விப்பட்டேன். நல்ல சம்பளம் வரும் வேலை போல.''

இதற்குப் பிறகு வேலைக்காரன்களுக்கு அதிக சம்பளம் கொடுத்து வேலையில் வைத்துக் கொள்வதில் உள்ள சிக்கல்களை பேச ஆரம்பித்தார். மிஸஸ் டக்கர்டானைப் பேச வைப்பதில் எவ்விதமான கஷ்டமும் இருப்பதாய் தோன்றவில்லை. குறிப்பாய், அவரைப் பற்றியே பேசிக் கொள்வதை அவர் விரும்புவார். அப்படி அவர் பேசுவதை அங்குமிங்கும் பாராட்டிக் கேட்டுக் கொண்டேயிருந்ததில் அவரைப் பற்றி கணிசமான தகவல்களை இப்போது நான் அறிந்திருந்தேன். அவர் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறார் என்ற அறிதலே கூட ஆங்காங்கே விட்டுப் போகும் அளவுக்கு அவர் தன்னைப் பற்றி கொட்டிக் கொண்டிருக்கிறார் என்பதும் எனக்குத் தெரியும்.

மனைவியை இழந்த தாமஸ் டக்கர்டானை இவர் ஐந்து வருடங்களுக்கு முன்னால் மணந்திருக்கிறார் என்பது எனக்கு இப்போது தெரியும். மேலும் இவர், அவரை விட 'ரொம்ப ரொம்ப ரொம்ப இளையவர்.' கடற்கரை ஓட்டல் ஒன்றில் இவர் பணியாற்றி வந்த இடத்தில் அவரை சந்தித்திருக் கிறார். இந்த வேலை பற்றிய சங்கதி அவரிடமிருந்து நழுவி எனக்கு வந்துவிட்டது என்பதை அவர் கவனிக்கவில்லை. அங்கேயே

பக்கத்திலிருந்த ஒரு பள்ளியில் படிக்கும் பெண் குழந்தை ஒன்று அவருக்கு இருந்திருக்கின்றது. 'ஒரு பொண்ணை வளர்க்கும்போது அவளுக்கு என்ன வேணும்னு ஓர் ஆம்பிளைக்கு ஒண்ணும் தெரிவது கிடையாது' -சொன்னார். 'புவர் தாமஸ்... அவர் விரும்பிய முதல் மனைவி இறந்த பிறகு தாளாத மனோ நிலையில் ரொம்பவும் தனிமையாய் உணர்ந்திருக்கின்றார்.'

இப்போது மிஸஸ் டக்கர்டான், தன்னுடைய நிலைமையை அப்படியே முன்னால் படம்பிடித்துக் காட்டினார். வயது ஆகிக் கொண்டே போக, தனியாய் இருக்கும் நிலைக்கு ஆளான ஓர் ஆண் மீது தாளா கனிவு கொண்ட ஒரு பெருந்தன்மையான பெண்மணி. நொடித்துக் கொண்ட போன அவருடைய ஆரோக்கியம்... அதற்கு பரிவாய் அவரை கவனித்துக் கொண்ட இவருடைய அர்ப்பணிப்பு.

''அதுவும் அவருடைய கடைசி நாட்கள்ல என்னுடைய எந்த நண்பர்களையும் கூட என்னால போய் சந்திக்க முடியலே... வர வைக்கவும் முடியலே... அத்தனை அர்ப்பணிப்பா கிடந்தேன்.''

இங்கு, தாமஸ் டக்கர்டான் *தேவையில்லை* என நினைத்த யாராவது ஆண் நண்பர் இருந்திருக்கக் கூடுமா என வியந்தேன். இது, அவருடைய உயில் எழுதப்பட்டிருக்கும் விதத்தை விளக்கலாம்...

ஜிஞ்ஜர், எனக்காக, அந்த உயிலின் சாராம்சத்தைப் பார்த்திருக்கிறாள்.

ரொம்ப நாட்கள் வேலை பார்த்த வேலைக்காரர்கள், சில அனாதை குழந்தைகள், மனைவிக்கான ஒதுக்கீடு - போதுமான அளவு தொகை பிரிக்கப்பட்டிருந்தாலும் தேவையில்லாமல் தாராளமாய் ஒதுக்கப்பட வில்லை. ஒரு தொகை அறக்கட்டளையில் போடப்பட்டிருந்தது. அதிலிருந்து வரும் வருவாயைத்தான் வாழ்நாள் முழுக்க மனைவி பயன்படுத்த வேண்டும். அவருடைய எஸ்டேட்டின் மீதமுள்ள அனைத்தும் - ஆறு லகரங்களில் ஓடிய ஆஸ்தி- அவரது மகள் தோமாஸினாவுக்கு. அவள் இருபத்து ஒன்று வயதை அடையும்போதோ அல்லது திருமணத்தின் போதோ - எது முதலில் வருகின்றதோ அப்போது இந்த எஸ்டேட் சங்கதி முழுவதும் அவளுக்கே என்று ஆகிவிட வேண்டும். இவ்விரண்டும் எட்டப்படுவதற்குள் அவள் மரணமடைந்து விட்டால் அத்தொகை முழுக்க அவளுடைய வளர்ப்புத் தாய்க்கு. குடும்பத்தில் வேறு எந்த அங்கத்தினரும் இல்லாதது போலத்தான் தோன்றியது.

என்னைப் பொறுத்த வரையில் பரிசு போல வந்து கொட்டக் கூடிய தொகை மிக அதிகம் என்றுதான் நினைக்கிறேன். இந்த மிஸஸ் டக்கர்டானுக்கோ பணம் என்றால் போதும்... வயதான, மனைவி யிழந்தவரைக் கல்யாணம் கட்டிக் கொள்வதற்கு முன்பு வரை இவருக்கு பணமே இருந்ததில்லை என்பது எனக்கு நன்றாய் தெரியும். பிறகுதான் இவருடைய மண்டைக்குள் புகுந்திருக்கவேண்டும். பிரயோஜனமில்லாத புருஷன்... இந்த நிஜம் அறைந்திருக்க வேண்டும். எத்தனை சீக்கிரத்தில் இவன் மண்டையைப் போடுவான் என்று ஒரு நேரத்தை ஆர்வமாய் அவர் எண்ணிக் காத்திருக்க வேண்டும்... இளமையிலேயே அத்தனை பணமும் வந்து சேருமே... பணம் பணம் என்ற அவருடைய காட்டுக் கனவுக்கு தீனியாய்...

ஆனால், அந்த உயில், ஒருவேளை அவருக்கு ஏமாற்றத்தைத் தந்திருக்கலாம். சராசரி வருவாயை விடவும் அதிகமான தொகையை இவர் எதிர்பார்த்திருக்கலாம். அதிக செலவு பிடிக்கும் பிரயாணத் திட்டம் கைவசம் இருந்திருக்கும்... ஆடம்பர கப்பலில் பிரயாணம்... அலங்கார ஆடைகள், நகைகள்... இவையெல்லாம் இல்லாவிட்டாலும், பேங்கில் கணக்கில் பணம் கொட்டிக் கிடக்கின்றது என்ற அல்ப சந்தோஷம் வேண்டுமென்று கூட ஆர்வமாய் இருந்திருக்கலாம்.

ஆனால், அத்தனை பணமும் மிஸஸ் டக்கர்டானின் கைகளில் இருப்பதற்குப் பதிலாக பெண்ணின் கைகளில் வைக்கப்பட்டுள்ளது! பெண்தான் பணக்காரியாய், சொத்தின் வாரிசாய் இருந்தாக வேண்டும் என்ற ஒரு நிலை. அந்தப் பெண்ணோ விட்டேற்றித்தனமான இளமையின் பொறுப்பற்ற குணாதிசயத்தை வெளிப்படுத்தி சித்திக்காரியை உதாசீனப்படுத்தியிருக்க வேண்டும்... இது சாத்தியமே. ஆக, அந்தப் பெண் பணக்காரியாய் திகழலாம், அவள் உயிருடன் இருந்தால்..!

அவள் உயிருடன்? ஓ! நான் நினைப்பது சரியா? எனக்கு முன்னாடி விஸ்தாரமாய் உட்கார்ந்துக் கொண்டு தன்னைப் பற்றி தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கும் இந்தப் பெண்மணி *வெளிறிய குதிரையை* அணுகி ஒரு இளம் பெண் சாக வழி கேட்டிருப்பாளா?

நோ, என்னால் இதை நம்ப முடியவில்லை...

இருந்தாலும் நான் வந்த காரியத்தை செயல்படுத்தியாக வேண்டும். நான் திடுதிப்பென்று சொன்னேன்: ''நான் உங்களுடைய மகளை - அதாவது வளர்ப்பு மகளை ஒரு முறை சந்திச்சிருக்கேன் எனும் சேதி உங்களுக்குத் தெரியும்னு நினைக்கிறேன்...''

எவ்வித ஈடுபாடும் இல்லாத, ஆனால் சின்ன ஆச்சரியம் தெறிக்க என்னைப் பார்த்தார். ''தோமாஸீனா? நீங்க பார்த்தீங்களா?''

''யெஸ். செல்ஸீயில.''

''ஓ, செல்ஸீ! அப்ப பார்த்திருக்கலாம்...'' - பெருமூச்செறிந்தார். ''இந்தக் காலத்துப் பொண்ணுங்களை சமாளிக்கவே முடியலேப்பா. கொஞ்சங்கூட கட்டுப்பாடே இதுங்க ஒருத்தருக்கும் கிடையாது. இது, அவங்க அப்பாவை ரொம்பவும் பாதிச்சது. என்னால இதுல எதுவும் பண்ண முடியலே. நான் சொன்ன எதையும் அவ கேட்டதே கிடையாது.'' - மீண்டும் பெருமூச்செறிந்தார். ''எங்களுக்குக் கலியாணம் ஆனபோது அவ வளர்ந்தப் பொண்ணாயிருந்தா. ஒரு சித்தியால என்ன பண்ண முடியும்?'' - மறுத்து தலையசைத்து விட்டார்.

''உங்க நிலைமை ரொம்பவும் சங்கோஜமான ஒண்ணுதான்'' என்றேன் நான் இரக்கமாய்.

''நான் விட்டுக் கொடுத்துப் போனேன். எல்லா வகையிலும்.''

''நீங்க அப்படித்தான் இருந்திருப்பீங்கன்னு எனக்கு நல்லாவே தெரியுது.''

''ஆனா அதுல எந்த பிரயோஜனமும் உண்டாகலே. வேஸ்ட். அஃப்கோர்ஸ், அவ மிருகமா என் மேல பாய தாமஸ் என்னிக்குமே விட்டது கிடையாது. ஆனா அவ அதுக்கு முந்தைய கட்டம் வரை வந்து புயலா நடந்துப்பா. வாழ்க்கையையே வாழ முடியாத ஒண்ணாத்தான் அவ ஆக்கி வெச்சா. வீட்டை விட்டு வெளியேறுவதா அடம் பிடிச்சு அவ வெளியேறியது ஒருவகையில எனக்கு பெரிய விடுதலையாத்தானிருந்தது. ஆனா தாமஸ் அதுபற்றி எப்படி உணர்ந்திருப்பார்னும் என்னால புரிஞ்சுக்க முடியுது. தேவையில்லாத சகவாசத்தோட அவ சேர்ந்துக்கிட்டிருக்கா.''

''நான் - நானும் அதைக் கவனிச்சேன்.''

''புவர் தோமாஸீனா'' என்றார் திருமதி டக்கர்டான். குதித்தெழும் கூந்தலின் க்ளிப்பினை அவர் இறுக்கிக் கொண்டார். பிறகு அவர் என்னை பார்த்தார். ''ஓ, இது ஒருவேளை உங்களுக்கு தெரிஞ்சிருக்காது. அவ ஒரு மாசத்துக்கு முன்னாடி காலமாகிட்டா. திடீர்னு. இளையவர்களைப் பீடிக்கும் ஏதோ ஒரு ஜுர வகைனு கேள்விப்பட்டேன். ப்ச்... பாவம்.''

''எனக்கு அவ இறந்துட்டான்னு தெரியும்'' என்றேன் நான்.

நான் எழுந்துக் கொண்டேன். ''உங்க வீட்டை அழகா சுற்றிக் காட்டியதற்கு, தேங்க்யூ வெரி மச், மிஸஸ் டக்கர்டான்.'' கைகளைக் குலுக்கினேன்.

பிறகு நான் நகர்ந்து போக ஆரம்பித்ததும் திரும்பினேன். ''ஆங்...'' என்று இப்போது நினைவு வந்ததைப் போல் குறிப்பிட்ட நான், ''உங்களுக்கு *வெளிறிய குதிரை* பற்றி தெரியும்னு நினைக்கிறேன்'' என கேட்டேன்.

அவரிடம் உடனடி ரியாக்ஷன் உண்டானதில் சந்தேகமே வேண்டாம். மிரட்சி, திகைப்பு. மயக்கம் கொண்ட அந்த நீலநிற விழிகள், அரிதார முகத்துக்கு அடியில் அவருடைய முகம் என எல்லாமும் திடுமென்று வெளிறிப் போய் கிலி கண்டன.

அவருடைய குரல் கறீச்சென்று உச்ஸ்தாயியில் வந்தது: *''வெளிறிய குதிரை? அப்படினு என்ன அர்த்தத்துல கேட்கறீங்க நீங்க? எனக்கு வெளிறிய குதிரை பற்றி எதுவும் தெரியாது.''*

என் கண்களில் சிறு ஆச்சரியம் வெளியாகும்படி பார்த்துக் கொண்டேன்.

''ஓ, அப்ப விட்டுடுங்க. இன்ட்ரஸ்டிங்கான ஒரு ஓல்ட் பப் இருக்கு - *மச் டீப்பிங்* கிராமத்துல. சமீபத்துல நான் அங்கே போயிருந்தபோது *வெளிறிய குதிரைக்கு* அழைத்து போகப்பட்டேன். அங்கே உங்க பேர் நிச்சயமா உபயோகப்படுத்தப்பட்டதா எனக்கு ஞாபகம்.... அல்லது அது உங்க மக பேரா இருக்குமோ? இல்ல, இதே பேர் கொண்ட வேற ஒருத்தரா இருக்குமோ?'' - இங்கு நான் சற்று தாமதித்தேன். ''அந்த இடம் - நல்ல பிரபலமாகியிருக்கு.''

எனது இந்த கடைசி வாக்கியத்தை நான் மிக ரசித்தேன். சுவரிலிருந்த ஒரு கண்ணாடியில் மிஸஸ் டக்கர்டாவின் முகம் பிரதிபலிப்பதை நான் பார்த்தேன். அவர், வெளியேறிக் கொண்டிருந்த என் முதுகை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் மிக மிக பயந்தவராய் ஆகிப் போனார். இது ஒரு சுகந்தமான காட்சி கிடையாது.

அத்தியாயம் 14

மார்க் ஈஸ்ட்டர் – ப்ரூக் பதிந்தவை

I

"ஆக, இப்ப நமக்கு சுத்தமா தெளிவாயிடுச்சு'' என்றாள் ஜிஞ்ஜர். ''முன்னாடியும் கூட நாம நிச்சயமாத்தானிருந்தோம்.''

''யெஸ் - ஓரளவுக்கு. ஆனா, இது, நூறு சதம்.''

நான் சில நிமிடங்கள் மவுனமாகிப் போனேன். கார்ப்பரேஷன் சதுக்கம் அமைந்திருக்கும் பிர்மிங்ஹாம் பகுதிக்கு மிஸஸ் டக்கர்டான் பயணிப்பதை நான் கற்பனை பண்ணிப் பார்த்தேன். பில்டிங்குக்குள் நுழைகிறார்... மிஸ்டர் ப்ராட்லேவைச் சந்திக்கின்றார். நரம்பதிர அவருடைய பிரச்சினையை முன் வைக்க, இதற்கு அவர் தரும் உத்தரவாதம்; இதில் எவ்விதமான ரிஸ்க்கும் கிடையாது என்று அவர் தரும் உத்தரவாதம்; மிஸஸ் டக்கர்டான் தானாக எவ்வித ஒப்புதலும் தந்துவிடாமல் கிளம்பி வெளியேறுவதை என்னால் ஊகிக்க முடிந்தது. ஆனால் அங்கு கிடைத்த ஐடியாவை அவருடைய மூளைக்குள் ஆழ வேரூன்ற விடுகின்றார். பிறகு அவர் அவருடைய வளர்ப்பு மகளைப் பார்க்கப் போயிருக்க வேண்டும். அல்லது அவள் தன் சித்தியைப் பார்க்க வந்திருக்க வேண்டும். அப்போது கலியாணத்தைக் கோடிட்டுக் காட்டும் விதமாய் உரையாடல் நடந்திருக்கும். சித்தியின் மனம் முழுக்கவோ, எப்போதும் **பணம்** பற்றிய சிந்தனைதான் - குறைந்த அளவு பணம் கிடையாது அது. சும்மா துளியூண்டு கிடையாது அந்தத் தொகை - அது ஏகமான சொத்து. பெரும் பணம். நீங்கள் சிந்தித்துக் கூட பார்த்திராத விஷயங்களையெல்லாம் செய்து முடிக்க ஓடி வரும் பெருந்தொகை. 'இந்த அனைத்துக் கொத்துச் சொத்தும் நாகரீகமற்ற

விதமாய் தேவையில்லாத சகவாசம் கொண்டு திரியும் இதோ இந்தப் பெண்ணுக்குப் போய் சேரப் போகின்றது. செல்ஸீ பகுதி காபி பார்களில் டைட் ஜீன்ஸும் இடுப்பு தெரியும்படி குட்டையாயிருக்கும் டீ ஷர்ட்டும் உடுத்திக் கொண்டு சுற்றித் திரியும் இப்பெண்ணுக்குப் போகப் போகின்றது. இப்படிப்பட்ட ஒரு பெண்ணுக்கு, குட்டிச்சுவராய் போன ஒரு நண்பர் கூட்டத்தோடே அலைந்துக் கொண்டிருக்கும் ஒருபெண்ணுக்கு, எதற்காக அத்தனை தொகை போய்ச் சேர வேண்டும்?'

எனவே, மீண்டுமொரு முறை பிர்மிங்ஹாமுக்குப் பயணம். மிகவும் ஜாக்கிரதையாய், நிச்சயமான தீர்மானத்துடன். இறுதியில் பணப் பேச்சு பேரமாகின்றது. மிஸ்டர் ப்ராட்லேவுக்கு கேட்ட தொகை குதிர்ந்திருக்காது. மிஸஸ் டக்கர்டான் பேரம் பண்ணுவதில் சிறப்பானவர். எப்படியோ, கடைசியாய் பணத் தொகை ஒப்புக் கொள்ளப்பட, சில ஆவணங்கள் கையொப்பமாக, பிறகு என்ன?

இந்தக் கட்டத்தில்தான் கற்பனை தடைப்பட்டது. இந்தக் கட்டம்தான் எங்களுக்குத் தெரியாதது.

என் கற்பனையிலிருந்து நான் விடுபட்டபோது ஜிஞ்ஜர் என்னை வைத்த கண் வாங்காமல் கவனித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். கேட்டாள்: ''என்ன, எல்லாத்தையும் கற்பனையிலேயே பார்த்தாச்சா?''

''இதைத்தான் பண்ணிக்கிட்டிருக்கேன்னு உனக்கு எப்படி தெரியும்?''

''உங்க மூளை எப்படியெல்லாம் வேலை பண்ணும்னு இப்பத்தான் நான் கொஞ்சம் கொஞ்சமா புரிஞ்சுக்க ஆரம்பிச்சிருக்கேன். எல்லாத்தையும் நீங்க கற்பனைல பார்த்துக்கிட்டுத்தானே இருந்தீங்க, ஆங்? மிஸஸைப் பின்தொடர்ந்து பிர்மிங்ஹாம் வரை, இத்யாதி இத்யாதி..''

''யெஸ்... ஆனா பாதியில வெட்டுப்பட்டுடுச்சு. பிர்மிங்ஹாம்ல எல்லாத்தையும் அவங்க பேசி முடிச்சுட்டப்பிறகு... முடிச்சுட்டப் பிறகு... அடுத்து என்ன நடக்கும்?''

நாங்கள் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டோம்.

''உடனேயோ அல்லது சற்று காலந் தாழ்த்தியோ'' என்ற ஜிஞ்ஜர் ''யாராவது ஒருத்தர், அங்கே இருக்கும் *வெளிறிய குதிரைல* என்ன நடக்குதுனு கண்டுபிடிச்சாகணும்...'' என்றாள்.

''எப்படி?''

''எனக்கு அதெல்லாம் தெரியாது. இது ஒண்ணும் அத்தனை சுபமாகவும் இருக்காது. அங்கே யார் போயிருக்காங்களோ, அங்கே நடப்பதில் யார் பங்கெடுத்துக்கிறாங்களோ... அவங்க நிச்சயமா எப்பவும் வெளியில சொல்லவே மாட்டாங்க. அதே சமயத்துல, அவங்க மட்டும்தான், அங்கே நடந்தவைகளைச் சொல்லக் கூடியவங்க. இது ரொம்ப கஷ்டமான சமாச்சாரம்... எ-ன-க்-கு என்ன தோணுதுன்னா...''

''போலீஸுக்குப் போகலாம்னா?'' - நான் ஆலோசித்தேன்.

''யெஸ். இப்போதைக்கு நமக்குப் போதுமான அளவுக்கு நிச்சயமா விஷயங்கள் தெளிவாயிருக்கு. போலீஸ் வரை போக போதுமான அளவுக்கு. என்ன நினைக்கிறீங்க?''

நான் சந்தேகமாய் மறுத்து தலையை அசைத்தேன். ''சாட்சியம் இருக்கலாம்; ஆனா இது மட்டும் போதுமா என்ன? இது முட்டாள் தனமான வகையில செய்யப்படும் கொலை. ஓ...'' - நான் அவள் குறுக்கிட்டதை ஒதுக்கினேன். ''கவனி... இது ஒண்ணும் முட்டாள்தனமான சமாச்சாரம் கிடையாதுனு நீ சொல்லலாம். யெஸ். ஆனா கோர்ட்டின் கண்களுக்கு இது முழு முட்டாள்தனம். இது, என்ன வகையில, என்ன முறையில, என்னென்ன வழிமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டு இது நடக்குதுனு கூட நமக்கு தெரியாது... நினைவிருக்கட்டும்..''

''வெல்... அப்படி நீங்க நினைச்சீங்கன்னா, நாம அதை தெரிஞ்சுக்கணும். ஆனா எப்படி?''

''நம்முடைய நிஜமான கண்களாலும் காதுகளாலும் அதைப் பார்க்கணும், கேட்கணும். ஆனா விஸ்தாரமா வெறுமனே கிடக்கும் அந்த அறையில் ஒருத்தன் பதுங்கிக்கவோ ஒளிஞ்சுக்கவோ இம்மி மறைவிடம் கிடையாது. அந்தக் காலி அறையிலதான், அது, அது என்னவோ அது, இடம் பெறணும்.''

நிமிர்ந்து நெட்டைக் குத்தலாய் உட்கார்ந்து கொண்டு கழுத்தை வெகு வீரியமாய் ஆட்டிக் கொண்டு விருட்டென்று பேசினாள் ஜிஞ்ஜர். ''அங்கே உண்மையிலே என்னதான் நடந்துக்கிட்டிருக்குனு கண்டுபிடிக்க ஒரே ஒரு வழி இருக்கு. நீங்க ஒரு நம்பத்தகுந்த வாடிக்கையாளனா அங்கே போகணும்.''

நான் அவளைக் கண்ணகல முறைத்தேன். ''ஒரு நம்பத்தகுந்த வாடிக்கையாளன்?''

''யெஸ். நீங்களோ அல்லது நானோ. இது பெரிய பிரச்சனை இல்ல. நம்மள்ல ஒருத்தருக்கு, வேறு யாரோ ஒரு நபர் நம் பாதையிலிருந்து தூக்கி அறுந்தெறியப்படணும். நம்மள்ல ஒருத்தர் ப்ராட்லே கிட்டே போய் இதை பேசி முடிக்கணும்.''

''எனக்கு இது பிடிக்கலே'' என்றேன் நான் கறாராய்.

''ஏன்?''

''வெல். இது ஆபத்தான சாத்தியக்கூறுகளுக்கு இட மளிக்குது.''

''நமக்கா?''

''அப்படியும் வெச்சுக்கலாம். நான் ஆழமா மனசுல எதிர்பார்த்துக் கிட்டிருப்பது - இரையை. நம் கைகள்ல முதல்ல ஓர் இரை தயாராகணும். சொல்றது புரியுதில்ல? ஒரு குற்றவாளி. அவனுக்கு ஒரு பேர் நாம தந்தாகணும். இது சும்மா வெறும் புருடா கற்பனையா இருந்துட முடியாது. அவங்க செக் பண்ணி பார்க்கலாம்... சொல்லப் போனா நிச்சயமா அவங்க நாம தரும் தகவல்களை விசாரிச்சு பார்ப்பாங்க. ஒத்துக்கிறயா?''

சில கணங்கள் யோசித்துவிட்டு ஒப்புதலாய் தலையசைத்தாள் ஜிஞ்ஜர். ''யெஸ். நாம் குறிப்பிடும் அந்த இரை, ஒரு நிஜப் பெயர் மற்றும் நிஜ முகவரியுடன் இருந்தாகணும்.''

''இதைத்தான் நான் விரும்பலே.''

''மேலும் அவனை எதுக்காக நாம வெட்டியெறிய துடிக்கிறோம் என்பதற்கும் ஒரு உகந்த காரணத்தை வெச்சிருக்கணும்.''

சூழ்நிலையின் இத்தனை முடிச்சுகளையும் கருத்தில் கொண்டு நாங்களிருவரும் சற்றுநேரம் மவுனமாகிப் போனோம்.

''அது யாரோ, யாராயிருந்தாலும் அந்த யாரோ, இதுக்கு ஒத்துக்கணும்'' என்றேன் நான் மெல்லமாய். ''இதுக்கு ஒத்துக்க வெப்பது ஒண்ணும் அத்தனை சுலபம் கிடையாது. நிறைய பேசி மசிய வெக்கணும்.''

சிந்தித்த பிறகு, ''இந்த முழு செட்-அப்பும் சந்தேகத்துக்கு அப்பாற்பட்டு இருந்தாகணும்'' என்றாள்.

''இதுல எனக்கு விளங்காதது என்னன்னா...'' என்ற நான் ''இப்படி ஒண்ணு நடந்துக்கிட்டிருப்பது போலீஸுக்கு எப்படி தெரியாம இருக்கு என்பதுதான்'' என்றேன். ''என்ன மாதிரியான குற்றங்கள் சுற்று வட்டாரத்துல நடந்துக்கிட்டிருக்குனு கணக்கு இருக்கும் அவங்ககிட்டே....''

''யெஸ். இதுக்கு என்ன காரணம்னு நான் நினைக்கிறேன் தெரியுமா? இது, முழுக்க முழுக்க ஓர் அமெச்சூர்தனமானது... அதாவது, சாதாரண கொலைனு வர்ணிக்கப்படும் எதுவும் இல்லாதது. பழக்கப்பட்ட கொலைகாரர்கள் இதுல கிடையவே கிடையாது. கொலைக் கூட்டமோ கொள்ளைக் கூட்டமோ திட்டமிட்டு ஆட்களை சீவல. மாறாக, இது முழுக்க ப்ரைவேட்டா நாலு சுவத்துக்குள்ளே எவ்விதமான கொலை ஆயுதங்களும் இல்லாம நடப்பது.''

இந்த அழகிய விளக்கத்தில் அர்த்தமிருப்பதாய் நான் பாராட்டினேன்.

ஜிஞ்ஜர் தொடரலானாள்: ''நீங்களோ அல்லது நானோ... யாருக்குப் பொருந்துதுனு பார்ப்பம்... ரெண்டு பேர்ல ஒருத்தர், யாரோ ஒருத்தரை அட்ரஸ் இல்லாம ஆக்கிடணும்னு துடிக்கிறோம். சும்மா பேச்சுக்கு சொல்றேன். அப்படி கிள்ளியெறிய நினைக்கும்படி உங்களுக்கோ அல்லது எனக்கோ யாராவது இருக்காங்களா? என்னருமை அங்கிள் ஒருத்தர் இருக்கார். ஓல்ட்மேன். மெர்வின் என்பது பேர். இவர் மண்டையைப் போட்டார்னா என் கை நிறைய ஒரு நல்ல பணப் பாக்கெட் வந்து விழும். நான் மற்றும் ஆஸ்திரேலியாவிலிருக்கும் என் இன்னொரு கஸின்... ரெண்டு பேர் மட்டும்தான் சொத்துக்கு உரிமையாளர்கள். ஆக நமக்கு ஓர் இலக்கு கிடைச்சுப் போயிடுச்சு. ஆனா அவருக்கு வயசு எழுபதுக்கு மேல ஆகுது. அதனால, இப்போதைக்கு ரொம்பவும் அவசர அவசரமா எனக்குப் பணம் தேவைப்படாத வரைக்கும், அவர் இயற்கையாகவே மண்டையைப் போடும் வரை காத்திருக்கலாம்னு சொல்ல ஒரு வாய்ப்பிருக்கு. இது என் பக்கத்து சாய்ஸ். உங்க பக்கம்? நிறைய பணத்தை மரணத்துல உங்களுக்கு விட்டு வைக்குமாறு யாராவது உறவினர் இருக்காங்களா?''

நான் மறுத்துத் தலையசைத்தேன். ''ஒருத்தர் கிடையாது.''

''ஒரேயொரு கேள்வியை முன்வைக்கிறேன். ஆர் யூ மேரிட்?''

''ஆங்?''

''கலியாணம் ஆகிடுச்சானு கேட்டேன்.''

''யெஸ்'' என்றேன் மெல்லமாய். ''யூனிவர்ஸிடில இருக்கும்போது. அதை நாங்க ரெண்டு பேருமே இருட்டுலயே வெச்சிருந்தோம். தெரிஞ்சிருந்தா எங்க வீட்ல உடனடியா இந்தத் திருமணத்தை வெட்டி முறிச்சிருப்பாங்க. வயசைக் கூட மூடி மறைச்சு நாங்க கலியாணம் கட்டிக்கிட்டோம்.''

கடந்த காலத்தை சுருக்கமாய் வெளியிட்டதில் நான் சற்று நேரம் மவுனமாகிப் போனேன். ''ஆனாலும் இந்தக் கலியாணம் தொடர்ந்து நீடிச்சிருக்காது'' என்றேன் நான் கனமாய். ''அது இப்ப எனக்குப் புரியுது. அவ அழகு... இனிமையாகவும் இருக்கவல்லவ. ஆனா..''

''என்ன நடந்தது?''

''நிறைய நாள் லீவு எடுத்துட்டு ரெண்டு பேருமா இத்தாலி போயிருந்தோம். அங்கே ஒரு விபத்து - கார் விபத்து. ஸ்தலத்திலேயே அவ கொல்லப்பட்டுட்டா.''

''அப்ப நீங்க?''

''நான் கார்ல இல்ல. அவ - அவளோட ஃபிரண்டோட போயிருந்தா.''

ஜிஞ்ஜர் சட்டென்று என்னை நோட்டமிட்டாள். என்ன நடந்திருக்கின்றது என்பதை அவள் அறிந்துக் கொண்டு விட்டதைப் போல பட்டது. நான் மணம் புரிந்துக் கொண்ட பெண் நம்பிக்கை மிகுந்தவளாய் வாழ்க்கை முழுக்க கூடவே வரும் வகையல்ல என்பதை நான் கண்டுபிடித்ததால் எனக்குள் விளைந்திருந்த ஷாக்கினை, இவள் அறிந்து கொண்டாள்.

ஜிஞ்ஜர் சராசரி விஷயங்களுக்குள் விழுந்தாள். ''நீங்க இங்கிலாந்துலயா கலியாணம் கட்டிக்கிட்டீங்க?'

''யெஸ். பீட்டர் - பராக் பகுதி பதிவு அலுவலகத்துல.''

''ஆனா அவமண்டையைப் போட்டது இத்தாலியில.''

''யெஸ்.''

''ஆகவே அவ மரணத்தைப் பற்றிய எந்த ரெக்கார்டும் இங்கிலாந்துல இருக்காது?''

''ம்ம்.''

''அப்ப இதுக்கு மேல உங்களுக்கு வேற என்ன வேணும்? நம் பிரார்த்தனைக்கு கிடைத்த பதில் போன்றது இது! இதை விட சுலபமா எதுவும் நமக்கு அமையாது! நீங்க இப்ப யாரோ ஒருத்தர் மேல கட்டுக்கடங்காம காதல்ல இருக்கீங்க. மேலும் அவளைக் கலியாணம் கட்டிக்க விரும்பறீங்க - ஆனா உங்களுக்கு உங்க மனைவி உசுரோட இருக்காளா இல்லையானு தெரியலே. நீங்க ரெண்டு பேரும் பல வருஷங்களுக்கு முன்னாடியே பிரிஞ்சாச்சு... அப்போதிலிருந்து அவகிட்டேயிருந்து உங்களுக்கு எந்த தகவலும் வந்தது கிடையாது. இப்ப

புதுக்காதல் பற்றி நீங்க திட்டமிட்டுக்கிட்டிருக்கும்போது அவ முன்னாடி வந்து நிக்கறா. வானத்திலிருந்து குதிச்சது போல வந்து நிக்கற அவ, விவாகரத்தர மறுக்கிறா. உங்களோட அந்த இளைய காதலி கிட்ட போய் இந்த அத்தனை உண்மையையும் உடைச்சுப் போடப் போவதா மிரட்டறா.''

''நான் காதலிக்கும் இந்த இளையவள் யார்?'' - நான் சற்றே குழம்பியபடி கேட்டேன். ''நீ?''

ஜிஞ்ஜர் அதிர்ந்துப் போனாள்.

''நிச்சயமா கிடையாது. உங்களுக்கு நான் சிறந்த சாய்ஸா படமாட்டேன். நான் யாரை மனசுல வெச்சுக்கிட்டு பேசிக்கிட்டிருக்கேன்னு உங்களுக்கே தெரியும். மேலும் அவதான் உங்களுக்கு படு கச்சிதமா பொருந்துபவள்னும் நான் சொல்வேன். ஓட்டல் கடற்கரைனு உங்க கூட சேர்ந்துக்கிட்டு சுற்றுபவள்! ரொம்ப மேட்டுமையா நடந்துப்பவ... ஸீரியஸானவ.''

''ஓ, ஹெர்மியா?''

''தட்ஸ் ரைட். உங்களை விட்டுப் பிரியாதவ!''

''ஓ காட்... அவளைப் பற்றி உன்கிட்டே யார் சொன்னது?''

''பாப்பி, வேற யார்! அவ நல்ல பணக்காரியும் கூட, இல்லையா?''

''அவ பணக்காரிதான். ஆனா, நான், அவளை...''

''ஆல் ரைட், ஆல் ரைட். நீங்க அவளை பணத்துக்காகத்தான் கட்டிக்க நினைக்கிறீங்கன்னு நான் சொல்ல வரலே. நீங்க அப்படிப்பட்டவர் கிடையாது. ஆனா நாத்தம் பிடிச்ச பிராட்லே போன்ற மூளைகள் அப்படி நினைக்கும். ரொம்ப நல்லது. சொல்வதைக் கவனியுங்க. தேவைப்படாத பொண்டாட்டி திடுதிப்புனு வந்து லண்டன்ல குதிச்சதும் அவகிட்டே கெஞ்சிறீங்க - விவாகரத்துக்கு. அவ ஒத்துக்கலே. ஒத்துக்க மாட்டா. அவ பழி தீர்க்கும் குணம் அதுக்கு வழி தராது. இந்த இக்கட்டுல நீங்க நொறுங்கிப் போயிருக்கும்போதுதான் *வெளிறிய குதிரை* பற்றி கேள்விப்படறீங்க. இப்ப என்ன பந்தயம் வேணும்னாலும் வெச்சுக்கு நான் தயார். எதுக்குனு கேட்கிறீங்களா? அந்த தெரஸா பொம்பிளையும் அந்தப் பாதி கிறுக்கு பெல்லாவும் அன்னிக்கு நீங்க *வெளிறிய குதிரைக்கு* வந்துட்டுப் போனதுக்கான காரணமே இதுதான்னு நினைச்சுக்குதுங்க! இதுமாதிரி எதையோ மனசுல வெச்சுக்கிட்டுத்தான் நீங்க பாதி மனசோட வந்திருக்கீங்க என்பது அதுங்களோட நினைப்பு... இதனாலத்தான் அந்த தெரஸா

பொம்பிளை உங்ககிட்டே தன்னைப் பற்றி பீற்றிக்கிட்டுப் பேசியிருக்கு. அந்த உரையாடல், அவங்களோட வியாபாரம் பற்றிய ஒரு பிரசங்கம்.''

''அப்படித்தான் இருந்திருக்கணும்னு இப்ப தோணுது'' - அன்று நடந்தவைகளை எனக்குள் ஓட்டிப் பார்த்துக் கொண்டேன்.

''இந்த சந்திப்புக்குப் பிறகு நீங்க பிராட்லேயை அணுகியது மேலும் அற்புதமா பொருந்துது. நீங்க சந்தேகத்துக்கு அப்பாற்பட்ட ஒரு வாடிக்கையாளர்!''

இந்த இடத்தில் வெற்றி முழக்கமாய் நிறுத்தினாள் அவள். அவள் முடித்த வார்த்தைகளில் என்னவோ பெரும் உள்ளர்த்தம் இருக்கின்றது. ஆனால் அது என்ன என்று என்னால் துளியும் பார்க்க முடியவில்லை.

''இன்னும் கூட எனக்கு என்ன படுதுன்னா..'' என்ற நான், ''அவங்க நிச்சயமா ஆழமா விசாரிச்சுப் பார்ப்பாங்கனுதான் தோணுது'' என்றேன்.

''நிச்சயமா'' என்ற ஜிஞ்ஜர் ''நோ ப்ராப்ளம்... பண்ணிக்கட்டுமே'' என்றாள்.

''கடந்த காலத்திலிருந்து பிய்த்து எடுத்து வந்த ஒரு கற்பனை மனைவியை முன்னால் நிறுத்திப் பேசுவது ரொம்ப சுலபம்தான். ஆனா அங்கே அந்தக் கூட்டமே விவரங்கள் கேட்கும். அவ யார்? - எங்கே தங்கியிருக்கா? - இத்யாதிகள். அப்போ?''

''அப்போவும் ஒண்ணும் குடி முழுகிப் போயிடாது. இந்தத் திட்டத்தை வெற்றிகரமா கொண்டு போய் முடிக்க அந்த மனைவி இங்கிருக்கணும். ஓகே, அந்த மனைவி இங்கே இருப்பா?''

இப்படி சொல்லிவிட்டு, ''என்கிட்டே இனிமே நீங்க ஜாக்கிரதையா நடந்துக்குங்க' என்றாள் ஜிஞ்ஜர். '*நான் உங்க மனைவி.*''

II

நான் அவளைப் பார்த்து விழித்தேன். மடக்கு விழுங்க முடியாமல் விக்கித்தேன் என்பது பொருந்தும். இதை சொல்லிவிட்டு எப்படி அவளால் சிரிக்க முடியாமல் இருக்கின்றது என வியந்தேன்.

அவள் மறுபடியும் பேச ஆரம்பித்தபோதுதான் நான் மீண்டு வந்தேன்.

''இப்படி விக்கித்துப் போக இதுல ஒண்ணும் கிடையாது'' என்றாள். ''நான் ஒண்ணும், என்னை மனைவியாக்கிக்கங்கனு காதல் கடிதம் தரலே.''

என் நாக்கினைத் தேடி பிடித்தேன். ''நீ என்ன பேசறேனு புரியாமலே பேசிக்கிட்டிருக்கே...''

''அதெல்லாம் கிடையாது. எனக்கெல்லாம் புரியுது. நான் இப்ப ஆலோசிச்ச அத்தனையும் துல்லியமா நடைமுறைப்படுத்தக் கூடியவைதான். இதுல ஒரு ஆதாயம். முகந் தெரியாத யாரோ ஒருத்தியைப் பலிகடா ஆக்குவது தவிர்க்கப்படுது, இல்லையா?''

''இதுல உன்னை நீயே ஆபத்துல போட்டுக் கொள்ளும் அபாயம் நிறைஞ்சிருக்கு.''

''அது என் கவலை.''

''நோ, அப்படி கிடையாது. மேலும், நீ என்ன சொன்னாலும், உள்ளங்கையில தண்ணீர் ரொம்ப நேரம் நிற்காது, ஜிஞ்ஜர்.''

''ஓ யெஸ். நிக்கும். இதை நான் ஆழமா சிந்திச்சப் பிறகுதான் இப்ப பேசியிருக்கேன். ஒரு அழகான ஃப்ளாட்டுல வந்து நான் இறங்கறேன்... ஓரிரண்டு பெட்டிகள், அதுல வெளிநாட்டு லேபிள்கள்... அந்த ஃப்ளாட்டை நான் மிஸஸ் ஈஸ்ட்டர் - ப்ரூக் எனும் பேர்ல எடுத்துக்கறேன். இந்த பூமியில யார் அங்கே வந்து நான் மிஸஸ் ஈஸ்ட்டர் - ப்ரூக் கிடையாது அப்படினு சொல்ல முடியும்..?''

''உன்னைத் தெரிஞ்ச யாராயிருந்தாலும், அவங்க.''

''என்னைத் தெரிஞ்ச யாரும் என்னைப் பார்க்கப் போவது கிடையாது! நான் உடல் நலம் இல்லாததால் லீவு போட்டுட்டு வேலையிலிருந்து விலகி ஓய்வெடுக்கப் போயிருக்கேன். கொஞ்சம் நரைச்ச சாயம் அடிச்சுக்கணும் - சரியா பொருந்துமா? எப்படியிருப்பாங்க உங்க மனைவி?''

''ப்ச்...''

''கறுப்பு? ஓகே. கடந்த பதினைந்து வருஷங்களுக்கும் மேலா பொண்டாட்டினு ஒருத்தியை நீங்க வெச்சுக்கிட்டு இல்லாததால அது நான் கிடையாதுனு மறுக்க யாராலும் முடியாது. நான் யார்னு சொல்லிக் கொள்வதை அங்கே *வெளிறிய குதிரையில* இருக்கும் யாரும் எதுக்காக மறுக்கணும், ம்? நீங்க போலீஸ் கேஸ் அது இதுனு இதுவரை எவ்வித அக்கப்போரிலும் மாட்டிக்கிட்டது கிடையாது. அதனால அவங்களுக்கு நீங்க ஒரு நம்பகமான வாடிக்கையாளன். திருமணம் பற்றிய தஸ்தாவேஜுக்களை அவங்க தாராளமா ஒப்பிட்டுப் பார்த்துக்கலாம். உங்களுக்கும் ஹெர்மியாவுக்கும் இடையிலான நட்பையும் அவங்க

ஊர்ஜிதப்படுத்திக்கலாம்... நோ ப்ராப்ளம்... ஸோ - எந்த வகையில் சந்தேகம் இருந்துடப் போகுது?''

''நீ இதுலேயிருக்கும் சங்கடங்களை - கஷ்டங்களை - ஆபத்துக்களை - இன்னும் முழுசா உணரலே.''

''ஆபத்துக்கள்? மண்ணாங்கட்டி!'' என்றாள் ஜிஞ்ஜர்.

நான் அவளை நிமிர்ந்து பார்த்தேன். அவளை எனக்கு ரொம்பவும் பிடித்தது. அவளது சிகப்பு கேசம், கை வைக்காத சட்டை, அந்த அக்னிக் குஞ்சு. இவ்வளவு இருந்தும் அவள் கையிலெடுத்துக் கொள்ளத் துடிக்கும் ஆபத்தினை அனுமதிக்க எனக்கு விருப்பமில்லை.

''என்னால இதை பார்த்துக்கிட்டு சும்மா இருக்க முடியாது, ஜிஞ்ஜர்'' என்றேன் நான். ''ஒருவேளை ஏதாவது நடந்துட்டா?''

''எனக்கா?''

''யெஸ்.''

''இது முழுக்க முழுக்க நானே எடுத்துக்கிட்டிருக்கும் பிரச்சினையில்லையா?''

''நோ. நாந்தான் உன்னை இதுக்குள்ளே இழுத்துக்கிட்டு வந்து போட்டேன்.''

அவள் சிந்தனையாய் தலையசைத்தாள். ''யெஸ். நீங்க செஞ்சிருக்கலாம். ஆனா இதுல யார் முதல்ல மூக்கை நுழைச்சது என்பது கிடையாது பிரச்சினை. நாம ரெண்டு பேரும் இப்ப இதுக்குள்ளே இருக்கோம். ஆக நாம ஏதாவது பண்ணியாகணும். நான் ரொம்ப ஸீரியஸா இருக்கேன். மார்க், நாம பேசிக்கிட்டிருக்கும் விஷயம் சும்மா விளையாட்டு விஷயம் இல்லேனு நினைவூட்ட விரும்பறேன். நாம நம்பிக்கிட்டிருக்கும் சங்கதி நிஜம்தான் என்றால், ஓஹ்... மிகக் கொடூரங்கள் நடந்துக்கிட்டிருக்கு. அவை நிறுத்தப்படணும்! கவனியுங்க... பொறாமையாலோ அல்லது வெறுப்பினாலோ நிகழ்த்தப்படும் கொடூரமான கொலைகள் கிடையாது இவை; ஏதோ லாபம் கருதி நடத்தப்படும் கொலையும் கிடையாது. இவை, பிஸினஸ் போல் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கும் கொலைகள். கொலை செய்யப்படுபவர் யார், எவர், நல்லவரா, கெட்டவரா போன்ற எதையும் கருத்தில் கொள்ளாமல் நடத்தப்படும் கண்மூடிக் கொலைகள். அதாவது...'' என்ற அவள் எச்சரிக்கையாய் சொன்னாள்: ''நாம நம்பிக்கிட்டிருக்கும் அத்தனையும் உண்மை என்றால்!''

கணநேர சந்தேகம் தொனிக்க என்னை அவள் பார்த்தாள்.

''இவை, நிஜங்களே'' என்றேன் நான். ''அதனால்தான் உன்னைப் பற்றி நான் கவலைப்படறேன்.''

தனது இரு முஷ்டிகளையும் டேபிளில் இறக்கிய அவள் வாக்குவாதத்தில் இறங்கினாள்.

முழு சமாச்சாரத்தையும் நாங்கள் முன்னும் பின்னுமாய் இடமும் வலமுமாய் பிய்த்துப் போட்டு அலசினோம். சுவர்க்கடிகாரம் மெல்லமாய் முன்னேறிக் கொண்டேயிருந்தது.

இறுதியாய் ஜிஞ்ஜர் முடிவுரை தந்தாள்: ''ஆக நிலைமை இதுதான்: எனக்கு விஷயம் ஏற்கெனவே தெரியும். ஆகையால் நான் முன்கூட்டியே எச்சரிக்கப்பட்டவள். மேலும் அந்தப் பொம்பளை சொல்வதையெல்லாம் அவளால் பண்ண முடியும்னு நான் ஒரு கணம் கூட நம்பலே! அப்படியே ஒவ்வொருத்தருக்கும் சாகணும் அப்படினு ஒரு தாகம் இருப்பது உண்மையேயானாலும், என்னுடைய அந்த தாகம் இன்னும் தட்டியெழுப்பப்படலே! எனக்கு நல்ல ஆரோக்கியம் இருக்கு. எனக்கு ஏதாவது தீரா வியாதி வரும்னு என்னால நம்ப முடியாது. தரையில முக்கோணம்போட்டு அந்த தெரஸா பொம்பளையோ அல்லது ஆவிகளோடு பேசும் அங்கிருக்கும் மற்ற பொம்பளைங்களோ, எனக்கு எவ்வித வியாதியையும் தந்துட முடியாது.''

நான் சிறு சிந்தனையுடன் ''பெல்லா வெள்ளை சேவலை பலி கொடுக்கிறானு கேள்விப்பட்டிருக்கேன்'' என்றேன்.

''அதெல்லாம் வெறும் வெத்து வேட்டுக்கள்னு நீங்க ஒப்புக்கிட்டுத்தான் ஆகணும்.''

''அங்கே நெசத்துல என்னதான் நடந்துக்கிட்டிருக்குனு நமக்குத் தெரியாது'' என்று குறிப்பிட்டுக் காட்டினேன்.

''ஆமாம். அதனாலதான் அது என்னனு கண்டுபிடிக்கப்பட வேண்டியது முக்கியமாகுது. ஆனா, *வெளிறிய குதிரைல* அடைஞ்சுக் கிடக்கும் அந்தப் பைசா பெயராத மூணு பொம்பளைங்களால லண்டன்ல ஆடம்பரமான வாழ்வு வாழும் எனக்கு ஏதாவது நேர்ந்துடும்னு நீங்க நினைக்கிறீங்களா, என்ன?''

''நோ'' என்றேன் நான். ''என்னால இதை நம்ப முடியலே.''

''ஆனாலும்'' என்று சிறு இடைவெளிக்குப் பிறகு கூடுதலாய் நான் சொன்னேன்: ''நான் நம்பறேன்...''

நாங்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டோம்.

''யெஸ்'' என்ற ஜிஞ்ஜர், ''இதுதான் நம்ம பலஹீனம்'' என்றாள்.

''கவனி'' என்று கறாராய் சொன்ன நான், ''இதே திட்டத்தையே நான் மாற்றிச் சொல்றேன். கவனி. ஏத்துக்கோ. லண்டன்ல இருப்பவனா நான் பாத்திரம் ஏத்துக்கிறேன். நீ வாடிக்கையாளனா போ. நாம இதுக்கு ஒரு கதை பண்ணுவோம்'' என்றேன்.

இதற்கு ஜிஞ்ஜர் வேகவேகமாய் மறுத்துத் தலையசைத்தாள். ''நோ, மார்க்'' என்றாள் அவள். ''இந்த திட்டம் வெற்றியே தராது. இதுக்கு பல காரணங்கள் இருக்கு. முக்கியமான தடைக்கல் என்னன்னா, நான் ஏற்கெனவே *வெளிறிய குதிரைக்கு* அறிமுகமானவள் - எதிலும் அஞ்சாதவள் எனும் வகையில். மேலும் ரூடாகிட்டயிருந்து என்னோட முழு கதையையும் அவங்களால பிடுங்கிட முடியும். ஆனா நீங்க அப்படி கிடையாது. இத்திட்டத்துக்கு மிகவும் உகந்தவரா நீங்க இருக்கீங்க. படபடத்துக்கிட்டு நரம்பதிர ஏற்கெனவே தொடர்புக் கொண்டிருக்கும் வாடிக்கையாளன் நீங்க. இப்படி அப்படி மோப்பம் பிடிச்சுக்கிட்டே அலைஞ்சிருக்கீங்க... ஆனா முழுசா இறங்க தைரியம்தான் வரலே! ம்ம்... நான் சொன்னபடிதான் திட்டம் நிறைவேறணும்.''

''இது எனக்குப் பிடிக்கலே. உன்னைப் போய் இதுல ஒரு பொய்ப் பெயர்ல புகுத்தி, யாரும் கண்காணிக்க முடியாத ஒரு இடத்துல உன்னை பாதுகாப்பில்லாம நிறுத்தி, நோ... இதெல்லாம் வேண்டாம் ஜிஞ்ஜர். அப்படி பண்ணித்தான் ஆகணும்னா, இதுக்குள்ளே நாம இறங்கறதுக்கு முன்னாடி, போலீஸைத் தொடர்பு கொண்டு விடுவோம். இப்பவே... நாம மேற்கொண்டு எதுவும் முயற்சிப்பதுக்கு முன்னாலேயே...''

மெதுவாய், ''இதுக்கு நான் ஒத்துக்கிறேன்'' என்றாள் அவள். ''இதைத்தான் நீங்க பண்ண துடிச்சுக்கிட்டிருக்கீங்கன்னு நினைச்சேன் நான். போலீஸ் மூலமா நிறைவேற்ற உங்களுக்குள்ளே ஏதோ நினைப்பிருக்கு. எந்த போலீஸ்? ஸ்காட்லாண்ட் யார்ட்?''

''நோ'' என்றேன் நான். ''பிராந்திய துப்பறியும் இன்ஸ்பெக்டர் லெஜன்தான் இதுக்கு பெஸ்ட்டா பொருத்தமானவர்.''

அத்தியாயம் 15

மார்க் ஈஸ்ட்டர்– ப்ரூக் பதிந்தவை

முதல் பார்வையிலேயே எனக்கு இன்ஸ்பெக்டர் லெஜனைப் பிடித்து விட்டது. அமைதியாய் சாதனை செய்யும் ஆளாய் விளங்கினார் அவர். வழக்கமாய் அறியப்பட்டுள்ள சாத்தியக் கூறுகளையெல்லாம் தாண்டி அசாத்தியமாய் ஏதேனும் சாத்தியக் கூறினை முன்வைத்தால் அதனை ஒதுக்காமல் கவனத்தில் கொள்ள சம்மதிக்கும் ஒரு சிறந்த ஆளாய் தோன்றினார்.

அவர் பேசினார்: ''உங்களோட நிகழ்ந்த சந்திப்பு பற்றி டாக்டர் காரிகன் என்கிட்டே சொல்லியிருந்தார். இதுல முதல்லேந்தே நல்ல ஈடுபாடு வெச்சுட்டார் அவர். மாகாணத்துல ஃபாதர் கார்-மேனுக்கு நல்ல மதிப்பும் பிரபல்யமும் உண்டு. இப்ப நீங்க எங்களுக்குத் தர ஏதோ ஸ்பெஷல் தகவல் இருக்குனு சொல்றீங்க...''

''இந்தத் தகவல்'' என்ற நான் *''வெளிறிய குதிரை* எனும் ஓரிடத்தைப் பற்றியது'' என்றேன்.

''இது, *மச் டீப்பிங்* எனும் கிராமத்துல இருப்பதா கேள்விப்பட்டேன்.''

''யெஸ்.''

''அதைப் பற்றி எனக்கு சொல்லுங்க.''

ஃபாண்டஸியில் முதன் முதலாய் நான் *வெளிறிய குதிரை* பற்றி கேள்விப்பட நேர்ந்ததை சொன்னேன். பிறகு ரூடாவுடன் நேர்ந்த என் சந்திப்பு, மற்றும் அந்த மூன்று விசித்திர பெண்களுடன் நேர்ந்த என் அறிமுகம் ஆகியனவற்றை சொன்னேன். அந்தக் குறிப்பிட்ட மத்தியானப் பொழுதில் தெரஸாவுடன் நிகழ்ந்த என் சம்பாஷணையை எத்தனை சரியாய் விரித்து விவரிக்க முடியுமோ அப்படி செய்தேன்.

''அவங்க சொன்ன சமாச்சாரங்கள் உங்களுக்குள்ளே அழுத்தமா பதிஞ்சுடுச்சு, ஆங்?''

இங்கு நான் சற்று லஜ்ஜையாய் உணர்ந்தேன். ''வெல், அப்படி முடிவா சொல்ல முடியலே. ரொம்பவும் ஸீரியஸா அதையெல்லாம் நான் நம்பலே...''

''ரொம்ப ஸீரியஸா நீங்க நம்பலியா, மிஸ்டர் ஈஸ்ட்டர் - ப்ரூக்? நீங்க முக்கியத்துவம் கொடுத்து நம்பியிருக்கீங்கங்கறேன் நான்.''

''நீங்க சொல்வதுதான் சரி'' என்றேன் நான் மெல்லமாய். ''எத்தனை முட்டாள்தனமா ஒருத்தன் நடந்துக்கிட்டிருக்கான் என்பதை வாடிக்கையா அவனே முன்வந்து ஒப்புக் கொள்வது கிடையாது!''

லெஜன் புன்னகைத்தார்.

''*மச் டீப்பிங்* விஷயத்துல உங்களுக்கு ஏற்கெனவே இண்ட்ரஸ்ட் இருந்திருக்கு. ஏன் அப்படி?''

''பயங்கர கிலியால அறையப்பட்ட நிலையில நின்ற அந்தப் பொண்ணாலனு நினைக்கிறேன்.''

''பூக்கடையில நீங்க சந்திச்சதா சொன்ன இளைய பொண்ணா?''

''யெஸ். *வெளிறிய குதிரை* பற்றிய அவளோட கருத்தை ரொம்ப சாதாரணமாத்தான் அவ சொன்னா. ஆனா அது பற்றி அவளுக்குள்ளே இருந்த பயம், அந்த கிலி... வெல், இதுல பயப்படறதுக்கு எதுவோ இருக்கு என்பதை அழகா அடிக்கோடிட்டுக் காட்டிச்சு. இதுக்கப்புறம் நான் டாக்டர் காரிகனை சந்திச்சேன். அவர் அந்தப் பெயர் பட்டியல் பற்றி சொன்னார். அதுல ரெண்டு பேரை எனக்கு முன்னமேயே தெரியும். ரெண்டு பேரும் இறந்தாச்சு. அதுல மூணாவது பேர் ரொம்ப பிரபலமா பட்டுச்சு. அதுக்கப்புறம்தான் அவளும் செத்தாச்சு என்பதை நான் கண்டுபிடிச்சேன்.''

''அதுதான், மிஸஸ் டெலாஃபான்டைன்?''

''யெஸ்.''

''தொடருங்க.''

''இந்த பிஸினஸ் பற்றி மேற்கொண்டு எல்லாத்தையும் கண்டுபிடிச்சாகணும்னு நான் முடிவெடுத்துக்கிட்டேன்.''

''அதை செயல்படுத்தவும் ஆரம்பிச்சீங்க. எப்படி?''

மிஸஸ் டக்கர்டானை நான் போய் சந்தித்து வந்ததை சொன்னேன். இறுதியாய் மிஸ்டர் ப்ராட்லே, மாநகராட்சி சதுக்கம், பிர்மிங்ஹாம் எல்லாவற்றையும் விளக்கினேன்.

இன்ஸ்பெக்டரிடம் முழு ஈடுபாட்டையும் இப்போது நான் சம்பாதித்திருந்தேன். அவர் அந்தப் பெயரை மறுபடியும் சொன்னார். ''ப்ராட்லே.'' பிறகு குறிப்பிட்டார்: ''ஸோ, ப்ராட்லே இதுல இருக்கான்?''

''உங்களுக்கு அவரை தெரியுமா?''

''ஓ யெஸ்... எங்களுக்கு ப்ராட்லே பற்றி எல்லாமும் தெரியும். எங்களுக்கு அவன் ஒரு திருகுவலி. சுவடு தெரியாம வேலைகளை செய்வதுல சமர்த்தன். அவனைக் கேஸ்ல பிடிக்கும்படி அகப்படாமல் வேலைகளைக் கச்சிதமா செய்து முடிச்சு கழுத்தறுப்பவன். சட்ட நுணுக்கங்களின் இண்டு இடுக்கெல்லாம் தெரிஞ்சவன். அதனால் அவன் எப்பவுமே எது சட்ட விரோதம் கிடையாதோ அந்தப் பக்கத்துலதான் இருப்பான். நூறு வகை சமையல் குறிப்புகள்னு மார்க்கெட்ல மானாவாரியா வரும் புத்தகங்களைப் போல சட்டத்தை ஏய்க்க நூறு வழிகள்னு இவனால சுலபமா புத்தகம் எழுத முடியும்! ஆனா, இவனைப் பொறுத்தவரைக்கும் கொலை - அதாவது திட்டமிட்டு பண்ணப்படும் கொலை - இதுதான் இவனுடைய ஏரியா. ஆனா...''

''இன்ஸ்பெக்டர்... இப்ப நான் அவன் கூட நடந்ததா சொன்ன சம்பாஷணைகளை வெச்சு அவனை அமுக்கிட முடியாதா?''

லெஜன் மெல்லமாய் மறுத்து தலையசைத்தார். ''நோ... அதை வெச்சுக்கிட்டு எங்களால இயங்க முடியாது. முதல்ல, உங்களுடைய உரையாடலுக்கு எந்த சாட்சியும் கிடையாது. அது ஜஸ்ட் உங்க ரெண்டு பேருக்கும் இடையில மட்டுந்தான் நடந்திருக்கு. எனவே அதை அவன் அப்படியே மறுத்து ரெண்டு பேருக்கும் நடுவுல எந்த விதமான உரையாடலும் நடக்கவே இல்லேனு சொல்லிடலாம்! இதை விட்டுட்டாலும், அவன் உங்ககிட்டே பந்தயம் சவால் அப்படினெல்லாம் சொன்னது, ரொம்ப ரொம்ப சரி. யாரோ ஒருத்தர் சாக மாட்டார்னு அவன் பந்தயம் கட்டறான் - அதுல அவன் தோத்துடறான். இதுல என்ன கொலைக் குற்றம் இருந்துடப் போகுது? அந்த நிஜ கொலையுடன் ப்ராட்லேயை நாம சம்பந்தப்படுத்தும் வரை அவன் எந்த சங்கடமும் இல்லாம இருப்பான்; அப்படிச் சம்பந்தப்படுத்துவது அத்தனை சுலபமானதா அமையும்னு எனக்குத் தோணலே.''

இதை அப்படியே ஒரு சிறு தோள் குலுக்கலோடு நிறுத்திக் கொண்டார் இன்ஸ்பெக்டர். சிறிது நேரம் விட்டுவிட்டு பிறகு சொன்னார்: ''மச் டேப்பிங்ல நீங்க இருந்த நேரத்துல வெனபிள் அப்படினு சொல்லப்படும் ஒரு ஆளைச் சந்திக்கும் வாய்ப்பு ஏதாவது கிடைச்சுதா?''

''யெஸ்'' என்றேன் நான். ''நான் சந்திச்சேன், அவர் கூட லஞ்சுக்கு ஒரு நாள் அழைத்துப் போகப்பட்டிருந்தேன்.''

''ஆஹ்! அவர் உங்களுக்குள்ளே என்ன மாதிரியான ஒரு பாதிப்பை உண்டு பண்ணினார்?''

''மிகவும் வலிமையான ஒரு பாதிப்பு. அவர் ஒரு தனித்துவம் மிக்க க்ரேட் பர்சனாலிட்டி. ஆனா பாவம் ஊனமுற்றவர்.''

''யெஸ். வாதத்தால நடக்க முடியாம ஆகிவிட்டார்.''

''சக்கர நாற்காலியின் உதவியோடதான் அவரால் நகர முடியுது. ஆனா இந்தக் குறை, வாழ்க்கையை வாழவும் அதை கொண்டாடவும் அவருக்குள்ளே ஒரு வெறித்தனமான தீர்மானத்தை உண்டு பண்ணியிருக்குனு தோணுது.''

''அவரைப் பற்றி உங்களால என்னவெல்லாம் சொல்ல முடியுமோ, அதையெல்லாம் சொல்லுங்களேன்.''

வெனபிள் வீட்டை விவரித்தேன். அவருடைய கலைச் செல்வங்கள், அவருடைய விதம் விதமான ஈடுபாடுகள்...

லெஜன் சொன்னார்: ''இத்தனையிருந்தும் - பரிதாபம்.''

''என்ன பரிதாபம்?''

அவர் வறட்சியாய் சொன்னார்: ''வெனபிள் வாதம் கண்டிருப்பது.''

''எக்ஸ்யூஸ் மீ, இன்ஸ்பெக்டர்... அவருக்கு உண்மையிலேயே வாதநோய் இருக்குனு நீங்க நம்பறீங்களா? ஒருவேளை அவர் - இப்படியொரு வேஷம் போட்டு, வெல்... முழுப் பூசணிக்காயை சோத்துல மறைக்கலியே?''

''அவர் கால்களுக்கு ஸ்மரணை கிடையாதுனு நாங்க ஆணித்தரமா நிச்சயப்படுத்தியிருக்கோம். ஹார்லி தெருவின் டாக்டர் சர் வில்லியம்ஸ்... சந்தேகங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவர். அவருடைய கால்கள் உணர்ச்சியிழந்து விட்டன என்பதற்கு எங்களுக்கு சர் வில்லியம்ஸின் ரிப்போர்ட் இருக்கு. நம்ம லிட்டில் ஃப்ரண்ட் மிஸ்டர் ஓஸ்பார்ன், அன்னிக்கு ராத்திரி அவர் பார்த்தது வெனபிள்தான்னு நிச்சயமா

இருக்கலாம். ஆனா அவர் தப்பு.''

''ஐ ஸீ.''

''இப்படி ஒரு கூட்டம் இயங்கி ப்ரைவேட்டா கொலைகளை நடத்தும் திறன் படைச்சிருக்குனு வெச்சுக்கிட்டா, அதை நிறைவேற்ற சிக்கலில்லாத திட்டங்கள் தீட்டி தரும் திறமை கொண்டவர் வெனபிள்னு நான் சொல்வேன்.''

''யெஸ், யெஸ், இதையேதான் நானும் நினைச்சிருந்தேன். அவர் என்னுள் வலிமையான பதிப்பை உண்டு பண்ணினார்னு நான் சொல்வது இதை மனசுல வெச்சுக்கிட்டுத்தான்.''

லெஜன், அவருடைய ஆட்காட்டி விரலால், அவருக்கு முன்னாலிருந்த டேபிளில் சுருள் சுருளாய் தொடர் வட்டங்கள் வரைந்தார். பிறகு அவர் கூர்மையாய் நிமிர்ந்து பார்த்தார்.

''நமக்கு கிடைத்துள்ள எல்லாவற்றையும் இப்ப கொட்டுவோம். இப்ப நீங்க எங்களுக்கு தந்துள்ள தகவல்களையும் நாங்க வெச்சிருக்கும் தகவல்களோடு சேர்ப்போம். தேவையற்ற மனிதர்களை சத்தம் போடாமல் அகற்றுதல் எனும் பணியை ஏதோஒரு கூட்டம் நடத்திக்கிட்டிருக்கு என்பது இப்ப நமக்கு போதுமான அளவுக்கு ஊர்ஜிதமாயிடுச்சு. இந்தக் கூட்டம் பற்றிய விளங்கா குழப்பங்கள் ஏதும் கிடையாது. வழக்கமான துப்பாக்கி வெச்சிருக்கும் கொலைகாரர்களையோ அல்லது ரௌடிகளையோ இது நியமிப்பது கிடையாது. மேலும், மரணமடையும் நபர்கள், இயற்கையா வரும் நோயால் சாகலேனு அடிச்சுக் கூற, நம் கைல எந்த சாட்சியும் கிடையாது. நீங்க செத்திருப்பதா சொல்லும் அந்த மூன்று மரணங்களைத் தாண்டியும், எங்கிட்டே மேலும் சிலரைப் பற்றி சேதிகளிருக்கு... நம்பகமற்ற தகவல்களோடு. எல்லா மரணங்களும் இயற்கையான காரணங்களினால்தான். ஆனால், இந்த ஒவ்வொரு மரணங்களாலும் லாபம் அடைஞ்சிருக்கும் நபர்கள் இருக்காங்க என்பது முக்கிய குறிப்பு. சாட்சிகள் கிடையாது, நினைவிருக்கட்டும்.

''இதெல்லாம் புத்திசாலித்தனமா, படு புத்திசாலித்தனமா இந்த ஒவ்வொண்ணும் நடத்தப்படுது, மிஸ்டர் ஈஸ்ட்டர் - ப்ரூக். யார் இதையெல்லாம் திட்டமிடறாங்களோ - இந்த ஒவ்வொண்ணும் அற்புதமா திட்டமிடப்படுது, ஸார் - அவருக்கு அலாதியான மூளை இருக்கணும். நம்ம கைல அங்கொண்ணும் இங்கொண்ணுமா சில பெயர்கள் மட்டுந்தான் கிடைச்சிருக்கு. இதை விடவும் இன்னும் எத்தனையெத்தனை பேருக்கு

குறி வெக்கப்பட்டிருக்கு என்பதும் இந்த கூட்டம் எத்தனை பெரியது என்பதும் கடவுளுக்குத்தான் வெளிச்சம். செத்துக்கிட்டிருக்கும் ஒரு பெண்ணிடமிருந்து நமக்கு சில பெயர்கள் கிடைச்சிருக்கு... அவ்வளவே...''

தனது தலையைக் கோபமாய் சிலுப்பிக் கொண்டு முன்னேறினார் அவர்:

''இந்த, தெரஸா க்ரேங்கிறவ. அவளோட சக்திகள் பற்றி 'அவ உங்ககிட்டே வாய் கிழிய பேசினானு சொல்றீங்க! அப்படியே கூட அவ பண்ணலாம். இதை வெச்சுக்கிட்டு, மக்களுடைய தன்னம்பிக்கையை சிதைச்சு கொலை பண்றான்னு தெரஸா மேல கொலைக் குற்றம் சுமத்தி, கம்பிக்குப் பின்னாடி தரதரனு கொண்டு போய் நிறுத்தினால்... சட்டத்துக்கு முன்னால, 'அவள் ஒரு குற்றமற்றவள்' அப்படினுதான் முடிவாகும். செத்தவங்களுக்குப் பக்கத்துல அவ என்னிக்குமே இருந்தது கிடையாது. இதை நாங்க ஒண்ணுக்கு ரெண்டு தடவையா ஊர்ஜிதப்படுத்தியிருக்கோம். அல்லது அவங்களுக்கு விஷம் தோய்ந்த சாக்லெட்டுகளைப் பாக்கெட்டுல இவ அனுப்பி அதை அவங்க சாப்பிட்டதால செத்தாங்க என்பது போன்ற குற்றச்சாட்டுகளும் கிடையாது. அவ சொல்கிற வாக்குமூலப்படிதான் எல்லாமும் நடக்குது: ஒரு ரூம்ல ஜம்முனு உட்கார்ந்துக்கிட்டு காற்று வழியா கொல்றா. இப்படி கோர்ட்டுக்கு நடுவுல நின்னுக்கிட்டு நாம வாதாடினா, சிரிப்புல நீதிமன்றமே விழுந்துடும்.''

நான் முணுமுணுப்பாய் சொன்னேன். ''ஆனா லோவ் போன்றவங்க சிரிக்கலே.''

''இது ஒரு பேய் - பிசாசு பிசினஸ், மிஸ்டர் ஈஸ்ட்டர் - ப்ரூக்.''

''யெஸ்'' என்றேன் நான். ''இப்பல்லாம், இந்த நவீன யுகத்துல, நாம அதிகம் பயன்படுத்தாத வார்த்தைகள். ஆனா இங்கே பொருத்தமான வார்த்தைகள், இவை மட்டும்தான். அதனாலதான்...''

''அதனாலதான்?''

லெஜன் என்னை துளைப்பதைப் போல பார்த்தார்.

நான் வேகவேகமாய் பேசலானேன். ''எனக்கென்னவோ, இந்த பிஸினஸ் பற்றி மேற்கொண்டு ஆழமா நாம தெரிஞ்சுக்க, இப்ப ஒரு சான்ஸ்... ஒரேயொரு சான்ஸ் இருப்பதா படுது. நானும் என்னோட ஃப்ரண்ட் ஒருத்தியும் இதுபற்றி ஒரு விரிவான திட்டம் தீட்டியிருக்கோம். உங்களுக்கு இது ஒரு முட்டாள்திட்டமா தோணலாம்.''

''சொல்லுங்க, தீர்ப்பு நான் சொல்றேன்.''

''நீங்க இப்ப என்கிட்டே பேசினதையெல்லாம் வெச்சு, இப்படி ஒரு கூட்டம் இயங்கிக்கிட்டிருக்குனு உங்களுக்கும் நம்பிக்கை இருக்குனு நான் எடுத்துக்கிறேன், ஓகே? அந்தக் கூட்டம் இயங்கிக்கிட்டிருக்கு என்பதும் உங்களோட கருத்து.''

''அது நிச்சயமாதன் கைவரிசையைக் காட்டிக்கிட்டுத்தானிருக்கு.''

''ஆனா அது எப்படி சாத்தியமாகிக்கிட்டிருக்கு என்பது... அதாவது எப்படி வேலை பண்ணுதுனு நமக்கு தெரியாது. இந்த முழு பிஸினஸின் முதல் கட்டங்கள் நமக்குப் பிடிபட்டாச்சு. நான் வாடிக்கையாளன்னு அழைக்கும் ஒரு தனி நபர், இப்படியொரு கூட்டம் இருக்குனு அரளும் புரளுமா கேள்விப்படறார்... பிறகு கொஞ்சம் விசாரிச்சு பிர்மிங்ஹாமில் இருக்கும் ப்ராட்லேகிட்டே அனுப்பப்படறார்... அந்த சந்திப்பில் எல்லாத்தையும் ப்ராட்லே முடிச்சுத் தந்திடுவார் எனும் முடிவுக்கு அவர் போயிடறார். ப்ராட்லேகிட்டே ஏதோவொரு அக்ரீமெண்ட் முடிய, நேரா அவர் வெளிறிய குதிரைக்கு அனுப்பப்படறார். ஆனா இதுக்கு அப்புறம் என்ன நடக்குது என்பது நாம யாருக்கும் தெரியாது! வெளிறிய குதிரையில அப்படி என்னதான் நடக்குது? யாராவது ஒருத்தர் அங்கே போய் இதை கண்டுபிடிக்கணும்.''

''தொடருங்க.''

''ஏன்னா, தெரஸா க்ரே என்ன பண்றானு சரியா, துல்லியமா நமக்குத் தெரியும் வரைக்கும், நம்மால மேற்கொண்டு ஓரடி கூட எடுத்து வெக்க முடியாது. உங்க போலீஸ் டாக்டர் காரிகன், இந்த முழு சமாச்சாரமும் உப்பு சப்பற்ற வெத்து வேட்டுனு சொல்றார்? அப்படியா? அப்படியா, இன்ஸ்பெக்டர் லெஜன்?''

லெஜன் பெருமூச்செறிந்தார்.

''நான் என்ன பதில் தருவேன்னு உங்களுக்கேத் தெரியும் - எந்த ஒருசாதாரண பிரஜையும் சொல்லும் பதில்தான் அது: ''யெஸ், அஃப்கொர்ஸ் அப்படித்தான் நடக்குது.'' கவனமிருக்கட்டும் இதை நான் அலுவலக ரீதியாக சொல்லலே. கடந்த நூற்றாண்டுகளில் நம்ப முடியாத விளக்கங்களுக்கு அப்பாற்பட்ட சம்பவங்கள் நடந்திருக்கு. நிறைய. பிக்பென் கடியாரம், முதல்ல ஒரு பொட்டிக்குள்ளே பனிரெண்டு மணி அடிக்கும்னும், அது அடிச்சு முடிஞ்சதும், உடனேயே ஜன்னல் வழியா வெளியே பார்த்தால் அதே நிஜக் கடியாரம் மறுபடியும் நிஜமா பனிரெண்டு

மணி அடிக்கும்னும் யாராவது நினைச்சாவது பார்த்திருப்பாங்களா? ஆனா, நிஜக் கடிகாரம் ஒரேயொரு தடவைதான் அடிச்சிருக்கு - ரெண்டு தடவை அல்ல - ஆனா அந்த ஒலி கேட்பவனின் காதுகளுக்கு இருவேறு அலைகளால் கொண்டு வந்து சேர்க்கப்பட்டிருக்கு! இப்படி டஸன் கணக்கான பயமுறுத்தும் சம்பவங்கள்.''

''அப்படினா என்ன சொல்ல வரீங்க? எதுவும் சாத்தியம்தானா?''

''அதையேதான் சொல்ல வரேன். தெரஸா பொம்பிளை, அவ கண்களை சக்தி வந்து அகட்டி உருட்டுவதாலோ... அல்லது ஆவி கூட ஒன்றாகுவதாலோ... அல்லது மனச்சாட்சியை முன்நிறுத்தி அலையாக அனுப்புவதாலோ ஒருத்தனைக் கொல்லுவாள் என்பதை நம்ப முடியுதானு நீங்க கேட்டீங்கன்னா, நான் இப்பவும் 'நோ'னு தான் சொல்வேன். ஆனா- என்னால நிச்சயப்படுத்தி சொல்ல முடியாது.''

''யெஸ். கரெக்டா சொல்லிட்டீங்க. அமானுஷ்யம். அமானுஷ்யந்தான். நாளைய ஒப்புக் கொள்ளப்பட்ட அறிவியல், இன்றைய ஒப்புக் கொள்ள முடியாத அமானுஷ்யம்'' என்றேன் நான். ''ஆக, முடிவு? யாராவது ஒருத்தர் அங்கே போய் அப்படி என்னதான் நிஜத்துல அங்கே நடக்குதுனு பார்க்கணும். அதைத்தான் நான் திட்டமா தீட்டியிருக்கேன் - போய், பார்ப்பது.''

லெஜன் என்னைக் கண்ணகல பார்த்தார்.

''இதுக்கான பாதைகள் ஏற்கனவே தயாராகியாச்சு.''

இப்போது முடிவெடுத்துக் கொண்ட நான், அத்தனை திட்டத்தையும் அவரிடம் சொன்னேன். நானும் என்னுடைய இன்னொரு நண்பரும் என்ன பண்ணுவதாய் திட்டமிட்டுள்ளோம் என்ற ரீதியில் அனைத்தையும் நான் சொன்னேன்.

அவர் கவனித்தார், முகத்தை லேசாய் சுளித்தபடியும், கீழுதட்டை அவ்வப்போது பிடித்திழுத்தபடியும்.

''மிஸ்டர் ஈஸ்ட்டர் - ப்ரூக், எனக்கு உங்களுடைய திட்டம் விளங்குது. சந்தர்ப்ப சூழ்நிலைகள், இதுக்குள்ளே நுழையும் ஒரு வசதியை உங்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கு. ஆனா, நீங்க திட்டமிட்டிருக்கும் ஆபத்தின் ஆழத்தை நீங்க முழுக்கவும் உணர்ந்திருக்கீங்களானு எனக்கு சந்தேகமா இருக்கு. இவளுங்க ஆபத்தானவளுங்க. உங்களுக்கு இது ஆபத்தை உண்டாக்கலாம்... ஆனா உங்க அந்த ஃப்ரண்டுக்கு நிச்சயமா இது ஆபத்தானதே...''

''எனக்கும் தெரியும்'' என்றேன். ''எனக்கும் தெரியும். இந்த திட்டத்தை நாங்க நூறு தடவை போட்டு அலசித் தீர்த்திருப்போம். அவ ஏற்றுக் கொள்வதா சொல்லியிருக்கும் பாத்திரத்தை அவ ஏற்றுக் கொள்வதில் எனக்கு உடன்பாடே கிடையாது. ஆனா அவ தீர்மானமா இருக்கா. மாற்றவே முடியாத முழு தீர்மானம். அவ ஏற்று பண்ணியே தீருவேன்னு நிக்கறா.''

லெஜன் எதிர்பாராத தருணத்தில் சொன்னார்: ''அவ சிகப்புக் கேசம் கொண்டவனு சொன்னீங்க, இல்லையா?''

''யெஸ்'' என்றேன் நான் முழித்தபடி.

''சிகப்புக் கேசம் கொண்டவங்களோட நம்மால வாதம் பண்ணவே முடியாது'' என்றார். ''எனக்கா இது தெரியாது!''

லெஜனின் மனையாள் ஒருவேளை இப்படி கேசங் கொண்டவரோ என நான் வியந்தேன்.

அத்தியாயம் 16

மார்க் ஈஸ்ட்டர் – ப்ரூக் பதிந்தவை

ப்ராட்லேவை சந்திக்க நான் போன ரெண்டாவது தடவை, எனக்குள் துளிகூட நடுக்கமே இருக்கவில்லை. சொல்லப் போனால், இம்முறை நான் கிளுகிளுப்பாய் ரசித்தேன்.

''உங்களை நீங்களே அம்சமா உள்ளே நுழைச்சுக்கிட்டு முன்னேறுங்க'' என்று கெஞ்சி அனுப்பியிருந்தாள் ஜிஞ்ஜர்... அதைத்தான் நான் அப்படியே செய்துக் கொண்டிருந்தேன்.

மிஸ்டர் ப்ராட்லே என்னை அன்பு பெருக்கெடுக்க வரவேற்றான்.

''உங்களை சந்திப்பதுல வெகு மகிழ்ச்சி'' என்றான் அவனது திமிங்கில இறக்கை கையைக் குலுக்க நீட்டியபடி. ''ஆக, உங்களுடைய பிரச்சினைப் பற்றி சிந்திக்க நீங்க அவகாசம் எடுத்துக்கிட்டிருக்கீங்க? இல்லையா? வெல், நான் சொன்னபடி, அவசரம் எதுவும் இல்ல. அவகாசம் எடுத்துக்குங்க...''

''அதைத்தான் ஜஸ்ட் நான் இப்ப பண்ண முடியாது'' என்றேன் நான் . ''இது - வெல் - இது - இது ரொம்ப அர்ஜேண்ட்.''

ப்ராட்லே என்னை மேலும் கீழுமாய் பார்த்தான். அவனை நேருக்கு நேராய் பார்ப்பதை நான் தவிர்ப்பதையும், தொப்பியை மேஜையின் மீது நான் வைக்கும்போது ஏற்படுத்திய குழப்பத்தையும், என்னுடைய நரம்பதிரும் நடவடிக்கையையும் அவன் கவனித்தான்.

''வெல் வெல்'' என்றான் அவன். ''எல்லாத்தையும் எப்படி கையாளுவதுனு பார்ப்போம். ஒரு சின்ன பந்தயம் வெச்சுக்கணும்னு வந்திருக்கீங்க, அப்படித்தானே?''

''விஷயம் இதுதான்..'' என்றேன் நான். பிறகு அப்படியே முட்டிக் கொண்டது போல் நிறுத்தி விட்டேன்.

ப்ராட்லே அவனது சரக்கைக் கொட்டட்டும் என விட்டு வைத்தேன். அவன் கொட்டினான்.

''நீங்க படபடப்புல இருக்கீங்கன்னு தெரியுது'' என்றான். ''முன் ஜாக்கிரதை, ஆங்? பாதுகாப்பா இருக்க நினைப்பவங்களை நான் பாராட்டறேன். உங்களுக்குள்ளே, இந்த ஆபீஸ்ல எங்கேயாவது ஓர் ஒட்டை இருக்குமானு ஒரு சந்தேகம், சரியா?''

எனக்கு இது விளங்கவில்லை... அதை என் முகம் காட்டிக் கொடுத்தது.

''மைக்ரோபோனுக்கு நாங்க பயன்படுத்தும் சேரி பாஷை'' என்று விளக்கினான். ''டேப் ரிக்கார்டர். அது போன்ற வஸ்துக்கள். என் சத்தியமான பதிலை நான் தரேன். நோ... அப்படியெல்லாம் எதுவும் இங்கே கிடையாது. நம்முடைய சம்பாஷணை எவ்வகையிலும் பதிவு பண்ணப்பட மாட்டாது. இப்படி சொல்லியும் நீங்க நம்பலேனா...'' சொன்ன அவனுடைய போக்கு நின்றது. ''அதுசரி... நீங்க எதுக்காக நான் சொல்வதை உடனடியா நம்பணும்? நாம சந்திக்க ஒரு பொது இடத்தை சொல்ல உங்களுக்கு சகல உரிமையும் இருக்கு. ஒரு ரெஸ்டாரண்ட்... தியேட்டர்... அங்கே கூட வெச்சு நம்முடைய சமாச்சாரத்தைப் பேசிக்கலாம்.''

இங்கே பேசுவதில் எனக்கு சங்கடம் கிடையாது என்பதை நான் நிச்சயப்படுத்தினேன்.

''புத்திசாலி! அப்படி ஏதாவது பதிவு பண்ணும் மெஷின் இங்கிருந்தாலும், ஒரு பிரயோஜனமும் இருக்காது. நீங்களோ அல்லது நானோ, 'சட்டபூர்வமா, நமக்கு எதிரா' அமைந்து நம்மை சிக்க வைக்கும்படியான எந்தவொரு வார்த்தையையும் போட்டு இப்ப பேசப் போவது கிடையாது. நீங்க என்னை கருணை மிகுந்த நபரா பார்க்கிறீங்க... அதனால அந்தக் கவலையை சொல்ல விரும்பறீங்க. நான் நல்ல அனுபவம் மிக்க ஆசாமி... ஆகவே எனக்கு உங்களுக்கு அறிவுரை தர இயலும். பகிர்ந்துக் கொள்ளப்பட்ட ஒரு கவலை, பாதியாகும் என்பது முதுமொழி. நாம இப்படி வெச்சுக்கிட்டா என்ன?''

நாங்கள் அப்படியே வைத்துக் கொண்டோம். நான் தட்டுத்தடுமாறி என் கதைக்குள் நுழைந்தேன். அவன் கவனமாய்க் கேட்டான்... கடினமான வார்த்தைகள் வரும்போது அவனே விளங்கும்படி பதங்களைத் தந்தான். என் உணர்வுகளை அடியொற்றி வருவதில் அத்தனை அற்புதமாய் அவன்

நடந்துக் கொண்டதன் விளைவால், இளைய பருவத்தில் எனக்கு டொரைன் மீதிருந்த எதிர்ப்பால் ஈர்ப்பு, நடந்த ரகசிய திருமணம் ஆகிய அனைத்தையும் சொன்னேன்.

''இப்படி நடப்பது சர்வ சகஜம்'' என்றான் அவன். ''ரொம்ப சகஜம். விளங்குது! எதிர்காலத்தைப் பற்றி கனவு கண்டுக்கிட்டிருக்கும் வாலிபன். இயல்பானவளா தெரியும் கவர்ச்சிக் கன்னி. கணவன் மனைவியாறாங்க. இதன் விளைவாய் என்ன நடந்தது?''

அதன் விளைவாய் என்ன நடந்தது என்பதை நான் சொன்னேன். இங்கு நான் வேண்டுமென்றே தகவல்கள் தருவதில் நிச்சயமற்றுக் காட்டிக் கொண்டேன். அப்போது என் நிலைமை என்ன என்பதன் ஒரு கோட்டுச் சித்திரத்தை மட்டுமே நான் காட்டினேன் - ஓர் இளைய முட்டாள் அவன் ஓர் இளைய முட்டாளாய் இருந்திருப்பதை உணர்ந்ததை மட்டும் காட்டினேன்.

இறுதியில் பயங்கரக் களேபர வாய்த்தகராறு நடந்தது என அவன் முடிவெடுத்துக் கொள்ளுமாறு நான் விட்டுவிட்டேன். என் மனைவி இன்னொரு ஆடவனோடு ஓடி விட்டாள் என ப்ராட்லே எடுத்துக் கொண்டாலோ அல்லது முன்னமேயே ஓர் ஆடவன் இருந்திருக்கின்றான் என்று எடுத்துக் கொண்டாலோ... இரண்டுமே நலம்தான்.

''ஆனா..'' என்று துவங்கிய நான், ''அவ - அவ - வெல், அவ நான் என்ன நினைச்சிருந்தேனோ அப்படிப்பட்டவ கிடையாதுனு தெரிஞ்சாலும், அவ ஓர் இனிமையான பொண்ணு. இத்தனைக்கு பிறகும் கூட அவ இப்படி நடந்துக் கொள்வானு என்னால நம்பவே முடியலே'' என்றேன்.

''அவளுக்கு என்ன நடந்திருக்கும்னு நீங்க நினைச்சுக்கிட்டிருந்தீங்க?''

''சொன்னால் அது ரொம்பவும் அசாதாரணமா படலாம். அதாவது - நான் - அதாவது அவ செத்திருக்கணும்னு நானா எடுத்துக்கிட்டேன்.''

என் கருத்துக்கு மறுப்பாய் தலையசைத்தான் ப்ராட்லே. ''இப்படி நடந்திருக்கக் கூடாதானு வேண்டுமென்றே நினைத்துக் கொள்வது. சனியன் ஒழிஞ்சிருக்கக் கூடாதா! அதுசரி... அவ ஏன் செத்திருக்கணும்?''

''அவ எனக்கு எதுவும் எழுதலே. தொடர்பும் வெச்சுக்கலே. அவகிட்டேயிருந்து நான் எந்த வகையிலும் எதையும் கேள்விப்படவேயில்லை.''

''இதுல உண்மை என்னன்னா, நீங்க அவளைப் பற்றி சப்ஜாடா எல்லாத்தையும் மறந்துட நினைச்சிருக்கீங்க...''

''யெஸ்'' என்றேன் நான். ''ஏதோ நான் யாரையோ உடனடியா கல்யாணம் கட்டிப்பதற்காக இப்படி நினைச்சேன்னு எடுத்துக்காதீங்க.''

''ஆனா நீங்க இப்ப அப்படி நினைக்கிறீங்க, ஆங்? அப்படித்தானே?''

''வெல்'' நான் பேச எதிர்ப்புக் காட்டினேன்.

''வெளியே துப்புங்க, சொல்லுங்க கண்ணு'' என்றான் அந்த நரிப்பயல்.

வெட்கம் அமுக்க, கொஞ்ச காலமாய் மறுமணத்தை நான் யோசித்துக் கொண்டிருப்பதாய் ஒப்புக் கொண்டேன்.

ஆனால் என்னுள் நிச்சயமாக்கிக் கொண்ட நான், அந்தப் பெண் யார் என்ற தகவலை மட்டும் தருவதில்லை என முடிவானேன். அவளை நான் இதற்குள் கொண்டு வந்துப் போடப் போவதில்லை. அவளைப் பற்றி இம்மி கூட நான் இவனுக்கு தெரிவிக்கப் போவதில்லை.

என் இந்த முடிவு சரியென்றே ஆனது... அது யார் என்று அவன் தொண தொணக்கவில்லை. மாறாக அவன் சொன்னான்: ''இது இயற்கை, மை டியர் ஸார். உங்களது கடந்த காலத்து கண்றாவி அனுபவங்களிலிருந்து நீங்க விடுதலையாகிட்டீங்க. அப்புறம் வேற ஒருத்தியை, உங்களோட டேஸ்ட்டுக்கு அம்சமா பொருந்தி நிற்கும் ஒருத்தியை, நீங்க பார்க்கிறீங்க... பழகறீங்க. உங்க கலை சம்பந்தப்பட்ட, இலக்கியம் சம்பந்தப்பட்ட அனைத்தையும் ஆழமா பகிர்ந்துக்கிட்டு மொத்தத்துல உங்க வாழ்க்கை யைப் போலவே வாழும் ஒருத்தியைப் பார்க்கிறீங்க. ஒரு நிஜ துணைவி.''

இக்கட்டத்தில்தான் அவனுக்கு ஹெர்மியா பற்றி தெரிந்திருக்கிறது என்பதை நான் கவனித்தேன். இது சுலபம்தான்... கஷ்டம் கிடையாது. என்னைப் பற்றி நடந்திருக்கும் எந்தவொரு விசாரணையும் எனக்கு ஒரேயொரு பெண் தோழிதான் இருப்பதாய் விளக்கியிருக்கும். அப்பாயிண்ட்மென்ட் வேண்டி என் கடிதம் வந்த கணத்திலிருந்து ப்ராட்லே என்னைப் பற்றிய விசாரணைகளை முடுக்கி விட்டிருந்திருக்க வேண்டும். என்னைப் பற்றி, ஹெர்மியா பற்றி சேகரித்திருக்க வேண்டும். ப்ராட்லேக்கு எல்லாமும் விளக்கப்பட்டிருக்கின்றது.

''விவாகரத்து பற்றி நினைக்கலியா?'' என கேட்டான். ''இதுதானே ஒரே நல்ல முடிவு?''

''இதுல விவாகரத்து பற்றிய பேச்சுக்கே இடமில்லை'' என்றேன் நான். ''அவ - என் மனைவி - இதுக்கு செவி சாய்க்கவே மாட்டா.''

''அவளுக்கு உங்க மேலே இப்ப இருக்கும் அபிப்ராயம் என்ன?''

''அவ - அவ, என்கிட்டே திரும்பி வந்துடணும்னு நினைக்கிறா. இது - இது, கொஞ்சம் அர்த்தமற்றது. என் வாழ்க்கையில வேற யாரோ ஒருத்தி இருக்கானு தெரிஞ்சுக்கிட்டா... அதனால - அதனால...''

''குழப்பத்தை உண்டு பண்ண முயற்சி பண்றா! எனக்கு விளங்குது... இதுல தப்பிக்க வேற எந்த வழியும் தென்படலே... இந்த ஒரு வழியைத் தவிர. மேலும் அவ ரொம்ப இளையவ. சாகற வயசு கிடையாது.''

''அவ இன்னும் வருஷக் கணக்கா உயிரோட இருப்பா'' - கசப்பாய் சொன்னேன் நான்.

''ஓ... அதெப்படி? இதை மட்டும் நீங்க சொல்லிட முடியாது. மிஸ்டர் ஈஸ்ட்டர் - ப்ரூக். இது, விதி. ஆங்... அவ வெளிநாட்டுல வாழ்ந்ததா சொன்னீங்க, இல்லையா?''

''அப்படித்தான் அவ என்கிட்டே சொல்றா. அவ எங்கேயிருந்தானு எனக்குத் தெரியாது.''

''கிழக்குப் பக்கத்துல எங்கேயாவது இருந்திருக்கலாம். அந்தப் பக்கங்கள்ல நாலஞ்சு பேர் சேர்ந்து தங்குவதற்கு ஒரு ரூமை வருஷக் கணக்கா எடுத்துக்கலாம்! அப்புறமா ஒரு நாள் நீங்க சொந்த நாட்டுக்குத் திரும்புவீங்க... பூகம்பகம் வெடிக்கும். இப்படி ஒரு சில கேஸ்களை நான் கேள்விப்பட்டிருக்கேன். இதுவும் அப்படித்தானோ என்னவோ'' என்றவர், ''எப்படியிருந்தாலும்..'' என்று விட்டு சொன்னார்: ''இந்த விஷயத்துல ஒரு சின்ன தொகையை நான் பந்தயமா கட்டறேன்.''

நானும் விளையாட ஆரம்பித்தேன். நான் மறுப்பாய் தலையசைத்தேன். ''அவ வருஷக்கணக்கா சுபீட்சமா வாழ்வா.''

''அதிருக்கட்டும். ஒரு பொம்பிளை, இன்னிக்கும் கிறிஸ்துமஸுக்கும் இடைப்பட்ட காலத்துல செத்துடுவா. இதுக்கு பந்தயத் தொகை, ஆயிரத்து ஐநூறு.''

''சீக்கிரமா! இது இன்னும் சீக்கிரமா நடந்தாகணும். என்னால காத்திருக்க முடியாது. சில சமாச்சாரங்கள் இருக்கு, எனக்கு...''

நான் காரணமாகவே தொடர்பற்ற வாக்கியங்களாய் உதிர்த்தேன். எனக்கும் ஹெர்மியாவுக்குமான சமாச்சாரங்கள் காலத்துக்குக் கட்டுப்பட்டு காத்திருக்கும் எல்லைகளைத் தாண்டிப் போய் விட்டதாய் அவன் நினைத்துக் கொண்டானா என்று எனக்குத் தெரியாது - அல்லது என் மனைவி, நேராய் ஹெர்மியாவிடம் போய் விடுவதாய் பயமுறுத்துவதாய்

எடுத்துக் கொண்டானா? வேறோர் ஆசாமி ஹெர்மியாவுக்கு கட்டங்கட்டிக் கொண்டிருப்பதாயும் அவன் நினைத்திருக்கலாம். அவன் என்னத்தை நினைக்கின்றான் என்று எனக்கு கவலையில்லை. அவசரம் என்பதை அழுத்தமாய் முன் வைக்க விரும்பினேன்.

''நம்ம டீலைக் கொஞ்சம் மாத்துவோம்'' என்றான். ''ஆயிரத்து எண்ணூறு. உங்க மனைவி ஒரே மாசத்துக்குள்ளே போக. இது நடக்கும்னு எனக்குள்ளே ஓர் உணர்வு எழுது.''

இது பேரம் பேசுவதற்கான நேரம் என உணர்ந்த நான் - பேரத்தில் இறங்கினேன். அத்தனை பெரிய தொகை என்னிடம் கிடையாது என மறுத்தேன். ப்ராட்லே பிஸினஸ் தெரிந்த கலைஞன். அவனுக்கு, ஏதோ ஒரு வழியில், அவசர நேரத்தில் இத் தொகையை என்னால் நிச்சயமாய் புரட்ட முடியும் என்று தெரிந்திருந்தது. என் புதுக் கலியாணத்துக்கு முன்னால் இத் தொகை எனக்கு ஒரு தூசு என்று அறிவித்தான். மேலும் என்னுடைய அரக்க பரக்க தெரிந்த அவசரமும் அவனுக்கு அனுகூலமாய் போனது. இறங்க மாட்டான் அவன்.

நான் என் பேரத்தை விட்டு விட்டதும் அவன் சொன்ன தொகை அழகாய் ஏற்றுக் கொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

அவன் காட்டிய ஏதோவொரு தஸ்தாவேஜுவில் நான் கையொப்ப மிட்டேன். அதிலிருந்த வாக்கிய அமைப்புகள் முழுக்கவும் சட்ட ரீதியாய் இருந்து என்னால் விளங்கிக் கொள்ள இயலாமல் அமைந்திருந்தன. சொல்லப் போனால் நாங்கள் பண்ணுவதில் அப்படி ஏதாவது சட்ட ரீதியான கட்டு இருக்கின்றதா என்பதே எனக்கு முதலில் சந்தேகமாய் இருந்தது. எனவே ''நாம பண்ணுவதென்ன, சட்டபூர்வமா கட்டுப்பட்டதா?'' என்று கேட்டேன்.

கேள்விக்கு அதியற்புத நுணுக்கமாய் அவன் தந்த பதில்: ''இது, கோர்ட்டுல பரிசோதிக்க உகந்ததா என்னிக்காவது அமையுமா என்பதே சந்தேகம்.'' இதற்கு அவன் சிரித்த புன்னகை நல்லதாய் இல்லை. ''பந்தயம் என்பது, எப்போதும் பந்தயம்! ஒத்துக்கிட்ட மனுஷன் பணத்தை தரலேனா...''

நான் அவனைப் பார்த்தேன்.

''இதை நான் சொல்லணும்னு அவசியம் இல்லே'' என்றான் அவன். ''நேர்.. இதைப் போய் நான் சொல்லிக் காட்டக் கூடாது. ஆனாலும் ஏமாற்றுபவர்களை எங்களுக்குப் பிடிக்காது.''

''நான் ஏமாற்ற மாட்டேன்'' - சொன்னேன் நான்.

''நீங்க நிச்சயமா ஏமாத்த மாட்டீங்க என்பதுல நான் ஸ்திரமாயிருக்கேன். மிஸ்டர் ஈஸ்ட்டர் - ப்ரூக்... இப்ப ஏற்பாடுகள் பற்றி. மிஸஸ் ஈஸ்ட்டர் - ப்ரூக் லண்டன்ல இருப்பதா சொல்றீங்க, சரியா? எங்கே?''

''அது உங்களுக்கு தெரிஞ்சுதான் ஆகணுமா?''

''எல்லா தகவல்களையும் நான் அறிந்து வெச்சிருக்கணும். பிறகுதான் நான் மிஸ் க்ரேவைப் பார்க்க ஏற்பாடு பண்ணனும். மிஸ் க்ரேவை ஞாபகமிருக்கில்ல?''

பின்னே, மறந்தா போகும் என்றேன் நான்.

''ஆச்சரிய அதிசயப் பெண். நிச்சயமா ஓர் அபூர்வப் பெண்தான். வரம், வரம். உங்க மனைவி அணிந்திருந்த ஏதாவது ஒண்ணு வேணும்னு அவங்க கேட்பாங்க. ஒரு க்ளவுஸ், கைக்குட்டை, இது போல...''

''ஏ-ன், எ-துக்கு?''

''நினைச்சேன், கேட்பீங்கன்னு நினைச்சேன். என்னை ஏன்னெல்லாம் கேட்காதீங்க. எனக்கு கிஞ்சித்தும் எதுக்குனு தெரியாது. மிஸ் க்ரே, அவங்களுடைய ரகசியங்களை அவங்களுக்குள்ளேயே வெச்சுக்கிறாங்க.''

''ஆனா என்னதான் நடக்குது? ஆக்சுவலா, அவங்க என்ன பண்றாங்க?''

''எனக்கு கிஞ்சித்தும் இதுபற்றிய எந்தத் தகவலும் தெரியாதுனு நான் சொன்னால், அதை நீங்க மறுக்காம நெஜமா நம்பணும், மிஸ்டர் ஈஸ்ட்டர் - ப்ரூக்! எனக்கு தெரியாது... இதை விடவும் தெளிவா சொல்லணும்னா, நான் தெரிஞ்சுக்க விரும்பலே. இந்த நிலைமையில இதை விட்டுடுவம்.''

சற்று தாமதித்துவிட்டு, பிறகு ஒரு தகப்பனாரின் குரலில் பேசினான்: ''என்னுடைய அறிவுரை இதுதான் மிஸ்டர் ஈஸ்ட்டர் - ப்ரூக். அவங்களை நம்ப வையுங்க. நீங்க மறுபடியும் அவங்களுடைய தயவை நாடி வருவதா காட்டுங்க. பிறகு ஓரிரு வாரங்கள் எங்கேயாவது வெளியே நீங்க போயிடணும் என்பதுதான் என்னோட ஆலோசனை.''

''அப்புறம்?''

''மச் டீப்பிங்குக்கு நீங்க மறுபடியும் போறீங்க'' என்றவன், சிந்திப்பதற்காக சில கணங்கள் எடுத்துக் கொண்டான். ''கொஞ்சம் யோசிக்கணும். ஆங்.. உங்க முந்தைய விஸிட்டின்போது அங்கு உங்க

நபர்களோ - அல்லது உறவினர்களோ இருப்பதா நீங்க சொன்னதா நினைவு.''

''ஒன்றுவிட்ட சகோதர உறவு.''

''இது விஷயத்தை இன்னும் சிம்பிளா ஆக்கிடுது. இந்த உறவு, உங்களை ஓரிரு நாட்கள் கூட வெச்சுக்கணும்.''

''இப்படியில்லாதவங்க, என்ன பண்ணுவாங்க? லோக்கல் விடுதியில தங்குவாங்களா?''

''பக்கத்து போர்ன் - மவுத் போய் தங்குவதா நினைக்கிறேன். இப்படித்தான் பக்கத்துல எங்கேயாவது போகணும். வேற வழியில்ல. ஆனா இதுபற்றி எனக்கு அதிகம் தெரியாது.''

''இப்படி தங்கினால் என் உறவு எதுக்காகனு கேட்டால்?''

''வெளிறிய குதிரை உங்களை ரொம்ப ஈர்த்ததினால்னு சொல்லுங்க. என்ன தப்பு? அங்கே நடக்கும் ஆவிக் கூட்டத்துல நீங்க கலந்துக்கப் போறீங்க. இந்த காரணத்தை விட வேறெதுவும் வசதியானதா அமையாது. மிஸ் க்ரேவும், ஆவிகளோடு தொடர்பு கொள்ளவல்ல அவளோட அந்த ஃப்ரண்டும் அடிக்கடி ஆவிக் கூட்டத்தைக் கூட்டுவாங்க. இதெல்லாம் முட்டாள்தனம்னு நாம சொல்லிக்கிட்டேயிருந்தாலும்... அஃப்கொர்ஸ் நம்முள் ஓர் ஈர்ப்பை இந்த ஆவி கீவி எல்லாம் உண்டு பண்ணிட்டேதானிருக்கும்.''

''அப்-புறம்? இது-க்கு அப்-புறம்?''

சிரித்தபடி தனது தலையை மறுப்பாய் அசைத்தான் அவன். ''இவ்ளோதான் என்னால உங்களுக்கு சொல்ல முடியும். சொல்லப் போனால், நான் அறிந்துள்ளவை இவ்ளோதான். இதுக்கப்புறம், எல்லாமே மிஸ் தெரஸா க்ரேயின் கட்டுப்பாட்டில். உங்ககிட்டேயிருக்கிற கைக்குட்டையோ அல்லது தொப்பியையோ அல்லது உங்ககிட்டே இருக்கும் எதுவோ ஒன்றை, தவறாம உங்ககூட கொண்டு போக மட்டும் மறந்துடாதீங்க. இதெல்லாம் ஆன பிறகு நான் இப்ப சொன்னது போல நீங்க வெளிநாடு எதுக்காவது ஒரு சின்ன ட்ரிப் கிளம்பிடணும் என்பது என் அறிவுரை. இத்தாலியின் ரிவைரா பகுதி இந்தக் காலகட்டத்துல அத்தனை அற்புதமா இருக்கும். ஒரு வாரம் அல்லது இரண்டு வாரம் போதும்.''

நான் வெளிநாடு எதற்கும் போக விரும்பவில்லை என்றும் நான் இங்கிலாந்திலேயே இருக்கத்தான் விரும்புவதாகவும் சொன்னேன்.

''வெரி வெல். ஆனா நிச்சயமா லண்டன்ல இருக்கக் கூடாது. நோ, நான் அடிச்சு அறிவுறுத்தறேன்: நாட் இன் லண்டன்.''

''ஏன் கூடாது?''

மிஸ்டர் ப்ராட்லே என்னைக் கண்டிக்கும் பார்வையைப் பார்த்தான். ''என் வாடிக்கையாளர்களுக்கு நான் முதலில் அறிவுறுத்துவது, பாதுகாப்பை'' என்றான். ''என் கட்டளைகளை அவங்க எடுத்துக்கிட்டா, அது நிஜ பாதுகாப்பா அமையும்.''

''போர்ன் - மவுத் பரவாயில்லையா? அங்கே போனால் போதுமா?''

''யெஸ். போர்ன் - மவுத் எதேஷ்டம். நீங்க அங்கேயிருப்பதைப் பார்க்கும்படியா ஓரிருவர் கண்கள்ல பட்டபடி, அங்கே ஓர் ஓட்டல்ல தங்குங்க. குற்றங்குறை சொல்ல முடியாத ஒரு வாழ்க்கையை அந்த ஓரிரு வாரங்கள்ல நீங்க வாழறீங்க - இதுதான் எங்களுக்கு ஒட்டுமொத்தமா தேவை. போர்ன் - மவுத்தும் போரடிச்சுப் போனால் பக்கத்துல இருக்கிற டர்க்கேவுக்குப் போங்க. நோ ப்ராப்ளம்.''

ஒரு பிரயாண ஏஜெண்டைப் போல் சரளமாய் வழி சொன்னான் அவன்.

இன்னொரு முறை அவனது தடிமனான கையைக் குலுக்கும்படியானது எனக்கு.

அத்தியாயம் 17

மார்க் ஈஸ்ட்டர் – ப்ரூக் பதிந்தவை

I

''தெரஸா நடத்தும் ஆவிக் கூட்டத்துக்கு நீ நிச்சயம் போகப் போறியா?'' - ரூடா அதிகாரமாய் கேட்டாள்.

''ஏன், கூடாதா?''

''இது மாதிரியான விஷயங்களிலெல்லாம் உனக்கு ஈடுபாடு இருக்கும்னு நான் நெனச்சதே கிடையாது, மார்க்.''

''எனக்கொண்ணும் இன்ட்ரஸ்டெல்லாம் கிடையாது'' என்றேன் நான் உண்மையாய். ''அந்த மூணு பொம்பிளைக் கூட்டணி... அது ஒரு விளங்கிக் கொள்ளவொண்ணா செட்-அப். அங்கே என்ன மாதிரியான ஷோ நடத்தறாங்கன்னு பார்ப்பதுல எனக்கு ஒரு கிளுகிளுப்பு.''

முக்கியப்படுத்தி விடாமல் விஷயத்தை முன் வைப்பதில் நான் சிரமப்பட்டேன். தன் கடைக்கண் பார்வையில் என்னை சிந்தனை பொதிந்து பார்த்துக் கொண்டிருந்த மிஸ்டர் டெஸ்பேர்டைக் கவனித்தேன்.

தனக்குப் பின்னால் வீரதீர சாகச அனுபவங்கள் நிறைந்த வாழ்க்கையைக் கொண்ட நுட்பமான மனிதன் அவர். எங்கு ஆபத்து செறிந்துள்ளதோ அதுபற்றி ஞானம் பெற்ற ஆறாவது அறிவு கொண்டுள்ள ஒரு சில ஆடவர்களில் முதன்மையானவர். அப்படிப்பட்டதை இதில் அவர் மோப்பங்கண்டிருக்க வேண்டும் - வெறும் கிளுகிளுப்பு மட்டும் என் ஆர்வத்துக்கான காரணமல்ல என்பதை அவர் பார்க்கின்றார்...

''அப்ப நானும் உங்கூட வரேன்'' என்று களிப்பாய் சொன்னாள் ரூடா. ''எப்பவாவது ஒரு தடவையாவது உள்ளே போயிடணும்னு நான் நினைச்சுக்கிட்டேயிருந்தேன்.''

''அப்படியெல்லாம் எதையும் நீ பண்ணிட முடியாது, ரூடா'' என உறுமினார் டெஸ்பேர்ட்.

''ஆனா எனக்கு ஆவி பேய் பிசாசு இதிலெல்லாம் நம்பிக்கையே கிடையாது. டெஸ்பேர்ட், உங்களுக்கே இது தெரியும். சும்மா பொழுது போக அங்கே விஸிட் அடிக்க விரும்பறேன்.''

''அந்த மாதிரி கூத்தெல்லாம் பொழுது போக போய்வரும் ஜாலி ட்ரிப் கிடையாது'' என்றார் அவர். ''அதுல நிஜமான ஏதாவது விஷயங்கள் இருக்கலாம்- இருக்கு. 'சும்மா பொழுது போக' அங்கே போகும் மக்கள் மேல அது நல்ல விளைவுகளைத் தருவதில்லை...''

''அப்ப மார்க்கும் போகக் கூடாது.''

''மார்க், என்னுடைய பொறுப்பு கிடையாது.''

இப்படி சொன்னாலும், உடனே அவர் அதே கடைக்கண் பார்வையை வேகமாய் வீசியெடுத்தார். அவருக்குத் தெரியும்... நிச்சயமாய் சொல்கிறேன்... நான் போவதில் வேறொரு காரணம் உண்டென்பது அவருக்குத் தெரியும்.

ரூடா கடுகடுப்பானாள். ஆனால் அதிலிருந்து விடுபட்டும் விட்டாள். அன்று காலையே தெரஸாவை எதிர் கொள்ளும் ஒரு வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தபோது தெரஸாவே முன்னறிவிப்பின்றி இவ்விஷயத்தை ஆரம்பித்தார்.

''ஹல்லோ, மிஸ்டர் ப்ரூக்... உங்களை நாங்க இன்னிக்கு சாயந்திரம் எதிர்பார்க்கிறோம். உங்களுக்கு திருப்தி ஏற்படும்படியா ஒரு காட்சியை நடத்திக் காட்ட முடியும்னு நம்பறோம். ஸிபில் ஓர் அற்புதமான ஆவித் தொடர்பாளர் - மீடியம். ஆனா இதுல என்ன மாதிரியான விளைவுகள் இறுதியில வரும்னு ஒருத்தரால முன்கூட்டியே சொல்லிட முடியாது. அதனால ஏமாற்றம் நேர்ந்தால் அதை நீங்க பெருசா எடுத்துக்கக் கூடாது. ஒண்ணே ஒண்ணு நான் உங்களுக்கு சொல்லிக்க விரும்பறேன். திறந்த மனசோடு வாங்க. நிஜமான தேடலோடு வருபவருக்கு என்றுமே நல்வரவு இருக்கும். ஆனா பரிகாசமும் இகழ்ச்சியும் நிறைந்த நிந்திப்பு அணுகுமுறையும், தப்பு.''

ரூடா ''எனக்கும் வரணும்னு ஆசைதான்'' என்றாள். ''ஆனா அவர் பயப்படறார். அவர் குணம்தான் உங்களுக்குத் தெரியுமே?''

''இதுல உங்களை நானும் அனுமதிச்சிருக்க மாட்டேன்'' என்றார் தெரஸா. ''ஒரு வெளியாள், போதுமானது.''

பிறகு என் பக்கமாய் திரும்பினார் அவர். ''முதல்லேயே வந்து எங்கூட கொஞ்சமா நீங்க சாப்பிடணும்னு நினைக்கிறேன்'' என்றார். ''ஆவிக் கூட்டத்துக்கு முன்னாடி நாங்க நிறைய சாப்பிடுவது கிடையாது. ஏழு மணி சுமாருக்கு! ஓகே? நாங்க உங்களை எதிர்பார்த்துக்கிட்டிருப்போம்.''

அவர் ஒப்புதலாய் தலையசைத்துவிட்டு, சிரித்தபடி, சுறுசுறுப்பாய் முன்னால் நடந்துப் போகலானார். போனவரின் பின்பக்கத்தைப் பார்த்தபடி வரவிருக்கும் இரவு நேரத்தை நினைத்துக் கொண்டே ரூடா பக்கத்தில் என்ன சொல்கிறாள் என்பதை கவனிக்கவே கவனிக்காமல் நின்றுக் கொண்டிருந்தேன் நான். இதனால் ''என்ன சொன்னே நீ? ஐ'ம் ஸ்ாரி'' என்று சொல்ல வேண்டியதாயிற்று.

''சமீபமா நீ ரொம்ப வித்தியாசமா நடந்துக்க ஆரம்பிச்சிருக்கே, மார்க். நீ இங்கே வந்து இறங்கினதிலிருந்தே இப்படித்தான். ஏதாவது பிரச்சினை?''

''நோ. நோ. அப்படியெல்லாம் எதுவுமே கிடையாது. என்ன பிரச்சினை இருக்க முடியும்?''

''புக்ல சிக்கிக்கிட்டியா?''

''புக்?'' - குழம்பினேன் நான். பிறகு சுதாரித்துக் கொண்டு, ''ஓ அதுவா!'' என்றேன். ''நான் எழுதும் புக் நல்லாத்தான் போய்க்கிட்டிருக்கு'' என்றேன் குத்துமதிப்பாய்.

''ம்ம்'' என்றாள் அவள் நம்பாமல். ''நீ காதல்ல மாட்டிக் கிட்டிருக்கேன்னு நினைக்கிறேன்'' என்றாள். ''யெஸ். அதுதான்! காதல்ல விழுந்துட்டா அது ஆண்கள் மீது படுமோசமான விளைவுகளை உண்டு பண்ணிடுது. அவங்களுடைய கட்டுப்பாட்டையெல்லாம் இழக்க வெச்சுடுது. ஆனா பொண்ணுங்ககிட்டே ஜஸ்ட் நேரெதிர் விளைவு - பிரகாசமா... உலகின் உச்சியில நின்னுக்கிட்டு, அந்த உலகத்தையே விலைக்கு வாங்கிட்ட மாதிரி! காதல், பெண்களை வென்றவர்களாகவும் ஆண்களை வெட்டப் போகும் ஆட்டுகிடா போலவும் மாற்றி விடுவது, கேலிக் கூத்து இல்ல?''

''தேங்க் யூ'' என்றேன் நான்.

''ஓ, தப்பா நினைச்சுக்காதே, மார்க். அப்படித்தான்னா, இது ரொம்ப சந்தோஷமான செய்தி, மார்க். எனக்கு மிகவும் மகிழ்ச்சியா இருக்கு. அவ நல்ல நுட்பமானவ.''

''அவ? எவ?''

''ஹெர்மியாதான், அம்ஃப்கொர்ஸ்! வேற எதைப் பற்றியும் நீ நினைப்பதே கிடையாது என்பதுதான் எனக்கு நல்லாவே தெரியுதே. எத்தனை காதலர்களை காலங்காலமா நான் பார்த்திருப்பேன். மேலும், உனக்குனு பிறந்திருக்கும் பொருத்தமான ஒரே ஆள் - அவதான். அழகு, புத்திசாலித்தனம். மிகப் பொருத்தமானவ.''

உள்ளே போக வேண்டிய ஜோலி இருக்கிறது என்றபடி திருப்பிக் கொண்டாள் அவள். நான், மதகுருவின் வீடு வரை ஒரு நடை போய் வருவதாய் சொல்லிக் கொண்டு கிளம்பினேன்.

II

மதகுருவின் வீட்டுக்கு வருவதென்பது பிறந்த வீட்டுக்கு வருவதைப் போன்றது.

வரவேற்கவென்றே திறந்திருப்பதைப் போல திறந்திருந்தது கதவு... நான் உள்ளே நுழையும்போதே என் தோள்களிலிருந்து பாரம் குறைவதைப் போல் உணர முடிந்தது.

முன்னறையின் பின்புறத்துக் கதவு ஒன்றின் வழியாக வந்தார் மிஸஸ் டேனே கேல்த்ராப். என்ன காரணம் என்று என்னால் விளங்கிக் கொள்ள முடியாதபடி, கையில் ஒரு பெரிய பசுமை கோணியைத் தூக்கிக் கொண்டு வந்தார்.

''ஹல்லோ, வந்திருப்பது நீங்களா?'' என்றார் அவர். ''நினைச்சேன் நீங்க வருவீங்கன்னு.''

கோணியை என் கைக்கு மாற்றினார் அவர். அதை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்று எனக்குக் கொஞ்சமும் ஐடியா இல்லாததால் நான் செய்வதறியாது நின்றுக் கொண்டிருந்தேன்.

''கதவுக்கு வெளியில... படிக்கட்டுகளுக்குப் பக்கத்துல'' - ஏதோ இது எனக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்பதைப் போல் பொறுமையிழந்து சொன்னார் அவர்.

நான் கட்டுப்பட்டேன். பிறகு நாங்கள் ஏற்கெனவே ஒருமுறை உட்கார்ந்துப் பேசியிருந்த அதே இருளடைந்த அறைக்கு அவரைப் பின்தொடர்ந்து நான் போனேன். அணைந்துக் கொண்டிருந்த கனப்பொன்று அங்கிருந்தது... ஆனால் ஒரு கரண்டிக் கரியினை அள்ளி அதனுள் போட்டார் மிஸல் டேனே. பிறகு என்னை உட்காரும்படி சைகைக் காட்டிய அவர் அவரையும் ஓர் இருக்கைக்குள் போட்டுக் கொண்டு, பொறுமையற்ற பிரகாசமான ஒரு பார்வையை என் மீது பதித்தார் அவர்.

''வெல்!'' என்று கேட்டபடி ஆரம்பித்தார். ''நீங்க என்னல்லாம் பண்ணியிருக்கீங்க?''

நாங்களிருவரும் ஒரு ரயிலைப் பிடிக்க ஓட வேண்டிய அவசரம் அவரது கேள்வியின் வீச்சில் இருந்தது.

''ஏதாவது பண்ணனும்னு நீங்க என்னிடம் சொல்லியிருந்தீங்க... நான் பண்ணிக்கிட்டிருக்கேன்!''

''குட்! என்னது அது?''

நான் அவரிடம் சொன்னேன். எல்லாவற்றையும் நான் அவரிடம் சொன்னேன். எனக்கே கூட விரிவாய் விளங்காத சில விஷயங்களை வார்த்தைகளற்று நான் அவருக்கு உணர்த்தினேன்.

''இன்னிக்கு ராத்திரியா?'' - சிந்தனையுடன் கேட்டார் மிஸஸ் டேனே கேத்ராப்.

''யெஸ்.''

சில நொடிகள் அவர் அமைதியாயிருந்தார். சிந்தித்திருக்க வேண்டும். அமைதியை சகிக்க முடியாத நான் வாய் திறந்து விட்டேன். ''எனக்கு இது பிடிக்கலே, மை காட், எனக்குப் பிடிக்கலே.''

''அப்ப எதுக்காக போகணும்?''

இது, அஃப்கோர்ஸ் பதில் தர இயலாததாய் ஆனது. ''எனக்கு அவளை நினைச்சா கதிகலங்குது.''

என்மீது கரிசனமாய் பார்த்தார் அவர்.

''உங்களுக்குத் தெரியலே'' என்றேன் நான். ''அவ எத்தனை துணிகரமானவனு உங்களுக்கு தெரியலே. இதை மீறி, அவளுங்க, இவளை, எப்படியாவது கொடுமைப்படுத்த நினைத்தால்...''

மிஸஸ் டேனே கேத்ராப் மெதுவாய் சொன்னார்: ''எனக்கு இன்னும் விளங்கலே. நெஜமா விளங்கலே. நீங்க சொன்ன முறையில அவளுங்களால எப்படி துன்புறுத்த முடியும்னு எனக்கு விளங்கவேயில்ல.''

''ஆனா அவளுங்க துன்பப்படுத்தியிருக்காளுங்க - மற்றவங்களை.''

''அப்படி நடந்திருக்கிற மாதிரிதான் தென்படும், யெஸ்.. ஆனால்...'' என்ற அவரது குரலில் அதிருப்தி அதிகமிருந்தது.

''வேறெந்த வழியிலும் அவளைத் தாக்கவே முடியாது. கற்பனைக்கப்பாற்பட்ட அத்தனை முன்ஜாக்கிரதை நடவடிக்கைகளையும் நாங்க எடுத்தாச்சு. எவ்விதமான ஸ்தூலத் தாக்குதல்களும் அவளுக்கு நேரவே முடியாது.''

''ஆனா ஸ்தூலத் தாக்குதலைத்தான் எங்களால உருவாக்கிக் காட்ட முடியும்னு இவளுங்க சவால் விட்டுட்டு அலையறாளுங்களே'' என்று கூட்டிக் காட்டினார் டேனே. ''மூளை மூலமா... மனசின் மூலமா இயங்கி, உடலில் நோயை அல்லது இயலாமையை உண்டாக்கிக் காட்டறோம்னு சொல்றாங்க. இப்படி அவளுங்களால பண்ண முடியும் என்றால், இது இன்ட்ரஸ்டிங்கான ஒரு சமாச்சாரம்தான். ஆனா மகா கொடூரமானது! இதைத் தடுத்தே ஆகணும்... இந்த இலக்குக்கு நீங்களும் நானும் ஏற்கெனவே ஒப்புதல் தெரிவிச்சுக்கிட்டிருக்கோம்.''

''ஆனா அவ இல்ல இதுல உள்ள ஆபத்தைக் கைல எடுத்துக் கிட்டிருக்கா...''

''யாராவது ஒருத்தர் துணிஞ்சாகணும்'' என்றார் டேனே சாந்தமாய். ''அது ஏன் நீங்களா இருக்கக்கூடாதுனு உங்க மனசு உறுத்துது. அந்த நினைப்பை நீங்க விழுங்கியாகணும். ஜிஞ்ஜர் ஏற்றுக் கொள்ள இருக்கும் பாத்திரத்துக்கு அம்சமா பொருந்தக்கூடிய ஒரே ஆள் அவளேதான். அவளால அவளைச் சிதையாமல் கட்டுப்பாட்டுக்குள் வெச்சுக்கிட்டிருக்க முடியும். அவ புத்திசாலி அவ உங்களைத் தோற்கும்படி பண்ணிட மாட்டா.''

''அய்யோ... என் வெற்றி தோல்வியைப் பற்றி நான் கவலைப்படலே.''

''வெல்.. எதைப் பற்றிக் கவலைப்படுவதையும் நீங்க நிறுத்துங்க. நீங்க கவலைப்படுவது அவளை மாற்றிடாது. இந்தப் பிரச்சினையையும் கூனிக் குறுகி நாம அணுக வேண்டாம். இந்தப் பரிசோதனையினால அவ சாகறான்னா, ஒரு நல்ல இலக்கினை அடைய நடந்த சோதனையில அவ வீர மரணம் அடைஞ்சான்னுதான் ஆகும்.''

''மை காட்... நீங்க கொடூரமா பேசறீங்க!''

''இதுல யாராவது ஒருத்தர் ஆணித்தரமா இருந்துத்தான் தீரணும்'' என்றார் அவர். ''எப்பவுமே, மோசமான விளைவை நினைத்தே முதலடி எடுத்து வெக்கணும். அது உங்க படபடப்பையும் பதைபதைப்பையும் எத்தனை மட்டுப்படுத்தும், தெரியுமா? 'அப்படி எதுவும் நேராது' எனும் நம்பிக்கை தானா வந்து உங்களை தைரியமா முன்னுக்கு செலுத்தும்... யெஸ்..''

எனக்கு நம்பிக்கை உண்டு பண்ணும்படியாய் அவர் ஆமோதிப்பதாய் தலையசைத்தார்.

''நீங்க சொல்வதும் சரியாத்தான் படுது'' என்றேன் நான் சந்தேகமாய்.

தான் சொன்னதுதான் உளவியல் ரீதியாய் முழுக்கவும் சரியானது என்று அடித்துச் சொன்னார் அவர்.

நான் மேற்கொண்டு விளக்கங்கள் கூற முன்னேறினேன். ''உங்களுக்கு இங்கே டெலிபோனிருக்கு, இல்ல?''

''ம்.''

நான் என்ன பண்ண உத்தேசித்திருக்கிறேன் என்பதை விளக்கினேன். ''இன்னிக்கு ராத்திரி பிஸினஸ் முடிஞ்ச பிறகு நான் ஜிஞ்ஜர் கூட தொடர்ந்து தொடர்புல இருக்க விரும்புவேன். ஒவ்வொரு நாளும் போன் போடணும்... இங்கிருந்து நான் போன் பண்ண அனுமதி கிடைத்தால்?''

''அப்கொர்ஸ்... அடிக்கடி ரூடா வந்து போவா. நீங்க பேசுவதை யாரும் ஒட்டுக் கேட்டுடாம இருக்கணும்...''

''ரூடா வீட்டிலும் நான் கொஞ்சம் தங்குவேன். அப்புறம் போர்ன் - மவுத் போகலாம். நான் திரும்பி லண்டனுக்குப் போகக் கூடாதாம்.''

''இன்னிக்கு ராத்திரிக்குப் பிறகு என்ன நடக்கும்னு ரொம்ப யோசிக்க வேண்டாமே...''

''இன்னிக்கு ராத்திரி...'' என்றபடி எழுந்துக் கொண்டேன் நான். எனக்கு எப்போதுமே வழக்கமற்ற ஒரு கோழையான வசனத்தைச் சொன்னேன். ''எனக்காக பிரார்த்தனை பண்ணுங்க... ஐ மீன், எங்களுக்காக.''

இப்படி நான் கேட்க வேண்டிய தேவையேயில்லையே என்ற ஆச்சரியத்தோடு 'நேச்சுரலி' என்றார் அவர்.

நான் வெளியே கடந்துக் கொண்டிருக்கும்போது ஒரு திடீர் ஆர்வத்தால் ''எதுக்காக இந்தக் கோணி?'' என்றேன் நான். ''என்ன காரணத்துக்காக?''

''அதுவா? பள்ளிக்கூட குழந்தைகளுக்காக. வேலிக்குள்ளே விழும் இலைகளையும் தழைகளையும் பொறுக்கிப் போட. பார்க்க விநோதமாயிருக்கும்.. ஆனா கைக்கடக்கமானது...''

உலகின் இலையுதிர் காலத்தின் வனப்பினை, நான் வெளியே பார்த்தேன். ஒன்றுமற்றதாய் ஆகிய போதிலும்... மின்னியது அழகு.

''தேவதைகள் மற்றும் நல் ஆத்துமாக்களின் கருணை, உலகைக் காத்துக் கொண்டிருக்கின்றது'' என்றேன் நான் தன்னிச்சையாய்.

பின்னாலிருந்து ''ஆமென்'' என்றார் மிஸஸ் டேனே.

III

வழக்கமாய் எல்லா இடத்திலும் இடம்பெறுவது போலவே *வெளிறிய குதிரையிலும்* சாதாரணமான முறையில் நான் வரவேற்கப்பட்டேன். என்ன மாதிரியான சூழலை நான் இங்கு எதிர்பார்த்திருந்தேன் என சொல்லத் தெரியவில்லை - ஆனால் நிச்சயமாய் அது இது கிடையாது.

வெறும் ஆழ்ந்த நிற கம்பளி உடையை உடுத்தியிருந்த தெரஸா கதவைத் திறந்தார். தொழில் ரீதியாய் பேசினார்: ''ஆஹ், வந்துட்டீங்க... குட். நாம நேரா சாப்பிடப் போயிடலாம்...''

இதைவிட வேறெதுவும் சர்வ சாதாரணமாய்... எடுத்துக் கொண்ட விஷயத்தில் மட்டும் கவனம் செலுத்துவதாய் இருந்துவிட முடியாது.

மரச் சுவரால் மறைத்து இரு பாகங்களாக்கப்பட்ட அறையின் மூலையிலிருந்த டேபிளில் ஒரு சின்ன சிம்பிள் சாப்பாடு தயாராக இருந்தது. சூப், ஒரு ப்ரெட் மற்றும் வெண்ணெய் ஆகியவை சாப்பிட்டோம். பெல்லா எங்களுக்குப் பரிமாறினாள். கறுப்பினாலான ஆழ்ந்த நிற உடை உடுத்தியிருந்த அவள், கும்பலைச் சித்தரிக்கும் ஓவியமொன்றில் பத்து முகங்களில் ஒன்றாய் அடையாளமற்று இருந்தாள். ஸிபில் சற்று ஆடம்பரமாய் தெரிந்தாள். மயில் நிற இருண்ட உடையில், தங்க முத்துக்கள். அவளிடம் எப்போதுமிருக்கும் பாசிகளும் மணிகளும் இத்தருணத்தில் இல்லை... பதிலாக, மணிக்கட்டில் இரண்டு தங்க வளையல்கள் போட்டிருந்தாள். ஆம்லெட்டின் சின்ன விள்ளல் ஒன்றை

மட்டுமே சாப்பிட்டாள்... வேறொன்றும் எடுத்துக் கொள்ளவில்லை. கொஞ்சம்தான் பேசினாள்...அவள் ஏதோ வெகு தூரத்து உயர்மட்ட உணர்வில் இருப்பதாய் நாங்கள் உணர வேண்டும் என்று அப்படி இருந்ததாய் தோன்றியது. இப்படி அவள் இருந்தது ஒரு தனி பதிப்பினை உண்டாக்கியிருக்க வேண்டும். ஆனால் அப்படி ஏதும் உண்டாகவில்லை. அவள் உண்டாக்கிய பதிப்பு நடிப்பு போலவும் நிஜமற்றும் இருந்தது.

அங்கு படபடவென்ற உரையாடலை செய்தது தெரஸா க்ரேதான் - லோக்கல் சமாச்சாரங்கள் பற்றிய வம்பளப்பு. கலியாணமாகாத ஒரு பிரிட்டிஷ் முதிர் கன்னியை அப்படியே நகலெடுத்து வைத்தார் அவர் - அருமையான, சாதுர்யமிக்க, தன்னைச் சுற்றியிருப்பவைகளைத் தாண்டி வேறெந்த விஷயத்திலும் கவனம் வைக்காத, முதிர் கன்னி.

'நான் பைத்தியக்காரன்... முழு பைத்தியக்காரன்' என்றெண்ணிக் கொண்டேன் நான். இங்கு பயப்பட என்ன இருக்கின்றது? சொல்லப் போனால், இந்த பெல்லாகூட, கல்வியறிவு அற்று பரந்த பார்வையெல்லாம் அறிந்திராத நூற்றுக்கணக்கான வயதான காய்கறிக்காரிகளுள் ஒருத்தியாய்தான் இன்றிரவு தோன்றுகின்றாள்.

மிஸஸ் டேனே கேல்த்ராப்புடன் நான் மேற்கொண்ட சம்பாஷணைகள் கேலிக் கூத்தாய் தோன்றின. ஜிஞ்ஜர் ஒரு புதுப் பெயரில் கேசத்தை நிறம் மாற்ற டை எல்லாம் அடித்துக் கொண்டு - இந்த மூன்று பொம்பளைகள் ஏதாவது ஆபத்தினை இழைத்து விடுவார்கள் என்ற பயத்துடன் - ஊஃப்... முழு கேலிக் கூத்து.

சாப்பாட்டினை முடித்தோம்.

''காபி கிடையாது'' என்றார் தெரஸா, பவ்யமாய். ''வயிறு முட்ட சாப்பிட்டுட்டு உள்ளே வரக் கூடாது.'' அவர் எழுந்துக் கொண்டார். ''ஸிபில்?''

''யெஸ்'' என்றாள் ஸிபில். ''நான் போய் தயாராகணும்.''

பெல்லா டேபிளைச் சுத்தம் செய்ய ஆரம்பித்தாள். நான் பழைய இன்னுடைய சின்னம் எங்கு தொங்கிக் கொண்டிருந்தது என தேடினேன்.

''இப்படிப்பட்ட வெளிச்சத்துல உங்களால அதை பார்க்க முடியாது'' என்றார் அவர்.

அவர் சொன்னது நிஜந்தான். அருமையான சட்டத்தின் பின்னணியில் வெளிறிப் போயிருந்த அந்த பிம்பம் ஒரு குதிரை என கண்டுபிடிப்பது படு

சிரமமாய்த்தானிருந்தது. அந்த அறையும் கனமான மூடிகளால் கவிழ்க்கப்பட்டிருந்த மின் விளக்குகளால் ஒளியூட்டப்பட்டிருந்ததால் அவ்விளக்குகளின் முழு ஒளியில் பாதி கூட வெளிவரவில்லை.

''அந்த சிகப்புக்கேசப் பொண்ணு - அவ பேர் என்ன? - ஜிஞ்ஜரோ என்னவோ - இங்கே வந்திருந்தாளே அவ - ஏறி, இந்த குதிரையை சுத்தம் பண்ணப் போறேன்னா'' என்றார் தெரஸா. ''அப்படி சொன்னதைக் கூட அவ இப்ப மறந்திருப்பானு நினைக்கிறேன்'' என்றுவிட்டு பேச்சுவாக்கில் சொன்னார்: ''ஏதோ கேலரியில் அவ லண்டன்ல வேலை பார்க்கிறானு நினைக்கிறேன்.''

இப்போது ஜிஞ்ஜர் பற்றி எதேச்சையாய் பேசப்பட்டாலும், அது எனக்கு அந்நியத்தனமாய் ஒரு கிலியைப் படர விட்டது. அப்படத்தினை முறைத்துக் கொண்டு நான் சொன்னேன். ''அதனால்தான் அவளுக்கு இது பிடிச்சிருக்கணும்.''

''ஆனா அது ஒண்ணும் நல்ல படம் கிடையாது'' என்றார் தெரஸா. ''சும்மா அப்பினா மாதிரி ஒரு கிறுக்கல். இந்த இடத்துக்கு அது பொருந்திப் போயிடுச்சு... அவ்ளோதான். நிச்சயமா அது முந்நூறு வருஷம் பழமை வாய்ந்த ஓவியமாயிருக்கும்.''

''ரெடி.''

திடுதிப்பென்று நாங்கள் அரை வட்டமாய் திரும்பினோம்.

இருளிலிருந்து வெளிவந்த பெல்லா, சாடையில் எதையோ புரிய வைத்தாள்.

இன்னமும் சுறுசுறுப்பாயும் தினசரி நடவடிக்கையை சராசரியாய் மேற்கொள்ளும் தினுசிலுமிருந்த தெரஸா சொன்னார்: ''ஆரம்பிக்க வேண்டிய நேரம் வந்தாச்சு.''

கிடங்காயிருந்து இப்போது மாற்றப்பட்டிருக்கும் பகுதியை நோக்கி வழிகாட்டிக் கொண்டு முன்னால் போனார் அவர்.

நான் ஏற்கெனவே குறிப்பிட்டுக் காட்டியிருந்ததைப் போல் இப்பகுதிக்கு வீட்டின் எப்பகுதியிலிருந்தும் நுழைவு கிடையாது. காரிருளாய் இருக்கப் போகின்றது என்றுணர்த்திய இரவுப் பொழுது அது. நட்சத்திரங்கள் இல்லை. கும்மிருட்டுப் பகுதி ஒன்றினைக் கடந்து விட்டு ஒளியூட்டப்பட்டிருந்த நீளமான ஓரறைக்குள் நாங்கள் நுழைந்தோம்.

கிடங்கு, இரவில், மாற்றியமைக்கப்பட்டிருந்தது. பகலிலோ அதுவோர் இனிமையான படிக்குமறையாய் இருந்தது. இப்போது அது இன்னும் உயர்வாய் மாற்றங் கண்டிருந்தது. விளக்குகள் இருந்தன. ஆனால் அவை ஒளிர்விக்கப்படவில்லை. விளக்கொளி மறைமுகமாய் இருந்தது... அறை முழுக்கவும் ஒளி தெரிந்தாலும், அது பனிமூட்டம் போல தெளிவற்றதாய். அறையின் மையத்தில் படுக்கையைப் போல் அல்லது ஒரு திவானைப் போல உயரமான அமைப்பொன்று காணப்பட்டது. அதன் மேல் கருஞ்சிவப்பு நிறத்தில் பட்டியெல்லாம் யூதர் பரம்பரை சின்னங்கள் பொறிக்கப்பட்டிருந்த ஒரு பெட்ஷீட் விரிக்கப்பட்டிருந்தது.

அறையின் எதிர் மூலையில் பித்தளை விளக்கினைப் போல ஒன்று தென்பட்டது. அதனையடுத்து ஒரு பெரிய பித்தளை பேஸின். பார்க்கப் பழையதாயிருந்தது அது.

இதற்கு அடுத்த பக்கத்தில், ஏறத்தாழ சுவரைத் தொட்டுக் கொண்டு இருக்கும்படி, ஓக் மரத்தினாலான ஒரு நாற்காலி. தெரஸா அதை நோக்கி என்னை நகர்த்திப் போனார்.

''அங்கே உட்காருங்க'' என்றார் அவர்.

நான் மரியாதையாய் உட்கார்ந்து கொண்டேன். தெரஸாவின் நடவடிக்கைகள் மாறியிருந்தன. அந்த மாற்றம் என்ன மாதிரியானது என்பதை என்னால் விளக்க முடியாததுதான் இதில் ஆச்சர்யம். அம்மாற்றத்தில் ஸிபிலிடம் தென்பட்ட ரகசியப் போக்குகள் எதுவும் கிடையாது. அவர் முன் இதுவரை இருந்த தினசரி சராசரி நடவடிக்கைகள் எனும் திரை சட்டென தூக்கப்பட்டு விட்டதைப் போன்ற ஒரு மாற்றம். தூக்கப்பட்ட திரைக்குப் பின்னாலிருந்தாள், அந்த நிஜப் பெண். மிகவும் ஆபத்தான மற்றும் கடினமான ஓர் ஆபரேஷனை மேற்கொள்ள அறுவை சிகிச்சை டேபிளை நோக்கிப் போகும் ஒரு டாக்டரின் கதியிலிருந்த நிஜப் பெண். இந்த என் கணிப்பு, தெரஸா நேராய் சுவரில் பதிக்கப்பட்டிருந்த ஓர் அலமாரிக்குப் போய் அதைத் திறந்து அதிலிருந்து பெரிய போர்வை போன்ற மேலங்கியொன்றினை வெளியிலெடுத்தபோது மளமளவென கூடியது. அதன் மீது ஒளிபடும்போதுதான் கவனிக்க முடிந்தது... அது, ஏதோ உலோகத்தால் வேயப்பட்ட உடுப்பு போன்றிருந்தது. மெலிதானது. எனக்கு ஒருமுறை காட்டப்பட்டிருந்த புல்லட் - ப்ரூஃப் அங்கி போலிருந்தது.

''முன் ஜாக்கிரதை நடவடிக்கைகள் எடுத்துக்கணும்'' என்றார் அவர்.

சொன்ன விதம் சற்றே அச்சுறுத்தும் விதமாய் என்னையடைந்தது.

பிறகு அவர் என்னிடம் ஆழ்ந்த குரலில் வசனம் பேசுவதைப் போல சொன்னார்:

''நீங்க எங்கே உட்கார்ந்திருக்கீங்களோ அங்கேயே அப்படியே ஓர் ஓவியம் போல் நீங்க உட்கார்ந்திருக்கணும்னு அடிச்சு சொல்லிட விரும்பறேன், மிஸ்டர் ப்ரூக். எக்காரணம் கொண்டும் நீங்க உங்க சேரிலிருந்து நகரக் கூடாது. அப்படி பண்ணுவது பாதுகாப்பானதல்ல. இது குழந்தைங்க விளையாடும் விளையாட்டு கிடையாது. இந்த சக்தியைக் கையாளத் தெரியாதவங்களுக்கு பெரும் ஆபத்தாய் ஆகிவிடக் கூடிய சக்தியை, இப்ப நான் கையாளப் போறேன்.'' இங்கு சற்று நிறுத்திக் கொண்டு விட்டு அவர் கேட்டார். ''உங்களை எதைக் கொண்டு வரும்படி அறிவுறுத்தப்பட்டிருந்ததோ, அதை நீங்க கொண்டு வந்திருக்கீங்க, இல்லையா?''

இதற்கு ஒரு மறுவார்த்தை பேசாமல் என்னுடைய சட்டைப் பையிலிருந்து ஒரு கையுறையை எடுத்து அவரிடம் ஒப்படைத்தேன்.

அதை வாங்கிக் கொண்ட அவர் அன்னத்தின் தலையை முகப்பில் கொண்டிருந்த ஒரு குத்துவிளக்கினை நோக்கி நகர்ந்தார். அதை அவர் ஒளியூட்டினார். மனதில் கிலேசத்தை உண்டாக்கும் ஒளி கொண்டிருந்தது அவ்விளக்கு. அதன் கிரணங்களில் அந்த க்ளவுஸை நீட்டினார். கையுறையின் அடர்த்தியான ப்ரவுன் நிறம் சாம்பல் நிறங் கண்டது.

ஒப்புதலாய் தலையசைத்துக் கொண்டபடி விளக்கினை அணைத்தார்.

''ரொம்பவும் பொருத்தமானது'' என்று சொல்லிக் கொண்டார். ''இதிலிருந்து பாய்ந்து வெளிவரும் இதை அணிந்திருந்தவரின் உடற் சக்தி, மகா பலமாயிருக்கு.''

அறையின் ஓரத்தில், ஆரம்பக் கால வானொலிப் பெட்டி போல வைக்கப்பட்டிருந்த ஓர் அமைப்பின் மீது அதனைப் போட்டார் அவர். பிறகு அவருடைய குரலைக் கொஞ்சம் உயர்த்திக் கொண்டார்: ''பெல்லா, ஸிபில், நாங்க ரெடி.''

ஸிபில் முதலில் உள்ளே நுழைந்தாள். அவளுடைய மயில் நிற உடையின் மீது தற்போது உடல் முழுக்க நீளும் கறுப்பு அங்கி ஒன்றினை உடுத்தியிருந்தாள். பெரிய மகாராணியின் கெட் - அப்பில் அந்த அங்கியை தன் மேல் ஒரு புறமாய் ஒதுக்கிக் கொண்டாள். அப்போது கீழே நழுவி நெளிந்த அதன் ஒரு பகுதி, தரையில்கொட்டப்பட்ட பேனா இங்க் போல தோன்றியது.

''இன்னிக்கு நல்லா நடக்கும்னு படுது'' என்றாள் அவள். ''எப்படி நடக்கும்னு யாராலும் முன் கூட்டியே சொல்ல முடியாதே...'' பிறகு என் பக்கம் திரும்பினாள். ''நாஸ்திகன் போன்ற நம்பிக்கையற்ற மன ஓட்டத்தில் இருக்காதீங்க, மிஸ்டர் ஈஸ்ட்டர் ப்ரூக். அது, இங்கே நடப்பவைகளுக்கு இடைஞ்சலா இருக்கும்.''

''மிஸ்டர் ஈஸ்ட்டர் - ப்ரூக் அப்படிப்பட்ட முகமூடி அணிஞ்சுக்கிட்டு இங்கே வரலே'' என்றார் தெரஸா. சொன்ன அவருடைய குரலில் அழுத்தம் தெறித்தது.

கருஞ்சிவப்பு திவானில் ஸிபில் உட்கார்ந்தாள். தொங்கிய அவளது உடை பாகங்களை நேர்த்தி பண்ணி விட்டார் தெரஸா, மதிப்பு கொடுத்து. ''வசதியா இருக்கா?'' என்று கேட்டார் அவர்.

''யெஸ். தேங்க் யூ, டியர்.''

தெரஸா சில விளக்குகளை அணைத்து விட்டார். பின்னர் சக்கரங்கள் வைத்த சிறு தடுப்பினைத் தள்ளிக் கொண்டு வந்தார். இதனை திவானை மறைக்கும்படியாய் அமைத்து வைத்தார். அந்திப் பொழுதின் ஒளியற்ற இருள் கவ்வும் வேளையில், ஆழ்ந்த நிழற் பகுதியில் விடப்பட்டார் ஸிபில்.

''ரொம்ப வெளிச்சம், தன்னை மறந்த ஆவித் தொடர்புக்கு கெடுதியானது'' என்றார். ''இப்ப நாம தயாராகிட்டோம்னு நினைக்கிறேன். பெல்லா?''

பெல்லா, நிழற் பகுதியினின்றும் வெளிப்பட்டாள். அவ்விரு பெண்களும் என்னை நெருங்கினார்கள். தன்னுடைய வலக்கரத்தினால் எனது இடக்கரத்தினை எடுத்துக் கொண்டார் தெரஸா. அவரது இடக்கை பெல்லாவின் வலக்கையைத் தூக்கியது. பெல்லாவின் இடக்கை என் வலக்கையைத் தேடிப் பிடித்தது. தெரஸாவின் கைகள் வறட்சியாகவும் பலமானதாகவும் இருக்க, பெல்லாவின் கைகள் சில்லிட்டு எலும்பற்றதாய் தென்பட்டன. அவை, என் கையில் அகப்பட்ட நத்தை போல குழைய நான் கிலியில் நடுங்கினேன்.

தெரஸா எங்கேயோ ஒரு சுவிட்சினைத் தட்டி விட்டு வந்திருக்க வேண்டும்... உத்திரத்திலிருந்து இசை வழிந்தது. அதனை, இறுதி யாத்திரைக்கு வாசிக்கப்படும் ஒப்பாரி இசையாய் நான் உடனே பிரித்தறிந்தேன்.

நான் கவனமாயும் சாந்தமாயும் இருந்தாலும் கூட, உள்ளுக்குள் இனம் புரியாத ஓர் உணர்வு தெளிய ஆரம்பித்ததை உணராமலில்லை.

இசை நின்றது. ஒரு நீண்ட காத்திருத்தல் ஆட் கொண்டது. மூச்சு விடும் ஓசைகள் மட்டுமே ஒலியென அங்கிருந்தன. பெல்லாவின் சுவாசம் சற்றே மூக்கடைப்பிலிருக்க, ஸிபிலின் சுவாசம் ஆழ்த்தும் சீராகவும் போனது.

அப்போதுதான், திடுமென ஸிபில் பேசினாள். அவளது குரலில் அல்ல என்பதை சொல்லத் தேவையில்லை. அது ஓர் ஆணின் குரல். அவளுக்கே உரித்த உச்சரிப்பிலிருந்தும் வழுவியிருந்த குரல். அது அயல்நாட்டு அடித் தொண்டை உச்சரிப்பில் அமைந்திருந்தது.

''நான் இப்ப இங்கேயிருக்கேன்'' என்றது அக்குரல்.

என் கைகள் விடப்பட்டன. பெல்லா தன்னை நிழலுக்குள் கொண்டு போய்விட்டாள். தெரஸா பேசினார்: ''குட் ஈவ்னிங். வந்திருப்பது மெக்கண்டல்லா?''

''நான் மெக்கண்டல்.''

தெரஸா திவான் வரைக்கும் போய் அங்கிருந்த பாதுகாப்பு தடுப்பினை நகர்த்தி விட்டார். மிருதுவான விளக்கொளி ஸிபில்லின் முகத்தில் படர்ந்தது. ஆழ்ந்த தூக்கத்திலிருக்கும் ஒருவரைப் போல இருந்தாள் ஸிபில். இந்தக் கட்டத்தில் அவளது முகம் முழுக்கவும் வேறுபட்டு தெரிந்தது.

சுருக்கங்கள் சமன் செய்யப்பட்டிருந்தன. பல வருடங்கள் இளையவளாய் தோன்றினாள். ரொம்ப அழகாய் இருக்கிறாள் என்று கூட சொல்வார்கள், இப்போது ஸிபிலைப் பார்ப்பவர்கள்.

தெரஸா கேட்டார்: ''என்னுடைய தேவைக்கும் என்னுடைய கேள்விகளுக்கும் ஒப்புக் கொண்டு முன்னுக்குவர நீ தயாரா, மெக்கண்டல்?''

புதிய ஆழமான குரல் பேசியது: ''நான் தயார்.''

''நீ வந்து இப்போ தங்கியிருக்கும் இந்த உடலை எல்லாவிதமான உடல் காயங்கள் மற்றும் தாக்குதல்களிலிருந்தும் காப்பாற்ற தயார் எனும் உறுதிமொழியை நீ இப்ப எடுத்துக்கறியா? இப்போ இந்த உடலுக்குள் உருவாகவுள்ள மாசக்தியை என் தேவைக்கு உன்னால அர்ப்பணிச்சுத் தர முடியுமா? அதாவது என் தேவையை இந்த உடலில் ஏறும் சக்தியால் நான் அடைய வழிவிட்டுத் தர முடியுமா?''

''என்னால முடியும்.''

''யாருக்கு நான் அனுப்பப் போறேனோ, அந்த உடல் மரணமடைய இயற்கையாய் நடக்கும் அனைத்தும், இந்த உடலில் நடந்து முடிய,

இவ்வுடலை உன்னால் பத்திரமா அர்ப்பணிப்பு பண்ணிக் காட்ட முடியுமா?''

''இங்கு நிகழும் மரணம், அங்கு மரணத்தை உண்டு பண்ண அனுப்பப்படணும்... யெஸ், அப்படியே ஆகும்.''

தெரஸா ஓரடி பின்னால் நகர்ந்தார். முன்னுக்கு வந்த பெல்லா என் கண்களுக்கு தட்டுப்படும்படியான ஒரு சிலுவையை வெளியிலெடுத்துப் பிடித்தார். தலைகீழான நிலையில் அதனை ஸிபில்லின் நெஞ்சில் வைத்தார் தெரஸா. பிறகு பெல்லா ஒரு சிறிய பச்சைக் குப்பியைக் கொண்டு வந்தாள். அதிலிருந்து ஒன்றோ அல்லது இரண்டோ சொட்டுக்களை ஸிபில்லின் நெற்றியில் விட்ட தெரஸா, தனது கையில் எதையோ அங்கு சின்னமாக்கிக் காட்டினார். மீண்டும் அது தலைகீழான சிலுவையின் சின்னம் என்றே எனக்குப்பட்டது.

''கத்தோலிக்க சர்ச்சிலிருந்து வரவழைக்கப்பட்ட புண்ய தீர்த்தம்'' என்றார் அவர் என் காதுகளுக்கு.

எனது முதுகுத் தண்டில் சில்லிடும் உணர்வை உண்டு பண்ணும் விதமாய் இருந்திருக்க வேண்டிய இக்குரல் ஏனோ அப்படியேதும் பண்ணாமல் சாதாரணமாகவே இருந்தது.

இறுதியாய் கயிறு ஒன்றினைக் கொண்டு வரச் சொல்லி அதனால் ஸிபில்லின் கைகளைக் கட்டினார்.

இப்போது பின்னால் நகர்ந்து வந்த அவர் சொன்னார்: ''எல்லாம் ரெடி.''

பெல்லா அதே வார்த்தைகளைத் திரும்பச் சொன்னார்: ''எல்லாம் ரெடி.''

என்னிடம் மிகத் தணிந்த குரலில் பேசினார் தெரஸா. ''இந்த சடங்குகளினால் உங்களுக்கு இதுல ஒண்ணும் பெரிய ஈடுபாடு உண்டாகியிருக்காதுனு நினைக்கிறேன்... சரியா? உங்களுக்கு இது அத்தனையும் ஸோஸோதான்... நான் சொல்றேன், நிச்சயமா! ஆனா உங்க கருத்துல ரொம்ப ஸ்திரமா இருந்துட வேண்டாம். சடங்குகள், வார்த்தைகளாலும் மந்திரங்களினாலும் காலகாலமா யுகம் யுகமா ஆக்கப்பட்டுள்ள இச்சடங்குகள், மனித ஆன்மாவின் மீது தனிப்பட்ட விளைவை உண்டு பண்ண வல்லவை. கூட்டத்துல ஜபிக்கும் போது அத்தனை பேரையும் ஒட்டுமொத்தமா எழுந்து ஆட வைக்குதே... கத்த வைக்குதே... அது எது? எதுவாகவோ இருந்துட்டுப் போகட்டும்... ஆனா

அப்படியொரு கதறல் ஒவ்வொரு ஜபக் கூட்டங்களிலும் இடம்பெறுதா இல்லையா? இந்த பழம் பெரும் சங்கதிகள், நம் மீது, ஒரு முக்கிய பங்கினை, தவிர்க்க இயலாத அத்தியாவசியமான முக்கிய பங்கினை வகிக்குதுனு நினைக்கிறேன்.''

அறையை விட்டு அகன்றிருந்த பெல்லா, தற்போது கையில் ஒரு வெள்ளைச் சேவலைத் தூக்கி வந்தாள். அது உயிருடன் விடுபட்டு ஓடத் துடித்துக் கொண்டிருந்தது.

அங்கிருந்த குத்து விளக்கு மற்றும் பித்தளை பேஸினைச் சுற்றி வெள்ளை சாக்பீஸால் கோல வடிவங்களை வரைய ஆரம்பித்தாள் பெல்லா. பேஸினைச் சுற்றிலும் வளைவாய் போன வெள்ளைக் கோட்டில் சேவலை குப்புற படுக்கப் போட்டாள் அவள். அது அங்கு அசைவற்றுக் கிடந்தது.

தாழ்வான கரகரப்பான குரலில் என்னவோ உச்சரித்துக் கொண்டே மேலும் சில கோலச் சின்னங்களை வரைந்தாள். சொன்ன வார்த்தைகள் என்னால் விளங்கிக் கொள்ள இயலாதவை... ஆனால் அவள் குனிந்தமர்ந்து நழுவியபடி வேலை பண்ணிக் கொண்டிருந்தபோது விளக்க முடியாத ஏதோவோர் ஆனந்தத்தில் இருப்பது புலப்பட்டது.

என்னைக் கவனித்தபடி தெரஸா சொன்னார்: ''இதெல்லாம் உங்களுக்கு ரொம்ப பிடிக்கலே போல தெரியுது... இதெல்லாம் புராதானமானவை, தெரியுமா? ரொம்ப பழையவை. மரண மந்திரங்கள்.'' வர்ணனையாளர் போன்ற ஒரு நிலையில்தான் இருந்தார் அவர்.

பெல்லா குத்து விளக்கினை நோக்கி கையை நீட்ட பிரகாசமான ஜ்வாலை ஒன்று உருவானது. அந்த ஜ்வாலைகளின் மீது அவள் எதையோ தெளிக்க அறையெங்கும் கமழும் மணம் சூழ்ந்தது.

''நாங்க தயார்'' என்றார் தெரஸா.

அறுவை சிகிச்சை நிபுணர் கத்தியைக் கையிலெடுத்துக் கொள்ளும் தருணம்...

நான் ரேடியோ கேபினட் என்று நினைத்துக் கொண்டிருந்த இடத்துக் குப் போனார் அவர். அது திறக்கப்பட, அது, நிறைய மின்சார உபகரணங்கள் கொண்டு தயாரிக்கப்பட்ட ஒரு சிக்கலான சாதனமாய் எனக்குத் தோன்றியது.

அது ட்ராலியைப் போல நகர, அதனை மெதுவாகவும் ஜாக்கிரதை யாகவும் நகர்த்திக் கொண்டு திவான் அருகே கொண்டு வந்து நிறுத்தினார்.

அதனருகே குனிந்தார்... சில கண்ட்ரோல்களைத் திருகினார்... அப்போது தனக்குத்தானே இவ்வாறெல்லாம் முணுமுணுத்துக் கொண்டார்.

''காம்பஸ்... வடக்கு - வடக்கு - கிழக்கு... டிகிரி... வலப்பக்கம்...'' கையுறையை எடுத்துக் கொண்ட அவர் அதனை ஒரு குறிப்பிட்ட நிலைக்கு நிலைப்படுத்தி வைத்தார். அதனருகே வயலெட் நிற விளக்கு ஒன்றினை சுவிட்ச் செய்தார்.

பிறகு அசைவற்று திவானில் உட்கார்ந்திருந்த உருவத்திடம் பேசினார்:

''ஸிபில் டயானா ஹெலன்... நீ உன்னுடைய உடலிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு விட்டாய். அந்த உன் உடலை மெக்கண்டல் ஜாக்கிரதையாய் உனக்காக பாதுகாப்பான். இந்த கையுறையின் சொந்தக்காரனிடம் போய் நிலைக்க நீ விடுவிக்கப்பட்டுள்ளாய். அனைத்து மனித உயிர்களைப் போலவும் வாழ்க்கையில் அவளுடைய குறிக்கோளும் மரணத்தை நோக்கித்தான். வேறெந்த இறுதி திருப்தியும் கிடையாது - *மரணத்தைத் தவிர.* மரணம் மட்டுமே அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வாகின்றது. மரணம் மட்டுமே உண்மையான அமைதியை... சாந்தத்தைத் தருகின்றது. எல்லா ஞானிகளுக்கும் இது தெரியும். வாழ்க்கை மற்றும் மரணம், வாழ்க்கை மற்றும் மரணம். ஆனால் இவ்விரண்டின் மிகப் பெரிய வரம்: மரணம்.''

இவ்வார்த்தைகள் சுற்றிச் சுற்றி வந்தன. எதிரொலித்தன. திரும்பத் திரும்ப. பெரிய பெட்டி போல இருந்த அமைப்பு சன்னமாய் 'ஹம்...' என்ற ஒலியெழுப்ப ஆரம்பித்திருந்தது. அதிலிருந்து விளக்குகள் ஒளிர்ந்தன. நான் அறையப்பட்டவனைப் போல் ஆனேன். நடப்பவற்றில் என்னை இழந்தேன். அப்படியெல்லாம் இல்லையென நான் முகமூடியிட்டு மறைக்க விரும்பவில்லை. அவருடைய முழு சக்தியும் அவிழ்த்து விடப்பட்ட நிலையிலிருந்த தெரஸா, திவானிலிருந்த உருவத்தை, முழுக்கவும் தனது கட்டுப்பாட்டுக்குள் ஓர் அடிமையென கொண்டு வந்திருந்தார். தெரஸா, ஸிபிலை உபயோகப்படுத்தினார். ஒரு தீர்மானிக்கப்பட்ட முடிவுக்கு அவளைப் பயன்படுத்தினார். மிஸஸ் ஓலிவர் எதற்காக அப்படி பயந்துப் போயிருந்தார் என்பதை இப்போது என்னால் உணர முடிந்தது. தெரஸாவுக்காக அவர் பயப்படவில்லை... இந்த ஸில்லி ஸிபில் படும் பாட்டுக்காக. ஸிபிலுக்கு சக்தி இருக்கின்றது. அது அவளுக்கு இயற்கையாய் கிடைத்துள்ள வரம். புத்திசாலித்தனம் அல்லது சாதுர்யம்

போன்ற எவற்றோடும் அதனை நாம் ஒப்பிட முடியாது. இது உடற்பலம்... தன்னை, தனது உடலிலிருந்து பிரித்தெடுக்கவல்ல பலம். அப்படி பிரித்தெடுக்கப்பட்ட பிறகு அவளுடைய புத்தி, அவளுடையதல்ல. அது, தெரஸாவுடையது. தனக்கு தற்காலிகமாய் சொந்தமாகியுள்ள அப்பொருளை தெரஸா பயன்படுத்தினார்.

இருக்கலாம்... ஆனால் அந்தப் பெட்டி? இந்த சம்பவங்களில் அந்தப் பெட்டி எங்கு பொருந்தி நிற்கின்றது?

இக் கேள்விகளால் திடீரென என் பயங்கள் அனைத்தும் அப்பெட்டி மீது குவிந்து நின்றன! இந்தப் பாழாய் போன பெட்டியால் அப்படி என்னதான் செயல்படுத்தப்படுகின்றது? ஒருவேளை ஏதாவது கதிர்கள் வெளியிடப்பட்டு அவை நேராய் மூளையின் செல்களைச் சென்றடைந்து ஆதிக்கம் பண்ணுமோ? அதாவது குறி வைத்து அனுப்பப்படும் ஒரு குறிப்பிட்ட மூளையை அம்பு போல் சென்றடைந்து...?

தெரஸாவின் குரல் தொடர்ந்துக் கொண்டிருந்தது.

''பலஹீனமான ஒரு குணம்... எப்போதும் பல்ஹீனமான ஒரு குணம் அல்லது உறுப்பு உடலில் இருக்கும்... அடியாழத்தில்... சதையின் அடியாழத்தில்... திசுவில். அந்த பலஹீனத்தால் வருகின்றது பலம்... பலமும், அதனால் நிகழும் மரணம் எனும் முழு அமைதியும்... மரணத்தை நோக்கி பிரயாணம்... மெதுவாய், இயற்கையாய், மரணத்தை நோக்கி... நிதர்சனமான பிரயாணமாய், இயற்கையான வகையில். உடலிலுள்ள திசுக்கள் மூளையின் கட்டளைக்கு அடிபணிபவை. ஆக அவற்றுக்கு கட்டளையிடு... அவற்றுக்கு கட்டளையிடு... 'மரணத்தை நோக்கி' என்று.. மரணம், அதுவே சுவீகரிப்பது... மரணம்... உடனே... உடனேயே... வெகு அருகாமையில்... மரணம்... மரணம்.. மரணம்..!''

அவருடைய குரல் வெடித்துச் சிதறும் கதறலாய் கதறியது. உடனே இன்னுமொரு தாளவொண்ணாத மிருகக் கதறல் பெல்லா திசையிலிருந்து விளைந்தது. அவள் எழுந்திருக்க, பளபளவென ஒரு கத்தி தென்பட்டது... கழுத்து திருகப்பட்ட சேவலின் கடைசி கிறீச்சிடல்கள்... ரத்தம்... பித்தளை பேஸினுள்ளே பொழிந்தது. அதனை அப்படியே தூக்கி பிடித்தபடி ஓடி வந்தாள் பெல்லா. ''ரத்தம்... ஓ, ரத்தம்... ***ரத்தம்!***''

தெரஸா மெஷினிலிருந்து க்ளவுஸை உருவினார். அதை பெல்லா வாங்கிக் கொண்டாள். ரத்தத்தில் முக்கினாள். அதனை மீண்டும்

தெரஸாவிடமே கொண்டு வந்து அவர் தர அவள் அதை எடுத்த இடத்திலேயே மீண்டும் கொண்டு போய் வைத்தார்.

சாமி வந்த தினுசில் மறுபடியும் பெல்லாவின் குரல் உயர்ந்து ஒலித்தது: ''ரத்தம்... ரத்தம்... ரத்தம்...''

விளக்கைச் சுற்றிச் சுற்றி அவள் ஓடினாள். பிறகு சுருண்டு தரையில் விழுந்து விட்டாள். துடிதுடித்தபடி அணைந்து விட்டது விளக்கு.

அங்கு தொடர்ந்து உட்கார முடியாத அளவுக்கு ஆனேன் நான். யாரும் கவனிக்காத தினுசில் என் கைகள் நானமர்ந்திருந்த நாற்காலியைக் கெட்டியாகக் கவ்வியிருக்க, என் தலையோ சுற்றோ சுற்றென சுற்றியது.

க்ளிக் என்ற ஓசையைக் கேட்டேன்...உடனே இயந்திரத்தின் ஹம்மிங் நின்றது.

பிறகு தெரஸாஸின் தெளிவான, அவருடைய சுயகட்டுப்பாட்டுக்குள் வந்திருந்த குரல் ஒலித்தது. ''பழைய மாந்திரீகமும் புதிய ஏற்பாடுகளும். நம்பிக்கை எனும் பழைய ஞானமும் அறிவியல் எனும் புதிய அறிவும். இரண்டும் ஒன்றோடொன்றாய் பிணைந்து நீடூழி வாழும்...''

அத்தியாயம் 18

மார்க் ஈஸ்ட்டர் – ப்ரூக் பதிந்தவை

''வெல்.. சொல்லு, எப்படியிருந்தது அது?'' - சொல்லித்தான் தீரவேண்டும் என்று ஆர்வமாய் கேட்டாள் ரூடா, காலை சிற்றுண்டியின் போது.

இஷ்டமில்லாதவன் போல, ''ஓ, வழக்கம்போலத்தான்'' என்றேன் நான்.

டெஸ்பேர்ட்டின் கண்கள் என் மீது பதிந்திருப்பதில் நான் சற்றே இருப்புக் கொள்ளாமல் தானிருந்தேன். விஷயம் தெரிந்த ஆசாமி.

''தரையில் வரையப்பட்ட பல முக்கோணங்கள், சதுரங்கள், அறுங்கோணங்கள்... ஆங்?''

''அது மாதிரி நிறைய.''

''ஏதாவது வெள்ளைச் சேவல்கள்?''

''நேச்சுரலி. சேவல் காவு இல்லாமலா? இது பெல்லா சார்ந்த வேடிக்கைகள்.''

''ஆவி வந்த காட்சி... அதோட பேட்டி...''

''ஆங், நீ சொல்வது மாதிரியே: ஆவி வந்த காட்சி... அதோட பேட்டி...''

ரூடா ஏமாற்றமாய் பார்த்தாள்.

''உனக்கு அது எவ்விதமான ஈடுபாட்டையும் ஏற்படுத்தலே போல'' - வெறுப்பாய் சொன்னாள் அவள்.

நடந்த இந்த அத்தனையும் ஒண்ணுமில்லாத விஷயத்தைப் பெரிது படுத்திக் காட்டும் லீலைகள் என்று சொன்னேன் நான். எப்படியோ எனக்கிருந்த ஆர்வம் தீர்க்கப்பட்டது என்று முடித்தேன்.

பிறகு, ரூடா கிளம்பி கிச்சன் பக்கமாய் சென்று விட்டதும், டெஸ்பேர்ட் என்னிடம் கேட்டார்: ''அது உன்னைக் கொஞ்சமா உலுக்கத்தான் செஞ்சது, இல்லையா?''

''வெல்...''

நடந்த அனைத்தையும் என்னைப் பொறுத்தமட்டில் உப்புச்சப்பற்றவை என்றுதான் விளக்க நினைத்தேன்...ஆனால் சுலபமாய் ஏமாற்றிவிட வல்லவர் கிடையாது டெஸ்பேர்ட்.

நான் மெதுவாய் சொன்னேன்: ''ஒரு வகையிலே - நான் சற்று ஓ, ஆடித்தான்...''

ஒப்புதலாய் தலையசைத்தார் அவர். ''அவ்வளவு சீக்கிரம் அதை யாரும் நம்பி விடுவது கிடையாது'' என்றார் டெஸ்பேர்ட். ''அதாவது ஒருத்தனுடைய பகுத்தறிவை வெச்சுக்கிட்டு இதுக்கு அர்த்தம் கண்டு விட முடியாதுனு சொல்ல வந்தேன். ஆனா இதுக்குனு விளைவுகள் இருக்கு. அவ்விளைவுகள் பற்றி நான் கிழக்கு ஆப்பிரிக்காவில் போதுமெனும் அளவுக்கு பார்த்திருக்கேன். அங்கெல்லாம் சூனியக்கார நிபுணர்கள் மக்களை அவங்க கட்டுப்பாட்டுக்குள் கட்டி வெச்சிருந்தாங்க. விளக்க முடியாத விஷயங்கள் நடக்குது என்பதையும் அதையெல்லாம் விலாவாரியா சமன்பாடுகள் எழுதி விளக்க முடியாது என்பதையும் நாம ஒத்துக்கிட்டுத்தான் ஆகணும்.''

''மரணங்கள் கூடவா?''

''ஓ, யெஸ். மரணங்களும். ஒரு மனிதன், இவனுங்களால அவன் சாகணும்னு குறி வைக்கப்படும்போது, *சாகறான்.*''

''அப்படியோர் எண்ணத்தை - அதாவது சாகணும் எனும் எண்ணத்தை - மனசுல ஏற்றுவதால்... அப்படித்தானே?''

''இருக்கலாம்.''

''அப்ப நான் சொன்ன விளக்கம் உங்களுக்கே திருப்தியாயில்லேனு படுது...''

''நோ. முழுக்க ஏத்துக்க முடியாத நிலை. நமது மேலை நாட்டு அறிவியல் தியரிகளால விளக்கவே முடியாத கேஸ்கள் இருக்கு. மார்க், ஏனோ இந்த மாந்தரீகம் எல்லாம் ஐரோப்பாகாரன்கள் மேல வேலை பண்ண மாட்டேங்குது - ஆனாலும் சிலர் அழிஞ்சிருப்பதை நான் கேள்விப்பட்டிருக்கேன். பார்த்திருக்கேன். ஆனா இதன் மீது ஒரு நம்பிக்கை

உன் ரத்தத்துல கலந்தாச்சுனா, அதை எடுக்க முடியாது!'' – இந்த இடத்தில் அப்படியே விட்டு விட்டார்.

நான் சிந்தனையாய் பேச ஆரம்பித்தேன்: ''கட்டுரை எழுதி விளக்கும் அளவுக்கு இது அறியப்படாத ஒரு ரகசியம் என்பதுல உங்களோட நான் ஒத்து வரேன். இங்கேயும், இந்த இங்கிலாந்து மண்ணிலும், விளக்கவே முடியாத அமானுஷ்யங்கள் நடந்துக்கிட்டுதானிருக்கு. லண்டன்ல ஒரு மருத்துவமனையில நானிருந்தேன். ஒரு பொண்ணு உள்ளே வந்தா. நரம்பு சம்பந்தப்பட்ட பிரச்சினை. கை கால் எல்லாம் குடைச்சல்னா. அவ சொல்வதற்கு காரணமா ஒரு எழவும் கிடையாது. இப்படியெல்லாம் இருக்குனு தனக்குத்தானே சொல்லிக்கட்டலையும் மன நோய் பிடிச்சவ - ஹிஸ்டீரியா - அப்படி சந்தேகப்பட்டாங்க ஆஸ்பத்திரியில. செக்கச் செவக்க கொதிக்கும் இரும்புக் கம்பியை அவ கையில இழுப்பது ஒண்ணுதான் இதுக்கு சிகிச்சைனார் டாக்டர். இதை முயற்சி பண்ணிப் பார்க்க அவ ஒத்துப்பாளா? ஒத்துக்கிட்டா.

''தலையைத் திருப்பிக்கிட்டு கண்களை இறுக்கமா மூடிக்கிட்டா அவ. ஒரு கண்ணாடி கழியை ஐஸ் தண்ணில முக்கிய டாக்டர் அதை அப்படியே அவளோட உள்ளங்கைல வெச்சு இழுத்தார். கதறிக் கத்தினா அந்தப் பொண்ணு. 'இனிமே உனக்கு எல்லாம் சரியாயிடும்'னார் டாக்டர். 'நான் நம்பறேன். ஆனா சிகிச்சையைத் தாள முடியலே, வெந்துடுச்சு'. இதுல எனக்கு விளங்காத ஒண்ணு, அவளுக்கு சூடு போடப்பட்டதுன்னு அவ நம்பினது கிடையாது. ஆனா அவளோட உள்ளங்கைல சர்வ நிச்சயமா வெந்தக் காயம் உண்டானதுதான். கழிபட்ட இடங்களிலெல்லாம் உள்ளங்கை வெந்திருந்தது. ஆனா அந்தக் கம்போ ஒரு ஐஸ் கம்பு!''

''சிகிச்சை பலனளிச்சதா?'' - டெஸ்பேர்ட் ஆர்வமாய் கேட்டார்.

''ஓ, யெஸ். நரம்பு வியாதியோ அது என்னவோ... ஆனா அந்த கம்போ ஒரு ஐஸ் கம்பு! அவளுக்கு திருப்பி வரவேயில்லை. அவ கைல ஏற்பட்ட தீக்காயத்துக்குத்தான், அம்ப்கொர்ஸ் சிகிச்சை தேவைப்பட்டது.''

''அசாதாரணம்'' என்றார் டெஸ்பேர்ட். ''இதுவே சிறந்த உதாரணமா முன்னால வருது...''

''யெஸ். டாக்டரே மூர்ச்சையாகி நின்னார்னா பார்த்துக்குங்க.''

என்னை ஆர்வமாய் பார்த்தபடி, ''பின்னே, மயக்கமாக இருப்பாரா?'' என்றார்.

''நேற்று அந்த ஆவிக் கூட்டத்துக்குப் போயே தீரணும்னு நீ எதுக்கு அவ்ளோ பிடிவாதமா இருந்தே?''

நான் என் தோள்களைக் குலுக்கிக் காட்டினேன். ''அந்த மூணு பொம்பிளைங்க - எனக்குள்ளே அந்த ஆர்வத்தைத் தூண்டினாங்க. என்ன மாதிரி ஷோ நடத்தறாங்கனு பார்க்க ஓர் ஆவல். எனக்குள்ளே.''

இதற்கு மேல் டெஸ்பேர்ட் ஒன்றும் பேசவில்லை. நான் சொன்னதை அவர் நம்பியதாய் தெரியவில்லை. நான் முன்னமேயே சொன்னது மாதிரி அவர் விஷயந் தெரிந்த ஓர் ஆசாமி.

தற்சமயம் நான் மதகுருவின் வீட்டுக்குக் கிளம்பியிருந்தேன். கதவு திறந்திருந்தது. ஆனால் உள்ளே எவரும் இருப்பதாய் தோன்றவில்லை.

டெலிபோன் இருந்த சின்ன அறைக்குப் போன நான் ஜிஞ்ஜருக்குப் போன் போட்டேன். அவளுடைய குரலைக் கேட்குமுன் ஒரு யுகம் நகர்ந்துப் போனது போலானது.

''ஹல்லோ!''

''ஜிஞ்ஜர்?''

''ஓ, நீங்களா? என்ன நடந்தது?''

''உனக்கு ஒண்ணுமில்லையே?''

''நான் நல்லாத்தான் இருக்கேன். என்ன வர்ற போகுது எனக்கு?''

நிம்மதி அலைகள் என்னை மூடின.

ஜிஞ்ஜருக்கு ஒன்றும் ஆகவில்லை. அவளுக்கே உரிய அந்த பிரபலமான தன்னம்பிக்கை எனக்கு நிவாரணமாய் அமைந்தது. சும்மா ஓதப்படும் மந்திரங்களெல்லாம் இப்படிப்பட்ட ஒரு முழு ஆரோக்கிய ஜீவனைத் தாக்கும் என நான் எப்படி நம்பலாம்?

''ஏதாவது கெட்ட சொப்பனம் பார்த்திருப்பியோனு...'' இழுத்தேன் நான்.

''வெல், நானும் எதிர்பார்த்தேன். அப்படியெல்லாம் எதுவும் பார்க்கலே. ஆனாலும், நான் எழுந்ததும், எனக்குள்ளே ஏதாவது மாறுதல்கள் உண்டாகியிருக்கானு நானே தேடும்படி ஆனதென்னவோ உண்மை. எதுவும் ஆகலையேனு தெரிஞ்சதும் அப்படி எரிச்சல் வந்தது.''

நான் சிரித்து விட்டேன்.

''ஆனா, நீங்க நிறுத்தாதீங்க. சொல்லுங்க'' என்றாள் ஜிஞ்ஜர். ''என்ன நடக்குது அங்கே?''

''சாதாரணமா நாம கேள்விப்படுவதைத் தவிர்த்து ஒண்ணும் கிடையாது. பர்பிள் நிற கட்டில்ல உட்கார்ந்த ஸிபில் ஆவியுலகத்துக்குப் போனா...''

பட்டென்று வெடித்த சிரிப்பு ஜிஞ்ஜரிடமிருந்து விளைந்தது. ''வெறும் வெல்வெட் விரிப்புத்தானே அது? அதன் மேல் வேற ஒண்ணும் இல்லே?''

''பெரிய மகாராணி பாரு அவ! சொல்லப் போனா அவதான் விதம் விதமா உடையணிஞ்சிருந்தா. மயில் நிற துணி... அதுல விதம் விதமான சின்னங்களின் வரைவு...''

''ஸிபில் போன்ற ஜென்மங்களுக்கு அதெல்லாம்தான் பொருத்த மாயிருக்கும். இந்த பெல்லா என்ன பண்ணிச்சு?''

''அது ரொம்ப நாராசமானதுப்பா. இவ ஒரு வெள்ளைச் சேவலைக் கொன்னுட்டு அந்த ரத்தத்துல உன்னோட கையுறையை முக்கினா.''

''ஓ, கர்மம். வேற?''

''இப்படி நிறைய.''

நான் சரியாய் சொல்லிக் கொண்டிருப்பதாய் உணர்ந்த நான், தொடரலானேன்: ''அங்கே என்னென்ன நடக்கும் என்பதன் முழு காட்சி விளக்கத்தையும் எனக்கு காட்டினா தெரஸா. மெக்கண்டல்னு நினைக்கிறேன்... இந்த பெயரினாலான ஆவியை வர வெச்சா. வண்ண விளக்குகள்... மந்திர உச்சாடனங்கள்... இதெல்லாம் இருந்தன. இதெல்லாம் எதிர்பார்த்து வரும் ஆளுங்களுக்கு உற்சாகக் கொண்டாட்டமா இருந்திருக்கும்.''

''ஆனா அது உங்களை பயமுறுத்தலே, ஆங்?''

''பெல்லா என்னைக் கொஞ்சம் ஆட்டினா'' என்றேன் நான். ''பயமுறுத்தும் ஒரு கத்தியை வெச்சிருந்தா. அவ நிலைமை தடுமாறி சேவலுக்கு அடுத்ததா என்னை காவு கொடுப்பானு நான் நினைக்கும்படி நடந்துக்கிட்டா..''

ஜிஞ்ஜர் தொணதொணத்தாள். ''வேற எதுவும் உங்களை பயமுறுத்தலையா?''

''எதுவும் என்னைக் கட்டுப்படுத்தும்படி நான் அனுமதிக்கலே.''

''அப்படினா நான் நல்லா இருக்கேன்னு கேட்டதும் நீங்க ஏன் அத்தனை நிம்மதி அடைஞ்சவரா நடந்துக்கிட்டீங்க?''

''வெல், ஏன்னா...'' இங்கு நான் நிறுத்தினேன்.

''ஆல் ரைட்'' என்றாள் ஜிஞ்ஜர், என் நிலையை ஏற்றுக் கொள்ளும் விதமாய். ''நீங்க நான் கேட்ட கேள்விக்குப் பதில் தர வேண்டாம். அதுக்காக, அமுக்கி வாசிக்கலாம்னு நினைச்சுக்கிட்டு, வேற ஏதாவது காரணத்தை சிருஷ்டி பண்ணிடாதீங்க. அங்கே எதுவோ உங்க கவனத்தை இழுத்திருக்கு.''

''ஒண்ணே ஒண்ணுதான். அவளுங்க - குறிப்பா, தெரஸாவைச் சொல்றேன் - நிச்சயம் ரிஸல்ட் கிடைக்கும்னு சாந்தமாகவும் நம்பிக்கையாகவும் இருப்பதா படுது.''

''நிச்சயமா ஓர் ஆளைக் கொல்ல முடியும்னு நீங்க என்கிட்டே சொல்லியிருந்த அவளுங்களோட கண்கட்டு வித்தை மேல, அவளுங்க நம்பிக்கையா இருக்காங்கனு சொல்ல வரீங்களா?''

ஜிஞ்ஜரின் குரல் இப்போது நம்பிக்கை துளியும் அற்று ஒலித்தது.

''வேற?''

''பெல்லாவும்தானே நம்பிக்கையா இருந்தா?''

இக்கேள்விக்கு நான் முக்கியத்துவம் அளித்தேன். பேசினேன். ''எனக்கென்னவோ, சேவல்களைக் கொல்லுவதை ஒரு கொண்டாட்டமாகவும் துர்தேவதைகளைச் சாந்தப்படுத்துவதில் தன்னை வலுக்கட்டாயமா அவ புகுத்திக் கொள்வதாகவும் தோணுது. 'ரத்தம் ரத்தம்'னு அவ கத்தினது வித்தியாசமா இருந்ததுங்கறேன்...''

''நான் அதை கேட்க முடியாமா போயிடுச்சே'' - நிராசையாய் சொன்னாள் அவள்.

''நீ அதைக் கேட்டிருக்கணும்'' என்றேன் நான். ''அந்த முழு நிகழ்வும் ஒரு செமத்தியான மேடைக் காட்சி.''

''நீங்க இப்ப நல்லாத்தானே இருக்கீங்க, என்ன?'' என்று கேட்டாள் ஜிஞ்ஜர்.

''என்ன சொல்றே நீ? நல்லாத்தானே இருக்கீங்க, அப்படினா?''

''நீங்க போன் பண்ணினபோது நல்லா இல்லே... இப்ப நல்லா இருக்கீங்க.''

அவளுடைய கருத்து ரொம்ப சரி. அவளுடைய குதூகலான குரல் எனக்குள் வித்தைகளைச் செய்து விட்டது. எனக்குள் ரகசியமாக, என்னை அரித்துக் கொண்டிருந்த தெரஸா க்ரே எனும் வலியை அகற்றி விட்டேன்.

முழுக்கவும் ஏமாற்று வேலையாயிருந்த போதிலும் கூட, அங்கு நடக்கும் அனைத்தும், சந்தேகங்களாலும் ஊகங்களாலும் என் மூளையைக் கசாப்புக் கடையாக்கியிருந்தன. ஆனால் இப்போது அது எதுவும் என்னை பாதிக்காது. ஜிஞ்ஜர் நன்றாக இருக்கிறாள்- ஒரு கெட்ட கனவு கட இல்லை எனும் அளவுக்கு.

''ம், நாம அடுத்து என்ன பண்ணனும்?'' என்று அதிகாரமிட்டாள் ஜிஞ்ஜர். ''இன்னும் ஒரு வாரத்துக்கு நான் என்ன இங்கேயே தங்கியாகணுமா?''

''தேவையானு தெரியலே. நீ ரூடா கூடவா தங்கியிருக்கே?''

''அப்பப்போ. அப்புறம் போர்ன் மவுத்துக்குப் போயிடுவேன். தினமும் நீங்க எனக்கு போன் போடணும், மறந்துடாதீங்க. மறந்துட்டீங்கன்னா - நான் போன் போடுவேன், உங்களுக்கு.''

''நான் இப்ப மதகுரு வீட்டிலிருந்துதான் பண்றேன்.''

''எப்படியிருக்காங்க மேடம்?''

''நல்லா. நான் அவங்ககிட்டே எல்லாத்தையும் சொல்லிட்டேன்.''

''நீங்க சொல்லியிருப்பீங்கன்னு எனக்குத் தெரியும். வெல், இப்போதைக்கு குட் பை. அடுத்த ஓரிரு வாரங்களுக்கு வாழக்கையே போராடிக்கப் போகுது. சில முடிக்க வேண்டிய வேலைகளை வெச்சிருக்கேன். படிக்கனு நிறைய புத்தகங்கள்.''

''உன்னோட ஆபீஸ்ல என்ன நினைச்சுக்கிட்டிருக்காங்க?''

''நான் ஒரு கப்பல்ல பிரயாணம் போயிருக்கேன்னு!''

''அப்படித்தான் இப்ப நீ அடைஞ்சுக்கிடக்கேனு உனக்கு தோணலியா?''

''சொல்ல முடியாது'' என்றாள் ஜிஞ்ஜர். அவளது குரல் சின்னதாய் விளங்கிக் கொள்ள முடியாமல் தொனித்தது.

''சந்தேகப்படும்படியா புது ஆட்கள் யாரும் உன்னை சந்திக்கலையா?''

''இப்படித்தான் உங்களுக்கு எப்பவும் நினைப்பு? பால்காரன், கேஸ்காரன், என்ன செண்ட் உபயோகிப்படுத்துறேன்னு விசாரிச்சுக்கிட்டு வந்த ஒரே சேல்ஸ் உமன், அணுகுண்டை ஒழிக்கணும்னு என் சம்மதத்தைக் கேட்டு கையெழுத்துக்காக ஒரு தாளை நீட்டிய ஆசாமி, மேலும் கண்ணிழந்தவர்களுக்காக சந்தா கேட்டு வந்த ஒரு பெண், போதுமா? ஆங்,

அப்புறம், இந்த ஃப்ளாட்டின் பல வேலைக்காரர்கள் ரொம்ப உதவிகரமா இருக்காங்க.''

''ஆபத்தற்றவங்களாத்தானே தெரியுது?''

''ப்ச்.. நீங்க என்ன எதிர்பார்த்தீங்க?''

''என்ன எதிர்பார்த்தேன்னு எனக்கே சொல்லத் தெரியலே.''

சொன்ன நபர்களை விடவும் வேறுபட்ட ஒருவரை நான் எதிர்பார்த்திருந்தேன்... ஆனால் *வெளிறிய குதிரையால்* குறி வைக்கப்பட்ட அனைவரும் இயற்கையான முறையில் அல்லவா செத்திருக்கின்றார்கள்? இங்கு இயற்கையான முறையில் என்று நான் வார்த்தையை உபயோகப்படுத்தக் கூடாது. இயற்கையாய் உடல் பலஹீனம் ஆகுமாறு அவர்களுக்குள் ஏதோ ஒரு முறையில் விதை ஒன்று ஊன்றப்படுகின்றது. அது என்ன முறை என்பதுதான் நான் இதுவரை அறியாதது.

''ஓ, என்னைப் பார்க்க இன்னொருத்தரும் வந்திருந்தாரே'' என்றாள் ஜிஞ்ஜர். ''உங்க ஃப்ரண்ட். டாக்டர் காரிகன். நுணுக்கமா இருக்கார்.''

''லெஜன் அவரை அனுப்பியிருக்கணும்.''

''பெயரை வெச்சுக்கிட்டு துரத்திக்கிட்டிருக்கேன்னு சொன்னார் அவர். காரிகன்கள்!''

உள்ளத்தால் அமைதியாகியிருந்த நான் இணைப்பைத் துண்டித்தேன்.

ரேழியில் ஒரு நாயுடன் பிஸியாயிருந்த நிலையில் ரூடாவைப் பிடித்தேன். அதற்கு ஏதோ மருந்து போட்டுக் கொண்டிருந்தாள் அவள்.

''இப்பத்தான் வெர்ட்டினரி டாக்டர் கிளம்பிப் போனார்'' என்றாள் அவள். ''வட்டப் புழுவாம். விடாம பிடிச்சிக்கிட்டிருக்குங்க. குழந்தைகளுக்கு இது பரவுதோ இல்ல மற்ற நாய்களுக்கு இது பரவுவதோ... எனக்குப் பிடிக்கலே.''

''பெரியவங்களுக்கும்தான்.''

''ஓ, ஆனா இது குழந்தைகளைத்தான் தாக்கும். நல்ல வேளையா நாள் முழுக்க அதுங்க ஸ்கூல்லேயே இருந்துடுதுங்க. சும்மா இரு, ஷீலா. துள்ளாதே. ஆங்... இந்த மருந்து ரோமங்களை உதிர வைக்குது. அங்கங்கே வழுக்கை விழுந்த மாதிரி ஆகிடும். ஆனா கொஞ்ச நாள்ல வளர்ந்துடும்னு வைங்க.''

நான் ஒப்புதலாய் தலையசைத்தேன். உதவ விழைந்தேன். மறுக்கப் பட்டேன். இதற்கு நன்றி தெரிவித்துக் கொண்டேன். சுற்றக் கிளம்பினேன்.

கிராமங்களின் சாபமாக நான் கருதுவது இதைத்தான். ஓரிடத்தை அடைய மூன்று வெவ்வேறு திசைகளில் போவதற்கு வழிவகை இருக்கும். *மச் டீப்பிங்கிலும்* அப்படித்தான். இரண்டு மைல்கள் தள்ளி அந்தாண்டையிருக்கும் லண்டன் - போர்ன் மவுத் பிரதான சாலையை அடைய மூன்று வழிகள் உண்டு. கார்சிங்டன் சாலை, லாங் சாலை மற்றும் ஷட் -ஹேங்கர் சாலை.

தொடர்ந்த மறுநாளில் லஞ்ச் வேளையில் கார்சிங்டன் சாலை மற்றும் லாங் சாலை ஆகிய சாலைகளை நோட்டமிட்டேன். ஷட் - ஹேங்கர் சாலை அடுத்து.

கிளம்பினேன். வழியில் ஓர் புது ஐடியா உதித்தது. ப்ரியர்ஸ் கோர்ட்டின் நுழைவில்தான் ஷட்- ஹேங்கர் சாலை திறந்தது. நான் ஏன் இப்போது உள்ளே போய் மிஸ்டர் வெனபிள்ளைப் பார்க்கக் கூடாது?

இக்கேள்விக்கு நான் அதிகம் முக்கியத்துவம் தரத் தர, இந்த ஐடியா எனக்கு அதிகமாய் பிடிக்கவும் செய்தது. நான் ஏற்கனவே இங்கு தங்கியிருந்தபோது ரூடா என்னை உள்ளே அழைத்துப் போயிருப்பதால் இப்போது நான் மீண்டும் ஒருமுறை உள்ளே போவதில் எவ்விதமான சந்தேகங்களும் விளைந்து விடப் போவதில்லை. சொல்லப் போனால், அந்த முந்தைய அறிமுகத்தால், இப்போது நான் உள்ளே நுழைவது சுலபமான ஒன்றாகவும் இயற்கையான ஒன்றாகவுமே அமையும். உள்ளே போய், சென்ற முறை அவசரத்தில் என்னிடம் காட்ட முடியாமல் போன ஏதாவது குறிப்பிடும்படியான முக்கிய பொருளிருந்தால் அதனைக் காட்டும்படியும் கேட்கலாம்.

வெனபிள்ளை அடையாளம் கண்ட அந்த கெமிஸ்ட் - அவன் பேர் என்ன? ஓக்டன்? ஓஸ்பார்ன்? இது வேறு ஒரு பக்கம் என்னை ஈர்த்துள்ளது. வெனபிள்ளின் நடக்கயியலா ஊனத்தால், ஃபாதரைப் பின் தொடர்ந்தவனாய் நாங்கள் தேடிக் கொண்டிருக்கும் ஆசாமி நிச்சயமாய் வெனபிள்ளாய் இருக்க முடியாது என்ற லெஜனின் கருத்து ஒரு பக்கம் இருக்கட்டும்... இருந்தாலும் அங்கு அக்கம் பக்கத்தில், அப்படியே வெனபிள்ளைப் போன்ற குணாதிசயத்தில்அம்சமாய் பொருந்தி வாழ்ந்துக் கொண்டிருக்கும் ஓர் ஆளைத் 'தப்பாய் அடையாளம் காணப்பட்டுள்ளது' என்று சொல்வது, என்னை ரொம்பவும் நெருடியது.

வெனபிள் விஷயத்தில் என்னவோ மர்மம் இருக்கின்றது. இதை நான் ஆரம்பத்திலேயே உணர்ந்தேன். அவருக்கு புத்தி கூர்மை மிதமிஞ்சி இருக்கின்றது என்பதில் நான் சர்வ நிச்சயமாய் இருக்கிறேன். மேலும் அவரைப் பற்றி ஏதோ இருக்கின்றது. ஆங்... ஆங்... இதை விளக்க நான் என்ன வார்த்தையைப் போடுவது? - நரித்தனமுள்ள... உபாயமுள்ள... தந்திரமுள்ள.. யெஸ், இப்படி சொல்லலாம்: சூறையாடுந் தன்மை - அழித்து விடும் தன்மை. அவர், ஒரு கொலையைச் செய்வதில் புத்திசாலித்தனமாய் இல்லாமலிருக்கலாம். ஆனால், அவர் நினைத்தால், ஒரு கொலையை நிகழ்த்த வெகு அற்புதமாய் ஏற்பாடுகள் பண்ணவல்லவர்.

இதையெல்லாம் வைத்து பார்த்தபோது என்னால் வெனபிள்ளை நடப்பவற்றில் மிக நேர்த்தியாக பொருத்த முடிந்தது. அனைத்துக் காட்சிகளுக்கும் பின்னால் இயங்கும் மூளை. ஆனால், இந்த கெமிஸ்ட் பயல் ஒஸ்பார்ன் அடித்து சொல்கின்றானே: 'லண்டன் தெருவில் நடந்து போன வெனபிள்ளை நான் பார்த்தேன்.' இது நடக்கவே இயலாத அசாதாரணம் என்பதாலும், ஆகவே கெமிஸ்ட் அடையாளம் கண்டது பிரயோஜனமற்ற ஒன்று என்று ஆகிவிடுவதாலும், *வெளிறிய குதிரைக்குப்* பக்கத்திலேயே வெனபிள் வாழ்ந்தார் என்பது அர்த்தமற்றதாகி விடுகின்றது.

இத்தனையிருந்தாலும் இன்னொரு முறை மிஸ்டர் வெனபிள்ளைப் பார்த்து விடுவது என்று முடி வெடுத்துக் கொண்டேன். இதனால் நடந்தபடி அப்படியே ப்ரியர்ஸ் கோர்ட்டுக்குள் நுழைந்தேன் நான். வளைந்து சுழிந்து அரை மைல் போல தள்ளி உள்ளடங்கியிருந்த வீட்டுக்கு இட்டுச் சென்ற பாதையில் நடந்தேன்.

அதே வேலைக்காரன் வாசலில் வந்து, மிஸ்டர் வெனபிள் வீட்டிலிருப்பதாய் சொன்னான். உள்ளே போன அவன், சில நொடிகள் கழித்து திரும்பி வந்து, வெனபிள் என்னைச் சந்திக்க மிகவும் ஆர்வமாய் இருப்பதாய் குறிப்பிட்டான்.

உளமார்ந்த வரவேற்பினை எனக்களித்தார் வெனபிள். சக்கர நாற்காலியைத் தானாய் தள்ளிக் கொண்டு முன் வந்து பழைய நண்பனை அழைக்கும் மகிழ்ச்சியோடு வரவேற்றார்.

''என்னைப் பார்க்கணும்னு வந்திருப்பது, உங்க நல்ல குணத்தைக் காட்டுது டியர். நீங்க இங்கே மறுபடியும் வந்திருப்பதாகவும், டியர் ரூடாவுக்கு போன் போட்டு ராத்திரி டின்னருக்கு எல்லாரும் சேர்ந்து இங்கே வர ஏற்பாடு பண்ணப் போவதாகவும் கேள்விப்பட்டேன்...''

திடுதிப்பென்று இங்ஙனமாய் உள்ளே நுழைந்து விட்டதற்கு எக்ஸ்கியூஸ் சொன்ன நான், உள்ளுக்குள் எழுந்த ஒரு வேகத்தால் நுழைந்து விட்டேன் என்றேன். சிறுநடை போய்க் கொண்டிருந்ததையும், அப்போது இவருடைய கேட்டினைப் பார்த்ததையும், உடனே திறந்துக் கொண்டு நுழைந்து விட்டதையும் சின்னதாய் விளக்கினேன்.

''உங்களுடைய முகலாய கலெக்ஷன்களை இன்னொரு முறை நான் பார்க்கணும்'' என்றேன். ''அன்னிக்கு வந்தபோது அனைத்தையும் பார்க்கும் உகந்த அவகாசம் அமையலே...''

''ஆமாம், அப்படித்தான் ஆச்சு. நீங்க அதைப் பாராட்டுவதுல நான் மகிழ்கிறேன். அத்தனை பாரம்பரியம் மிக்கவை அவை...''

இதற்கு பிறகு எங்களுடைய உரையாடல் முழுக்கவும் டெக்னிக்கலாக நீண்டது. அவர் தன்னகத்தே சேமித்து வைத்திருந்த ஒரு சில ஆச்சரியமான பொக்கிஷங்களை நான் மிக அருகாமையில் போய் பார்த்து பிரமிக்கும் வாய்ப்புக் கிட்டியதைக் கொண்டாடினேன் என்றுதான் சொல்ல வேண்டும்.

பிறகு உள்ளே டீ கொண்டு வரப்பட அதை நான் பகிர்ந்துக் கொண்டே ஆக வேண்டும் என பிடிவாதம் பண்ணினார்.

டீ எனக்கு பிடித்த ஒரு பானமில்லா விட்டாலும் சுடச் சுட, ஆவி பறக்க வந்த சைனா டீயையும் அவை பரிமாறப்பட்ட நுட்பமான கோப்பை களையும் நான் ரசித்தேன். என் பாட்டி வீட்டில் சின்னப் பொழுதில் சாப்பிட்ட ஞாபகத்தைத் தூண்டி விட்ட வறுத்த ரொட்டியும் ப்ளம் கேக்கும் கூடவே.

''வீட்டுல பண்ணியிருக்கு'' என்றேன் நான் பாராட்டியபடி.

''நேச்சுரலி! வெளியில் வாங்கப்படும் கேக் இந்த வீட்டுக்குள்ளே நுழையாது.''

''அருமையான சமையல்காரன் உங்களுக்கு இருப்பது எனக்கு தெரியும். ஆனா, எல்லாவற்றிலிருந்தும் விலகி தனியா நீங்க இருப்பதைப் போலவே பணியாட்களும் உங்களுக்கு அமைவது கஷ்டமாயில்லே?''

வெனபிள் தோள்களைக் குலுக்கிக் கொண்டார். ''எனக்கு பெஸ்ட் கிடைச்சாகணும். இதுல நான் பிடிவாதமா இருப்பேன். நேச்சுரலி, இதுக்கு சம்பளம் நிறைய தந்தாகணும் - நான் தர்றேன்.''

இம்மனிதனுக்குள் இயற்கையாய் புதைந்துள்ள குரூரம் இங்கு வெளிப்பட்டது. நான் வறட்சியாய் சொன்னேன்: ''இப்படி ஒருத்தனால

பணத்தால வாயை அடைக்க முடியும்னா, அது, அவனுக்கு எல்லா பிரச்சினைகளையும் தீர்த்துத் தந்துடும்.''

''ஒருத்தனுக்கு என்ன தேவைப்படுது என்பதைப் பொறுத்தது அது, தெரியுமா! அடையணும் என்பதுல ஒருத்தனுடைய தாகம் தணிக்க முடியாத அளவுக்கு ஸ்ட்ராங்கா இருக்கணும் - இதுதான் இதுல முக்கியம். பணம் தங்களுக்கு என்ன பண்ணித் தரணும் என்ற இலக்கே இல்லாம பலர் பணம் பண்ணிக்கிட்டிருக்காங்க! அதனால வெறும் பணம் பண்ணும் இயந்திரமா ஆகிடறாங்க அவங்க. அவங்கள்லாம் அடிமைகள். ஆபீஸுக்கு சீக்கிரமாவே போய் அங்கிருந்து காலந்தாழ்த்திக் கிளம்பி வந்து பணம் மட்டும் பண்ணுவாங்க - ஆனா, வாழ்க்கையை என்ஜாய் பண்ண கொஞ்ச நேரம் இளைப்பாற மாட்டாங்க. அப்ப எதுக்காக, அத்தனை பணம் பண்றாங்க? பெரிய கார் வாங்க, பெரிய வீடு வாங்க, நல்ல சம்பளம் தந்து வேலை வாங்க, பொஞ்சாதியை அழகு பண்ண - இது ஒரு பெரிய தலைவலி.''

முன்னால் வளைந்து வந்த அவர் சொன்னார்: ''ஜஸ்ட் பணம் பண்ணுவது - இது மட்டுந்தான் பற்பல பணக்காரர்களுக்கு சம்பாத்தியம் என்பதன் முதலும் முடிவும். அந்த அத்தனை பணத்தையும் கொண்டு போய் நிறுவனங்களில் நட்டுவெச்சு, மேலும்அதை பெருக்குவாங்க. எதற்காக? எதுக்காகனு கேட்டுக்க ஒரு முறையாவது அவங்க முயன்றிருப்பாங்களா? ம்ம்...''

''நீங்க முயன்றிருக்கீங்களா?'' - நான் கேட்டேன்.

''நான்...'' சிரித்தார் அவர். ''எனக்கு என்னெல்லாம் வேணும்னு எனக்கு தெரியும். இயற்கையாகவும் செயற்கையாகவும் உலகம் முழுக்க நிரம்பியுள்ள அழகழகான சமாச்சாரங்களை வாங்குவது. இதெல்லாம் நிரம்பிக் கிடக்கும் இயற்கை பிரதேசங்களுக்குப் போய்வரும் சுதந்திரம் எனக்கு மறுக்கப்பட்டிருப்பதால், உலகெங்கிலுமிருந்து அவற்றை நான் என் இடத்துக்குக் கொண்டு வந்துக்கிட்டேன்.''

''ஆனா, இது நடப்பதற்கு, பணம் முன்கூட்டியே வந்தாகணும்.''

''யெஸ், நினைச்சது கிடைக்க ஒருத்தன் திட்டம் போட்டாகணும். அது ஒரு பெரிய திட்டமிடலா அமையும். ஆனா, இப்பல்லாம், பணப் பைத்தியம் பிடிச்சு ஏகமா வேலை பண்ணித்தான் பணம் சேர்க்கணும் எனும் தேவையெல்லாம் இல்ல, தெரியுமா?''

''பின்னே? நீங்க சொல்வதைப் புரிஞ்சுக்க முடியலே, ப்ளீஸ்.''

''இது ஒரு மாறிக் கொண்டேயிருக்கும் உலகம் மிஸ்டர் ஈஸ்டர்-ப்ரூக். எப்போதுமே அப்படித்தான் - ஆனா இப்பல்லாம் மாற்றங்கள் ரொம்ப துரிதமா நடக்குது. முன்னே போல இல்லாம, பணம் பண்ணும் விதம், வேகமாயிருக்கு. இந்த அனுகூலத்தை பயன்படுத்திக்கணும்.''

''மாறும் உலகம்'' - சிந்தனையாய் சொல்லிக் கொண்டேன் நான்.

''யெஸ். இது புதிய பாதைகளைத் திறந்து விடுது.''

நான் தாழ்மையாய்க் குறிப்பிட்டேன்: ''நீங்க, முகத்தைத் திருப்பி வெச்சுக்கிட்டிருக்கும் ஓர் ஆசாமி கூட பேசிக்கிட்டிருக்கீங்களோனு தோணுது: கடந்த காலம் நோக்கி... எதிர்காலம் நோக்கி அல்ல.''

வெனபிள் அவருடைய தோள்களைக் குலுக்கிக் காட்டினார்: ''எதிர்காலம்? அதை யாரால முன்கூட்டியே கணிக்க முடியும்? நான் இன்றைய தினம் பற்றி, இப்பொழுது பற்றி, இக்கணம் பற்றி பேசிக்கிட்டிருக்கேன்! வேற எதைப் பற்றியும் நான் என் கணக்கில் எடுத்துக் கொள்வதே கிடையாது. உபயோகப்படுத்தி பயன் காண புது டெக்னிக்குகள் இருக்கு, ஸார். பார்த்தீங்கன்னா, நாம் கேட்கும் கேள்விகளுக்கு அடுத்த நொடியே விடையை அள்ளித்தரும் மெஷின்களெல்லாம் ஏற்கெனவே நம்மிடையே புழக்கத்துல வந்தாச்சு. முற்காலத்துல இந்த ஒரு வரி விடைக்கு மணிக்கணக்கா பிரயத்தனப்படணும்...''

''கம்ப்யூட்டர்ஸை சொல்றீங்களா? எலக்ட்ரானிக் மூளை?''

''அதைப் போன்று எல்லாமும்தான்.''

''இயந்திரங்கள், மனிதனின் இடத்தைப் பெற முடியுமா?''

''மனிதனுடைய இடம்? யெஸ். உடல் பலம் கொண்ட மனிதர்களை அது பெற்று வெல்லலாம். ஆனால், மூளை உள்ளவனை? நோ...! கட்டுப்படுத்தும் மனிதன் - சிந்திச்சு வகைப்படுத்தித் தரும் மூளை உள்ளான் – மெஷின்களிடம் கேட்க வேண்டிய சரியான கேள்விகளைத் தயாரிப்பவன் அவன். MAN.''

நான் என் தலையை சந்தேகம் தெறிக்க மறுப்பாய் அசைத்தேன். ''யாரந்த மேன்? சூப்பர் மேன்?'' - வேண்டுமென்றே கேலியைக் குரலில் வைத்து பேசினேன்.

''ஏன் அப்படி இருக்கக்கூடாது, மிஸ்டர் ஈஸ்ட்டர் -ப்ரூக்? ஏன்? நினைவிருக்கட்டும்... MAN எனும் மனித மிருகம் பற்றி இப்ப நாம கொஞ்சங் கொஞ்சமா தெரிஞ்சுக்க ஆரம்பிச்சிருக்கோம். ஒரு காலத்துல

'மூளைச் சலவை'என்று முத்திரை குத்தப்பட்டு தவறாய் பார்க்கப்பட்ட ஒரு துறை, இப்ப ஏகப்பட்ட இன்ட்ரஸ்டிங்கான சாத்தியங்களை அதே திசையில் திறந்து விட்டிருக்கு. உடல் மட்டுமில்ல, மனம் கூட, சில போதைகளுக்கு இணங்குது.''

''ஆபத்தான ஆய்வு'' என்றேன் நான்.

''ஆபத்து?'' - கேட்ட வெனபிள் மீண்டும் தோள்களைக் குலுக்கிக் காட்டினார். ''முழு வாழ்க்கையுமே ஆபத்தானதுதான். நாகரீக பரிணாம வளர்ச்சி எனும் சின்ன பாக்கெட்டுக்குள்ளே நாமெல்லாம் அடைபட்டிருக்கோம் என்பதையே மறந்துடறோம், மிஸ்டர் ஈஸ்ட்டர்-ப்ரூக். எல்லாத்துக்கும் நாகரீக வளர்ச்சிதான் காரணம் - யெஸ். அங்குமிங்குமா சில மனிதர்கள் பரஸ்பர பாதுகாப்புக்காக இணைந்து, இயற்கை அன்னையை கட்டுப்படுத்துவதா சொல்லிக்கிட்டு எழுந்தாங்க. காடுகளை அழிச்சாங்க - நாடுகளை உண்டாக்க. நாகரீகம்! ஆனா இதெல்லாம் தற்காலிகமே. எக்கணத்திலும் மறுபடியும் காடு தன் கட்டுக்குள் எல்லாத்தையும் எடுத்துக்கும். இது நடக்கும். ஆக வாழ்க்கை எப்போதுமே ஆபத்தானதுதான். மறந்துடாதீங்க. இயற்கை சீற்றங்கள் மட்டுமல்ல... நாகரீகம்னு சொல்லிக்கிட்டு நாம உருவாக்குபவையே கூட நாளை நம்மை விழுங்கிடலாம். அப்படிப்பட்ட ஒரு முடிவுக்கு வெகு நெருக்கமா நாம வந்திருக்கோம்.''

''உங்க கருத்தை யாரும் மறுக்க முடியாது. நாகரீக வளர்ச்சி, எப்பவும் ஆபத்தானதே. ஆனா நான் அதிக ஈடுபாடு காட்டுவது, நீங்க சொன்ன சக்தி பற்றி - மனத்தை வசியப்படுத்துவது பற்றி. மனம் கூட, சில போதைகளுக்கு இணங்கும்னு சொன்னீங்க, இல்ல?''

''ஓ, அதுவா..?'' இப்போது வெனபிள் சட்டென்று லஜ்ஜையானார். ''ஓ, ஒருவேளை நான் மிகைப்படுத்தி பேசியிருக்கலாம்.''

ஆரம்பத்தில் வெற்றி முழக்கமாய் பேசியதிலிருந்து மெல்ல விலகிக் கொள்வதையும் சிக்கிக் கொண்டதைப் போன்ற திணறலையும் நான் அவரிடம் கண்டேன். எப்போதும் தனியாகவே வாழ்ந்துள்ள ஒரு மனிதன், வெனபிள். தனியாகவேயிருக்கும் ஒருத்தன்தான், யாரோ ஒருவரிடம்... அல்லது யாரிடமாவது பேச வேண்டும் என்ற தாகத்தினை வளர்த்துக் கொள்கின்றான். வெனபிள்ளும் என்னுடன் பேசி விட்டார். ஆனால் சற்று புத்திசாலித்தனமற்று!

''மேன், த சூப்பர்மேன்'' என்றேன் நான். ''இவ்வார்த்தை பற்றிய நாகரீக பூச்சுள்ள ஒரு புது ஐடியாவை நீங்க எனக்கு தந்திருக்கீங்க, யூ நோ.''

''இதுல புதுசெல்லாம் ஒண்ணும் கிடையாது, தெரியுமா. சூப்பர் மேன் எனும் வார்த்தையின் விவரணை ரொம்ப காலமாவேயிருக்கு. நம்முடைய தத்துவங்களே இந்த வார்த்தை மேல்தான் கட்டப்பட்டிருக்கு. எல்லா தத்துவ அங்கீகரிப்புக்கும் ஒரு சூப்பர் மேன் தேவைப்பட்டிருக்கு.''

''இருக்கலாம், ஒத்துக்கிறேன். ஆனா உங்க சூப்பர்மேன் - வித்தியாசமானவன். சக்தியை, அதிகாரத்தை, நடத்துபவன் அவன் - ஆனால் அப்படி அதிகாரம் உள்ளவன் என்பதே வெளியே தெரியாதபடி. நாற்காலியில் உட்கார்ந்துக்கிட்டு பொம்மலாட்ட கயிறினை மட்டும் அம்சமா இயக்குபவன்.''

நான் பேசிக் கொண்டிருக்கும்போதே அவரைக் கவனித்தேன். சிரித்தார்.

''என்னை அந்தப் பாத்திரமா உருவகப்படுத்திப் பார்க்கிறீங்களா, மிஸ்டர் ஈஸ்ட்டர் - ப்ரூக்? அப்படி நீங்க உருவகப்படுத்திக்கக் கூடாதானுதான் நானும் நினைக்கிறேன்.''

கால் முட்டிக்குக் கீழ்ப்பகுதியை அவர் சுட்டிக் காட்டித் தடவி விட்டபோது அவருடைய குரலில் தொனித்த கசப்பினை நான் உணர்ந்தேன்.

''நான் உங்கமேல் இரக்கப்பட மாட்டேன்'' என்றேன் நான். ''உங்க மாதிரி இருக்கும் ஒருத்தருக்கு இரக்கம் என்பது ரொம்ப சின்ன வார்த்தை. ஆனா, நாம அப்படியொரு பாத்திரத்தைக் கற்பனையில பார்த்தால் - அதாவது, கண்ல படாம நடக்கும் பிரளயத்தை வெற்றியா அறிவிச்சு கொக்கரிக்கும் ஒருத்தன் - அதுக்கு சர்வ நிச்சயமா பொருந்தும் ஆள், என்னைப் பொறுத்தமட்டில், நீங்கதான்.''

அவர் சுளுவாய் சிரித்தார். ''நீங்க என்னை ரொம்பப் புகழறீங்க.''

ஆனால் அவர், திருப்தியானவரானார் - நான் கவனித்தேன்.

பிறகு ''நோ'' என்றேன் நான். ''அசாதாரண சமாச்சாரங்களை அடையாளம் காணும் விதம் விதமான மனுஷங்களை நான் எக்கச்சக்கமா பார்த்தாச்சு. அதீத வரம் பெற்ற ஜென்மங்கள்.''

உரையாடலில் அதிக தூரம் செல்ல எனக்கு பயமாயிருந்தது.

''இப்படி உங்களை எது சொல்ல வெச்சதுனு எனக்குத் தெரியலே'' என்றார் அவர் சிந்தனையாய். ''இதெல்லாமா?'' - விட்டேற்றித்தனமாய் அறை முழுதும் இருந்தவற்றை ஒரு சுற்று சுட்டிக் காட்டினார்.

''இதெல்லாம் சாட்சிகள்'' என்றேன் நான். ''நீங்க ஒரு பணக்காரர் என்பதற்கும் கலையின் மீது ஆர்வமும் சுவையும் அதிகம் நிறைந்தவர் என்பதையும் காட்டும் சாட்சிகள். ஆனால் எனக்கென்னவோ இதிலெல்லாம் வெறுமனே வாங்கி வைத்துக் கொள்வதைத் தாண்டியும் விஷயமிருப்பதாப்படுது. அழகும் நயமும் மிகுந்தவற்றை வாங்குவதே குறிக்கோள்னு நீங்க வெச்சுக்கிட்டதா சொன்னீங்க - இந்த குறிக்கோளை அடைய அங்கே இங்கே மாங்கு மாங்குனு அலைஞ்சதே கிடையாதுனும் ஹிண்ட் பண்ணிக் காட்டினீங்க.''

''சரியா சொன்னீங்க, மிஸ்டர் ஈஸ்ட்டர் - ப்ரூக், சரியா சொன்னீங்க. நான் முன்னமேயே சொன்னதைப் போல, முட்டாள்தான் அலைவான். உழல்வான். ஒருத்தன் யோசிக்கணும். திட்டமிடணும்... விவரமா. ஒவ்வொரு சக்ஸஸின் ரகசியமும் ரொம்ப ஸிம்பிள் - ஆனா அதுக்கு சிந்திக்கணும்! ஸிம்பிளா, அப்படி ஒரு வழியை யோசிக்கணும். அதை வழி நடத்தணும் - ஆஹ், அங்கே வெற்றி!''

நான் அவரைக் கண்ணகல பார்த்தேன். சம்திங் ஸிம்பிள் - தேவையற்ற மனிதர்களை உடனடியாய் அகற்றி விடுவதைப் போன்ற ஸிம்பிள்! இவ்வாறாய் ஒரு தேவையைப் பூர்த்தி செய்தல், குறி வைக்கப்பட்டவனைத் தவிர வேறொருவருக்கும் ஆபத்து நேராமல் நடைமுறைப்படுத்தப்படும் இயக்கம், வெனபிள்ளால் அவருடைய சக்கர நாற்காலியில் உட்கார்ந்திருந்தபடியே தீட்டப்படும் திட்டம். இரையை நாடி நிற்கும் நீளமூக்கு கொக்கு போன்ற மூக்கு முன்னால் துடிதுடிக்க, துருத்திக் கொண்டு நிற்கும் ஆப்பிள் முகவாய் மேலும் கீழுமாய் ஆட... அது சரி, யாரால் திட்டம் செயலாக்கப்படுகின்றது? தெரஸா க்ரே?

பின்வருவதை நான் சொன்னபோது அவரை கவனமாய் பார்த்துக் கொண்டிருந்தேன்: ''இது போன்ற ரிமோட் கண்ட்ரோல் சமாச்சாரம்பற்றி நாம இப்ப பேசிக்கிட்டிருப்பது, எனக்கு, அந்த ஓல்ட் மிஸ் க்ரே சொன்னதை நினைவுக்கு கொண்டு வருது.''

''ஆஹ், நம்ம டியர் தெரஸா!'' அவரது தொனி மிருதுவாய், தயையுடனிருந்தது. ''அந்த டியர் லேடீஸ் பேசும் முட்டாள்தனமான செயல்கள்! ஆவிக் கூட்டம்னு இதுங்க நடத்தும் அந்த கேலிக் கூத்துக்கு நீங்க போயிருக்கீங்களா?''

இதற்கு என்னுடைய அணுகுமுறை எப்படியிருக்க வேண்டும் என்பதில் நான் சற்று தடுமாறினேன். ''யெஸ்'' என்றேன் நான். ''நான் போயிருந்தேன்.''

''அதை நீங்க ஒரு பெரும் முட்டாள்தனமா கருதினீங்களா? இல்ல, ஈர்க்கப்பட்டீங்களா?''

அவருடைய கண்களைத் தவிர்த்த நான், இருப்புக் கொள்ளாமல் தவிக்கும் ஒருவனை மிகச் சிறப்பாய் படம் பிடித்துக் காட்டினேன். ''நா-ன், ஓ, நா-ன், அங்கே நடந்த ஒரு துளியைக் கூட நம்பலே. அவங்க மூணு பேரும் ரொம்பவும் சின்ஸியரா உண்மையா செய்தாங்க. ஆனாலும்...'' இப்போது நான் என் கைக்கடியாரத்தைப் பார்த்தேன். ''இத்தனை லேட்டாவா ஆகிடுச்சு... ஓ, நான் சீக்கிரமா திரும்பியாகணும். நான் என்ன பண்ணிக்கிட்டிருக்கேனு என் கஸின் பயந்துக்கிட்டிருப்பா...''

''ஓர் ஊனமுற்றவனை, பொழுதுபோகாமலிருந்த ஒரு மத்தியானப் பொழுதுல ரொம்ப சிறப்பாகவே ஊக்கப்படுத்திக்கிட்டிருந்தீங்கனு சொல்லுங்க. ரூடாவுக்கு என் வாழ்த்துக்கள். நாம இன்னொரு லஞ்ச் பார்ட்டியைக் கூடிய சீக்கிரமே ஏற்பாடு பண்ணனும். நாளைக்கு நான் லண்டன் போறேன். ஓர் இன்ட்ரஸ்டிங் வியாபாரம் இருக்கு. தந்த வேலைப்பாடு நிறைந்த சாமான்கள். அதை எப்படியாவது நான் வாங்கிட்டு வந்தால், நிச்சயமா நீங்க பார்த்துப் பாராட்டுவீங்க.''

இந்த அமைதியான வாக்கியத்தோடு நாங்கள் விடைபெற்றுக் கொண்டோம். ஆவிக் கூட்டம் பற்றி என்னிடம் விளைந்த தடுமாறலுக்கு அவரிடம் கமுக்கமான கண்ணிமைப்பு ஏற்பட்டதா, என்ன? எனக்கு அப்படிதான் தோன்றியது. ஆனால் நிச்சயமாய் தெரியவில்லை. நான் இப்போதெல்லாம் சற்று அதிகமாக கற்பனை பண்ணிக் கொள்கிறேன் என்பது மட்டும் விளங்கியது.

அத்தியாயம் 19

மார்க் ஈஸ்ட்டர்– ப்ரூக் பதிந்தவை

நான் பிற்பகலில் வெளியே கிளம்பினேன். இருட்டு ஏற்கெனவே கவிழ ஆரம்பித்திருந்தது. வானமும் மூடியிருந்தபடியால் வளைந்து சென்ற தோட்டப் பாதையில் நான் நிச்சயமற்று நடக்க வேண்டியதாயிற்று. ஒரு தடவை, விளக்கொளியிலிருந்த வீட்டு ஜன்னல்களை நான் திரும்பிப் பார்த்தேன். இப்படி செய்ததில் பாதையிலிருந்து புல்வெளிக்குக் காலிடறி இறங்கிவிட்ட நான் அங்கு எதிர்த்திசையிலிருந்து வந்துக் கொண்டிருந்த யாருடனோ மோதி விட்டேன்.

அது ஒரு குள்ளமான மனிதன். கல்லாய் செய்த உடல். ஒருவருக் கொருவர் மன்னிப்பினைத் தெரிவித்துக் கொண்டோம்.அவனுடைய குரல் தாட்டியாய் தடிமனான கீழ்ஸ்தாயியில் அமைந்திருந்தது.

''ஐ'ம் ஸோ ஸாரி'' என்றேன் நான்.

''அய்யய்யோ, நீங்க வேற... இது முழுக்க முழுக்க என் தப்பு...''

''நான் இங்கே இதுக்கு முன்னாடி வந்தது கிடையாது. அதனால எந்த திசையில போய்க்கிட்டிருக்கேன் என்பது கூட எனக்கு விளங்கலே'' என விளக்கினேன். ''டார்ச் கொண்டு வந்திருக்கணும்.''

''நான் உதவறேன்.''

நானறியாத அவன், அவனது பாக்கெட்டிலிருந்து டார்ச்சை எடுத்தான். எரிய விட்டான். என்னிடம் தந்து விட்டான். அவ்வெளிச்சத்தில் அவன் ஒரு நடுத்தர வயதிலிருப்பவன் என்பதையும் வட்ட வடிவமான தேவதூதன் போன்ற முகவாகு கொண்டிருந்தான் என்பதையும் நான் கவனித்தேன்.

கறுப்பு மீசை மற்றும் மூக்குக் கண்ணாடி. பார்த்தாலே நல்ல மதிப்பு கொடுக்கத் தூண்டும் தரமான கருநிற ரெயின் -கோட் அணிந்திருந்தான். அப்போது, அவனிடத்தில் டார்ச் விளக்கு இருந்த போதிலும் எதற்காக அதனை அவன் உபயோகப்படுத்தவில்லை என்ற வியப்பு என்னுள் விளைந்தது.

''ஆஹ்...'' என்றேன் நான், செய்த தவறை அப்போதுதான் உணர்ந்தவனாய். ''நான் பாதையை விட்டு இறங்கியிருக்கேன்.''

மீண்டும் பாதைக்குள் ஏறிய நான் அவனிடம் டார்ச்சைத் திரும்பத் தந்தேன். ''இனிமே நான் என் பாதையைக் கவனிச்சுக்கிறேன்.''

''ஓ, ப்ளீஸ்... கேட் போகும் வரை வெச்சுக்குங்க.''

''ஆ - ஆ- ஆனா, நீங்க வீட்டுப் பக்கமால்ல போய்க்கிட்டிருக்கீங்க?''

''நோ, நோ, நீங்க போற திசையிலேயேதான் நான் போய்க்கிட்டி ருக்கேன். அதாவது, வெளிப்பக்கமா. கேட்டை நோக்கி. பஸ் ஸ்டாப் வரை. போர்ன்-மவுத் போற பஸ்ஸைப் பிடிக்கப் போய்க்கிட்டிருக்கேன்.''

நான், ''ஐ ஸீ'' என்றதும், பக்கம் பக்கமாய் நடக்க ஆரம்பித்தோம். என்னுடன் இப்போது வந்துக் கொண்டிருந்த அவன் சற்று அசௌகரியமாய் இருந்தான். நானும் பஸ் ஸ்டாப்புக்குத்தான் போகின்றேனா என்று விசாரித்தான். பக்கத்திலேயே தங்கியிருப்பதாய் சொன்னேன் நான்.

என்னருகில் வந்துக் கொண்டிருந்த அவனுடைய மனச் சிக்கல் வளர்வதை என்னால் உணர முடிந்தது. தப்பான ஓரிடத்தில் போய் தானாய் இருப்பதை விரும்பாத வகை அவன்.

தொண்டையைச் செருமிக் கொண்டான். கேட்டான்: ''நீங்க மிஸ்டர் வெனபிள் இருப்பிடத்துக்குப் போயிட்டு வரீங்களா?''

''அப்படியேதான்'' என்ற நான், கூடுதலாய் ''நீங்களும் அந்த வீட்டுக்கு போய்க்கிட்டிருக்கீங்கன்னே நான் எடுத்துக்கிட்டேன்'' என்றேன்.

''நோ'' என்றான் அவன். ''நோ... சொல்லப் போனால்...'' என்றவன் உடனே சொல்லவில்லை. ''போர்ன் - மவுத்ல வசிக்கிறேன் நான். அங்கேயிருக்கிற ஒரு சின்ன பங்களாவுக்கு இப்பக் குடி போயிருக்கேன்.''

என் சிந்தனைக்குள் மெலிதான கலக்கம் உண்டானதை உணர்ந்தேன். போர்ன் - மவுத்தில் ஒரு பங்களா பற்றி சமீபத்தில் நான் என்ன கேள்விப்பட்டேன்? இது குறித்து நான் ஞாபகப்படுத்திக் கொள்ள

முயன்றுக் கொண்டிருந்தபோது, இன்னும் அசௌகரியமான நிலைக்குப் போன என் புது அறிமுக நபர், இறுதியாய் பேச ஆரம்பித்து விட்டார்.

''நீங்க புரியாமல் என்னைப் பார்த்திருக்கலாம்... யெஸ், உங்களால அர்த்தப்படுத்திக்கிட்டிருக்க முடியாது. ஒரு வீட்டின் ஓனரோடு அதிக பழக்கமில்லாத ஒருத்தன் அந்த வீட்டையொட்டிய மைதானத்துல காரணமேயில்லாம உலாத்திக்கிட்டிருப்பதை, நிச்சயமா உங்களால் அர்த்தப்படுத்திக்கிட்டிருக்க முடியாதுதான். இதுக்கான காரணங்களை விளக்குவதுல சின்னதா சங்கடமிருக்கு... ஆனா, காரணமிருக்கு. நான் போர்ன் - மவுத்ல புது வீட்டுக்கு குடி போயிருப்பதா சொன்னால் கூட, அந்தப் பகுதியில் நான் ரொம்பவும் பிரசித்தமானவன். இது நெசந்தான்னு சாட்சி சொல்ல அக்கம் பக்கத்து பேர்கள் நிறைய பேரை என்னால காட்ட முடியும். நான் ஒரு மருந்துக் கடைக்காரன்... லண்டன்ல நெறைய வருஷமா நடத்தி வந்த பிஸினஸை வித்துட்டு எனக்கு எப்பவுமே வசீகரமா தோன்றும் - ஈர்க்கும் மனோஹரமான பகுதியா தோன்றும் இந்தப் பகுதிக்கு ஓய்வு பெற வந்துட்டேன்.''

ஒளி என்னுள் சடுதியில் தோன்றியது. இந்த குள்ள மனிதன் யாரென்று எனக்கு ஏற்கெனவே தெரியும் என்று பட்டது. இதனிடையில், அவன் தன் பேச்சினை முழு வீச்சில் தொடர்ந்துக் கொண்டிருந்தான்.

''என் பேர் ஓஸ்பார்ன். ஸக்காரியா ஓஸ்பார்ன். நான் சொன்னது போலவே லண்டன்ல நல்லா லாபம் தந்த தொழில் நடத்தி வந்தேன். பாடிங்டன் க்ரீன் பகுதியில, பார்ட்டன் தெருவில். எங்கப்பா காலத்துல அருமையான பகுதியா இருந்த இடம் அது... ஹூம், இப்ப பரிதாபகரமா மாறிடுச்சு. உலகின் ஆரவாரத்துல அமுங்கிப் போயிடுச்சு.''

பெருமூச்செறிந்து மறுப்பாய் தலையசைத்துக் கொண்டான்.

பிறகு அவனே தொடர்ந்தான்: ''இது மிஸ்டர் வெனபிள் வீடு. அப்படித்தானே? அவர் - உங்க நண்பர்னு நினைக்கிறேன்.''

இங்கு நான் பேச வேண்டியிருந்தது. ''ஃப்ரெண்டெல்லாம் கிடையாது. இன்னிக்கு முன்னாடி, என் நண்பர்கள் சிலர் மூலமா அவர் வீட்டுக்கு நான் லஞ்சுக்கு அழைத்துப் போனபோது, அவரை நான் ஒரேயொரு முறை சந்திச்சிருக்கேன்.''

''ஆஹ், யெஸ் - விளங்குது... யெஸ் துல்லியமா..''

இப்போது நாங்கள் முன்பக்கத்து கேட்டுக்கு வந்திருந்தோம். அதனைக் கடந்து போனோம். முடிவெடுக்க முடியாதவனாய் அங்கு தயங்கினான் ஓஸ்பார்ன். அவனுடைய டார்ச்சை நான் அவனிடம் திருப்பி தந்தேன்.

''தேங்க் யூ.''

''அதெல்லாம் எதுக்கு? நான்...'' இங்கு மீண்டும் தயங்கினான். பிறகு அவனிடமிருந்து வார்த்தைகள் ஆறாய் விழுந்தன.

''நான், தேவையில்லாமல், அனுமதி பெறாம, உள்ளே... அங்கே நுழைஞ்சுட்டதா நீங்க நினைச்சுடக் கூடாதுனு விரும்பறேன். வேறெந்த கீழ்த்தரமான எண்ணத்தையும் மனசுல வெச்சுக்கிட்டு நான் நுழையலே. அங்கேயிருந்த என்னோட நிலைமை - உங்களுக்கு வித்தியாசமா பட்டு - தப்புத் தப்பா நினைக்க வெச்சிருக்கும். நான் என்னோட நிலைமையை உங்ககிட்டே விளக்கிட விரும்பறேன்.''

நான் காத்திருந்தேன். இதுதான் அப்போதைக்கு நான் பண்ணக் கூடிய ஒரே சிறந்த விஷயமாய்ப் பட்டது. என் எதிர்பார்ப்பு உள்ளுக்குள்ளே அதிகமானது. அது எனக்கு தணிய வேண்டும்!

ஒரு நிமிடம் போல அமைதியாயிருந்தான், மிஸ்டர் ஓஸ்பார்ன். பிறகு பேச முடிவெடுத்துக் கொண்டான். ''நான் உங்ககிட்டே விளக்கமா சொல்லிட விரும்பறேன், மிஸ்டர்...''

''ஈஸ்ட்டர் - ப்ரூக், மார்க் ஈஸ்ட்டர் - ப்ரூக்.''

''மிஸ்டர் ஈஸ்ட்டர் - ப்ரூக்... என்னோட விசித்திரமான நிலைமையை விளக்கக் கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை நான் கைகழுவி விட விரும்பலே. நேரமிருக்குமா உங்களுக்கு? ஐந்து நிமிஷந்தான் பிடிக்கும். இந்தப் பாதையில் மெயின்ரோடு வரை நடக்கணும். பஸ் ஸ்டாப்பை ஒட்டியிருக்கும் பெட்ரோல் பங்க்ல ஒரு நல்ல காபி கடையிருக்கு. என் பஸ் வர இன்னும் இருபது நிமிடங்களிருக்கு. ஒரு காபி வாங்கி தர அனுமதி தரணும்.''

நான் ஏற்றுக் கொண்டேன். அந்தப் பாதையில் இருவரும் ஒன்றாய் முன்னேறினோம். மிஸ்டர் ஓஸ்பார்ன், அவனுடைய கௌரவம் காப்பாற்றப்பட்டவனாய், போர்ன் - மவுத்தின் சுற்று வட்டாரம் பற்றியும், அதன் அருமையான வானிலை பற்றியும், அங்கு சுற்று வட்டாரத்தில் உள்ள அற்புதமான மனிதர்கள் பற்றியும் வாய் கொள்ளாது பேசினான்.

மெயின் ரோடை அடைந்திருந்தோம். பஸ் ஸ்டாப்புக்கு சற்று முன்னால் அமைந்திருந்தது ஒரு பெட்ரோல் பங்க். அதில் சுத்தமாயிருந்த ஒரு டீக்கடை தென்பட்டது. உள்ளே மூலையில் அமர்ந்திருந்த ஒரு ஜோடியைத் தவிர வேறு யாருமில்லை. நாங்கள் நுழைந்தோம். இருவருக்கும் தேவையான பிஸ்கெட்டுகள் மற்றும் டீக்கு ஆர்டர் தந்தான் ஓஸ்பார்ன்.

பிறகு டேபிளுக்குக் குறுக்காய் வளைந்து வந்த அவன் தானாய் சுமையை இறக்கி வைக்கலானான்.

''இந்த எல்லா சமாச்சாரமும், நீங்களே கொஞ்ச காலத்துக்கு முன்னாடி நியூஸ் பேப்பர்ல பார்த்திருக்கவல்ல ஒரு கேஸ்லேர்ந்து கிளம்புது. அது அப்படியொண்ணும் பெரிய உணர்ச்சிபூர்வமான ஒரு கேஸ் கிடையாது - அதனால தலைப்புச் செய்தியாகலே. நான் கடை வெச்சிருக்கும் - ம்ம், வெச்சிருந்த லண்டன் மாவட்டத்தின் ரோமன் கத்தாலிக்க பாதிரியார் பற்றியது அந்த கேஸ். அவர் ஒரு ராத்திரில குறி வைக்கப்பட்டு கொல்லப்பட்டார். பரிதாபமான கொலை அது. இப்படிப்பட்ட கொலைகள்லாம் இந்த காலத்துல ரொம்ப கம்மி - ஆனா நடந்தது. நான் கேள்விப்பட்ட வரைக்கும் அவர் ஒரு நல்ல மனுஷன் - ஆனா எனக்கு தனிப்பட்ட முறையில் ரோமன் கிருத்துவர்கள் மீது அத்தனை நல்லபிப்ராயம் கிடையாது. அதெப்படியோ போகட்டும்... இதுல எனக்கு எப்படி ஈடுபாடு வந்ததுனு சொல்றேன். ஒரு போலீஸ் அறிவிப்பு வந்தது. அந்த குறிப்பிட்ட ராத்திரி யாராவது ஃபாதர் கார்-மேனைப் பார்த்திருந்தால் அவர்களைப் போலீஸ் சந்திக்க விரும்புவதாக. அந்த பர்டிகுலர் ராத்திரி எட்டு மணிக்கு நான் என்னுடைய மருந்தகத்தின் வாசல்ல நிற்கும்படியும் அப்போ அந்தப் பக்கமா ஃபாதர் கார்-மேன் போவதைப் பார்க்கும்படியும் நேர்ந்தது. அவரைப் பின்தொடர்ந்து குறுகிய இடைவெளியில ஒருத்தன்... அவனோட தோற்றம் என்னோட கவனத்தைச் சட்டுனு கவர்ந்து நிறுத்துமளவுக்கு அசாதாரணமாத்தான் இருந்தது. அப்ப, அஃப்கோர்ஸ், இந்த அசாதாரணம் பற்றியெல்லாம் நான் எதையும் சிந்திக்கலே. ஆனா நான் கவனிப்பதுல ஒரு புலி, மிஸ்டர் ஈஸ்ட்டர் - ப்ரூக்... நான் சந்திக்கும் நபர்கள் எப்படி தோற்றமளிக்கிறாங்கன்னு மூளையிலே பதிந்து வைத்துக் கொள்வது என் குணம். இது என்னோட ஒரு சூப்பர் பொழுதுபோக்கு. என் கடைக்கு வர்றவங்ககிட்டே இந்தத் தனிப்பட்ட குணத்தைக் காண்பிச்சு நான் பிரமிப்பூட்டுவேன்: 'அடடே... நீங்க போன மார்ச் இன்ன மருந்தை வாங்க இங்கே வந்தீங்க இல்ல?' பிரமிப்பாங்க அவங்க. எனக்கு தலைகால் புரியாது. இதுக்காகவே நிறைய கஸ்டமர்ஸ் எனக்கு வருவாங்க... நல்லா பிஸினஸ் ஆச்சு. இப்படியாய் நான் பின்தொடர்ந்தவனைப் போலீஸுக்கு விவரிச்சேன். எனக்கு அவங்க நன்றி சொன்னாங்க. அது அப்படியே முடிஞ்சது.

''இப்ப, நான் சொல்லிக்கிட்டிருக்கும் கதையின் ஆச்சரியமான பகுதிக்கு வரேன். இந்த லிட்டில் விலேஜின் சர்ச் விழா ஒன்றுக்கு நான் ஒரு பத்து

நாட்களுக்கு முன்னாடி வந்தேன். நாம முட்டிக்கிட்ட பாதையின் கடைசியிலே இருக்கு அது. நான் முன்னால விவரிச்ச அதே ஆளை அங்கே சந்திச்சதுல, நான்.. ஓஹ், ஆச்சரியத்துல திக்குமுக்காடிப் போனேன். ஒரு சக்கர நாற்காலியில் உட்கார்ந்துக்கிட்டு அவராவே அதை தள்ளிக்கிட்டு வந்ததால் அவருக்கு ஏதாவது விபத்து நடந்திருக்கும்னு நினைச்சுக் கிட்டேன். அவர் யார்னு விசாரிச்சேன். லோக்கல் பணக்காரர்னும் வெனபிள் அவர் பேரனும் சொன்னாங்க. இந்த விஷயத்தைப் பற்றி விவாதிக்க, நான் ஏற்கெனவே வாக்குமூலம் தந்திருந்த போலீஸ்காரருக்கு கடுதாசி ஒண்ணு போட்டேன். போர்ன் - மவுத்துக்கு அவர் வந்தார். இன்ஸ்பெக்டர் லெஜன் என்பது அவர் பேர். சம்பவ ராத்திரி அன்று நான் பார்த்த அதே நபர்தானா இவர் என்பதுல நம்பகத் தன்மை இல்லாமலே இருந்தார் இன்ஸ்பெக்டர். வாதத்தால, சில வருஷங்களாகவே வெனபிள் கால்களின் ஸ்மரணையற்று இருக்கார்ன்னு சொன்னார் அவர். ஒரே மாதிரி இருந்த தோற்றத்தால் நான்தான் தப்பா எடுத்துக்கிட்டிருக்கணும்னு சொல்லிட்டார்.''

மிஸ்டர் ஓஸ்பார்ன் ஒரு திடீர் நிறுத்தம் தந்தார். முன்னாலிருந்த டீ திரவத்தை கலக்கினார்... ஜாக்கிரதையாய் ஒரு மிடக்கு குடித்தார். தனது ஒரு கோப்பைக்கு மட்டும் மூன்று ஸ்பூன் சர்க்கரை போட்டுக் கொண்டார்.

''அப்ப கதை முடிஞ்சுடுச்சு இல்ல'' என்றேன் நான்.

''யெஸ்'' என்றான் ஓஸ்பார்ன். ''யெஸ்...'' அவனுடைய குரல் வெளிப்படையாகவே திருப்தியற்றிருந்தது. பிறகு அவனுடைய வட்ட வடிவ வழுக்கை மண்டை, மேலேயிருந்த பல்ப் ஒளியில் தகதகக்க மீண்டும் முன்வளைந்து வந்த அவன், மூக்குக் கண்ணாடிக்குப் பின்னாலிருந்த கண்கள் மின்ன பேசினான்.

''இன்னும் சற்று அதிகமா நான் விளக்க வேண்டியிருக்கு. இன்னொரு மருந்தகம் வெச்சுக்கிட்டருந்த ஒருத்தர், எங்கப்பாவோட ஃப்ரண்ட். நான் இப்ப சொல்வது நான் சிறுவனா இருந்தபோது நடந்தது. ஜீன் பால் எனும் ஒரு வழக்குக்கு சாட்சி சொல்ல அவர் அழைக்கப்பட்டார். தன் இங்கிலீஷ்க்காரி மனைவிக்கு ஆர்சனிக் விஷம் வெச்சு அந்தாளு கொன்ன வழக்கு - உங்களுக்கும் நினைவிருக்கணும். அந்தாளுதான் தன் கடையில தப்பான பேர்ல கையெழுத்துப்போட்ட ஆள்னு எங்கப்பாவுடைய நண்பர் அடையாளம் காட்டினார். ஜீன் பால் குற்றஞ் சுமத்தப்பட்டு தூக்கிலேற்றப்பட்டார். அப்ப எனக்கு ஒன்பது வயது. இது எனக்குள்ளே

ஆழமா பதிஞ்சது. எதுவும் மனசுல ஆழமா பதியும் வயது. ஒரு நாளைக்கு நானும் இதேபோல சாட்சி சொல்லி ஒரு பெரிய கொலையை நீதி முன் நிறுத்தி தீர்ப்பு வாங்கித் தருவேன்னு பெரும் நம்பிக்கையிலேயே வாழ்ந்துக்கிட்டிருந்தேன்! சொல்லப் போனால் அப்போதிலிருந்துதான் நான் முகங்களை மனப்பாடம் பண்ணி பதிந்துக் கொள்வதை வளர்த்துக்க ஆரம்பிச்சேன். நான் இப்ப சொல்லப் போவது உங்களுக்கு கேலிக் கூத்தாக் கூட படலாம், மிஸ்டர் ஈஸ்ட்டர் - ப்ரூக்... ஆனா, தன் மனைவிக்கு விஷம் வெச்சுக் கொல்வதற்காக விஷம் வாங்க என் கடைக்கு ஒருத்தன் நிச்சயம் வருவான் எனும் எதிர்பார்ப்புலேயேதான் நான் இத்தனை நாளும் மருந்துக் கடை நடத்திக்கிட்டிருந்தேன், மிஸ்டர் மார்க்.''

''ஆ!''

''ஆனா அது நடக்கவேயில்ல. ஆகையினால இந்த கேஸ்ல உள்ள உருவ ஒற்றுமை, நான் சின்ன வயசுல கேட்ட அதே வகையைச் சார்ந்ததா இல்லாவிட்டாலும், ஒரு கொலைல சட்டத்தின் முன் நிறுத்த ஒரு சிறப்பான சாத்தியமா எனக்குப்பட்டது.''

அவனுடைய முகம் குழந்தைத்தனமான குதூகலத்தில் மிளிர்ந்தது.

''இது உங்களுக்கு பெரும் ஏமாற்றமா இருந்திருக்கும்'' என்றேன் நான் இரக்கமாய்.

''யெஸ்.'' மீண்டும் ஓஸ்பார்னின் குரல் அதே திருப்தியற்ற தொனியில் இறங்கியது. பின், தொடர்ந்தான்:

''நான் ஒண்ணும் பிடிவாதம் பிடிக்கும் குணமுள்ளவன் கிடையாது, ஸார். நாட்கள் ஆக ஆக, நான் சொல்வதுதான் சரி எனும் தீர்வு எனக்குள்ளே வளர்ந்துக்கிட்டேயிருந்தது. அதாவது நான் பார்த்த ஆசாமி வெனபிள்தான்... வேற யாரும் கிடையாது எனும் தீர்வு. ஓ நோ!'' - நான் இக்கருத்தை ஆட்சேபித்துப் பேச எடுத்த குரலைத் தனது ஒற்றை ஆட்காட்டி விரலின் மறுப்பில் தடுத்து விட்டான். ''எனக்குத் தெரியும், அது ஒரு பனிநாள். நான் குறிப்பிட்ட தொலைவில் தள்ளி நின்னுக்கிட்டிருந்தேன். இதெல்லாம் எனக்கும் தெரியும். ஆனா யார்னு அடையாளம் கண்டுபிடிக்கும் ஒரு ஆய்வை நான் அப்ப பண்ணிக்கிட்டிருந்தேன் என்பதை ஏனோ இந்த போலீஸ் அதன் கவனத்துல எடுத்துக்கவே இல்லை. அவனோட உடலமைப்பு, அதாவது துருத்தியிருக்கும் மூக்கு, ஆப்பிள் போன்ற முகவாய்... வெறும் இதெல்லாம் மட்டும் நான் கணக்குல எடுத்துக்கல. மடங்கிய அந்தத் தலை... தோள்களில் பொருந்தியிருக்கும்

கழுத்தின் கோணம்... இதெல்லாமும் என் ஆய்வில் முக்கிய இடம் வகிக்கும். யெஸ், நான் எனக்கே சொல்லிப்பதுண்டு. 'ஒத்துக்கோ, ஒத்துக்கோ, நீ சொல்வது தப்பு. தப்பேதான்'. ஆனா நான் சொல்வது தப்பில்லைனு இன்னொரு பக்கம் நான் தொடர்ச்சியா உணர்ந்துக்கிட்டேயிருக்கேனே... என்ன செய்ய? போலீஸ் நான் சொல்வது சாத்தியமே கிடையாதுங்கறாங்க. அப்படியா? இது சாத்தியமில்லையா? இதைத்தான் நான் அப்ப எனக்குள்ள கேட்டுக்கிட்டேன்.''

''நிச்சயமா, அதைப் போன்ற ஓர் ஊனம் இருக்கும்போது...''

பொறுமையற்ற தினுசில் கையமர்த்தி என்னை தடுத்தான் அவன்.

''யெஸ், யெஸ். ஆனா தேசிய ஹெல்த் மையத்துல நானெடுத்த ஆராய்ச்சிகளை வெச்சு சொல்றேன்... வெல், மக்கள் எதையெல்லாம் பண்ணத் தயாரா இருக்காங்க என்பதையும் அப்படி செய்வதால் அவங்க என்னல்லாம் அடைகிறார்கள் என்பதையும் கேட்டால் நீங்க ஆச்சரியப்பட்டுப் போவீங்க! மருத்துவத் தொழில், கண்ணால் பார்க்கும் எல்லாத்தையும் அப்படியப்படியே நம்பும் ஒரு கண்மூடித்தனமான வெகுளித் தொழில்னு நான் சொல்ல வரலே... நரம்புத் தளர்ந்து கால் தொங்கும் ஒரு கேஸை அவங்க சீக்கிரமாகவே கண்டுபிடிச்சுடுவாங்க... ஆனா சில வழிமுறைகள் இருக்கு ஸார். அவை, ஒரு டாக்டரை விட, ஒரு கெமிஸ்ட் அதிகம் சிலாகிக்கும் வழிமுறைகள். உதாரணத்துக்கு சில ட்ரக்ஸ்/ இம்மருந்துகள், எவ்வித ஆபத்துமின்றி தயாரிக்கப்படும் மருந்துகள். ஆனா இவற்றால ஜுரத்தை வரவழைக்க முடியும்.. தோலில் எரிச்சலையும் நமைச்சலையும் உண்டு பண்ண முடியும்... தொண்டைத் தண்ணி வற்றும்படி பண்ண முடியும்..''

''நிச்சயம் போலியோ கால்களைப் பண்ண முடியாது'' - குறிப்பிட்டுக் காட்டினேன் நான்.

''ஆமாமாம். ஆனா யார் சொன்னது, மிஸ்டர் வெனபிள்ளுடைய கால்கள் சூம்பிப் போனவை என்று?''

''வெல்- அவரோட டாக்டர்னு நினைக்கிறேன்.''

''இருக்கலாம். ஆனா இது பற்றியும் சின்ன தகவல்கள் திரட்ட நான் முயற்சி பண்ணியிருக்கேன். மிஸ்டர் வெனபிள்ளுடைய டாக்டர் லண்டன்ல இருக்கார் - அவர் அங்கே நிபுணர்கள் நிரம்பியிருக்கும் ஒரு ஹார்லி தெரு டாக்டர். வெனபிள் இங்கே வந்தவுடனே அவரை ஒரு லோக்கல் டாக்டர் பரிசோதிச்சார்னு சொல்வது மிகவும் சரியே... ஆனா

அவர் இப்ப தொழிலை மூடிட்டு வெளிநாட்டுல வாழ போயிட்டார். இப்போதைய இந்த டாக்டர், மிஸ்டர் வெனபிள்ளை வந்து பார்த்ததே கிடையாது. மாசத்துக்கு ஒரு தடவை மிஸ்டர் வெனபிள்தான் ஹார்லி தெருவுக்குப் போயிட்டு வரார்.''

பேசிக் கொண்டிருந்தவனை நான் ஆர்வமாய்ப் பார்த்தேன்.

''இப்படியேயிருக்கட்டுமே... இதுல எதுவும் வில்லங்கம் இருப்பதா எனக்குப் படலே.''

''எனக்கு இருக்கும் அனுபவங்கள் உங்களுக்கு இல்ல'' என்றான் ஓஸ்பார்ன். ''ஒரு தாழ்மையான உதாரணம் உங்களுக்கு எல்லாத்தையும் விளக்கும். மிஸஸ் **அ**. இவ, இன்ஷுரன்ஸ் வசதிகளை ஒரு வருஷமா அனுபவிச்சுக்கிட்டிருக்கா. ஆனா மூணு இடங்களிலிருந்து. ஓரிடத்துல மிஸஸ் **ஆ**. இன்னோர் இடத்துல மிஸஸ் **இ**. எப்படி? எப்படினா, மிஸஸ் ஆ-வும், மிஸஸ் இ-யும் அவங்க இன்ஷுரன்ஸ் கார்டுகளை ஏதோவொரு காரணத்துக்காக மிஸஸ் அ-க்கு, விட்டுக் கொடுத்திருக்காங்க. அதனால. ஆகவே மிஸஸ் அ-வால் மூணு தடவை பணம் பண்ண முடிந்தது.''

''எனக்கு இந்த உதாரணத்தால ஒண்ணும் விளங்கலியே...''

''ஒரு பேச்சுக்கு வெச்சுப்போம்... ஒரு பேச்சுக்கு...'' இப்போது அவனுடைய ஆள் காட்டி விரல் கிளர்ச்சியில் துள்ளியது. ''ரொம்ப ஏழ்மையான நிலையில இருக்கும் வாதம் கண்ட ஆசாமி ஒருத்தனை நம்முடைய மிஸ்டர் வெனபிள் தொடர்பு கொள்கிறார்னு வெச்சுப்பம். இவன் ஒரு வழியை சொல்றான். அந்த ஆசாமி இவனை மாதிரியே இருக்கான்னு வெச்சுப்பம் - அதாவது பொதுவான தோற்ற அமைப்பில், அவ்ளோதான்.. அதுக்கு மேல் கிடையாது. நெஜமாவே வாதம் கண்ட அந்த ஆளு தன்னை வெனபிள்னு சொல்லிக்கிட்டு ஒரு ஸ்பெஷலிஸ்ட்கிட்டே போறார். பரிசோதனை முடியுது. கேஸ் ஹிஸ்டரியும் தயாராகிடுது... அப்புறமா மிஸ்டர் வெனபிள் கிராமத்துல ஒரு வீட்டை எடுத்துக்கறார். லோக்கல் பொது மருத்துவர் சீக்கிரத்திலேயே கடையை மூடும் திட்டத்துல இருக்கார். இப்ப மறுபடியும் நிஜ வாதங் கண்டவன் பொது மருத்துவரைப் போய் பார்க்கிறான்... பரிசோதனையும் நடக்குது. அடஅடா! மிஸ்டர் வெனபிளின் கால்கள் வாதம் கண்டு சூம்பி நடக்க இயலாதவை அப்படினு படு துல்லியமா ரெக்கார்ட் தயார்! இங்கே லோக்கலா, அவர் எப்போதெல்லாம் பார்க்கப்படுகின்றாரோ அப்பல்லாம் வீல் சேர்லியேதானிருப்பார்.''

''அவனுடைய வேலையாட்களுக்கு நிச்சயமா தெரிஞ்சிருக்குமே'' - நான் ஆட்சேபித்தேன். ''அவன் டிரைவர்...''

''ஆனா ஒருவேளை அந்த அத்தனை பேரும் சேர்ந்து ஒரு கூட்டமாக இருந்தால்... அதாவது கேங்க்? அந்த டிரைவர் உட்பட. இதைவிட சிம்பிளா உங்க கேள்விக்கு வேறெப்படி பதில் இருக்க முடியும்?''

''ஓஹ்... ஆனா ஏன்?''

''ஆஹ்'' என்றான் ஓஸ்பார்ன். ''இது இன்னொரு கேள்வி, இல்லையா? முக்கியமான கேள்வி. நான் என்னோட ஊகத்தை உங்ககிட்டே சொல்ல மாட்டேன் - கேட்டால் நீங்க சிரிப்பீங்க. ஆனா, இதனால, தன்னைப் போன்ற 'மாற்று ஆள்' ஒருத்தனைத் தேடிக்கிட்டிருக்கும் ஒருத்தனுக்கு அப்படிப்பட்ட 'மாற்று ஆள்' அற்புதமா அமைஞ்சுடறான். அவன், இங்கே இருக்கலாம். அங்கே இருக்கலாம். எங்கேயும் இருக்கலாம்... யாருக்கும் அது தெரியாது. பாடிங்டன்ல கூட நடந்துக்கிட்டிருக்கலாம்! ஆனா இதைத்தான் சாத்தியமே கிடையாதும்பாங்க. போலியோவைக் காரணம் காட்டுவாங்க...''

மிஸ்டர் ஓஸ்பார்ன் சற்று நிறுத்திக் கொண்டு கைக்கடியாரத்தைப் பார்த்தான். ''என் பஸ் வரும் நேரம். சீக்கிரமா கிளம்பணும். இதைப் பற்றியே சதாசர்வ காலமும் நினைச்சுக்கிட்டேயிருக்கேன், பாருங்க! எப்படியாவது இதை நிரூபிக்க நான் துடிப்பதனாலனு நீங்க சொல்லலாம். அதனாலதான் நான் அங்கே வந்தேன்- அருகிருக்கும் மைதானத்துக்குப் போனேன் - ஒரு சின்ன உளவறிதல். அது அநாகரீகம்னு நீங்க சொல்லலாம் - நானும் ஏத்துக்கிறேன். ஆனா, இந்த உளவு வேலை, கேஸைப் பற்றி நல்லா புரிந்து கொள்ள எனும்போது - க்ரிமினலைக் கொண்டு வந்து சபைல நிறுத்து எனும்போது - தவறே கிடையாது. ஒருவேளை அங்கே மைதானத்துல நான் மிஸ்டர் வெனபிள்ளை ஓசைப்படாம நடந்துக்கிட்டிருக்கும் நிலைல பார்க்கிறேன்னு வெச்சுக்கங்க... எப்படியிருக்கும்! ஒருவேளை அவங்க ஜன்னல் திரைச் சீலைகளை இழுத்து விடலேனு வெச்சுக்குங்க... நான் சுவரேறி ஜன்னல் வழியா பார்க்க - அங்கே, தன்னை யார் வந்து வேவு பார்க்கப் போறாங்கன்னு மெத்தனமாயிருக்கும் அவன் லைப்ரரியில நடந்தபடி படிச்சுக்கிட்டேயிருப்பதை நான் பார்த்துடறேன். வாவ்! இதெல்லாம் நடக்கும்னு அவன் ஏன் எதிர்பார்க்கணும்! மாட்டான்- அவனைப் பொறுத்த வரைக்கும் இங்கே அவனை யாரும் சந்தேகப்படுவது கிடையாது.''

''அடேயப்பா... அன்னிக்கு ராத்திரி நீங்க பார்த்த அந்த ஆசாமி வெனபிள்தான்னு எதுக்காக இப்படி விடாப்படியா இருக்கீங்க?''

''ஏன்னா, எனக்குத் தெரியும் அது வெனபிள்தான்னு.''

விருட்டென்று எழுந்து ஓட ஆரம்பித்தான் அவன். ''என் பஸ் வருது. உங்களை நான் சந்திச்சதுல மிக மகிழ்றேன், மிஸ்டர் ஈஸ்ட்டர் - ப்ரூக். அங்கே ப்ரியர்ஸ் கோர்ட்ல நான் என்ன பண்ணிக்கிட்டிருந்தேன்னு உங்ககிட்டே நான் சொல்லிட்டதுல என் பாரம் முழுக்க குறைஞ்சது. நான் சொன்ன அத்தனையும் உங்களுக்கு பெரிய பெரிய முட்டாள்தனமா பட்டிருக்கும் என்பதுல எனக்கு சந்தேகமே கிடையாது.''

''முழுக்கவும் அப்படி முட்டாள்தனம்னு சொல்லிட முடியாது'' என்றேன் நான். ''ஆனா நீங்க மிஸ்டர் வெனபிள் பற்றி என்ன நினைச்சு வெச்சிருக்கீங்கன்னு இன்னும் என்கிட்டே சொல்லலே.''

மிஸ்டர் ஓஸ்பார்ன் ஆடு திருடியவனைப் போல் ஆனான். ''சொன்னா, நீங்க பொத்துக்கிட்டு சிரிப்பீங்க. எல்லாரும் அவன் பெரிய பணக்காரன்னு சொல்றாங்களே ஒழிய ஒருத்தர் கூட எப்படி அவன் அத்தனை பணம் பண்ணினான்னு தெரிஞ்சுக்க விரும்பலே. நான் என்ன நினைக்கிறேன்னு உங்ககிட்டே சொல்றேன். அதாவது: திட்டம் போடு... அந்த திட்டத்தை செயல்படுத்த ஒரு கேங்கை வெச்சுக்க. இது உங்களுக்கு பிரயோஜனமற்ற முட்டாள்தனமா படலாம். ஆனால்...''

பஸ் வந்து நின்றது. மிஸ்டர் ஓஸ்பார்ன் அதற்காக ஓடினான்.

ஆழ்ந்த சிந்தனையோடு அதே பாதையில் மேற்கொண்டு நான் என் வீட்டுக்கு நடந்தேன். மிஸ்டர் ஓஸ்பார்ன் கோடிக் காட்டியது ஓர் அற்புதமான காட்சி... ஊகம். அதில் ஜஸ்ட் சாத்தியமான என்னவோ ஒன்று இருக்கலாம் என்பதை நான் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

அத்தியாயம் 20

மார்க் ஈஸ்ட்டர்– ப்ரூக் பதிந்தவை

I

அடுத்த நாளன்று நான் போர்ன்- மவுத்துக்குக் கிளம்புவதாய், தொடர்ந்த காலைப் பொழுதில் நான் ஜிஞ்ஜருக்கு போன் போட்டபோது அவளிடம் சொன்னேன்.

''நான் பக்கத்துலேயே சின்னதா அழகாயிருக்கிற டூர் பார்க் எனும் ஒரு ஓட்டலைப் பார்த்து வெச்சிருக்கேன்'' என்றாள். (ஏன் என்பது கடவுளுக்கே வெளிச்சம்) ''அதுல, யாரும் கவனிக்க முடியாத சின்னச் சின்ன பக்கவாட்டு கதவுகள் இருக்கு. நான் அப்படியே லண்டன் வரை நழுவி உங்களை வந்து பார்க்கலாம்.''

''நீ அப்படியெல்லாம் எதுவும் பண்ணக் கூடாதுனு சொல்லியிருக்கேன். ஆனா அப்படி நீ வந்து பார்த்தால், அது ஓர் இன்பமான தருணமா எனக்கு அமையும். போரடிக்குதுப்பா! நீ இங்கே வரலேனு வெச்சுக்க... நான் அதே கதவுகள் வழியா நழுவி வந்து உன்னைப் பார்த்தாலும் பார்த்துடலாம்.''

இப்போது ஏதோ ஒன்று பொட்டென என்னை அறைந்தது.

''ஜிஞ்ஜர்! உன் குரல்... அது என்னவோ போல மாறியிருக்கு... மொத்தமா...''

''ஓ அதுவா! அது ஒண்ணுமில்ல, கவலைப்படாதீங்க.''

''ஆனா, உன் குரல்...''

''எனக்குக் கொஞ்சம் தொண்டைப் புண்ணோ, இல்ல அதுபோல எதுவோ வந்திருக்கு...''

''ஜிஞ்ஜர்!''

''அய்யோ, போதும் மார்க்! தொண்டைப் புண்ணு யாருக்கு வேணும்னாலும் வரலாம். எனக்கு ஜலதோஷம் பிடிக்கப் போகுதுனு நினைக்கிறேன். இது இல்லேனா, குளிர் ஜுரம்...''

''குளிர் ஜுரம்? லுக் ஹியர்... பேச்சை மாத்தாதே. நீ நல்லாயிருக்கியா, இல்லையா?''

''குழப்பிக்காதீங்க. நான் நல்லா இருக்கேன்.''

''நீ எப்படி உணர்றேனு எனக்கு அப்படியே துல்லியமா விளக்கு. குளிர் ஜுரம் வரும்போல உனக்குப் படுதா, ஆங்? ஃப்ளூ மாதிரி உணர்றியா?''

''வெல் - அதாவது... உடம்பு முழுக்க கொஞ்சம் வலி இருக்கு. ஃப்ளூனா என்ன மாதிரியான வலி இருக்கும்னு தெரியணுமே உங்களுக்கு...''

''டெம்பரேச்சர்?''

''வெல்... சொல்லப் போனா, யெஸ். கொஞ்சம்...''

அப்படியே உட்கார்ந்துப் போனேன் நான். என் உடலெங்கும் சில்லிட்டபடி ஏதோ ஒரு போர்வை கவிழ்வதை உணர்ந்தேன். பயம் கொண்டேன். கிலியடைந்தேன். எத்தனைதான் ஒப்புக் கொள்வதில் ஜிஞ்ஜர் மறுப்புக் காட்டிக் கொண்டாலும், எனக்கு நன்றாகவே தெரிந்தது... *ஜிஞ்ஜரும் பயப்படுகின்றாள்.*

அவள் குரல் மீண்டும் பேசியது:

''மார்க் - மூர்ச்சையாகிடாதீங்க. நீங்க மயங்கறீங்க, யெஸ் - ஆனா இதுல கிலி கொள்ள நெஜமா எதுவுமில்ல, மார்க்.''

''திகிலடைய எதுவும் இல்லாம இருக்கலாம்மா. ஆனா நாம தேவையான அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளையும் எடுத்துக்கணும். உன் டாக்டருக்கு போன் போடு. அவரை வரச் சொல்லு. வந்து உன்னைப் பரிசோதிக்கச் சொல்லு. இப்பவே...''

''ஆல் ரைட்... ஆனா - அவர் நான் ஒரு பிரமாதமான குழப்பவாதினு நினைப்பார்.''

''அதைப் பற்றி நமக்கென்ன கவலை. பண்ணு! அப்புறம், அவர் பார்த்துட்டுப் போனதுக்கு பிறகு எனக்குப் போன் பண்ணு.''

நான் ரிஸீவரை வைத்த பிறகு வெகு நேரமாய் அஃறிணையான தொலைபேசியின் வளைந்த விளிம்புகளையே பார்த்தபடி உட்கார்ந்திருந்தேன். 'திகில் - ம்ம்.. நான் கிலி கொள்ள வழிவிடக் கூடாது. வருடத்தின் இந்தக் காலகட்டத்துல ஃப்ளூ ஜுரம் ஒரு வாடிக்கை. இதை டாக்டரே வந்து சொல்லிட்டுப் போனார். சொல்லப் போனா இது அவளுக்கு வெறும் குளிரின் தாக்கமாத்தான் இருக்கும்.'

மயில் நிற பெரிய கவுனில் அபசகுனமான குறியீடுகள் வரையப்பெற்று நடந்து வரும் ஸிபில்லை நான் என் மனக் கண்ணில் பார்த்தேன். ஈர்க்கும் அதே சமயம் கட்டளையாய் பொங்கியெழும் தெரஸாவின் குரல் எனக்குக் கேட்டது. கோலம் போடப்பட்ட தரை....அதில் பெல்லா உச்சாடனம் பண்ணும் மந்திரம்... அங்கு அவள் தூக்கிப் பிடிக்கப்பட்டிருக்கும் கழுத்தறுத்த சேவலின் துடிப்பு...

நான்சென்ஸ்... எல்லாமே நான்சென்ஸ்... முட்டாள்தனம்... முழுக்க முழுக்க மூட நம்பிக்கையின் உச்சம்.

அந்தப் பெட்டி - ம்ம்... அதனை வெகு சுலபமாய் மண்டையிலிருந்து ஒதுக்கி வைக்க முடியவில்லையே. அந்தப் பெட்டி, மனித மூட நம்பிக்கையை முன் வைக்கவில்லையே... அது ஸ்தூலமான அறிவியல் முன்னேற்றத்தின் சான்றல்லவா. அறிவியல் சாத்தியம்...ம்ம், ஆனால் ஆனா-ல் அதெல்லாம் சாத்தியம் கிடையாது... அதாவது அப்படியொன்றும் சாத்தியம் என்று நினைக்க முடியாது...

உட்கார்ந்து கொண்டு டெலிபோனை நான் முறைத்தபடியிருந்த நிலையில் என்னை பிடித்தார் மிஸஸ் டேனே கேல்த்ராப்.

''என்ன நடந்தது?''

''ஜிஞ்ஜர்...'' என்று ஆரம்பித்த நான், ''...அவளுக்கு உடம்பு சரியில்லை'' என்றேன் .

இதெல்லாம் வெறும் முட்டாள்தனம் என்று அவர் சொல்ல வேண்டுமென நான் எதிர்பார்த்தேன். எனக்கு அவர் தைரியமூட்ட வேண்டும் என நினைத்தேன். ஆனால் அவர் எனக்கு மனோதைரியத்தைத் தரவில்லை.

''பாவம்'' என்றார். ''யெஸ், பரிதாபம்.''

''இதெல்லாம் சாத்தியமில்லை'' என்று கெஞ்சினேன் நான். ''அவங்க என்ன பண்ண முடியும்னு சொல்லிக்கிறாங்களோ அதை ஒரேயொரு தடவை பண்ணுவது கூட சாத்தியம் கிடையாது.''

''அப்படியா?''

''நீங்க நான் சொல்வதை நம்பலே - உங்களால நம்ப முடியாது.''

''மை டியர் மார்க்'' என்றார் மிஸஸ் கேத்ராப். ''நீங்களும் ஜிஞ்ஜரும் இப்படிப்பட்ட ஒரு விஷயம் சாத்தியம்னு ஏற்கெனவே ஒத்துக்கிட்டிருக்கீங்க. இல்லேனா இப்ப நீங்க ரெண்டு பேரும் பண்ணியிருக்கும் எதையுமே பண்ணியிருக்க மாட்டீங்க.''

''இதுல, எங்களோட அந்த நம்பிக்கைதான் ரெண்டு பேரையும் இப்படி ஆட்டிப் படைக்குது - நடக்கும் எனும் நினைப்பே எங்களைப் படுமோசமாக்குது.''

''நடக்கும்னு நம்புமளவுக்கு நீங்க போக வேண்டாமே - சாட்சி கிடைத்தால் நம்பித்தான் தீரணும் அப்படினு ஆகிடுங்க.''

''சாட்சி? என்ன சாட்சி?''

''ஜிஞ்ஜருக்கு உடம்பு சுகமில்லாம ஆகியிருப்பது, சாட்சி'' என்றார் மிஸஸ் கேத்ராப்.

நான் இவரை வெறுத்தேன். என் குரல் கோபமாய் எழுந்தது.

''நீங்க எதுக்காக இப்படி புடிச்ச முயலுக்கு மூணு காலுனு நிச்சயமா இருக்கணும்? வந்திருப்பது ஜஸ்ட் கொஞ்சம் ஜலதோஷம் - இல்லேனா அந்த வகையில ஏதோ சளி. எதுக்காக நீங்க படுமோசமான முடிவைத்தான் நம்பணும்னு பிடிவாதமா இருக்கணும்?''

''ஏன்னா, வந்திருப்பது படுமோசமானதுதான்னா, அதை நாம எதிர் கொண்டாகணும் - உடனே. காலம் கடப்பதற்குள். நம் முகத்தை வெறுமனே மண்ணுல புதைச்சு அழுதுக்கிட்டே இருந்துடக் கூடாது.''

''அந்த மூணு பொம்பிளைங்களும் நடத்தும் கேலிக் கூத்து, வேலை செய்யும்னா சொல்றீங்க? அந்த ஆவிக் கூட்டம், வாக்கு, சேவல் காவு, அதுங்க காட்டும் தந்திரங்கள்?''

''என்னவோ ஒண்ணு, வேலை பண்ணத்தான் செய்யுது மிஸ்டர் மார்க்'' என்றார் தீர்மானமாய், மிஸஸ் டேனே கேல்த்ராப். ''அதைத்தான் நாம எதிர் கொண்டு சந்திக்கணும். இதுல, சொல்லப் போனால், முழுக்கவுமே, வலைவெச்சு இரையைப் பிடிக்கும் வித்தைதான். யெஸ். அவளுங்க பண்ணும் எல்லாமே ஒரு சூழலை நிச்சயப்படுத்தி உருவாக்கத்தான் - அட்மாஸ்ஃபியர் - இதுல, அப்படி உருவாக்கி நம் நெஞ்சில் நிலைநிறுத்தப் படும் சூழல்தான் மிக முக்கியம். ஆனா இப்படி பண்ணப்படும் பொறிகளுக்குப் பின்னால்- வலைக்குப் பின்னால் இருக்கு, உண்மையான விஷயம் - வேலை பண்ணும் அந்த நிஜ விஷயம்.''

''தூரத்திலிருக்கும் பகுதிக்கு அனுப்பி இசைக்கப்படும் ரேடியோ அலைகள் போல..?''

''அதுபோல ஏதோ ஒண்ணு. கவனியுங்க மார்க்... அப்பப்போ பல சமாச்சாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுக்கிட்டேதானிருக்கு - நம்மை பயமுறுத்தும் கண்டுபிடிப்புகளும் உண்டு. இந்த புது அறிவியல் அறிவுல சின்னச் சின்ன மாற்றங்களைச் செய்து, அப்படி வரும் மற்றுமொரு புது கண்டுபிடிப்பை, சில கிரகம் பிடிச்ச ஆளுங்க அவங்களுடைய சொந்த காரணங்களுக்காக பயன்படுத்திப்பாங்க. ஒண்ணு தெரியுமா - தெரஸாவின் அப்பா ஓர் இயற்பியலாளர்.''

''ஆனா அது என்ன? என்ன கண்டுபிடிப்பு? அந்தப் பாழாப் போற பெட்டி! சரி... அப்ப அதை நாம அபகரிச்சு என்னனு பார்த்து விட்டால்? போலீஸைக் கூப்பிட்டுக்கிட்டுப் போய்...''

''அந்தப் பெட்டியை அபகரிச்சு அதன் மேல் மேற்கொண்டு எதுவும் கேஸ் பண்ண காரணமிருந்தால்தான் போலீஸ் வாரண்டோட வரும், மிஸ்டர் மார்க்.''

''நான் இப்ப நேரா அங்கே போய் அந்த ஒப்பேறாத பொட்டியை ஒரே போடா போட்டு உடைச்சு விட்டால்?''

இதற்கு மிஸஸ் டேனே கேத்ராப் மறுத்து தலையசைத்தார். ''நீங்க என்கிட்டே சொன்ன அந்த இரவு நாடகத்தை வெச்சு சொல்றேன். அந்த பில்லி சூனியத்தால் வரும் கேடு - நெஜமாவே அப்படியேதாவது கெடுதல் நடந்திருப்பின் - அது அன்னிக்கு ராத்திரியே நடந்திருக்கும். அந்த சூனியம் அன்றைய இரவிலேயே ஜிஞ்ஜர் மேல தன் வேலையைத் துவங்கியிருக்கணும்...''

நான் என் உள்ளங்கைகளுக்குள் என் முகத்தைப் புதைத்துக் கொண்டு குமுறினேன். ''இந்த கண்றாவி பிஸினஸை ஆரம்பிச்சிருக்கவே கூடாது.''

மிஸஸ் டேனே கறாராய் சொன்னார்: ''உங்க ரெண்டு பேரோட இலக்கும் பிரமாதமானது. மேலும், என்ன நடந்ததோ அதெல்லாமும் நடந்து முடிஞ்சாச்சு. டாக்டர் வந்து பார்த்துட்டுப் போன பிறகு ஜிஞ்ஜர் உங்களுக்குப் பண்ணும் டெலிபோனிலிருந்து உங்களுக்கு மேலும் விஷயங்கள் தெரிய வரும். அவ, ரூடாவுக்கும் போன் போடுவானு நினைக்கிறேன்.''

நான் இந்தக் குறிப்புக்கு முக்கியத்துவம் தந்தேன். ''அப்ப நான் உடனடியா கிளம்பறேன்.''

இப்படி சொல்லிவிட்டு நான் கிளம்பிக் கொண்டிருந்தபோது திடீரென்று எதிர்பாராது, ''நான் முட்டாளால்ல நடந்துக்கிட்டிருக்கேன்''

என்று தானாய் கத்தி விட்டார் மிஸஸ் டேனே. ''ஆமாம்... நானே ஒத்துக்கிறேன். முட்டாளா இருந்திருக்கேன். வலை - பொறி - கண்ணி! இந்த வார்த்தைகளாலே நம்மை நாமே முற்றுகையிட்டுக்கிட்டிருக்கோம். நாம எப்படி சிந்திச்சு பயப்படணும்னு அவங்க விரும்பினாங்களோ அதுபோலவே நாம சிந்திக்க ஆரம்பிச்சுட்டோம் என்பதை என்னால ஒப்புக்காம இருக்க முடியலே.''

யெஸ்... இவர் சொல்வது சரி. ஆனால் எனக்கு வேறெந்த வகையிலும் சிந்திக்க வழிவகை தெரியவில்லை.

ஜிஞ்ஜர் எனக்கு இரண்டு மணி நேரங்கள் கழித்து போன் செய்தாள்.

''வந்துட்டுப் போய்ட்டார்'' என்றாள். ''புதிர்ப் போடப்பட்டவரைப் போல ஆனார். இது ஃப்ளூ போல தெரியலேன்னார். என்னை படுக்க அனுப்பிய அவர் சில மருந்துகள் தந்தனுப்பறேன்னார். என் டெம்பரேச்சர் நல்லா ஏறிடுச்சு. ஆனா இது ஃப்ளூவாலத்தான் இருக்கும், இல்லையா மார்க்?''

ஜிஞ்ஜரின் துணிவு எனும் தளத்தின் மேல் ஆதரவற்ற பரிதவிப்பு உதித்திருப்பது, அவளுடைய குரலில் இப்போது தெரிந்தது.

''உனக்கு எல்லாம் சரியாகிடும்'' என்றேன் நான், ஆனால் கிலேசமாய். ''கேட்குதா? உனக்கு எல்லாம் சரியாகிடும். ரொம்ப குழப்பமா உணர்றியா நீ?''

''வெல்... காய்ச்சல் ஏறும் சூடு - வலி - புதுசா கொஞ்ச நேரமா தூக்கித் தூக்கிப் போடும் நடு நடுக்கம்... எல்லாமே குழப்புது. என் கால், என்கை, எல்லாமே வெளுப்பாகுது, மார்க். எது என் மேல தொட்டாலும் வெறுப்பு உண்டாகுது. ஓ, மார்க்...என்னையே நான்...''

''இது ஜுரவேகம் டார்லிங். கவனி, பேசாம படுத்துடு. நான் உன்கிட்டே இப்ப ஓடி வரேன்! இப்பவே. உடனேயே. நோ, தடுக்காதே.''

''ஆல் ரைட், வாங்க. நீங்க வருவது எனக்கு நிம்மதியைத் தருது. ஒத்துக்கறேன் மிஸ்டர் மார்க். இப்ப, கொஞ்ச நேரமா, நான், நான் நினைச்ச அளவுக்கு துணிச்சல் உள்ளவளா இல்ல, மார்க்...''

II

நான் லெஜனுக்கு போன் போட்டேன். ''மிஸ் காரிகனுக்கு உடம்பு மோசமாகியிருக்கு'' என்றேன்.

''என்ன?''

''சொன்னது கேட்குது இல்ல? அப்புறம் என்னன்னா? அவளுக்கு உடம்பு சரியில்ல. அவளுடைய டாக்டரையே கூப்பிட்டிருக்கா அவ. வந்திருப்பது ஜுரமா இருக்கலாங்கிறார் அவர். ஆனா அப்படியில்லாமலும் இருக்கலாம். இதுல நீங்க என்ன பண்ண முடியும்னு எனக்கு தெரியாது. எனக்கு இப்ப வரும் ஒரே ஐடியா என்னன்னா: உடனடியா ஒரு ஸ்பெஷலிஸ்ட்டை அழைச்சு ஜிஞ்ஜரைக் காட்டி விடுவதுதான்...''

''என்ன வகையான ஸ்பெஷலிஸ்ட்?''

''ஒரு மன நல நிபுணர் - இல்லேனா, ஒரு மனநல ஆய்வாளர். ஒரு உளவியல் நிபுணர். எந்த வகையான மனம் சம்பந்தப்பட்ட ஸ்பெஷலிஸ்ட்டாயிருந்தாலும் சரி. ஹிப்னாடிஸம் எனப்படும் மனவசியம்... மூளைச் சலவை... மனசுக்குள்ளே தப்பான எதையோ நிரந்தரமா ஏற்றி ஆளையே மாற்றுவது... இதுபோன்றவற்றில் கைதேர்ந்த மருத்துவ நிபுணர் வேணும். இப்படிப்பட்டவற்றுக்கு மருத்துவம் பார்ப்பவர்கள் இருக்காங்களா?''

''அஃப்கோர்ஸ் இருக்காங்க. யெஸ். நீங்க சொன்னவற்றில் நிபுணத்துவம் பெற்ற ஓரிரு மருத்துவர்கள் எங்க துறையிலேயே இருக்காங்க. உங்க ஐடியா பிரமாதம்னு சொல்வேன். அவங்களுக்கு ஃப்ளூவா இருக்கலாம் - ஆனா அப்படியில்லாமல் மனசை மாசுப்படுத்தி பண்ணும் ஹிப்னாடிஸம் போன்ற நாமறியாத ஏதோ ஒன்றாகவும் இருக்கலாம். கடவுளே... மிஸ்டர் ஈஸ்ட்டர் - ப்ரூக், கவனிச்சீங்களா? இப்படிப்பட்ட ஏதோ ஒன்று இருக்கணும்னுதான் நாம எதிர்பார்த்துக் கிட்டே இருந்தோம்...''

நான் ரிஸீவரை ஓங்கியறைந்து வைத்தேன். இது, உளவியல் பற்றி புது விஷயங்களை நாங்கள் கற்றுக் கொள்ளும் நேரமா என்ன? நான் கவலைப்பட்டுக் கொண்டிருப்பதெல்லாம் ஜிஞ்ஜர் பற்றி. பயந்து நடுங்கி வெலவெலத்து. நாங்களிருவருமே இவ்விஷயத்தில் இப்படியெல்லாம் நம்பியதே இல்லை. அல்லது, நம்பினோமா? நோ, கிடையாது. நாங்கள் நம்பவில்லை. ஆனால்... ஆனால்...

வெளிறிய குதிரை, இப்போது அதன் நிஜத்தன்மையை நிரூபிக்கத் துவங்கி விட்டது.

நான் என் உள்ளங்கைகளுக்குள் என் முகத்தினைப் புதைத்துக் கொண்டு குமுறினேன்.

அத்தியாயம் 21

மார்க் ஈஸ்ட்டர் – ப்ரூக் பதிந்தவை

I

தொடர்ந்த இரு தினங்களை நான் மறப்பேனா என்பது சந்தேகமே. இருட்டறையில் பார்க்கும்போது அச்சுறுத்திய ஒரு பயங்கர சினிமா போல தோன்றியது அது. அவளுடைய பிளாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்த ஜிஞ்ஜர் ஒரு நர்ஸிங் ஹோமில் வைக்கப்பட்டிருந்தாள். அவளை பார்வையாளர்கள் பார்க்கும் நேரத்தில் மட்டுமே நான்கூட பார்க்க அனுமதிக்கப்பட்டேன்.

அவளுடைய சொந்த டாக்டரேகூட நடக்கும் சமாச்சாரங்கள் பற்றி குழப்பமான நிலையிலேயே இருந்தார். என்ன நடக்கின்றது என்பதை அவரால் விளங்கிக் கொள்ளவே இயலவில்லை. அவருடைய எண்ணத்தின்படி அவளுக்கு வந்திருப்பது தீவிர நெஞ்சக ஒவ்வாமையான broncho pneumonia... இது சில அசாதாரண அறிகுறிகளால் சற்று சிக்கலாய் தோன்றினாலும் ஒவ்வொரு முறை இந்நோய் வரும்போதும் இப்படித்தான் இதில் ஒரு சிக்கலிருக்கும் என்றார் அவர். ''ஒரே மாதிரியாய் ஒரு நோய் எல்லோருக்கும் வருவதில்லையே''. இப்படிச் சொன்ன டாக்டர், ஒரு சில நோயாளிகளின் உடம்பு தரப்படும் சிகிச்சை மருந்துகளுக்கு ஒத்துழைக்காமல் பலனின்றி இறந்து விடுவார்கள் என முடித்தார்.

சொல்லப் போனால் டாக்டர் தந்த விளக்கங்கள் அனைத்தும் நிஜமே. ஜிஞ்ஜருக்கு தீவிர நெஞ்சக ஒவ்வாமையான broncho pneumonia தான். அவள் தவித்துக் கொண்டிருக்கும் நோய் பற்றி எவ்வித மர்மமும் கிடையாது. தீவிர நெஞ்சக ஒவ்வாமையே அவளுக்கு - ஆனால் முற்றிய நிலையில்.

பட்டாளத்து உள நிபுணரோடு உரையாடினேன். சேவலைப் போன்று கழுத்தை முன்னும் பின்னும் ஆட்டிக் கொண்டு நடந்தபடியிருந்த அவரது கண்கள் அவரணிந்திருந்த கனமான கண்ணாடிகளுக்குப் பின்னாலும் பிரகாசமாகவே இருந்தன- எப்போதும்.

என்னை அளவற்ற கேள்விகள் அவர் கேட்டார். அவற்றில் பாதிக்கு மேல் இந்த கேஸோடு துளியும் தொடர்பற்றதாகவே எனக்குத் தோன்றியது. ஆனால் அனைத்து கேள்விகளுக்கும் ஊகமும் விவேகமும் கலந்து அவர் ஆமோதிப்பதாய் தலையசைத்துக் கொண்டேயிருந்ததால் அனைத்து கேள்விகளுக்கும் ஓர் அர்த்தம் இருந்தாக வேண்டும். என்ன நினைக்கின்றார் என்பதை முழுக்கவும் காட்டிக் கொள்ள அவர் தன்னை அனுமதிக்காததில் படு புத்திசாலியாய் திகழ்ந்தார். அவ்வப்போது ஏதோ புரிந்து கொண்டு விட்டதைப் போல அவர் உச்சரித்த சில சமிக்ஞைகளை அவருடைய தொழில் மேதாவித்தனமாய் கொண்டேன் நான். பல ஹிப்னாடிஸம் முறைகளை அவர் ஜிஞ்ஜரின் மேல் முயற்சித்து பார்த்தாய் தோன்றியது எனக்கு... ஆனால் அந்த எதிலும் உருப்படியாய் சொல்லும்படி ஏதும் அவருக்கு கிடைக்கவில்லை என்றே எனக்குப் பட்டது.

நான் என் நண்பர்களையும் பொழுதுபோக்குகளையும் தவிர்த்தேன். ஆயினும் தனிமையிலிருந்த எனது இருப்பு எவ்வித பிடிப்புமின்றி பரிதவித்தது.

இறுதியாய், யாராவது வேண்டுமே என்ற பரிதவிப்பான ஒரு நிலையில் பாப்பி இருந்த மலரலங்காரக் கடைக்கு போன் போட்டேன். என்னிடம் இன்றிரவு டின்னர் எடுத்துக் கொள்ள அவள் விரும்புவாளா? நிச்சயம். அதை மிக நேசிப்பாள் அவள்.

ஃபாண்டஸீக்கு அவளை நான் அழைத்துப்போனேன். சந்தோஷமாய் தொணதொணத்துக் கொண்டு பாப்பி இருக்க, அவளுடைய அருகாமையில் நான் ஆறுதல் கண்டேன். ஆனால் இவ்வாறு ஆறுதல் தரவல்ல அவளுடைய குணாதிசயத்துக்காக மட்டும் பாப்பியை நான் இங்கு அழைத்திருக்கவில்லை. அருமையான உணவு மற்றும் பானம் இவற்றால் அவளை என்னகப்படுத்திய பிறகு, நான் ஜாக்கிரதையாய் வேவு பார்ப்பதில் இறங்கினேன். தனக்கு என்ன தெரிந்திருக்கின்றது என்பதன் முக்கியத்துவம் தெரியாமலேயே அவள் சில விஷயங்களைத் தெரிந்து வைத்திருக்க சாத்தியம் உள்ளதாய் எனக்குப் பட்டது. என் ஃப்ரண்ட் ஜிஞ்ஜரை அவளுக்கு ஞாபகம் இருக்கின்றதா என கேட்டேன். அவளுடைய பெரிய

அகண்ட நீல நிற விழிகளை நன்றாய் விரித்து ''அஃப்கோர்ஸ்'' என்று சொன்னாள். இப்போது அவள் என்ன பண்ணிக் கொண்டிருக்கிறாள் என்றும் கேட்டாள்.

''ரொம்ப உடம்புக்கு முடியாம இருக்கா'' என்றேன் நான்.

''நல்ல பொண்ணு'' - மிகவும் விசப்படுபவளைப் போல ஆனாள் பாப்பி.

''அவ எதிலோ போய் நல்லா மாட்டிக்கிட்டா போல தெரியுது'' - நான் சொன்னேன். ''ஆங், அது பற்றி அவ உன்கிட்டே கூட ஏதோ ஆலோசனைகள் கேட்டாற் போல தெரியுதே... எல்லாம், அந்த *வெளிறிய குதிரை* சமாச்சாரந்தான். இவகிட்டே நல்லா காசை கறந்திருக்காங்க.''

''ஓ'' என்ற அவளின் கண்கள் இப்போது ஆச்சரியத்தால் மேலும் விரிந்தன. ''ஆக நீங்கதான் எல்லாத்துக்கும் காரணமா!''

ஓரிரு நொடிகளுக்கு இந்த கடைசி வாக்கியத்தை என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. பிறகுதான், என்னை, ஜிஞ்ஜரின் சந்தோஷத்துக்கு இடையூறாய் நிற்கும் அரக்க மனைவியின் கணவனாய் அவள் அடையாளம் கண்டு கொள்கின்றாள் என்பது எனக்குள் இறங்கியது. எங்களுடைய இப்படிப்பட்ட காதல் வாழ்க்கை பற்றிய புது அறிதல் அவளுக்குள் தந்த கிளர்ச்சியின் காரணமாக *வெளிறிய குதிரை* என நான் சொன்னது அவளுக்குள் உண்டாக்கியிருக்க வேண்டிய எச்சரிக்கை இல்லாமல் ஆனது.

பரபரப்பாய் கேள்வியை உடைத்தாள்: ''என்ன... ரிஸல்ட் கிடைச்சுதா?''

''எப்படியோ கொஞ்சம் தப்பாகியிருக்கு'' என்ற நான், கூடுதலாய் சொன்னேன். *''செத்தது நாய்.''*

''எந்த நாய்?'' என்றாள் அவள் மலங்க மலங்க விழித்து.

பாப்பியிடம் விளக்கமாகவே எல்லாவற்றையும் பேச வேண்டும் என்பது புரிந்தது.

''அதாவது, அவளுங்க பண்ணும் அந்தக் கண்கட்டு வித்தை திரும்பி ஜிஞ்ஜர் உடம்புல வந்துட்டா மாதிரி படுது. இப்படியெல்லாம் நீ இதுக்கு முன்னால கேள்விப்பட்டிருக்கியா?''

பாப்பி இப்படியெல்லாம் இதற்கு முன்பு கேள்விப்பட்டிருக்கவில்லை.

''*மச்டீப்பிங்* குக்கிராமத்தின் அடியாழத்துல இருந்துக்கிட்டு *வெளிறிய குதிரை இன்'ல* பண்ணப்படும் இந்த சமாச்சாரங்கள் பற்றியெல்லாம் உனக்குத்தான் தெரியுமே, இல்லே?''

''அது எங்கேயிருக்குனு எனக்கு தெரியாது. கிராமத்துக்குள்ளே எங்கேயோ...''

''ஜிஞ்ஜர் நிலைமையை பார்க்கும்போது அவளுங்க என்னத்தைத்தான் பண்ணித் தொலையறாளுங்கனு என்னால ஒரு முடிவுக்கு வர முடியலே.''

இதற்கு நான் கவனமாய் காத்திருந்தேன்.

''கதிர்கள் இல்லையா?'' என்றாள் பாப்பி நிச்சயமற்று. ''அதைப் போல எதுவோ. வெளியுலகம் எதிலிருந்தோ.'' இப்படியெல்லாம் அவளாலேயே விளக்கவொண்ணா வண்ணம் பரிதாபமாய் சொன்ன அவள், ''ரஷ்யனுங்களைப் போல'' என முடித்தாள்.

இப்போது நான், அவளுக்கு தெரிந்திருக்கும் குறுகிய தகவல்களை வைத்துக் கொண்டு மட்டுமே அவள் பேசுகின்றாள் என்பதில் முடிவானேன். ''அதைப் போல எதுவோ'' என நானும் ஒப்புதல் தந்தேன்.

''ஆனா அது பயங்கர ஆபத்தானதா இருக்கணும். இல்லேனா இப்படியா நடமாட முடியாம ஜிஞ்ஜர் விழுவா?''

''ஆனா இப்படி விழுந்து சாக வேண்டியவ, உங்க மனைவிதானே, இல்லையா?''

''யெஸ்'' என்றேன் நான். ''ஆனா இங்கேதான் தப்பு நடந்து விட்டது போல் தெரியுது - *திரும்பிடுச்சு.''*

''அதாவது...'' என்று மூளைக்கு அதி தீவிர வேலை கொடுத்தவள், ''தப்பா இணைப்பு கொடுத்து ஷாக் வாங்குவதைப் போல், ஆங்?'' என கேட்டாள்.

''எக்ஸாட்லி'' - நான் சொன்னேன். ''அதேபோலத்தான்'' என்ற நான் மீண்டும் கேட்டேன்: ''இப்படியெல்லாம் நீ இதுக்கு முன்னால கேள்விப்பட்டிருக்கியா?''

''வெல், இந்த வகையில இல்ல...''

''அப்ப, வேற என்ன வகையில்?''

''அதாவது - அதா-வது - ஒருத்தன் ஒத்துக்கிட்ட தொகையைத் தரலேனா, அதுக்கப்புறம், அப்புறம் அவன் இருக்கவே முடியாது.'' சொன்ன அவளுடைய குரல் கிலியடைந்தது. ''அப்படி ஒருத்தனை எனக்குத் தெரியும். ரயிலடியில் கொல்லப்பட்டான் அவன். நிக்க வந்த ரயிலுக்கு முன்னாடி ப்ளாட்பாரத்திலிருந்து விழுந்துட்டான்.''

"அது விபத்தா இருக்கலாம்."

"ஓ நோ" என்றாள் பாப்பி, ஞாகப்படுத்திக் கொண்டதால் ஏற்பட்ட அதிர்ச்சியோடு. "கொன்னது அவங்கதான்."

இன்னும் கொஞ்சம் மதுரஸத்தை நான் அவளுடைய கோப்பைக்குள் விட்டுக் கொடுத்தேன். மூளைக்குள் தொடர்புகளற்று உலவிக் கொண்டிருக்கும் முக்கிய தகவல்களை சரியான வகையில் தன்னால் பிய்த்தெடுக்க முடிந்தால் அத்தகவல்களைச் செவ்வனே தந்து உதவக்கூடிய ஒரு ஜீவனுக்கு முன்னால் நான் உட்கார்ந்துக் கொண்டிருக்கின்றேன் என்பதை தீர்க்கமாய் உணர்ந்தேன். ஆங்காங்கே பேசப்பட்டவற்றை பாப்பி கேட்டிருக்கிறாள். அவற்றை அங்கொன்றும் இங்கொன்றுமாய் மண்டைக்குள் போட்டும் வைத்துக் கொண்டிருக்கின்றாள். முக்கிய தகவல்களைப் போய் இவளிடம் சொல்கின்றோமே என யாரும் கவலைப்படவுமில்லை, "அட இது நம்ம ஒண்ணுந் தெரியாத பாப்பிதானே" என்பதால்!

இந்த நிலையில் என்னைக் கிறுக்குப் பிடிக்க வைத்தது என்னவென்றால், எங்கு எப்படி என்ன சொல்லி ஆரம்பிப்பது என்பது எனக்கு விளங்காததுதான்.

"என் மனைவி... அந்தக் க்ராதகி... அவளுக்கு ஒண்ணும் ஆகாதது மாதிரியில்ல இருக்கு..."

மதுபானத்தைச் சப்பியபடி "இது பரிதாபம்" என்றாள் அவள் இரக்கமாய்.

"இப்ப நான் அடுத்து என்னதான் பண்ணுவது?"

இதற்கு எந்த பதிலும் பாப்பிக்கு தெரிவதாய் புலப்படவில்லை.

"நான் ஜிஞ்ஜருக்காக இந்த ஏற்பாட்டையும் பண்ணலே என்பதை தெரிஞ்சுக்க பாப்பி. எனக்கு இந்நிலையில் உதவ யாராவது கிடைப்பாங்களா?"

"பிர்மிங்ஹாம்னு ஒரு பகுதியிருக்கு" என்றாள் அவள் சந்தேகமாய்.

"அது மூடியாச்சு" என்றேன் நான். "இதைப் பற்றி தெரிஞ்சு வெச்சிருக்கும் வேற யாரைப் பற்றியும் உனக்குத் தெரியாதா?"

"எய்லீன் ப்ரான்டனுக்கு ஏதாவது தெரியலாம் - இருந்தாலும் சந்தேகமாகத்தானிருக்கு."

முழுக்கவும் புதிதாக எய்லீன் ப்ரான்டன் என்றொரு பெயர் அறிமுகமானதில் துணுக்குற்றேன் நான். அது யாரென்று கேட்டேன்.

"அவ ஒரு மக்கு ப்ளாஸ்திரி" என்றாள். "இறுக்கமா முடியை முடிஞ்சுப்பா. ஹீல் செருப்பெல்லாம் போடவே மாட்டா. இதான் அவ. அவகூட ஸ்கூல்ல ஒண்ணா படிச்சேன். அப்பகூட அவ மந்தமாத்தானிருப்பா. புவியியல்லதான் அவ பிரமிக்கத்தக்க ஞானத்தோட இருந்தா."

"அவளுக்கும் *வெளிறிய குதிரைக்கும்* என்ன இருக்கு?"

"நத்திங் ரியலி. அதைப் பற்றி அவளுக்கு ஓர் ஐடியா வந்தது. அவ்ளோதான். அதான் வெட்டிட்டா..."

பயந்துப் போய் கேட்டேன். "வெட்டிட்டாளா? எதை?"

"CRC வேலையை."

"என்னது இது CRC?"

"வெல், எனக்கு விவரமா ஒண்ணும் தெரியாது. பொதுவா CRC என்பாங்க. வாடிக்கையாளர் கருத்து இருக்கு இல்லியா... Customer's Reaction... இதுபோன்ற ஏதோ ஆராய்ச்சி. சின்ன கம்பெனிதான்..."

"இதிலியா எய்லீன் ப்ரான்டன் வேலைல இருந்ததா? அவ என்ன வேலை செஞ்சா இதுல?"

"சும்மா சுற்றிவர போய் கேள்விகள் கேட்கணும் - டூத் பேஸ்ட் பற்றி... காஸ் ஸ்டவ் பற்றி... அதை துடைக்க வெச்சிருக்கும் ஸ்பாஞ்ச் பற்றி. போர்ப்பா. இதெல்லாம் யாருக்கு வேணும்?"

"CRC க்கு தேவைப்பட்டிருக்கலாம்" - சிறு கிளர்ச்சி பொங்க சொன்னேன் நான். இதைப் போன்ற நிறுவனமொன்று வேலைக்கு வைத்திருந்த ஒரு பெண்தான் சம்பவ இரவுயன்று ஃபாதர் கார் மேனைச் சந்தித்திருக்கிறாள். மேலும், ஓ யெஸ் - இப்படிப்பட்ட ஒருத்திதான் ஜிஞ்ஜரையும் ஃப்ளாட்டில் பார்க்க வந்திருக்கின்றாள்.

இதில் ஏதோ ஒரு வகையான இணைப்பு இருக்கின்றது.

"எதுக்காக அவ வேலையை விட்டுட்டுப் போகணும்? வேலை பிடிக்கலையா என்ன?"

"எனக்கு அப்படி தோணலே. நல்லாத்தான் சம்பளம் தந்துக்கிட்டிருந்தாங்க. ஆனா அவளுக்கு இதைப் பற்றி ஓர் எண்ணம் வந்தது - வெளியிலிருந்து பார்ப்பதைப் போன்ற ஒன்று கிடையாது இது... என்பது போன்ற எண்ணம்."

''ஏதோ ஒரு வகையில, அந்த வேலை, வெளிறிய குதிரையுடன் தொடர்புல இருக்கும்னு நினைச்சிருப்பாளோ? அப்படியா?''

''வெல், இது எனக்கு தெரியாது. அப்படித்தான் எதையோ அவ நினைச்சிருக்கணும்.எப்படியோ, இப்ப அவ, எஸ்ப்ரெஸ்ஸோ காபி பார்ல வேலைல இருக்கா. கோர்ட் ரோட்ல இருக்கு அது.''

''அவ முகவரியை எனக்கு கொடு.''

''அவ உங்க குணத்துக்கு ஏத்தவ கிடையாது.''

நான் கடுமையாய் ''அவகிட்டே செக்ஸ் தொடர்பு வெச்சுக்க நான் முகவரி கேட்கலே'' என்றேன். ''வாடிக்கையாளர் ஆய்வு பற்றி சில குறிப்புகள் எனக்கு வேணும். பங்குகள் வாங்கலாம் எனும் எண்ணத்துல இருக்கேன்.''

என் விளக்கத்தில் முழு திருப்தி கொண்டாள் பாப்பி.

இனிமேலும் இவளிடமிருந்து பிடுங்க எதுவுமில்லாமல் ஆனபோது பானம் குடிப்பதை நிறுத்திக் கொண்டோம். அவள் வீடு வரை கொண்டு போய் இறக்கி விட்ட நான், மாலைப் பொழுதில் இனிய துணைக்காக அவளுக்கு நன்றி சொன்னேன்.

II

மறுநாள் காலை நான் லெஜனுக்கு போன் போட முயன்றேன் - ஆனால் இயலவில்லை. எனினும் சிறு பிரயத்தனத்துக்கு பிறகு ஜிம் காரிகனைப் பிடித்தேன்.

''என்னைப் பார்க்க நீங்க அனுப்பியிருந்த உள மருத்துவர் என்னாச்சு காரிகன்? ஜிஞ்ஜர் பற்றி என்ன சொல்றார் அவர்?''

''நிறைய நீள நீளமான வார்த்தைகள். ஆனா மார்க், அவரை வர்ணிக்கணும்னா, 'என்றென்றும் குழம்பிப் பயந்திருக்கும்..' அப்படின்னு சொல்லணும். யாருக்கும் நிமோனியா வருவது சகஜம். இதுல போய் மர்மமாகவோ அல்லது ரகசியமாகவோ எதுவும் கிடையாது..''

''யெஸ்'' என்றேன் நான். ''இதைப் போன்ற தீவிர நிமோனியா, வாதம், மூளை புற்று, ஞாபக மறதி போன்ற பிரபலமான வியாதிகளால் செத்துப் போனவர்களின் பெயர்கள் கொண்ட ஒரு குறிப்பிட்ட பட்டியல் நம்மகிட்டே இருக்கு.''

''நீ எப்படி உணர்றேன்னு என்னால புரிஞ்சுக்க முடியுது. ஆனா நம்மால என்ன பண்ண முடியும்?''

''அவ மோசமான நிலைமைக்கு போய்க்கிட்டிருக்கா... இது நிஜந்தானே?'' - நான் கேட்டேன்.

''வெல் - யெஸ்...''

''அப்போ ஏதாவது உடனடியா பண்ணியாகணும்.''

''அதாவது, உதாரணத்துக்கு?''

''எனக்கு ஒரிரு ஐடியாக்கள் இருக்கு. நேரா *மச் டீப்பிங்* கிராமத்துப் போவது... அங்கே தெரஸா க்ரேவைப் பிடிப்பது... வெளியுலகத்துக்கு சொல்லிடுவோம்னு பயமுறுத்துவது... அவ ஜிஞ்ஜர் மேல ஏவி விட்டிருப்பதை அப்படியே திரும்ப எடுத்துக் கொள்ளச் செய்வது...''

''வெல் - இது வெற்றி தரலாம்.''

''இது இல்லேனா, நான் நேரா வெனபிள்கிட்டே போவேன்...''

காரிகன் கூர்மையாய் சொன்னார்: ''வெனபிள்? அவனை வெளியே வெச்சுடு. இந்தக் கூட்டத்தோட அவனுக்கு எந்த வகையில் தொடர்பு சாத்தியம்? அவன் ஒரு நொண்டி.''

''இது எனக்கு வியப்பாயிருக்கு. நான் நேரா போய் அவன் காலை மூடியே வெச்சிருக்கும் அந்த தடிமனான போர்வையை இழுத்து தூக்கியெறிஞ்சு அவன் கால் சூம்பியிருக்கு என்பதை உண்மையா பொய்யானு பார்த்துடுவேன்.''

''இதையெல்லாம் நாம நல்லாவே யோசிச்சு பார்த்தாச்சு..''

''வெயிட், வெயிட். அந்த குள்ள கெமிக்கல் இருக்கானே, ஓஸ்பார்ன்... அவனை நான் *மச் டீப்பிங்ல* சந்திக்க நேர்ந்தது. அவன் என் மூளைக்குள்ளே போட்டதை நான் உங்ககிட்டே திரும்ப சொல்ல விரும்பறேன்.''

ஆள் மாறாட்டம் பற்றி ஓஸ்பார்ன் எனக்குள் போட்டிருந்த ஐடியாவை நான் கோடிக் காட்டினேன்.

''அவன் மண்டைக்குள்ளே தேனீ இருக்கிறவம்ப்பா'' என்றார் காரிகன். ''நான் சொல்வதுதான் எப்பவுமே சரினு வாதிடும் வகையைச் சேர்ந்த நாசமாப் போனவன் அவன்.''

''ஆனா, த பாருங்க காரிகன்... நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்க. அவன் சொல்வதைப் போல சாத்தியமே கிடையாதா, ஆங்? இப்படியும் இருக்கக் கூடாதா? இது சாத்தியம்தான், இல்லையா?'

ஒரு சில கணங்களுக்குப் பிறகு காரிகன் மெதுவாய் சொன்னார்:

''யெஸ். இதுவும் சாத்தியம்தான். நான் ஒத்துக்கிட்டுத்தான் தீரணும். ஆனா இதுபற்றி பல பேருக்குத் தெரிஞ்சிருக்கணும்... அவங்க எல்லாம் வாயைத் திறக்காம இருக்க நிறைய மாமூல் வெட்ட வேண்டியிருக்குமே...''

''அதனால் என்ன? அவன் பணத்துல மெத்தை பண்ணிப் போட்டு தூங்கிக்கிட்டிருக்கான். இல்லையா? அவன் இத்தனை பணத்தை எப்படி பண்ணினான்னு லெஜன் இதுக்குள்ளே கண்டுபிடிச்சுட்டாரா?''

''நோ, துல்லியமா முடியலே. ஆனா ஒண்ணு நான் சொல்லிக்க விரும்பறேன். அந்தாள்கிட்டே ஏதோ வில்லங்கம் இருக்கு. என்னவோ கண்றாவியான ஒரு கடந்த காலம் அவனுக்கு இருக்கு. கொள்ளை கொள்ளையான பணம்... அத்தனைக்கும், புத்திசாலித்தனமா கணக்கு இருக்கு - பல வகைகள்ல. வருடக் கணக்கா அவகாசம் வாங்கும் ஆழ்ந்த புலன் விசாரணை இல்லாம அத்தனை பணமும் எங்கெல்லாம் போயிருக்குனு நம்மால கண்டுபிடிக்க முடியாது. பணப்பேய் ஒண்ணு, அது எப்படி பணம் பண்ணியது என்பதை முடிவில்லா சிக்கல்கள் நிறைந்த ஒரு வலையா பின்னி வெச்சிருக்கு... இதை எதிர்த்து போலீஸ் போராட வேண்டியிருக்கும். உள்நாட்டுச் செலவாணி நிறுவனம் வெனபிளுக்கு எதிரா கொஞ்ச நாளா காதும் காதும் வெச்சா மாதிரி இயங்கிக்கிட்டிருக்குனு நினைக்கிறேன். ஆனா அவன் புத்திசாலிப்பா. அதுசரி... இவனைப் பற்றி நீ என்ன நினைக்கிறே? நடக்கும் அனைத்துக்குமான தலைவன்னா?''

''யெஸ், அப்படியேதான் நான் நினைக்கிறேன். இந்த குரூரங்களைத் திட்டமிடும் ஆள் இவன்தான் என்பது என் அசையா எண்ணம்.''

''இருக்கலாம். இப்படிப் பண்ணத் தேவையான சாக்கடை மூளை கொண்டவனாத்தான் அவன் தெரியறான். நான் ஒத்துக்கிறேன். ஆனா, ஃபாதர் கார்-மேனை இவனே போய் கொல்லும் அளவுக்கான ஒரு குரூரத்தை நிச்சயமா செஞ்சிருக்க மாட்டான்!''

''இவனே பண்ணியிருக்கலாம் - அப்படி பண்ண அதி தீவிர அவசரம் இருந்திருந்தால். அந்த பொம்பிளைக்கிட்டேயிருந்து *வெளிறிய குதிரை* பற்றி ஃபாதர் அறிய நேர்ந்தவற்றை அவர் வெளியுலகத்துக்கு தந்துவிடுவதற்குள் அமைதியாக்கப்பட்டுவிட வேண்டும் எனும் அவசரம் இருந்திருக்கலாம். மேலும்...''

சற்று நிறுத்தினேன் நான்.

''ஹல்லோ - இருக்கீங்களா?''

''யெஸ், நான் யோசிச்சுக்கிட்டிருந்தேன். ஜஸ்ட், சட்டுனு ஓர் ஐடியா எனக்கு தோணிச்சு...''

''என்னது அது?''

''அது சரியானு இன்னும் எனக்கே பிடிபடலை. அதை நான் இன்னும் எனக்குள்ளே போட்டு யோசிக்கணும். ஓகே, எது எப்படியோ... நான் இப்ப கிளம்பியாகணும். ஒரு காபி பார்ல சின்ன சந்திப்பு இருக்கு.''

''செல்ஸீ காபி பார்க்கு போலியே!''

''ம்ம். என் காபி பார் கோர்ட் ரோட்ல இருக்கு.''

நான் ரிஸீவரை வைத்துவிட்டு கடியாரத்தைப் பார்த்தேன்.

நான் கதவு வரை கிளம்பி போன பிறகு டெலிபோன் அடித்தது.

தயங்கினேன். அது ஜிம் காரிகனாய்த்தானிருக்க வேண்டும். என் அந்த ஐடியா என்ன என்று மேலும் தெரிந்துக் கொள்ளவாயிருக்கும். இப்போது உடனடியாக நான் ஜிம் காரிகனுடன் பேச விரும்பவில்லை.

நான் கதவு நோக்கி மேலும் போய்விட்டாலும் டெலிபோன் விடாது அலறிக் கொண்டிருந்தது, பிடிவாதமாய்.

ஓ, ஒருவேளை அது ஆஸ்பிட்டலிலிருந்து கூட இருக்கலாம் - ஜிஞ்ஜர்.

இதில் நான் விளையாடி விடக் கூடாது. நான் பொறுமையிழந்து டெலிபோன் நோக்கி ஓடி, அதன் ரிஸீவரைக் கொத்தியெடுத்தேன்.

''ஹல்லோ?''

''நீயா, மார்க்?''

''யெஸ், யாரது?''

''நாந்தான், வேற யாரு?'' என்றது குரல், நிந்திக்கும் தொனியில். ''கேளு... உன்கிட்டே சில சமாச்சாரங்களைச் சொல்லணும்.''

''ஓ, நீயா?'' - மிஸஸ் ஒலிவரின் குரலை கண்டுபிடித்தேன். ''லுக்.. நான் அவசரத்துல இருக்கேன். வெளியே கிளம்பணும். நானே அப்புறம் உன்னைக் கூப்பிடறேன்.''

''அதெல்லாம் முடியவே முடியாது'' என்றாள் மிஸஸ் ஒலிவர். இப்பவே நான் சொல்லப் போவதை நீ கேட்டாகணும். இது முக்கியமானது.''

''வெல், சீக்கிரம் சொல்லிடு அப்ப. நான் உடனே போய் பார்க்க வேண்டிய ஒரு அப்பாய்ண்ட்மென்ட் காத்துக்கிட்டிருக்கு.''

''பூஹ்'' என்றாள் மிஸஸ். ''முன்பதிவிருந்தால் லேட்டாகவே போகலாம். எல்லாரும் பண்றதுதான் இது. அப்பத்தான் நீ எப்ப வருவேனு உன்னை அவங்க அதிகமா நினைச்சுக்கிட்டிருப்பாங்க.''

''ப்ச், வளைக்காதே, நான் போகணும்.''

''கவனி, மார்க். இது முக்கியமானது. எனக்கு நிச்சயமா இது முக்கியமானதுனு தெரியும். இது முக்கியமானதாத்தானிருக்கணும்.''

கடியாரத்தைப் பார்த்துக் கொண்டே எத்தனை பிடித்துப் பாதுகாக்க முடியுமோ அத்தனை தூரத்துக்குப் பிடித்துக் காப்பாற்றிக் கொண்டிருந்தேன் - என் பொறுமையை.

''என்ன, சொல்லு?''

''என் வேலைக்காரிக்கு டான்சில்ஸ் இருந்தது. ரொம்ப மோசமா திண்டாடினா. அதோட அவ கிராமத்துக்குப் போனா, அவ ஸிஸ்டர் வீட்டுக்கு...''

நான் என் பற்களை இறுகக் கடித்துக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தேன் - ''இதுக்கு என்னடி பண்ண சொல்றே?''

''இருடா... நான் இன்னும் ஆரம்பிக்கவேயில்ல. என்ன சொல்லிக்கிட்டிருந்தேன்? ஓ யெஸ்... அவ கிராமத்துக்குப் போகணும்னா.. ஆமாம், போயே ஆகணும். ஸோ, நான் என் ஏஜென்ஸிக்கு போன் பண்ணினேன். எப்பவும் நான் தொடர்பு கொள்ளும் இடம்தான். ரீஜென்ஸி. என்ன ஒரு அசிங்கமான பேர் பார்த்தியா, சினிமா தியேட்டர் மாதிரி...''

''நான் உடனடியா...''

''ஓர் ஆளை அனுப்ப முடியுமானு கேட்டேன். ஒத்தாசைக்கு. உடனடியா அனுப்ப முடியாதுனாங்க... இப்படித்தான் எப்பவும் சொல்லுவானுங்க அவங்க. ஆனா உடனேயே நிச்சயமா அனுப்பி வெப்பானுங்க.''

இப்படிப்பட்ட ஒரு பைத்தியக்காரியைப் போன்ற ஒரு நிலையில் நான் என்றுமே மிஸஸ் ஓலிவரை எதிர் கொண்டதில்லை.

''... சொன்னதுபோலவே, இன்னிக்கு காலைல ஒரு பொம்பிளை வந்தாள். அது யார்னு நீ நினைக்கிறே?''

''எனக்கு இதுக்கெல்லாம் இப்ப நேரங்கிடையாது... லுக்...''

''எடித் பின்ஸ் எனும் ஒரு பொம்பளை. காமிக்ஸ்ல வருவது போல ஒரு பேர். அவளை உனக்கு நெஜமா தெரியும்...''

''நோ, எனக்குத் தெரியாது. எடித் பின்ஸ்னு ஒரு பொம்பளைப் பேரை நான் கேள்விப்பட்டதே கிடையாது.''

''ஆனா உனக்கு அவளை தெரியும்... அவளை நீ சந்திச்சு வெகு நாட்களும் ஆகலே. உன்னோட அந்த மதகுருவுடன் வருஷக் கணக்கா இருந்திருக்கா -- மிஸஸ் ஹெஸ்கத் - டுபாய்ஸ்.''

''ஓ, அவளா?''

''ஆமாம். சில படங்களை நீ வாங்கிக்கிட்டு போக வந்தபோது அவ உன்னைப் பார்த்திருக்கா...''

''எல்லாம் நல்லதுதான். அவளைக் கண்டுபிடிச்சிட்டது உன் அதிர்ஷ்டம்னு நினைக்கிறேன். அவ உனக்கு நல்ல ஒழுக்கமா உண்மையானவளா இருப்பானும் நினைக்கிறேன். ஆன்ட்டி மின் சொல்லியிருக்காங்க. ஆனா - இப்ப - நான்...''

''வெயிட், முடியாதா? நான் இன்னும் சொல்ல வேண்டிய விஷயத்துக்கே போகலே. அவ, மிஸஸ் ஹெஸ்கத் - டுபாய்ஸ் பற்றி நீள நீளமா பேசினா. அவங்களோட இறுதிக்கட்ட வியாதி பற்றியும் சொன்னா. அவங்களுக்கு வியாதியும் மரணமும் பிடிக்கும்னு சொன்னா. அப்புறம்தான், அதைச் சொன்னா.''

''அதைனா, எதை?''

''என் கவனத்தைக் கவர்ந்த அதை. இதுமாதிரி எதையோ சொன்னா அவ: 'புவர் லேடி, அருமையானவங்க. அவங்க மூளையில என்னவோனு சொன்னாங்க. என்னவோ வளர்ந்துதாம். மூளைக்குள்ளே இதெப்படி முடியும்? நேற்று வரைக்கும் நல்லாத்தான் இருந்தாங்க அவங்க. நர்ஸிங் ஹோம்ல பார்த்தேன்... நரைச்சிருந்தாலும் கத்தைக் கத்தையா கூந்தலுண்டு அவங்களுக்கு. அது அத்தனையும் அப்படியே உதிர்ந்து கொத்துக் கொத்தா தலையணை முழுக்க சிதறி.. ச்சே! மாசத்துக்கு ரெண்டு தடவை அந்த மலைப்பாம்பு கூந்தலுக்கு மசாஜ் பண்ணவே நாலு ஆள் வேணும். ஆனா, என்ன ஆச்சு கடைசியில - தொட்டாலே கை முழுக்க வந்துடும். கொத்தா! இதுக்கப்புறம் மார்க்... எனக்கு மேரி டெலாஃபான்டைன் நினைவுக்கு வந்தது. என்னேரிட ஃப்ரண்ட். அவ முடியும் இப்படித்தான் கொத்தா வந்துடும் - தொட்டாலே. கடைசி காலத்துல. அப்புறம் செல்ஸீ காபி கடையில இன்னொரு பொண்ணு கூட சண்டை போட்ட ஒருத்தியைப்

பற்றி நீ சொன்னது என் ஞாபகத்துக்கு வந்தது. அவ கூந்தலும் கை நிறைய கொத்தா பறிச்சு உருவப்பட்டதுனு சொன்னியே, நீ. அப்படி புடிச்சு இழுத்தாலே இந்தானு கூந்தல் நம்ம கையோட வந்துடாது, மார்க். முயற்சிப் பண்ணிப் பாரேன் - இப்பவே. ஒரேயொரு கற்றையை அடி வேரிலிருந்து இழு பார்ப்போம். வருதா? வராது. இவங்க எல்லோருடைய கூந்தலும் கொத்தா இப்படி வேரோடு விழுந்திருப்பது இயற்கையா படலே. மார்க், இது ஒரு புது வகையான ஸ்பெஷல் வியாதியா இருக்கணும். இது நமக்கு எல்லாத்தையும் விளக்கணும்.''

நான் இப்போது ரிஸீவரை இறுக்கிப் பிடித்தேன். தலை சுற்றியது. பாதி ஞாபகமாய் எனக்குள் நான் அறிந்திருந்தவை, இப்போது ஒன்றாய் கூடி நின்றன. ரேழியில் இருந்த ரூடாவும் அவளுடைய நாயும் - நியூயார்க் மருத்துவ சஞ்சிகை ஒன்றில் நான் படித்திருந்த ஒரு கட்டுரை - அஃப்கோர்ஸ், அஃப்கோர்ஸ்! அதேதான்!

இன்னும் மிஸஸ் ஓலிவர் சந்தோஷமாய் வம்பளந்துக் கொண்டிருப்பது எனக்கு சட்டென்று கேட்டது.

''நீ வாழ்க'' என்றேன் நான். ''நீ ஒரு ஒண்டர்ஃபுல், மிஸஸ் ஓலிவர்.''

நான் பட்டென்று ரிஸீவரை அடித்து வைத்து, மீண்டும் தூக்கினேன். எண்களை சுழற்றினேன். இம்முறை லெஜன் இணைப்பு கிடைக்கும் அதிர்ஷ்டம் எனக்கிருந்தது.

''கவனிங்க'' என்று சொல்லிவிட்டு கேட்டேன். ''ஜிஞ்ஜரோட கூந்தல் தொட்டாலே வேரோட கையில வந்துடுதா?''

''வெல் - அப்படிதான்னு நான் நினைக்கிறேன். உயர் காய்ச்சல்தான் காரணமாயிருக்கணும்...''

''மண்ணாங்கட்டி காய்ச்சல்'' என்றேன் நான். ''இப்ப ஜிஞ்சர் துடிச்சிக்கிட்டிருப்பது - இதுவரை அந்தப் பட்டியலிலிருந்த ஏனைய அனைவரும் வேதனைப்பட்டு துடிச்சது - தல்லியம் விஷத்தால். ஓ காட்... ஜிஞ்ஜரைக் காக்க அவகாசம் இருக்கணுமே..''

அத்தியாயம் 22

மார்க் ஈஸ்ட்டர் – ப்ரூக் பதிந்தவை

I

''சரியான நேரத்துல கண்டுபிடிச்சுட்டோமா? இல்ல, காலந்தாழ்ந்திடுச்சா? அவ, வாழ்வாளா?''

நான் அங்குமிங்கும் அலைந்தேன். என்னால் ஓரிடத்தில் நிற்க முடியவில்லை.

லெஜன் என்னைக் கவனித்தபடி உட்கார்ந்திருந்தார். அவர் கனிவாகவும், பொறுமையாகவும் நடந்துக் கொண்டார்.

''அவளைக் காக்க சாத்தியமான எல்லாமும் பண்ணப்பட்டிருக்குனு நீங்க நம்பிக்கை வெக்கணும்.''

அதே பழைய பதில். என்னை சௌகரியமாக்க, இவ்விடை எதுவும் பண்ணி விடவில்லை.

''தல்லியம் விஷத்தை எப்படி முறிப்பதுனு இங்கேயிருப்பவர்களுக்குத் தெரியுமா?''

''இப்படி ஒரு கேஸ் அடிக்கடி வருவது கிடையாது, மார்க். ஆனா எதெல்லாம் காப்பாற்ற வல்லவையோ அவையனைத்தும் முயற்சி பண்ணப்படும். என்னைக் கேட்டீங்கன்னா, அவ பிழைச்சுடுவா.''

நான் அவரைப் பார்த்தேன். அவர் இப்போது என்னிடம் சொல்லிக் கொண்டிருப்பதையெல்லாம் அவரும் நம்பிக்கை வைத்துதான் சொல்கிறார் என்று நான் எப்படி எடுத்துக் கொள்வது? அவர் என்னை ஆசுவாசப்படுத்த மட்டுமே இப்படி முயற்சி செய்துக் கொண்டிருந்தால்?

''எப்படியோ... இங்கே டாக்டர்கள் அது தல்லியம்தான்னு உறுதிப்படுத்திட்டாங்களா?...''

''யெஸ், அது தல்லியம் விஷம்தான்.''

''ஆக, *வெளிறிய குதிரைக்குப்* பின்னாலிருக்கும் சின்னஞ்சிறு உண்மை, இதுதான். விஷம். ப்ளாக் மேஜிக் கிடையாது. பில்லி சூன்யம் கிடையாது. மன வசியம் போன்ற ஹிப்னாடிஸம் கிடையாது. அறிவியல் ரீதியா பேசப்பட்ட மரணக் கதிர்கள் இத்யாதிகளும் கிடையாது. வெறும் விஷம்! அந்த நாய்மக என் மேலேயே அதை முயற்சி பண்ணிப் பார்த்திருக்கா. என் முகத்து மேலேயே வீசிப் பார்த்திருக்கா. எப்பப்பாரும் சிரிச்சுச் சிரிச்சு அவ சாகசம் பண்ணினப்பவே நான் எதிர்பார்த்தேன்.''

''யாரைச் சொல்றீங்க, நீங்க?''

''தெரஸா க்ரே. நான் டீ விருந்துக்காக அங்கு போன அந்த முதல் மத்தியானப் பொழுதுல போர்ஜியா பத்திப் பேசினா... கூடவே 'ரகசிய விஷங்கள்' அப்படி இப்படினு கட்டம் கட்டினா. அப்படியெல்லாம் விஷம் கிடையாதாம்... அதெல்லாம் 'வெறும் ஆர்ஸனிக்தான்'னு விளக்கினா, அவ. ஆனா இதையேதான் அவளுங்க பண்ணிக்கிட்டிருக்காளுங்க - ஸிம்பிளா. இதுக்காக அத்தனை ஏற்பாடுகள்! அந்த ஆவிப் பேச்சு, அந்த வெள்ளைச் சேவல், அந்த குத்து விளக்கு, அந்தக் கோலங்கள், அந்தத் தலைகீழ் சிலுவை. இது அத்தனையும் நம்மை திசை திருப்ப பண்ணப்பட்ட மூட நம்பிக்கைகள். அந்த பிரபல 'பெட்டி..' அது மூட நம்பிக்கையில நம்பிக்கையற்றவளுக்காக பண்ணப்பட்ட அறிவியல் கண் துடைப்பு. இப்பல்லாம் ஆவி சூனியக்காரர்கள் ஆவிக் கூட்டம் இதிலெல்லாம் நமக்கு அதிகம் நம்பிக்கை இருப்பதில்லை... ஆனா 'கதிர்கள்' அல்லது 'கதிர் வீச்சு' இப்படியெல்லாம் அறிவியல் ரீதியா மடக்கப்படும்போது நாம தயக்கமாகவாவது நம்பிக்கை வெச்சுடறோம். அந்தப் பெட்டி - பந்தயம் கட்டறேன் இன்ஸ்பெக்டர்... அது வெறுமனே கலர் கலரா ஒளி தரவும் ஒருவித ஹம்மிங் எஃபெக்ட் தரவும் உண்டு பண்ணப்பட்டுள்ள ஓர் அமைப்பு. என்ன கைகாரிங்க பார்த்தீங்களா! அறிவியல் முன்னேற்றத்துல எல்லா கதிர்களும் சாத்தியமேனு நாம தினந்தோறும் நிரூபணத்தோட கேள்விப்படுவதால், சுலபமா அந்த 'பெட்டியை' நம்பிடுவோமில்ல. ஆக, *வெளிறிய குதிரையின்* முழு செட் - அப்பும், போலி! *வெளிறிய குதிரை* ஒரு நொண்டிக் குதிரை - நொண்டிச் சாக்கு. நம் கவனமெல்லாம் அதன் மேல் திருப்பப்பட்டு நிலைநிறுத்தப்படணும் - அப்பத்தானே நாம வேறொரு திசையில் நடந்துக்கிட்டிருக்கும் இன்னொன்றைப் பற்றி சந்தேகப்பட மாட்டோம்?

இந்த ஏற்பாடு அவங்களுக்கு பூரண பாதுகாப்பாகவும் அமைந்திருப்பது தான் இதன் அழகே. அவளுக்கு இருக்கும் அமானுஷ்ய சக்தி பற்றி காலரைத் தூக்கி விட்டுக்கிட்டு தெரஸா க்ரே படாடோபம் அடிச்சுக்கலாம்... இதைக் காரணமா வெச்சு அவளைக் கோர்ட்டுக்கு இழுக்கவும் முடியாது... விசாரணைகள் பண்ணவும் முடியாது. அவளுடைய பெட்டியை வேணும்னா பரிசோதிக்கலாம். ஆனா அதனால எவ்வித ஆபத்துமில்லை னுதான் தீர்வு வரும். வழக்கு தொடரப்பட்டால் எந்த நீதிமன்றமா யிருந்தாலும், இதெல்லாம் வெறும் முட்டாள்தனமான வழக்குனு முத்திரை குத்தி சாத்தியமே கிடையானு தீர்ப்பெழுதி, தள்ளுபடி செஞ்சுடும்!''

''அந்த மூணு பொம்பிளைங்களும் ஒண்ணா இதுல கலந்துருக்குங்கனு சொல்ல வரீங்களா?'' - கேட்டார் லெஜன்.

''அப்படி சொல்ல மாட்டேன். சூனியத்துல பெல்லாவுக்கிருக்கும் நம்பிக்கை கலப்படமற்றதுனுதான் சொல்லணும். இதுல பெல்லாவுக்கு இயற்கையாகவே இருக்கும் சக்திகளின் மேல, அவளுக்கு ஏக பெருமை உண்டு. அதை *வெளிறிய குதிரைல* அவ தீர்த்துக்கறா. ஸிபில்லின் கதையும் இதேதான். ஆவியுடன் தொடர்பு கொள்ளவல்ல அற்புத வரம் அவளுக்கு இருக்கு. தன்னிலை இழந்து ஆவி சாம்ராஜ்யத்துக்குள்ளே அவ போயிடறா... அப்புறம் என்ன நடக்குதுனே அவளுக்கு தெரிவதில்லை. அப்ப தெரஸா சொல்லும் எதையும் அவ நம்புவா - நம்பறா...''

''ஆக தெரஸாதான் இதன் அச்சாணியா?''

நான் மெதுவாய் பேச ஆரம்பித்தேன்.

''*வெளிறிய குதிரையை* மட்டும் பொறுத்த வரை, யெஸ். ஆனா அதைத் தாண்டியும் இயங்கும் ஒட்டுமொத்தத்தையும் எடுத்துக்கிட்டா, அந்த மாஸ்டர் மூளை அவ கிடையாது. நிஜமான மாஸ்டர் மூளை திரைக்குப் பின்னாலிருக்கு. திரைக்குப் பின்னாலிருந்து இயங்குது. லெஜன்... இந்த கேஸ்ல ஆங்காங்கே நடக்கும் எல்லாமும் மிக அழகா பொருத்தி வைக்கப்படுது, தெரியுமா? இதுல இருக்கும் ஒவ்வொருத்தருக்கும் ஒரு வேலை இருக்கு. ஆனா எந்த ஒருத்தருக்கும் இன்னொருத்தர் கூட தொடர்பு இருப்பதில்லை. ப்ராட்லே இதிலுள்ள பணம் சம்பந்தப்பட்ட மற்றும் சட்ட ரீதியான விஷயங்களைக் கவனிக்கிறார். இதைத் தவிர மற்ற இடத்துல வேறென்ன நடக்குது என்பது பற்றி அவருக்கு தெரியாது. கைகொள்ளாம அவருக்கு கரன்ஸி தரப்படுது, அஃப்கோர்ஸ்... பிறகென்ன? இதேபோலவே தெரஸாவுக்கும்...''

''உங்களுக்கு திருப்தியா எப்படியெல்லாம் தோணுதோ, அப்படியெல்லாம் இதை வடிவமைச்சுக்கிட்டா மாதிரி தெரியுது'' என்றார் லெஜன் வறட்சியாய்.

''அப்படி பண்ணலே நான். முழுசும் முடிக்கலே, கேளுங்க... நமக்கு அடிப்படை நிரூபணங்கள், ஃபண்டமெண்டல் நிஜங்கள், தெரிஞ்சாச்சு. யுகம் யுகமா நடந்துக்கிட்டு வரும் ஒண்ணுதான் இதுவும். ஸிம்பிளான கொடூரம். ஜஸ்ட், வெறும் விஷம். நமக்கு மிக பரீச்சயமான டியர் ஓல்ட் பாய்ஸன்.''

''எது உங்க மண்டைக்குள்ளே தல்லியத்தைக் கொண்டு வந்து போட்டது?''

''அங்குமிங்குமாய் இருந்த பல விஷயங்கள் சட்சட்னு ஒண்ணா கூடி சேர்ந்தன, இன்ஸ்பெக்டர். இதன் துவக்கமா அமைஞ்சது, செல்ஸீயில அன்றிரவு நான் பார்த்த ஒரு காட்சி. வேரிலிருந்து ஒரு பெண்ணுடைய கூந்தல் இன்னொரு பெண்ணால பிடுங்கி எறியப்பட்ட அந்தக் காட்சி. மேலும் அவ சொன்னது: 'வலி ஒண்ணும் இல்லே'. எத்தனை துணிச்சலானவனு அப்ப நான் நினைச்சது கிடையாது, உண்மை. உண்மை ரொம்ப ஸிம்பிளானது இன்ஸ்பெக்டர். நெஜமாவே அவளுக்கு வலிக்கலே.

''அமெரிக்காவில நானிருந்தபேது தல்லியம் விஷம் வைப்பது பற்றி சஞ்சிகை ஒண்ணுல படிச்சிருக்கேன். ஒரு ஃபாக்டெரியில நிறைய தொழிலாளர்கள், ஒருத்தருக்கு அடுத்து இன்னொருத்தரா செத்துக்கிட்டே இருந்தாங்க. அவங்க மரணத்துக்கான காரணங்கள் வியத்தகும் அளவுக்கு விதம் விதமா பட்டியலாயின. அந்த நீளமான பட்டியல்ல, என் நினைவுக்கு எட்டி, வாதம் இருந்தது, முடவாதம், ஞாபக மறதி, முதுகெலும்பு முடக்கம், இதெல்லாமும் இருந்தன. அப்புறமா ஏழு பேருக்கு விஷம் வெச்ச ஒரு பொம்பிளை பற்றிய சேதி வருது. இதுகுறித்த காரணங்களைப் பார்த்தபோது இதிலும் புற்றுநோய், நிமோனியா, வாதம்னு விதம் விதமான காரணங்கள் எழுதப்பட்டன. மரணத்துக்கான காரணங்களும் அறிகுறிகளும் ஏகமாய் விலகி வேறுபட்டிருந்தன என்பது எனக்கு புரிஞ்சது. வயிற்றுப் போக்கிலும் வாந்தி பேதியிலும் ஆரம்பமாகும். விலா எலும்பு முழுக்க வலினு கூட ஆரம்பமாவதுண்டு. இது போலியோ போன்ற வியாதில முடியும். சில கேஸ்ல தோலெல்லாம் அரிப்பும் உரிதலும் இடம்பெற்றதுண்டு. எத்தனை விதம் முடியுமோ அத்தனை விதமான அறிகுறிகளும் உண்டு.''

''ஒரு மருத்துவ டிக்ஷனரி போல பேசறீங்க!''

''நேச்சுரலி. இதுக்காகவே நான் தேடி அலைஞ்சுக்கிட்டே இருந்திருக்கேன் இல்லையா! ஆனா இந்த அத்தனை அறிகுறிகளுக்கு மத்தியிலும் ஒரேயொரு அறிகுறி மட்டும் தவறமா இடம் பெற்றிருக்கு. முடிக் கற்றைகள் வேரோடு விழுவது. ஒரு காலத்துல தல்லியம் எனும் விஷம், மருந்தா உபயோகமாயிருக்கு - குறிப்பா வட்டப் புழுக்களால் அவதிப்படும் குழந்தைகளுக்கு. அப்புறமா இது மகா கொடூரமானதுனு கண்டுபிடிக்கப்பட்டிருக்கு. ஆனாலும் அவ்வப்போது உள் எடுத்துக் கொள்ளும் மருந்தாக நோயாளிகளுக்கு தரப்பட்டுக்கிட்டுத்தானிருக்கு - படு ஜாக்கிரதையான டோஸ் தரப்படும். இது நோயாளிகளின் எடையை வெச்சு நிர்ணயிக்கப்படும். இப்பல்லாம் இவ்விஷம் அதிகமா எலிகளுக்கு பயன்படுத்தப்படுதுனு நான் நினைக்கிறேன். இது சுவையற்றது. சுலபமா கரைஞ்சுடும், கஷ்டமில்லாம வாங்கிடலாம். இதுல ஒரேயொரு விஷயந்தான் முக்கியம்: விஷம் வைக்கப்பட்டிருக்குனு சந்தேகம் எழுந்துடக் கூடாது...''

லெஜன் ஒப்புதலாய் தலையசைத்தார். ''எக்ஸாக்ட்லி'' என்றார் அவர். தொடர்ந்தார்:

''*வெளிறிய குதிரை*க்கு சமீபத்துல யார் கொல்லப்படணுமோ அவங்க தங்கக் கூடாதுனு சொல்லப்பட்டதன் காரணம் இதுதான். எந்த சந்தேகமும் எப்பவும் எழாதே! எப்படி சந்தேகம் எழும்? *வெளிறிய குதிரை*யோட தொடர்புள்ள யாராலும் தல்லியமோ அது வேறெதுவோ... அந்த விஷம் வாங்கப்படுவதில்லை. இதுல முழு வேலையும், பரிதாபமான நம்முடைய பலிகடாவுடன் எவ்வகையிலும் தொடர்பே அற்ற யாரோ ஒரு ரகசிய ஆளால அல்லவா செய்யப்படுது! எனக்கென்னவோ, ஒரு கேஸ்னு எடுத்துக்கிட்டா, அதுல, ஒரேயொரு முறை மட்டுமே வந்து போகும் யாரோ ஒருத்தராலதான், விஷமே வைக்கப்படுது.''

அவர் நிறுத்தினார்.

''இதுகுறித்து ஏதாவது ஐடியா?'' - கேட்டார் லெஜன்.

''ஒண்ணே ஒண்ணு. எனக்கு தென்படும் ஒரு பொதுவான தொடர்பு: ஒவ்வொரு கேஸிலும் எவ்வித ஆபத்தும் தென்படாதவாறு இருக்கும் ஒரு அழகான பெண்மணி, வீட்டு உபயோக சாமான்கள் அடங்கிய கொத்துக் கேள்விகளைச் சுமந்துக்கிட்டு, ஆராய்ச்சி பண்ணுவதாய் சொல்லியபடி பதில்கள் கேட்டுக்கிட்டு வந்து இறங்குவானு படுது.''

''அந்தப் பொம்பளைதான் வந்து விஷத்தை செலுத்திட்டுப் போவதா நினைக்கிறீங்களா? இதுக்கு உதாரணமா? இது மாதிரி நடந்துள்ள ஏதாவது?''

''அத்தனை சுலபமா நடத்திக் காட்டக் கூடியதா எனக்கு தோணலே'' என்றேன் நான் மெதுவாய். ''இதுல பெண்கள் படு சாதுர்யமானவங்கனு ஓர் ஊகமிருக்கு எனக்கு. அவ்ளோதான். இதுகுறித்து, எய்லீன் ப்ரான்டன் எனும் பொம்பளை கிட்டே நாம பேச்சுக் கொடுத்தால் உண்மைகள் தளந்தொடும்னு எனக்குப்படுது. இவ, கோர்ட் ரோடிலிருக்கும் எஸ்ப்ரெஸ்ஸோவில் வேலை பண்றா...''

II

எய்லீன் ப்ரான்டன், போதுமான அளவுக்கு சரியாய் பாப்பியால் வர்ணிக்கப்பட்டிருந்தாள் - அவளுடைய கூந்தல் கால் முட்டி வரை நீண்டிருந்த வகையாகவோ அல்லது காக்கையின் கூட்டினைப் போல சுருண்ட ஒன்றாகவோ இருக்கவில்லை. அது அவளுடைய தலைக்குக் கீழே கழுத்துக்குக் கூட வராதவாறு அலையலையாய் வடிவமைக்கப்பட்டு கத்திரிக்கப்பட்டிருந்தது. மிதமான அரிதாரம் பண்ணிக் கொண்டிருந்தாள். அவளுடைய பாதங்கள் முழுதும் மூடும்படியான அடக்கமான ஷூக்கள். இரண்டு குழந்தைகளை விட்டுவிட்டு அவளுடைய கணவன் மோட்டார் விபத்துஒன்றில் இறந்து விட்டான் - அவள் அப்படித்தான் சொன்னாள். இப்போது அவள் பண்ணிக் கொண்டிருக்கும் வேலைக்கு முன்னால், வாடிக்கையாளர் ஆய்வு சம்பந்தமான ஒரு நிறுவனத்தில் கிட்டத்தட்டஒரு வருட காலமாக பணியாற்றியிருக்கிறாள். அந்தப் பணியில் அவள் மேற்கொள்ள வேண்டியிருந்த 'வேலைகள்' பிடிக்காததால் எய்லீனாகவே முன்வந்து ராஜினாமா பண்ணியிருக்கின்றாள்.

''ஏன் அந்த வேலைகளைப் பண்ண உங்களுக்கு பிடிக்கலே, மிஸஸ் எய்லீன்?''

லெஜன் இக் கேள்விகளைக் கேட்டார். அவள் அவரைப் பார்த்தாள்.

''நீங்க ஒரு டிடெக்டிவ் இன்ஸ்பெக்டர்? அப்படித்தானே?''

''ரொம்பச் சரி, மிஸஸ் எய்லீன்.''

''அந்த நிறுவனத்துல ஏதோ தப்புத் தண்டா இருக்குனு நீங்க நினைக்கிறீங்களா?''

''அந்தச் சமாச்சாரத்துக்குள்ளேதான் நான் இப்ப விசாரிச்சுக்கிட்டிருக்கேன். அப்படி எதையாவது நீங்க சந்தேகிக்கிறீங்களா? அதுக்காகத்தான் நீங்க ராஜினாமா பண்ணினீங்களோ?''

''இந்தக் கோணத்துல மேற்கொண்டு போக எனக்கு ஸ்தூலமா எதுவும் இல்ல. நிச்சயப்படுத்தி எதுவும் என்னால சொல்ல முடியாத நிலை.''

''நேச்சுரலி. எங்களுக்குப் புரியுது. ஆனா இது ஒரு ரகசிய விசாரணை மேடம்.''

''அப்படியா? இருந்தாலுமே என்னால் ரொம்ப கம்மியாத்தான் சொல்ல முடியும்.''

''எதுக்காக அந்த வேலையை விட முடிவு பண்ணினீங்க என்பதை நீங்க சொல்லலாம்.''

''என் அறிதலுக்குள் அகப்படாத விஷயங்கள் அங்கு நடந்துக்கிட்டிருப்பதா ஒரு நினைப்பு எனக்கு இருந்தது.''

''அது ஒரு நல்ல நிறுவனம் கிடையாதுனு நீங்க நினைச்சதா சொல்ல வரீங்களா?''

''அதுமாதிரிதான் எதுவோ. அந்த நிறுவனமே, ஒரு பிஸினஸ் எப்படிப் பண்ணப்படணுமோ அந்த வகையில பண்ணப்பட்டதா எனக்குப் படலே. அது நடத்தப்பட்ட விதத்துக்குப் பின்னால ஏற்கனவே முடிவு செய்யப்பட்டுள்ள ஏதோ ஓர் இலக்கு இருப்பதா நான் சந்தேகப்பட்டேன். ஆனா அது என்ன இலக்கு? அது இன்னிக்குத் தேதி வரைக்கும் எனக்கு தெரியலே.''

அவள் என்ன வேலையை செய்யப் பணிக்கப்பட்டாள் என்பதைத் தெளிவாய் அறிய லெஜன் மேலும் நிறைய கேள்விகள் கேட்டார். அக்கம்பக்கத்திலிருப்போரின் சில பெயர்கள் அடங்கிய பட்டியல் தரப்பட்டுள்ளது. அந்த மக்களைப் போய் பார்ப்பது, குறிப்பிட்ட சில கேள்விகளைக் கேட்பது, அவ்விடைகளைக் குறித்துக் கொள்வதுதான் அவளுடைய வேலை.

''இதுல எது தப்புனு உங்களுக்குத் தென்பட்டது?''

''எனக்கு கொடுக்கப்பட்ட கேள்விகள் எந்தவோர் ஆய்வினையும் நோக்கி கோர்க்கப்பட்டதா எனக்குத் தோணலே. தொடர்ச்சியற்ற,

சம்பந்தமேயில்லாத, குறுக்கும் நெடுக்குமான கேள்விகள் அவை. அவையத்தனையும் - எப்படிச் சொல்வேன் - ஆங்... வேற எதுக்காகவோ சாக்காய் இட்டுக்கட்டப்படுவதாய் தோணிச்சு.''

''எதுக்காகவோ சாக்காய் - இல்லையா? அது என்னனு உங்களுக்கு ஏதாவது ஐடியா இருக்கா?''

''நோ, அதுதான் எனக்கு புதிரா இருந்தது.''

இங்கு கொஞ்ச நேரம் தாமதித்த அவள் பிறகு சந்தேகம் தொனிக்க சொன்னாள்:

''ஒரு சமயத்துல எனக்குள்ளே ஒரு வியப்பு - ஒருவேளை இந்த ஒரு சமாச்சாரமே திருட்டுத் தொழிலை முன்னிறுத்தி பண்ணப்படுதோனு. அதாவது ஓரிடத்துல என்னல்லாம் இருக்குனு வேவு பார்ப்பது போலனு வெச்சுக்கங்களேன். ஆனா இப்படியிருக்க வாய்ப்பில்ல, ஏன்னா, எந்த ஒரு தடவையும் அங்கிருந்த அறைகளின் அமைப்பு பற்றியோ அல்லது கட்டிட அமைப்பு பற்றியோ அல்லது அந்த வீட்டின் ஆட்கள் எப்பல்லாம் இருப்பாங்க, மற்றும் எப்பல்லாம் போவாங்க என்பது பற்றியோ எந்த ஒரு கேள்வியும் என்கிட்டே கேட்கப்பட்டது கிடையாது.''

''உங்க கேள்விகளின் மையம் எதைச் சுற்றி அமைந்திருந்தது?''

''மாறுபட்டிருக்கும். சில சமயங்கள்ல கேள்விகள் சாப்பாட்டு சமாச்சாரங்கள் பற்றி மட்டுமே வேயப்பட்டிருக்கும். கேக், பால் பவுடர்கள்! இன்னொரு தடவை சோப், டிடெர்ஜண்ட், ஷாம்பூ, உதட்டுச் சாயம், முகப்பவுடர் இதுல பரவிக் கிடக்கும். மற்றொரு தடவை, ஃபினாயில் இத்யாதிகள். இல்லேனா, உள்ளுக்குள் எடுத்துக் கொள்ளும் தூக்க மருந்துகள், மவுத் - வாஷ் மருந்துகள்...''

''உங்ககிட்டே...'' என சாந்தமாய் ஆரம்பித்த லெஜன் சராசரியாய் கேட்டார்: ''ஏதாவது குறிப்பிட்ட பொருளின் மாதிரியைக் கொடுக்கும்படி சொன்னதில்லையா?''

''நோ, அப்படி என்னிக்குமே நடந்தது கிடையாது.''

''ஆஹ்.. அப்ப நீங்க வெறுமனே போய் கேள்விகள் கேட்டு அதுக்கான பதில்களை மட்டுமா குறிச்சுக்கிட்டு வந்துக்கிட்டிருந்தீங்க?''

''யெஸ்.''

''இந்தக் கேள்வி - பதில்களின் காரணம் என்னவா இருந்திருக்கணும்?''

''அதுதான் விளக்கவே முடியாத - விளங்கிக்கவே முடியாத ஒண்ணா இருந்தது. காரணம், எங்களுக்கு சரியா எப்பவும் சொல்லப்பட்டது கிடையாது. சில தயாரிப்பு நிறுவனங்களுக்கு இந்த கேள்வி - பதில்களை அனுப்பணும் என்பது போன்ற மேலோட்டமான காரணம் தென்பட்டது - ஆனா, நான் பண்ணின மாதிரி ஒரு மேலோட்டமான நுனிப்புல் வகையில அப்படிப்பட்ட ஓர் ஆராய்ச்சியை எவனும் பண்ண மாட்டான். ஒரு சிஸ்டமே இல்லாத கிறுக்குத்தனம்.''

''இப்ப, கொஞ்சம் யோசிச்சு பதில் சொல்லுங்க. ஒருவேளை, நீங்க கேட்கணும்னு தரப்பட்ட கேள்விகளுக்கு நடுவுல, ஜஸ்ட் ஒரேயொரு கேள்வி... அல்லது குறிப்பிட்ட சில கேள்விகள்... அந்த நிறுவனம் இருப்பதற்கான காரணமா இருந்திருக்கலாமா? இதுக்காக புனையப்பட்ட மற்ற ஏனைய கேள்விகள், வெறும் இட்டுக்கட்டப்பட்ட கண் துடைப்பாயிருந்திருக்கலாமா?''

லெஜனின் இந்த மேலாண்மையான விளக்கத்தை அவள் காது கொடுத்துக் கேட்டு உள்வாங்கிக் கொண்டாள். முகம் சுளித்து யோசித்தாள். பிறகு ஆமோதிப்பதாய் தலையசைத்தாள். ''யெஸ்'' என்றாள் அவள். ''கேள்விகளின் தொடர்ச்சியற்ற தன்மை ஏன்னு இது நல்லா விளக்குது. ஆனா, எந்தக் கேள்வி அல்லது கேள்விகள், முக்கியமானதுனு எனக்கு துளி ஐடியா கூட கிடையாது.''

லெஜன் அவளைக் கவனமாய்க் கூர்ந்துப் பார்த்தார். ''நீங்க இதுவரை சொன்னதையெல்லாம் விட இந்த சமாச்சாரத்துல இன்னும் நிறைய இருக்கணும்'' என்றார் அவர் மிருதுவாய்.

''அதான், அதேதான். அங்கே உண்மைத் தன்மை இல்ல. அந்த முழு செட்- அப்லேயும் ஏதோ தவறு இருப்பதா நான் உணர்ந்தேன். இத்தனைக்கப்புறம்தான் நான் இன்னொரு பொம்பளைக்கிட்டே பேசினேன். மிஸஸ் டேவிஸ்னு...''

''நீங்க, மிஸஸ் டேவிஸ் என்பவங்கிட்டே பேசியிருக்கீங்க... ஆங், அப்படியா?''

இப்போதும் லெஜனின் குரல் மாற்றம் காணாது அதே கீழ்ஸ்தாயியிலேயே உணர்ச்சி காட்டாது இருந்தது.

''அவங்களும் இந்த விஷயத்துல திருப்தியா தெரியலே.''

''ஏன் அவங்களும் திருப்தியில்லாம இருக்கணும்?''

''அவங்க எதையோ கேட்டிருக்காங்க.''

''அப்படி அவங்க கேட்டது எதை?''

''நான்தான் முதல்லேயே சொல்லிட்டேனே இன்ஸ்பெக்டர்... என்னால எதையும் ஸ்தூலமா நிச்சயப்படுத்தி பேச முடியலே. தேவையான வார்த்தைகளைப் போட்டு அவங்க விளக்கமெல்லாம் தரலே. யாரோ எங்கேயோ பேசினதை வெச்சு, அந்த முழு ஏற்பாடுமே வேற எதுக்காகவோ போடப்பட்டிருக்கும் அடித்தளம் அப்படினு முடிவு கட்டிக்கிட்டாங்க. 'அது நமக்கு தெரிவதைப் போன்ற ஒண்ணு கிடையாது'. இதுதான் அவங்க சொன்னது. அப்புறம் சொன்னது: 'ஓ, எப்படியோ, நம்மை பாதிக்கலே. கை கொள்ளாம சம்பளம்; தவிர சட்ட விரோதமா நம்மை எதுவும் அவங்க பண்ண சொல்லலே. அதனால - இனிமேலும் இதுக்குள்ளே நாம மண்டையைப் போட்டு உடைச்சுக்க வேண்டாம்னு நினைக்கிறேன், அவ்ளோதான்.' இப்படி சொன்னாங்க அவங்க.''

''மொத்தமே இவ்ளோதானா?''

''இன்னொரு சமாச்சாரத்தையும் அவங்க சொன்னாங்க. எந்த அர்த்தத்துல இதை சொன்னாங்கன்னு எனக்கு தெரியாது. அவங்க சொன்னாங்க: 'சில சமயங்கள்ல டைஃபாய்டு மேரி போல நான் உணர்றேன்.' இப்படி சொல்வதுல அவங்க என்னத்தை உணர்த்தறாங்கன்னு என்னால அப்ப விளங்கிக்க முடியலே.''

லெஜன் தன்னுடைய பாக்கெட்டிலிருந்து ஒரு தாளினை எடுத்து அவளிடம் கொடுத்தார். ''இந்தப் பட்டியல்ல இருக்கும் பெயர்கள்ல ஒரு பெயராவது உங்களுக்கு ஏதாவது அர்த்தமாகுதா? இவங்கள்ல யாரையாவது நீங்க போய் பார்த்ததா உங்களால ஞாபகப்படுத்த முடியுதா?''

''என்னால ஞாபகப்படுத்த முடியலே.'' அத்தாளை அவள் எடுத்துக் கொண்டாள். ''நான் பற்பலரைப் போய் பார்த்திருக்கேன்.'' அவளுடைய கண்கள் பட்டியலில் இறங்கிக் கொண்டிருந்தபோது பேசாமலிருந்தாள். பிறகு அவள் சொன்னாள்:

''ஓர் மிராட்.''

''ஓர்மிராட் எனும் பெயர்ல உங்களுக்கு யாராவது ஞாபகத்துக்கு வராங்களா, என்ன?''

''நோ, ஆனா மிஸஸ் டேவிஸ் இவனைப் பற்றி ஒரு தடவை குறிப்பிட்டிருக்காங்க. இவன் திடுதிப்னு செத்துட்டான், இல்ல? மூளை

முடக்கம். இந்த சேதி அவங்களை ரொம்பவும் பாதிச்சது. 'ரெண்டு வாரத்துக்கு முன்னாடி வாழ்க்கையின் கொண்டாட்ட உச்சத்துல இருந்தான் அவன்' - இப்படி சொன்னாங்க. இந்த நிகழ்வுக்கு அப்புறமாத்தான் அவங்க டைஃபாய்டு மேரினு பேசினது. அப்புறமா சொன்னாங்க: 'நான் போய் பார்ப்பவர்கள்ல சில பேர் சட்டுனு சுருண்டு விழுந்து செத்துடறாங்க! ஒரு தடவை என்னைப் பார்த்தாலே என்ன நடக்குது பாரு!' சொல்லிட்டு கலகலனு சிரிச்ச அவங்க எதிர்பாராத ஒற்றுமை இதுனு சொல்லிக்கிட்டாங்க. ஆனாலும், இப்படி நடப்பது அவங்களுக்கு பிடிச்சா மாதிரி தெரியலே. இத்தனை இருந்தாலுமே நான் இதைப்பற்றியெல்லாம் கவலைப்படப் போவது கிடையாதுனுதான் அவங்க சொல்லிக்கிட்டாங்க.''

''மொத்தமே இவ்ளோதானா?''

''வெல்...''

''எனக்கு சொல்லுங்க...''

''இப்ப சொல்லப் போவது கொஞ்ச காலத்துக்கு அப்புறம் நடந்தது. நான் பிறகு அவங்களைச் சந்திக்கவேயில்லை. ஆனா ஒருநாள் நாங்க ரெஸ்டாரண்ட் ஒண்ணுல சந்திச்சோம். நான் அந்த வாடிக்கையாளர் ஆராய்ச்சி வேலையை விட்டுட்டதாகவும், வேற ஒரு ஜாப்ல இருப்பதாகவும் சொன்னேன். ஏன்னு அவங்க என்னைக் கேட்டாங்க. எனக்கு அந்த வேலை ஏனோ அசௌகரியமா ஆகிடுச்சுனு பதில் சொன்னேன். அப்பவும் எனக்கு அந்த நிறுவனத்தின் பின்னணி இருட்டுல என்ன நடக்குது என்பது பற்றி எந்த அறிதலும் கிடையாது. இதுக்கு அவங்க சொன்னது: 'புத்திசாலித்தனமான முடிவு செஞ்சிருக்கே. ஆனா, அங்கே... கொஞ்ச நேர வேலைல நிறைய பணம் கிடைச்சது. ம், இருந்தாலும் என்ன... நாம வாழ்க்கையில எதிர்படும் வாய்ப்புகளுக்கு ஏற்றாற் போல் மாறிக்கிட்டேயிருக்க வேண்டியதுதானே! என் வாழ்க்கையில எனக்கு எப்பவுமே அதிர்ஷ்டக் காற்று அடிச்சது கிடையாது... ஸோ, நான் எதுக்காக மத்தவங்க வாழ்க்கையைப் பார்த்து ஏக்கப்படணும்?' நான் உடனேயே சொன்னேன்: 'நீங்க என்னத்தை மனசுல வெச்சுக்கிட்டு பேசறீங்கன்னு என்னால புரிஞ்சுக்க முடியலே. அங்கே நெஜமா என்ன தப்புதான் நடக்குது?' இதுக்கு அவங்க சொன்னது: 'என்னால நிச்சயப்படுத்தி சொல்ல முடியலே, ஆனா கவனிங்க... அன்னிக்கு ஒருத்தனை நான் அடையாளம் கண்டுபிடிச்சேன். யெஸ், ஒரு வீட்டுக்குள்ளேயிருந்து அவன் வந்துக்கிட்டிருந்தான். அந்த வீட்டுல அவனுக்கு எந்த பிஸினஸும்

கிடையவே கிடையாது. கையில ஒரு பை நிறைய உபகரணங்கள். அந்த டூல்ஸை வெச்சுக்கிட்டு, அவன் என்ன பண்ணிட்டு வந்தான்னு எனக்கு தெரியணும்'. கூடவே *வெளிறிய குதிரை* அப்படினு ஒரு *பப்* நடத்தும் பொம்பளைப் பற்றிய அறிமுகம் எனக்கு இருக்கானு வேற என்னையக் கேட்டாரு. இதுக்கு *வெளிறிய குதிரை* இதுல சம்பந்தப்பட என்ன காரணமிருக்கும்னு கேட்டேன் நான்.''

''இதுக்கு அவங்க என்ன சொன்னாங்க?''

''பலமா சிரிச்சுட்டு 'போய் பைபிளைப் படி'னாங்க!''

கூடுதலாய் மிஸஸ் ப்ராண்டன் சொன்னது: ''என்ன அர்த்தத்தை வெச்சுக்கிட்டு அவங்க சொன்னாங்கனு தெரியலே. நான் அதுதான் அவங்களைக் கடைசியா பார்த்தது. இப்ப அவங்க எங்கேயிருக்காங்கன்னு எனக்குத் தெரியலே. அதே வாடிக்கையாளர்கள் ஆராய்ச்சியில இருக்காங்களா? அல்லது வேற வேலைக்குப் போய்ட்டாங்களா?''

''மிஸஸ் டேவிஸ் இறந்துட்டாங்க'' - சொன்னார் லெஜன்.

அதிர்ந்தவராய் ஆனார் மிஸஸ் எய்லீன். ''இறந்துட்டாங்க! ஆ- னா, எப்படி?''

''நெஞ்சுச் சளி. நிமோனியா, ரெண்டு மாசத்துக்கு முன்னாடி...''

''ஓ, அப்படியா. ஐ ஆம் ஸாரி.''

''இன்னும் கூடுதலா உதவும்படி உங்களால மேற்கொண்டு ஏதாவது தகவல்கள் தர முடியுமா, மிஸஸ் ப்ரான்டன்?''

''அப்படி முடியும்னு தோணலையே, ஸார். இன்னும் சில பேரும் அந்தப் பேரை - *வெளிறிய குதிரை*- சொல்ல நான் கேள்விப்பட்டிருக்கேன். ஆனா அவங்களைக் கூட நீங்க அதுபற்றி தகவல் தருமாறு கேட்டால், பட்டுனு வாயை மூடிக்கிடுவாங்க. பயந்து வேற போயிடுவாங்க.''

அவள் சற்று சௌகரியமற்று தெரிந்தாள்.

''நான் நா-ன் எந்தவிதமான ஆபத்திலும் சிக்கிக்க விரும்பலே, இன்ஸ்பெக்டர். எனக்கு ரெண்டு சின்ன பசங்க இருக்காங்க. உண்மையா சொல்றேன்... இப்ப நான் உங்ககிட்டே சொன்னவைகளை விட வேற எதுவும் எனக்குத் தெரியாது.''

லெஜன் அவளைக் கூர்மையாகவும் ஆழமாகவும் பார்த்தார். பிறகு ஆமோதிப்பதாய் தலையசைத்துக் கொண்ட அவர், அவளை விடுவித்து அனுப்பி வைத்தார்.

''இது நம்மை கொஞ்சம் முன்னோக்கி அழைச்சுப் போகுது'' என்றார் லெஜன், எய்லீன் சென்றபிறகு. ''மிஸஸ் டேவிஸுக்கு தேவைக்கு அதிகமா என்னவெல்லாமோ தெரிஞ்சிருக்கணும். இருந்தாலும் அப்படி நடக்கும் அனைத்திலிருந்தும் தன் கண்களை அவங்க மூடியே வெச்சிருக்கத்தான் முயற்சி பண்ணியிருக்காங்க. இவ்வாறு தன்னை அவங்க அடக்கிக் கிட்டாலும் அப்படி நடப்பது என்ன என்பதை தெரிந்துக் கொள்வதில் அவங்களுக்குள்ளேயே சாதுர்யமான ஒரு சந்தேகம் இருந்திருக்கணும். அப்பத்தான் எதிர்பாராம சட்டுனு அவங்க படுத்துடறாங்க. அதே வேகத்துல அவங்க சாகும்போது, உடனடியா பாதிரியார் ஒருத்தருக்கு சொல்லி யனுப்பி, அவங்களுக்கு என்னவெல்லாம் தெரியுமோ அவையனைத் தையும், மேலும் அவங்களுக்கு என்ன சந்தேகம் இருந்ததோ அதையும் சொல்லிடறாங்க. இப்ப வரும் கேள்வி: *அவங்களுக்கு எவ்வளவு தெரிஞ்சிருந்தது?* அந்த பட்டியலில் இருந்த பெயர்கள் அவங்க பணியிலிருந்தபோது போய் பார்த்து வந்த நபர்களின் பெயர்கள். அவங்க எல்லாம்தான் அப்புறமா இறந்திருப்பது. டைஃபாய்டு மேரி எனும் குறிப்புக்கான அர்த்தம் இதுதான் - ஏதோவொரு நோய் கொண்டு இறந்ததைக் கோடிட்டுக் காட்டும் குறிப்பு. ஒரு வீட்டிலிருந்து வெளியே வந்ததாகவும், அந்த வீட்டுல அவனுக்கு எந்த வேலையும் இல்லாதபோது, அவன் அங்கே என்ன பண்ணிக்கிட்டு இருந்திருப்பான்னும் அவங்க கேட்டாங்க இல்லே... 'அடையாளம்' வேற கண்டுபிடிச்சேன்னு அடிச்சு சொன்னாங்க இல்ல... *அது யார்?* இந்த அறிதல்தான் அவங்களுக்கு ஆபத்தை உண்டு பண்ணியிருக்கணும். இவங்க அவனை அடையாளம் கண்டுபிடிச்சிருந்தால், அவனும் இவங்களை அடையாளம் கண்டுக்கிட்டி ருக்கணும்... மேலும், முக்கியமா, இந்தம்மா அவனை அடையாளம் தெரிஞ்சுக்கிட்டாங்க என்பதையும் அவன் உணர்ந்திருக்கணும். ஒருவேளை இந்த தகவலைத்தான் அவங்க ஃபாதர் கார்-மேனுக்கு சொல்லிட்டாங் கன்னு வெச்சுக்கிட்டால், அப்போ, ஃபாதர் கார்-மேன் அந்த தகவலை வேறு யாருக்காவது தருவதற்குள்ளே உடனடியா அடக்கப்படணும் என்பது அவசரமாகுது, ஓ கே?''

சொல்லிக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் என்னைப் பார்த்தார்.

''இப்படித்தான் கதை போகுதுனு நீங்க ஒத்துக்கறீங்க, இல்லையா?''

''ஓ, யெஸ்'' என்றேன் நான். ''நான் ஒத்துக்கிறேன்.''

''அந்த ஆள் யாராயிருக்கும்னு உங்களுக்கும் ஓர் ஐடியா இருந்தாகணுமே?''

''எனக்கு ஊகமிருக்கு, ஆனா...''

''புரியுது, நம் கைல ஒரு துளி சாட்சியும் கிடையாது.''

சில கணங்கள் அவர் அமைதியானார். பின்பு எழுந்துக் கொண்டார்.

''எப்படியிருந்தாலும் நாம அவனைப் பிடிப்போம்'' என்றார். ''என் எண்ணங்கள்ல தப்பு நடந்திருக்க வாய்ப்பு கிடையாது. ஒரு குறிப்பிட்ட ஆள்தான் எல்லாத்துக்கும் காரணம்னு உறுதியாகி விட்டால் அவன்கிட்டேயிருந்து விஷயங்களை உருவியெடுக்க விதம் விதமான வழிமுறைகள்லாம் இருக்கு. அந்த ஒவ்வொரு வழியையும் விடாம முயற்சி பண்ணிப் பார்த்துடுவோம்.''

அத்தியாயம் 23

மார்க் ஈஸ்ட்டர் – ப்ரூக் பதிந்தவை

இதெல்லாம் முடிந்து மூன்று வாரங்கள் போல ஆன பிறகு ப்ரியர்ஸ் கோர்ட்டின் வாசலுக்குப் போய் நின்றது ஒரு கார்.

அதிலிருந்து நாலு ஆடவர்கள் இறங்கினார்கள். அவர்களில் நானும் ஒருவன். டிடெக்டிவ் இன்ஸ்பெக்டர் லெஜன் மற்றும் டிடெக்டிவ் தலைமை கான்ஸ்டபிள் லீ ஆகியோரும் இருந்தார்கள். நான்காவது ஆள், மிஸ்டர் ஓஸ்பார்ன். இக்குழுவில் அவனும் ஓர் அங்கத்தினனாய் ஆக்கப்பட்டிருந்ததற்கு அவனிடம் விளைந்த பரபரப்பையும் கிளர்ச்சியையும் அவனால் கட்டுப்படுத்திக் கொள்ளவே முடியவில்லை.

''வாயைத் தொறக்கக் கூடாது, புரியுதா?'' என்று துள்ளிக் கொண்டிருந்த அவனைப் பிரயத்தனப்பட்டுக் கட்டுப்படுத்தினார் லெஜன்.

''யெஸ், நிச்சயமா இன்ஸ்பெக்டர். என்னை நீங்க முழுசா நம்பலாம். ஒரு வார்த்தை பேச மாட்டேன்.''

''ஒரு அட்சரம் வரக் கூடாது.''

''இது எனக்கு தரப்பட்டுள்ள கவுரவமா நான் எடுத்துக்கிட்டிருக்கேன். எதுக்காக இத்தனை பெரிய அங்கீகரிப்புனு எனக்கே இன்னும் விளங்கலேன்னாலும் என்னைப் பொறுத்தவரைக்கும், இது என் மேல் நம்பிக்கை வைத்து தரப்பட்டுள்ள ஒரு மாபெரும் கவுரவம்.''

ஆனால், எந்த சந்தேகங்களுக்கும் விளக்கம் தரும் பணியை அப்போது யாரும் கையிலெடுத்துக் கொள்ளவில்லை.

அழைப்பு மணியை ஒலித்துவிட்டு வெனபிள் இருக்கிறாரா என கேட்டார் லெஜன்.

ஏதோ அலுவலக நிமித்தமாய் வந்திருப்பதைப் போல காவலாளிக்குத் தோன்றிய நாங்கள் நால்வரும் வீட்டுக்குள் அனுமதிக்கப்பட்டோம்.

ஒருவேளை எங்களுடைய வரவால் வெனபிள் ஆச்சரியப்பட்டுப் போயிருந்தாலும் அதனை அவர் வெளியே காட்டிக் கொள்ளவில்லை. அவரது நடவடிக்கை கனவின் உச்சத்தில் இருந்தது. அவரைச் சுற்றியிருந்த வட்டத்தை சற்று பெரியதாக்கிக் கொள்வதற்காக தன்னுடைய சக்கர நாற்காலியை அவர் பின்னுக்குத் தள்ளியபடி நகர்ந்துக் கொண்டபோது, எத்தனை தனித்துவம் மிக்க தோற்றத்தைப் பிரதிபலிக்கிறார் இவர் என்று எண்ணிக் கொண்டேன் நான். அவருடைய ஆதாம் ஆப்பிள் போன்ற முகவாய் கொழித்திருந்த தோள்களுக்கு இடையில் மேலும் கீழுமாய் அசைந்தபடியிருக்க, இரையைத் தேடும் பசியெடுத்த பறவையின் அலகென வளைந்திருந்தது அவரது மூக்கு.

''உங்களை மறுபடியும் சந்திப்பதுல மகிழ்ச்சி, மிஸ்டர் ஈஸ்ட்டர் - ப்ரூக். உலகின் இந்தப் பகுதியில நீங்க இப்பல்லாம் நிறைய நேரத்தை செலவழிப்பது போல தெரியுது...''

அவரது குரலில் கிண்டிப் பார்க்கும் கிண்டல் இருப்பதாய் பட்டது எனக்கு. அவர் தொடர்ந்தார்:

''இது - டிடெக்டிவ் இன்ஸ்பெக்டர் லெஜன் - இஸிட்? ஓ, இப்ப என்னுடைய எதிர்பார்ப்பு அதிகமாகுது. எத்தனை அமைதியான பகுதி இது... குற்றங்களிலிருந்து மிகவும் அப்பாற்பட்ட பகுதி. இருந்த போதிலும் ஒரு டிடெக்டிவ் இன்ஸ்பெக்டர் வரார். உங்களுக்கு நான் என்ன ஒத்தாசை தரணும் இன்ஸ்பெக்டர்?''

லெஜன் ரொம்ப அமைதியாய் இருந்தார். வெகு சாந்தமாய்.

''ஒரு சமாச்சாரம் மிஸ்டர் வெனபிள்... அதுல நீங்க உதவி பண்ண முடியும்னு எதிர்பார்த்து வந்திருக்கோம்.''

''இது ஒரு பிரபலமான வியூகம், இல்லையா? ஓகே... என்ன வகையில நான் உதவ முடியும்னு நினைக்கிறீங்க?''

''அக்டோபர் ஏழாம் தேதியன்று கார்-மேன் எனும் பெயர் கொண்ட ஒரு பாதிரியார் பாடிங்டன் பகுதியின் மேற்கு தெருவில் கொலை செய்யப்பட்டிருக்கார். அந்த சமயத்துல - அதாவது இரவு 7.45லிருந்து 8.15க்குள் - நீங்க, அப்பகுதியின் சுற்று வட்டாரத்துல இருந்திருப்பதாய் எனக்கு தகவல்கள் கிடைச்சிருக்கு. அப்படினா, நிச்சயமா இந்த வழக்குக்கு துணை நிற்கும் எதையாவது நீங்க அங்கே பார்த்திருக்கக் கூடும்னு எனக்கு ஒரு நினைப்பு.''

''நான் அந்த சமயத்துல நெஜமாவே அங்கேயா இருந்தேன்? உங்களுக்கு எப்படி தெரியும்? ம்ம்.. எனக்கு சந்தேகமா இருக்கு. ரொம்பவே சந்தேகமா இருக்கு. என் ஞாபகத்துக்கு எட்டிய வரைக்கும் லண்டனின் அந்த மாகாணப் பிரதேசத்துக்கு நான் போனதே கிடையாது. என் நினைவை மீட்டிப் பார்த்து சொல்றேன்... நீங்க குறிப்பிடும் காலகட்டத்துல நான் லண்டனில் இருந்தேனா என்பதே ஒரு கேள்விக்குறிதான்... யெஸ்... நான் அப்ப அங்கேபோகலே. ஒண்ணு தெரியுமா... நான் அப்பப்போதான் லண்டனுக்குப் போவேன். ஏதாவது இண்ட்ரஸ்டிங்கான கலைப் பொருட்கள் விற்பனை இருந்தால் போவேன், அல்லது, டாக்டரைப் பார்க்க...''

''ஹார்லி சாலை டாக்டரான சர் வில்லியம்?''

சொன்ன லெஜனை நேரடியாய் முறைத்துப் பார்த்தார் வெனபிள். ''அடியாழம் வரை உங்களுக்கு தகவல் வந்திருக்கு, இன்ஸ்பெக்டர்.''

''எத்தனை வந்திருக்கணும்னு நான் நினைக்கிறேனோ அந்த அளவுக்கு வரல! எப்படியோ... நான் என்ன மாதிரியான உதவியை உங்ககிட்டே எதிர்பார்த்தேனோ அந்த அளவுக்கு இப்ப கிடைக்காதது ஏமாற்றத்தைத் தருது. அதனால ஃபாதர் கார்-மேன் மரணத்தை ஒட்டிய அத்தனை சங்கதிகளையும் நான் உங்ககிட்டே சொல்லணும்னு நினைக்கிறேன்.''

''நிச்சயமா, நீங்க விரும்பினால்! இந்தக் கணம் வரைக்கும் நான் கேள்விப்பட்டிராத ஒரு பெயர், ஃபாதர் கார்-மேன்.''

''பக்கத்துல எங்கேயோ மரணப்படுக்கையில இருந்த ஒரு பெண்மணியால் பனிக் கொட்டிக்கிட்டிருந்த அந்த இரவுப் பொழுதுல கூப்பிட்டனுப்பப்படுகிறார், ஃபாதர் கார்-மேன். இவரும் போறார். அவங்களுடைய அறிதல் இல்லாமலேயே ஆரம்பத்துல ஒரு க்ரிமினல் கூட்டத்தின் வட்டத்துக்குள் விழுந்திருக்காங்க அந்தம்மா... ஆனா பிறகு சில நிகழ்வுகள் இந்த விஷயத்தின் தீவிரத் தன்மையை அவங்களுக்குக் காட்டியிருக்கு. தேவையற்ற ஆட்களை உலகத்திலிருந்து நீக்கி விடுவதில் நிபுணத்துவம் பெற்றிருந்த கூட்டம் அந்தக் கூட்டம் - அஃப்கோர்ஸ், பை கொள்ளாத பணத்துக்காக.''

''புத்தம் புது ஐடியாவா இருக்கு'' என்றார் வெனபிள்.

''ஆஹ்... ஆனா இந்தக் குறிப்பிட்ட அமைப்புல சில புதுமை அம்சங்கள் இருக்கு. குறிப்பா சொல்லணும்னா... ஆட்களை நீக்குவது, உளரீதியான முறையில பண்ணப்பட்டிருக்கு. ஒவ்வொருத்தருக்குள்ளேயும் 'சாகணும்'

எனும் ஒரு தாகம் இருக்குமாம். மறைந்தே கிடக்கும் இந்த வேட்கையைக் கிண்டி விடுவதால், மரணம் நிகழ்த்தப்படுதாம்...''

''ஆ! அப்ப என்ன சொல்ல வரீங்க? மரண தாகம் தூண்டி விடப்படுவதால் அந்த நபர் தற்கொலை பண்ணிக்கிறார்னா? ப்ளீஸ் இன்ஸ்பெக்டர்... இதெல்லாம் கொஞ்சங்கூட நம்பும்படி இல்ல.''

''தற்கொலை இல்ல, மிஸ்டர் வெனபிள். அந்த நபர் இறப்பது, பர்ஃபெக்டா இயற்கையான முறையிலதான்.''

''ஓ, ஓ, ஓ... இதை நீங்க நெஜம்னு நம்பறீங்களா? நமது புத்திசாலித்தனமான போலீஸ் படைகூட சில சமயங்கள்ல எப்படியெல்லாம் விழுந்துடுது.''

''இந்த அமைப்பின் தலைமையகமாய் *வெளிறிய குதிரை* எனும் இடம் சொல்லப்படுது.''

''ஆஹ், ஆஹ்.. இப்ப என்னால கொஞ்சங் கொஞ்சமாக விளங்கிக்க முடியுது. ஆக, இதுதான் இந்த மனோஹரமான கிராமப் பகுதிக்கு உங்களை இழுத்துக்கிட்டு வந்திருக்கா? என் ஃப்ரண்ட் தெரஸா க்ரே மற்றும் அவங்களுடைய முட்டாள் கூத்து! அவளே இதையெல்லாம் நம்பறாளா இல்லையானு தெரியலே... ஆனா இன்ஸ்பெக்டர், என்னால இதை கொஞ்சமும் புரிஞ்சுக்க முடியலே. அது முட்டாள்தனத்தின் உச்சம்! அவளுக்கு, ஆவிகளுடன் தொடர்பு கொள்ளவல்ல, ஒரு சூட்டிகையற்ற தோழி இருக்கா. ஒரு லோக்கல் சூனியக்காரிதான் அவளுக்கு சமைச்சுப் போடுவது. 'அதுல அவ ஏதாவது சூனியத்தைக் கலந்துட்டா என்ன பண்ணுவது?'னு பயப்படாம சாப்பிடறாளே இந்த க்ரே! இந்த மூணு டியர்களும் ஒண்ணா சேர்ந்து லோக்கல்ல நல்லா பேரை சம்பாதிச்சு வெச்சிருக்குங்க. சரியான கூத்து இது...! ஆனா நீங்க, ஸ்காட்லாண்ட் யார்ட்! இதையெல்லாம்போய் ஸீரியஸா எடுத்துக்கிட்டதா மட்டும் என்கிட்டே சொல்லிடாதீங்க!''

''சொல்லப் போனா, இதை நாங்க ஸீரியஸா எடுத்துக்கிட்டிருக்கோம், மிஸ்டர் வெனபிள்.''

''தெரஸா அவளால பண்ண முடியும்னு சொல்வதெல்லாம் சரினும், ஸிபில் ஆவிகளுடன் பேசுவது நிஜம்னும், பெல்லாவுக்கு சூனியம் வைக்க முடியும்னும், இந்தக் கூட்டு முயற்சியின் விளைவா எங்கேயோ யாரோ மரணமடைவதையும் - நீங்க நம்பறீங்களா, என்ன?''

''ஓ, நோ, வெனபிள்... மரணத்தின் காரணம் இத்தனை நீளமானது கிடையாது. இதைவிட சின்னது...'' - இங்கு சற்று நிறுத்தினார் அவர். பிறகு பேசினார்.

''காரணம்: தல்லியம் விஷம் வைக்கப்படுவது..''

அறையில் சற்று அமைதி நிலவியது. ''என்ன சொன்னீங்க?''

''விஷம் வெக்கப்படுது - தல்லியம் உப்புகள். சிம்பிள் காரணம்! இதன் வெற்றிக்கு ஒரேயொரு தேவைதானிருக்கு. இது, மறைக்கப்படணும். நவீன அறிவியல், மனநல காரணங்கள் போன்றவற்றை தவிர வேறென்ன வாட்டமாகைகொடுக்க முடியும்? நவீன அறிவியல் செட் - அமைப்புனாலும் பழைய மூட நம்பிக்கையின் துணையாலும் மறைக்கப்படும் கொலை. விஷம் தரப்படுது எனும் வெளிப்படையான காரணத்திலிருந்து முழு கவனத்தையும் திசை திருப்பிவிட பண்ணப்படும் போலி விளையாட்டு.''

''தல்லியம்'' என்ற மிஸ்டர் வெனபிள்ளின் முகம் கோணியது. ''இப்படியெல்லாம் கேட்டதாகவே எனக்கு நினைவில்லை.''

''நோ? எலிப் பாஷாணமா ரொம்பவே பயன்படுத்தப்படுவது. தவிர, அவ்வப்போது குழந்தைகளுக்கு வரும் சுருட்டுப்புழு நோய்க்கு மருந்தாக அளவா பயன்படுத்தப்படுது. ரொம்ப சுலபமா வாங்கிடலாம். இப்பன்னு பார்த்து இந்த விஷம் உங்க வீட்டு தோட்டத்துல ஓர் ஓரத்துல பதுக்கி வெக்கப்பட்டிருக்கு...''

''என் தோட்டத்துலயா? நம்ப முடியாததெல்லாம் பேசறீங்க..''

''அங்கேயிருக்கு. அவ்ளோதான். அதுல கொஞ்சம் போல் நாங்க பரிசோதிச்சும் பார்த்தோம்...''

இப்போது வெனபிள் கொஞ்சமாய் பரபரப்பானார்.

''யாரோ அங்கே போட்டிருக்கணும்... எனக்கு அதைப் பற்றி ஒண்ணும் தெரியாது! ஒண்ணுமே தெரியாது.''

''அப்படியா? நீங்க நல்லா சொத்து சேர்த்து வைத்திருக்கும் ஓர் ஆள், இல்லையா மிஸ்டர் வெனபிள்?''

''இது, நாம பேசிக்கிட்டிருக்கும் இதோட என்ன வகையில சம்பந்தப்பட்டிருக்கு?''

''உள்ளூர் ரெவின்யூ ஆபீஸ்லிருந்து கொஞ்ச நாளா உங்களை சங்கடப்படுத்தும் சில கேள்விகள் வந்துக்கிட்டுத் தானிருக்கு, இல்லையா? அதாவது, அத்தனை பணம் எப்படி வந்தது என்பதை பற்றி குறிவெச்சு.''

''வரி தொந்தரவுகளால இங்கே இங்கிலாந்துல வாழ்வதே ஒரு சாபம். வரவர, பேசாம பெர்முடா பக்கமா வீட்டை மாத்திக்கிட்டு போய் வாழ்ந்துடலாம்னு நினைக்க ஆரம்பிச்சுட்டேன்.''

''இப்ப உடனடியா நீங்க பெர்முடா போய் வாழ முடியும்னு எனக்கு தோணலே, மிஸ்டர் வெனபிள்.''

''இது என்ன மிரட்டலா, இன்ஸ்பெக்டர்?''

''நோ, நோ மிஸ்டர் வெனபிள். ஜஸ்ட் என் கருத்தின் வெளிப்பாடு. இந்த சின்ன சிலுமிஷமான சமாச்சாரம் எப்படி நடைமுறைப்படுத்தப்படுதுனு நீங்க தெரிஞ்சுக்க விரும்பறீங்களா, மிஸ்டர் வெனபிள்?''

''அதை சொல்லணும்னு நீங்க முடிவாத்தானே இருக்கீங்க...''

''துல்லியமா வடிவமைக்கப்பட்டுள்ள விஷயமிது. இதுக்கு தேவையான பணம் எல்லாம் பணியிலிருந்து சஸ்பெண்ட் செய்யப்பட்டு விட்ட வக்கீல் மிஸ்டர் ப்ராட்லே என்பவரால் கவனிக்கப்படுது. பிர்மிங்ஹாம்ல அவருக்கு ஒரு ஆபீஸ் இருக்கு. புது தொழில் ஆரம்பிக்க விரும்பும் வாடிக்கையாளர்கள் அவரை பணம் சம்பந்தமான ஆலோசனைகளுக்கு போய் பார்த்து பிஸினஸ் பண்றாங்க. இதைப் பொறுத்தவரைக்கும், அதாவது நம்ம சமாச்சாரத்தைப் பொறுத்தவரைக்கும் - ஒரு பந்தயம் மையக் கருவா இருக்கு. யாரோ ஒருத்தர் இறப்பார் என்பது அந்த பந்தயம். அதை முன்மொழியும் மிஸ்டர் ப்ராட்லே நிச்சயமா தான்தான் ஜெயிப்பேன்னு அடிச்சுச் சொல்வார். வரும் வாடிக்கையாளன் வழக்கம் போல் ரொம்பவே எதிர்பார்ப்புடனேயே இருப்பான். மிஸ்டர் ப்ராட்லே ஜெயிச்சா,அதற்கான பணம் சொன்னபடி தரப்படணும்... இல்லேனா வந்தவருக்கு அபசகுனமாக ஏதாவது நடந்துடும். ஆக, இவ்ளோதான் மிஸ்டர் ப்ராட்லே செய்யணும் - ஜஸ்ட், பெட் கட்டணும்! சிம்பிள், இல்ல?

''வந்த வாடிக்கையாளன் அடுத்து *வெளிறியகுதிரையைப்* போய் பார்ப்பான். மிஸ் தெரஸா க்ரே மற்றும் அவ கூட்டத்தினரால் ஒரு நாடகம் நடத்தப்படும். இது, வந்தவனை எப்படி பிரமிப்பூட்டி இழுக்க வேண்டுமோ அதே வகையிலேயே வடிவமைக்கப்பட்டிருக்கும்.

''இப்போ, இக் காட்சிகளுக்குப் பின்னாலிருக்கும் சின்னச் சின்ன நிஜங்கள் பற்றி.

''சில பெண்கள்... வீட்டு உபயோகப் பொருட்களின் ஆராய்ச்சி பற்றி பக்கத்துல இருக்கும் வீடுகளுக்கு சில கேள்விகளுடன் அனுப்பப்படுவாங்க.

'என்ன மெட்டி உங்களுக்கு பிடிக்கும்? கக்கூஸ் கழுவ என்ன சாமான்? டானிக் என்ன, தூக்க மாத்திரை என்ன...?' இப்படி! இந்த காலத்துல இப்படிப்பட்ட கேள்விகளுக்கு பதில் சொல்ல எல்லாருமே வழக்கப்பட்டிருக்கோம். யாரும் எதிர்ப்பதில்லை. மறுப்பதில்லை.

''இதெல்லாம் கடந்து இப்ப - கடைசி காட்சிக்கு! சிம்பிளானது. மகா தைரியமா நடைமுறைப்படுத்தப்படுவது, சக்ஸஸ் ஃபுல்லானது! இந்த திட்டத்தின் அச்சாணியான அந்த ஆள்... ஆணிவேரான அந்தக் கொலைகாரன், காட்சி தரும் ஒரே ஸீன்! ஓட்டல் வெயிட்டர் போலவோ அல்லது அடுக்ககக் காவக்காரன் போலவோ அவன் உடையணிந்திருக் கலாம்... காஸ்காரன் இல்ல எலக்ட்ரிக் மீட்டர்காரன் போல கூட வரலாம். ப்ளம்பர், எலக்ட்ரீஷியன், இத்யாதி. இதுபோல ஏதோவொரு நபரா, எப்படி அவன் வந்தாலும், அவன்கிட்டே, அவன் அப்படிப்பட்ட ஆள்தானா என்பதற்கான முழு சாட்சியமும் இருக்கும். யாராவது கேட்டால் அதை காட்டி வெற்றிகரமாக அவங்க வாயை அடைக்க. தன்னை சந்தேகத்துக்கு அப்பாற்பட்டவனா நிரூபிச்சுக்க. ஆனா யார் இதையெல்லாம் சரி பார்த்துக்கிட்டிருப்பது? என்ன மாதிரியான வேஷங் கட்டிக்கிட்டு அவன் வந்தாலும் அவனுடைய இலக்கு ரொம்ப சிம்பிளான ஒண்ணே ஒண்ணுதான் - *அவன் குறி வெச்சிருக்கும் ஆள் உபயோகிக்கும் ஓர் அத்தியாவசியப் பொருளின் மாற்றாக அவன் சொந்த தயாரிப்பாய் கொண்டு வந்திருக்கும் மாற்றுப் பொருளை தந்து விடுவதுதான்.* அவனுடைய இரை, எந்த பொருளை மிக அதிகமாக நேசிச்சு உபயோகிக்கிறான் எனும் தகவல்தான் 'வாடிக்கையாளர் ஆராய்ச்சி' எனும் பேர்ல அவனுக்கு ஏற்கெனவே கிடைச்சிருக்குமே! அவன் குழாயை சரி பண்ணலாம். அல்லது வாட்டர் சரியா ஏறுதானு பார்க்கலாம். ஆனா மாற்றுப் பொருளைத் தந்து அதன் மீது தன்னம்பிக்கையை ஏற்றுவதுதான் அவனுடைய நிஜ இலக்கு. இதை வெற்றிகரமா முடிச்சதும் அவன் கிளம்பிடறான்... அப்புறம் அந்த சுற்று வட்டாரத்துல அவனைப் பார்க்க முடியாது.

''பிறகு தொடரும் சில நாட்களுக்கு எந்த மாற்றமும் ஏற்படுவது கிடையாது. ஆனா அதுக்கப்புறம் உடனேயோ அல்லது சற்று காலந் தாழ்த்தியோ, இலக்கு குறிக்கப்பட்ட ஆள், உடல் நலக் குறைவினை வெளிப்படுத்துவான். டாக்டர் வரவழைக்கப்படுவார். அவருக்கும் அசாதாரண ஒரு மண்ணும் தென்படாது. என்ன சாப்பிட்டேன்னும் என்ன குடிச்சேன்னும் கேட்கும் அவர் வருடக் கணக்கா நம்ம ஆள் உட் கொண்டுவரும் ஒரு பொருளைப் போய் சந்தேகப்படவே மாட்டார்.

''இந்த முழு திட்டத்திலும் உள்ள அழகு... கலை நுணுக்கம்... அது உங்களுக்கு புலப்படுதா, மிஸ்டர் வெனபிள்? இக்கூட்டத்தின் தலைவன் நெஜத்துல என்ன பண்ணி கொலையை அரங்கேற்றுகின்றான் என்பது தெரிஞ்சிருக்கும் அந்த ஒரே ஆள், இக்கூட்டத்தின் தலைவன்தான். ஆக அவனைக் காட்டிக் கொடுக்க வேற ஒருத்தன் கிடையாது.''

''இப்படியிருக்கையில் உங்களுக்கு மட்டும் இத்தனை சமாச்சாரங்கள் எப்படி தெரியும், இன்ஸ்பெக்டர்?'' - கேட்ட வெனபிள்ளின் குரலில் அதிகாரமிருந்தது.

''ஒரு குறிப்பிட்ட ஆள் மீது எங்க சந்தேகங்கள் வரும்போது, அதன் உண்மையைக் கண்டறிய எங்களுக்கு வழிவகைகள் இருக்கு, மிஸ்டர்!''

''அப்படியா? உதாரணத்துக்கு?''

''அதைப் பற்றியெல்லாம் ஆழமா நாம பேச வேண்டிய தேவை இங்க இல்ல. ஒரு உதாரணம் தரலாம்னா, காமிரா. இந்நாட்கள்ல எல்லாமே சாத்தியம். புகைப்படம் எடுக்கப்படறோம் எனும் சந்தேகம் ஒருத்தனுக்கு வராமலேயே அவனை நாம படம் பிடிச்சுடலாம். யூனிஃபார்ம் போட்ட அடுக்ககக் காவக்காரன், கேஸ் மேன் போன்றோரின் அட்டகாசமான புகைப்படங்கள் எங்களுக்கு இப்ப கிடைச்சிருக்கு. ஒட்டு மீசை, நடையில் மாற்றம் போன்றவையெல்லாம் அவற்றில் இருக்கு. ஆனா... எங்களுடைய அந்த ஆள் சுலபமாக அடையாளம் காணப்பட்டாச்சு. முதல்ல மிஸஸ் ஈஸ்ட்டர் ஃப்ரூக்கால். பிறகு எடித் பின்ஸ் எனும் பெண்ணால். அடையாளம் காண்பதென்பது ஓர் இண்ட்ரஸ்டிங்கான வேலை, மிஸ்டர் வெனபிள். உதாரணத்துக்கு, அக்டோபர் ஏழாந் தேதியன்று இரவு எட்டு மணிக்கு நீங்க பார்ட்டன் தெருவில் ஃபாதர் கார்-மேனைப் பின்தொடர்ந்துக் கிட்டு போனீங்கன்னு தொண்டையைப் பிடிச்சுக்கிட்டு சத்தியம் செஞ்சு அடையாளம் காட்ட, இதோ இங்கேயே மிஸ்டர் ஓஸ்பார்ன் இருக்கார்.''

''நான் உங்களைப் பார்த்தேன்'' மிஸ்டர் ஓஸ்பார்ன் முன்னுக்கு வளைந்து வந்தான்... பரபரப்பாய் துடித்தான். ''நான் உங்களை துல்லியமா வர்ணிச்சேன்!''

''சொல்லப் போனால், படு துல்லியமா'' என்றார் லெஜன். ''ஏன்னா, உங்க கடைக்கு வெளியே வந்து நீங்க நின்னுக்கிட்டிருந்த போது நீங்க வெனபிள்ளைப் பார்க்கலே. சரியா சொல்லணும்னா, நீங்க அங்கே வந்து நிக்கவே இல்ல என்பதுதான் சரி. தெருவுக்கு குறுக்கா போய், வெஸ்ட் ஸ்ட்ரீட்ல ஃபாதர் கார்-மேன் திரும்பும் வரை நீங்களே பின் தொடர்ந்து அப்புறம் அவர் அருகில் விரைந்து, கடைசியா கொன்னீங்க..''

''என்ன?'' - கேட்டான் மிஸ்டர் ஓஸ்பார்ன்.

கேலி பண்ணுகிறாயா? என்பது போலிருந்தது ஓஸ்பார்ன் கேட்டது. சொல்லப் போனால் நிலைமை ஏதோ சேட்டை பண்ணுவதைப் போலத்தானிருந்தது! அவனுடைய தொய்ந்துவிட்ட முகவாயும், நிலைகுத்திப் போகத் துவங்கியிருந்த கண்களும்...

''மிஸ்டர் வெனபிள்.. உங்களுக்கு நான் இப்ப மிஸ்டர் ஓஸ்பார்ன், பாடிங்டனின் கெமிக்கல் மருந்துக்காரரை, அறிமுகப்படுத்த விரும்பறேன். கொஞ்ச நாட்களாகவே எங்களுடைய ரகசியக் கண்காணிப்பிலிருக்கும் இவர்தான், உங்க தோட்டத்து தொட்டிகளுக்கு நடுவில் தல்லியம் விஷத்தைக் கொண்டு வந்து கொட்டி மறைச்சு வெச்சது என்பதை தெரிஞ்சுக்கிட்டீங்கன்னா, உங்களுக்கு இவர் மேல தனிப்பட்ட ஈடுபாடு உருவாவதை நீங்களே உணரலாம். உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் வாதம் பற்றி தெரியாததாலே, இக் கொலைகளின் வில்லனாக உங்களையே பாத்திரமாக்கி சிலாகித்துப் போயிருக்கார் இவர். மிகவும் பிடிவாத குணமும் அதே சமயம் முட்டாள் தனமும் ஒருசேர சேர்ந்த கலவை இவர்... இதனாலேயே இவர் பண்ணிக்கிட்டிருக்கும் முதிர்ச்சியற்ற நடவடிக்கைகள் இவர் கண்களுக்குப்படலே...''

''முட்டாள்? எத்தனை தைரியமிருந்தா என்னை முட்டாள்ம்பீங்க? உங்களுக்கு தெரிந்தால்... நான் என்னவெல்லாம் பண்ணியிருக்கேன் என்பது பற்றிய விவரங்கள்லாம் உங்களுக்குத் தெரிந்தால்.. என்னவெல்லாம் பண்ணுவேன் என்பது பற்றியும் ஓர் ஊகமிருந்தால்... என்னை முட்டாள்ன்னு சொல்ல மாட்டீங்க...''

ஓஸ்பார்ன் வெறி பிடித்தவனானான். கத்தினான்.

இந்த வெறியனை, லெஜன் கவனமாகவும் ஜாக்கிரதையாகவும் வளைக்கலானார். மீன் பிடிக்கும் ஒருத்தனைத்தான் லெஜனின் அணுகுமுறை எனக்கு நினைவூட்டியது.

நான்தான் சரி என்பது தொனிக்க, ''அதிமேதாவித்தனமா நீங்க இயங்கியிருக்கக் கூடாது, யூ நோ'' என்றார். ''எந்த மேற்படி நடவடிக்கை களும் எடுக்காமல் நீங்க பேசாம உங்க கடை நாற்காலியிலேயே சாஞ்சுக்கிட்டு உட்கார்ந்திருந்தால், நான் இங்கே வந்திருப்பேனா... துப்பறிஞ்சு கண்டு பிடிச்சிருப்பேனா... நீங்க சொல்லும் எதுவும் பதிவு பண்ணப்படும்னு உங்களை எச்சரிச்சுக்கிட்டுத் தானிருப்பேனா...''

இந்த வார்த்தைகளில்தான், கதறலாய் கத்த ஆரம்பித்தான் ஓஸ்பார்ன்.

அத்தியாயம் 24

மார்க் ஈஸ்ட்டர் – ப்ரூக் பதிந்தவை

''கவனிங்க மிஸ்டர் லெஜன்.. எனக்கு ஏகப்பட்ட விஷயங்கள் நிவர்த்தியாக வேண்டியிருக்கு.''

எல்லா காவல் துறை சம்பிரதாயங்களும் முடிந்துவிட, லெஜன் எனக்கென தனியாய் கிடைத்தார். எங்களுக்கு எதிராய் இரண்டு பெரிய பீர் பாட்டில்கள் திறக்கப்பட்டிருக்க, நாங்களிருவரும் அருகருகே உட்கார்ந்திருந்தோம்.

''சொல்லுங்க, மிஸ்டர் ஈஸ்ட்டர் - ப்ரூக்? இது உங்களுக்கு ஓர் ஆச்சரியமா அமைஞ்சிருக்குனு நினைக்கிறேன்!''

''பேராச்சரியமா! என் மூளை முழுக்க வெனபிள் மேலேயேதான் நிலை கொண்டிருந்தது. குட்டி ஹிண்டைக் கூட நீங்க எனக்குத் தரலே.''

''ஹிண்டுகள் கொடுத்துக்கிட்டிருக்கும் தொழில்ல நான் இல்ல, மிஸ்டர் ஈஸ்ட்டர் - ப்ரூக். இந்த விளையாட்டையெல்லாம் நாங்க எங்களோட நெஞ்சுக்கு நெஞ்சா வெச்சுக்கிட்டுதான் விளையாட வேண்டியிருக்கு. அவனுங்க எல்லாருமே தந்திரக்காரனுங்க. இந்த கேஸ்ல நாம மேற்கொண்டு முன்னேற எந்த வகையான துடுப்பும் இல்லாதது பெருங்குறை. அதனாலதான் வெனபிள்ளுடைய ஒத்துழைப்புல இந்நாடகத்தை எப்படி நடத்திக்கிட்டு முன்னேறினோமோ அப்படி முன்னேற வேண்டியிருந்தது. தோட்டத்து கட்டத்தை சொல்வது வரைக்கும் ஓஸ்பார்னைக் கையோட இழுத்துக்கிட்டு போய், அக்கட்டம் வந்ததும் சட்டுனு அவன் பக்கமாய் திருப்பி, எதிர்பாராத அந்த நிலையில் அவனைச்

சுக்கு நூறா ஆக்கிடணும்னு திட்டமிட்டேன். அது அற்புதமா ஓர்க் அவுட் ஆச்சு.''

''அவன் என்ன பைத்தியமா?'' நான் கேட்டேன்.

''இப்ப அவன் அந்த கட்டத்துக்குப் போய்ட்டான்னு சொல்லலாம். ஆரம்பத்துல அவன் வெறிபிடிச்ச நிலைமைல இல்ல, ஒத்துக்கிறேன். ஆனா, உங்களுக்குள்ளே இது ஒரு வேதியியல் மாற்றத்தை உண்டு பண்ணிடுது, தெரியுமா! ஆட்களைக் கொல்வது. இந்த வாழ்க்கையில, இது, உங்களை ஒரு மகா சக்தியாகவும் அனைத்தையும் விட, பலம் வாய்ந்த ஒன்றே ஒன்றாகவும் நினைக்க வெக்குது. நீங்கதான் கடவுள்னு எடை போட வெச்சுடுது. ஆனா, நிஜத்துல ஒரே சக்தியான கடவுள் கிடையாது நீங்க. மத்தவங்களைப் போல நீங்களும் ஒரு மனித மூட்டை. அவ்வளவே. இந்த உண்மையை உங்க முன்னால திடுதிப்புனு கொண்டு வந்து நிறுத்தி நிரூபிக்கும் போது அதை உங்களுடைய ஈகோ ஏத்துக்கவே செய்யாது. நோ, நெவர். நீங்க கத்துவீங்க, கோபமா கதறுவீங்க. எல்லாத்தையும் நீங்கதான் பண்ணினதாகவும், ஆனா எப்படி சுவடே தெரியாம மறைச்சு வெச்சிருந்தீங்கன்னும் காலரைத் தூக்கி விட்டுக்க துடிப்பீங்க. இந்த அவசரத்துல ஓரிரு வார்த்தைகளைத் தவற விட்டு - உங்களை நீங்களே காட்டிக் கொடுத்துடுவீங்க. வெல், இதற்கான காட்சி விளக்கத்தைத்தான் இப்ப நீங்களே பார்த்தீங்களே.''

நான் ஆமோதிப்பாய் தலையசைத்தேன். ''அப்படினா நீங்க எழுதிய இந்த நாடகத்துல வெனபிள்ளும் இருந்திருக்கார்'' என்றேன். ''இதுல ஒத்துழைப்பது அவருக்கு பிடிச்சுதா?''

''அவரை இது ஆச்சரியப்படுத்துச்சுனு நினைக்கிறேன்'' என்றார் லெஜன்.

''சங்கேத குறிப்புனு சொல்லிக்கிட்டிருந்தாரில்ல... என்னவாம் அது?''

''இதை நான் யார்கிட்டேயும் சொல்லக் கூடாது'' என்றார் லெஜன். ''இருந்தாலும் அலுவலக ரீதியா இல்லாம ஒரு நண்பனா சொல்றேன்'' என்றார். ''எட்டு வருஷத்துக்கு முன்னாடி. பேங்க் கொள்ளையடிக்கப் பட்டதுனு ஒரு புயல் செய்தி. இப்படியே ஒவ்வொரு தடவையும். பிடிபடாமல் தப்பிச்சுடுவாங்க! யாரோ ஒரு சாதுர்யமான புத்தியால இந்த திருட்டு திட்டமிடப்படும் - ஆனா அவன் ஸ்தலத்துல இருந்து கொள்ளைல பங்கு கொள்ளவே மாட்டான். கிடைச்ச அத்தனை பணத்தையும் சுருட்டிக்கிட்டு, புத்திசாலித்தனமா திட்டம் போட்ட அவன்

தப்பிச்சுடுவான். யார்னு எங்களுக்கு நிச்சயப்படுத்தப்பட்ட சந்தேகம் இருக்கும்... ஆனா சாட்சியிருக்காது. ஸோ, நோ யூஸ். தப்பிச்சுடுவான். எங்களுக்கு அவன் ஒரு சிம்ம சொப்பனம். இப்படி அவன் பெறும் வெற்றியை மறுபடியும் ஒரு முறை செயல்படுத்த துணியவே மாட்டான். இது புத்திசாலித்தனத்தையும் விஞ்சிய சாதுர்யம். இதுக்கு மேல வேணாம். வெனபிள் ஒரு புத்தி நிலைத்த கொடூரன் - ஆனா கொலைகாரன் கிடையாது.''

என் கவனம் சக்காரியா ஓஸ்பார்ன் பக்கம் போனது. ''எப்பவுமே நீங்க ஓஸ்பார்னை சந்தேகப்பட்டுக்கிட்டா இருந்தீங்க?'' என்றேன் நான். ''ஆரம்பத்திலிருந்தே?''

''வெல், அவன் அவனை நோக்கி எல்லாருடைய கவனமும் ஈர்க்கப்படணும்னு இருப்பவன்'' என்றேன் நான். ''நான் சொன்ன மாதிரி, அவன் மூச்சுக் காட்டாமல், அவன் கடை சேரிலேயே பேசாம உட்கார்ந்திருந்தான் என்றால், அவனை ஒரு மதிப்புமிகு கெமிஸ்ட்டாத்தான் நாம பார்த்திருப்போமே தவிர இந்த ஃபாதர் கொலை மற்றும் அது சம்பந்தப்பட்ட விஷயங்களில் தொடர்புள்ள ஒரு நாசக்காரன்னு நினைச்சிருக்கவே மாட்டோம். ஆனா, கொலைகாரங்களால, இதை மட்டுந்தான் பண்ணவே முடியாது என்பது ஒரு சரியான வேடிக்கை. பேசாம உட்காருவதை சொல்றேன்! அப்படி அவங்களால நிம்மதியா உட்காரவே முடியாது. ஏன் அப்படி? எனக்கு விளக்கம் தெரியலே.''

''மரணம் என்னும் தாகம்'' என்று பொதுவாய் காரணத்தை முன் வைத்தேன் நான். ''தெரஸா க்ரேவின் அகராதி...''

''எத்தனை சீக்கிரம் இந்த தெரஸா க்ரேவையும் அவள் உங்க மண்டைக்குள்ளே போட்டுத் திணிச்சிருக்கிற அவளுடைய தியரிகளையும் நீங்க மறுக்கிறீங்களோ, உங்களுக்கு அது அத்தனை நல்லது'' என்றார் இன்ஸ்பெக்டர் கடுமையாய். பிறகு, தான் விட்டதைத் தொடராலானர். ''காரணம், தனிமை. நீங்கதான் எல்லாத்தையும் விட உயர்ந்தவர் எனும் மமதை... ஆனா அதைப் பற்றி வாய்விட்டு யாரிடமும் பகிர்ந்துக் கொண்டு மார் தட்டிக் கொள்ள முடியாத இயலாமை.''

''ஓஸ்பார்னை நீங்க சந்தேகப்பட துவங்கியதை என்கிட்டே சொல்லவே இல்ல'' - நான் சொன்னேன்.

''வெல், அவர் ஒரேயடியா பொய் சொல்ல ஆரம்பிச்சுட்டார். சம்பவ இரவன்று யாராவது ஃபாதர் கார்-மேனைத் தொடர்பு கொண்டிருந்தால், அவங்க எங்களை அணுகும்படி அறிவிச்சிருந்தோம். மிஸ்டர் ஓஸ்பார்ன் எங்களைத் தொடர்பு கொண்டிருந்தார்... அவர் வந்து தந்த வாக்குமூலம் ஒரு கடைந்தெடுத்த பொய். ஃபாதர் கார்-மேனைப் பின் தொடர்ந்த ஆளை அவர் பார்த்ததாகவும் இந்த ஆளுடைய அங்க வடிவமைப்பையும் அவர் தந்தார்... ஆனா மூடுபனிக் கொட்டித் தீர்த்துக்கிட்டிருந்த ஒரு ராத்திரியிலே, தெருவைக்கடந்து அந்தப் பக்கம் இருக்கும் ஒரு நபரைப் பார்க்கவே முடியாது. கூரான மூக்காம்... ஆப்பிள் முகவாயாம்.. ம்ம், இது ரொம்ப ஜாஸ்தி. அஃப்கோர்ஸ், இந்தப் பொய் வெகுளித்தனமா சொல்லப்பட்ட ஒண்ணாக் கூட இருக்கலாம் - அவன்தான் முக்கியமானவன்னு ஒரு நிலைமையை உருவாக்க அப்படி பண்ணியிருக்கலாம். பற்பலர் இப்படிப்பட்டவங்கதான்.ஆனா இது என்னுடைய முழு கவனத்தையும் அவன் மீது பதிக்கும்படி தூண்டிச்சு. அவன் ஒரு வித்தியாசமான ஆசாமி. உடனடியா அவன் எங்கிட்டே அவனைப் பற்றி நிறைய சொல்ல ஆரம்பிச்சான். இது அவன் பண்ணின முட்டாள்தனம். எவனோ ஒருத்தனாம்... அவன் அவ்ளோ பெரிய ஆளாயில்லாட்டாலும், ஏதோ அவந்தான் பெரிய ஆள்னு சொல்லிக்கிட்டு அலைவானாம்... இப்படி ஒரு பிக்சரை எனக்கு தந்தான். இவனுடைய அப்பா விட்டுட்டுப் போயிருக்கும் அதே பிஸினஸுக்குள்ளே போய் திருப்தியடைய ஓஸ்பார்னால ஆகலே. நாடகங்களில் நடிச்சு புகழடைய முயற்சித்திருக்கான். இது கனியலே. மரண விசாரணையில், தன் கடைக்கு விஷம் வாங்க வந்த ஒருத்தனை அடையாளம் காட்டிக் கொடுக்கணும்னு தன்னோட ஆதங்கத்தை சொன்னானில்லையா... இதுல மட்டும்தான் அவன் நெஜமா பேசியிருக்கான். இதே கோணத்துல அவனோட மூளை நெடுந் தொலைவு போயிருக்கணும்னு நினைக்கிறேன். எந்த கட்டத்துல மேலும் எப்போ, இவனுக்கு, தன்னைப் போன்ற ஒரு புத்திசாலி கிடையவே கிடையாது என்பதால், ஏன் தானே ஒரு க்ரிமினலா அவதாரம் எடுக்கக் கூடாதுனு ஒரு ஐடியா தோணியிருக்கும்னு என்னால சொல்ல முடியலே.

''ஓகே. இதையெல்லாம் விட்டுடுவோம். எப்பவோ தோணியிருக்கு. கதைக்கு திரும்புவோம். அன்னிக்கு ராத்திரி அந்த ஆசாமியைப் பார்த்ததா ஓஸ்பார்ன் தந்த வர்ணிப்புகள் இன்ட்ரஸ்டிங்கா இருந்தன. வேற ஏதோ ஒரு தருணத்துல இவனே சந்திச்ச ஓர் ஆளோட வர்ணிப்பைப் போலத்தான் அது இருந்தது. யெஸ். ஒருத்தரை மிக துல்லியமா அச்சு அசலா

வர்ணிப்பதென்பது மிக கடினம். யூ நோ... கண்கள், காதுகள், மூக்கு, முகவாய், நெற்றி, இத்யாதிகள். இவையெல்லாவற்றையும் உள்ளடக்கி வர்ணிக்கணும்னு நீங்க துணிஞ்சா, ஏற்கெனவே எப்போதோ நீங்க பார்த்த யாரையோ வர்ணிப்பதுலதான் போய் நிப்பீங்க. ஏதோ ட்ரெய்னிலேயோ, பஸ்லேயோ, ப்ளேன்லேயோ சந்திச்சவனை, சாத்தியமற்ற குணாதிசயங்கள் கொண்ட ஒருத்தனைத்தான் ஓஸ்பார்ன் வர்ணிச்சுக்கிட்டிருந்தான். போர்ன் மவுத்ல நம்ம வெனபிள் கார்ல உட்கார்ந்திருக்கும்போது அவரைப் பார்த்துட்டு அவரோட தோற்றத்தால அப்படியே இவன் ஸ்தம்பிச்சுப் போயிருக்கணும்னு நினைக்கிறேன் - கார்ல உட்கார்ந்துக்கிட்டிருந்த நிலைமையில வெனபிள்ளை இவன் பார்த்திருந்தான்னா அவருக்கு கால் ஊனம் என்பது இவனுக்கு தெரிஞ்சிருக்க வாய்ப்பில்ல.

''ஓஸ்பார்ன் மேல என் கவனத்தை இழுத்துப் போட்டு வெச்ச இன்னொரு சமாச்சாரம், அவன் ஒரு கெமிஸ்ட் என்பது. எங்கேயோ நடந்துக்கிட்டிருக்கும் ஒரு போதைப் பொருள் விற்பனை சம்பந்தமான கூட்டத்தோடத்தான் அந்த லிஸ்ட் பொருந்தும்னு நான் நினைச்சிருந்தேன். ஆனா அப்படி எதுவும் இல்ல, ஆகவே மிஸ்டர் ஓஸ்பார்னைப் பற்றிய எல்லாத்தையும் நான் ஒட்டுமொத்தமா மறந்தே போயிருப்பேன் - இந்த ஓஸ்பார்னே தன்னை முடிவா உள்ளே திணிச்சுக்க முயற்சிக்காம இருந்திருந்தால்! அவனுக்கு நாம என்ன பண்ணிக்கிட்டிருக்கோம் என்பது தெரிஞ்சாகணும்... இதுக்குத்தான் நம்ம உரையாடல்ல இடம் பெற்றுக்கிட்டிருக்கும் அதே ஆசாமியை *மச்டீப்பிங்ல* பார்த்ததா நமக்கு ஒரு கடுதாசி போடறான். உண்மை தெரிய வந்தப்ப கூட அவனுக்கு வாயைப் பொத்திக்கிட்டு இருந்துடலாம்னு புத்தி வரலே. அதுதான் அவனோட வீண் டம்பம் - தலைக்கனம். கொலைக்காரர்களிடம் மட்டுமே காணப்படவல்ல வாய்ச்சவுடால். தனது கணிப்பு தப்புனு ஒரு கணத்திலும் ஒப்புக்க மாட்டான். துப்பாக்கியிலிருந்து வரும் குண்டுகள் போல் எதெல்லாம் சாத்தியமான தியரிகளோ அவையனைத்தையும் தூக்கி வீசறான். அவனோட போர்ன்மவுத் பங்களாவுக்கு ஒரு இன்ட்ரஸ்ட்டிங்கான விஸிட் அடிச்சேன். அதோட பேரை சொல்லியே ஆகணும். எவரெஸ்ட், அப்படித்தான் பேர் வெச்சிருக்கான். இமயமலையின் உச்சியைக் காட்டும் போட்டோவை பெருசா ஹால்ல தொங்க விட்டிருக்கான். இமயமலை ஆராய்ச்சிதான் எத்தனை அற்புதமானதுன்னான், என்கிட்டே... எவரெஸ்ட்தான் அவனோட தொழில் - அதாவது எவர் ரெஸ்ட்; நிரந்தர ஓய்வு. ஒரு சூட்கேஸ் பணம் தரப்பட்டால், குறிக்கப்படும் நபருக்கு

சந்தேகத்துக்கிடமின்றி இமயமலை சிவலோகப் பிராப்தி பண்ணித் தந்தான் - எவர் ரெஸ்ட். சொல்லப் போனால் இதுதான் அவன் வேலை - தொழில். என்ன மாதிரியான ஒரு ஐடியா - இதுக்கு அவனுக்கு கைகுலுக்கியே ஆகணும்.

''இந்த முழு சமாச்சாரத்துக்குமான ஏற்பாடுகளும் பிரமாதமானவை. பிர்மிங்ஹாமில் ப்ராட்லே, தனது ஆவிக் கூடத்தை *மச்டீப்பிங்கில்* நடத்தும் தெரஸா க்ரே. இந்த அழகுல, தெரஸா க்ரேயுடன் எவ்வித தொடர்பும் இல்லாத, ப்ராட்லேயுடன் எவ்வித தொடர்புமற்ற, கொலையாகும் ஆளுடனும் எவ்வித தொடர்புமே இருந்திராத இந்த ஓஸ்பார்னைப் போய் யார்தான் சந்தேகப்படுவாங்க? இவன் உயிர் நாடியான அந்த விஷம், ஒரு கெமிஸ்ட்டுக்கு தண்ணிபட்ட பாடு. கரெக்ட்... நான் சொன்னது மாதிரியே இவன் மட்டும் வாயைப் பொத்திக்கிட்டு பேசாம இருந்திருந்தால்...''

''ஆனா அவன் அத்தனை பணத்தையும் வெச்சுக்கிட்டு என்னத்தைப் பண்ணினான்?'' - நான் கேட்டேன். ''இதையெல்லாம் அவன் பணத்துக்காகத்தான் பண்ணியிருக்கணும்னு நினைக்கிறேன்.''

''ஓ யெஸ், பணத்துக்காகத்தான் பண்ணினான். பெரிய பெரிய திட்டங்கள் வெச்சிருந்தான் -ஆடம்பர பிரயாணங்கள், கொம்மாளம். பணக்காரனாகவும், மேலும், முக்கியமாய் கருதப்படும் ஒரு நபராயும் இருக்கணும் எனும் ஆசை. தனக்கு எத்தனை சக்தியுள்ளது என்ற அவனுடைய மமதையே கூட கொலைகள் செய்வதால்தான் அவனுக்கு விளைந்துள்ளது என்பது என்னுடைய வாதம். ஒவ்வொரு கொலையிலும் தப்பிப்பது அவனை வெற்றி போதையில தள்ளியிருக்கு... யெஸ், தனிமையில் அத்தனை பெருமிதமா துள்ளியிருப்பான் அவன்.''

''ஆனா அவன் பணத்தை வெச்சுக்கிட்டு என்ன பண்ணினான்?'' - நான் விடவில்லை.

''ஓ, இதுக்கு விடை ரொம்ப சிம்பிள்'' என்றார் லெஜன். ''அவன் தன்னுடைய பங்களாவை சுமாராத்தான் அலங்கரிச்சு வெச்சிருக்கான். ஆக அவன் ஒரு கஞ்சனே. அவனுக்கு பணத்தின் மேல் காதல்! பணம் அவனுக்கு வேணும். ஆனா செலவழிக்க அல்ல. பணத்தை செலவழிப்பதுல அவனுக்கு ஆர்வம் கிடையாது - ஜஸ்ட், பணம் கைல இருக்கணும்னு எதிர்பார்த்தான் அவன்.''

''அத்தனை பணத்தையும் வெறுமனே பேங்க்ல போட்டு வெச்சான்னா சொல்றீங்க?''

''ஓ நோ'' என்றார் லெஜன். ''அவன் பங்களாவைத் துளாவினா தரைக்கு அடியிலோ அல்லது அவனோட மெத்தையின் உள்ளேயோ அத்தனை பணத்தையும் நாம கண்டெடுக்கலாம் என்பதே என் நிலை.''

எத்தனை விநோதமான ஒரு படைப்பு இந்த ஓஸ்பார்ன் சக்காரியா என்று நான் ஜீரணித்துக் கொண்டிருக்கும்போது இருவரும் சற்று நேரம் அமைதியாகிப் போனோம்.

''கழுத்துக்கு அடியில அதிகமாகவோ இல்ல குறைவாகவோ ஊறும் ஒரு கணயத்தின் சுரப்பிதான் இதுக்கெல்லாம் காரணம்னு சொல்வார் டாக்டர் காரிகன்'' -கனவாய் சொன்னார் லெஜன். ''இதெல்லாம் எனக்குத் தெரியாதது. எனக்கு வேண்டவும் வேண்டாம். ஆனா என்னை எது வியக்க வெக்குது தெரியுமா? ஒரே மனுஷன் எப்படி இத்தனை அதிபுத்திசாலி யாகவும் அதே சமயத்துல வடிகட்டின ஒரு முட்டாளாகவும் இருக்கான் என்பதுதான்.''

அத்தியாயம் 25

மார்க் ஈஸ்ட்டர் – ப்ரூக் பதிந்தவை

மீச்டீப்பிங்கில் அனைத்தும் புத்துணர்ச்சி பெற்றதாய் மாறியிருந்தன. ரூடா அவளுடைய நாய்களுக்கு மருத்துவச்சியாய் பிஸியாகி யிருந்தாள். இம்முறை, குளிப்பாட்டிக் கொண்டிருக்கிறாள் என எண்ணிக் கொண்டேன். நான் உள்ளே நுழைந்தபோது நிமிர்ந்து என்னை பார்த்தவள் அவளுக்கு ஒத்தாசை பண்ண எனக்கு விருப்பமா எனக் கேட்டாள். மறுத்த நான் - ஜிஞ்ஜர் எங்கே என்றேன்.

''வெளிறிய குதிரைக்கு போயிருக்கா.''

''என்ன?''

''அங்கே என்னவோ பண்ணி முடிக்க பாக்கியிருக்குன்னா.''

''ஆனா அந்த வீடே இப்ப காலியாயிருக்கு.''

''எனக்கு தெரியும்.''

''தேவையில்லாம தன்னை அலைக்கழிச்சுக்கிறா அவ. இன்னும் பூரண குணமாகலே அவ.''

''உளறாதே மார்க். ஜிஞ்ஜர் நல்லாத்தானிருக்கா. ஓலிவர் எழுதியிருக்கிற புது புத்தகத்தைப் பார்த்தியா நீ? அதோ டேபிள் மேல கெடக்கு.''

''மிஸஸ் ஓலிவரைக் கடவுள் காப்பாற்றட்டும். எடித் பின்னையும்.''

''அது யார்ப்பா எடித் பின்?''

''ஒரு போட்டோவை அடையாளம் கண்டுபிடிச்சு உதவிய பெண். காலமாகி விட்ட என்னோட குருவுக்கு உதவியா இருந்தவளும் கூட.''

''நீ சொல்லும் எதுவும் எனக்கு அர்த்தமாகிறாப்ல தெரியலே. என்னாச்சு உனக்கு?''

நான் பதில் தரவில்லை. ஆனால் *வெளிறிய குதிரைக்கு* கிளம்பினேன்.

அந்த வளாகத்தை நான் போய் அடையும் சற்று முன்னர் மிஸஸ் டேனே கேல்த்ராப்பைச் சந்தித்தேன்.

''இந்த கேஸ் முழுக்க நான் எத்தனை முட்டாளா இருந்திருக்கேன்'' என்றார் அவர். ''எப்படித்தான் இந்த அளவுக்கு கண்மூடித்தனமா ஏமாந்தேனோ தெரியலே. அவனுங்க வெச்ச பொறியிலே சிக்கிட்டேன் போல.''

தற்சமயம் காலியாகவும் சாந்தமாகவும் இருந்த *இன்னை* நோக்கி கையை அசைத்து விளங்க வைத்தார் அவர்.

''இதுல எவ்விதமான நரித்தனமும் உள்ளடங்கி இல்ல - எவ்வித கண்கட்டு தந்திரங்களும் இல்லேனு சொல்ல வரேன். பிசாசுகளுடன் எவ்விதமான அதியற்புத தொடர்புகளும் ஏற்படுத்தப்படலே. கறுப்பு மேஜிக் போன்ற துர் சக்திகளின் ஏவல்கள் கிடையாது. ஜஸ்ட், சில கண் துடைப்பு வேலைகள் பண்ணப்பட்டிருக்கின்றன - பணத்துக்காக, மதிப்பில்லாமல் பார்க்கப்பட்டிருக்கின்றன, மனித உயிர்கள். நாம கற்பனை பண்ணி பயந்ததைப் போலவெல்லாம் எந்த பிரமாண்டமும் கிடையாது. எல்லாம் ரொம்பவுமே ஸிம்பிளானவை.''

''நீங்களும் இன்ஸ்பெக்டரும் நடந்துள்ள அனைத்தையும் ஒத்துப்போவது போல தெரியுது.''

''எனக்கு அந்தாளைப் பிடிச்சிருக்கு'' என்றார் மிஸஸ் டேனே. ''புத்திசாலி ஆங்.. வா, ரெண்டு பேரும் *வெளிறிய குதிரைக்குப்* போய் அந்த ஜிஞ்ஜரைப் பிடிப்போம்.''

''என்ன பண்ணிக்கிட்டிருக்கா அவ அங்க?''

''எதையோ சுத்தப்படுத்திக்கிட்டிருக்கா...''

உள்ளே நுழைந்தோம். டர்பண்டைனின் வாசனை ஆதிக்கமாயிருந்தது. பஞ்சுகள் மற்றும் டர்பண்டைன் பாட்டில்களுடன் ஈடுபாடாய் இருந்தாள் ஜிஞ்ஜர். நாங்கள் நுழைந்தபோது நிமிர்ந்து எங்களைப் பார்த்தாள் அவள். இன்னமும் கூட அவள் மிகவும் இளைத்தும் வெளிறியும் கிடந்தாள்.

உதிர்ந்த கேசம் முளைத்திராததால் அவளையே ஒரு பிசாசாய் காட்டிய தலையை, அகலமான கைக்குட்டை கொண்டு மூடியிருந்தாள்.

''அவ நல்லாத்தான் இருக்கா'' - வழக்கம் போலவே என் எண்ணத்தைப் படித்த மிஸஸ் டேனே சொன்னார்.

இப்போது ''நீங்களே பாருங்க!'' என்றாள் ஜிஞ்ஜர் வெற்றி முழக்கமாய். அவள் தூசு தட்டிக் கொண்டிருந்த அந்தப் பழைய சின்னத்தைச் சுட்டிக் காட்டினாள் அவள்.

வருடக்கணக்காய் அதன் மேல் படிந்திருந்த கறை அகற்றப்பட்டது. குதிரை மீது உட்கார்ந்துக் கொண்டு அதனை விரட்டிக் கொண்டிருந்த குதிரையோட்டியின் முகத்தைக் கூட தனியாய் பிரித்தறிய முடிந்தது. எலும்பு துருத்திக் கொண்டிருந்த, இலக்கு நிர்ணயித்த ஒரு முகம்.

என் பின்னாலிருந்த மிஸஸ் டேனேயிடமிருந்து ஆழ்ந்த அமுங்கிய குரல் சொன்னது:

''அத்தியாயம் ஆறு, வாக்கு எட்டு சொல்கின்றது: *நான் வெளிறிய குதிரையைக் கையில் பிடித்துக் கொண்டு நிமிர்ந்து பார்த்தேன். நான் உட்கார்ந்திருந்த அந்த வெளிறிய ஜந்துவின் பெயர்தான் மரணம். நரகம் அவனைத் தொடர்ந்து வந்துக் கொண்டிருந்தது..*''

''ஓ!''

''ஸோ... *வெளிறிய குதிரை,* மரணத்தைக் கொண்டு வரும்.''

சில கணங்கள் இருவரும் அமைதியாகிப் போனோம். ஆனால் இப்படிப்பட்ட ஆன்ட்டி க்ளைமேக்ஸால் எல்லாம் அரண்டு விடும் குணமற்ற மிஸஸ் டேனே, குப்பையைக் கொண்டு போய் குப்பைத் தொட்டியில் கொட்டும் விதமாய் சாதாரணமாய் சொன்னார்: ''இதான் முழு கதை!'' பிறகு, ''நான் கிளம்பணும்'' என்றார். ''தாய்மார்களுடன் ஒரு சந்திப்பு இருக்கு.''

வாசல் வரை போனவர் அங்கு நின்று ஜிஞ்ஜரைப் பார்த்து ஒப்புதலாய் தலையசைத்து, எதிர்பாராத தருணத்தில் சொன்னார்: ''நீ நல்ல தாயா இருப்பே.''

சொல்லயியலாத ஏதோ ஒரு காரணத்தால் முகம் சிவந்தாள் ஜிஞ்ஜர்.

நான் கேட்டேன்: ''ஜிஞ்ஜர்... நீ இருப்பியா?''

''இருப்பியானா, எதை? நல்ல தாயாவா?''

''நான் எதை சொல்றேன்னு உனக்கு தெரியும்.''

''நிச்சயமா இருப்பேன்... ஆனா எனக்கு ஒரு திடமான அழைப்பு வந்தாகணும்.''

நான் அவளுக்காக ஒரு திடமான அழைப்பினை முன்மொழிந்தேன்...

II

சற்று நேரமானதும் ஜிஞ்ஜர் அதிகாரமாய்க் கேட்டாள்:

''ஹெர்மியாவைக் கலியாணம் பண்ணிக்கப் போவதில்லையா, நீங்க?''

''கடவுளே!'' - நான் சொன்னேன். ''நான் அவளை எப்பவோ மறந்து போயாச்சு...''

ஒரு கடுதாசியை என் சட்டைப் பையிலிருந்து எடுத்த நான், ''இது மூணு நாளைக்கு முன்னாடி வந்தது'' என்றேன். ''சினிமாவுக்கு வரச் சொல்லி.''

அதை என் கையிலிருந்து வாங்கிய ஜிஞ்ஜர் கிழித்தெறிந்தாள்.

''எதிர்காலத்துல நீங்க இப்படி சினிமாவுக்கு போவதாயிருந்தால்...'' என்றவள், ''என்னோடுதான் போவீங்க'' என்றாள்!

- சுபம் -

ஒரு வயது முதிர்ந்த பாதிரியார் கொல்லப்பட்ட சந்தர்ப்பத்தில் அவருடைய இருப்பிலிருந்து சில பெயர்கள் அடங்கிய ஒரு பெயர் பட்டியல் கண்டெடுக்கப்படுகிறது.

இந்தப் பட்டியல் உணர்த்துவது எதை?

அனைவரிடமும் நல்ல பெயர் சம்பாதித்துள்ள பாதிரியார் கொல்லப்படும் சற்று நேரத்திற்கு முன்தான், மரணப் படுக்கையிலிருந்த ஒரு பெண்மணி அவரை தனிமையில் சந்தித்து பாவமன்னிப்பு வேண்டி பெற்றிருக்கிறாள்.

அவள் சொன்னது என்ன?

எந்த காரணத்துக்காக அவள் பாவமன்னிப்பு பெற்றாள்?
அவள் பாதிரியாரிடம் சொல்லிவிட்ட நிஜம்தான், கொலையாளிகள் உடனடியாய் அவரைக் கொன்று போட்டதற்கான காரணமா?

மார்க் ஈஸ்டர் ப்ரூக் மற்றும் ஜிஞ்சர் ஆகிய இருவரும் இந்தக் கொலைக்கான காரணத்தைக் கண்டுபிடித்தே ஆக வேண்டும் என்று களத்தில் இறங்குகின்றார்கள்.

இந்தக் கட்டத்தில் 'வெளிறிய குதிரை' என்ற பெயரில்
உள்ள வீட்டில் வசிக்கும் மூன்று பெண்களும்....
அவர்கள் பயன்படுத்தும் 'Black Magic'
சூனிய வலையும் குறுக்கிடுகின்றன....

முதுகுத்தண்டை சில்லிட வைக்கும் Black Magic Entertainer...
உங்கள் கைகளில்